THAIVEEDU SEPTEMBER 2023 செப்ரெம்பர் www.thaiveedu.com

# தாய்வீடு



## விலங்கிடப்படும் விருந்து ! உணவு மீதான இறையாண்மை !

– அன்ரன் மரியநாயகம்

## நைஜர் இராணுவ ஆட்சிக்கவிழ்ப்பு : மேற்கு ஆபிரிக்காவில் தளமிழக்கிறது பிரான்ஸ்

– ரூபன் சிவராஜா



## இணைவு - பிளவு ஒப்பன்ஹைமர்

– ரதன்

## மறுபிறவி எடுத்த மகாகவி

– கிருங்கை சேதுபதி


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law



Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Buying Selling Leasing Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
Dir 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375
(திங்கள் முதல் வெள்ளி 9:00மணி முதல் 5:00மணி வரை)


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic.: M08008759
1193A Brimley Rd. #7
Toronto, Ontario, M1C 5G3
T: 416.939.8789
F: 416.439.1965
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc.


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து)
ரமணி (இலங்கை),
சௌந்தர் (இங்கிலாந்து),
றஷ்மி (இங்கிலாந்து).
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து)
சர்வேசன்,
துசியந்தன் துரைரத்தினம்.

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஜயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,
சசி,
மெய்யழகன்.

**மொன்றியால் தொடர்பு**
சுகுமாரன் சின்னையா.

**ஒட்டாவா தொடர்பு**
அலெக்ஸ் சிவசம்பு: 613-276-7253

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel :416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

## காலநிலைத் தலைமையே காலத்தின் தேவை!

தட்பவெட்ப நிலையில் ஏற்படும் மாற்றங்கள் தோற்றுவிக்கும் இடர்கள் புவியில் வாழும் அனைத்து உயிர்களுக்குமான பேராபத்தாகியுள்ளன. சமகாலத்தில் மானுடம் முகங்கொடுத்துள்ள பெருஞ்சிக்கலாகப் புவி சூடாதல் இருக்கிறது, இதற்கான எமது எதிர்வினையும் செயற்பாடுகளுமே வரலாற்றில் இக்காலகட்டத்தை வரையறுக்கும்.

தொழிற்புரட்சி தொடங்கிய 1800-களின் நடுப்பகுதியில் இருந்து இன்றுவரை பூமிப்பரப்பின் வெப்பநிலை சராசரியாக 1.1 பாகை செல்சியசால் அதிகரித்திருக்கிறது. இது 2030-களின் நடுப்பகுதிக்குள் 1.5 பாகை செல்சியசைத் தொடும் எனவும் எதிர்வுகூறப்படுகின்றது. இருநூறு ஆண்டுகளில் 1.5 பாகை என்பது எழுந்தமானத்தில் சொற்பமானதாகத் தோன்றலாம். ஆனால் இந்தச் சொற்பமான வெப்பநிலை உயர்வு ஏற்படுத்தும் தாக்கங்கள் பாரிய அளவிலானவை.

இவ்வாண்டின் ஜனவரியில் சீனாவின் வரலாற்றிலேயே பதிவு செய்யப்பட்ட மிகக்குறைந்த வெப்ப-நிலையாக, உறைநிலைக்குக் கீழே 53 பாகை செல்சியஸ் பதிவானது. சில மாதங்கள் கழித்து ஏப்பிரலில் சீனாவிலும் இந்தியா உள்ளிட்ட சில ஆசிய நாடுகளிலும் வரலாறு காணாத வெப்ப அலை வீசியது. இவ்வாண்டின் தொடக்கத்தில் ஆப்கானிஸ்தானைத் தாக்கிய குளிர் அலை ஒன்று மனித உயிர்களையும் கால்நடைகளையும் பலிகொண்டது. ஜனவரியில், பாலைவன நாடான அல்ஜீரியாவிலே வழமைக்கு மாறாக நிகழ்ந்த பனிப்பொழிவு மக்களைத் திகைக்கவைக்க, அமெரிக்காவின் நியூ யோர்க் நகரிலோ பெப்பிரவரியில் நிகழ்ந்த குளிர்காலத்தின் முதற் பனிப்பொழிவு, குளிர்காலத்தின் மிகப் பிந்திய முதற் பனிப்பொழிவு என வரலாறு படைத்தது. கனடாவின் அல்பேட்டா மாகாணத்தில் மட்டும் இவ்வாண்டு நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் காட்டுத்தீ பரவி சுற்றுச்சூழலுக்கு நாசம் விளைவித்ததோடு, 13,000-க்கும் அதிகமான மக்களின் இடப்பெயர்வுக்கும் காரணமாகியது. அமெரிக்காவின் ஹவாய் மாநிலத்தில் ஏற்பட்ட காட்டுத்தீயால் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்தனர். 2004-ஆம் ஆண்டுக்கு முன், ஹவாய் தீவுகளில் காட்டுத்தீ பரவுவதென்பது பத்தாண்டுக்கு ஒருமுறை நிகழும் அபூர்வ நிகழ்வு. 2004-க்குப் பின்னர் அது ஆண்டுதோறும் நிகழ்கின்றது.

இவையெல்லாம் தட்டிக்கழித்துக் கடந்துசென்றுவிடக்கூடிய தனிநிகழ்வுகள் அல்ல. ஒன்றோடொன்று தொடர்புபட்டவை. இவற்றைத் தொடுக்கும் சங்கிலி, ‘புவி வெப்பமாகிறது’ என்ற அறிவியல் உண்மை. புவியின் மேற்பரப்பு வெப்பமாதலால் இது போன்ற அழிவுகள் முன்னொருபோதுமில்லாத பெரும் பலத்துடனும், பெரும் எண்ணிக்கையிலும் தோன்றும் என அறிவியலாளர்கள் எம்மை எச்சரித்து வந்துள்ளார்கள். தொடர்ந்தும் எச்சரித்தவண்ணம் உள்ளார்கள்.

கடந்த பல தசாப்தங்களாகத் தொடர்ந்த இந்த எச்சரிக்கைகளுக்கு நாம் செவிமடுக்காததன் விளைவே இன்று நாம் எதிர்கொள்ளும் இந்த அழிவுகள். புவி வெப்பமாதல், சுற்றுச்சூழல் சீரழிவுக்கும் இயற்கைப் பேரிடர்களுக்கும் தீவிரமான காலநிலைக்கும் நீருக்கும் உணவுக்குமான பற்றாக்குறைக்கும் பொருளாதார இடையூறுகளுக்கும் அனைத்துலக முரண்பாடுகளுக்கும் பயங்கரவாதத்துக்கும் வழிவகுக்கிறது என ஐக்கிய நாடுகள் அவை ஐயந்திரிபறக் கூறுகிறது. இருந்தபோதும், உலகின் பல முதலாளித்துவ நாடுகளும் முதலாளிகளும் எரிகின்ற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்ற மனநிலையுடனேயே தொடர்ந்தும் வினையாற்றி வருகின்றனர்.

2024-ஆம் ஆண்டின் அமெரிக்க அதிபருக்கான தேர்தலிலே, குடியரசுக் கட்சியின் சார்பாகப் போட்டியிடுபவருக்கான கட்சி மட்டத் தேர்தலிலே போட்டியிடும் முக்கிய வேட்பாளர்கள் அனை-வருமே, ஒன்றில் புவி வெப்பமாதல் நிகழ்கின்றது என்பதை மறுக்கிறார்கள் அல்லது அதைத் தடுப்பதற்கான செயற்பாடுகளை மறுதலிக்கிறார்கள். ஒற்றை வல்லரசு நாடாக உலகெங்கும் ஆதிக்கம் செலுத்தும் ஒரு நாட்டில் அனைத்து வல்லமை பொருந்திய அதிபராவதற்குப் போட்டியிடுபவர்கள், இன்றைய காலகட்டத்தில் உலகெங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஓர் அறிவியல் உண்மையை மறுதலித்துக் குதர்க்கமான வாதங்களை முன்வைப்பதையிட்டு நகைக்கமுடியாது. மாறாக ஆத்திரமடையவே முடியும். ஒன்ராறியோ மாகாணத்திலே, பசுமை வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட நிலங்களைக் கட்டுமானப் பணிகளுக்கென மிகக்குறைந்த விலையில் பெருவணிகர்கள் வாங்குவதற்கு மாகாண அரசு வழிவகுத்த பேரூழல் தற்போது அம்பலமாகியுள்ளது. ஒரு புறம் காடுகள் எரிந்துகொண்டிருக்க, மறுபுறம் முதலாளிகள் காடுகளை அழித்துக்கொண்டிருக்கிறார்கள்.

புவி வெப்பமாதலைத் தடுத்து நிறுத்தலாம் என அறிவியலாளர்கள் நம்பிய ஒரு காலமிருந்தது. இப்போது, அது தடுத்து நிறுத்தமுடியாதது என்றும் வெப்பமடையும் வேகத்தை மந்தப்படுத்தி அதனால் ஏற்படும் பாதிப்புகளை மட்டுப்படுத்துவதே எம்மால் செய்யக்கூடியது என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதைச் செய்வதற்கு எமக்கு நீண்டகாலம் இல்லை. அந்த அவசரத்தை உணர்ந்த தலைவர்களே எமது இப்போதைய தேவை.

**தாய்வீடு** # இம்மாதத் தாய்வீட்டில்...


**காலநிலைத் தலைமைத்துவமே காலத்தின் தேவை!** 3

**நைஜர் இராணுவ ஆட்சிக்கவிழ்ப்பு:**
**மேற்கு ஆபிரிக்காவில் தளமிழக்கிறது பிரான்ஸ்** 5
- ரூபன் சிவராஜா

**அமெரிக்காவின் மிகப் பெரிய கவலை**
**ட்ரம்ப்பும் பைடனும்** 10
- ரதன்

**அங்காதிபாதம் 400**
**உறுப்புச் சூத்திரம்** 13
- பால. சிவகடாட்சம்

**முடிவிலி** 16
- நிரேஷ் ரட்ணம்

**வெற்றிகரமாக நிலவில் இறங்கிய சந்திரயான்-3** 19
- குரு அரவிந்தன்

**ஞாபகம் இருக்கிறதா?** 22
- ச. சஜீபன்

**மாணவர்களும் மனவமுத்தமும்** 28
- த. சிவபாலு

**சக்தி வளத்தைக் குறைவாகப் பயன்படுத்தும்**
**இலத்திரனியல் சிப் அறிமுகம்** 30
- சுப்ரமணியம் ஜெயசீலன்

**தண்ணீர்ப் பாவனை** 32
- வேலா சுப்ரமணியம்

**உலகளாவிய காலநிலை மாற்றத்தால்**
**காப்புறுதியில் தாக்கம்** 36
- செந்தூரன் புனிதவேல்

**ஒஸ்லோ நகரசபைத் தேர்தலில்**
**பாஸ் என்கிற... பாஸ்கரன் என்கிற**
**பாலசிங்கம் யோகராஜா!** 38
- ரூபன் சிவராஜா

**நிராகரிப்பை நிராகரி** 40
- சி. நற்குணலிங்கம்

**வாழ்ந்து காட்டுவோம்** 42
- குமார் புனிதவேல்

**வாய்மை எனப்படுவது** 44
- வேதநாயகம் தபேந்திரன்

**பெண்கள் உலகக்கிண்ணக் காற்பந்துப் போட்டி** 46
- குரு அரவிந்தன்

**திரையில் இராமாயணம்** 49
- ஓவியர் ஜீவா

**இணைவு - பிளவு**
**ஒப்பன்ஹைமர்** 52
- ரதன்

**நெஞ்சில் கிளர்ந்த நினைவு** 58
- செல்வம் அருளானந்தம்

**மறைந்த மலையகச் சிந்தனையாளர்**
**தோழர் சாந்திகுமார்** 60
- நெல்லை ஜெயசிங்

**பேராதனைப் பல்கலைக்கழகமும்**
**அருணாசலம் பத்மநாபாவும்** 64
- என். சரவணன்

**மந்திரத்தறி:**
**உள்ளடுக்குகள் கொண்ட நாடகப் பனுவல்** 68
- அ. ராமசாமி

**ஈழப்போரும் வாழ்வும் கவிதையும்**
**திருமாவளவன் கவியுலகு** 72
- ஜிஃப்ரி ஹாசன்

**குறிஞ்சிக் குயில்கள்**
**மலையகக் கவிதை இலக்கியத்தின்**
**முன்னோடிகள் பெண்களே!** 75
- மல்லியப்புசந்தி திலகர்

**எழுத்தாக்கப் பணிகளின்போது**
**கவனம் செலுத்த வேண்டியவை** 78
- அஹமட் பிஸ்தாமி

**நெடுந்தீவு வாழ்வியலில்**
**வாய்மொழி வழக்காறுகள்** 80
- அ. சிவஞானசீலன்

**ஈழமண்ணில் இந்திய இராணுவம்:**
**நூல்வழிப் பதிவுகள் (பகுதி 3)**
**இந்திய இராணுவ காலத்தைச் சித்தரிக்கும்**
**படைப்பிலக்கியங்கள்:** 84
- என். செல்வராஜா

**ஈழம் மீதான சோழப் படையெடுப்பு ஏன்?** 88
- வி. துலாஞ்சனன்

**கேசவன்** 92
- த. ஜீவராஜ்

**விலங்கிடப்படும் விருந்து!**
**உணவு மீதான இறையாண்மை** 94
- அன்ரன் மரியநாயகம்

**ஹவாயைச் சாம்பராக்குகிறது காட்டுத்தீ** 98
- சதீஸ் செல்வராஜ்

**ஸ்டாலின் மீதான அவதூறுகள் - 4**
**வரலாற்றின் மூலைமுடுக்குகள் பாய்ச்சும் ஒளி** 102
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**குறைவாக அறியப்பட்ட**
**மட்டக்களப்பின் குன்றுகளும் தாழ்நில ஊவாவும்** 111
ஆங்கிலம்: எஃப். லெவிஸ். எஃப்.எல்.எஸ்.
தமிழில்: சா. திருவேணிசங்கமம்

**தமிழ் இலக்கிய ஆய்வுச் சூழலில்**
**நவீன கோட்பாடுகள்:** 114
- கந்தையா சண்முகலிங்கம்

**மொழியியலாளரின் 'இரட்டை வழக்கு' பற்றிய கருத்தும்**
**தொலைநோக்கில் தமிழ் மொழியில் அதன் தாக்கமும்** 118
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

**சங்க கால**
**நெய்தல் நில மக்களின் இறைவழிபாடு** 125
- முனைவர் பொ. திராவிடமணி

**உலக மானுடத்தின் உயிர்மொழி** 128
- இனியவன் இசாறுதீன்

**பெயர்வுச் சமூக இருப்பில் இலக்கிய**
**வாசிப்பின் முதன்மை** 131
- பொன்னையா விவேகானந்தன்

**மறுபிறவி எடுத்த மகாகவி** 134
- கிருங்கை சேதுபதி

**கம்பனின் கருவூலம் திறந்து...** 139
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

**கவிதை அறிந்த தமிழறிஞர்**
**எஸ். வையாபுரிப்பிள்ளை** 142
- சு. வேணுகோபால்

**தொன்மையைத் தேடி**
**ஆதித் தமிழர், திணை வழிக் குடிகள் -**
**புறத்திணையியல்** 146
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

**வாழ்வுரிமை!** 152
- மா. சித்திவினாயகம்

**துரோகன்** 156
- அகரன்

**பனி பொழியட்டும்** 161
- டேவிட் சிடாரிஸ்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

**விழ விழ எழுந்த வீரன்** 164
- நிமால் நாகராஜா

# நைஜர் இராணுவ ஆட்சிக்கவிழ்ப்பு

# மேற்கு ஆபிரிக்காவில் தளமிழக்கிறது பிரான்ஸ்

**- ரூபன் சிவராஜா -**

நைஜரினை உலகின் மிகக்குறைவான வளர்ச்சியடைந்த நாடுகளின் பட்டியலில் ஐ.நா குறிப்பிட்டுள்ளது. மக்கட்தொகையில் அரைவாசிக்கும் மேல் மோசமான வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்கின்றனர். சொந்த மக்கள் வறுமை இருளிற்



தவிக்க, மேற்கிற்கு விளக்கேற்றிக்கொண்டிருக்கின்றது அந்நாட்டின் கனிமவளம். சாஹேல் பிராந்தியத்தில் பிரான்ஸின் இராணுவப் பிரசன்னத்திற்கான தளமாகவும் நைஜர் விளங்குகின்றது.

பல ஆபிரிக்க நாடுகள், பிரான்ஸின் நவகாலனித்துவத்திற்கு எதிரான கிளர்ச்சிகளை முன்னெடுத்துள்ளன. அதன் அண்மைய உதாரணம்தான் நைஜரில் ஜூலை இறுதியில் நடந்தேறிய இராணுவ ஆட்சிக்கவிழ்ப்பு. நைஜர் நாட்டின் ஜனாதிபதி Mohamed Bazoum. இவர் 2021இல் நடைபெற்ற தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டவர். அவரைக் கைதுசெய்து அதிகாரத்தினைத் தம்வசப்படுத்தியுள்ளது அந்நாட்டின் இராணுவம். நைஜர் மேற்கு ஆபிரிக்க நாடு. கடற்தொடர்பற்ற நிலத்தால் சூழப்பட்டுள்ள நாடு. இதன் எல்லை நாடுகளாக மேற்கில் மாலி, வடக்கே அல்ஜீரியா, லிபியா, கிழக்கில் சாட், தெற்கில் நைஜீரியா, பெனின் மற்றும் தென்மேற்கில் புர்கினா பாசோ ஆகியன அமைந்துள்ளன. நாட்டின் பெரும்பகுதி பாலைவனங்களாலானது. பெரும்பாலான மக்கள் வளமான தென்மேற்கு மூலையில் வாழ்கின்றனர். தலைநகர் நியாமி.

### மேற்கு-மத்திய ஆபிரிக்க நாடுகளின் ஆட்சிக் கவிழ்ப்புகள்:

நைஜரில் இடம்பெற்றுள்ள தற்போதைய ஆட்சிக்கவிழ்ப்பு என்பது மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்காவில், 2020-ற்குப் பிறகு இடம்பெற்றுள்ள ஏழாவது ஆட்சிக்கவிழ்ப்பாகும். நைஜர் நாட்டின் ஜனாதிபதி Mohamed Bazoum பதவிநீக்கம் செய்யப்பட்டதாக அந்நாட்டின் இராணுவத்தளபதி கேணல் Amadou Abdramane ஜூலை 26 அறிவித்தார். அயல்நாடுகளான மாலி மற்றும் புர்கினா பாசோ ஆகியவை ஆட்சிக்கவிழ்ப்பிற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. இவ்விரு நாடுகளிலும் இராணுவ ஆட்சிதான் நடைபெறுகின்றது. இவற்றில் முறையே 2021 மற்றும் 2022-ல் ஆட்சிக் கவிழ்ப்பு நிகழ்ந்தது. 2021 தேர்தலில் Mohamed Bazoum ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1960-ல் பிரான்ஸின் காலனித்துவ ஆட்சியிலிருந்து




(1920 - 1960) இருந்து சுதந்திரமடைந்ததிலிருந்து, நான்கு ஆட்சிக் கவிழ்ப்புகளுக்கும் பல சதிமுயற்சிகளுக்கும் உட்பட்டது. கடந்த ஒரு தசாப்தமாக மாலியிலிருந்து ஊடுருவிய பயங்கரவாதத்திற்கு எதிரான சிக்கல்களைப் பெருமளவில் எதிர்கொள்வதாகக் கூறப்படுகின்றது. பிரான்ஸ் நைஜரில் தனது துருப்புகளை நிலைநிறுத்தியுள்ளது. மேற்கு ஆபிரிக்க ஒத்துழைப்பு அமைப்பான Ecowas Economic Community of

West African States-இல் அங்கம் வகிக்கும் நாடுகள், ஜனாதிபதி Bazoum மீண்டும் பதவியில் அமர்த்தப்படாவிட்டால் தமது இராணுவப் பலத்தைப் பயன்படுத்தப்போவதாக அச்சுறுத்தியுள்ளன.

ஜனாதிபதி Mohamed Bazoum தனது சொந்த மெய்ப் பாதுகாப்பாளர்களாலேயே கைதுசெய்யப்பட்டார். ஜனாதிபதியை நிபந்தனைகளின்றி விடுதலைசெய்து பதவியில் மீண்டும் அமர்த்தவேண்டுமென்று பிரான்ஸ், அமெரிக்கா ஆகியன அழுத்தம் கொடுத்து வருகின்றன. மேற்கு ஆபிரிக்கப் பொருளாதாரக் கூட்டமைப்பின் (Economic Community of West African States - ECOWAS) வெளியுறவு அமைச்சர்கள் 17.08.23 இராணுவத் தலையீடு தொடர்பாக ஆராய்வதற்கு ஒன்றுகூடினர். இராணுவத் தலையீடு தொடர்பான ECOWAS-ன் முனைப்பினை ஆபிரிக்க ஒன்றியத்தின் சமாதான மற்றும் பாதுகாப்பு ஒன்றியம் (African union peace and security council) எதிர்த்திருந்தது. ஆட்சிக் கவிழ்ப்பாளர்கள் சரணடையாவிட்டால், தமது இராணுவம் படை நடவடிக்கையை மேற்கொண்டு புதிய அரசாங்கத்தினை நிறுவும் எனப் பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் Catherine Colonna எச்சரித்துள்ளார்.

**நைஜரின் கனிமவளத்திற் தங்கியிருக்கும் ஐரோப்பா:**

யுரேனிய வளம் நிறைந்த நாடுகளில் முக்கியமானது நைஜர். ஐரோப்பிய ஒன்றியத்திற்கான யுரேனியத் தேவையின் 25 வீதம் நைஜரிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு யுரேனிய ஏற்றுமதி செய்யும் மற்றைய இரண்டு நாடுகள் கஜகஸ்தான் மற்றும் கனடா ஆகியனவாகும். ஆபிரிக்க நாடுகள் எவ்வளவுக்கெவ்வளவு, அதிக வளங்களைக் கொண்டிருக்கின்றனவோ, அந்தளவுக்கு அந்த நாடுகள் வறுமை, பொருளாதார நெருக்கடி, சமூக, அரசியற் சீரழிவிற்கு உட்பட்டனவாக உள்ளன. இவைதான் ஆபிரிக்க நாடுகளின் பின்-காலனித்துவ அரசியல் யதார்த்தமும் வெளிச்சக்திகளின் செல்வாக்குச் செலுத்தலின் விளைவுகளுமாகும். காலனித்துவ ஆதிக்கம் என்பது அடிப்படையில் இயற்கை வளங்கள், உற்பத்தி மூலப்பொருட்கள், உழைப்புச்சக்திகளைச் சுரண்டுவதேயாகும். காலனித்துவ அதிகாரம் செலுத்திய காலத்தில் அடிமைகளாகக் கறுப்பின மக்களைத் தமது தேசங்களுக்குக் கொண்டுவந்து உழைப்புச் சக்தியைச் சுரண்டின என்பது வரலாறு.

யுரேனியம் என்பது கதிரியக்க உறுப்பு ஆகும். யுரேனியம் அதன் தூய வடிவத்தில் ஒரு நீர்த்துப்போகக்கூடிய வெள்ளி-வெண் உலோகம். இதனைக் கம்பிகளாக நீட்டுருவாக்கம் செய்யலாம் அல்லது படலங்களாக உருட்டித் திரட்டலாம். அணு உலைகளிலும் அணு ஆயுதங்களிலும் எரிபொருளாக யுரேனியம் பயன்படுத்தப்படுகிறது. உலகின் ஏழாவது பெரிய யுரேனிய உற்பத்தி நாடு நைஜராகும். ஐரோப்பாவிற்கான முதன்மை யுரேனிய ஏற்றுமதி நாடும் இதுவே. நைஜரின் பாலைவனப் பிரதேசங்களில் ஒறானோ (Orano) எனும் பிரெஞ்ஸ் நிறுவனம் தனது யுரேனியச் சுரங்கங்களை அமைத்துள்ளது. நைஜரின் யுரேனியம் இல்லையெனில், பிரான்ஸின் மின்சார-எரிசக்தி உற்பத்திக்கு அடித்தளமான பதினெட்டு அணு உலைகளை மூடவேண்டிய நிலைக்குத் தள்ளப்படும்.

**பெயரளவிலான ஜனநாயகம்:**

ஜனாதிபதி Mohamed Bazoum ஜனநாயகத் தேர்தலிற் தெரிவு செய்யப்பட்டபோதும் அங்கு நிலவியது எதிர்க்கட்சிகள் அல்லாத ஒற்றைக்கட்சி ஆட்சியே. பெயரளவிலான ஜனநாயகம் மட்டுமே நிலவியிருக்கின்றது. தற்போதைய ஆட்சிக் கவிழ்ப்பிற்கு முன்னரே பாரிய உணவுத்தட்டுப்பாடும் பட்டினியும் வறுமையுமான சூழலையே மக்கள் எதிர்கொள்கின்றனர். ஆட்சிக் கவிழ்ப்பிற்குப் பின்னான வெளிநாடுகளின், குறிப்பாக அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரான்ஸ் போன்றவற்றின் பொருளாதாரத் தடைகள், நிதியுதவி நிறுத்தங்களால் பெரும் மனிதாபிமான நெருக்கடி வெடிக்கக்கூடும் என ஐ.நா எச்சரித்துள்ளது. மேற்குலக நாடுகள் நைஜர் ஜனாதிபதியுடன் இணக்கமான உறவினைக் கொண்டிருந்தபோதும் அந்நாட்டு மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவி வந்திருக்கின்றது. இந்நிகழ்வினால் ஆபிரிக்காவில் மேற்கின் செல்வாக்குக், குறிப்பாகப் பிரான்ஸ் நாட்டின் செல்வாக்கு கேள்விக்குள்ளாகியுள்ளது.

**பின்னணியில் ரஷ்யா?**

தமது ஆட்சிக் கவிழ்ப்பிற்கு உதவியதற்கு நைஜரின் இராணுவ ஜெனரல் மாலிக்குப் பயணம் மேற்கொண்டு நன்றி தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 2020-ல் மாலியில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. இந்த ஆட்சிக் கவிழ்ப்பில் ரஷ்யாவின் கைகளும் உள்ளதாக நம்பப்படுகின்றது. குறிப்பாக அதன் கட்டுப்பாட்டிலுள்ள வாக்னர் இராணுவக் குழுவினது உதவி இருந்ததாகக் கூறப்படுகின்றது. ஆட்சிக் கவிழ்ப்பிற்கு ஆதரவாகப், பிரான்சிற்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களில் நைஜரின் கொடியுடன் ரஷ்யக் கொடிகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்திநின்ற ஒளிப்படங்கள் வெளிவந்துள்ளன மட்டுமல்லாமல், பிரான்சிற்கு எதிரான கோஷங்களையும் 'பூடின் வாழ்க' போன்ற கோஷங்களையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் எழுப்பியிருக்கின்றனர்.

ஒரு ஆபிரிக்க நோக்குநிலையில் மேற்கின் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான சக்தியாகவும், தரப்பாகவும் ரஷ்யா பார்க்கப்படக் கூடியது. இந்த மாற்றங்களையும் வெளிப்பாடுகளையும் மேற்கினால் ஜீரணிக்கமுடியாது என்பதைப் புரிந்து கொள்வது கடினமல்ல. அதுவும் ரஷ்யாவிடம் தமது கட்டுப்பாட்டிலிருந்த தளத்தினையும் செல்வாக்கினையும் இழப்பதென்பது மேற்கிற்குத் துளியும் உவப்பான நிகழ்வு அல்ல.

**அமெரிக்காவிடம் பயிற்சிபெற்ற ஆட்சிக் கவிழ்ப்பாளர்கள்:**

இதைவிட வேறொரு தகவலும் ஊடகங்களில் வெளிவந்துள்ளது. அமெரிக்க Fort Benning இராணுவப் பிரிவிடம் பயிற்சிபெற்ற ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகளின் தலைமையில் 2008-லிருந்து இதுவரை 11 ஆட்சிக் கவிழ்ப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தத் தகவலை The Intercept எனும் இணைய ஊடகம் வெளியிட்டுள்ளது. நைஜர் ஜனாதிபதியை வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றிய நைஜர் இராணுவத் தளபதி பிரிகேடியர் ஜெனரல் Moussa Salaou Barmou அப்படியாக அமெரிக்காவிடம் பயிற்சி பெற்



றவர்களில் ஒருவர் எனப்படுகின்றது. ஆட்சிக் கவிழ்ப்பிற்குச் சில வாரங்களுக்கு முன்பு, Barmou, அமெரிக்க இராணுவச் சிறப்புப்படைக் கட்டளைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜொனதன் பிராகாவிற்குமிடையிற் (Jonathan Braga) சந்திப்பு நிகழ்ந்திருக்கின்றது. நைஜரில் உள்ள அகடெஸில் இந்தச் சந்திப்பு நடந்திருக்கின்றது. அங்கு அமெரிக்கா தனது பாரிய விமான மற்றும் ட்ரோன் தளத்தை நிறுவியுள்ளது. இது (Sahel-region) சஹேல் பிராந்தியத்தில் இஸ்லாமியப் பயங்க ரவாதத்திற்கு எதிரான அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு ரிய மையமாக உள்ளது. அங்கு ஆயிரம் வரையான அமெ ரிக்க இராணுவ ஆளணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்க இராணுவத்திடம் பயிற்சிபெற்ற மேற்கு ஆபிரிக்க இராணுவத் தளபதிகள் சமீபத்திய ஆண்டுகளிற் குறைந்தது ஒன்பது சதி முயற்சிகளுக்குப் பின்னால் உள்ளனர் என அமெரிக்க Type Media Center-ருடன் தொடர்புடைய புல னாய்வு ஊடகர் நிக் டர்ஸ் (Nick Turse) கருத்துரைத்துள் ளார். புர்கினா பாசோவில் மூன்று, மாலியில் மூன்று, கினியா, மொரிட்டானியா மற்றும் கம்பியா ஆகியவற்றிற் தலா ஒன்று. இவற்றில் எட்டு ஆட்சிக் கவிழ்ப்புகள் வெற்றி பெற்றுள்ளன. கேணல் அசிமி கோயிடா 2020-ல் மாலியில் ஒரு இராணுவச் சதிக்குத் தலைமை தாங்கினார். ஆனால் வலுவான சர்வதேச அழுத்தத்திற்குப் பிறகு ஒரு சிவில் இடைக்கால அரசாங்கத் திடம் அதிகாரத்தை ஒப்படைக்க ஒப்புக்கொண்டார். ஆயி னும் சில மாதங்களுக்குப் பிறகு அவர் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றித் தன்னை ஜனாதிபதியாக அறிவித்தார். செப்ரெம் பர் 2021-ல், கென்ய இராணுவக் கேணல் மாமடி டூம்பூயா (Mamady Doumbouya) தலைமையில், பின் கினியாவின் தலைநகரான கொனாக்ரியில் ஜனாதிபதி மாளிகை தாக்கப் பட்டது. ஜனாதிபதி ஆல்பா காண்டே (Alpha Condé) பதவி நீக்கம் செய்யப்பட்டார், பின்னர் டூம்பூயா நாட்டின் புதிய தலைவராகத் தன்னை அறிவித்தார். இவர் அமெரிக்க Green Berets பிரிவில் பயிற்சி பெற்றவர்.

### பயிற்சி பெற்றோரின் பட்டியல்:

கடந்த ஆண்டு (2022) கேணல் போல்-ஹென்றி சண்டாகோ டமிபா (Paul-Henri Sandaogo Damiba) தலைமையிலான இரா ணுவம் புர்கினா பாசோவில் அதிகாரத்தைக் கைப்பற்றியது. டமிபா மற்றும் புர்கினா பாசோ நாட்டின் இராணுவத்தினர் பலர் அமெரிக்கப் பயிற்சி பெற்றவர்கள். இருப்பினும், சில மாதங்களுக்குப் பிறகு அந்நாட்டு இராணுவத்தின் வேறு பிரி வினால் டமிபா தூக்கியெறியப்பட்டார். 34 வயதான லெப்டி-னன்ட் கேணல் தர் இப்ராஹிம் ட்ராரேயின் (Ibrahim Traoré) தலைமையில் அது நிகழ்ந்தது. இராணுவ ஆட்சித் தலைமை யாக அவரே விளங்குகின்றார் என்பதோடு, அவர் ரஷ்யா மற்றும் வாக்னர் குழுவுடன் நெருக்கவுறவினைக் கொண்டிருப் பதாகச் சந்தேகிக்கப்படுகிறது. மேற்குறிப்பிடப்பட்ட இரா ணுவ அதிகாரிகளுக்கான அமெரிக்கப் பயிற்சிகளுக்கும், அவர்கள் இராணுவப் புரட்சி மூலம் தம் நாடுகளில் ஆட்சிய திகாரத்தைக் கைப்பற்றியதற்கும் இடையே எந்தவிதத் தொடர்புகளுமில்லை என அமெரிக்காவின் ஆபிரிக்கக் கட்ட ளையகம் (US Africa Command -Africom) கூறியிருக்கின்றது. பயங்கரவாதத்தை ஒழித்தல் என்ற பேரில் நைஜரில் அமெ ரிக்காவின் பாரிய இராணுவ ட்ரோன் (Drone) ஒன்று உள் ளது. ஆயிரத்திற்கு மேற்பட்ட இராணுவ ஆளணிகளும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

### முன்-காலனித்துவ நாடுகளில் பின்-காலனித்துவ ஆதிக்கம்:

பிரான்ஸின் முன்னைய காலனித்துவ நாடுகளை எடுத்துக் கொண்டால், நைஜர், செனேஹல் ஆகியன தொடர்ந்தும் பிரான்சுடன் பொருளாதாரப் பிணைப்புகளைக் கொண்டிருக் கின்றன. குறிப்பாக CFA-Franc நாணயப் பாவனையூடாக அந்தப் பொருளாதாரப் பிணைப்பும் தங்கியிருத்தலும் நீடித் துவருகின்றன. CFA பிராங்க் என்பது ஆபிரிக்காவில் உள்ள முன்னாள் பிரெஞ்சுக் காலனிகளால் பயன்படுத்தப்படும் நாணய அலகுகளின் பெயராகும். இன்றும் 12 ஆபிரிக்க நாடுகளிற் பயன்படுத்தப்படுகின்றது. இந்த நாடுகளுக்கான பணத்தாள்களும் நாணயக்குற்றிகளும் பிரெஞ்சு மத்திய வங் கியினாலேயே அச்சிடப்பட்டு அனுப்பப்படுகின்றது. அத் தோடு அந்த நாடுகளின் அரைவாசி அந்நியச் செலாவணிக் கையிருப்பு பிரான்சில் இருக்கவேண்டுமென்பதும் நிபந்தனை யாகும். இந்த அச்சடித்தலுக்கும் அந்நாடுகள் மில்லியன்க




ணக்கான கட்டணங்களை வருடாந்தம் பிரான்சிற்குச் செலுத்தவேண்டும்.

இந்நாடுகளின் மத்திய வங்கிகளில் பிரெஞ்சு அரசசார் பிரதிநிதிகள் நிர்வாக உறுப்பினர்களாகவுள்ளனர். இதனை 'காலனி வரி' என்று ஓர் ஊடகம் வர்ணித்திருந்தது. அதன் பொருள் இந்நாடுகளின் நிதி நிர்வாகமும் நிதி அரசியலும் அவற்றின் கட்டுப்பாட்டிலும் அதிகாரத்தின் கீழும் இல்லாமல், முன்னாள் காலனித்துவச் சக்தியான பிரான்சின் பிடியில் உள்ளன என்பதாகும். இந்த நிலை ஆபிரிக்க நாடுகளின் நுகர்வு, கொள்வனவு, இறக்குமதி வலுவினையும் பலவீனப்படுத்துகின்றது. சுயாதீனப் பொருளாதாரத்தையும் கட்டுப்படுத்துகின்றது. உதாரணமாகச் சீனா அல்லது இந்தியாவுடன் இந்நாடுகள் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, அவற்றுக்கான நிதிப் பரிவர்த்தனை பிரான்சின் ஊடாக யூரோவிற்கு மாற்றப்பட்டு நடைபெறவேண்டும். இந்த நடைமுறை நாணயமாற்றுச் செலவுகளை இந்நாடுகளுக்கு அதிகரிக்கின்றது. பெரும் நட்டங்களை ஏற்படுத்துகின்றது. பிரான்ஸ் இந்நடைமுறை மூலம் அதிக வருமானம் ஈட்டுகின்றது. ஐரோப்பிய மத்திய வங்கியும் வருமானம் ஈட்டுவதாகப் பொருளியற் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனது செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த நைஜர் நாட்டில் பிரான்ஸ் தனது பிடியினை இழந்துள்ளது. மேற்கின் இடத்தினை ரஷ்யா தனதாக்கிக் கொண்டுள்ளதா என்ற விவாதங்களை இது ஏற்படுத்தியுள்ளது. பிரான்சினதும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளினதும் எரிசக்தி-மின்சார உற்பத்திக்கான யுரேனிய இறக்குமதியில் ஏற்படப்போகும் பாதிப்பு, ஐரோப்பாவில் மின்சார-எரிசக்தி நெருக்கடியை மேலும் இரட்டிப்பாக்கும். ஏலவே ரஷ்ய - உக்ரைன் போரினால் ஐரோப்பா பெரும் எரிசக்தி நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றது என்பது பலரும் அறிந்ததே.

### வல்லரசு ஸ்தானத்தைப் பேணும் முனைப்பு:

ஏனைய நாடுகள் மீது செல்வாக்குச் செலுத்துவதென்பது தமது வல்லரசு ஸ்தானத்தைப் பேணுவதற்கான முனைப்புகளில் ஒன்று. அத்தோடு அந்நாடுகளின், வளங்கள் மீதான அதிகாரத்தினைக் கொண்டிருப்பதுமாகும். 2010 வரை மேற்கு ஆபிரிக்கப் பிராந்தியத்தில் பிரான்சின் செல்வாக்கு அதிகமிருந்தது. 2013-ல் நைஜரின் அயல்நாடான மாலி மீது, பிரான்ஸ் படை நடவடிக்கையினைச் செய்தது. அதனைத் தொடர்ந்து அப்பிராந்தியத்தில் முரண்கள் அதிகரித்து வந்துள்ளன. 2020 -2023 காலத்திற்குள் அப்பிராந்தியத்தின் ஆறு நாடுகளில் 6 ஆட்சிக் கவிழ்ப்புகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் மாலி, கினியா, புர்கினா பாசோ, நைஜர் ஆகிய நான்கு நாடுகள் மீது, பிரான்ஸ் வலிமையான செல்வாக்கினைக் கொண்டிருந்தது. இவை அனைத்தின் மீதான பிடிகளையும் பிரான்ஸ் தற்போது இழந்துள்ளது.

இறுதிப் பத்தாண்டுக்குள் மேற்கு ஆபிரிக்காவில் இஸ்லாமியப் பயங்கரவாதம் அதிகரித்து வந்துள்ளது எனச் சொல்லப்படுகின்றது. இஸ்லாமிய அடிப்படைவாதிகளுடன் தொடர்புடைய கிளர்ச்சிக் குழுக்கள் மாலி, புர்கீனா பாசோ, நைஜர் ஆகிய நாடுகளின் பெரும் நிலப்பரப்புகளைத் தமது கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்துள்ளன. அரசுகளின் ஊழல், மேற்கின் தலையீடு அதிகரிப்பு போன்றவற்றிற்கு எதிராகத் தாம் போராடுவதாக அந்த இஸ்லாமியக் கிளர்ச்சிக் குழுக்கள் கூறுகின்றன. அத்தோடு மாலி மற்றும் புர்கீனா பாசோ ஆகிய நாடுகளில் பிரான்ஸ் எதிர்ப்புடன் ரஷ்ய ஆதரவு ஆட்சிக்

கவிழ்ப்புகள் நடைபெற்றுமுள்ளன.

### மேற்கின் அணுகுமுறையும் ஆட்சிக் கவிழ்ப்பாளர்களின் எதிர்வினையும்:

இராணுவ ஆட்சி காரணமாக நைஜருக்கு அனைத்துப் பொருளாதார உதவிகளையும் குறைக்க ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளது. இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஐரோப்பிய ஒன்றியம் நைஜருடன் ஒரு கூட்டுச் செயற்திட்டத்தினைத் தொடங்கியது. இஸ்லாமிய அடிப்படைவாதத்தினை எதிர்த்துப் போராடும் ஆயுதப் படைகளுக்குப் பயிற்சி அளிப்பதே இதன் நோக்கம். மேலும் 66 மில்லியன் யூரோக்களை இதன்பொருட்டு நைஜருக்கு உதவுவதாக ஐரோப்பிய ஒன்றியம் ஜூலையில் அறிவித்தது. தனது மேற்கு ஆதரவு நிலைப்பாட்டில், ஆட்சிக் கவிழ்ப்பிற்குப் பின்னர் நைஜருக்கான மின்சார விநியோகத்தினை நைஜீரியா நிறுத்தியுள்ளது. அதேவேளை புர்கீனா பாசோ, மாலி, கினியா ஆகிய நாடுகள் காலனித்துவ எதிர்ப்புக் கூட்டணி ஒன்றினை உருவாக்கி நைஜரின் ஆட்சிக் கவிழ்ப்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

ஏலவே வறுமைக்கும் வாழ்வாதார நெருக்கடிக்கும் முகம் கொடுக்கும் மக்களின் வாழ்க்கையை உலகநாடுகளின் உதவி நிறுத்தம் மேலும் கடினமாக்கும். அரசியற் திடமின்மை, குழப்பம் மற்றும் பட்டினி போன்றன அந்நாட்டிலிருந்து மக்கள் பெருவாரியாக வெளியேறுவதற்கு வழிவகுக்கும் என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். உக்ரைன் போரினால் எரிசக்தி, மின்சாரப் பற்றாக்குறை, விலையேற்றம், பொருட்களின் விலையேற்றம், உக்ரைனிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு இடம்பெயரும் மக்கள் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு ஐரோப்பா ஏலவே திணறுகின்றது. இந்நிலையில் மேலுமொரு அகதிகள் நெருக்கடியைச் சமாளிப்பது தொடர்பான அச்சம் ஐரோப்பிய நாடுகள் மட்டத்தில் அதிகரித்துள்ளது.

1500 வரையான பிரான்ஸ் இராணுவ ஆளணி அம்மண்ணில் நிலைகொண்டுள்ளது. பிரான்சிற்கான யுரேனிய ஏற்றுமதியினை ஆட்சிக் கவிழ்ப்பாளர்கள் நிறுத்தப்போவதாக அறிவித்துள்ளனர். அத்தோடு பிரான்சுடன் நடைமுறையிலிருந்த 5 வரையான இராணுவக் கூட்டு உடன்படிக்கைகளிலிருந்து விலகுவதோடு, பிரான்ஸ் அரச தொலைக்காட்சியின் நைஜருக்கான ஒளிபரப்புகளையும் நிறுத்தியுள்ளனர். பிரான்சின் எரிசக்தி, மின்சாரத் தேவையின் பெரும்பகுதி அணுஉலைத் தொழில்நுட்பத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்தநிலை நைஜரில் ஆட்சிக் கவிழ்ப்பாளர்களுக்கு அவர்களின் கையில் ஒரு நல்ல துருப்புச்சீட்டாகப் பயன்படுத்தக்கூடியது.



rooban.s@thaiveedu.com






1872-ஆம் ஆண்டு லூசியானா கவர்னர் தேர்தலில் குடியரசுக் கட்சிக்கு 2400 வாக்குகளும், ஜனநாயகக் கட்சிக்கு 2200 வாக்குகளும் கிடைத்தன. குடியரசுக் கட்சியில் அதிகளவு ஆபிரிக்க அமெரிக்கர்கள் அங்கத்துவம் பெற்றிருந்தனர். ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் பலர் முன்னர் ஆபிரிக்க அமெரிக்கர்களை அடிமைகளாக (slave owners) வைத்திருந்தவர்கள். அமெரிக்க மத்திய அரசு அப்போது ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. 1873 சித்திரை மாதம் 13-ம் நாள் - 'உயிர்த்த ஞாயிறு நாள்' குடியரசுக் கட்சி வெள்ளை இனவாதிகள் Grant Parish courthouse-க்குள் புகுந்து கலவரத்தில் ஈடுபட்டனர். இறுதியில் 150 ஆபிரிக்க அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். மூன்று வெள்ளை இனத்தவர்களும் இறந்தனர். அமெரிக்க மத்திய அரசு வெள்ளை இனவாதிகள் மீது வழக்குத் தொடர்ந்தது. யூரிகள் மூவரைக் குற்றவாளிகள் எனத் தீர்மானித்த போதும் மாநில நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்தது. 14 மற்றும் 15-வது திருத்தச் சட்டங்கள் (Fourteenth and Fifteenth Amendments) ஆபிரிக்க அமெரிக்கர்களின் உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திய போதும், மாநில நீதிமன்றம் குற்றவாளிகளுக்குச் சார்பாகக் குற்றவாளிகளை விடுதலை செய்தது. மேன்முறையீட்டில் அமெரிக்க உயர் நீதிமன்றமும், மாநில நீதி மன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக்கொண்டது. கொல்லப்பட்ட ஆபிரிக்க அமெரிக்கர்களுக்குச் சாதகமாகச் சட்டமிருந்தும், நீதி தவறாகிவிட்டது. இதன் பின்னர் இடம்பெற்ற அரசியல் கலவரங்களுக்கு இந்த வழக்கு உதாரணமாக முன்வைக்கப்பட்டது. இதனால் பல அரசியல் கலவரங்களுக்கு முறையான நீதி கிடைக்கவில்லை.

இதன் பின்னர் மிகப் பெரியளவில் நடைபெற்ற அரசியல் கலவரம், ஜனவரி 06, 2021-ல் அமெரிக்கக் காங்கிரசினுள் புகுந்த காடையர்கள் காங்கிரசை சிலமணி நேரங்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். 1873-ம் ஆண்டைப் போல், 2021-ம் ஆண்டுத் தேர்தல் வெற்றிக்கு எதிரானதாகும். 2021 சம்பபத்துக்குப் பின்னால் அப்போதைய ஜனாதிபதி டொனால்ட் ரம்ப் இருந்துள்ளார். 2020-ல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ரம்ப் தோல்வியடைந்திருந்தார். ஆனால் தனது தோல்வியை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். அப்போதைய துணை ஜனாதிபதி மைக் பென்சைத் தேர்தல் முடிவுகளை ஏற்க முடியாது என அறிவிக்கும்படி வற்புறுத்தினார். மைக் பென்ஸ் மறுத்துவிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் மாநில வாக்குகளிலும் தங்கியிருக்கின்றது. ஒவ்வொரு மாநிலத்துக்கும் குறிப்பிட்ட ஆசனங்கள் உள்ளன. உதாரணத்துக்குக் கலிபோர்னியா மாநிலத்துக்கு 55 ஆசனங்கள் உள்ளன. கலிபோர்னியாவில் ரம்ப் 1 வாக்குகளைக் குறைவாகப் பெற்றாலும் ரம்பிற்குக் கிடைக்கும் ஆசனங்கள் 0. ஆனால்,1 வாக்குக் கூடுதலாகப் பெற்று வெற்றிபெற்றால் 55 ஆசனங்களும் கிடைக்கும்.

270 ஆசனங்களைப் பெறும் வேட்பாளர் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்படுவார். எனவே சிறு மாநிலங்களின் ஆசனங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இன்றைக்குச் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள ஜோர்ஜியா மாநிலத்தின் அமைச்சருக்குத் தொலைபேசியில் பேசிய ரம்ப், 'எனக்கு 11,000 வாக்குகள் தேவை' எனக் கூறியிருந்தார். ரம்ப் ஜோர்ஜியா மாநிலத்தில் 11,779 வாக்குகள் குறைவாகப் பெற்றிருந்தார். ஜோர்ஜியா மாநிலத்துக்கு 16 ஆசனங்கள் உள்ளன.

2020 தேர்தலின் பின்னர் டொனால்ட் ரம்பிடம் தோல்வியை ஒப்புக்கொள்ளுமாறு குடியரசுக் கட்சியினர் வற்புறுத்தினர். இன்றுவரை அவர் தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை. ஜனநாயகக் கட்சி பைடன் ஆட்சிக்கு வந்த பின்னர், ரம்ப் மீதான விசாரணைகள் ஆரம்பமாகின. இவற்றுள் ஒன்று ரம்பின் நிறுவனத்தின் மீதான வரி மோசடிகள். இதனை நியுயோர்க் மாநில அரச வழக்கறிஞர்கள் மேற்கொண்டனர். ரம்ப் ஆட்சியிலிருக்கும் பொழுது செய்ய முடியாததை இப்போது செய்கின்றனர்.

## டொனால்ட் ரம்ப் மீதான கிரிமினல் வழக்குகள்:

45-வது அமெரிக்க ஜனாதிபதியான டொனால்ட் ரம்ப், இக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் பொழுது, அவருக்கு ஜோர்ஜியா நீதிமன்றத்தால் (Fulton County criminal justice

| டொனால்ட் ரம்ப் மீதான கிரிமினல் வழக்குகள்: | | |
|---|---|---|
| வழக்கு | வழக்கின் தற்போதைய நிலைமை | அதிகபட்சத் தண்டனைக் காலம் |
| உண்மைக்குப் புறம்பான வணிக நிறுவனத் தரவுகள். (நீதிமன்றம்) நியுயோர்க் | பங்குனி 30,2023-இல் குற்றப்பத்திரகை தாக்கல் செய்யப்பட்டது. சுற்றவாளி எனத் தெரிவித்துள்ளார். பங்குனி 25, 2024-இல் விசாரணை ஆரம்பமாகும். | 4 வருடங்கள் |
| அரசின் முக்கிய ஆவணங்களைப் பதுக்கி வைத்திருந்தமை (நீதிமன்றம்) புளொரிடா தெற்கு | ஆனி 9, 2023-இல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. சுற்றவாளி எனத் தெரிவித்துள்ளார். வைகாசி 20, 2024-இல் விசாரணை ஆரம்பமாகும். | 20-35 வருடங்கள் |
| 2020 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை மாற்ற முயற்சித்தமை (நீதிமன்றம்) வோசிங்டன் டி.சி | ஆவணி 1, 2023-இல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. சுற்றவாளி எனத் தெரிவித்துள்ளார். விசாரணைத் திகதி இன்னமும் முடிவாகவில்லை | 20-35 வருடங்கள் |
| ஜனாதிபதித் தேர்தலின் ஜோர்ஜியா மாநில முடிவுகளில் மாற்றம் செய்ய முயற்சித்தமை. (நீதிமன்றம்) ஜோர்ஜியா | ஆவணி 14, 2023-இல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. சுற்றவாளி எனத் தெரிவித்துள்ளார். விசாரணைத் திகதி இன்னமும் முடிவாகவில்லை. (ஐப்பசியில் விசாரணை ஆரம்பமாகலாம் எனத் தெரிகின்றது) | 20- வருடங்கள் |

system) நீதி விசாரணைக்குரிய P01135809-என்ற இலக்கமும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது பிணையில் இருக்கிறார். உலகையே ஆட்டிப்படைத்த ஒரு ஜனாதிபதியின் நிலைமை இவ்வாறு மாறிவிட்டது. இதுவரை நான்கு தடவைகள் நீதிமன்றத்தில் தான் சுற்றவாளி எனக் கூறிப் பிணை பெற்றுள்ளார்.

ROGER STONE, PAUL MANAFORT, MICHAEL COHEN, MICHAEL FLYNN, RICK GATES, GEORGE NADER, GEORGE PAPADOPOULOS ஆகியோர் ஏற்கனவே தண்டனை பெற்றவர்கள். இவர்கள் டொனால்ட் ரம்பின் முன்னாள் ஆலோசகர்கள், அதிகாரிகள் (சட்டம், நிதி போன்றன). ஜோர்ஜியாவில் ரம்ப்-உடன் 18 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் ரம்பின் சட்ட ஆலோசகரும், முன்னால் நியுயோர்க் மாநகர மேயருமான rudy Giuliani மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தக் குற்றப்பத்திரிகைகள் ஒரு பக்கமிருக்க, மறுபக்கம் ரம்ப் 2024 தேர்தலுக்கான குடியரசுக் கட்சி வேட்பாளர் போட்டியில் களமிறங்கியுள்ளார். ரம்ப் ஏற்கனவே ஒரு தடவை ஜனாதிபதியாக இருந்தமையால் இன்னுமொரு தடவை அவர் ஜனாதிபதியாக முடியும். ரம்புடன் பல வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். குறிப்பாகப் புளோரிடா கவர்னர் Ron DeSantis, ரம்பின் துணை ஜனாதிபதியாகவிருந்த மைக் பென்ஸ், கேரள வம்சாவளி விவேக் ராமசாமி, முன்னாள் தெற்குக் கரோலினாக் கவர்னரும் ரம்பின் அமைச்சரவையில் ஐ.நா-வின் அமெரிக்கத் தூதுவராகவிருந்த பஞ்சாப் வம்சாவளி நர்மதா நிக்கி ஹெய்லி-ரன்டாவா, முன்னாள் நியூ யேர்சி கவர்னர் கிறிஸ் கிறிஸ்ரி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். எனினும் கடைசியாகக் கிடைத்த கருத்துக் கணிப்பின் படி டொனால்ட் ரம்ப்-இற்கு 51.6 வீதமான குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். இரண்டாவது இடத்திலி



ருக்கும் புளோரிடாக் கவர்னருக்கு 14.8 வீதம், மூன்றாவது இடத்திலிருக்கும் விவேக் ராமசாமி-க்கு 10.3 வீதமான குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தற்போதிருக்கும் நிலையின் படி டொனால்ட் ரம்ப் குடியரசுக் கட்சி வேட்பாளராகத் தெரிவுசெய்யப்படுவது உறுதி. ஆனால்... என்ற கேள்வி இங்கு முக்கியம். ரம்ப் மீதான ஜோர்ஜியா மாநிலத் தேர்தல் வழக்கு விசாரணை ஒக்ரோபர் ஆரம்பமாகலாம் எனத் தெரிகின்றது. அந்த வழக்கு வருடக் கடைசியில் ஆரம்பமானாலும், வழக்கின் முடிவுகள் ரம்பிற்குச் சாதகமாகாவிட்டால், ரம்ப் தேர்தலில் நிற்க முடியாமல் போகும்.

வழக்கு ரம்ப்புக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கிடைத்தால், மிகுதி மூன்று வழக்குகளும் ரம்ப்புக்குச் சாதகமாகலாம். ஆனாலும், பல சட்ட வல்லுனர்கள் ஜோர்ஜியாச் சட்டங்கள் ரம்ப்புக்கு எதிராகத் திரும்பும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி ஜோர்ஜ் வோசிங்டனை மூன்றாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலுக்குப் போட்டியிடுமாறு கேட்கப்பட்டபோது மறுத்து விடுகின்றார். நாட்டின் ஒற்றுமை முக்கியம். அதற்குப் புதிய தலைவர் வர வேண்டும் எனக்கூறி மறுத்துவிடுகின்றார். அந்த வழியாக வந்த அமெரிக்க அரசியல் கடந்த பல வருடங்களாக ஊழல்கள், முறைகேடுகள் எனத் தத்தளிக்கின்றது. 2021 தை 6, அமெரிக்கக் காங்கிரசுக்குள் புகுந்த காடையர்களின் அட்டகாசத்தைப் பார்த்து உலகமே சிரித்தது. உலகின் வல்லரசுக்கு மிகப் பெரிய அவமானத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. அதன் பின்னர் ரம்ப் தேர்தலில் நிற்கமாட்டார் என நம்பியவர்களை ரம்ப் மீண்டும் ஏமாற்றிவிட்டார்.

இன்றைய நிலைமையில் ரம்பின் மீதான வழக்குகள், சட்டச் சிக்கல்களைத் தீர்க்க ரம்புக்கு இருக்கும் ஒரேயொரு வழி தேர்தலில் நின்று வெற்றிபெற்று, தன் மீதான வழக்குகளைத் தானே இரத்து செய்வதாகும். ரம்பைப் பொறுத்தவரை தேர்தல் அவருக்கான ஒரேயொரு தீர்வாகும். இந்த வழக்குகளுக்கான செலவுகளைத் தேர்தலுக்குக் கிடைத்த நிதியிலிருந்தே செலவழிக்கின்றார். அதற்கும் ஒரு வழக்கு வராவிட்டால் சரி.

ரம்ப் குடியரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டால், அவருடன் போட்டியிடும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் - தற்போதைய ஜனாதிபதி பைடனை இலகுவாக வெற்றி பெறலாம். தற்போதையக் கருத்துக் கணிப்புகள் அதனை உறுதி செய்கின்றன. ரம்ப்பிற்குப் பெருமளவு அமெரிக்காவின் கிராமப்புற மக்கள் ஆதரவாகவுள்ளனர்.

மறுபுறம் ஜனநாயகக் கட்சியில் பைடனுடன் ஒரு சிலர் வேட்பாளராகப் போட்டியிட்டாலும், பைடன் போட்டியிடுவது உறுதி. கென்னடிக் குடும்பத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் றொபட் எப் கென்னடி, Marianne Williamson ஆகியோர் தற்சமயம் போட்டியிடுவதாக அறிவித்துள்ளனர்.

பைடனுக்கும் தேர்தலில் மீண்டும் போட்டியிடுவது அவசியமாகவுள்ளது. இவர் மீதும், குறிப்பாகப் பைடனின் மகன் ஹன்ரர் பைடன் மீதும் ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளன. அடிப்படையில் பைடன், ரம்ப்பிற்குச் சளைத்தவரல்ல.

பைடன் தேர்தலில் வெற்றி பெறாவிட்டால், ரம்பைப் போன்று பைடன் மீதும் விசாரணைகள் மேற்கொள்ளப்படலாம். மீண்டும் அமெரிக்க ஹவுஸ் கூடும்பொழுது, பைடன் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு, அவரைப் பதவி விலக்கக் குடியரசுக் கட்சியினர் முயற்சிக்கலாம். ஆனால் இதற்கு இரு சபைகளினதும் ஆதரவு தேவை. செனட் ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவாக இருப்பதனால் ரம்பைப் போன்று ஹவுசுடன் முடிவுக்கு வந்துவிடும்.

டொனால்ட் ரம்ப், ஜோ பைடன் இருவருமே மக்கள் தலைவர்கள் இல்லை. இவர்கள் தங்கள் சுயநலனுக்காக அமெரிக்காவை வழி நடத்துகின்றார்கள். ஜோ பைடனின் வயதுக்கு அவர் தொடர்ந்து ஜனாதிபதியாக இருப்பது கடினம். ஆனாலும் அவரால் இன்று விடமுடியாத நிலை. தற்செயலாக அவர் சுகயீனமுற்றுத், தேர்தலில் நிற்க முடியாமல் வேறு ஒரு வேட்பாளர் போட்டியிட்டால், டொனால்ட் ரம்ப்பிற்கு மிகவும் கடினமான போட்டியாகவேயிருக்கும். எனவே ஜோ பைடனையே, டொனால்ட் ரம்ப்பும் விரும்புவார்.

ரம்ப் வெற்றி பெற்றால், மற்றொரு புட்டினாக மாறும் அபாயமும் உண்டு. எவ்வாறு புட்டினின் நண்பனாகவிருந்து எதிரியாக மாறிய வாக்னர் இராணுவத் தலைவர் பிறிகோசன் வேட்டையாடப்பட்டாரோ, அவ்வாறு ரம்ப்பும் வேட்டையாடுவார். இத்தேர்தலுக்குப் பின் வரவிருக்கும் 2028 தேர்தலை நடத்தாமல் தானே தொடர்ந்து ஜனாதிபதியாக இருக்கவும் முயற்சிக்கலாம். டொனால்ட் ரம்ப்பைப் பொறுத்தவரை எதனையும் எப்படியும் செய்யலாம் என நினைப்பவர். சாத்தியங்களைப் பற்றிக் கவலைப்படாதவர். அதனால் தான் இன்று நீதி மன்றத்திலும் நிற்கின்றார். குற்றங்களை வாக்குகளாக மாற்றுகின்றார்.

ஊடகங்களுக்கு ரம்ப் ஒரு காட்சிப்பொருள். நுகர்வுப் பண்டம். 2015-லிருந்து ரம்ப் ஊடகங்களுக்குத் தீனி போடுகின்றார். அமெரிக்க ஜனாதிபதிகளில் ரம்ப்பைப் பற்றியே அதிகளவு நூல்கள் வெளிவந்துள்ளன.

கனடாவைப் பொறுத்தவரை பொருளாதார ரீதியாக அமெரிக்கா கனடாவை விழுங்கிக் கொண்டிருக்கின்றது. கனடாவின் பெரும்பாலான பொருளாதார முடிவுகள், அமெரிக்காவின் வட்டிவீதம் போன்றவற்றில் தங்கியுள்ளது. கனடாவின் ஏற்றுமதி அதிகளவு அமெரிக்காவிற்கே செல்கின்றது. இறக்குமதியும் அதிகளவு அங்கிருந்தே வருகின்றது. அமெரிக்காவின் வட்டிவீதம் அதிகரிக்கும் பொழுது, அமெரிக்க டொலரின் பெறுமதி கூடுகின்றது. கனடிய மத்திய வங்கி, கனடாவின் வட்டிவீதத்தைக் கனடாவின் பணவீக்கத்தை மட்டும் கொண்டு தீர்மானிப்பதில்லை. கனடிய டொலரின் பெறுமதி குறைந்தால் அதுவும் கனடாவின் பொருளாதாரத்தைப் பாதிக்கும். அதனையும் கனடிய மத்திய வங்கி கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது.

அமெரிக்காவில் ஏற்படும் ஆட்சி மாற்றங்களைக் கனடா உன்னிப்பாக அவதானிக்க வேண்டியுள்ளது. கடந்த ரம்ப்பின் ஆட்சிக் காலத்தில் சுங்க வரிகள் குறிப்பிட்ட பொருட்களுக்கு அதிகரித்தது. இதனால் கனடா பாதிப்படைந்தது. பைடன் ஆட்சிக்கு வந்தவுடன் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டிருந்த எண்ணெய்க் குழாய் அமைக்கும் ஒப்பந்தத்தை நிறுத்தினார். இதுவும் கனடாவிற்குப் பாதிப்பை ஏற்படுத்தியது. தற்போது ரம்ப்பும், பைடனும் கனடாவிற்கு நன்மையளிப்பவர்கள் அல்ல. அமெரிக்கா படிப்படியாகக் கனடாவை விழுங்கிக் கொண்டிருக்கின்றது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை எதுவும் நடக்கலாம். இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வருகின்றது என்று தெரிந்தும் அணுகுண்டு வீசுவார்கள். அதனால் தான்
அது அமெரிக்கா.



rathan@thaiveedu.com

# ஏட்டில் எழுதிவைத்தார் - அங்காதிபாதம் 400

## உறுப்புச் சூத்திரம்

- பால. சிவகடாட்சம்

**திருக்கோணமலை ஈசனை முதலில் போற்றித் தொடங்கும் ஈழத்துத் தமிழ் மருத்துவ நூலான அங்காதிபாதம் 400 என்னும் நூலுக்குரிய பாடல்கள் 124 மட்டுமே எமக்குக் கிடைத்த ஏட்டுச்சுவடிகளில் உள்ளன. எனினும், நூலினை முழுமைப்படுத்த எண்ணி இந்நூலினைப் பெரிதும் ஒத்திருப்பதும், பரராசசேகரத்தைச் சார்ந்ததாக அறியப்படுவதும், 1936-ம் ஆண்டு ஐ. பொன்னையா என்பவரால் அச்சிட்டு வெளியிடப்பெற்றதும், இன்றுவரை உரை எழுதப்படாமலும் இருக்கும் அங்காதிபாதம் என்னும் பிறிதொரு நூலில் இருந்து மீதிப் பாடல்கள் பெறப்பட்டு உரையுடன் இங்கு தரப்படுகின்றன.**

*'தெளிவுறு வாத பித்த சேற்பன தோடங் கண்டு*
*களவுபொய் கொலைகட் காமம் கனவிலு நினைவில் லாமல்*
*வளமுற மருந்து செய்தல் வயித்தியன் முறைமை யாகும்*
*உளமகிழ் வோடு பார்க்கு முறுப்புச்சூத் திரத்தைக் கேளே' - 261*

அவ்வாறு வாதம், பித்தம், சிலேத்துமம் என்னும் மூன்றினதும் தோஷங்களைத் தெளிவாகக் கண்டுணர்ந்து களவு, பொய், கொலை, கள், காமம் என்று சொல்லப்படுகின்ற குற்றங்களைக் கனவிலும் நினைக்காமல் நோய் நீங்கிக் குணமடைய மருந்து செய்தல் வைத்தியனுடைய கடமையாகும். மன மகிழ்ச்சியோடு பார்க்கும் உறுப்பு சூத்திரம் பற்றி அடுத்துக் கேட்பாயாக.

*'சூத்திரந் தன்னைக் கேளா யிடதுள்ளங் கால்சூடாகி*
*ஏத்திடும் வலக்கா றண்ணீ ரென்னவே குளிர்ந்திருக்கில்*
*பேர்த்தொரு மருந்தினாலும் பிழைத்திட லரிதா மென்று*
*சாத்திர மறிந்த முன்னோர் சாற்றினாரிதுபொய் யாதே' - 262*

இடது உள்ளங்கால் சூடாகி, வலதுகால் தண்ணீர் போல் குளிர்ந்திருப்பின் எந்தவொரு மருந்தினாலும் தீர்க்கமுடியாது. நோயாளி பிழைத்தல் கடினம் என்று நூல் அறிந்தவர்கள் கூறிவைத்துள்ளார்கள். இது பொய்யாக மாட்டாது.

*'பொய்யல்ல விடதுள் ளங்கால் பொருந்திய*
*- குளிர்ச்சி யுண்டாய்*
*வெய்தென வலக்கால் சூடாய் விரவிய தலைதான் வேர்த்துத்*
*தொய்யுறு முடம்பு முற்றுஞ் சூடுகொண் டிருக்கு மாகில்*
*ஐயம தில்லைச் சொன்னே னவருயிர் பிழைப்ப ராமே' - 263*

இடது உள்ளங்கால் குளிர்ந்தும், வலது உள்ளங்கால் சூடாகவும், தலை வியர்த்தும், பலவீனமான உடம்பு முழுவதும் சூடாகவும் இருக்குமானால் அந்நோயாளி உயிர் பிழைத்து விடுவார் என்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றிச் சொல்லுகின்றேன்.

*'பிழைப்புறு தலைதான் வேர்த்துப் பெருகவே விலாவிற் சூடாய்க்*
*குழைச்சுகள் பொசிந்து நீர்மெய் குளிர்கொண்டே யிருக்குமாகில்*
*மழைத்தமே னியனாங் காலன் வாவெனத் தென்புலத்துக்*
*கழைத்திட லுண்மை யாமென் றறிந்திடா யன்ன மின்னே' - 264*

நோயாளியின் தலையில் வேர்வை பெருகியும் உடல்குளிர்ந்து கொண்டும் இருக்குமாகில் கறுத்த மேனியை உடைய யமன் தனது திசையாகிய தென்புலத்துக்கு வா என்று அழைத்திடுவான் என்பது உண்மையென்று அன்னத்தை ஒத்தவளே அறிந்து கொள்வாய்.

*'அன்னமே கண்கள் வட்டித் தடிவயி றதுகு ளிர்ந்து*
*வின்னமாய் நாரி வீங்கி மெய்யது மிகச்சூ டாகிக்*
*கன்னமுள் வாங்கி விக்கல் காணுமேற் கால னூரின்*
*மன்னவீற் றிருப்ப ரென்று வாகடர் வசனித் தாரே' - 265*

அன்னம் போன்றவளே! கண்கள் ஊன் சிந்தி, அடிவயிறு குளிர்ந்து, நாரி நொந்து வீங்கி, உடம்பு மிகவும் சூடாகி, கன்னம் உட்பக்கமாக ஒட்டி, விக்கலும் எடுக்குமாகில் யமனுலகம் சென்றிடுவர் என்று மருத்துவ நூலோர் கூறிவைத்துள்ளார்கள்.

*'வசனிக்கு நாப்ப சந்து வலதுள்ளங் கைசூ டாகி*
*இசைவுறு மிடதுள் ளங்கை நீர்கசிந் திருக்கு மாகில்*
*அசைவிலா நோய்க ளெல்லா மாதபன் றனைக்கண் டோடும்*
*நிசியெனக் கலங்கி யேங்கி நிற்குமோ நிலவு மானே' - 266*

உரையாடும் நாக்குத் தடுமாறி, வலது உள்ளங்கை சூடாகி, இடது உள்ளங்கையில் நீர் கசிந்து இருக்குமாகில் சந்திரனைக் கண்ட இருள் போல நோய்களெல்லாம் நிற்குமோ பெண்ணே.

*'ஏர்பெறு நெற்றி சூடா யெங்குமே யுடல்வெ துப்பாய்ச்
சோர்வுறு பிடர்குளிர்ந்து சுற்றியே கழுத்து வேர்த்துப்
பாரிய வுச்சி நீராய்ப் பசைப்புக்கொண் டிருக்கு மாகில்
நாரியே யிக்கு ணங்க ணல்லது சாவு மின்றே' - 267*

அழகு மிக்க நெற்றி சூடாகி, உடலெங்கும் வெப்பமாகிப், புறங்கழுத்துக் குளிர்ந்து, கழுத்து சுற்றவர வியர்த்து, உச்சி ஈரமாகக் கசிந்திருக்குமாகில் பெண்ணே இக்குணங்கள் காணின் சாவும் இன்றே நிகழும்.

*'நல்லகண்ணீல மாகி நாமிக வரண்டு நெற்றி
மெல்லவே குளிர்ந்து கண்டம் பிடரிதோள்
- வேர்வை யுண்டாய்ச்
சொல்லிய சேட நெஞ்சிற் சுற்றியே யிறுக்கு மாகில்
அல்லியங் கோதை நல்லா யறுநாளிற் சீவிப் பாரே' - 268*

நல்ல கண்கள் நீல நிறமாகி, நாக்கு மிகவரண்டு, நெற்றியும் மெல்லக்குளிர்ந்து, கழுத்து, பிடரி, தோள் என்பவற்றால் வியர்வை உண்டாகி சளி (சேடம்) நெஞ்சில் நிறைந்து இறுக்குமானால் அல்லிக்கொடி போன்ற பெண்ணே ஆறுநாள் மட்டுமே உயிர்வாழ்வார்.

*'சீவிய தலையிற் சூடாய்ச் செறிந்திடு முளங்கை பள்ளம்
மேவியே குளிர்ந்து நீர்தான் மிகவுநா சியினாற் பாய்ந்து
பாவிய தொண்டை தானும் பரவியே கரக ரக்கில்
ஆவிபோ மென்ன முன்னோ ரறைந்தன ரவனி மீதே' - 269*

தலையில் சூடேறி, உள்ளங்கை பள்ளமாகிக் குளிர்ந்து, மூக்கால் நீர் வடிந்து, தொண்டை கரகரத்தால் உயிர் பிரிந்துவிடும் என்று முன்னோர் கூறிவைத்துள்ளனர்.

*'அவனியின் மாந்தர்க் கெல்லா மரியமூட்டடிசி வந்து
பவனவாய்க் குளிர்ந்து நாசின் பக்கமே சூட தாகித்
தவனமு மின்றிச் சூடாய் வலதுள்ளங் கால்கான் மேவில்
புவனியிற் பிணிகள்வீங்கிப் புகுவர் பொன்னிடையி னாளே' - 270*

உலகில் மாந்தருக்கு மூட்டும் அடியும் சிவந்து, அபான வாசல் குளிர்ந்து, சலதாரையின் வாய் குளிர்ந்து, காய்ச்சலுமின்றி வலது உள்ளங்கால் சூடாகி இருந்தால் நோய்கள் பலதும் பெருத்து இறந்துவிடுவர்.

*'இடையொடு நாரி சற்றே யிரைப்பொடு சூடு முண்டாய்த்
துடையுட னுள்ளங் கால்கள் சூடற்றுக் குளிர்ந்து நீராய்
அடைவுடன் காதி ரண்டு மடைத்தடி யிரைப்புக் காணில்
தடையில்லை யிரண்டு நாளிற் சாதனிச் சயந்தானாமே' - 271*

இடையும் நாரியும் நோவுற்று, வெப்பமும் உண்டாகித், துடையும் உள்ளங்காலும் சூடில்லாது குளிர்ந்து ஈரமாகிக், காதிரண்டும் அடைத்துப் பாதங்களும் வீங்கிக் காணப்பட்டால் இரண்டு நாளில் மரணம் நிச்சயம் என்று அறியலாம்.

*'நிச்சய மாகநெற்றி நெஞ்சுகால் கைசூ டாகி
மெய்ச்சட மெங்குந் தானே வெய்யில் சுட்டதுபோற் காணில்
இச்சக மதனி னோய் தீர்ந் தெய்துவர் சுகத்தை யென்னாப்
பொய்ச்சிட லில்லா மேலோர் புகன்றன ரச்ச மற்றே' - 272*

நெற்றி, நெஞ்சு, கால், கை உட்பட உடலெங்கும் வெய்யில் சுட்டது போல் வெப்பமடைந்து காணப்பட்டால் உலகில் நோய் தீர்ந்து சுகத்தை அடைவது உறுதி என்று பொய்யில்லாத மேலோர்கள் பயமின்றிக் கூறிவைத்தார்கள்.

## வயித்தியன் உறுப்பு:

*'அச்சமி சிலாத்த வயித்திய மறிந்தநல் வயித்தி யோர்க்கு
மெச்சுகண் மூன்று நான்கு தலைமிக்க முகந்தா னைந்து
உச்சிதக் கையு மாறு சரீரமெட் டுறுகால் பத்து
நிச்சய மிவைய றிந்து கொள்வதே நெறியா மன்றே' - 273*

குற்றமில்லாத நல்ல வைத்தியம் அறிந்த வைத்தியருக்குப் புகழப்படுகின்ற கண்கள் மூன்று, தலை நான்கு, முகம் ஐந்து, அழகிய கைகள் ஆறு, சரீரம் எட்டுக், கால்கள் பத்து. நிச்சயமாக இவற்றை அறிந்து கொள்வது முறையாகும்.

*'நெறிகுண மருந்து சுத்தி மூன்று நேத் திரம தாகும்
பிறிவுறு சேட வாத பித்தந்தொந் திப்பு நான்கும்
அறியுநாற் சிரமா நாடி யைந்துமே முகங்க ளாகும்
குறிதரு சுவைக ளாறுங் கூறினார் கைக ளென்றே' - 274*

நல்லொழுக்கம், மருந்து, பரிசுத்தம் என்பவையே வைத்தியரின் மூன்று கண்களாகும். சிலேத்துமம், வாதம், பித்தம், தொந்திப்பு என்னும் நான்கும் தலைகளாகும். நாடிகள் ஐந்தும் ஐந்து முகங்களாகும். சுவைகள் ஆறுமே கைகள் என்று கூறிவைத்தனர்.

*'கைமுத லட்ட தானப் பரீட்சைதான் காய மெட்டாம்
உய்வுறு நாடி பத்துங் காலென வோதி னார்கள்
செய்யுறு வயித்தி யன்பேர் நந்தியந் தேவ னாகும்
வெய்யரோ கியின் பேர்ராகு விளம்பு கல்விழு மனாமே' - 275*

எட்டுவிதமான நோய்ப் பரிசோதனைகளையே சரீரம் எட்டென்று கூறினர். தசநாடிகள் என்று கூறப்படும் நாடிகள் பத்தும் வைத்தியரின் கால்கள் என்றார்கள். கைராசிமிக்க வைத்தியனின் பெயர் நந்திதேவன் என்றார்கள். நோயாளியின் பெயர் ராகு என்றார்கள்.

*'விழுமிய கயிறு நாக பாசமாம் விரல் கண் மூன்றும்
நெறிகொண்மும் மூர்த்தி யாகு முலைப்பானீ டமுத மாகும்
குறைவிலா மருந்துப் பைதான் குறிக்கின்வை குந்த மாகும்
மறுவக லறிவன் வாதி மகன் வயித்தியனா மன்றே' - 276*

வைத்தியரிடம் உள்ள கயிறு நாகபாசமாகும். நாடித்துடிப்பைப் பரிசோதிக்கும் மூன்றுவிரல்கள் மும்மூர்த்திகளாகும். முலைப்பால் அமுதமாகும். குறைவில்லாத மருந்துப்பை சுகம் தரும் வைகுந்தமாகும். குற்றமில்லாத இரசவாதியின் மகனே வைத்தியன் ஆவான்.

## வயித்தியஞ் செய்யலாகாதவர்:

*வயித்தியஞ் செய்ய லாகா மாந்தரை யுரைக்கக் கேண்மின்
செயிர்த்துமற் றுயிர்க்குத் தீமை செய்பவர் பொய்பர் கோளர்
பயித்தியர் தான தன்மஞ் செய்திடாப் பாவி யானோர்
மயக்குறு காம தூர்த்தர் வயித்தியம் வீணென் போர்கள்' - 277*

வைத்தியம் செய்யக்கூடாத மக்கள் பற்றிக் கூறுவதைக் கேட் பீராக. கோபத்துடன் மற்றைய உயிர்களுக்குத் தீமை செய்ப வர், பொய் பேசுபவர், கோள் சொல்பவர்கள், வெறிபிடித்த வர்கள், தானதர்மங்கள் செய்யாத பாவிகள், காமுகர்கள், வைத்தியம் என்பது வீண்செயல் என்று சொல்பவர்கள்.

*'வீணாகத் தம்மைத் தாமே வியப்பவர் நன்றி யில்லோர்*
*தோணிய பத்தியத்தைக் கெடுப்பவர் சொற்கே ளாதோர்*
*காணநோய் தீர்ந்துந் தீரா தென்னுமா ரீசக் கள்வர்*
*பாணியான் மருந்தின் னோர்க்குச் செய்யனும் பலித்திடாதே' -278*

ஒரு பயனும் இல்லாமல் தம்மைத்தாமே புகழ்ந்துகொள்பவர் கள். நன்றி இல்லாதவர்கள், அறிவுறுத்தப்பட்ட பத்தியத் தைக் கடைப்பிடிக்காதவர்கள், சொல்வதைக் கேளாதவர், நோய் தீர்ந்தபின்னரும் நோய் தீரவில்லை என்று சொல்லும் மாரீசக் கள்ளர்கள், இவர்களுக்கு மருந்து செய்யின் அது பலிக்காது.

## நோயாளர்க்குப் புத்தி:

*'பலித்திடுஞ் செய்ம ருந்தைப் பத்திய முறையாய்க்கொள்ளில்*
*சொலித்தெழு நோய்கள் விட்டுத் தொலைந்திடுஞ் சுகமுண்டாகும்*
*வலுத்தநோ யாளி ராசா வாகிடின் மருந்து மில்லை*
*செலுத்து நற்று திவணக்கஞ்செய்தருந் துகம ருந்தே' - 279*

வைத்தியர் தரும் மருந்தை அவர்கூறும் பத்திய முறைப்படி எடுத்துக்கொண்டால் தோன்றிய நோய்களெல்லாம் தொலைந்துபோய்ச் சுகம் உண்டாகும். நோயாளி பலம் மிகுந்த அரசன் போலிருப்பின் தயங்காது மருந்தைப் பெற்று நன்றி கூறி மருந்தை அருந்தவேண்டும்.

*'அருந்து நோ யுடனே தீரு மல்லாத பேர்க ளுக்கு*
*மருந்தினைக் கொடுத்த லாகா வறியநோ யாளி யென்னில்*
*திருந்திய வயித்தியன் கை மருந்துதான் செய்ய வேண்டும்*
*பொருந்துவெம் பிணியைத் தீர்க்கிற் புண்ணியம் புகழு*
*முண்டே' - 280*

அவ்வாறு அருந்தும்போது நோயானது உடனே தீரும். தகுதி யற்ற பேர்களுக்கு மருந்து கொடுத்தல் கூடாது. நோயாளி ஏழையாக இருப்பின் தேர்ந்த வைத்தியன் செலவு குறைந்த கைமருந்து தான் செய்து கொடுக்கவேண்டும். அவ்வாறு கொடுத்து அந்தக் கொடிய நோய் மாறும்போது வைத்திய ருக்குப் புண்ணியமும் புகழும் கிடைக்கும்.

*'புண்ணிய மில்லான் றன்பாற் போய்வாயில் காத்து நின்றே*
*பண்ணுறு மருந்து செய்யிற் பலித்திடா நோயா என்போய்*
*எண்ணிய வயித்தி யன்றன் வாயில்காத் திருப்பனாகில்*
*நண்ணிய நோய்க ளெல்லா நாடாம லகலப் போமே' - 281*

தானதருமங்கள் செய்யாத ஒருவனின் வீட்டுக்கு வைத்தியன் சென்று அவனது வாசலில் காத்து நின்று மருந்து செய்தால் அந்த மருந்து பலித்திடாது. ஆனால் வைத்தியனின் வீட்டு வாசலில் நோயாளி போய்க் காத்து நின்றால் தேடிவந்த நோய்கள் எல்லாம் ஓடிப்போய்விடும்.

## நோய்தீரப் பெறாதோர்:

*'அகல்வுறாப் பிணிவந் துற்றா லருந்தெய் வநீயே யென்பார்*
*இகலுநோய் தீரத்தீர வேனென்றுங் கேட்க மாட்டார்*
*புகலவு டதந்த னக்குப் பொருள் கேட்டாற் கோபஞ் செய்வர்*
*சுகமிலா திறக்கிற் கொன்றா னிவனெனத் தூற்று வாரே' - 282*

தீராத நோயொன்று வந்து சேர்ந்துவிட்டால் வைத்தியனைப் போய்ப்பார்த்து நீயே என் தெய்வம் என்பார். நோய் தீர்ந்த பின்னர் ஏனென்றும் கேட்கமாட்டார். சொல்லப்பட்ட நல்ல மருந்து உனக்குத் தந்ததற்கு உரிய ஊதியத்தைத் தா என்று கேட்டால் கோபம் கொள்ளுவார். மருந்தால் சுகமடையாது இறக்க நேரிட்டால் இவன்தான் கொன்றுவிட்டான் என்று வைத்தியனைத் திட்டுவார்.

*'தூற்றுமிவ் விதமாந் தர்க்குத் துன்புறு நோய் தீராது*
*ஏற்றமாங் கலிகா லத்தி னியற்கையிவ் வண்ணமாகச்*
*சாற்றுவ ரென்று முன்னந் தமிழ்ப்பெருங் கடலை யுண்ட*
*தோற்றமாம் பெரியோ னுண்மை சொற்றனன் சோம்பி லாதே'-283*

இவ்வாறு தூற்றுகின்ற மாந்தருக்குத் துன்பம் தரும் நோய் என்றும் தீரப்போவதில்லை. இந்தக் கலிகாலத்தின் இயற்கை இதுதான் என்று கூறுவர் என்று தமிழ் என்னும் பெருங்கடலை யுண்ட பெரியோன் உண்மையைக் கூறிவைத்தான்.



Sivakadadcham@thaiveedu.com

STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2023)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272




### விருந்தோம்பல்:

நான் ஒரு பெண்ணை அப்பா அம்மா வீட்டிற்கு அழைத்து வந்தேன். அவள் பெயர் யாழினி என்று வைத்துக்கொள் வோம். வள்ளுவரின் அதிகாரம் 9 ஆரம்பமானது. பத்து பதார்த்தங்கள் இலையில் இல்லையெனினும் ஐந்தாவது தட் டில் வேண்டாமா?

என் அப்பா, சமையல் சக்கரவத்தி. ஒரு அற்புதமான விருந்து சமைத்திருந்தார். யாழினிக்காகவே தயாரித்த நறும ணம் வீசும் சுவையான விருந்து. கத்திரிக்காய்ப் பொரித்து, தூள் கலவை சேர்த்து, புளி விட்டு வேகவைத்து, மினுமினுக் கும் கத்திரிக்காய் குழம்பு. அதனுடன் சிறிதாக வெட்டிய உருளைக்கிழங்கை தங்க நிறத்தில் நல்லெண்ணையில் வதக்கி, வெட்டிய பச்சை மிளகாய் போட்டு, மசாலா தூள் சேர்த்து, வெளியில் மொறு மொறுவெனவும் உள்ளே மிருது வாகவும், ஒவ்வொரு வாயிலும் உறைப்பு சுல்லென்று ஏறும் உருளைக்கிழங்கு வதக்கல்.

இதனுடன், வெட்டிய பீட்ருட்டை தேங்காய் பாலில் வேக வைத்து, வெங்காயமும் மிளகாயும் கலந்து, பீட்ருடின் இனிப் பும் மிளகாயின் உறைப்பும் கலந்த பீட்ருட் பால்கறி.

பூ போல உதிரி உதிரியாய் விழும் பாஸ்மதி சோறு. எங்கள் சாப்பாட்டு மேசை வண்ணமயமான ஓவியம் போல இருந்தது.

யாழினி ஓர் இறுக்கமான ஜீன்ஸும் தளர்வான மேல் ஆடை யும் போட்டிருந்தாள். கோடை காலம் அருகில் நெருங்க, கடந்த வருடம் வாங்கிய ஈரணிக்குள் (Bikini) நுழைவதற் காக யாழினி உணவுக் கட்டுப்பாட்டில் முனைப்பாக இருந் தாள்.

நாங்கள் உணவு மேசையை சுற்றி உட்கார்ந்து வாயூறும் விருந்தை சுவைத்தோம். என்னைப் போலவே யாழினியின் சுவை அரும்புகளும் சமையல் சக்கரவர்த்தியின் கை வண் ணத்தில் ஆனந்தமாய் ஆடின. அவள் தட்டில் போட்ட விருந்தை சாப்பிட்டு முடிக்க, 'இந்தா, இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்க பிள்ளை' என்று அப்பா சொல்லி, இன்னும் கொஞ்சம் பரிமாறினார். நான் அவளிடம் ரகசித்தேன், 'எல் லாத்தையும் சாப்பிடணும்னு அவசியம் இல்ல, அப்பா எது வும் சொல்ல மாட்டார்.' அவள் என்னைப் பார்த்து ஒரு குறும் புச் சிரிப்பிட்டு, சிறிது வாய் சாப்பிட்டு, அறை முழுவதிலும் அவள் கண்கள் அலைந்து, தட்டில் இருந்த விருந்தை அவள் விரல்கள் வட்டமிட்டு, அவள் இருக்கையை சற்று சரி செய்து, அவள் உடம்பை லேசாக நகர்த்தி, கடைசியாக யாரும் பார்க்காத பொழுதில் மேசையின் கீழ் அவள் ஜீன்ஸ் பொத்தானை கழட்டி, அவள் குட்டி குளிர்கால தொப்பைக்கு விடுதலை கொடுத்து, அவள் கோப்பையை வழித்து சாப்பிட் டாள். அதன் பிறகு, ஒரு மணி நேரத்துக்கு மேல் அவளால் எழும்ப முடியாமல், கையையும் கழுவாமல், அப்படியே உட் கார்ந்திருந்தாள்.

இந்தக் கதை மூலம் உங்களுக்கு என்ன சொல்ல வருகி றேன் என்று புரிகிறதா?

### சைகார்னிக் விளைவு (Zeigarnik Effect):

1920-களில், ப்ளூமா சைகார்னிக் என்ற ரஷ்ய உளவியலா ளர், வியன்னாவில் உள்ள ஒரு சிற்றுண்டிச்சாலைக்கு சென் றார். அங்கே பல வாடிக்கையாளர்கள் வந்திருந்தனர். ஆனால், மிகவும் குறைந்த பணியாளர்கள். அங்கு வந்த எல்லா வாடிக்கையாளர்களும் பலவித உணவுகளுக்கான உத்தரவுகளைக் கொடுத்தார்கள். பணியாளர்களும் சலிக்கா மல் அனைத்து உத்தரவுகளையும் மறக்காமல் ஞாபகம் வைத்திருந்தனர். சைகார்னிக் அவர்கள் ஞாபக சக்தியை நினைத்து ஆச்சரியப்பட்டார். வாடிக்கையாளர்கள் சாப்பிட்டு பணம் கொடுத்த பிறகு சைகார்னிக் பணியாளர்களிடம் பேசி னார். அப்பொழுது பணியாளர்கள் மனனம் செய்த உத்தர வுகளை மறந்திருந்தனர்.

அவர் உளவியலாளராக இருந்ததால் தான் அவதானித்ததை பரிசோதனைகளாக மாற்றினார். அதாவது, பல பங்கேற்பா ளர்களை வரவழைத்து, அவர்களை இரண்டாகப் பிரித்து, புதிர்களைத் தீர்ப்பது, பின்னலை அவிழ்ப்பது போன்ற சிறிய வேலைகளைச் சொன்னார். ஒரு குழுவை அந்த வேலையை முழுமையாக முடிக்க வைத்தார், இன்னொரு குழுவை அந்த வேலையை முடிப்பதற்கு முன்னே அவர்களைப் பாதியி லேயே நிறுத்தினார்.

வேலையை முழுமையாக முடித்தவர்களுக்கு அவர்கள் முடித்த வேலை பற்றிய ஞாபகம் குறைவாக இருந்தது. ஆனால் வேலையை முடிக்காதவர்களுக்கு அவ்வேலையின் ஞாபகம் தெளிவாக இருந்தது. அவர் பரிசோதனையின் முடிவு:

'முடிக்கப்படாத பணிகள் நமக்கு மன இறுக்கத்தையும்



மூளையில் அரிப்பைப் போல் ஒரு நிலையையும் உருவாக்கும். இதன் மூலம், முடித்த பணிகளை விட முடிக்கப்படாத பணிகளை நாம் எளிதில் ஞாபகம் வைத்திருப்போம்.'

அவரின் முடிவை 1927-லில் சைகார்னிக் விளைவு என்ற பெயரில் வெளியிட்டார். சைகார்னிக் விளைவு உளவியலாளர் உலகத்தில் மிகவும் பிரபலமான கருத்தாக்கம். இது விளம்பரம், சந்தைப்படுத்தல், கல்வி, மற்றும் எங்கள் துறையான பயனர் அனுபவ வடிவமைப்பு, போன்ற பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்படுகிறது.

## கடிவாளம்:

டிங்.., டிங்.., யாழினிக்கு ஒரு குறுஞ்செய்தி. 'பேஸ்புக்ல என் புது பிக்சர் பாரு, ஒரு லைக் போடு, ப்ளீஸ் டீ'. யாழினி பேஸ்புக்கை திறந்தாள். மேலே பர்கர் வகைப் பட்டியலும் (burger menu) பேஸ்புக்கின் முத்திரையுமாய் (logo) வடிவமைக்கப்பட்டிருந்தது. அதன் கீழ் அவளின் முந்திய வகுப்புத் தோழியின் புகைப்படம் இருந்தது. அதைத் தொடர்ந்து, அவளின் பேஸ்புக் நண்பர் ஒருவர் பகிர்ந்த மேற்கோள், 'ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்...'. கைத்தொலைபேசியின் கடைசியில் வீடு, வீடியோ, சந்தை, அறிவிப்புகள், பர்கர் வகைப்பட்டியல் என உருச்சின்னங்கள் வடிவமைக்கப்பட்டிருந்தது.

யாழினி மேலே தள்ள, கீழே வடிவமைக்கப்பட்டிருந்த உருச்சின்னங்கள் மறைந்து அவளின் மச்சானுடைய புது மகிழுந்து படம் பாதியில் தெரிந்தது. அது அவளின் ஆர்வத்தை எழுப்ப, அவளது விரல் மேலும் தள்ளியது. அதன் கீழ் அவளுக்குப் பிடித்த நிறுவன அடையாளம் கொண்ட காலணியின் புகைப்படம். அவள் விரல் அவள் அறியாமலே ஒரு வினாடி நின்றது. பிறகு மேல் தள்ளினாள்.

அவளுக்குப் பிடித்த நடிகர் விஜய் சேதுபதியின் புதுப்பட முன்னோட்டத்தைப் பார்த்தாள். மேலும் தள்ளினாள், அவளது நண்பருடைய மூன்று மாத பழைய படம். தள்ளினாள், அதுக்கு கீழ் ஒரு வாக்கியம், 'உங்களுக்கு ஒரு பூ பிடித்திருந்தால், அதை பறிக்காதீர், அப்படியே விட்டுவிடுவீர். காதல் என்பது பறிப்பதல்ல' - ஓஷோ. அதற்குப் பகிரும் உருச்சின்னத்தை அழுத்தி, மேலும் தள்ளினாள்.

அவளுக்கு பிடித்த அவளது உறவினர்களின், நண்பர்களின் செய்திகள், அவளைக் கட்டி வைக்க, தள்ள தள்ள மேலும் மேலும் சுவாரஸ்யமான அவளுக்கு பிடித்த செய்திகள் வந்து கொண்டே இருந்தன. அப்படியே ஒன்று இரண்டு என சில மணித்தியாலங்கள் கடந்தன. அதன் பிறகு பேஸ்புக்குக்கு யாழினி ஏன் வந்தாள் என்பதையே மறந்து விட்டாள்.

நாங்கள், பயனர் அனுபவ வடிவமைப்பு, சைகார்னிக் விளைவு மூலம் உங்களுக்கு எப்படி எல்லாம் கடிவாளம் பூட்டியிருக்கிறோம் என்று புரிகிறதா?

அது திறன் தொலைபேசி பைய பைய வளர்ந்து வந்த காலம். ஸ்டீவ் ஜொப் பிரபலமான ஐபோனை உலகத்திற்கு அறிமுகப்படுத்திய காலம். அக்காலத்தில் திறன் தொலைபேசிக்காக தனி வடிவமைப்பு ஏதும் இல்லை. கணினியில் உள்ள அதே வடிவமைப்பை கைத்தொலைபேசியிலும் பயன்படுத்திய காலம். ஒரு பக்கத்தின் உள்ளடக்கத்தை மேலும் பார்க்க, நாம் ஒவ்வொரு பக்கமாக கிளிக் கிளிக் செய்ய வேண்டும். இதை பக்கமாக்கம் (pagination) என்று நாங்கள் அழைப்போம்.

அசா ரஸ்கின், என்னைப்போல் ஒரு பயனர் அனுபவ வடிவமைப்பாளர், பக்கமாக்கம் என்ற பிரச்சினைக்கு ஒரு இலகுவான தீர்வை கண்டுபிடித்தார். கிளிக் கிளிக் என அடுத்த பக்கம் செல்வதற்கு பதிலாக, உள்ளடக்கத்தை பார்ப்பதற்கு கீழிருந்து மேல் அல்லது மேலிருந்து கீழ் தள்ளுதல் என்று வடிவமைத்தார். அதற்கு முடிவிலித் தள்ளுதல் (Infinite Scroll) என்று பெயரிட்டார். சைகார்னிக் விளைவு போலவே திறன் கைத்தொலைபேசி நம்ம வாழ்வில் மிகப்பெரிய பங்காக மாற, முடிவிலித் தள்ளுதலும் பிரபலமானது.

## தீர்க்கப்படாத உணர்வு:

உங்களுக்கு விவாகரத்து ஆனவர்களையோ அல்லது உறவுகளை முடித்த break up ஆனவர்களையோ தெரிந்திருக்கக்

கூடும். முக்கியமாக அதில் ஒருவருக்கு சம்மதம் இல்லாத போது, அவர் பெரும்பாலும் தீர்க்கப்படாத உணர்வுகளுடன் போராடுவார். தான் நேசிப்பவரை கடந்து செல்ல முடியாமல், தன் உறவின் நிறைவேறாத எதிர்பார்ப்புகளிலும் கனவுகளிலும் சிக்கி மனம் ‘மத்துறு தயிரென’ தவிப்பார். அவர் தன் நிலையை ஏற்றுக்கொள்ளும் வரை, பழைய உறவின் நினைவுகள் அடிக்கடி மேலெழும்பும். உணர்ச்சிப் பிணைப்பும் உறவில் இருந்து தீர்க்கப்படாத உணர்வுகளும் தொடர்ந்து நீடித்து, மன அழுத்தத்தையும் முழுமையற்ற உணர்வையும் அவருக்கு ஏற்படுத்தும்.

## முடிவுறா முரண்பாடுகள்:

உங்களுக்கு கணவன்-மனைவி உறவிலோ அல்லது காதலர்களின் உறவிலோ சண்டையிடும் தம்பதிகளில் ஒருவர் தன் கோபத்தை அடுத்த நாளுக்கு எடுத்துச் செல்ல மறுப்பவராக இருக்கக் கூடும். அது தான் நேசிப்பவர் தூங்கினாலும், அவரை எழுப்பி தன் தீர்க்கப்படாத முரணை முடிவுக்கு கொண்டு வந்த பின்னே உறங்குவார்கள். இல்லையெனில், அவர்கள் தங்கள் மனதிற்குள் உரையாடலை மீண்டும் மீண்டும் அரங்கேற்றி, மன அழுத்தத்தை அவர்களாகவே உண்டாக்கி, நிறைவடையாத நீண்ட உணர்வில் சிக்கி, தன் உறவின் நிலையை பாதிப்புக்கு உண்டாக்குவார்கள்.

## நிறைவேறாத கனவுகள்:

உங்களுக்கு சிறந்த திறன்களைக் கொண்ட ஒருவரை, தான் விரும்பிய துறையில் பிரகாசிக்கும் திறனைக் கொண்ட ஒருவரைத் தெரிந்திருக்கும். துரதிர்ஷ்டவசமாக, அரசியலின் சூழ்ச்சியில் உருவான போரில் சிக்கி, தன் சொந்த நாட்டைவிட்டு வெளியேறும் கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டு, நிறைவேறாத கனவுகளோடு வெளியேறி இருப்பார். புலம் பெயர்ந்த நாட்டில் வாழ்வதற்காக மனதுக்கு ஒப்பில்லாத வேலை ஒன்றில் தள்ளப்பட்டிருப்பார். நீங்கள் உற்று கவனித்தால் தொடர்ச்சியான அமைதியின்மையால் தூண்டப்பட்டு, நிறைவேறாத கனவிற்கு ஒரு முடிவோ முற்றுப் புள்ளியோ வைக்க தேடித் தேடி, மனதளவிலும் உடலளவிலும் ஒரு பிளவை அனுபவிப்பார்.

## தொடரும்:

தொலைக்காட்சியில் பரபரப்பை ஏற்படுத்தி தொடரும்... என்று போடும் போது விரக்தி அடையும் நபரை அறிந்திருப்பீர்கள். ஆம், வடிவேலு அவசர அவசரமாக ஆட்டோ ஓட்டும் அதே நகைச்சுவை தான். சின்ன வயசு, கர்ப்பிணி விஜயாவிற்கு என்ன ஆச்சோ என்ன ஆச்சோ என்ற பதட்டம், வடிவேலுக்கு மட்டுமல்ல நம்முள்ளும் இடைவிடாத அமைதியின்மையைத் தூண்டி, மனதில் தீர்வைத் தேடவைத்து, முடிப்பதற்கான ஏக்கத்தைத் திரும்பித் திரும்பித் தூண்டச் செய்யும்.

இவைகள் எல்லாவற்றிலும் ஒரு பொதுவான விடயம்: முடிக்கப்படாத வேலையின் போது மூளையில் ஏற்படும் அரிப்பு. இதைத்தான் வடிவமைப்பாளராக நாங்கள் எடுத்து பணமாக்கினோம். இப்பொழுது பேஸ்புக் கதையில் எப்படி உங்களுக்குக் கடிவாளம் கட்டினோம் என்று புரிகிறதா?

திரையில் (Screen) தெரியும் பட்டியல் (menu) ஒரு நிறைந்த எல்லை. கீழே உருச்சின்னம் (icon) ஒரு நிறைந்த எல்லை. அவள் கீழே தள்ளும் போது, உருச்சின்னம் மற்றும் பட்டியல் மறையும்படி வடிவமைத்துள்ளோம். கீழ் உள்ள எல்லையை அடையாவிடில், அவளது மூளை முடிவை அடைய மேலும் மேலும் கீழே தள்ள உந்தும். இது முடிவிலித் தள்ளுதல் (infinite scroll) என்று அவளது மூளைக்குத் தெரியாது.

பேஸ்புக்கில் அவள் அதிக நேரம் செலவழிக்கும் பொழுது, பேஸ்புக்கின் படிமுறையால் (Algoritham) அவளுடைய விருப்பமான நடிகர் விஜய் சேதுபதி, அவளுக்கு விருப்பமான காலணி நிறுவனம், அவளுக்குப் பிடித்த ஓஷோ மேற்கோள்கள் போன்ற அவளது விருப்பங்களைப் கற்றுக் கொள்ள முடியும். நாம் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கு எப்படி காலம் தேவையோ, அதேபோல் பேஸ்புக்கின் படிமுறையும் யாழினியை புரிந்து கொள்வதற்கு நேரம் எடுக்கும். அதற்காகவே யாழினியை தன்னுள் இருந்து வெளியேற்ற முடிந்த அளவு மறுக்கும்.

நீங்கள் கவனித்தால், உள்ளடக்கங்கள் காலவரிசைப்படி வராது. அவை காலவரிசைப்பட்டிருந்தால், அவளது மூளை வடிவத்தைக் (pattern) கண்டுகொள்ளும். அவளது தள்ளுதலின் நடுவில் அவளது தோழியின் 3 மாதப் பழைய படம் இருந்ததால், அவளது மூளை குழப்பமடைந்து முடிவிலித் தள்ளுதலின் போக்குக்கு உடன்பட்டுவிட்டது.

‘யாழினி பற்றி படிமுறை ஏன் கற்றுக் கொள்ள வேண்டும்?’ என்று நீங்கள் கேட்கலாம். இது பேஸ்புக்கின் பயன்பாட்டு அனுபவத்தை மேம்படுத்துவதற்காக இருந்தாலும், இதில் பேஸ்புக்கின் லாபம் மிகப்பெரியது. இது ஒரு இலவச தளம். பேஸ்புக் எப்படி பணம் சம்பாதிக்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? பிரத்தியேகமான விளம்பரங்களை விற்பதன் மூலமே பேஸ்புக் வருமானம் ஈட்டுகிறது. கடந்த காலத்தில், நீங்கள் தொலைக்காட்சியில் அதிக நேரம் செலவிட்ட பொழுது, நிறுவனங்கள் தொலைக்காட்சிக்கு விளம்பரங்களை விற்றனர். தற்பொழுது கிடைக்கும் அளவுக்கு அதில் லாபம் இல்லை. திறன் தொலைபேசியில் நமது வாழ்க்கை குறுக, பேஸ்புக் போன்ற தளங்கள் நம்மைப் பற்றிய குறிப்பிட்ட தகவல்களைச் சேகரித்து, நிறுவனங்களுக்கு சந்தைப்படுத்தி, அவர்களின் விளம்பரத்தையே எங்களுக்கு திருப்பிக் கொடுக்கும்படி வடிவமைத்துள்ளோம். யாழினியின் விரல் அவளுக்கு விருப்பமான காலணி நிறுவனப் படம் வரும் போது ஒரு நிமிடம் நின்றது. நின்ற விரலுக்கு வாங்க அழுத்துவதற்கு எவ்வளவு நேரம் தேவை.

உங்களின் தீர்க்கப்படாத உணர்வுகள், முடிவெடுக்காத கருத்துக்கள், நிறைவேறாத கனவுகள், தொடரும்.. என்று போடும் தொடர்கள், போன்ற உங்களின் உளவியல் பிரச்சினையை நாங்கள் தீர்வாக பயன்படுத்தினோம். உங்களின் மூளை அரிப்பை சீண்டுவதன் மூலம், நாங்கள் உங்களை ஈடுபாட்டுடன் வெளியேற்றாமல் வைத்திருக்கிறோம். முடிவிலித் தள்ளுதல் மூலம் உங்களின் உளவியல் குறைபாடுகளை எங்களின் வணிகலாபத்து யுக்தியாக மாற்றி வடிவமைத்தோம். சரி இப்பொழுது, விருந்தோம்பல் கதைக்கான தொடர்பை நீங்களே கண்டறியுங்கள் பார்க்கலாம்.



niresh.ratnam@thaiveedu.com




விண்வெளிச் சாதனைகளில் இந்தியா ஏனைய நாடுகளுடன் போட்டி போட்டுக்கொண்டு முன்னேறி வருவது பாராட்டுக்குரியது. அறிவியல் என்று எடுத்துப் பார்த்தால், விண்வெளி சார்ந்த புதிய கண்டுபிடிப்புகள்தான் எதிர்காலத்தில் முக்கியம் வாய்ந்ததாக இருக்கப்போகின்றது. இதுபற்றிய அறிவியல் அறிவு பொதுமக்களிடையே, குறிப்பாக எம்மவர்களிடையே மிகவும் குறைவாகவே காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. காரணம் சந்திர மண்டலத்தில் 1969-ம் ஆண்டு யூலை மாதம் 21-ம் திகதி அப்பலோ விண்கலத்தில் சென்ற ஆம்ஸ்ரோங் என்ற மனிதன் முதன்முதலாகக் கால் பதித்தபின் இத்துறையில் மக்களைக் கவரக்கூடிய விதமாகப் பெரிதாக எதுவும் சாதிக்கப்படவில்லை என்ற குறைபாடும் இதற்கொரு காரணமாகும். அதன்பின் அமெரிக்காவின் 12 வீரர்கள் சந்திரனில் கால் பதித்தாலும் அது பெரிதாகப் பேசப்படவில்லை. அந்தக் குறையை நிவர்த்தி செய்யத்தான் சந்திரன் பற்றி மேலதிகத் தகவல்களை அறிந்துகொள்ள இதில் ஆர்வமுள்ள நாடுகள் முயற்சி செய்கின்றன. அந்தவகையில் இந்தியா மேற்கொண்ட முயற்சிதான் சந்திராயன்-3 ஆகும். இத்திட்டம் வெற்றி பெற்றதால், ஆளில்லாத விண்கலங்களை அனுப்பும் அமெரிக்கா, ரஷ்யா, சீனா போன்ற மூன்று நாடுகளோடு இந்தியாவும் இணைந்து கொண்டிருக்கின்றது. சந்திரனில் மனிதரைத் தரை இறக்கியதில் இதுவரை அமெரிக்கா மட்டுமே சாதனை படைத்திருக்கின்றது.

கடந்த யூலை மாதம் 14-ம் திகதி 2023 சந்திராயன்-3 என்ற விண்ணுளவியை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் இஸ்ரோ (Indian Space Research Organisation (ISRO) சந்திரனை நோக்கி அனுப்பியிருந்தது. இதே போன்றதொரு சந்திராயன்-1 ஒக்ரோபர் 2008-ம் ஆண்டும், சந்திராயன்-2 விண்ணுளவியை யூலை 2019-ம் ஆண்டும் இந்தியா ஏற்கனவே அனுப்பியிருந்தது. ஆனால் அது சந்திரனின் தரையில் இறங்கியபோது ஏற்பட்ட தவறால் உடைந்து நொருங்கிவிட்டது. தோல்விகளில் இருந்துதான் வெற்றிகளின் ஏணிப்படிகள் அமைகின்றன என்பதால் இம்முறை அந்தத் தவறுகள் திருத்தப்பட்டு சந்திராயன்-3 வடிவமைக்கப்பட்டது. சந்திரனின் சுற்றுப்பாதைக்குள் வந்த சந்திராயன்-3 ஒகஸ்ட் மாதம் 23-ம் திகதி சந்திரனின் தென்துருவப் பகுதியில் வெற்றிகரமாக தரையிறக்கியிருந்தது.

சந்திராயன்கள் பற்றிச் சிறிது குறிப்பிடலாம் என நினைக்கின்றேன். இத்திட்டத்தின்படி சந்திராயன்-1, 2008-ம் ஆண்டு



ஒகஸ்ட் மாதம் அனுப்பப்பட்டது. 1230 இறாத்தல் நிறையுள்ள இது ஆளில்லாத ஒரு விண்வெளிப் பயணக் கலமா



கும். ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ஸ்ரீ அரிக்கோட்டா விண் வெளி மையத்தில் இருந்து அனுப்பப்பட்ட இந்தக் கலம் பூமியின் சுற்றுப் பாதையைக் கடந்து சந்திரனின் சுற்றுப் பாதைக்கு நவம்பர் 8-ம் திகதி சென்றது. இது பூமியைச் சுற் றிவரப் 11 மணிநேரம் எடுத்தது, அதைத் தொடர்ந்து உயர வட்டத்தில் சுற்றியபோது, 25 மணிநேரம் எடுத்துக் கொண் டது. குறிப்பிட்ட நேரத்தின்படி, 2008-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் திகதி சந்திரனின் தென்துருவப்பகுதியில் தரை இறங்கும் முயற்சி நடைபெற்றது. இதிலிருந்து பிரிந்த தரை யிறங்கி மெதுவாக இறங்குவதற்கான வடிவமைப்பைக் கொண்டிராதபடியால், சந்திரனின் தரையில் மோதிக் கொண் டது. இந்தக் கலம் சில அறிவியல் கருவிகளைக் கொண்டி ருந்தது. இது தரையிறங்கிய இடத்தைச் 'சவகர் புள்ளி' என்று குறிப்பிடுகின்றார்கள். சந்திரனின் நிலப்பரப்பில் ஏதா வது கனிமங்கள் இருக்கின்றனவா என்பதை ஆய்வு செய் வதே இதன் நோக்கம். 2009-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 28-ம் திகதி வரை பூமியுடனான இதன் தொடர்பு நீடித்திருந்தது.

அடுத்து இத்திட்டத்தின்படி அனுப்பப்பட்ட சந்திராயன்-2-ஐப் பற்றிப் பார்ப்போம். சந்திராயன்-1-ஐத் தொடர்ந்து சுமார் 10 வருடங்களின் பின் சந்திரனை ஆய்வுசெய்ய 2019-ம் ஆண்டு யூலை மாதம் அனுப்பப்பட்ட விண்கலம்தான் சந்திராயன்-2 ஆகும். இந்த விண்கலத்தில் இந்தியாவில் வடிவமைக்கப் பட்ட 'விக்ரம்' என்ற ஒரு தரையிறங்கியும், 'பிரகியான்' என்ற ஒரு தரையூர்தியும் இணைக்கப்பட்டிருந்தன. இந்த விண்க லம் பூமியின் நீள்வட்டச் சுற்றுப்பாதையில் சுற்றியபின் அதி லிருந்து விலகிச் சந்திரனின் சுற்றுப்பாதையை 2019-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 20-ம் திகதி சென்றடைந்தது. 2019 செப்ரெம்பர் 6-ம் திகதி சந்திரனின் தென்துருவத்தில் தரையி றங்க முயற்சி செய்தாலும், மென்பொருளில் ஏற்பட்ட தவறு காரணமாக மெதுவாகத் தரையிறங்க முடியாமல், வேகமாக இறங்கியதால் சந்திரனின் தரையில் மோதி உடைந்துவிட்டது. அதனால் பெரும் செலவில் தயாரிக்கப்பட்ட தரையிறங்கி யும், தரையூர்தியும் பாவனையற்றுப் போய்விட்டன. இதன் பின் வடிவமைக்கப்பட்ட சந்திராயன்-3-ஐ சந்திரனுக்கு அனுப் பியபோது இந்தத் தவறுகள் கவனத்தில் எடுக்கப்பட்டன. இதேபோல இஸ்ரேல் நாடும், யப்பானும் முன்பு தரையிறக் கத்திற்கு அனுப்பிய கலம்களும் சந்திரனின் தரையில் மோதிக்கொண்டன.

சந்திராயன்-3, 2023-ம் ஆண்டு யூலை 14-ம் திகதி சந்திரனை நோக்கி அனுப்பப்பட்டது. சுமார் 615 கோடி இந்திய ரூபாய் செலவில் வடிவமைக்கப்பட்ட சந்திராயன்-3, பூமியின் நீள்வட் டச் சுற்றுப்பாதையை ஐந்து தடவைகள் சுற்றியபின் வெற்றிக ரமாகச் சந்திரனின் சுற்றுவட்டப் பாதைக்குள் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி சென்றடைந்தது. சந்திரனின் சுற்றுப் பாதைக் குள் சென்ற சந்திராயன்-3 சந்திரனின் மேற்பரப்பைப் படங் கள் எடுத்து அனுப்பி இருந்தது. இந்தப் படங்களை இஸ்ரோ பொது ஊடகங்களில் பகிர்ந்துள்ளது.

2023-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 23-ம் திகதி மாலை சந்திர னின் தென்துருவப் பகுதியில் வெற்றிகரமாகத் தரையிறங்கி யது. சந்திரனின் தரைப்பரப்பில் இருந்து 30 கிலோ மீட்டர் உயரத்தில் இருந்த சந்திராயனின் கடைசிப் 15 நிமிடங்களும் மிகவும் பரபரப்பாக இருந்தது. தரையிறங்கும் போது, மணிக்கு 6000 கிலோ மீட்டர் வேகத்தில் இருந்து மணிக்கு 1200 கிலோ மீட்டராக அதன் சிறிய ராக்கெட்டுகளின் துணை யோடு 7.4 கிலோமீட்டர் உயரத்தில் வேகம் குறைக்கப்பட் டது. அடுத்து எங்கே தரையிறங்குவது, தரையிறங்குவதற்கு

உகந்த இடம் எது என்று விரைவாக முடிவெடுக்கப்பட்டது. செயற்கை நுண்ணறிவு மூலம் ஏற்கனவே முடிவெடுத்துப் பதிவு செய்யப்பட்ட பாதையைச் செயற்கை நுண்ணறிவு இனங்கண்டு அதைப் பின்பற்றித் தரையிறங்கியது. சுமார் 800 மீட்டர் உயரத்தில் இருக்கும் போதே பக்கவாட்டில் இருந்த அதன் கால்கள் தரையை நோக்கி நீட்டப்பட்டிருந்தன.

சந்திரனின் ஈர்ப்பு விசைக்கு ஈடுகொடுத்து ரொக்கட்டின் தள்ளுவிசை இயங்கியதால் விண்கலத்தால் மெதுவாகத் தரை இறங்க முடிந்தது. பாறைகள் மீதோ அல்லது சிறு குழிகளிலோ இறங்கியிருந்தால் சரிந்து விழுந்திருக்கலாம், அப்படி நடக்காமல் இருப்பதற்கு இதில் இணைக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் எல்லாவற்றையும் விரைவாகக் கணித்துச் செயற்பட்டிருந்தது.

சந்திரனின் தென் துருவத்தில் வெற்றிகரமாகத் தரையிறங்கிய சந்திராயனின் திட்டம் முதன் முதலாக வெற்றிகரமாக நடைபெற்றதையிட்டுப் பாராட்டாமல் இருக்கமுடியாது. சந்திரனின் இப் பகுதியை இதுவரை வேறு எந்த நாடும் ஆய்வு செய்யவில்லை. சந்திராயன்-2-ன் தேவைக்காக 2019-ம் ஆண்டு அனுப்பப்பட்ட சந்திரனைச் சுற்றும் விண்சுற்றிக்கலம் இப்பொழுதும் பாவனையில் இயங்கிக் கொண்டு இருப்பதால், சந்திராயன்-3-க்கான தேவைகளையும் அதுவே நிறைவேற்றுகின்றது.

தரையிறங்கிக்கு 'விக்ரம்' என்ற பெயரும், தரையூர்திக்குப் 'பிரகியான்' என்ற பெயரும் சூட்டப்பட்டிருக்கின்றது. சந்திராயன்-2-ல் சென்ற தரையிறங்கி மற்றும் தரையூர்தி ஆகியவற்றின் பெயரையே இதற்கும் சூடியிருக்கிறார்கள், காரணம் சந்திராயன்-2-ல் சென்ற தரையிறங்கியும், தரையூர்தியும் சந்திரன் தரையில் ஏற்பட்ட மோதலில் நொருங்கிப் போனதால் பாவனை அற்றதாகிவிட்டது.

சுமார் 1700 கிலோகிராம் எடையுள்ள விக்ரம் என்ற பெயரைக் கொண்ட தரையிறங்கியிலுள்ள தரையூர்தி ஆறு சக்கர வடிவமைப்பைக் கொண்டதாக இருக்கின்றது. இந்த 26 கிலோகிராம் நிறையுள்ள தரையூர்தி சூரிய மின்சக்தியில் இயங்குவதால் 14 நாட்களுக்குத் தொடர்ந்து இயங்கக்கூடியது. சுமார் 1600 அடி தூரம்வரை தனது பயணத்தைத் தொடரும் வகையில் இயங்கக்கூடியது. ஒளிப்படக்கருவி, கதிர்நிரல் அளவிகள், துளைப்பி போன்ற அறிவியல் கருவிகளைத் தன்னகத்தே கொண்டது. இது தரை இறங்கிய இடத்திலிருந்து சுற்று வட்டத்தில் உள்ள சந்திரனின் மண் மற்றும் அங்குள்ள பாறைகளில் மக்னீசியம், அலுமினியம், சிலிக்கான், பொட்டாசியம், கல்சியம், டைட்டானியம், இரும்பு போன்ற வேதித் தனிமங்கள் இருந்தால் அவற்றையும் இனங்கண்டு பதிவு செய்யும். முக்கியமாகத் தண்ணீர் இருக்கிறதா என்பதை ஆய்வு செய்யும். இது சந்திரனின் தரையில் இருந்து தரையிறங்கியுடனும் இந்தியத் தரைக் கட்டுப்பாட்டுக் குழுவுடனும் தொலைத்தொடர்பு கொள்ளக்கூடிய வசதிகளைக் கொண்டிருக்கின்றது.


இதே சமயம் ரஷ்யாவும் ஓகஸ்ட் மாதம் 10-ம் திகதி லூனா-25 என்ற விண்கலத்தை சந்திரன் நோக்கி அனுப்பியது. ஓகஸ்ட் 16-ம் திகதி சந்திரனின் சுற்றுவட்டப் பாதைக்குள் இது நுழைந்தது. 47 வருடங்களின் பின் ரஷ்யா மீண்டும் சந்திரனை நோக்கி இந்த விண்கலத்தை அனுப்பியதற்கு ஒரு காரணம் இருக்கிறது. இதுவரை எந்த நாடும் தென் துருவப் பகுதியில் தளவூர்தியை வெற்றிகரமாகத் தரை இறக்கவில்லை. இந்தியா தனது அட்டவணைப்படி 23-ம் திகதி தரை இறக்கப் போவதாக அறிவித்திருந்தது. அதற்குமுன் முதன் முதலாக சந்திரனின் தென்துருவத்தில் வெற்றிகரமாக ஊர்தியை இறக்கிய பெருமையை ரஷ்யா நிலைநாட்ட நினைத்தது. அதனால் 21-ம் திகதி திங்கட்கிழமை அவசரமாகத் தரையிறக்க முற்பட்டதால், கட்டுப்பாட்டை மீறித் தரையிறங்கும் கலம் சந்திரனின் தரையில் மோதி உடைந்து விட்டது. ரஷ்ய அரசின் விண்வெளி நிறுவனமான 'ரோஸ்கோஸ்மோஸ்' என்ற நிறுவனம் இந்தத் தகவலை வெளியிட்டிருந்தது.

சந்திராயனைவிட லூனா-25 வேகமாகச் சந்திரனை அடைந்ததற்குக் காரணம் ரஷ்யாவின் ராக்கெட்டுகள் வேகமாகச் செல்லக்கூடிய வடிவமைப்பபைக் கொண்டவை, இந்தியாவிடம் அந்த வசதிகள் இருக்கவில்லை. ரஷ்யா கடைசியாக லூனா-24-ஐ 1976-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சந்திரனுக்கு அனுப்பியிருந்தது. இந்தியாவின் சந்திராயனும், ரஷ்யாவின் லூனா-25 தரையிறங்கியும் தென்துருவப் பகுதியில் தரையிறங்க வடிவமைக்கப்பட்டாலும், ரஷ்யாவால் அதைச் சாதிக்க முடியவில்லை, ஆனால் இந்தியா அதில் வெற்றி பெற்றது.

சந்திரனின் தரையில் தளவூர்தியை வெற்றிகரமாகத் தரை இறக்குவதில் இதுவரை அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய மூன்று நாடுகள் வெற்றி பெற்றிருக்கின்றன. ஆனால் இவை எல்லாம் இதுவரை வடதுருவப் பகுதியில்தான் நடந்தன, தென்துருவப் பகுதியில் தரையிறங்கியது இதுவே முதற்தடவையாகும். அந்தச் சாதனையை இந்தியா இப்போது நிகழ்த்தியிருக்கின்றது. இந்தியாவைப் பொறுத்தவரை, அதன் பொருளாதார நிலையோடு ஒப்பிடும்போது, இது மிகப்பெரிய சாதனையாகும்.

அமெரிக்காவின் சந்திரனுக்கான செயற்திட்டங்கள் இதுவரை காலமும் சந்திரனின் வடதுருவப் பகுதியில்தான் நடந்தேறின. அமெரிக்காவின் நாசாவும் 'ஆட்டிமிஸ்' திட்டப்படி 2025-ம் ஆண்டு மனிதரைச் சந்திரனில் தரையிறக்கத் தயாராக இருக்கின்றது. இந்தத் திட்டத்தின்படி தென்துருவப் பகுதியில் தரையிறக்கம் நடைபெற இருக்கின்றது. இதில் ஒரு பெண்ணும், இன்னும் ஒருவரும் இடம்பெற இருக்கின்றனர். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால், சந்திரனில் கால்பதித்த முதல் பெண்மணி என்ற சாதனையை அந்தப் பெண்மணி பெற்றுக் கொள்வார்.

உசாத்துணை:
https://www.cnn.com/2023/08/23/world/chandrayaan-3-lunar-landing-attempt-scn/index.html



kuruaravindan@thaiveedu.com

# ஞாபகம் இருக்கிறதா?

- ச.சஜீபன்

சிறந்த நினைவுத்திறன் உள்ளவர்களே வாழ்க்கையில் எளிதில் வெற்றியடைகின்றனர். இந்த வகையில் ஞாபகம் என்பது யாவருக்கும் மிக அவசியமானதோர் அறிகை செயன்முறையாக உள்ளது. கற்றனவற்றை மனதில் பதித்து, தேவையான போது மீண்டும் உணர்விற்குக் கொண்டு வருதலே ஞாபகம் அல்லது நினைவு ஆகும். ஞாபகம் என்பது எமது நனவில் நிகழ்கின்ற செயற்பாடாகும். குறிப்பாகப் புலன்களின் மூலம் ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை மீட்டறியும் சக்தியே ஞாபகம் எனப்படும். ஞாபகம் எமது நாளாந்த வாழ்வில் பிரதான இடம் வகிக்கின்றது. எமக்குப் புலனறிவைத் தொடர்ச்சியாக வழங்குகின்ற செயற்பாடாக இது அமைகின்றது. எல்லா உயிர்களிடமும் தமது பழைய விடயங்களை, அனுபவங்களைச் சேமித்து வைக்கக்கூடிய திறனாக ஞாபகம் விளங்குகின்றது. எனவே தகவல்களைப் புகுத்தி அவற்றினைக் களஞ்சியப்படுத்தி மீட்டுக்கொள்ளும் தன்மையினை ஞாபகம் என வரையறுப்பர்.

கற்றல்சார் உயர்நிலைச் செயன்முறையுடன் ஞாபகம் மிகவும் நெருங்கிய தொடர்புடையதாக விளங்குகிறது. குறிப்பாக நாம் கற்றதை மனதில் நிலைநிறுத்தி தேவையான சந்தர்ப்பங்களில் மீட்டறிவதற்கு ஞாபகம் பயன்பாடுடையதாக விளங்குகின்றது.

ஞாபக வகைகளாக பின்வருவனவற்றையும் குறிப்பிடலாம்.

### புலன்சார் ஞாபகம் (Sensory Memory):

சூழலில் தூண்டல்களாக தகவல்கள் புலனங்கத் தொகுதிக்கு கிடைத்தவுடன் அத்தகவல்களை மூளை இனங்காணும் வரையில் தாங்கி வைத்திருத்தல் புலன்சார் ஞாபகமாகும். ஓரிரு நொடிகள் மட்டுமே நீடிக்கும். உதாரணம்: ஒரு விபத்தில் நாம் பார்த்த காட்சி.

### குறுகிய கால ஞாபகம் (Shot term Memory):

புலக்காட்சி பெறுபவை தொடர்பான உடனடியான ஞாபகமே குறுகிய கால ஞாபகம் எனப்படுகின்றது. குறுகிய கால ஞாபகத்தில் ஒரு சில நிமிடங்களுக்கே தகவல்கள் தங்கியிருக்கும். உதாரணம்: அழைத்த தொலைபேசி இலக்கம்.

### நீண்ட கால ஞாபகம் (Long term Memory):

நீண்ட காலத்துக்கு தேங்கியிருக்கும் தகவல்கள் நீண்ட கால ஞாபகத்தில் களஞ்சியப்படுத்தப்படும். குறுகிய கால ஞாபகத்தினுள் புகும் தகவல்கள் ஒரு விதமான பயிற்சியின் பின்னர் நீண்ட கால ஞாபகத்தை சென்றடையும். உதாரணம்: கணித வாய்ப்பாடுகள்.

நினைவாற்றல் இல்லாது போனால், மனிதருக்கு அவர்களின் அனுபவத்தாலும், நுண்ணறிவினாலும் பயன் ஏதுமில்லை. உள்ளத்தில் களஞ்சியப்படுத்தி வைத்த யாதேனும் தகவல், தொடர்ந்து தேங்கியிருக்காமை மற்றும் நினைவு கூற முடியாமற் போதலை மறத்தல் எனலாம்.

மறதிக்குரிய காரணங்கள் எனும் போது... காலம் செல்லச் செல்ல கற்றவை மறந்து விடுகிறது, மீள ஞாபகப்படுத்தாமை, கற்ற பொருளில் அக்கறையின்றி இருத்தல், முன்னர் கற்ற விடயம் பின்னர் கற்ற விடயத்தையும், பின்னர் கற்ற விடயம் முன்னர் கற்ற விடயத்தையும் ஞாபகப்படுத்துவதில் இடையூறு விளைவித்தல், பயம், கவலை, கோபம், நரம்புத் தளர்ச்சி ஆகிய தீவிர மனவெழுச்சிகள், ஐயம், கவனக் குலைப்பு, களைப்பு, மூளையில் ஏற்பட்ட காயங்கள், உணர்வின்றிப் போதல், விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நனவிலி மனதில் ஒடுக்கப்படுத்தல், வயது முதிர்ச்சியினால் நரம்புத் தொகுதியில் ஏற்படும் மாற்றங்கள் எனலாம்.

தாம் கற்றதை நீண்ட நாட்கள் நினைவில் வைத்துக் கொண்டால் அவர்கள் வாழ்க்கை பயனுள்ளதாக அமையும். இவ்வாறு நாம் கற்றுக்கொள்ளும் விடயங்களை ஞாபகத்தில் நிறுத்தி வைத்துக்கொள்வது என்பது நபர்களுக்கு நபர் மாறுபடுவதை நாம் நமது நாளாந்த வாழ்வில் காணமுடிகிறது. எனினும், ஞாபகம் தொடர்பாக நாம் எதிர்நோக்கும் சவால்களை மேற்கொள்வதற்கும் நினைவாற்றலை மேம்படுத்துவதற்கும் பல்வேறு நுட்பங்களை நாம் கையாள முடியும். அத்தகைய நினைவினை மேம்படுத்தும் உத்திகள் யாவை என அறிந்து கொள்வோம்.

### நினைவினை மேம்படுத்தும் உத்திகள்:

ஒற்றுமைப்படுத்தல் மூலம் ஒரு நிகழ்வை மற்ற நிகழ்வோடு ஒற்றுமைப்படுத்திப் பார்க்கும் போது அவை நினைவிலிருக்கும். இப்படிப்பட்ட உத்தியை நாம் தொழிலிலும், வாழ்விலும் பயன்படுத்துகின்றோம். கற்கும் பொருளைப் பற்றிய சில சுருக்கக் குறிப்புகள் நினைவு கூர்தலுக்குப் பெரிதும் பயன்படும்.

தொடர்புகளை அறிதல் என்பது நாம் முன்கூட்டியே கற்ற ஏனைய விடயங்களுடன் தொடர்புபடுத்திக் கற்றலே தொடர்புகளை ஆராயும் நுட்பமாகும். ஒரு சில நிகழ்வுகள் ஏனைய



முக்கிய நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தப்படுவதால் நினைவு படுத்தப்படுகிறது. முதன் முதலாக கார் வாங்கிய நாள் எவ்வளவு முக்கியமானதும், சந்தோசமானதும் என்பது நினைவிலிருக்கும். அப்போது நிலவிய வெப்பம் முக்கியமானதல்ல ஆனாலும் கார் வாங்கிய நாளை நினைக்கும் போது அந்த நாளின் காலநிலை நம் நினைவில் வருவது இயல்பு ஆகும்.

ஒரு விடயத்தை நினைவில் சேமிக்க அதை இன்னொரு விடயத்துடன் தொடர்புபடுத்த வேண்டும். உதாரணமாக: ஆங்கில மாதங்களில் சிலவற்றுக்கு 30 நாட்கள் வரும், சிலவற்றுக்கு 31 நாட்கள் வரும். இதை நினைவுபடுத்த நம் ஆசிரியர்கள் ஓர் உபாயம் சொல்லியிருப்பார்கள். கை விரல்களை மடக்கி ஒவ்வொரு மாதத்துக்கும் வரிசையாக ஒரு மேடு பள்ளத்தை ஒதுக்கச் சொல்வார்கள். மேட்டுப் பகுதியில் வரும் மாதத்துக்கு 31 நாட்கள் என்றும், பள்ளப் பகுதியில் வரும் மாதத்துக்கு 30 நாட்கள் என்றும் வகை பிரிப்போம் அல்லவா? கடினமான விடயங்களை இப்படித்தான் எளிமையான வேறொன்றுடன் தொடர்புபடுத்த வேண்டும்.

திரும்பத் திரும்ப நினைவுகூர்தல் மூலம் அதிக நேரம் ஞாபகத்தில் உள்ளது. சாப்பிடும் போது, குளிக்கும் போது, பள்ளிக்குப் போகும் போது, நீங்கள் ஏற்கனவே படித்த விடைகளை சொல்லிப் பார்க்கலாம். அது மனதில் பதியும். கணக்கில் உள்ள சூத்திரத்தை (Formula) சொல்லிப் பார்த்தால் நினைவில் இருப்பதைக் குறிப்பிடலாம். ஒரு சூத்திரத்தை பார்த்ததுமே அது எந்தப் பாடத்தில் வருகிறது, அதிலிருந்து என்ன மாதிரி கேள்வி கேட்பார்கள் என்பதை ஒத்திகை பார்ப்பதன் மூலம் அறிந்துகொள்ள முடியும். நம் நினைவுக்கும் கொண்டு வரமுடியும். Formula மாதிரி இப்படி சில முக்கிய வார்த்தைகள் இருக்கும். அவற்றை பெரிய ச்சார்ட்களில் எழுதி, வீட்டில் தொங்கவிட்டு, அடிக்கடி பார்ப்பதன் மூலம் அவை நம் ஞாபகத்தில் இருக்கும்படி செய்யலாம்.

ஒத்திகை பார்க்கும் போது நினைவுபடுத்துவதும், மனப்பாடம் செய்வதும் கடவுள் கொடுத்த வரமல்ல. அது ஒரு பயிற்சி! கிரிக்கெட் போல, வயலின் வாசிப்பது போல அதுவும் ஒரு பயிற்சி. திரும்பத் திரும்ப செய்வதால் வரும் பயிற்சி, படித்து திரும்பவும் படித்து, எழுதிப் பார்த்து, மனசுக்குள் சொல்லிப் பார்த்து, திரும்பவும் மறுநாள் சொல்லிப் பார்த்து பயிற்சி எடுக்க வேண்டும்.

ஒரு வாக்கியத்தைப் படித்துவிட்டு கண்களை மூடிக்கொண்டு சொல்லிப்பார்த்தல், பின்னர் அதனைப் பார்க்காமல் எழுதுதல்.., இவ்வாறு செய்வதால் ஒவ்வொரு வாக்கியமும் கற்ற பின்னர் நினைவிலிருக்கிறதா என்று சோதித்தறியப்படுகிறது. இவ்வாறு அறிவியல் கருத்துக்கள், சூத்திரங்கள், சமன்பாடுகள், கருத்துக்கள் போன்றவற்றை எளிதில் நினைவு கொள்ள முடியும்.

சில சமயம் விடுபட்ட சில இடங்களை அல்லது நிகழ்வுகளைக் கற்பனையாக நினைத்து பின்பற்றுகின்றோம். முழுப் படத்தையும் பார்ப்பதற்குக் குறைவாக உள்ள பகுதியையும் நம் மனதில் நிரப்பிப் பார்க்கிறோம். இதுதான் நடக்கிறது என்று அறியாமலேயே அவற்றைச் செய்கின்றோம்.

கற்கும் விடயங்களை மனதிலே விம்பங்களாக உருவாக்கிக் கற்கும் போது அவை எளிதாக நினைவில் இருக்கும். நினைவுக்கு வர... 'மக்கர்' செய்யும் பாடத்தைத் திரும்பவும் படிக்கலாம். படித்த விடயங்களை அடிக்கடி மனத் திரையில் ஓட விட்டு பயிற்சி செய்வது நினைவாற்றலை மேம்படுத்தும் வழிகளில் முக்கியமானது. இதனால் பாடங்கள் மறக்காமல் இருப்பதுடன், தேர்வு பயமும் வராது.

கற்றலை விரும்பும் மனப்பான்மை நினைவினை மேம்படுத்தும். பெற்றோர், ஆசிரியர் மற்றும் பிறரால் கற்க வற்புறுத்தப்படும் போது கற்றல் ஒரு வெறுப்புச் செயலாகத் தோன்றும். குழந்தைகளை அடித்து அச்சுறுத்திப் படிக்கச் செய்தல் மிகவும் தவறானது. அவர்கள் படிக்கும் போது கவலையுடன் அச்சப்பட்டுப் படிக்கின்றனர். படித்தவை ஒருபோதும் அவர்கள் நினைவில் தங்காது. குழந்தைகளைப் புகழ்ந்து அரவணைத்து மகிழ்ச்சியான சூழலை ஏற்படுத்திப் படிக்கச் செய்வது அவர்களின் கற்றல் ஆர்வத்தைத் தூண்டி, கவனமாகப் படித்து நினைவில் இருத்திக் கொள்ள உதவும். உதாரணம்: வகுப்பறையில் முதல் நிலையை அடையும் மாணவருக்கு பரிசளித்தல்.

தாமாகவே விரும்பிக் கற்றலில் ஈடுபடும் போது கற்றல் நிலைப்பட்டு நினைவில் நிற்கும். கவனித்துக் கற்றல் நினைவினை அதிகரிக்கும். ஆர்வமுடன் கற்றல் நினைவில் நீண்ட நாட்கள் நிலைத்திருக்கும். சுதந்திரமாகத் தானே கற்றல், கற்றவற்றை நினைவில் இருத்திக் கொள்ள சிறந்த வழியாகும். பாடத் தெரிவுகளை மேற்கொள்ளும் போது மாணவர்கள் விரும்பும் பாடங்களை தெரிவு செய்தால் நன்றாக கற்றலில் ஈடுபடுவார்கள்.

பொருளுணர்ந்து கற்றல் நீண்ட நினைவில் நிற்கும். மாணவர்கள் ஒரு வாக்கியத்திலுள்ள சில வார்த்தைகளைத் திரும்பத் திரும்பக் கூறி மனப்பாடம் செய்வதை ஆசிரியர்கள் தவிர்க்க வேண்டும். ஒரு வாக்கியத்தை முழுமையாகக் கற்கும் போது தான் அதன் பொருள் புரியும். எனவே ஒவ்வொரு வாக்கியத்தையும் முழுமையாகக் கற்பது நினைவினை மேம்படுத்தும். மாணவர்கள் பொருளுணராது மனனம் செய்து கற்கும் போது, பரீட்சையில் வினாவினை வேறு விதமாக கேட்டால் அவற்றை சரியாக பிரயோகித்து பதில் எழுத சிரமப்படுவார்கள்.

மெதுவாக நிதானமாக அவசரமின்றிக் கற்பது நினைவாற்றலைப் பெருக்கும் மற்றும் நேரத்தைச் சிக்கனப்படுத்தும். கற்கும் பொருளை பல முறை இடைவிட்டுப் பயிலுதல் வேண்டும். ஒரே மூச்சில் படிப்பதை விட இடைவெளி விட்டுப் பயிலுதல் சோர்வினைப் போக்கி நினைவினைப் பெருக்கும். பரீட்சைக்கு முதல் நாளில் அவசரமாக தயாராகும் மாணவர்களை விட முன்பதாகவே நிதானமாய் தயாராகும் மாணவர்கள் பதற்றமின்றி பரீட்சையை எதிர்நோக்குவார்.

பல புலன் வழி கற்றல் மூலமாக கற்பவை மனதில் வெகு நாட்கள் வரை நிலைத்து நிற்கும். வகுப்பறைக் கற்பித்தலில் பல ஊடகங்களைப் பயன்படுத்தினால் நினைவு கொள்ளுதல் வலுப்படும். வீடியோ காட்சிகளை பயன்படுத்தல் கண்டிப்பாக நினைவில் வைக்க வேண்டிய விடயங்களை வாய்விட்டு சொல்லிப் பார்த்தல் நல்லது. படித்தறியும் போது கூட பார்வையிலேயே படிப்பதைக் காட்டிலும் வாய்விட்டு (முடிந்தால் சத்தமாக) படித்தலும், சற்று முயற்சி செய்து ரிதம் போல் வரிசைப்படுத்திக் கொள்ளுதலும் சிறந்தது. கேட்பதன் மூலமாக அறிந்து கொள்ளும்போது தொடர்புடைய நிறம், சொற்கள், வாசம், தன்மையோடு பதிவுசெய்து கொள்வதும் நல்ல பலனைத் தரும்.

எது முதலில் நடக்கிறதோ அதுதான் மற்ற நிகழ்வுகளை விட நினைவில் இருக்கும். வார்த்தைகள் வரிசையாகவோ, எண்கள் வரிசையாகவோ இருப்பதில் முதலில் வரும் வார்த்தைகளும் அதிகமாக நினைவில் இருக்கும். இதற்கான காரணம், அவற்றை ஒத்திகை பார்க்கும் போது அதிக அளவில் பயன்படுத்துவதுதான். உதாரணம்: பாடல்களை எடுத்துக்கொண்டோமானால் அவற்றில் முதல் வரி இலகுவில் நினைவிலிருக்கும்.

பல நிகழ்வுகளில் கடைசியாக நடந்த நிகழ்வுகள்தான் அதற்கு முன் நடந்த நிகழ்வுகளை விட நினைவிலிருக்கும். ஏனெனில் கடைசியாக நடந்த நிகழ்வு, நடந்த நேரம் மிகக் குறைவானதாக இருக்கலாம். பரீட்சைக் காலங்களில் அண்மையில் படித்த விடயங்களே அதிகளவில் நினைவிலிருக்கும்.

ஏனைய நிகழ்ச்சிகள் அனைத்திலும் இருந்து வேறுபட்டு இருப்பது சில நம் நினைவில் அதிகம் இருக்கும். அதாவது வித்தியாசமான நிகழ்வு நம் மனதில் சாதாரண நிகழ்வுகளை விட மனதில் நிற்கும். அன்றாடம் நாம் கடந்து வரும் பொதுவான நிகழ்வுகள் மற்றும் நபர்களில் புதுவிதமான அல்லது வித்தியாசமான அனுபவத்தை தருபவை கூடுதலாக நினைவிலிருக்கும்.

நாம் கற்றுக்கொள்ளும் விடயங்களை குறித்ததான குறுகிய அறிவினை மாத்திரம் கொண்டிருக்காது, அவற்றை மேலும் ஆராய்ந்து பரந்த அறிவினைப் பெறும் போது அவை இன்னும் ஆழமாக நினைவிலிருக்கும். நாம் கற்கும் விடயங்களை ஒழுங்குபடுத்திக் கிரயமாகக் கற்க வேண்டும். மேலும் அவற்றின் பொருளை உணர்ந்து முறையாகக் கற்க வேண்டும்.

மெதுவாக அல்லது மௌனமாக வாசிப்பதைவிட உரத்து வாசிக்கும் போது அது கூடுதலாக நினைவில் நிற்கும். சிறு பிள்ளைகள் பாடல்களை உரத்த சத்தமாய் பாடும் போது அவை எளிதில் நினைவிலிருக்கும். நாம் கற்கும் போது மேலோட்டமாகக் கற்றால் அவை எளிதில் மறந்துவிடும். இதனையே தமிழில் நுனிப்புல் மேய்தல் என்பர். ஆகவே முழுமையாக கற்பது நினைவை மேம்படுத்தும்.

குறுகிய கால நினைவு உள்ள போது கூடுதலாக ஒரு சிறிய தகவல் சேர்வதால் இடமாற்றம் ஏற்படுவதைக் காணலாம். இடமாற்றம் என்ற புதிய தகவல் சேர்ந்தவுடன் பழைய தகவலின் ஒரு பகுதி வெளியே தள்ளப்படுகிறது. உதாரணமாக, ஒரு சிலர் திடீரென்று மாவட்டத்தின் எண்ணை (Pin Code) மறந்துவிட்டேன், தொலைபேசி எண்ணின் கடைசி இரண்டு எண்களை மட்டும் மறந்து விட்டேன் என்று கூறுவர். இத்தகைய குறுகிய கால நினைவுத் திறமையை மேம்படுத்த முடியும். அதாவது அதற்கான முறையைத் தொகுதியாகப் பிரித்து நினைவில் வைத்தல் மூலம் நினைவில் கொள்ளலாம்.

'என்னால் செய்திகளை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள முடியும், எனது மூளைத்திறன் நன்றாக இருக்கிறது,



எனக்கு மன ஆற்றல் நன்றாக இருக்கிறது' என்ற நம்பிக்கை முதலில் வேண்டும். 'நான் எப்படித்தான் இவற்றையெல்லாம் படித்து நினைவில் வைக்கப் போகிறேனோ, எனக்கு மறந்து போய்விடுகிறது' என்று தங்களைப் பற்றியே தாங்கள் கொள்கின்ற அவநம்பிக்கை நினைவாற்றலைப் பாதிக்கும். 'நினைவாற்றல்' என்பது மூளையின் ஒரு திறமை. அதனைப் பயன்படுத்தப் பயன்படுத்த பயிற்சியாலும், முயற்சியாலும் அந்தத் திறமையை வளர்த்துக் கொள்ளமுடியும் என்ற நம்பிக்கையுடன் செயற்பட்டால் நினைவாற்றலை அதிகரிக்க முடியும். உதாரணமாக என்னால் முடியாது, என்னால் எப்படி இதனை கற்க முடியும் என்கின்ற எண்ணத்தோடு கற்பவை எளிதில் மறந்து விடுகின்றன. எனினும் என்னால் முடியும் எனும் நோக்கத்தோடு கற்கும் விடயங்களை நினைவில் வைத்துக் கொள்வது இலகுவாக இருக்கின்றது.

ஆர்வம் காட்டுகிற விடயங்கள் நினைவில் நன்றாகப் பதியும். இயற்கையாக ஆர்வம் இல்லாவிட்டால்கூட ஆர்வத்தை ஏற்படுத்திக் கொண்டு கவனித்தால், பதிய வைத்தால் நினைவாற்றலை அதிகரிக்க முடியும். ஆர்வமாக கற்றல் ஓர் விடயத்தின் மீது ஆர்வம் கொண்டு கற்றல் நினைவை மேம்படுத்தும். நாம் ஒரு விடயத்தினை நன்கு ஆர்வமாக கற்கும் போதோ நாம் கற்பதை இலகுவாக நினைவுபடுத்திக் கொள்ள முடியும். உதாரணமாக பாடலில் ஆர்வமுள்ளவர்களிற்கு விடயங்களை நாம் பாடலாக மாற்றியமைத்து கற்பதன் மூலம் இலகுவாக நினைவிற் கொள்ள முடியும். இதற்காக 4 வரி கொண்ட கவிதையை பாடலாக சொல்லிக் கொடுத்தால் இலகுவில் நினைவிலிருக்கும்.

இந்தச் செய்திகளை ஏன் நான் தெரிந்துகொள்ள வேண்டும். எனக்கு எவ்வகையில் இது பயன்படும் என்று உங்களோடு இணைத்துத் தெளிவுபடுத்திக் கொள்வதன் மூலமும் நினைவாற்றலை அதிகரிக்க முடியும். உதாரணத்திற்கு 'நாளை காலை 4 மணிக்கு நீங்கள் வந்தால் உங்களுக்கு 5 இலட்சம் ரூபாய் கொடுக்கப்படும்' என்று ஒருவர் உங்களிடம் சொன்னால் நீங்கள் மறந்துவிடமாட்டீர்கள். அவசியத்தை நன்றாக உணர்ந்த விடயங்கள் நன்றாக மனதிற் பதிகின்றன. கற்கும் போது நாம் கற்கும் விடயங்கள் பயன் தருபவையாக இதனை தெரிந்து கொள்ளவது எனக்கு அவசியமாகின்றது என்கின்ற எண்ணங்களுடன் கற்கும் போது நாம் கற்பவை நினைவில் வைத்துக் கொள்வது இலகுவாகிவருகின்றது. அப்படியில்லையென்றால் எம்மால் நினைவில் வைத்துக் கொள்வது இலகுவில் மறந்து விடும் என்ற கருத்தும் எம்மால் முன் வைக்கப்பட்டது.

மனம் விழிப்பு நிலையில் இருக்கும் பொழுது கவனமும் ஒருமைப்பாடும் மிகச்சிறந்து இருக்கும். விழிப்புணர்வு அதிகரிக்க தியானப் பயிற்சிகளும், யோகாசனப் பயிற்சிகளும் துணைபுரிகின்றன. உங்களுக்குப் பிடித்த எந்த அமைப்பின் மூலமும் இவற்றைக் கற்று முறைப்படி பயிற்சி செய்தால் மனத் தெளிவும், அமைதியும், விழிப்புணர்வும் பெறலாம். இதன் மூலம் நினைவாற்றலை அதிகரிக்க முடியும். புரிந்து கொண்ட விடயங்கள் நினைவில் நன்றாக இருக்கின்றன. புரியாவிட்டால், தெரியாவிட்டால் கூச்சம், அச்சம், தயக்கம் இல்லாமல் ஏன்? எதற்கு? எப்படி? எவ்வாறு? எங்கு? யார்? என்று கேள்விகளைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் நினைவாற்றலை அதிகரிக்கும்.

உடல் ஆரோக்கியமாக இருக்கும்போது நினைவாற்றல் நன்றாக இருக்கும். ஒருவர் மிகவும் நோய்வாய்ப்பட்டு தளர்ந்திருக்கும் நேரத்தில் செய்திகளை நினைவில் வைப்பதே சிரமமாக இருக்கும். ஆரோக்கியமான உடலில் மூளைக்கு நிறைய இரத்த ஓட்டம், காற்றோட்டம் சென்று மூளை சுறுசுறுப்புடன் இயங்கும். தக்க உணவு, சரியான உறக்கம், முறையான பயிற்சிகள் மூலம் உடலை நன்கு பேணிப் பாதுகாத்தால் நினைவாற்றல் நன்றாக இருக்கும்.

நினைவுசார் நுட்பங்களை மேம்படுத்தும் முறைகளில் கவனமாக கிரகித்தல் இன்றியமையாததாகும். ஒரு விடயத்தை

நாம் கவனமாக கிரகிக்காவிடின் நாம் இலகுவாக மறந்து விடுகின்றோம். இதனை தெளிவுபடுத்துவதற்காக 20 பேர் கொண்ட மாணவ குழுவை தேர்ந்தெடுத்து அவர்களை வரிசையாக அருகருகே நிற்க வைத்து முதலாவது நபரின் ஒரு காதில் ஒரு விடயத்தை சொல்லி அதனை ஒருவர் மாறி ஒருவரிடம் கூறும்படியான விளையாட்டை மேற்கொண்டால் இவ் விளையாட்டின் விளைவாக கவனமாக கிரகிக்காத தன்மை இறுதியில் வேறு வார்த்தையாக மாறியதை அவதானிப்பதன் ஊடாக கவனமாக கிரகித்தலின் அவசியத்தை அறியலாம். இதே போல் வரிசையாக மாணவர்களை நிற்க வைத்து முதல் மாணவரை சிறு நடன அசைவை செய்து காட்டி அதனை ஏனைய மாணவர்களுக்கு வரிசையாக செய்து காட்டிய போது அது இறுதியாக வேறொரு வடிவமாக மாறியதை அவதானிப்பதன் ஊடாக கவனமான கிரகித்தலின் முக்கியத்துவத்தினை அறியலாம்.

ஒரு விடயத்தை கற்கும் போது ஒருமித்ததாக கற்பதிலும், அதனை பல கூறுகளாக வகைப்படுத்தி கற்பதிலும் அநேக விளைவுகள் வேறுபடுகின்றன. கூறுகளாக வகைப்படுத்தி கற்கும் போது இலகுவில் நினைவிற் கொள்ள முடிகின்றது. இதற்காக மாணவர்களிடத்தில் பழங்கள், மரக்கறிகள், உணவுகள் அடங்கிய ஓர் கூட்டமான படங்களை ஓர் குறிப்பிட்டளவு நேரம் காட்டிய பின்பு அதிலிருந்து வினாக்கள் வினாவிய போது அதில் குழப்பங்கள் அடைந்தால் மாணவர்களுக்கு வகைப்படுத்தி கற்றலின் முக்கியத்துவத்தை அறியலாம்.

நினைவில் வைத்துக் கொள்ளும் முறையில் உள ஆரோக்கியம் சிறப்பாக அமைய வேண்டும். உள ஆரோக்கியம் நன்றாக அமையும் போதே கற்பவை நினைவில் வைத்துக் கொள்ள முடியும். பொருளாதார நெருக்கடி, வீட்டில் உள்ள பிரச்சினைகள், கட்டிளமைப் பருவ பிரச்சினைகள் உள ஆரோக்கியத்தை பாதிக்கும் போது கற்கும் விடயங்களை நினைவில் வைத்துக் கொள்ள முடியாது. ஆகவே கற்பவற்றை நினைவில் வைத்துக் கொள்வதற்கு உள ஆரோக்கியம் முக்கியமானது.

படிக்கும் நேரத்தில் மனதில் வேறு எந்த குழப்பமும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உங்கள் பார்வை புத்தகத்தில் இருக்க, மனம் வேறு எங்கோ இருந்தால் அது நினைவில் நிற்காது. சிலருக்கு அமைதியான சூழலில் படித்தால் தான் பாடம் நினைவில் நிற்கும். ஆனால் தெளிந்த மனதுடன் படித்தால், எப்படிப்பட்ட சூழலில் படித்தாலும் நன்றாகப் படிக்கலாம் என்பதே உண்மை.

ஆர்வம் இல்லாமல் எதைச் செய்தாலும் அது மூளையில் ஏறாது. வெறுமனே வரிகளை மனப்பாடம் செய்யாதீர்கள். இந்த வரிக்குப் பிறகு இந்த வரி ஏன் வருகிறது என்பது தெரிந்தால்தான், நீங்கள் படித்ததை சரளமாக எழுத முடியும், அர்த்தம் புரிந்து படித்தால்தான் படிப்பில் ஆர்வம் ஏற்படும். ஒரு வரி படித்தாலும் அதன் அர்த்தத்தை உள்வாங்கிக் கொண்டு படித்தால் அது எப்போதும் நினைவிலிருக்கும்.

சில உணவுகளை கடச்சுட சாப்பிட்டால்தான் சுவையாக இருக்கும். கல்வியும் அப்படிப்பட்டதுதான். 'இன்று ஆசிரியர் கற்பித்ததை இன்றே படித்துவிட வேண்டும்' என்ற தீர்மானத்துடன் இருந்தால் கல்வி கசக்கவே செய்யாது. எல்லோருடைய நினைவாற்றலும் ஒரே மாதிரியானது இல்லை. சில பாடங்கள் சுலபமாக மனதில் ஏறும், சில பாடங்களை சிரமப்பட்டுத்தான் படிக்க வேண்டியிருக்கும். இந்த வித்தியாசத்தை உணர முடியும். சிரமப்பட வேண்டிய பாடங்களுக்கு எப்போதும் கூடுதல் நேரம் கொடுத்து, அடிக்கடி மறந்து போகிறது என்பதை ஒரு நோட்டில் எழுதி வைத்துக் படிப்பது தொடர்பான தீர்மானம் எடுத்தல் வேண்டும்.

படித்த பாடத்தை அப்படியே வேகமாக எழுதிப் பார்த்தால் நினைவிலிருக்கும். கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்றில்லை. ஏதோ நோட்ஸ் எடுப்பது போல கிறுக்கவும் செய்யலாம். ஆனால் வார்த்தைகள் சரளமாக உங்களுக்கு வர வேண்டும். இது முக்கியம். நினைவாற்றல் என்பது ஒலி, ஒளி ஆகிய இரண்டாலும் வலுப்படுத்தப்படுவதாகும். ஒரு கேள்வியைப் பார்த்ததும் அதற்கான பதில் ஏழாம் பாடத்தில், மூன்றாம் பக்கத்தின் அடிப்பகுதியில், நான்கு வரியாக இருக்கும் என சட்டென்று நினைவுக்கு வர வேண்டும். அதே போல 'மாடியில் ஒரு அதிகாலையில் கதிரையில் உட்கார்ந்தபடி இந்த பதிலை நாம் படித்தோம்' எனக் காட்சியாக நினைவுக்கு வர வேண்டும்.

ஒரு பாடத்தைப் படிக்கும் போது இதைப் பள்ளி மைதானத்தில் வேப்ப மரத்தின் அடியில் நின்று படித்தோம் என நினைவில் ஏற்றினால் எந்தத் தேர்வில் கேள்வி கேட்டாலும் உடனே வேப்ப மரத்துடன் அந்தப் பாடமும் ஞாபகத்துக்கு வரும். ஒரு பத்திரத்தை அலுமாரியில் வைக்கும் போது இதை பச்சைக் கலர் கவரில் போட்டு மூன்றாவது அடுக்கில் வைக்கிறோம் என நிறம், எண் போன்ற கூடுதல் தகவல்களோடு மூளையில் சேமிக்க வேண்டும். உதரரணமாக யாரோ போன் நம்பர் சொல்கிறார்கள் அல்லது மளிகைக்கடையில் வாங்கி வர வேண்டிய பொருட்களின் பட்டியலைக் கேட்கிறீர்கள். அப்போது வலது கையில் ஒரு பந்து இருப்பதாகக் கற்பனை செய்தபடி கைகளை இறுக மூடிக்கொண்டு கேளுங்கள். மனதில் நன்கு பதியும். திரும்பவும் அதை நினைவுக்குக் கொண்டுவர இடது கை விரல்களை இறுக மூடிக் கொண்டு கையை லேசாகச் சுழற்ற வேண்டும். இது மூளையின் ஞாபகப் பகுதியில் தூண்டிவிடுகிறது என ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

பாடல்கள் மூலம் ஒரு விடயத்தை நினைவில் சேமிப்பது ஒரு வகை. எல்.கே.ஜி குழந்தைகளுக்கு பல பாடங்களை ஆசிரியர்கள் பாடல்களாகவே சொல்லிக் கொடுப்பதை கவனித்திருப்பீர்கள். 'A for Apple B for Ball' என்பதில் தொடங்கி வரலாறு பாடம் வரை பாடல்களாக சொல்லித் தந்து மனதில் பதிய வைப்பார்கள். இப்படி எந்த விடயத்தையும் இசைக்கு ஏற்ற பாடலாக மாற்றி மனதில் சேமிக்கலாம்.

இதன் மூலம் ஞாபகத்தை ஏற்படுத்தலாம். உதாரணமாக கண் பார்வைக் குறைபாட்டுக்கு அணியும் லென்ஸ் எனும் போது கிட்டப்பார்வை குறைபாட்டுக்கு குழி லென்ஸ் அணிய வேண்டும். தூரப் பார்வைக் குறைபாட்டுக்கு குவி லென்ஸ் அணிய வேண்டும். இதை அறிவியல் ஆசிரியர்கள் 'கிட்டக் குழி தோண்டி தூரக் குவி' என்று வார்த்தை விளையாட்டால் கற்றுத் தருவார்கள். குழியின் அருகிலேயே மண்ணைக் குவித்தால் அது திரும்பவும் குழியில் போய் மூடிக்கொள்ளும் அதனால் தூரத்தில்தான் குவிக்க வேண்டும். அத்துடன் தொடர்புபடுத்தினால் கிட்டப் பார்வைக்குக் குழி லென்ஸ்,

தூரப் பார்வைக்குக் குவி லென்ஸ் என்பது மனதில் வாழ் நாள் முழுக்க பதியும்.

சில இடங்களில் வரிசைகள் நம்மைக் குழப்பும். அப்போது ஏதாவது வார்த்தைகளால் அவற்றை முறைப்படுத்தி ஞாபகத் தில் ஏற்றிக்கொள்ள வேண்டும். ஊதாரணமாக ஒரே கணக் கில் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என எல்லாமே வருகிறது. இவற்றில் எதை முதலில் செய்ய வேண்டும்? மாற் றிச் செய்தால் விடையே தப்பாகிவிடும். இதற்கு கணித ஆசி ரியர்கள் ‘மிடாஸ்’ விதியைச் சொல்வார்கள். தான் தொட்ட தெல்லாம் பொன்னாக வேண்டும் என ஆசைப்பட்ட மன்னன் மிடாஸ். இங்கே மிடாஸ் என்பது - MDAS - Multiplication , Division , Addition and Subtraction. அதாவது முதலில் பெருக்கல் இரண்டாவது வகுத்தல் மூன்றாவது கூட்டல் கடை சியாக கழித்தல், இப்படி நினைவில் சேமித்தால் அது நினை விலிருக்கும்.

சில விடயங்கள் ஒன்று போலவே இருந்து குழப்பும். இதில் வித்தியாசத்தை எளிதில் ஞாபகம் வைத்துக்கொள்வது கடின மாகும். உதாரணமாக பாலைவனம் என்பதும், நாங்கள் விருந்துண்டபின் உண்ணும் இனிப்பு கலந்த பதார்த்தங்க ளும் டெஸர்ட் என்றே அழைக்கப்படும். இரண்டுக்கும் ஒற்றை எழுத்து வித்தியாசம். பாலைவனம் என்பது Desert. விருந்துக் குப் பின்னான இனிப்புப் பதார்த்தத்தில் ‘எஸ்’ கூடுதலாக இருக்கும். Dessert. இந்த வேறுபாட்டை நினைவில் வைத்துக் கொள்வது எப்படி? விருந்து சாப்பிட்டு முடித்ததும் இனிப்பு ணவு கூடுதலாகத் தருவதுதானே! அதனால் அதில் கூடுத லாக ஒரு எஸ் இருக்கும் என பதிய வைத்தால் எப்போதும் நினைவில் இருக்கும்.

ஆண்டுகள், எண்கள் போன்ற சிக்கலான விடயங்களைப் பிரித்துப் பிரித்து நினைவில் ஏற்றலாம். உதாரணமாக முத லாம் பனிப்போர் 1526-ம் ஆண்டு நடைபெற்றது. இதைச் சரி யாக நினைவுபடுத்துவது எப்படி? 1526 என்பதை 15, 26 என இரண்டு எண்களாகப் பிரிக்கலாம். இந்த இரண்டு எண்களுக் கும் உள்ள தொடர்பு என்ன? 1-க்கு அடுத்து 2 வரும்.5-க்கு அடுத்து 6 வரும். இப்படி என்பதில் உள்ள இரண்டு எண்க ளின் அடுத்தடுத்த எண்களால் உருவானது. இப்படி நினைத்தா 1526 மனதில் பதியும் அல்லவா? இப்படி எதையும் உங்கள் வசதிக்கு ஏற்றபடி மாற்றி மனதில் ஏற்ற முடியும்.

எழுத்து விளையாட்டு இன்னொரு ஞாபகசக்தி முறையாகும். உதாரணமாக: சூரிய குடும்பத்தில் புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் என எட்டு கிரகங்கள் உள்ளன. சூரியனிலிருந்து இவை எந்த வரிசை யில் உள்ளன என நினைவுபடுத்திக்கொள்வதற்கு ஒவ்வொரு கிரகத்தின் முதல் எழுத்துகளை வைத்து ஆங்கிலத்தில் வரி My Very Excellent Mother Just Served Us Noodles என்று வரும். அதாவது இவை Mercury, Venus, Earth, Mars, Jupiter, Saturn, Uranus, Neptune என்ற வரிசையில் உள்ளன என்று அர்த்தம். இப்படி நினைவுபடுத்த வேண்டிய எந்த விடயத்துக் கும் ஒரு வாசகத்தை உருவாக்கலாம்.

எழுத்துகளை வைத்து புது வார்த்தைகளை உருவாக்குவது இன்னொரு முறை. உதராணமாக நாம் பள்ளியில் படிக்கும் போது வானவில்லில் உள்ள ஏழு நிறங்களை எளிதாக நினைவில் வைத்திருக்க VIBGYOR என்ற வார்த்தையை ஆசிரியர் நமக்குச் சொல்லிக் கொடுத்திருப்பார். இந்த வார்த்தையில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் வானவில்லில் உள்ள ஒவ்வொரு நிறத்தைக் குறிக்கும் இந்த வார்த்தை நினைவில் இருந்தாலே, வானவில்லில் உள்ள ஏழு நிறங்கை ளயும் சொல்லி விடலாம்.

## உணவு:

பால் மற்றும் பாற்பொருட்களில் அதிகமாக புரோட்டீன், கல் சியம், பொட்டாசியம் மற்றும் விட்டமின் டி உள்ளன. இவ்வ ளவு ஊட்டத்தை அளிக்கிற பால் நரம்புத்தசை மண்டலத்தை நன்கு இயக்குவதுடன் மூளை செல்களை நன்கு செயற்பட வைக்கிறது. வளரும் குழந்தைகளுக்கு இது உடல் வளர்ச்சி யைத் தருவதுடன் மூளையையும் சுறுசுறுப்பாக வைக்கிறது. மூளையின் ஞாபக சக்தியை அதிகரிக்கும் சத்துகளில் முக் கியமானது கோலைன் சத்து. இது முட்டையில் அதிகம் இருக்கிறது. முட்டை சாப்பிட்டால் ஞாபக சக்தி அதிகரிப்ப துடன், மூளையும் களைப்படையாமல் சுறுசுறுப்பாக இயங் கும். குறிப்பாக முட்டையின் மஞ்சள் கரு மூளைக்கு மிகவும் உகந்தது.

தினசரி உணவில் போதுமான சோயா சேர்த்துக்கொள்ளுங் கள் சோயாவில் இருக்கும் புரோட்டீன்களுக்கு ஞாபகசக்தி யைத் தூண்டும் தன்மை உண்டு. புரதச் சத்துக்கள் செரிமா னம் அடைந்த பிறகு அமினோ அமிலங்களாக மாறுகின்றன. உலர் கொட்டைகள், பால், முட்டை, மீன், எள், நிலக்கடலை போன்றவற்றில் புரதச் சத்து அதிகம் உள்ளது. உடலுக்கும் மூளைக்கும் ஒரே நேரத்தில் இது புத்துணர்வு கொடுக்கும் சிறுகீரையுடன் மிளகுத்தூள் போட்டு சமைத்து நெய் சேர்த்து சோற்றைப் பிசைந்து சாப்பிட்டால் நினைவாற்றல் அதிகரிக் கும்.

## உடற்பயிற்சி:

உடற்பயிற்சி என்பது உடல் வலிமைக்கும் ஆரோக்கியத்திற் கும் மட்டுமல்ல. மூளையை சுறுசுறுப்பாக இயங்க வைக்க வும், நினைவாற்றல் பெருக்கத்திற்கும் மிக மிக அவசியமா கும். எனவே தினமும் குறைந்தது 15 முதல் 20 நிமிடங்களை யாவது உடற்பயிற்சிக்கு கண்டிப்பாக ஒதுக்க வேண்டும். இரண்டு கருவிழிகளையும் இடது ஓரத்துக்கு நகர்த்தி, தலையை திருப்பாமல் இடது பக்கம் பாருங்கள். உடனே கருவிழிகளை வலது பக்கத்துக்கு நகர்த்தி அங்கே பாருங் கள். இப்படி இடது, வலது என மாறி 30 நொடிகள் பாருங் கள். ‘அவ்வப்போது இப்படிச் செய்வது ஞாபக சக்தியை மேம்படுத்தும்’ என்கிறார்கள் நரம்பியல் நிபுணர்கள். நமது மூளையின் இடது பகுதியும், வலது பகுதியும் வெவ்வேறு வேலைகளைச் செய்கின்றன. இரண்டையும் ஒருங்கிணைப் பது, ஞாபக சக்தியை அதிகமாக்கும். அதற்கு இந்தப் பயிற்சி உதவுகிறது.

ஞாபகம் தொடர்பாக நாம் எதிர்நோக்கும் சவால்களை மேற் கொள்வதற்கும் நினைவாற்றலை மேம்படுத்துவதற்கும் மேற் கூறப்பட்ட நுட்பங்களை நாம் கையாள முடியும்.



sajeepan.s@thaiveedu.com

# மாணவர்களும் மனவழுத்தமும்

## த. சிவபாலு



கனடிய மண்ணில் வாழுகின்ற பெரும்பான்மை மக்களுக்கு மனவழுத்தம் உண்டு என்பதனை பல்வேறு ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. பெரியவர்களுக்கு மனவழுத்தம் இருப்பது போன்று பாடசாலை மாணவர்களுக்கும் மனவழுத்தம் உண்டு. இதனை மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் காட்டுகின்றன. மாணவர்களிடம் காணப்படும் மனவழுத்தம் அடிக்கடி பெரியவர்களைப் போன்றதாகக் காணப்பட்டாலும் அவை இனங்காணப்படாத நிலைமையே தற்போது உள்ளது.

மாணவர்களிடம் மனவழுத்தம் ஏற்படுவதற்குப் பல காரணிகள் காரணமாக அமைகின்றன. மனவழுத்தத்தைத் தூண்டும் காரணிகளாக அவசரப்படுதல், பதட்டமடைதல், அவதிப்படுதல், செல்வதற்கு ஆயத்தமாதல், ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் செல்லுதல் போன்றன மிக முக்கிய பங்காற்றுகின்றன. மணமுறிவு, பெற்றோர் பிரிந்து வாழுதல், பெற்றோர் அடிக்கடி பிள்ளைகளின் முன்னிலையில் வாக்குவாதப்படுதல், சண்டைபிடித்தல், பிள்ளைகளிடம் தாய் அல்லது தந்தை பற்றிக் குறை கூறுதல், குடும்பத்தில் நிலவும் உடல்நலக் குறைபாடுகள், நோய்கள், பயம், எதிர்காலத்தைப் பற்றிய ஐயம், குடும்ப அங்கத்தவரின் மரணம், இழப்பு, சந்தேகம், மனக்கிளர்ச்சி, மன உந்துதல், உணர்ச்சி வசப்படும் நிலைமை, அளவுக்கதிகமான வேலைப்பளு போன்றனவும் மன அழுத்தம் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றன.

'மனவழுத்தம் தொற்றிக் கொள்ளக் கூடியதோடு, உடல், மனவுணர்ச்சி, சமூக, புத்திக்கூர்மை மற்றும் பிள்ளையின் கல்வி நலனையும் பாதிக்க வல்லது. இது பிள்ளைகளின் உளத் தூண்டுகை, கவனிப்பு, பார்வை, நினைவாற்றல் அத்தோடு அனைத்துக் கற்றல் போக்குகளையும் பாதிக்கவல்லது' என, யோக் பல்கலைக்கழக உளவியற்துறைப் பேராசிரியர் ஹரோல்ட் மின்டன் குறிப்பிடுகின்றார். ஒரு குழந்தை மனவழுத்த அனுபவத்தினைப் பெற்றுக் கொள்வதினை, பின்வரும் நிலைமைகளும் அடையாளங்களும் சைகைகளும் கோடிட்டுக் காட்டுகின்றன.

- தலைவலி, வயிற்று வலி, அல்லது பிடரி வலி காணப்படல்.
- கவலை, பயம், கோபம், அச்சம், மனத்தொல்லை போன்றனவற்றால் அவதிப்படுதல்.
- வழமைக்கு மாறாக மிகுந்த அமைதியாகவிருத்தல்.
- ஓய்வாகவிருத்தல் அல்லது தூக்கமின்றிச் சிரமப்படுதல்.
- மிகவும் சோர்வாக இருத்தல் அல்லது மனச்சோர்வாகவிருத்தல், பகற்கனவு காணல், செயற்பாடுகள் அல்லது நடவடிக்கைகளில் இருந்து பின்வாங்குதல் அல்லது ஒதுங்கிக் கொள்ளுதல்.
- அளவுக்கதிகமான சக்தி காணப்படுதல் அல்லது அமைதியின்றி அவதிப்படுதல். ஓரிடத்தில் தங்கி இருக்கமுடியாமல் அவதியுறுதல்.
- நரம்புத் தளர்ச்சிக்கான நகத்தைக் கடித்தல், தலைமயிரைச் சுருட்டிக் கொண்டிருத்தல், விரல் சூப்புதல் அல்லது ஆழமாக மெய்மறந்து பாடுதல் போன்ற நடத்தைகளைக் கொண்டிருத்தல்.
- எதிர்த் தாக்கத்தைக் காட்டுதல், முறைத்த பார்வை, நெற்றியை அல்லது கண் புருவத்தைச் சுழித்தல் போன்றவற்றைக் கொண்டிருப்பர்.

இத்தகைய நடத்தைகள் பிள்ளைகளிடம் காணப்பட்டால் வைத்திய நிபுணர்களை நாடவேண்டியது அவசியமாகும். இந்த அறிகுறிகள் தென்பட்டாலும் தென்படாவிட்டாலும் அவர்களோடு செய்யவேண்டிய அல்லது பழகவேண்டிய முறைகளில் பெற்றோர் கவனமாகச் செயற்பட வேண்டும். இதற்காக பெற்றோர் பின்வரும் வழிமுறைகளைக் கையாளலாம்.

**உடலியல் தொடர்பு:**
பிள்ளைகளைக் கட்டியணைத்தல் அவர்களிடம் ஆறுதலையும் தன்னம்பிக்கையையும் வளர்க்க வழிவகுக்கும்.

**கேட்டல்:**
பிள்ளைகளிடம் அவர்கள் எப்படி உணருகின்றார்கள் அல்லது இருக்கின்றார்கள் என்பதனை மனவாஞ்சையோடு கேட்டறிதல்.

**உற்சாகமூட்டுதல்:**
பிள்ளைகள் தாம் சிலவற்றில் மிகச் சிறந்தவர்களாக இருப்பதனைக் கண்டறிய உதவிசெய்து அதனால் தாம் எவ்வளவு பெருமைப்படுகின்றோம் என்பதனை வெளிப்படையாகக் கூறிப் பாராட்டுதல்.

**நேர்மையும் திறந்த மனமும்:**
பிள்ளைகள் தங்களின் உணர்வுகளை வெளிப்படையாக வெளிக்காட்ட அல்லது சொல்வதற்கு, அவர்களோடு அளவளாவுவதோடு அவர்களை உற்சாகப்படுத்தவும் வேண்டும்.

**பாதுகாப்பு:**
பாதுகாப்பைத் தொடர்ச்சியாகக் கொடுத்தல்.

**வேடிக்கையாயிருத்தல்:**
பிள்ளைகள் வேடிக்கை விநோதங்களை அறிந்துகொள்ள அல்லது பார்ப்பதற்கு உதவிசெய்தல்.

**அமைதி:**
பிள்ளைகள் அமைதியாக இருப்பதற்கு அனுமதித்தல்.

**சத்துணவு:**
பிள்ளைகள் உடல்நலத்திற்கேற்ற ஒரேவகையான உணவினை அன்றி, வேறுபட்ட உணவினை உண்ண அவர்களை உற்சாகமூட்டுதல் அல்லது வழிப்படுத்துதல்.

தங்களின் பாடசாலை வேலைகளை முடிக்கமுடியாத பயம் சில பிள்ளைகளிடம் ஏற்படுவதற்கு, தேவையான உதவியினைப் பெற்றோரால் செய்து கொடுக்கமுடியாமையும் ஒரு காரணமாக அமைகின்றது. வாழுகின்ற நாட்டின் கல்வித் திட்டத்தினைப் பெற்றோர் அறிந்திருத்தல் மிக முக்கியமானது. கல்வித் திட்டத்தினை அறிந்திருப்பதன் மூலமே, பிள்ளைகளை அணுகி உதவ முடியும்.

தங்களால் உதவ முடியாவிட்டாலும் நண்பர்களை அல்லது ஆசிரியர்களை அணுகி, தங்கள் இயலாமையைக் குறிப்பிட்டு, பிள்ளைகளுக்கு பாடசாலையில் மேலதிக நேரம் உதவி செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளலாம். பல பாடசாலைகள் பழைய மாணவர்களின் உதவியோடு பாடசாலை நேரம் முடிந்தபின்னர் பாடரீதியாக உதவி செய்வதற்கான குழுக்களை ஏற்பாடு செய்து தருகின்றன. இத்தகைய வாய்ப்புகளைப் பிள்ளைகளுக்குப் பெற்றுத்தருவது பயன் தருவதாக அமையும்.

பிள்ளைகளிடம் காணப்படும் மாற்றங்களை எப்படிக் கையாளலாம் என்பது மிகவும் துல்லியமாகக் கவனிக்கவேண்டிய ஒரு விடயம். நீங்கள் பிள்ளையோடு உரையாட முயற்சிக்க வேண்டும். ஒரு விடயத்தைப் பற்றி நீங்கள் உரையாட முன்வரும் போது அவர்களும் உங்களுடன் உரையாடுவதற்குத் தயாரான ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். குழந்தைகளின் மனநிலையைக் கண்டறிவதற்கு கதைப் புத்தகங்கள், படங்களோடு கூடிய புத்தகங்கள் உதவக்கூடியன. நாடகங்களை அல்லது படத்தைப் பார்க்கும்போது அதில் வரும் கதாபத்திரங்களைப் பற்றிப் பிள்ளை என்ன கருத்தைப் பிரதிபலிக்கின்றார் அல்லது முகத்தில் ஏற்படும் மாறுதல்கள் என்ன என்பதனை அறிந்துகொள்ளலாம். இவற்றின் மூலம் பிள்ளையின் மனவழுத்தம், ஏக்கம் என்பனவற்றை அறிந்துகொள்ள முயற்சிக்கலாம்.

மிக நெருக்கமானவர்களின் இழப்பு, தாய் தந்தையர் பிரிந்து வாழுதல் போன்றவற்றால் ஏற்படும் மனவழுத்த நிலைகளையும் அது தொடர்பான கதைகளை அவர்கள் வாசிக்கும்போது அல்லது படத்தைப் பார்க்கும்போது இதனை அறிந்துகொள்ளமுடியும். மணமுறிவு, அல்லது பிரிந்து வாழும் பெற்றோரின் கதைகளைச் சில பிள்ளைகள் கேட்க விரும்பாமல் இடையிலேயே அதனை நிறுத்திவிடுவார்கள். புத்தகத்தையே தூரவீசி எறிந்து விட்டு யோசனையில் ஆழ்ந்துவிடுவார்கள்.

இந்த விடயத்தில், சில நேரங்களில் துறைபோன அறிஞர்களை நாடவேண்டிய சூழ்நிலைகளும் ஏற்படலாம். ஏதாவது நடத்தையில் மாற்றங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுமானால் அல்லது மனவழுத்தம் மிகவும் பாரதூரமான ஏக்கத்தைத் தருமானால் அல்லது பயத்தைத் தருமானால் அல்லது நடத்தை குறிப்பிடத்தக்களவு பிரச்சினையைத் தருமானால், உளவியல் நிபுணர்களை நாடவேண்டிய நிலையை ஏற்படுத்தும்.

மனவழுத்தத்திலிருந்து விடுபடுவதற்கு, பிள்ளைக்குப் பாதுகாப்பான, பயமற்ற, பழக்கமான, நம்பிக்கைக்குரிய, பொறுப்புள்ள வீடு அமைதல்வேண்டும். செய்திகள் உட்பட பிள்ளைகள் பார்க்கக்கூடிய நல்ல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்து பயம், ஏக்கம் என்பன ஏற்படுத்தாதவற்றைப் பார்ப்பதற்கு வழிசெய்தல், பிள்ளையோடு அமைதியாகவும், அன்னியோன்யமாகவும் ஓய்வுநேரத்தைப் பிள்ளையோடு கழித்தல், பிள்ளையைக் கேள்விகேட்பதற்குத் தூண்டுதல், பயம், எண்ணக்கருத்துகள், மனத்துயர் போன்றவற்றை வெளிக்காட்டத் தூண்டுதல், பிள்ளை சொல்வதனை எந்தவிதக் கருத்துகளும் கூறாது மிகக்கவனமாகச் செவிசாய்த்தல் ஆகியவற்றை பெற்றோர் கட்டாயம் செய்திட வேண்டும்.

உங்கள் பிள்ளையின் உணர்வுகள் நற்பயன் தரத்தக்கதாகக் கட்டியெழுப்புதல், உற்சாகப்படுத்துதல், பிள்ளை வெற்றிபெறத்தக்க சூழ்நிலைகளை அறிந்து அவற்றில் ஈடுபடவைத்தல். நன்மை தரத்தக்க உற்சாகத்தையும், பாராட்டுகளையும் தண்டனைக்குப் பதிலாக வழங்குதல். பிள்ளை தன்னைக் கட்டுப்படுத்தவும் தெரிவு செய்யவும் சந்தர்ப்பங்களை வழங்குதல் ஆகியன பெற்றோரின் பணிகளாகும். தங்களைப் பெற்றோர் கட்டுப்படுத்துகின்றார்கள் என்ற மன உணர்வைப் பிள்ளைகள் பெறாது பார்த்துக் கொள்ளவேண்டும். போட்டிகளில் பங்குபற்றும் எவருக்குமே வெற்றி கிட்டாது, தோல்வியும் வெற்றியும் சகஜம் என்பன போன்ற உண்மைகள் குழந்தைகளின் மனதில் பதியவைக்கப்படல் வேண்டும். அப்போது தங்களுக்கு வரும் தோல்வியைத் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவம் அவர்களுக்கு ஏற்படும். வீட்டிலிருந்து இன்னொரு இடத்திற்கு இடம்பெயர்தல், வேலைகளில் மாற்றம் ஏற்படுதல் என்பன போன்றவற்றைப் பிள்ளைகளோடு கலந்துரையாடி அவர்களுக்குத் தெரியவைத்தல் வேண்டும். குடும்பப் பொருளாதார நிலை குறித்தும் பிள்ளைகளோடு கலந்துரையாடுதல் நன்மை தரும்.



sivapalu@thaiveedu.com

# சக்தி வளத்தைக் குறைவாகப் பயன்படுத்தும் இலத்திரனியல் சிப் அறிமுகம்

**- சுப்ரமணியம் ஜெயசீலன்**

இலத்திரனியல் சாதனங்களின் பயன்பாடு உலகின் அனைத்துத் தேவைகளில் இன்றியமையா வகிபாகத்தைக் கொண்டுள்ளது. கார்பன் வெளியீடு, இயற்கை சமனிலையின்மை, பாரிய காலநிலை அனர்த்தங்கள் எனப் பல்வேறு மனித குலத்திற்கான ஆபத்துகளிலும் இந்த இலத்திரனியல் சாதனங்களின் பங்களிப்பினை நிராகரிப்பதற்கில்லை. அந்த வகையில் இந்த உலகில் மிக முக்கியமான தேவைகளில் ஒன்றான சக்தி வளப் பயன்பாட்டில் இந்த இலத்திரனியல் கருவிகள், சாதனங்கள் முதன்மையானவை எனலாம். எனவே முடிந்தளவு சக்தி வளத்தைக் குறைவாகப் பயன்படுத்தக் கூடிய இலத்திரனியல் சாதனங்களின் தேடல்ப் பயணத்தில் விஞ்ஞான உலகம் முனைப்புக் காட்டி வருகின்றது. செயற்கை நுண்ணறிவுத் தொழிநுட்பங்களுக்காகப் பயன்படுத்தப்படும் சிப் வகைகள் அதிகளவு சக்தி வளத்தைப் பயன்படுத்தக் கூடியவை என்பதுடன் இது சுற்றுச்சூழலுக்குத் தீங்கானவை. எனவே பசுமையான இலத்திரனியல் சாதனங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. அவ்வாறான ஓர் அரிய கண்டுபிடிப்பு முயற்சியாகவே இந்த மெமரிஸ்டர் வகை சிப்களைக் குறிப்பிட முடியும்.

மனித மூளைக்கு நிகரான கணினி சிப் உருவாக்கப்பட்டுள்ளது. இது செயற்கை நுண்ணறிவின் மற்றொரு பரிணாம வளர்ச்சியாகவே காணப்படுகிறது. இவை உலகின் முதனிலைத் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றான ஐ.பி.எம் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய சிப் சக்தி வளத்தைக் குறைந்தளவு பயன்படுத்தக்கூடிய ஒன்று எனத் தெரிவிக்கப்படுகிறது. கணினி கட்டமைப்புகளில் பயன்படுத்தப்படும் செயற்கை நுண்ணறிவு அதிகளவு சக்தி வளத்தை வெளியிடுவதாகவும், அதிகளவு மின்சாரத்தைப் பயன்படுத்துவதாகவுமே காணப்படுகின்றன. இந்த நிலையில் சக்தி வளத்தைக் குறைவாகப் பயன்படுத்தக்கூடிய, பேட்டரியைக் குறைந்தளவு பயன்படுத்தக்கூடிய சிப் வகைகளை உருவாக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வெற்றி காணப்பட்டுள்ளது.

அதன் ஒரு சட்டமாகப் பரீட்சார்த்த அடிப்படையில் ஐ.பி.எம் நிறுவனம் ஸ்மார்ட் ஃபோன் வகைகளைப் பயன்படுத்தும் சிப்களுக்கு மிகக் குறைந்தளவு சக்திவளம் பயன்படுத்தக்கூடிய வகையிலான தொழில்நுட்பம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது. இந்தச் சிப்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற பொருட்கள் மனித மூளைக்கு நிகரான கட்டமைப்பைக் கொண்டமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒப்பீட்டளவில் மரபு ரீதியான கணினிகளைப் போன்றல்லாது மனித மூளையானது மிகவும் குறைந்தளவு சக்தி வளத்தைப் பயன்படுத்தி அதி உச்சளவிலான செயல் திறனை வெளிப்படுத்த கூடியது. அதே விதமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இந்தப் புதிய ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

சுவிட்சர்லாந்தின் சூரிச்சில் அமைந்துள்ள ஐ.பி.எம் ஆய்வு மையத்தில் விஞ்ஞானி தானோஸ் வாசிலோபோலோஸ் (Thanos Vasilopoulos) தலைமையிலான குழுவினர் இந்த ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். மிகச்சிறந்த சக்திவளப் பயன்பாடு என்பது பாரிய அல்லது சிக்கல் மிகுந்த வேலைகளை மிகக் குறைந்த அல்லது மின்கலம் குறைந்த நிலையிலும் செயற்படக்கூடிய வகையில் நிர்மாணிக்கப்படுகின்றது.

உதாரணமாகக் கார்கள், ஸ்மார்ட் ஃபோன்கள், கமராக்கள் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் கருவிகள், மிகக் குறைந்தளவு சக்தி வளத்தைப் பயன்படுத்தக் கூடிய கிளவுட் சேவை வழங்குனர்களும் இந்தச் சிப்களைப் பயன்படுத்தி அதன் மூலம் கார்பன் வெளியேற்றத்தையும் சக்திவளப் பயன்பாட்டைக் குறைக்கவும் முடிகின்றது.

அனேகமான சிப் வகைகள் டிஜிட்டல் கட்டமைப்பைக் கொண்டவை. அதாவது, அவை பூச்சியம் அல்லது ஒன்று என்ற அடிப்படையில் தகவல்களைச் சேமிக்கக் கூடியவை. எனினும், இந்தப் புதிய சிப் வகையானது மெமரிஸ்டர் (memristors) அல்லது மெமரி ரெசிஸ்டர் என்று அழைக்கப்படுகிறது. இவை அனலொக் (Analog) தகவல்களைச் சேமிக்க கூடியது என்றும் பல்வேறு இலக்கங்களைச் சேமிக்கக் கூடியவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அனலொக் மற்றும் டிஜிட்டல் (Digital) கட்டமைப்பிற்கு இடையிலான வித்தியாசத்தை, ஓர் ஒளிரும் மின்குமிழுக்கும் மங்கலான மின்குமிழுக்கும் இடையிலான வித்தியாசமாக நாம் பார்க்க முடியும். மனித மூளையானது அனலொக் கட்டமைப்பினைக் கொண்டதாகக் காணப்படுகிறது. நினைவகக் கட்டமைப்பு இந்த வகையைச் சேர்ந்தவை. அது மனித மூளையைப் போன்றே செயல்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

மனிதர்களின் மூளைக்கு நிகரான ஒரு கட்டமைப்பைக் கொண்ட தொழில்நுட்பத்தின் அடிப்படையில் இந்த மெமரி ஸ்டோர்ஸ் செயற்பட்டு வருவதாகச் University of Surrey பேராசிரியர் பெரேனேட் நெரி(Ferrante Neri) தெரிவிக்கின்றார்.

மனித மூளையின் தொழிற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கின்றார். எமது உயிரியல் கட்டமைப்பில் நரம்பிணைப்பு (synapse) அடிப்படையில் எவ்வாறு தகவல்கள் சேமிக்கப்படுகின்றதோ அதே வகையில், மெமரி ஸ்டோரில் இலத்திரன்கள் மூலம் தகவல்கள் சேமிக்கப்படுகின்றன.

எதிர்வரும் காலங்களில் இந்தத் தொழில்நுட்பமானது பல்வேறு துறைகளில் காத்திரமான முறையில் பயன்படுத்த முடியும் எனவும் இது மூளையைப் போன்றதொரு கட்டமைப்பினை உருவாக்கக்கூடிய ஆற்றல் மிகுந்தது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

மேலும் இந்த விசேட சிப் வகையானது கணினித் தொழில்நுட்பத்தில் பயன்படுத்தும் போது அதில் பல்வேறு சவால்கள் எதிர்நோக்க நேரிடும் எனவும், செலவு அதிகமாக இருக்கக்கூடியது எனவும், உற்பத்தி செய்வதில் பல்வேறு சிரமங்கள் ஏற்படலாம் எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

இந்தப் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் சக்தி வளத்தைக் குறைக்க முடியும் என்பதுடன் இந்தப் புதிய சிப்கள் டிஜிட்டல் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தக்கூடிய வகையில் வடிவமைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார். எனவே இந்த வகைகளைப் பயன்படுத்தித் தற்போதைய செயற்கை நுண்ணறிவுக் கட்டமைப்புக்குள் தொழிற்படுத்த முடியும் எனத் தெரிவிக்கின்றார்.

அனேகமான புதிய ஸ்மார்ட் போன் வகைகள் செயற்கை நுண்ணறிவுச் சிப்களைக் கொண்டே அமைந்துள்ளது. உதாரணமாக ஐபோன்களில் நியூரல் இன்ஜின் எனப்படும் ஒரு சிப் காணப்படுகின்றது. இது பல்வேறு செயற்கை நுண்ணறிவுத் தொழிற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்தப் புதிய தொழில்நுட்பத்தின் மூலம் எதிர்காலத்தில் கார்கள், கணினிகள் மற்றும் ஸ்மார்ட்போன்களில் சக்தி வளத்தைக் குறைக்க முடியும் எனவும், காத்திரமாகத் தொழிற்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. பாரியளவில் தகவல்களைச் சேமிக்க கூடிய தகவல் நிலையங்களில் அவற்றைக் குளிர்மைப்படுத்துவதற்குப் பெரும் பொருட்செலவு ஏற்படுவதாகவும் இந்த வகையில் சிப்களைப் பயன்படுத்துவதன் மூலம் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



jeyaseelan.s@thaiveedu.com





# தண்ணீர்ப் பாவனை

- வேலா சுப்ரமணியம்

## நீர் அளவுமானி (Water Meter):

நீர் அளவுமானியின் முக்கியத்துவம் கருதி ஒரு மாதிரிப் படம் கீழே தரப்படுகிறது. Water Metery-ல் இருந்து செல்லும் சிறு Wire எங்கு செல்கின்றது என்று சிலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். தண்ணீர்ப் பாவனையை அளவிடுவதற்கு மாநகர சபையில் இருந்து எவரும் வீட்டுக்குள் வருவதில்லை. மாறாக Remote மூலம் வெளியில் நின்று அளவினை அறியவே இந்த Wire வெளிச் சுவரில் ஒரு கறுப்பு Remote பொருத்தப்பட்டிருக்கும். அத்துடன் தண்ணீர்க் குழாயுடன் பெரிய ஒரு செப்பு Wire ஏன் பொருத்தப்பட்டிருக்கிறது என்ற கேள்வி பலருக்கும் எழுந்திருக்கலாம். வீட்டிற்குள்




பொருத்தப்பட்டிருக்கும் மின்சார இணைப்புக்கு ஒரு ஸ்திரமான நிலக்கீழ் இணைப்பு அவசியம் (Ground Wire) தண்ணீர்க் குழாய் நிலத்திற்கு அடியில் இருந்து வருவதால் இதனைவிட மிகத் திடமான இணைப்பு வேறு எங்கும் பெறமுடியாது என்பதால்தான் பிரதான மின்சார இணைப்புப் பகுதியிலிருந்து (Main Electrical Panel) வரும் செப்பு Wire தண்ணீர்க் குழாயுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. இது தேவையற்ற ஒன்று என்று நினைத்துத் துண்டித்து விடக்கூடாது என்பதற்காகவே இது பற்றி இங்கு குறிப்பிடப்படுகிறது.

மாநகர சபையின் ஊடாக வழங்கப்படுகின்ற தண்ணீர் உட்கொண்டு வரப்படும் குழாயின் ஆரம்பப் பகுதியில் நீர் அளவுமானி (Water Meter) பொருத்தப்பட்டிருக்கும். நாம் பாவிக்கும் தண்ணீரின் அளவைக் கணித்து அதற்குரிய கட்டணத்தை அறவிடுவதற்காக இது ஆரம்பத்திலேயே பொருத்தப்பட்டிருக்கும்.

அடிப்பகுதியில் Main Shut Off Valve இருப்பதை அவதானிக்கலாம். (வீட்டுச் சொந்தக்காரர் ஒவ்வொருவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டிய ஒன்று) சிறிய Wire வீட்டுக்கு வெளியே உள்ள சுவரில் பொருத்தப்பட்டிருக்கும் Remote உடன் இணைக்கப்பட்டிருக்கும். இதன் மூலமே வெளியில் இருந்தபடி தண்ணீர்ப் பாவனையின் அளவு 3-4 மாதத்திற்கு ஒரு முறை மாநகர சபையால் அளவிடப்படுகிறது.

அளவில் பெரிய Hopper Wire-ன் ஒரு பகுதி இங்கும், மறுபகுதி வீட்டிற்குரிய மின்சார இணைப்புப் (Main Panel) பகுதியுடனும் இணைக்கப்பட்டிருக்கும். ஸ்திரமான நிலக்கீழ் (Ground Wire) இணைப்பைப் பெறுவதற்காக இவ்வாறு செய்யப்படுகின்றது. சிலர் நினைப்பதுபோல் இந்த Wires, Water Meter-ஐ இயக்குவதற்குரிய மின்சாரத்தைக் கொடுப்பதற்காக அல்ல என்பதைக் கவனத்தில்கொள்ளவும். Water Meter இயங்குவதற்கு மின்சாரம் அவசியம் இல்லை.

## தண்ணீர் விரயத்தைத் தவிர்ப்பது எப்படி?

நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ பாவிக்கும் தண்ணீரை விட விரயமாகும் தண்ணீருக்கும் சேர்த்து மாதா மாதம் கட்டணம் செலுத்திக் கொண்டிருக்கிறோம். சிலர் வீடுகளில் பாவிக்கும் தண்ணீரைவிட விரயமாகும் தண்ணீரின் அளவு தான் அதிகமாக இருக்கிறது. ஆனால் அது பற்றி வீட்டுச் சொந்தக்காரருக்குத் தெரியாததால் மாதா மாதம் தண்ணீர் வீணாக விரயமாவது போல் அதற்குரிய கட்டணமும் விரயமாகிக் கொண்டிருப்பதை உணர்ந்து கொள்வதில்லை.

மறுவார்த்தையில் கூறுவதானால் வீட்டிற்குள் உட்கொண்டு வரப்படும் தண்ணீர் Water Meter-ஐ கடந்தால், நாம் அதனைப் பயன்படுத்துகிறோமோ இல்லையோ அதற்கு இரண்டு விதமான கட்டணம் செலுத்தியே ஆகவேண்டும்.

## தண்ணீர்க் கட்டணம்:

### கழிவு நீர் அகற்றும் கட்டணம் (Sewer Charge):

தொடர் மாடிக் கட்டடங்களில் வாடகைக்குக் குடியிருப்பவர்கள் தண்ணீர் விரயத்தைப் பற்றி அலட்டிக் கொள்வதில்லை. ஏனெனில், அதற்குரிய கட்டணத்தைச் செலுத்துபவர் வேறு யாரோ! அதே போன்று சில நகரவீட்டுத் திட்டத்தில் (Town House) இருப்பவர்களும், Condominium போன்ற அமைப்புகளில் இருப்பவர்களும் தண்ணீர் விரயத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கச் சந்தர்ப்பம் இருக்கிறது. ஏனெனில், அத்தகைய இடங்களில் அறவிடப்படும் மாதாந்தப் பராமரிப்புச் செலவில் தண்ணீர்ப் பாவனையும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

ஆனால், மாதாமாதம் கட்டணம் செலுத்திக் கொண்டிருக்கும் வீட்டு உரிமையாளர்கள் இது பற்றிக் கவலை கொள்ளாமல் இருக்கமுடியாது. பொதுவாக 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு அவர்களது பழக்க வழக்கத்திற்கு ஏற்ப $75-$100 வரை மாதாந்தச் செலவு ஏற்படுவது இயல்பானது. ஆனால் கட்டணம் சில வீடுகளில் மாதத்திற்கு $100-ஐயும் தாண்டி விடுவதையும் அவதானிக்க முடியும். அப்படியென்றால் எங்கோ பிழை இருக்கிறது என்பதே அர்த்தமாகும். தண்ணீர்க் கட்டணம் பொதுவாக 3-4 மாதத்திற்கு ஒருமுறை அறவிடப்படுவது தான் வழக்கம். எனவே அதற்குரிய கட்டண விபரம் கைக்கு எட்டியதும் மாதத்திற்குரிய செலவைப் பிரித்தறிந்து ஒப்பிட்டுப் பார்க்கவேண்டியது மிக முக்கியமாகும். மார்க்கம் போன்ற மாநகர சபைப் பகுதியில் மின்சாரக் கட்டணத்துடன் சேர்த்து இருமாதத்திற்கு ஒருமுறை தண்ணீர்க் கட்டணமும் அறவிடப்படுகிறது. அத்தகைய Hydro Bill-ல் தண்ணீர்க் கட்டணத்தையும் Sewer Charge-யும் கூட்டிப் பார்த்தே தண்ணீருக்கான செலவைக் கண்டறிய வேண்டும்.


வீட்டில் தண்ணீர் விரயமாகிக் கொண்டிருக்கிறதா? என்று கண்டுபிடிப்பது எப்படி? என்பது முதற் கேள்வியாக எழுகின்றது. மிகச் சுலபம். நான் அறுதியிட்டுக் கூறுகிறேன். கீழ்வரும் முறைப்படி பரீட்சித்துப் பாருங்கள். நீங்களே ஆச்சரியப்படுவீர்கள். 50%-ற்கு மேலான வீடுகளில் தண்ணீர் விரயமாகிக் கொண்டிருப்பதைக் கண்டு கொள்வீர்கள்.

கீழ்க்காணும் படத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போல் நீர் அளவுமானியின் ஒரு பக்கத்தில் சிவப்பு நிறத்தில் சுழன்று கொண்டிருக்கக்கூடிய ஒரு முக்கோணவடிவைக் காணலாம். இதற்குப் பெயரே 'கசிவு அறிவுறுத்தி' (Leak Detector). அதாவது தண்ணீர்ப் பாவனையில் இல்லாதபோது இது சுழன்று கொண்டிருக்குமாயின் வீட்டில் எங்கேயோ தண்ணீர் விரயமாகிக் கொண்டிருக்கின்றது என்பது அர்த்தமாகும்.

மறு வார்த்தைகளில் கூறுவதானால் தண்ணீர் மீற்றரைக் கடந்து போவதைக் காட்டிக் கொண்டிருப்பதே இதன் தொழிற்பாடாகும். அதாவது தண்ணீர் பாவிக்கப்படும் போது இந்த Spinning Wheel சுற்றிக் கொண்டிருக்கும். இந்த Wheel முற்றாகச் சுற்றாமல் நின்றால் தண்ணீர் பாவிக்கப்படவில்லை என்பதே பொருளாகும். எனவே வீட்டில் ஒருவரும் தண்ணீர் பாவிக்காத சந்தர்ப்பத்தில் இந்தத் தண்ணீர் மீற்றரை உற்றுநோக்கும் போது Spinning Wheel முற்றாக அசையாமல் இருக்கிறது என்றால் தண்ணீர் வீணாக விரயமாகவில்லை என்பதே அர்த்தமாகும். ஆனால் பரீட்சித்துப் பாருங்கள் பல வீடுகளில் இந்த Spinning Wheel கடின உழைப்பாளியாகக் காட்சி தரும். அதாவது நாம் உறங்கினாலும் மாநகர சபைக்காக இந்த Spinning Wheel இரவு பகலாக உழைத்துக் கொண்டிருக்கும்.

வீட்டு உரிமையாளர்கள் 3 மாதத்திற்கு ஒரு தடவையாவது அதிகாலையில் எழுந்து அதாவது பலரும் நித்திரையாய் இருக்கும் வேளையில் நிலக்கீழ் அறைக்குச் சென்று Water Meter-ஐ அவதானித்துத் தண்ணீர் விரயம் உள்ளதா? என்று உறுதிப்படுத்திக் கொள்ளுதல் சாலவும் சிறந்தது.

தண்ணீர் விரயம் இருப்பதாகக் கண்டுகொண்ட பின்னர்




எங்கு விரயமாகிறது? எப்படி அதனை நிவர்த்தி செய்வது என்பது அடுத்த கேள்வியாக எழுகிறது.

உங்களுக்குத் தெரியுமா? வீணாகச் சிந்தும் ஒரு துளி நீர் ஒரு வருடம் தொடர்ந்து சிந்துமானால் அது 45 நிமிடக் குளியலுக்குச் சமமானதாக இருக்கும். 1 மில்லிமீற்றர் தடிப்பில் ஏற்படக்கூடிய தொடர்ச்சியான மெல்லிய கசிவால் 440 கன மீற்றர் (96,700 கலன்கள்) வருடத்தில் விரயமாகும் எனவும் இதற்கு $1,100 டொலர்கள் வரை செலவாகும் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது. 3 மில்லிமீற்றர் தடிப்பில் ஏற்படும் கசிவால் வருடத்தில் 870,600 கலன்கள் விரயமாகும் எனவும் இதற்கு $10,000 டொலர்கள் வரை செலவாகும் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது. சிறு துளி பெருவெள்ளம் என்பது இங்கு சாலவும் பொருந்தும்.

வீட்டில் பல இடங்களில் தண்ணீர் விரயம் ஏற்படக்கூடிய சாத்தியம் இருக்கின்றது. தண்ணீர் விரயம் என்று கூறுவதை விட தண்ணீர்க் கசிவு என்று கூறுவது மிகப் பொருத்தமானது. அதாவது கண்ணுக்கு இலகுவில் புலப்படாத நீர்க்கசிவு 3-4 மாதங்களிற்குப் பின்னர் கட்டண வடிவத்தில் வரும்போது அது ஒரு பெரிய அளவாக இருக்கும். சாதாரணமாக 4 மாதத்திற்கு ஒரு முறை Bill வருகிறது என்று எடுத்துக் கொண்டால் 120x24=2880 மணித்தியாலங்களுக்குரிய கசிவுக்கும் சேர்த்துத்தான் Bill வருகிறது. ஏன்? 4 மாத Bill-ஐப் பற்றிக் குறிப்பிடுகிறேன் என்றால் பலரும் Bill வரும்வரை தண்ணீர்ப் பாவனை எப்படி இருக்கிறது என்று சிந்திப்ப


தில்லை. ஆனால் Bill வந்தபின் கட்டணம் அதிகமாக இருக்கும் பட்சத்தில் அதுபற்றி ஆராய முனைவார்கள். ஆனால் எந்த Bill எப்படி வந்தாலும் கட்டவேண்டிய மொத்தத் தொகையை மட்டும் பார்த்துக் கட்டி முடிப்பது மட்டும்தான் பலர் செய்வது என்பது வேறு விடயம்.

வீட்டு உரிமையாளர்கள் ஒவ்வொருவரும் மாதாந்தக் கட்டணங்கள் வருகின்றபோது சிறிது நேரம் செலவிட்டு அவற்றைக் கடந்த காலங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது மிகப் பலன் தரக்கூடிய ஒன்று. Hydro போன்ற Bill-களில் முந்திய மாத, முந்திய வருடச் செலவீனங்களை ஒப்பீட்டு ரீதியில் இலகுவில் விளங்கக்கூடிய விதத்தில் Chart முறையில் போட்டு அவர்கள் அனுப்புவது, நுகர்வோர் அவற்றைப் பார்த்து ஒப்பீட்டு ரீதியில் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதற்காகவே. அயலவர்களுடனும், உறவினர்களோடும் என்ன என்னவெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்துப் பேசுவோம். அதுபோல இந்த மாதாந்தக் கட்டணங்கள் பற்றியும் ஒப்பிட்டுக் கதைத்து உண்மைகளை அறிந்து நன்மை அடைய நினைப்பதில்லை.

சாதாரணமாக ஒரு வீட்டில் ஏற்படக்கூடிய தண்ணீர்ப் பாவனையை எடுத்துக்கொண்டால் அவற்றில் 45% கழிவறைக்காகவும், 25% உடுப்புத் தோய்ப்பதற்காகவும், 30% குளியலுக்காகவும், 5% சமையல், குடிநீர்ப் பாவனைக்காகவும் பயன்படுத்தப்படுவதாகப் பலரின் ஆய்வுகள் மூலம் அறியக்கிடைக்கின்றது. எனவே தண்ணீர்ப்பாவனை கழிவறைக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது என்பதும், இது தவிர்க்க முடியாதது என்பதும் உண்மை. அதேவேளை வீண் விரயத்திற்கான வாய்ப்பில் 90% பங்கும் இங்குதான் காணப்படுகிறது.

தண்ணீர்க் கசிவு வீடுகளில் பொதுவாகப் பல இடங்களில் இருக்கலாம். அதில் கழிவறை முதலிடம் வகிக்கிறது. கழிவறையில் Commode உடன் இணைக்கப்பட்டிருக்கும் நீர்த் தொட்டிதான் நீர்க்கசிவில் முதலிடம் பெறுகிறது. அதாவது எமது கண்ணுக்குத் தெரியாதவாறு உள்ளே ஏற்படும் கசிவினால் மாதத்திற்கு $25-40 டொலர் வரை மேலதிகச் செலவு ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

பல வீடுகளிலும் கழிவறைக்குரிய வெளிச்சத்தைத் தரும் மின்னிணைப்பும் காற்றாடியும் (Fan) ஒரே Switch-ல் பொருத்தப்பட்டிருக்கும். இதனால் நாம் கழிவறையில் இருக்கும் போது மூடப்பட்ட நீர்த்தொட்டிக்குள் ஏற்படும் கசிவினால் ஏற்படும் சத்தத்தை அறிந்துகொள்ள வாய்ப்பில்லை. நீர்த்தொட்டிக்குரிய மூடியைத் திறந்ததும் நீர்க்கசிவு இருந்தால் ஸ்ஸ்ஸ்... என்ற சத்தத்தின் மூலம் கண்டு கொள்ளலாம். அத்துடன் ஏதாவது ஒரு நிறத் தூளைச் (Food Colour) சிறிது கலந்தால் கசிவினை உடனடியாக Commode-க்குள் பார்த்து விடலாம். Toilet Tank-இற்குப் பாவிக்கக்கூடிய நீலநிற வில்லைகளை முதன் முறையாகப் பாவிக்கும் பட்சத்திலும் இதனை அறியமுடியும். ஆனால் Flush பண்ணிய பின்னர் நீர்த்தொட்டியில் இருக்கும் தண்ணீரும், Commode-ல் இருக்கும் தண்ணீரும் நிறம் மாறி விடுவதால் கசிவினைப் பிரித்தறிவது கடினம்.



படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் இத்தகைய நீர்க்கசிவு பொதுவாக Flapper Valve-ல் தான் ஏற்படுகிறது. காலப் போக்கில் இறப்பராலான Flapper-ன் மென்மைத் தன்மை கெட்டுப் போவதால் கெட்டியாக மூடுந்திறன் குறைகிறது. அத்துடன் நீரிலுள்ள கனிப்பொருட்களின் படிவும் இதனு டைய மூடுந்திறனைக் குறைக்கிறது. இத்தகைய கசிவு கண் டவுடன் Flapper-ஐத் திருத்த முனைவதிலும் பார்க்க இதனை மாற்றிவிடுவது சிறந்தது. மிக இலகுவானது. மிக மலிவானது. $2.99-$4.99 வரைதான் செலவு ஏற்படும். $3-4 டொலர் செலவு செய்வதா? அல்லது மாதா மாதம் $25-$40 கட்டணமாகச் செலுத்துவதா? அது உங்கள் விருப்பம்.

பொதுவான பிரச்சினையாக இல்லாவிட்டாலும், தண்ணீர் மட் டம் சரியான முறையில் சரி செய்யப்படாவிட்டால் மேலதிக நீர் போய்க்கொண்டே இருக்க வாய்ப்பு உண்டு. படத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போல் ஒரு Screw-ஐச் சரி செய்வதன் மூலம் நீர்மட்டத்தைக் கூட்டவோ அல்லது குறைக்கவோ முடியும். எனவே நீர் முற்றாகத் தொட்டியில் நிறைந்த பின் னர் தண்ணீர் Over Flow Tube மூலம் போய்க்கொண்டிருக்கி றதா என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். தண்ணீர் விரயத்தைத் தவிர்க்க இதுவும் முக்கியமானது.

Flapper ஒரு சங்கிலி மூலம் Trip Lever உடன் பொருத்தப் பட்டிருக்கும். சிறுவர்கள் Flush பண்ணும் போது தங்களின் அவசரத்தையும் பலத்தையும் Trip Lever-ல் காட்டுவது வழக் கம். ஏன் வளர்ந்தவர்கள்கூட. இதனால் வேகமாக உயர்த்தப் படும் Flapper மேற்பகுதியில் சிக்கிவிடும் சந்தர்ப்பம் இருக் கிறது. அல்லது சங்கிலியின் நீளம் அளவுக்கு அதிகமாக இருந்தால் Flapper-க்கு அடியில் மாட்டிவிடவும் வாய்ப்பிருக் கிறது. நடமாட்டம் குறைந்த பகுதியில் இந்தக் கழிவறை இருந்தால் அடுத்த தடவை போகும்வரை தண்ணீர் விரயமா கிக் கொண்டிருப்பதை அறிய வாய்ப்பில்லை. அதுவும் நிலக்கீழ் அறையில் இப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால் அடுத்த தடவை எப்போது நிலக்கீழ் அறைக்குப் போகப் போகிறோம் என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. எனவே வீட்டில் இருப்பவர்கள் சற்று அவதானத்தோடு இருப் பதன் மூலம் செலவைக் கட்டுப்படுத்தக் கூடிய வாய்ப்பு நிறையவே இருக்கிறது.

அதேவேளை 'Water Control Assembly'-லும் கூடப் பழுது ஏற் பட வாய்ப்பு இருப்பதால் அதனாலும் நீர்க்கசிவு அதிக 'ஸ்ஸ்ஸ்...' சத்தத்துடன் ஏற்படக் கூடும். இத்தகைய சூழ் நிலை ஏற்பட்டால் அதனையும் சேர்த்து மாற்றிவிட வேண்டிய துதான். 'Toilet Repair Kit' என்ற பெயரில் இவை விற்பனை செய்யப்படுகின்றன. ஏறத்தாள $15.00 செலவாகும்.

கழிவறையில் ஏற்படும் நீர்விரயம் என்பது எமது வீட்டில் ஏற் படுவது மட்டுமல்ல. உலக நாடுகள் பலவற்றினதும் கவ னத்தை ஈர்த்துள்ள பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது. வீட்டில் ஏற்படும் தண்ணீர்ப் பாவனையில் பொதுவாக 30%-க்கு மேல் கழிவறை மூலமாக ஏற்படுவதாலேயே இது பல நாடுகளது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

1950-ம் ஆண்டிற்கு முன்னர் கட்டப்பட்ட வீடுகளில் உள்ள மலசலகூடத்திற்குரிய நீர்த்தொட்டி 30 லீற்றர் பருமன் உடை யதாக இருந்தது. 1980-ம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகு தியில் இது 20 லீற்றராக இருந்திருக்கிறது. 1990-களில் கன டிய வீடுகளில் 13 லீற்றர் அளவுடைய நீர்த்தொட்டிகள் அறி முகப்படுத்தப்பட்டன. அதன் பின்னர் 1996-ல் ஒன்ராறியோ கட்டட நிர்மாண விதிகளுக்கமைய நீர்த்தொட்டிகள் 6 லீற்றர் அளவு கொண்டதாக இருக்கவேண்டும் என்பது சட்டமாக்கப் பட்டிருக்கிறது. கனடாவில் எல்லா மாகாணங்களிலும் இது சட்டமாக்கப்படாவிட்டாலும் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இத்தகைய ஒரு வரலாற்றுப் பின்னணி ஏன் இங்கு குறிப்பி டப்படுகிறது என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். 1996-ம் ஆண்டிற்குப் பிற்பட்ட Toilet-ஐ ஒருவர் பாவிக்கும் போது 6 லீற்றர்த் தண்ணீர் மட்டுமே செலவிடப்ப டுகிறது. ஆனால் 1950-ம் ஆண்டிற்கு முற்பட்ட Toilet-ஆக இருந்தால் அங்கு இதனைப் போல் 5 மடங்கு தண்ணீர் செலவிடப்படுகிறது. அதாவது ஒருதரம் Flash பண்ண 30 லீற்றர்த் தண்ணீர் தேவை. 1990-ம் ஆண்டு காலப்பகுதிக்கு ரிய Toilet-ஆக இருந்தால் இரண்டு மடங்கு (13 லீற்றர்) செலவாகும். எனவே பழைய வீட்டு உரிமையாளர்கள் சற்றுச் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

பழைய வீட்டு உரிமையாளர்கள் தங்களது பழைய Toiletfis Water Efficient Toilet-க்கு மாற்றுவது பல நாடுகளிலும், பல மாகாணங்களிலும் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. அந்தவ கையில் ஒன்ராறியோவிலும் இத்திட்டம் நடைமுறையில் உள் ளது.

நீர் விரயத்தைக் கட்டுப்படுத்துவதற்காக 'Dual Flush Toilets' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அவுஸ்ரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் சுமார் 10 ஆண்டுகளுக்கு முதல் இவை அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் கனடாவில் சில ஆண்டுக ளுக்கு முன்னர்தான் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது சலம் கழிக்கும் சந்தர்ப்பத்தில் ½ Flush பாவிக்க வும், மலம் கழிக்கும் சந்தர்ப்பத்தில் Full Flush செய்யவும் தக்க விதத்தில் இது அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை ஏறத்தாள 150-200 டொலர். காலப்போக்கில் பலநூறு டொலர்களைச் சேமிக்கும் விதத்தில் இது தயாரிக்கப்பட்டி ருக்கிறது. நவீன தொழில்நுட்பங்கள் கழிவறையையும் விட்டு வைக்கவில்லை.

பழைய Toilet நல்ல நிலையில் இருந்தால் அவற்றை முற் றாக மாற்றாமல் dual-flush-ஐ மட்டும் பிரதியீடு செய்தும், நீரை மீதப்படுத்தலாம். சுமார் 30-40 டொலர் செலவில் இத னைச் செய்யமுடியும். இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படங் கள் அவற்றை விளக்குகின்றன.



velasubramaniam@thaiveedu.com



# உலகளாவிய காலநிலை மாற்றத்தால் காப்புறுதியில் தாக்கம்

- செந்தூரன் புனிதவேல்

சீதோஷண மாற்றம் காரணமாகக் காப்புறுதிக் கட்டணங்கள் அதிகரித்த வண்ணமிருக்கின்றன. இந்நிலையில் தனியார் காப் புறுதிகளை கட்டடங்களுக்குப் பெறமுடியுமா என்பது கேள்விக் குறியாய் ஆகியுள்ளது. ஏற்கனவே, தேசியரீதியாக வெள்ளக் காப்புறுதித் திட்டம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் அதேவேளை கட்டடங்களுக்குத் தீயினால் வரும் அனர்த் தங்களை ஈடுசெய்வதையும் அதனுடன் இணைக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படலாம் என்பதுடன் புயல்களால் வரும் அனர்த் தங்களையும் இணைக்கவேண்டி வரலாம்.

அண்மையில் கனடியப் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளி யிடப்பட்ட அறிக்கையில் வீட்டுக் காப்புறுதிச் செலவானது, யூன் மாதத்தில் தேசிய ரீதியாக 8.2 விகிதம் சென்ற வருடத்தைவிட அதிகரித்துள்ளது. மேலும் அல்பேட்டா மாகாணத்திலும், பிரிட்டிஷ் கொலம்பியா, மற்றும் சஙகடுன் மாகாணத்திலும் 10 விகிதத்தால் காப்புறுதி அதிகரித்துள்ளது. நோவாஸ்கோசி யாவிலோ காப்புறுதிச் செலவு 12 விகிதத்தினால் அதிகரித் துள்ளது.

அதிகரிப்பின் ஒரு பகுதி விலைவாசி அதிகரிப்பினால் ஏற்பட் டுள்ளது என்பதனை மறக்கலாகாது. ஆனால் அந்த அதிக ரிப்பின் முக்கிய காரணி உலகலாவிய மீள்காப்புறுதியினால் (Global Reinsurance) ஏற்பட்டுள்ளது என்பதனைக் குறிப்பிட வேண்டும். பொதுவாக வீட்டுக் காப்புறுதி செய்யும் அமைப் புகள் அனைத்தும் உலகலாவிய ரீதியில் மீள் காப்புறுதி செய்வது வழமை. எனவே உங்களுடைய வீட்டில் இழப்பு ஏற்பட்டு நீங்கள் உங்கள் உள்ளூர்க் காப்புறுதி அமைப்பிடம் கேட்பனவு செய்யும் வேளையில், அவர்கள் அந்த இழப்பின் ஒரு பகுதியை உலகலாவிய காப்புறுதி அமைப்பிடம் கேட்டுக் கொள்வார்கள்.

சென்ற வருடம் மீள் காப்புறுதியின் விலையானது 25 முதல் 100 விகிதத்தால் உயர்ந்துள்ளது என்பதனைக் கவனத்தில் கொள்ளவும். சுற்றாடல் மாற்றத்தினால் அதிக கட்டணம் உயர்ந்த ஒரு நாடாகக் கனடா ஆகியிருப்பது தெரியவந் துள்ளது. கடந்த ஐந்து வருடங்களில் வருடாந்தக் கொடுப்பனவு 7 பில்லியனாக இருந்ததெனக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கணித்துள்ளது. அதற்கு முந்திய ஐந்து வருடங்களிலும் வரு டாந்தக் கொடுப்பனவு சராசரி வருடம் ஒன்றிற்கு 5.8 பில்லி யனாக இருந்துள்ளது. 1990-களில் வருடாந்தக் கொடுப்பனவு சராசரி 2 பில்லியனாக இருந்ததுடன் ஒப்புநோக்க வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் கணிப்புப்படி சென்ற வருடம் 3.1 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது. ஆனால் அக்காலப்பகுதியில் 2016-இல் போட் மக்கமரியில் ஏற்பட்டது போல் காட்டுத்தீ எதுவும் ஏற்பட வில்லை என்பது கவனிக்க வேண்டிய விடயம். இச்செலவுகள் யாவும் கனடா நாடு முழுவதும் பரந்து செலவிடப்பட்டுள்ளது. ஒன்டாரியோவிலும், குவிபெக்கிலும் டெரிகோ (Dereco) மற்றும் பையோனா (Fiona) என்பனவும் மனிடோபாவில் வெள்ளம், ஒன் டாரியோவில் பனிக்காலத்திலும், கோடையிலும் ஏற்பட்ட புயல்கள்... இப்படிப் பல பிரதேசங்களிலும் பரந்துபட்டு அனர்த் தங்கள் ஏற்பட்ட வண்ணமுள்ளன.

கட்டுப்பணம் அதிகரிப்பது மட்டுமல்ல, சில தொழில் வகைகள் குறிப்பாகச் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறை ஆகியவற் றிற்குக் காப்புறுதி பெறுவது மிகவும் சிரமமாக அமைந்துள்ளது. ஏற்கனவே உள்ள காப்புறுதிகளைத் தொடர்வதற்குத் தயக்கம் காண்பிக்கப்படுகிறது. கடந்த 18 மாதங்களில் அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்திலும், புளோரிடா மாகாணத்திலுமி ருந்து பல பெரும் காப்புறுதி அமைப்புகள் தமது சேவையை நிறுத்திக் கொண்டுள்ளன. பாமஸ் காப்புறுதி (Farmers Insurance) வீட்டு மற்றும் வாகனக் காப்புறுதி வழங்குவதை புளோரிடா மாகாணத்தில் கடந்த யூலை மாதத்திலிருந்து நிறுத் தியுள்ளது. அதே போல் ஸ்டேட் பாம் காப்புறுதி (State Farm Insurance) கலிபோர்னியாவில் கடந்த மே மாதத்திலிருந்து நிறுத் தியுள்ளது. இவ்விரு மாகாணங்களிலும் காட்டுத்தீயும், புயல் காற்றும் ஏற்படுத்திய அழிவுகளை அனைவரும் அறிவீர்கள்.

கனடாவிலும் இந்நிலை உடனே வரப்போகிறது என்று நான் கூற முன்வரவில்லை. ஆனால் அதேவேளை இந்நிலை வருவ தற்கான அறிகுறிகள் பெரிதளவு உள்ளன. இத்தகைய அனர்த் தங்கள் இந்நாட்டிலும் கூடிக்கொண்டே செல்லும் வேகத்தைப் பார்த்தால், இங்கும் அந்நிலை தோன்றின் அதிசயமில்லை. இந் நிலையில் கட்டண அதிகரிப்பு எதிர்பார்க்க வேண்டிய விடயமே.

இத்தகைய சுற்றாடல் காலநிலை மாற்ற அனர்த்தங்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுப்பது காலத்தின் கட்டாயமே. இத்தகைய தவிப்பு நடவடிக்கையில் முதலிடும் ஒவ்வொரு டொலரும், அரசாங்கம் காப்புறுதி அமைப்புகள் மற்றும் தனியா ருக்கான விரயத்தை ஐந்து முதல் பத்து டொலர் வரை, உயர வைக்கும்.

தரையில் ஓடும் வெள்ளத்தைத் தடுப்பதற்கான காப்புறுதியை 2016 ஆண்டு வரை பெறமுடியாது இருந்தது. ஆனால் தற்போது பத்து விகிதம் வீட்டு உரிமையாளர்கள் இதற்கான காப்பைப் பெற்றுள்ளதுடன், 1.5 மில்லியன் வீடுகளுக்குக் காப்புறுதி வழங் கப்பட்டுள்ளது. அண்மையில் தேசிய வெள்ளக் காப்புறுதி (National Flood Insurance) அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது இக்குறையை நிவர்த்தி செய்யும் என நம்பப்பட்டாலும் இன்னும் செயன்முறைப் படுத்தப்படவில்லை.



senthuran.p@thaiveedu.com




# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்


Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You




மீண்டும் ஒஸ்லோ நகரசபைத் (Oslo Bystyre/ Oslo Municipal council election) தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுகின்றார் பாஸ் என்றும், பாஸ்கரன் என்றும் அறியப்பட்ட பாலசிங்கம் யோகராஜா!

நோர்வேத் தமிழர்களில் கட்சி-தேர்தல் அரசியலில் முதன்முதலாக ஈடுபட்ட முன்னோடி அமரர். கணபதிப்பிள்ளை சிவராஜா. அவர் தீவிர இடதுசாரிக் கட்சியான செங்கட்சியின் உறுப்பினராக வட-நோர்வேயின் துறொம்சோ மாநகர சபையில் 1980 - 1986 காலப்பகுதியில் உறுப்பினராகச் செயற்பட்டவர். அவருக்கு அடுத்ததாக அத்தகு செயற்பாட்டில் ஈடுபட்டவரும் அனுபவ நீட்சியுடையவரும் என்றால் அது பாஸ்கரன்தான். 2003 - 2007 வரை ஒஸ்லோ நகரசபை உறுப்பின



ராகத், தொழிலாளர் கட்சியின் சார்பில் போட்டியிட்டு ஒஸ்லோ வாழ் தமிழ்மக்களின் ஆதரவுடன் வெற்றியீட்டி, அரசியல் தளத்தில் நின்று செயலாற்றியமை பலரும் அறிந்ததே. தற்போது மீண்டும் 20 ஆண்டுகளுக்குப் பின்னான ஒரு தேர்தலில் அதே கட்சியின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிடுகின்றார்.

## பெருஞ் சமூகத்துடனும் பல்லினச் சமூகங்களுடனும் உறவுப்பாலம்:

நோர்வேத் தமிழர்கள் மத்தியில் நோர்வேஜியப் பெருஞ் சமூகத்துடனும் பல்லினச் சமூகமட்டங்களிலும் உறவுப்பாலம் அமைத்தவர்களில் முதன்மையானவர். அவரது இந்தப்பணியும் அதற்கூடான சமூக-அரசியற் பணிகளும் அவர் நோர்வேக்குப் புலம்பெயர்ந்த 1980-களின் இறுதியிலிருந்து இன்றுவரை தொடர்கின்றன. சவால்கள், தூற்றுதல்களுக்கு மத்தியிலும் தளராது சமூக-அரசியற் களத்தில் நின்றுவருகின்ற வெகுசிலரில் ஒருவர்.

நோர்வே அரசாங்க, அமைச்சு மட்டங்கள், பலகட்சி அரசியலாளர்கள், கல்வியாளர்கள், ஊடகவியலாளர்கள், துறைசார் நிபுணர்கள், செயற்பாட்டாளர்கள், தன்னார்வ நிறுவனங்கள், இளைய ஆளுமைகள் எனப் பலதரப்பட்ட தொடர்புகளை ஏற்படுத்திப் பேணுவதில் தனித்திறன் வாய்ந்தவர். இத்தகு தொடர்புகள் எதனையும் தனிப்பட்ட தனது நலன்களுக்கு ஒருபோதும் பயன்படுத்தியதில்லை. சமூகநலன் சார்ந்த பணிகளுக்காகவே அவை அனைத்தையும் பயன்படுத்துபவர்.

## தன்னலமற்றுச் சகமனிதருக்கு உதவுகின்ற உளப்பண்பு:

சமூக அரசியல் சார்ந்து இத்தனை தகமைகள், அனுபவங்கள் இருப்பது ஒருபுறமிருக்க என் போன்றவர்களை ஆச்சரியப்படுத்துகின்ற இவருடைய உளப்பண்பு ஒன்று உள்ளது.

தனிப்பட்ட ரீதியில் ஒருவர் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டால், அவர்கள் நெருங்கிப் பழகியவர்களாக இருக்க வேண்டிய அவசியம்கூட இல்லை. இந்த மனிதர் ஓடோடிப் போய் நிற்பார். தன்னாலானதும் தனது தொடர்பு வலைகளின் ஊடாகத் துறைசார்ந்தவர்களை அணுகியும் உதவிகளை முன்னெடுப்பதற்குத் தயங்குவதில்லை.

கடுமையான நோயுற்றவர்களுக்கான ஆற்றுப்படுத்தலிலும் நோயிலிருந்து மீள்வதற்கான உறுதுணையாக இருந்திருக்கின்றார் என்பதை நானறிவேன். அரசியல் புகலிட உரிமை மறுக்கப்பட்டவர்களுக்காகப் பல வருடங்களாக அர்ப்பணிப்

போடு செயற்பட்டதை நாம் அறிவோம். பிற மனிதர்களில் கரிசனையும் இரக்கமும் கொண்ட மனிதர், சமூகப் போராளி என்பவை இவரது அடையாளம்.

## பலம் - பலவீனம்:

ஒரு குறையையும் சொல்லியே ஆகவேண்டும். ஒரே நேரத் திற் பல தோணிகளிற் கால் வைக்கின்ற ஒரு பழக்கம் உள் ளது. சமூகத்திற்கு ஏதாவது நன்மை பயக்கக்கூடிய பணிகள் நடைபெறவேண்டுமென்ற அவாவிலும் நல்லெண்ணத்திலும் அப்படியாகப் பல பணிகளில் இவர் இறங்குவதுண்டு. அது ஒரு வகையில் இவரது பலம் என்றாலும் மறுபுறம் அது இவ ரது பலவீனமும்கூட. அடிப்படையில் ஒரு யதார்த்தவாதி. அரசியல் முரண்பாடுகளைக் கடந்து வெவ்வேறு மாறுபட்ட கருத்துடையவர்களுடன் இணைந்து பணியாற்றுகின்ற அணு குமுறையும் இவரிடம் உள்ளது. இதுவும் இவருடைய பல மும் பலவீனமுமான அம்சம்.

நோர்வேயின் தமிழ் நிறுவனங்கள் பலவற்றின் வளர்ச்சிக்குப் பல்வேறு வழிகளிலும் பங்களிப்பினை வழங்கியிருக்கின்றார். மட்டுமல்லாமல் தமிழ்ச் சமூக, அரசியல், கல்விசார் நிறுவ னங்களுக்கும் நோர்வே பெருஞ் சமூகத்தின் சமூக, அரசி யல், கல்விசார் நிறுவனங்களுக்கும் இடையிலான முக்கிய மான பாலமாக இயங்கி வந்திருக்கின்றார்.

நோர்வே அரசியலிற் தமிழ்ப் பெண்கள் பிரவேசிப்பதற்கான முழுமுதற் காரணியாகவும் முன்கையெடுப்பினைச் செய்தவ ரும் இவரே. நோர்வேத் தமிழ் இளைய தலைமுறையினர் பல்வேறு துறைகளில் முன்னேறவேண்டுமென்ற பேரவாவி னைக் கொண்டு செயற்படுபவர்.

தாயகம் சார்ந்த அரசியல் - அபிவிருத்திப் பணிகளிலும் இவரது முன்னெடுப்புகள் முக்கியமானவை. புலம்பெயர் வாழ்வில் இவருடைய சமூக, அரசியற் பங்களிப்புகள் வர லாற்று ரீதியில் பதிவு செய்யப்படவும் ஆவணப்படுத்தப்பட வும் வேண்டியவை. இந்தத் தேர்தலிலும் அவர் வெல்வது நோர்வேத் தமிழர்களுக்கும், பல்லின ஒஸ்லோவிற்கும் பயனு டையது.

## இளையோர் - பெண்களின் முன்னேற்றம் குறித்த அக்கறை:

இளைஞர்கள் சமூக-அரசியல் ஈடுபாடுடையவர்களாக வளர வேண்டும், பல்துறை சார்ந்து கல்வி கற்கவேண்டும், தொழிற் துறைகளில் தடம்பதிக்க வேண்டுமென்ற அக்கறையுடைய வர்.

அதற்காகத் தன்னாலான வழிகளில் உந்துதல்களை வழங்கி வந்திருக்கின்றார். ஆற்றலும் திறனுமுடைய இளைஞர்கள், பெண்கள் உரிய தளங்களில் உரிய அங்கீகாரத்தைப் பெற வேண்டுமென்பதில் கரிசனையும் செயல்முனைப்பும் கொண்ட வர்.

கட்சி பேதங்களுக்கு அப்பால், தமிழ் இளைஞர்களும் பெண் களும் அரசியலில் பங்கேற்க வேண்டுமென்ற வேணவா வோடு உழைத்திருக்கின்றார். 2007 ஒஸ்லோ நகரசபை, லோறன்ஸ்கூக் மாநகரசபை மற்றும் உள்ளூராட்சி சபைகளி லுமாக நான்கு பெண் பிரதிநிதிகளைத் தொழிலாளர் கட்சி யின் வேட்பாளர்களாக முன்னிறுத்தி வெற்றிபெறச் செய்ததில் இவரது வகிபாகம் முதன்மையானது.

தற்போது நோர்வே நாடாளுமன்ற உறுப்பினராகவுள்ள கம்சாயினி குணரட்ணத்தினை நகரசபை வேட்பாளராக நிறுத்து வதற்காகத் தான் இரண்டாவது முறையாக வேட்பாளராகப் போட்டியிடுவதைத் தவிர்த்தவர். ஒஸ்லோவாழ் தமிழ் மக்க ளின் வாக்குகளே முதன்முறை (2007) கம்சாயினியை ஒஸ்லோ நகரசபை உறுப்பினராக்கியது. பாஸ்கரன் அத்தேர்தலிற் தான் போட்டியிடாமல் அந்த வாய்ப்பினைக் கம்சாயினிக்கு விட்டுக்கொடுத்ததோடு அவரை வெல்லவைப்பதற்கான பிரச் சாரத்திலும் தீவிரமாக ஈடுபட்டார்.

## நோர்வேயின் தேர்தல்கள்:

நோர்வேயில் 2 தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. 4 ஆண்டுக ளுக்கு ஒருமுறை நாடாளுமன்றத் தேர்தலும், 4 ஆண்டுக ளுக்கொரு முறை மாநகரசபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலும் நடத்தப்படுகின்றன.


இறுதியாகச் செப்ரெம்பர் மாதம் 2021-ம் ஆண்டு நாடாளுமன் றத் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலின் பின்னர் தொழிற் கட்சி, மத்திய கட்சி இணைந்த சிறுபான்மை அரசாங்கம் அமைந்துள்ளது. நோர்வே நாடாளுமன்றம் 169 உறுப்பினர்க ளைக் கொண்டுள்ளது. 2019-ம் ஆண்டு இறுதியாக நகரசபை கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இடம் பெற்றது. நோர்வேயில் 356 மாநகர சபைகளும் அவற்றின் கீழ் உள்ளூராட்சி சபைகளும் உள்ளன. இன்னொரு வகை யில் சொல்வதென்றால் 2 ஆண்டுகளுக்கொரு முறை நோர்வே மக்கள் தேர்தலில் வாக்களித்து வருகின்றனர் எனலாம்.

## வெளிநாட்டுப் பின்னணியைக் கொண்டவர்களின் அரசியல் பங்கேற்பு:

ஐரோப்பிய நாடுகள் பலவற்றைப் போல் நோர்வேயும் ஒரு பல்லின மக்களைக் கொண்ட நாடாக இருப்பதால் வெளி நாட்டுப் பின்னணியைக் கொண்ட மக்கள் சமூகங்களின் அர சியல் பங்கேற்பு என்பது இன்றியமையாத ஒன்றாகவே நோக் கப்படுகின்றது.

குறிப்பாக ஒஸ்லோவின் மொத்த மக்கட்தொகையில் 35 வீதத் தினர் வெளிநாட்டுப் பின்னணியைக் கொண்டவர்களாவர். நோர்வேயிற் குடியேறியவர்கள் மற்றும் குடியேறியவர்களுக்கு நோர்வேயிற் பிறந்து வளரும் பிள்ளைகளும் வெளிநாட்டுப் பின்னணியைக் கொண்டவர்களாக வரையறுக்கப்படுகின்றனர்.

வெளிநாட்டுச் சமூகங்கள் அரசியலில் பங்கேற்பதன் மூலமே இணைவாக்கத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் சிறந்த முறை யில் வழிவகுக்க முடியும். அத்தோடு வாய்ப்புகளையும் நலன்களையும் உரியமுறையில் பேண முடியும். அரசியல், சமூகப், பொருளாதார, வாழ்வியல் விடயங்கள் சார்ந்த முக் கிய முடிவுகளிலும் தீர்மானங்களிலும் காத்திரமான கருத்துக் களை முன்வைக்க முடியும் என்பதும் யதார்த்தமாகும்.



rooban.s@thaiveedu.com

# நிராகரிப்பை நிராகரி

- சி. நற்குணலிங்கம்

மறுப்பு, புறக்கணிப்பு, ஒதுக்கிவைத்தல், ஒதுக்குதல் என்பவை நிராகரிப்பின் பொருளாகும். தகுதியற்றதாகக் கருதப்படும் எதையும் புறக்கணிப்பதைக் குறிக்க பொதுவாக நிராகரிப்பு என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. நிராகரிப்பு என்பது நீங்கள் விரும்பிய ஒன்றை நீங்கள் பெறவில்லை என்பதாகும். நிராகரிப்பு என்பது வாழ்க்கையின் ஒரு பகுதியாகும். நிராகரிப்பு நம்மை யாரென்று நமக்குப் புரிய வைக்கும். நிராகரிப்பு ஒரு வெகுமானம்தான். நிராகரிப்பு செயலாக, பேச்சாக, திட்டமாக, உயிரினமாகவோ இருக்கலாம். அத்துடன் வெட்கக்கேடான, தகுதியற்ற, பிரபலமற்றவை நிராகரிக்கப்படுவது ஆச்சரியப்படக் கூடியதல்ல. நிராகரிப்பு என்றால் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையையோ அல்லது ஒரு தனிநபரையோ ஏற்க மறுக்கும் அல்லது மறுக்கும் செயல். இது மக்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளுள் ஒன்றாகும். நிராகரிப்புப்போல் சிறந்த தண்டனை இல்லை. இது நீயாய் நடந்துகொண்டதற்கான தண்டனை. நம்மை நாம் கேள்வி கேட்கும்வரை நிராகரிப்புக்களிலிருந்து விடுபடுவது கடினம்.

நீங்கள் நேசிக்கும் ஒருவர் உங்கள் இதயத்தை உடைத்தால் அது இந்தத் தொடர்பில் பிறகு வரக்கூடிய பெருந்துன்பத்திலிருந்து இயற்கை உமக்கு அளிக்கும் பாதுகாப்பு என்று புரிந்துகொள். நிராகரிப்பு சில சமயம் மாறுவேடத்தில் வரும் ஆசீர்வாதமாகும். சிலருக்கு நிராகரிப்பு பெரிய விடயமாக இருக்காது. பழகியவர்கள் நிராகரித்துப்போனதால் நிராகரிப்பு பழகிப்போனவர்கள் இருக்கிறார்கள். நிராகரிப்பு வெவ்வேறு வழிகளில் வெளிப்படுத்தப்படுகிறது. நடவடிக்கைகள் மூலமாகவோ, விவாதத்தின் பின்னணியிலோ, தனிப்பட்ட கருத்தை முன்வைப்பதில் அல்லது தன்னிச்சையான கூட்டுச்செயலாகவோ இருக்கலாம். உங்கள் விருப்பப்படி இல்லாத சில வேறுபாடுகள் கவனிக்கப்படும்போது பொருள் வெவ்வேறு அம்சங்கள்கொண்டு தனிமைப்படுத்தத் தொடங்க, பின்னர் நிராகரிப்புத் தொடங்குகிறது. இது பாதிக்கப்பட்டவரை விலக்கி, தனிமைப்படுத்தப்பட்ட நபராக மாற்றத் தூண்டுகிறது. அது பாகுபாடாகக்கூட உருவாகலாம்.

நிராகரிப்பு என்ற சொல் நிராகரிக்கப்பட்ட ஒரு விஷயத்தை மனச்சோர்வு செய்வதையும் உள்ளடக்கியது. நிராகரிக்கப்படுவது அவமதிப்பு மற்றும் அவமானத்தின் விளைவுகளை அனுபவிக்கிறது. ஒருவர் உங்களுடன் பேச நேரமில்லை என்றால் நம்பாதீர்கள். அவர்களின் முன்னுரிமைப் பட்டியலில் நீங்கள் இல்லை என்பதே உண்மை. நிராகரிப்புகளை விழுங்குகின்ற சக்தி நமக்குத் தேவை. பொறுமை, சகிப்புத் தன்மையுடன் கையாண்டால் விழங்குவது இலகு. உணரும்வரை உண்மையும் ஒரு பொய்தான். புரிகின்றவரை வாழ்க்கையும் ஒரு புதிர்தான். நிராகரிக்கப்படும்போது கூச்சலிடாமல் இரு. ஏனெனில் அதைக் கொண்டாட ஒரு கூட்டமே காத்திருக்கும்.

அதிகாரிகளின் ஒழுக்கக்கேடான நடத்தை நல்லவர்களின் நிராகரிப்புக்குத் தகுதியானது. 'மனிதர்களிடம் நாம் பொதுவாகக்கொண்டிருப்பது மிக மோசமான குற்றங்களை நிராகரிப்பதாகும்' பெர்னாண்டோசாவட்டர் கூற்று. இதயத்துக்கு நெருக்கமானவர்களின் தற்காலிக நிராகரிப்புத்தான் நிரந்தரவலியைத் தருகிறது. நம்மை நிராகரிக்கும் ஒருவரிடம் கோபத்தைக் காட்டுவதைவிடச் சிரித்த முகத்தைக் காட்டுவதே மிகச் சிறந்த பதிலடி. நெல்லாய் இருந்து ஆலைக்குள் அகப்பட்டு அரிசியான அரிசிக்குள் அரைபடாத நெல் அவசியமற்றதாய் நீக்கப்பட்டதுபோல ஒருவர் இன்னொருவரை நிராகரிப்பது எவ்வளவு வருத்தமான விடயம். நிராகரிப்பின் வலி நினைவுகளின் மீளாத்துயரம், ஏக்கங்களின் ஏழ்மைநிலை, விரக்தியில் விரயமாகும் நேரம் எல்லாம் விரயமே. நிராகரிப்புகளைக் கண்டு உடையாதே. உன்னை யாராவது தூக்கி எறிகிறார்கள் என்றால், ஒருவர் உன்னை மேலே தூக்கிவிடுகிறார் என்றுதான் அர்த்தம்.

ஒருமுறை யாரோ ஒரு குறிப்பிட்ட பதவிக்கு உங்களை நிராகரித்திருக்கலாம். சில நேரங்களில் அது எங்கள் பாதுகாப்புக்கான முக்கிய வார்த்தையாக இருக்கலாம். மேலும் நாங்கள் எதிர்மறையாக நடந்துகொண்டு அவர் என்னை வேண்டுமென்று நிராகரித்தார். அதனால் நான் மோசமாக இருக்கிறேன் என்று நினைக்கலாம். இருப்பினும் உங்களை நிராகரித்த நபர் பெரும்பாலும் இந்த ஆழத்தில் நிராகரிப்புப்பற்றி சிந்திக்காமல் இருந்திருக்கலாம். எதுவாயினும், 'ஒரு கதவு மூடும்போது மற்றொரு கதவு எங்காவது திறந்திருக்கும்' என்பதற்கமைய, ஒரு வாய்ப்பிலிருந்து நிராகரிக்கப்படுவது மற்ற வாய்ப்புக்களுக்கு உங்களை விடுவிக்கிறது. ஒரு இடத்திற்கு

ஒன்றுக்கு மேற்பட்ட பாதைகள் உள்ளன என்று நினைப்பது உங்கள் நிராகரிப்புப் பயத்தை திறம்பட எதிர்கொள்ள உதவும். நிராகரிப்பின் அனுபவத்திலிருந்து நீங்கள் நிறையவே கற்றுக்கொள்ளலாம். கண்டிப்பாகச் சொல்வதானால் நீங்கள் எவ்வளவு முயற்சி செய்கிறீர்களோ அவ்வளவு வாய்ப்புகளை உருவாக்குகிறீர்கள். எதிர்மறைச் சிந்தனை உங்களிடையே ஊடுருவுவதற்கு முன்பு நீங்கள் முயற்சி செய்யாவிட்டால் நீங்கள் நிராகரிக்கப்பட்ட அதே சூழ்நிலையில் இருப்பீர்கள் என்பதை நினைவில்கொள்ளுங்கள். உங்கள் பலங்களை நினைவில்கொண்டு, பலப்படுத்துவதும் முக்கியம். அத்துடன் உங்கள் சுயமதிப்பை முன்னிலைப்படுத்துங்கள். நிராகரிப்பு உங்களை விட்டு அகலும்.

நிராகரிப்பு உங்கள் அச்சங்களை எதிர்கொள்வதன் ஒரு பகுதி. அது நடக்கக்கூடும் என்பதையும், அது நிறையப்பேருக்கு நிகழ்கிறது என்பதையும், அது ஒரு முடிவல்ல, ஆனால் உண்மையில் ஒரு தொடக்கமாகும் என்பதையும் உணர்ந்து கொள்வதாகும். நிராகரிப்பு எப்படி என்பதைப் புரிந்து கொள்வது அதை மிகவும் திறம்பட சமாளிக்க உதவும். இது அனைவருக்கும் நடக்கிறது என்பதையும் உலகம் உங்களுக்கு எதிராக இல்லை என்பதையும் நீங்கள் உணரவேண்டும். நிராகரிப்பை கண்ணியமாக ஏற்றுக்கொள். வருத்தப்படாதே. அது உங்கள் மனநிலைக்கு நல்லது மட்டுமல்ல எதிர்காலத்திலும் பயனளிக்கும் குறிக்கோளையும், கனவுகளையும் அடைய உதவும். நிராகரிப்பால் நல்ல வாய்ப்புகள் தவறவிடப்படும். அதைப் பெரிதாக எடுக்காதே. நிராகரிக்கப்பட்டால் அது இன்று உலகின் முடிவாகத் தோன்றலாம். ஆனால் சிறிது நேரத்திற்குப் பிறகு இந்த நிலைமை உங்கள் வாழ்க்கையில் ஒரு குறுகியகால நிகழ்வாக இருக்கும். நிராகரிப்பு மனதைப் புண்படுத்தக்கூடும், ஆனால் காலப்போக்கில் நீங்கள் அதை மீறி மற்ற விஷயங்களைத் தொடர முடியும்.

நிராகரிப்பின் பயம் என்பது நம் வாழ்வில் மிக நீண்ட தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சக்தி வாய்ந்த பயமாக இருக்கிறது. நிராகரிக்க வழிவகுக்கும் சூழல்களில் தங்களை வைக்கும்போது பெரும்பாலான மக்கள் இதனை அனுபவிக்கிறார்கள். ஆனால் சிலருக்கு பயம் முடங்குகிறது. நிராகரிக்கப்படாத ஒரு பயம் காலப்போக்கில் மோசமாகி ஒரு பாதிக்கப்பட்டவரின் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் படிப்படியாக பற்றிக்கொள்ளும். ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு தாக்கத்தையும் அனுபவிக்காவிட்டாலும் நிராகரிப்பின் பயம் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை சூழ்நிலைகளில் பரந்தளவில் வெற்றிபெறும் திறனைப் பாதிக்கும். இவை மிகவும் பொதுவானவை. சங்கடமானநிலை, வியர்த்தல், அதிகரித்த இதயத்துடிப்பு, மற்றும் சிக்கலாகப் பேசுதல் ஆகியவை நிராகரிப்புப் பயத்தின் பொதுவான அறிகுறியாகும். இந்த அச்சத்தினால் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் பலவீனமாகவும், பாதுகாப்பற்றதாகவும் உள்ளனர். இவர்கள் மத்தியில் ஆரோக்கியமற்ற நடத்தைகள் வெளிப்படும். அதாவது பொறாமை, அவநம்பிக்கையின் உணர்வுகள் உருவாகுதல், நட்புகள் குலைதல், வெறுப்புக்கு ஆளாகுதல், உறவுநிலையும் பாதிக்கப்படும். நிராகரிப்பின் பயம் சட்டவிரோதமான, ஒழுக்கக்கேடான அல்லது வெறுமையாய் இருக்கும் விஷயங்களைச் செய்ய உங்களை வழிநடத்தி வாழ்க்கைக்கு நிராகரிப்பு ஒரு பிரச்சினையாகவே இருக்கும்.

உங்கள் உண்மையான சுயநலத்தை நீங்கள் காண்பித்தால் நீங்கள் நிராகரிக்கப்படுவீர்கள் என்று பயப்படுகிறீர்கள். நீங்கள் ஒரு முகமூடியின் பின்னால் வாழலாம். இது மற்றவர்களிடம் போலியானதாகவும், உறுதியற்றதாகவும் தோன்றுகிறது. நாம் நேசிக்கிறவற்றை கவனித்துக்கொள்ள விரும்புவது இயல்பானதாக இருந்தாலும் நிராகரிப்புக்குப் பயப்படுபவர்களைப் பொறுத்தவரையில் அவை மிகவும் அதிகம். உங்கள் சொந்த வாழ்வில் பெரும் சிரமங்களை அல்லது கஷ்டங்களை அனுபவித்தல் கஷ்டம்தான்.

நிராகரிப்பின் அச்சம் பெரும்பாலும் நம் கனவுகளுக்குப் பின் நம்மைத் தடுக்கின்றது. நிராகரிப்பின் பயத்தால் உள்ளார்ந்த தன்னம்பிக்கை இல்லாமை நம்மை நிராகரிக்க அதிக வாய்ப்புள்ளது. நிராகரிப்பின் பயத்தினால் பாதிக்கப்படுவதால் ஒருவரின் தனிப்பட்ட ஆதாயத்துக்கான அபாயம் அதிகமாக இருக்கலாம்.

மிகவும் வெற்றிகரமான நபர்கள்கூட நிராகரிக்கப்படுவது நாம் முயற்சிக்கும்போது அனுபவிக்கும் ஒன்று. இருப்பினும் இறுதியில் இந்த நிராகரிப்பை நீங்கள் எவ்வாறு எதிர்கொள்கிறீர்கள் என்பதுபற்றியது. நீங்கள் தொடர்ந்து முயற்சி செய்கிறீர்களா அல்லது மாட்டிக்கொண்டு நிராகரிப்பதைப்பற்றி தொடர்ந்து பயப்படுகிறீர்களா? நிராகரிப்பின் பயன் உங்களை முன்னோக்கிச் சென்று புதிய விஷயங்களை முயற்சிப்பதை தடுக்கலாம். அதிஷ்டவசமாக நீங்கள் நிராகரிப்பைக் கையாள்வதற்கும், நம்பிக்கையை வளர்ப்பதற்கும் பல வழிகள் உள்ளன. பயப்படாது அதை ஒரு வாய்ப்பாகப் பார்க்கவும். நிராகரிப்பை எவ்வாறு கையாள்வது என்பது குறித்த திட்டத்தை வைத்திருப்பது, நிராகரிப்பைத் திறம்பட கையாள்வதற்கான உங்கள் திறனில் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளும்போது அதைப்பற்றி பயப்பட வேண்டாம் என்பதை கற்றுக்கொள்ள உதவும். உங்கள் உள்ளுணர்வையும், உணர்வுகளையும் கையிலெடுக்க அனுமதிக்க வேண்டும். அமைதியாக, உங்களை நிராகரிக்கும் நபர் சொல்வதை கேட்பது முக்கியம். இதனால் நீங்கள் பகுத்தறிவு மற்றும் சரியானமுறையில் பதிலளிக்க முடியும். எதையும் குறைந்த உணர்ச்சிக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். நேர்மறை மீது கவனம் செலுத்துங்கள். நிராகரிப்பை வெல்ல முடியும்.

இன்று நீ மகிழ்ச்சியாக இருக்கிறாயா? என்றுமே இது நிலைக்குமா? இன்று நீ கவலையாய் உள்ளாயா? எப்போதுமே இது நீடிக்குமா? எதுவும் நிரந்தரமில்லை. ஆதலால் சிந்தித்துச் செயலாற்று. நிராகரிப்பை நிராகரித்து வாழப்பழகிக்கொள். வாழ்வு சிறக்கும்.



natkunalingam@thaiveedu.com

# வாழ்ந்து காட்டுவோம்

**- குமார் புனிதவேல்**

நான் முதலில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் செய்து விட்டுத்தான் இவ்விடயத்தைக் குறிப்பிடுவது முறையாகும் என எண்ணுகிறேன். அதாவது நான் சிறப்பாகத் தாவரபட்சிணி உணவை உட்கொண்டாலும், ஒரு சர்வபட்சிணி அல்லது அனைத்துண்ணி என்பதைத் தெரிவித்துக் கொண்டு வாழ்ந்து காட்டுவோம் எனும் விடயத்துக்கு வருவோம்.

முதலாவதாக ஒருவர் ஆரோக்கியமாக வாழ்வதற்கு மாமிசம் கட்டாயம் அல்ல என்ற உண்மையைத் தெரிவிக்க வேண்டும். உலகில் மிக அதிக பலமுடைய பிராணி சாணிவண்டு அல்லது மலவண்டு (Dung Beetle) எனப்படும் பிராணியாகும். இது தன் எடையைப்போல 1,141 மடங்கு எடையைத் தள்ளிச் செல்லும். மேலும் ஆங்கிலத்தில், 'As strong as an ox' எனக் குறிப்பிடுவர். அதாவது 'எருதைப்போல் பலம் உள்ள' என்று. புல்லைத் தின்று வளரும் எருதைத்தான் பலத்திற்கு உதாரணமாகக் குறிப்பிடுகின்றனர். எனவே, பலம் பெறுவதற்கு மாமிசம் இன்றி அமையாதது அல்ல. தாவர உணவுடன் நாம் ஆரோக்கியமாக வாழலாம். ஆனால் நீர் இல்லாமல் வாழ முடியாது.

தமிழர்களின் கொள்ளுப்பாட்டன் வாழ்வியல் விதிகளை 133 அதிகாரங்களில் கற்பிக்கையில் கடவுளை வாழ்த்தி விட்டு அடுத்ததாக வாழ்த்தியது மழையைத்தான். நான் இங்கு குறிப்பிடுவது திருவள்ளுவரை. திருக்குறளில் இரண்டாவது அதிகாரமான 'வான்சிறப்பில்' இறுதிக் குறளாகத் தந்துள்ள குறட்பாவை இங்கு நினைவூட்டுகிறேன்.

*'நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்*
*வானின் றமையா தொழுக்கு'*

இப்பாடலின் பொருள் எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்றால், மழை இல்லாமல் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும்.

முதலாம் இரண்டாம் உலகமகா யுத்தங்கள் நிலத்தை அபகரிக்கவும் கனிப்பொருட்களை அபகரிக்கவும் இடம்பெற்றன. அப்படினால் மூன்றாம் உலக யுத்தம் நீருக்காகவா...

தற்காலத்தில் பல மில்லியன் வருடங்களாகச் சேமிக்கப்பட்டுள்ள நிலத்தடி நீர் வெகுவேகமாக உறிஞ்சி எடுக்கப்படுவதால் அவை வற்றிப் போகின்றன.

எமது தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குறிப்பாகக் குடாநாட்டில் நான் சிறுபையனாக இருந்த காலத்தில் இருந்த நீர்த்தேக்கங்கள் மறைந்து அங்கெல்லாம் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்நீர்த்தேக்கங்கள் நிலத்தடி நீர் உவர்ப்பாக மாறுவதைத் தவிர்த்து வந்தன. மழையாக வரும் நீர் நிலையாகத் தேக்கப்பட்ட சிறு குளங்கள் இல்லாத நிலையில் வானில் இருந்து வரும் மழைநீர் வாய்க்கால்களில் ஓடிக் கடலில் கலக்கின்றது.

நன்னீர் அருகிவரும் அதேவேளையில் மாமிசத்தின் தேவையால் பெரும் கோழிப்பண்ணை, மாட்டுப்பண்ணை பன்றிப் பண்ணைகள் பெருகியுள்ள நிலையில் பெருமளவு நீர் தேவைப்படுகிறது. ஒரு கிலோ இறைச்சியைப் பெறுவதற்கு 50,000 லீட்டர் நீர் தேவைப்படுகின்றது. ஐக்கிய நாடுகளின் அமைப்பான உணவு விவசாய அமைப்பின் (FAO) தரவுப்படி நாள் ஒன்றிற்கு 25,000 மக்கள் உணவின்றி உயிர் இழக்கின்றார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். கோவிட் மரணம் மிகச் சொற்பமானதே ஆனால் அதற்கு ஏற்படுத்தப்பட்ட ஆரவாரம் மிகையானது. இத்தகைய அழிவினைத் தவிர்ப்பதற்கு முதற்படியாக மாமிசத்தைத் தவிர்ப்பது சிறப்பாகும்.

உலகின் அனைத்து மக்களும் மேற்குநாடுகளின் உணவுப் பழக்கங்களைப் பின்பற்றினால், எமக்கு அதாவது மனித இனத்திற்கு வேண்டிய உணவைப் பெறுவதற்கு இரண்டு புவிலோகங்கள் வேண்டி வரும். ஆனால் உள்ளதோ ஒரு பூகோளம் தான், அதுவும் அழிந்து கொண்டிருக்கிறது.

உணவுக்காக வளர்க்கப்படும் மிருகங்களால் நீர்த்தட்டுப்பாடு மட்டுமல்ல அவை வெளியேற்றும் நச்சுப் பசுமை வாயுக்களின் அளவு, போக்குவரத்து வாகனங்களால் வெளிவிடப்படும் நச்சுப் பசுமை வாயுக்களிலும் (Green House Gas) ஐம்பது விழுக்காடு அதிகம் என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் அவசியம். இதன் விளைவாக பூமியின் சராசரி வெப்பநிலை கூடுவதுடன் துருவப் பனிப்படலங்கள் உருகுவதுடன் சமுத்திரங்களின் அளவு விரிவடைகிறது. கடல் மட்டத்தில்

உள்ள பல நாடுகள் அழிவது தவிர்க்க முடியாததாகின்றது. இந்நிலையில் உணவுக்காக பெருமளவில் மிருகங்கள் வளர்ப்பதைத் தவிர்ப்பதே சிறந்ததாகும். இதையும் இரண்டா யிரம் வருடங்களுக்கு முன் திருவள்ளுவர் அழகாகக் கூறி யுள்ளார்.

*'தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்*
*விலைப்பொருட்டால் ஊன்றருவா ரில்'*

- குறள்: 256

இக்குறளின் பொருள், புலால் தின்னும் பொருட்டு உலகத் தார் உயிர்களைக் கொல்லாதிருப்பாரானால், விலையின் பொருட்டு ஊன் விற்பவர் இல்லாமற் போவர். இங்கு இன் னும் ஓர் உண்மை ஒளிந்து உள்ளது. அதாவது விலையின் பொருட்டு ஊன் விற்பவர் இல்லாது போனால் அவற்றை வளர்ப்பவரும் ஒளிந்து போவர் என்பதே. எனவே நாம் ஊன் உண்பதைத் தவிர்க்கும் அளவிற்கு நீர் மிச்சப்பட்டு, நச்சு வாயு தவிர்க்கப்பட்டு புவி மண்டலமும் சிறப்புறும்.

பல வறிய நாடுகளில் தானியங்களை வளர்த்து செல்வந்த மேற்குலகத்தில் வளர்க்கப்படும் மிருகங்களுக்கு உணவாக அனுப்பிவிட்டு தமது சொந்தக் குழந்தைகளின் அழகுரலைக் கையில் ஏந்திய வண்ணம் கேட்கிறார்கள். இந்தக் கொடுமை அனைத்தும் உணவிற்கான இறைச்சித் துண்டிற்கான செயற் பாட்டின் பின்விளைவு என எண்ணும் வேளை வேதனை தோன்றுகிறது. ஒவ்வொரு முறையும் இறைச்சித் துண்டை வாயில் போடும் வேளையிலும் உங்கள் காதுகளில் குழந் தைகளின் அழுகுரல் ரீங்காரம் போடும். உண்மையில் நாம் உண்ணும் ஒவ்வொரு இறைச்சித் துண்டும் பசியில் அழு கின்ற குழந்தைக்கு அழாதே என்று கன்னத்தில் அறைவதற் குச் சமமாகும். அந்தக் குழந்தையின் கலங்கிய கண்களைப் பார்த்த பின்பும் மாமிசம் செரிக்குமா?

இப்புவியில் உள்ள அனைத்து உயிரினத்துக்கும் பூமியால் உணவு வழங்க முடியும், ஆனால் தேவையற்றதை அல்ல. அப்போ மனிதவர்க்கம் எதிர்கொள்வது அணு ஆயுதத்தை விடவும் கொடிய ஒரு ஆயுதத்தை ஆகும். ஏதாவது ஒரு நாடு இவ்வளவு அழிவு செய்யும் என்றால் முழு உலகமே அதை அழித்துவிடும். ஆனால் இங்கு வரும் அழிவு மாமி சம் உண்பதனாலேயே. நன்னீர்த் தட்டுப்பாடு, பசுமை வாயுச் செறிவு, பெருமளவு புற்றுநோய் மற்றும் இதய வருத்தங்க ளுக்குக் காரணம் மாமிசம் உண்பதே. உலக அழிவின் அச் சாணி எமது சாப்பாட்டு மேசைகளே. துவக்கு, பீரங்கி, ஏவு கணை என்பன உங்கள் சாப்பாட்டு மேசையில் இருக்கும் கரண்டி, கத்தி என்பவையே. எமது எதிர்காலச் சுபீட்சத்திற்கு நன்னீர், தூய வளிமண்டலம் என்பவற்றை ஏற்படுத்துவதற்குச் செய்ய வேண்டியது உங்கள் உணவில் மாமிசத்தைத் தவிர்ப் பது. அப்படிச் செய்வது உங்களுக்கும் உங்கள் பிள்ளைக ளுக்கும், உங்கள் வழித்தோன்றல்களுக்கும் செய்யும் பெரும் உபகாரமாக அமையும்.

இக்கொடுமையான செயற்பாடு முடிவதற்குச் சாப்பாட்டில் மாமிசம் தவிர்க்கப்படட்டும். இதனால் பல வளர்முக நாட்டு வேளாண்மை கெட்டுவிடும் என்று எண்ண வேண்டாம். அது தொடர்ந்து பயனுள்ள வளர்ச்சி அடையும். விவசாயிகள் நடும் பயிர் வகைகள் மாறும். மனிதருக்கு வேண்டிய உணவை அவர்கள் பயிர் செய்வார்கள். இதனைத் திருவள்ளுவர் மிகச் சிறப்பாக ஒரு குறளில் விளக்கியுள்ளார்.

*'இரவார் இரப்பார்க்கொன் றீவார் கரவாது*
*கைசெய்தூண் மாலை யவர்'*

- குறள்: 1035

இக்குறளின் பொருள், தம்கையால் உழுது உண்ணும் இயல்பை உடையவர் பிறரிடம் பிச்சை கேட்கமாட்டார். தம்மி டம் கேட்டு வந்தவர்க்கு இல்லை என்று சொல்லாமல் கொடுக்கவும் செய்வார் என்கிறார். எனவே விவசாயி வறுமை அடைவார் என வருந்த வேண்டாம்.

இந்நிலையில் புதுப்புது கைத்தொழில்கள் உருவாகி வளர்ச் சியுறும். வைத்தியசாலை வாசலில் நிற்கும் பெரும் நோயா ளர் நிரையும் குறைந்துவிடும். ஆரோக்கியமான ஒரு மனித குலம் தோன்றிவிடும். எம் இளம் தலைமுறையினர் பலர் பெருமளவில் புலால் மறுப்பதையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

எனவே நான் இங்கு ஒரு சவாலை முன் வைக்கிறேன். மாமி சம் பல வகையான நோய்களைத் தருகிறது. ஆனால் மரக் கறி உண்பதனால் வரும் ஒரு நோயைக் குறிப்பிட முடி யுமா? மிருகங்கள் எமக்காகப் படைக்கப்பட்டதல்ல. அவற் றைக் கொல்வதனால் எம்மை நாமே அழித்துக் கொள்கி றோம். எம் இனத்தின் அழிவுக்கு நாமே காரணமாய் இருப் பது முறையா? அமைதி என்பது யுத்தம் இல்லாது இருப்பது மட்டுமல்ல, அங்கு தர்மம் நிலைப்பதுவும் அவசியமே!

இன்று உணவுக்காக மிருகங்கள் தொழில் மனையாக அதா வது Factory-யாக வளர்க்கப்படுகின்றன. கோழிகள், ஆடு, மாடு, பன்றி போன்ற மிருகங்கள், அவை அசைய முடியாத பெ(தொ)ட்டிகளில் இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்றன. அவற்றின் அவலக் குரல் கேட்காதவர்களாக நாம் இருக்க லாமா? எங்கே உங்கள் மனிதம். உயிரினங்களில் உயர்ந்த தாக உங்களைக் கூறிக் கொள்வதில் அர்த்தம் ஏதுமில்லை. இதனால் தான் வள்ளுவரும்...

*'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்*
*சொல்லிய வண்ணம் செயல்'*

என்றார். அத்துடன் கொல்லாமல், புலால் உண்ணாமல் இருந் தால் எல்லா உயிரும் உங்களைக் கைகூப்பித் தொழும் என் றார். எனவே, எல்லா உயிரும் எமை வணங்கும் விதத்தில் கொலையைத் தவிர்த்து வாழ்வோம்.



kumar.punithavel@thaiveedu.com

# வாய்மை எனப்படுவது

## - வேதநாயகம் தபேந்திரன்

'பூமியைக் கொண்டு பண்ணுற சத்தியம் ஒரு நாளும் பலிக்காது. பூமித்தாயின் மேல் சத்தியம் பண்ணக்கூடாது.'

பெரும் கோபத்தில் நிலத்தின் மேல் கைவைத்துச் சத்தியம் செய்த அந்த இளைஞனைப் பார்த்து அந்தப் பெரியவர் புத்தி சொன்னார்.

நம்பிக்கைகளும் பாரம்பரியங்களும் தான் மனித வாழ்வை உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன. அறம் சார்ந்த பண்புகள் மூலமாக மனித வாழ்வு அமைதிப் பூங்காவாகத் திகழும். அந்த வகையில் சத்தியம் செய்தல் என்பது எமது வாழ்விய லுடன் இரண்டறக் கலந்த ஒரு பண்பாடு.

ஒரு காலத்தில் மிக உயர்வாக இருந்த பண்பாடு.

ஒருவர் சத்தியம் செய்தால் அது உண்மையான ஒன்றாகவே இருக்கும். அதில் பொய்மை இருக்காது எனக் காலம் கால மாக நம்பினார்கள். அந்த நம்பிக்கையின் வீதம் தற்போது குறைவு.

சத்தியத்தில் பொய்ச் சத்தியம், மெய்ச் சத்தியம் என இரு வகை உண்டு.

தான் பொய் சொல்கிறேன் என்பதைத் தெரிந்து கொண்டு ஒருவர் சத்தியம் செய்தல், பொய்ச் சத்தியம் எனலாம்.

மற்றவர் எல்லாம் பொய்யென நினைத்தாலும் தான் உண் மையென நம்பி ஒருவர் செய்வது மெய்ச் சத்தியம் எனலாம். இதில் மெய், பொய் என்பதெல்லாம் சம்பவம், சூழல், ஆள் கள் என்பவற்றைப் பொறுத்தே இருக்கும்.

'சத்தியம் தவறினாலும் தவறலாம். பத்தியம் தவறக் கூடாது' எனும் ஒரு முதுமொழி உண்டு. தமிழ் வைத்தியம் எனப்படும் எமது பரம்பரை வைத்தியத்தில் நோய்க்கு வைத்தியம் செய் யும் போது பரிசாரியார் கூறும் அனுபவமொழி இது.

அதாவது நோய்க்கு மருந்து உண்ணும் காலத்தில் உணவுக் கட்டுப்பாடு என்பது முக்கியமானது. நோயை மெல்ல மெல்ல இல்லாமல் செய்வதற்கு எதைச் சாப்பிட வேண்டும். எதைச் சாப்பிடக் கூடாது என்ற வரையறை உண்டு. அந்த வரைய றையை மீறக் கூடாது. மீறினால் நோய் மாறாது என்பதற்கா கவே இந்த அனுபவ மொழியைக் கூறினார்கள்.

என்ர பிள்ளையார் மேல சத்தியம், மடு மாதா மேல சத்தி யம், கதிர்காமக் கந்தன் மேல சத்தியம், என்ர தாலி மேல சத்தியம், என்ர பிள்ளைகள் மேல சத்தியம். என்ர ஐயா மேல, அம்மா மேலே சத்தியம்... இப்படியாகச் சத்தியம் சொல்லும் போது சொல்லும் வார்த்தைகள் மாறுபடும்.

சத்தியம் செய்தல் பல்வேறுபட்ட நிலைகளில் இடங்களில் நிகழ்கிறது. தெய்வத்தை ஆதாரமாகக் கொண்ட சத்தியம், மதிப்புக் கூடிய பொருள், உறவு மீதான சத்தியம் எனச் சத் தியத்தின் தன்மை மாறுபடுகிறது.

சத்தியத்தை நம்பும் தொகையினர் எமது தமிழ் மரபில் முன்பு அதிகம் பேர் இருந்தார்கள். அதனால் சத்தியத்தின் மீதான பற்றுதல் உள்ளோர் அதிகமாக இருந்தார்கள். தற் போதைய காலத்தில் இத்தொகை குறைவு. சத்தியம் சொல் லிச் செய்யும் மனிதர்களும் பழைமை பேணும் கிராமப்புறங்க ளில் மட்டுமே உள்ளதையும் காண முடிகிறது.

கோயிலில் நின்று தெய்வத்தைச் சொல்லிச் சத்தியம் செய் யும் ஒரு முறை உள்ளது. இதன்போது கற்பூரத்தை அணைத் துச் சத்தியம் செய்வார்கள். அல்லது தனது உறவு ஒருவரின் அதாவது பிள்ளை அல்லது மனைவி அல்லது புருசன் அல் லது தாய் அல்லது தந்தை ஒருவரின் தலைமீது கைவைத் துச் சத்தியம் செய்வார்கள்.

வெற்றிலை மீது கைவைத்துச் சத்தியம் செய்தலும் உள்ளது. வெற்றிலைச் சத்தியம் என்பது எம்மவரிடையே நம்பிக்கை கூடிய ஒரு சத்தியமாக இருந்தது. வெற்றிலையை இராச பயிர் என அழைப்பார்கள். இராச பயிரின் விளைபொருள் வெற்றிலை தெய்வத்தன்மை வாய்ந்ததெனக் கூறி அதன் மீது செய்யும் சத்தியம் நம்பகத்தன்மை வாய்ந்தது என்ற நம் பிக்கை பலரிடம் இருந்தது.

காணி ஒன்றை விலைபேசி இணங்கிய போது வெற்றிலை

மீது பணத்தாளை வைத்து முற்பணம் கொடுத்தால் காணியை விற்பவர் நாணயம் தப்பமாட்டார். பேசிய பேச்சு மாற மாட்டார் என்ற நம்பிக்கை இருந்தது. அதனால் காணிக் கொள்வனவு, விற்பனையில் வெற்றிலையின் மதிப்பு உயர்வானது.

சத்தியம் என்பது அரிதாக நிகழும் போதே அதற்கு மதிப்பு இருக்கும். எடுத்ததற்கெல்லாம் சத்தியம் செய்தால் சத்தியம் என்பது மதிப்பிழந்த ஒன்றாகி விடும்.

மனிதர்களது அடிப்படைத் தேவைகள் குறைவாக இருந்த காலப்பகுதியில் மனிதர்களது அறப்பண்புகள் உயர்வாக இருந்தன. உலகமயமாக்கம் என்ற பெயரில் மனிதர்கள் நவீனங்களுடன் பிணைக்கப்பட்டனர். அதிகரித்த தேவைகளை ஈடுசெய்ய வழி குறைந்த போது அறப் பண்புகளிலிருந்து விலகி ஓடத் தொடங்கினார்கள். அப்போது தான் சத்தியம் செய்தல் என்ற மரபின் சக்தி இழப்பு ஏற்படத் தொடங்கியது. இந்த நிலையால் மனிதர்களிடையே முரண்பாடுகள், அமைதியின்மை போன்றவை ஏற்படத் தொடங்கின.

சக மனிதர்களைச் சந்தேகக் கண் கொண்டு பார்த்தல், முரண்பாடுகளுடன் நடத்தல் போன்றவை மனித சமூகத்தின் அழகான வாழ்க்கைக் கோலத்தைச் சிதைவுறச் செய்யத் தொடங்குகிறது.

சத்தியம் என்ற பெயரில் சிவாஜி கணேசனின் படம் ஒன்று உள்ளது. பின்னாளில் விசால் நடித்த சத்தியம் ஐபிஎஸ் எனும் படம் வெளியானது. சினிமா என்ற கனவுத் தொழிற்சாலைக்கும் சத்தியம் தேவைப்படுகின்றது. சத்தியம் என்ற சொல்லைக் கருத்தாக வைத்த சினிமாப் பாடல்கள் பல உள்ளன. கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள் ஆகியவற்றின் கருப்பொருளாகவும் சத்தியம் உள்ளது.

ஏன் மகாத்மா காந்தி கூடத் தனது வாழ்க்கை வரலாற்றை என் சத்தியசோதனை எனும் பெயரில் தான் எழுதி உள்ளார்.

எமது புராண வரலாற்றுக் கதையான சத்தியவான் சாவித்திரியில் கூட நாயகனது பெயர் சத்திய என்ற அடையாளத்துடன் தான் வருகிறது.

நாடுகளின் நிர்வாகக் கட்டமைப்பில் ஆவணம் ஒன்றில் திருத்தத்தைச் செய்வதற்கு ஒருவர் சத்தியக் கூற்று அல்லது சத்தியக் கடதாசியைச் சமாதான நீதிவான் முன்பாக முத்திரையின் மேல் ஒப்பமிடல் வேண்டும். சமாதான நீதிவான் அதனைச் சான்றுப்படுத்தும் போது அது சட்ட வலுவுடையதாக மாறுகிறது.

மேலை நாடுகளில் புதிதாகக் குடியுரிமை பெறும் நம்மவர்கள் பைபிளை வைத்து, பகவத் கீதையை வைத்து, குரானை வைத்து, திருக்குறளை வைத்து உறுதிமொழி எடுக்கிறார்கள். திருமணங்கள், நீதிமன்றங்களில்கூட இப்படியான உறுதியேற்பு நடைபெறுகின்றது.

கனடாவில் 2011-ம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் திருக்குறளை வைத்து உறுதிமொழி எடுத்தார்.

உலகெங்கும் இந்தச் சத்தியக் கடதாசி முறை உள்ளது. இதிலிருந்து தெரிகிறது மொழிகள் வேறுபட்டாலும், பண்பாடுகள் மாறுபட்டாலும் சத்தியம் என்பது மனிதர்கள் யாவருக்கும் பொதுவானது.


ஆங்கிலம் உட்பட பிறமொழிச் சொற்களில் சத்தியம் தொடர்பான சொற்களும் பழமொழிகளும் நிறையவே உள்ளன.

நீதிமன்றில் வழக்கு நடைபெறும் போது சாட்சி சொல்பவர் கூண்டில் ஏறிச் சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும். உத்தியோகம் மட்டுமல்ல அரச பதவி, மக்கள் உறுப்பினர் பதவி யாவற்றையும் ஏற்றுக் கொள்வதற்குச் சத்தியப் பிரமாணம் செய்யும் நடைமுறை உள்ளது. இங்கும் சத்தியம் எனும் விடயம் முதன்மை பெறுகிறது.

சத்தியமான வாழ்க்கையைச் சாத்தியமாக்கினால் அறப்பண்புகளும் அமைதியும் நிறைந்த உலகமொன்றும் எம்முன்னே மலரும்.



thabendran.v@thaiveedu.com





# பெண்கள் உலகக்கிண்ணக் காற்பந்துப் போட்டி

– குரு அரவிந்தன்

பெண்களுக்கான பீபா உலகக்கிண்ண ஒன்பதாவது காற்பந்தாட்டப் போட்டி 2023 யூலை மாதம் 20-ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றது. ஆகஸ்ட் மாதம் 20-ஆம் திகதி இந்தப் போட்டி-யின் இறுதியாட்டம் சிட்னியில் நடைபெற்றது. 1991-ஆம் ஆண்டு, அதாவது 32 வருடங்களுக்கு முன் இந்தப் பெண்களுக்கான காற்பந்தாட்ட நிறுவனம் ஆரம்பிக்கப் பட்டது. இதுவரை பெண்களுக்கான காற்பந்தாட்டத்தில் எட்டுப் போட்டிகள் நடைபெற்றிருக்கின்றன. இம்முறை இந்தப் போட்டிகள் அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் நடைபெற்றன. அது மட்டுமல்லாமல் இம்முறை முதல்தடவையாக இரண்டு நாடுகளில் இந்தப் போட்டிகள் நடைபெற்றிருக்கின்றன. இந்த போட்டியில் 32 காற்பந்தாட்ட அணிகள் எட்டுப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பங்குபற்றின.

இந்த எட்டுப் பிரிவுகளில், குழு A-யில் நியூசிலாந்து, நோர்வே, பிலிப்பைன்ஸ், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளும், குழு B-யில் அவுஸ்ரேலியா, கனடா, நைஜீரியா, அயர்லாந்து குடியரசு ஆகிய நாடுகளும், குழு C-யில் கோஸ்ராரிக்கா, ஜப்பான், ஸ்பெயின், சாம்பியா ஆகிய நாடுகளும், குழு D-யில் சீனா, டென்மார்க், இங்கிலாந்து, ஹெயிட்டி ஆகிய நாடுகளும், குழு E-யில் நெதர்லாந்து, போத்துக்கல், அமெரிக்கா, வியட்நாம் ஆகிய நாடுகளும், குழு F-இல் பிரேசில், பிரான்ஸ், ஜமேக்கா, பனாமா ஆகிய நாடுகளும், குழு G-யில் ஆஜென்ரீனா, இத்தாலி, தென்னாபிரிக்கா, சுவீடன் ஆகிய நாடுகளும், குழு H-இல் கொலம்பியா, ஜெர்மனி, தென்கொரியா, மொறக்கோ ஆகிய நாடுகளும் இடம்பெற்றிருந்தன.

கடைசியாக 2019-ஆம் ஆண்டு பிரான்ஸில் நடந்த பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றிக் கிண்ணத்தை அமெரிக்கா பெற்றுக்கொண்டது. இதேபோல 4 தடவைகள் 1991, 1999, 2015, 2019 அமெரிக்கா பெண்களுக்கான உதைபந்தாட்ட வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. மற்றும் 1995 நோர்வே, ஜெர்மனி 2003, 2007 இரண்டு தடவைகளும், 2011 ஜப்பான் ஆகிய நாடுகள் தலா ஒவ்வொரு தடவையும் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டன. சீனாவிலும் அமெரிக்காவிலும் தலா இரண்டு தடவைகள் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, சுவீடன் ஆகிய நாடுகளில் தலா ஒரு தடவை இந்தப் போட்டிகள் இடம்பெற்றன.

இம்முறை சிட்னியில் நடந்த போட்டியில் கொலம்பியாவுடன் தென்கொரியா மோதிக்கொண்டது. இந்த மோதலில் கொலம்பியா வெற்றி பெற்றது. இதில் அறிமுக வீராங்கனையான 18 வயதான லிண்டா காய்ஸிடோ ஒரு கோல் அடித்ததன் மூலம் இம்முறை கோலடித்த வயது குறைந்த முதலாவது வீராங்கனை என்ற பெயரைப் பெற்றுக் கொண்டார். தென்கொரிய அணிக்காக விளையாடும் 16 வயதான கேசி பேயர் இளம் வயதில் விளையாடும் வீராங்கனை என்ற பெயரைத் தட்டிக் கொண்டார்.

இதுவரை நடந்த பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிச் சுற்றில் 1991-ஆம் ஆண்டு நோர்வே, 1995-ஆம் ஆண்டு ஜெர்மனி, 1999-ஆம் ஆண்டு சீனா, 2003-ஆம் ஆண்டு சுவீடன், 2007-ஆம் ஆண்டு பிரேஸில், 2011-ஆம் ஆண்டு அமெரிக்கா, 2015-ஆம் ஆண்டு ஜப்பான், 2019-ஆம் ஆண்டு நெதர்லாந்து ஆகிய நாடுகள் இறுதிச் சுற்றுவரை போட்டியிட்டன.

அமெரிக்கா இதுவரை 138 கோல்களும், ஜெர்மனி 121 கோல்க-ளும், நோர்வே 93 கோல்களும் போட்டிருக்கின்றன. தனிப்பட்ட முறையில் பிரேஸிலைச் சேர்ந்த மாற்ரா 17 கோல்கள் போட்டிருந்தார். ஜெர்மனியைச் சேர்ந்த பெர்ஜிட் பிரின்ஸ் 14 கோல்களும், அமெரிக்காவைச் சேர்ந்த அபி வாம்பச் 14 கோல்களையும் போட்டிருந்தனர்.

1991-ஆம் ஆண்டில் இருந்து போட்டிகள் நடந்த எட்டுத் தடவையும் கனடா பங்குபற்றியிருந்தது. 2023-ஆம் ஆண்டு போட்டியில் குழு 'B'-யில் இடம்பெற்ற கனடா நைஜீரியாவுடன் யூலை 20-ஆம் திகதி நடந்த போட்டியில் கோல்கள் எதுவும் போடாமல் கனடாவும் நைஜீரியாவும் சமநிலையில் இருந்தன. அயர்லாந்துடன் யூலை 26-ஆம் திகதி நடந்த போட்டியில் 2-1 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது. ஆனால் 2003-ஆம் ஆண்டு நடந்த போட்டிகளின் போது, நாலாவது இடத்தில் இருந்த கனடா பெண்கள் குழு இம்முறை விரைவாகவே வெளியேற்றப்பட்டது. ஒலிம்பிக் உதைபந்தாட்டத்தில் சாதனை படைத்துப் பெருமை தேடித்தந்த கனடிய பெண்கள் குழு, அவுஸ்ரேலியாவுடன் நடந்த பீபா போட்டியில் 4-0 என்று கோல்களின் அடிப்படையில் தோற்றுப் போனது. கனடாவைச் சேர்ந்த வீராங்கனைகளில் பந்தைத் தடுத்தவர்களும் சரி, கோல்போட முயற்சி செய்தவர்களும் சரி ஏனோ தானோ என்று விளையாடியது போலவே ரசிகர்களின் பார்வையில் தெரிந்தது.



பெண்கள் உதைபந்தாட்டத்தின் லீக் சுற்றுக்கள் முடிவடைந்த நிலையில் நொக்கவுட் சுற்றுக்காக ஸ்பெயின், நெதர்லாந்து, சுவிற்சர்லாந்து, ஜப்பான், நோர்வே, தென்னாபிரிக்கா, அமெரிக்கா, சுவீடன், நைஜீரியா, இங்கிலாந்து, ஜமேக்கா, கொலம்பியா, டென்மார்க், பிரான்ஸ், மொரக்கோ, அவுஸ்ரேலியா ஆகிய 16 நாடுகளின் உதைபந்தாட்ட அணிகள் தெரிவாகியிருந்தன. இதில் சுவிற்சர்லாந்து அணியும், ஸ்பெயின் அணியும் காலிறுதிச் சுற்றுக்குப் போட்டி போட்டதில், ஸ்பெயின் அணி 5-1 என்ற கோல் அடிப்படையில் காலிறுதிக்குத் தெரிவானது. யப்பானுக்கும் நோர்வேக்கும் நடந்த போட்டியில் 3-1 என்ற அடிப்படையில் ஜப்பான் தெரிவானது. நெதர்லாந்திற்கும் தென்னாபிரிக்காவுக்கும் நடந்த போட்டியில் 2-0 என்ற அடிப்படையில் நெதர்லாந்து தெரிவானது. அவுஸ்ரேலியாவும் டென்மார்க்கும் போட்டி போட்டதில் 2-0 என்ற அடிப்படையில் அவுஸ்ரேலியா தெரிவானது. இங்கிலாந்திற்கும், நைஜீரியாவுக்கும் நடந்த போட்டியில் 4-2 என்ற பனால்டி கோல் மூலம் இங்கிலாந்து தெரிவானது. கொலம்பியாவுக்கும் ஜமேக்காவுக்கும் நடந்த போட்டியில் கொலம்பியா 1-0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. பிரான்சுக்கும் மொறக்கோவுக்கும் நடந்த போட்டியில் 4-0 என்ற அடிப்படையில் பிரான்ஸ் வெற்றி பெற்றது.

சுவீடனும் அமெரிக்காவும் போட்டி போட்டதில் சுவீடன் தெரிவா-னது. 2019-ஆம் ஆண்டு வெற்றிபெற்ற நடப்பு வெற்றியாளரான அமெரிக்கா கடைசிநேரத்தில் சுவீடனிடம் தோற்றுப்போனது. போட்டியின் போது இரண்டு பக்கமும் கோல்கள் போடாததால், சமநிலை ஏற்பட்டது. சமநிலை தவிர்ப்புப் போட்டியில் பனால்டி கோல் மூலம் 5-4 என்ற கோல்களின் அடிப்படையில் சுவீடன் அமெரிக்காவை வெற்றி பெற்றது. நான்கு தடவைகள் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்ற அமெரிக்கா இம்முறை 16-வது சுற்றிலேயே வெளியேற்றப்பட்டது.

தொடர்ச்சியாக நடந்த கடந்த எட்டுப் போட்டிகளில் அமெரிக்கா நான்கு தடவை வெற்றியாளராகவும், ஒரு தடவை இரண்டாவது இடத்திலும், மூன்று தடவை மூன்றாவது இடத்திலும் இருந்திருக்கிறது. போட்டி போட்ட 32 குழுக்களில், 16-வது சுற்றில் ஸ்பெயின், ஜப்பான், நெதர்லாந்து, சுவீடன், இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, கொலம்பியா, பிரான்ஸ் ஆகிய எட்டு நாடுகள் காலிறுதி ஆட்டத்திற்குத் தெரிவாகியிருந்தன. காலிறுதி ஆட்டத்திற்கு ஐரோப்பாவில் இருந்து பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்பெயின், சுவீடன், நெதர்லாந்து ஆகிய ஐந்து நாடுகளும், ஆசியாவில் இருந்து யப்பானும், தென்னமெரிக்காவில் இருந்து கொலம்பியாவும் மற்றும் அவுஸ்ரேலியாவும் தெரிவாகியிருந்தன. காலிறுதிக்கு ஆபிரிக்க நாடுகள் எவையும் தெரிவாகவில்லை.

நைஜீரியாவுக்கும் இங்கிலாந்துக்கும் நடந்த போட்டியில் கீழே விழுந்த நைஜீரிய வீராங்கனையான மிஸேல் அலோஸியை வேண்டுமென்றே ஏறி மிதித்ததற்காக இங்கிலாந்து அணியைச் சேர்ந்த லோறன்ஸ் ஜேம்ஸ் என்ற வீராங்கனை சிவப்பு அட்டை கொடுக்கப்பட்டு மைதானத்தை விட்டு வெளியேற்றப்பட்டார். அடுத்துவரும் இரண்டு போட்டிகளில் பங்குபற்றக் கூடாது என்றும் அவர் தண்டிக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து காலிறுதி ஆட்டம் தொடங்கியது. நியூசிலாந்தில் நடந்த முதலாவது போட்டியில் ஸ்பெயின் நெதர்லாந்துடன் ஆகஸ்ட் மாதம் 10-ஆம் திகதி மோதிக் கொண்டது, இதில் பனால்டி மூலம் ஸ்பெயின் ஒரு கோல் போட்டு முன்னணியில் நின்றது. ஆனால் 90-வது நிமிடத்தில் நெதர்லாந்து ஒரு கோலைப் போட்டு அதனைச் சமநிலைப்படுத்தியது. மேலதிக நேரம் கொடுக்கப்பட்ட போது ஸ்பெயினின் 19 வயதான வீராங்கனை சல்மா பாரலுலோ ஒரு கோலைப் போட்டதன் மூலம் ஸ்பெயினின் வெற்றிக்கு வழிவகுத்தார். சுமார் 32,000 ரசிகர்கள் நேரடியாகச் சென்று இந்தப் போட்டியைப் பார்த்தார்கள். இந்தப் போட்டி நடப்பதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன் அப்பகுதியில் 5.6 நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தமையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

ஆகஸ்ட் 11-ஆம் திகதி ஜப்பான் சுவீடனுடன் மோதிக் கொண்டது. இதில் சுவீடன் 2-1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. பனால்டி மூலம் சுவீடன் இரண்டாவது கோலைப் போட்டது. 2011-ஆம் ஆண்டு வெற்றிக் கிண்ணத்தைப் பெற்ற ஜப்பான் இம்முறை காலிறுதி ஆட்டத்தில் வெளியேற்றப்




பட்டது.

ஆகஸ்ட் 12-ஆம் திகதி இங்கிலாந்து கொலம்பியாவுடன் மோதிக்கொண்டது. இதில் இங்கிலாந்து 2-1 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்திற்குத் தெரிவானது. ஆகஸ்ட் 12-ஆம் திகதி நடந்த இன்னுமொரு போட்டியில் அவுஸ்ரேலியா பிரான்ஸ்சுடன் மோதிக் கொண்டது. இதில் இரண்டு நாடுகளும் எந்த ஒரு கோலும் போடாமல் சமநிலையில் நின்றன. அதைத் தொடர்ந்து பனால்டி மூலம் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்பட்டது. அதில் 8-7 என்ற அடிப்படையில் அவுஸ்ரேலியா வெற்றி பெற்றது.

காலிறுதி ஆட்டத்தில் சுவீடன், ஸ்பெயின், அவுஸ்ரேலியா, இங்கிலாந்து ஆகிய நான்கு நாடுகளும் அரையிறுதி ஆட்டத் திற்குத் தெரிவாகியிருந்தன. அவுஸ்ரேலிய அணி அரையிறுதி ஆட்டத்திற்குத் தெரிவாவது இதுவே முதல்தட வையாகும். இதில் ஒரு குழுவில் இருந்து சுவீடனும் ஸ்பெயினும் 15-ஆம் திகதி மோதிக்கெண்டன. இந்தப் போட்டியில் 2-1 என்ற அடிப்படையில் ஸ்பெயின் இறுதியாட் டத்திற்குத் தெரிவாகியிருந்தது. இந்தப் போட்டியை 75,000-இற்கு மேற்பட்ட பார்வையாளர்கள் நேரடியாகப் பார்வையிட் டனர்.

மறு குழுவிலிருந்து அவுஸ்ரேலியாவும் இங்கிலாந்தும் 16-ஆம் திகதி மோதிக்கொண்டன. இதில் இங்கிலாந்து 3-1 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட் டிக்குத் தெரிவாகியிருந்தது. முதற்தடவையாக இங்கி லாந்தும், ஸ்பெயினும் இந்த இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற் றிருந்தன. 76,000 பார்வையாளர்கள் இந்தப் போட்டியை நேர டியாகப் பார்த்தனர். மூன்றாவது இடத்திற்கான போட்டி 19-ஆம் திகதி நடைபெற்றது. இதில் சுவீடனும் அவுஸ்ரேலி யாவும் போட்டியிட்டதில் சுவீடன் 2-0 என்ற கோல்களைப் போட்டு மூன்றாவது இடத்தைப் பெற்று, வெண்கலப் பதக் கத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இறுதிச் சுற்றுக்கான போட்டி 20-ஆம் திகதி நடைபெற்றது. சிட்னியில் நடந்த இந்தப் போட்டியில் ஸ்பெயினும் இங்கி லாந்தும் போட்டிபோட்டன. ஸ்பெயின் ஒரு கோல் போட்டதன் மூலம் 1-0 என்ற கோல் அடிப்படையில் முதலிடத்தைப் பெற்று விருதைத் தனதாக்கிக் கொண்டது. ஸ்பெயின் அடித்த பனால்ட்டியை இங்கிலாந்தின் கோலி மேரி ஏர்ப்ஸ் (Mary Earps) மிகவும் லாவகமாகப் பிடித்ததால் பலராலும் பாராட்டப்பட்டார். இவருக்குத் 'தங்கக் கையுறை விருது' கிடைத்தது. சிறந்த இளம் வீராங்கனைக்கான விருதை ஸ்பெயினைச் சேர்ந்த சல்மா பாரலுலோவும் (Salma Paral-luelo), 'தங்கப் பந்து விருதை' ஐரானா பொன்மற்ரியும் (Ai-tana Bonmati) பெற்றுக்கொண்டனர். முதல் தடவையாக ஸ்பெயின் இந்த பீபா கிண்ணத்தைப் பெற்று, வெற்றிக் கிண் ணத்தைப் பெற்ற ஐந்தாவது பெண்கள் அணி என்ற சாதனையை நிலைநாட்டியது.

போட்டிகளில் பங்குபற்றிய வீராங்கனைகள் எல்லோருடைய சீருடையிலும் 'உதைபந்தாட்டம் உலகை ஐக்கியப் படுத்து கின்றது' என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு உண்மையுமிருந்தது. இன, மத, நிற, மொழி போன்ற எந்தவித வேறுபாடும் இல்லாமல் எல்லா நாடுகளும் ஒரு மைதா னத்தில் ஒற்றுமையாக விளையாடுவதற்கு இது போன்ற போட்டிகள் வழிவகுக்கின்றன. வெற்றிபெற்ற அணியில் விளையாடிய வீராங்கனைகளுக்குத் தலா 270,000 டொலர்கள் அன்பளிப்பாகக் கிடைக்கும், இரண்டாவதாக வந்த அணியின் வீராங்கனைகளுக்குத் தலா 195,000 டொலர்கள் கிடைக்கும். இந்தப் போட்டிகளில் பயன்படுத்தப் பட்ட பந்துகள் 'அடிடாஸ்' நிறுவனத்தால் வடிவமைக்கப் பட்டன.

மொராக்கோ அணியைச் சேர்ந்த 25 வயதான நௌகைலா பென்ஸினா என்ற வீராங்கனை தென்கொரியாவுக்கு எதிரான போட்டியில் அவர்களது பாரம்பரிய வழக்கப்படி முதன் முதலாகத் தலைக்கு ஹிஜாப் முக்காடு போட்டபடி விளையா டியது குறிப்பிடத்தக்கது. ஒருபால் பெண் சேர்க்கையாளர்கள் அதிகமாகக் கலந்துகொண்டு விளையாடிய பெண்கள் உதைபந்தாட்டப் போட்டியாக இது அமைந்திருந்தது என்று பிரபல ஊடகம் ஒன்று குறிப்பிட்டிருந்தது.

*உசாத்துணை:*

- https://www.fifa.com/tournaments/womens/womensworldcup



kuruaravindan@thaiveedu.com



# திரையில் இராமாயணம்

**- ஓவியர் ஜீவா**

இந்தியத் திரைப்படங்களின் ஆதார கதையமைப்புகளில் இராமாயணமும் மகாபாரதமும் பெரும்பங்கு வகிக்கின்றன. இதில் வந்த காட்சிகளையும் பாத்திரங்களையும் வைத்தே நிறையத் திரைக்கதைகள் உருவாக்கப்பட்டன என்பது வரலாறு. இராமனை முக்கிய பாத்திரத்தில் சில உருவாக்கின என்றால் இராவணனுக்கும் ஏராளமான திரைப்படங்கள் உருவாகின. இராவணன் என்றும் இலங்கேஸ்வரன் என்றும் பூகைலாஸ் என்றும் நிறையத் திரைப்படங்கள். இராமராக நடித்துப் புகழ்பெற்ற என்.டி. ராமராவ் இராவணனாகவும் நடித்துச் சாதனை புரிந்தது வரலாறு. மேடை நாடகங்களிலும் இராமாயணத்திற்கு ஒரு முக்கிய பங்கு உண்டு. நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை அரங்கேற்றிய இராமாயணம் நாடகத்தை அறுபதுகளில் ஒரு சிறுவனாகப் பார்த்த நினைவுகள் உண்டு. கீமாயணம் என்று எம்.ஆர். ராதாவும் இலங்கேஸ்வரன் என்று ஆர்.எஸ். மனோகரும் நாடகங்களை நடத்தினர்.

1958-ல் வெளியான சம்பூர்ண இராமாயணம் கே. சோமு - ஏ.பி. நாகராஜன் கூட்டணியில் உருவான கருப்பு வெள்ளைத் திரைப்படம். கொஞ்சம் நீளமான படம் என்றாலும் மக்கள் மனதைக் கவர்ந்த திரைப்படம். ராமராவ் இராமனாகவும், சிவாஜிகணேசன் பரதனாகவும், நரசிம்மபாரதி லக்ஷ்மணனாகவும், மோகன் சத்ருக்னன் ஆகவும், பத்மினி சீதையாகவும், டி.கே. பகவதி இராவணனாகவும் அற்புதமாக நடித்த திரைப்படம். இராவணனை ஒரு பயங்கர அரக்கனாகச் சித்தரிக்காமல் ஒரு இசைவாணனாகச் சித்தரித்தது இந்தத் திரைப்படம். இராமனுக்குப் பாடல்கள் இருந்தனவோ தெரியவில்லை. இராவணனுக்குச் சிதம்பரம் ஜெயராமன் குரலில் அற்புதமான பாடல்கள் அமைந்திருந்தன. நிறையக் காட்சிகளைப் பாடல்களாலேயே நகர்த்தியிருந்தது ஒரு நல்ல உத்தி. மக்களைக் கவர்ந்த இந்தத் திரைப்படம் பெரும் வெற்றியையும் பெற்றது.

என்.டி. ராமராவ் கிருஷ்ணர், இராமர் வேடங்களுக்கே பொருத்தமானவர் போல ஏராளமான திரைப்படங்களில் உடல் முழுக்க நீலச் சாயம் பூசி வண்ணப்படங்களில் தோன்றி நடிக்கலானார். தேவுடு என்று அவரை ஆந்திர மக்கள் வணங்கினர் என்பது மிகையான செய்தியல்ல. அவர் நடித்த லவகுசா தமிழிலும் பெரும் வெற்றி பெற்ற வண்ணப்படம். இராமன் ஒரு தெய்வம் என்பதைவிட ஆசாபாசங்கள் மிக்க ஒரு மனிதனாகக் காட்டப்பட்ட திரைப்படம் இது. அந்த ராமராவ் யுகத்தில் ஓவியரும் இயக்குனருமான பாபு இயக்கத்தில் ஒரு சம்பூர்ண இராமாயணம் வண்ணத்தில் 1971-ல் வெளிவந்தது. இந்தத் தெலுங்குப் படத்துக்கும் கே.வி.-மகாதேவன்தான் இசை. ஆனால் ராமராவ்க்கு பதில் சோபன் பாபு நடித்திருந்தார். பாபுவின் கலைத்திறன் படம் முழுவதும் விரவி நின்றது. கும்பகர்ணனை தூக்கத்திலிருந்து எழுப்பும்



காட்சி இன்றும் மனதில் நிற்கிறது. ஹிந்தியில் ஹோமி வாடியா, பாபுபாய் மிஸ்திரி, ரவிகாந்த் நகாய்ப் போன்ற தந்திரக் காட்சி விற்பன்னர்கள் இராமாயணத்திலிருந்து நிறையத் திரைக்கதைகளை உருவாக்கினார்கள். பெரும்பாலும் அனுமன்தான் ஹீரோ. 'அனுமான் பாதாள விஜயம்' என்ற திரைப்படம் நினைவில் இருக்கிறது.

இயக்குனர் பாபுவின் 'முத்தியால முக்கு' உத்தர இராமாயணத்தைத் தழுவி எழுதப்பட்ட சமூகக்கதை. அவருடைய இறுதிப் படைப்பான 'ஸ்ரீ இராமராஜ்யம்' ஓர் அற்புதக் காட்சியனுபவம். என்.டி. ராமராவின் மகன் நந்தமூரி பாலகி-



ருஷ்ணா இராமனாகவும், நயன்தாரா சீதையாகவும் நடித்த இந்தத் திரைப்படம் 'லவகுசாவின்' பிரதியாக்கம்தான். பாபு என்ற மாபெரும் கலைஞன் ஒவ்வொரு சட்டகத்தையும் அழகுற வடித்திருந்தார். கணினி கிராபிக்ஸை அளவோடு, ஆனால் சிறப்பாகப் பயன்படுத்தி, காடு, காட்டில் வாழும் மான்கள், மயில்கள், அரண்மனை எல்லாவற்றையும் பின்னணியில் வெகு இயல்பாகக் கொண்டு வந்தார். நயன்தாரா சீதையாக இவ்வளவு சிறப்பாக நடிக்க முடியுமா என்ற சந்தேகங்களுக்கு அவருடைய சிறப்பான நடிப்பின் மூலம் பதிலளித்தார். இளையராஜா இசை படத்துக்கு மேலும் சிறப்புச் சேர்த்தது.

இராமர் என்றால் முழுவதும் சவரம் செய்து மழ மழ என்று முகத்தை வைத்துக்கொண்டு நீல வண்ணத்தில் தோய்த்தெடுத்த ஒரு உருவத்தைக் கண்டு வாழ்ந்த திரைப்பட ரசிகர்களுக்குத் தன் 'காஞ்சன சீதா' மூலம் ஒரு அதிர்ச்சியைத் தந்தார் மலையாள இயக்குனர் அரவிந்தன். வால்மீகி இராமாயணத்தில் எழுதப்பட்ட லவ குசா, அஸ்வமேத யாகம் போன்ற பகுதிகள் இந்த படத்தில் இருந்தன. சீதையாக எந்த உருவமும் காட்டப்படவில்லை. மாறாக மரங்களின் அசைவுகள், வனத்தின் ஒலிகள், அசைவுகள் மூலமாக இயற்கையைச் சீதையாக உருவகப்படுத்தியிருந்தார் இயக்குனர். இராம இலட்சுமணர்களாக நடித்தவர்கள் உண்மையிலேயே ஆதிவாசிகள். இறுக்கிக் கட்டப்பட்ட ஜடாமுடி, கரிய மேனி, மீசை தாடி என இராமர் காட்சி தந்தார். சமீபத்தில் மறைந்த ஓவியர் நம்பூதிரியின் கலை இயக்கம், ஹிந்துஸ்தானி இசையில் புகழ் பெற்ற மேதை ராஜீவ் தாரநாத்தின் பின்னணி இசை, ஷாஜி கருணின் ஒளிப்பதிவு என்று இந்தப் படத்தின் தரம் மிக உயர்ந்தது. கலைப்பட ரசிகர்களுக்கு மட்டுமே விருந்தானது!

நாட்டில் வண்ணத் தொலைக்காட்சி பிரபலமடைந்த காலத்தில் இருந்த ஒரே சேனலான தூர்தர்ஷன் பல தொடர்களை அறிமுகப்படுத்தியது. எண்பதுகளில் பிரபலமான 'ராமாயண்' அதில் மிக முக்கியமானது. ராமானந்த சாகர் என்ற புகழ் பெற்ற இந்தி இயக்குனர் இந்தத் தொடரைத் தயாரித்து இயக்கினார். பெரும் வெற்றிபெற்ற இந்தத் தொடர் அந்த காலத்தில் ஞாயிறு காலை ஒளிபரப்பப்பட்டபோது சாலையில் மக்கள் கூட்டமே இருக்காது என்று சொல்வார்கள். அனைவரும் அறிந்த ஒரு கதையைப் பார்க்க, மக்கள் திரண்டது இந்தத் தொடருக்குதான். நல்ல தயாரிப்பு! அருண் கோவில், தீபிகா போன்றவர்களை இராமசீதா அளவுக்கு மக்கள் வழிபடத்தொடங்கிவிட்டனர். அரவிந்த் திரிவேதி இராவணனாக நடிக்க, புகழ்பெற்ற மல்யுத்த வீரரும், நடிகருமான தாரா சிங் அனுமனாக நடித்திருந்தார். எந்தச் சேனலில் மறு வெளியீடு செய்தாலும் இன்றும் பெரும் வரவேற்புப் பெறக்கூடிய இடத்தில் இருப்பது இந்தத் தொடரே!

இந்திய ஜப்பான் கூட்டுறவில் ஒரு இராமாயணமும் வந்திருக்கிறது. முழுநீள அனிமேஷன் திரைப்படமாக ஆங்கிலம், இந்தி போன்ற மொழிகளிலும் வெளியிடப்பட்டது. பிரபல இசையமைப்பாளர் வன்ராஜ் பாட்டியா இசையமைத்திருந்தார். அம்ரிஷ்புரி போன்ற நடிகர்கள் குரல் கொடுத்திருந்தனர்.

சமீபத்தில் வெளிவந்த ஒரு புதிய திரைப்படம் 'ஆதிபுருஷ்'. கணினியின் அனைத்து சாத்தியங்களையும் பயன்படுத்தி 3டி வெளியீடாகத் திரையரங்குகளில் வெளியானது. ஆனால் பெரிய வரவேற்பு இல்லாமல் போனது. பாகுபலி பெற்ற வெற்றியினால் அதன் கதாநாயகன் பிரபாஸ் இராமனாக நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டார். என்ன காரணத்தினாலோ நாம் அறிந்த இராமன், சீதை, லக்ஷ்மணன், அனுமன் போன்ற பெயர்கள் எல்லாம் சொல்லப்படாமல், ராகவ், ஜானகி, சேஷ், பஜ்ரங் என்றே படம் முழுவதும் அழைக்கப்பட்டனர். ஆனால் இராவணன் குடும்பத்து ஆட்களுக்கெல்லாம் அதே பெயர்தான். இதன் லாஜிக் என்னவென்று புரிய

வில்லை. பொதுவாக நமக்குத் தெரிந்த இராமாயண பிம்பங்கள், இதுவரை வரையப்பட்ட ஓவியங்களில் இருந்தும், முன்னர் வந்த நாடகங்களில் இருந்தும் எடுக்கப்பட்டவையே. கட்டான உடலமைப்புக் கொண்ட இராம, லட்சுமணர்கள், அழகியான சீதா, புஜபல பராக்கிரமங்களும் கலையம்சமும் கொண்ட இராவணன், ஒரே மாதிரி உருவங்கள் கொண்ட வானரசேனை, கட்டுமஸ்தான அரக்கர்படை, இந்தியப் பண்டையக் கட்டடக்கலையைப் பிரதிபலிக்கும் அரங்க அமைப்புகள் மற்றும் உடை அலங்காரங்கள், யுத்தகளம் என்றெல்லாம் பழகிப்போன கண்களுக்கு இந்தத் திரைப்படம் தந்த பெரிய மாற்றம் சிறிது அதிர்ச்சி! இராமன் மீசையுடன் சிவந்த மேனி, பரந்துவிரிந்த மார்புகள், பட்டும் பருத்தியும் கலந்த ஆடைகள், பெரும்பாலான காட்சிகளில் பனியன்களும் அணிந்து, உலோகத்தால் செய்யப்பட்ட, நவீன ஆர்ச்சர்கள் பயன்படுத்தும் வில் அம்பு சகிதம் தோற்றமளிக்கிறார். ஜீன்ஸ் மட்டும் அணியவில்லை! படம் முழுவதும் ஒரே முக பாவம். தெய்வாம்சம் பொருந்திய மனிதனின் எந்தப் பாவங்களும் இல்லை. இந்த நேரத்தில் நாம் என்.டி. ராமராவை நினைத்தே ஆகவேண்டும்!

அழகு மட்டும் பொருந்திய ஒரு பெண்ணாகச் சீதையைக் காண்கிறோம். வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது. இராவணனாகச் ஷர்மிளா டாகுர் பெற்றெடுத்த சயீப் அலிகான். நன்கு வெட்டப்பட்ட நவீன ஹேர்கட், ஒழுங்குபடுத்தப்பட்ட தாடி சகிதம் இவரை அந்தப் பாத்திரத்தில் கற்பனையே செய்யமுடியவில்லை. பண்பட்ட நடிகர்களான டி.கே. பகவதி, எஸ்.வி. ரங்காராவ் போன்ற நடிக மேதைகள் நடித்துக்காட்டிய வேடம். இதில் 10 தலைகளும் கழுத்துக்கு மேல் பல்வேறு முகபாவங்களுடன், சில காட்சிகளில் அலையாடிக் கொண்டிருக்கின்றன. இராவணன் அசாதாரண தோற்றத்துக்காக இவர்கள் மெனக்கெட்டது அவன் உயரத்திற்கு மட்டும். சுமார் பத்தடி உயரமுள்ள இராவணன், ஆறடி உயர இராமனுடன் மோதும் காட்சிகள், தந்திரக் காட்சிகளுக்கு நல்லதொரு உதாரணம். இராவணன் சம்பந்தப்பட்ட அனைத்தும், அவன் உடை, அரண்மனை, பூஜை அறை, கோட்டை கொத்தளங்கள், ஏன் சீதை சிறைப்பட்டிருக்கும் அசோகவனம்கூட ஆழ்ந்த சாம்பல் வண்ணத்தில் இருக்கின்றன. அவனது நெகட்டிவ் தன்மைகளைக் குறிக்க, இந்தக் கொடுமையான வண்ணத் தேர்வை செய்திருக்கிறார்கள். வீணை என்ற பெயரில் அவன் வாசிக்கும் அந்த இசைக்கருவிக்கும் இந்த வண்ணம்தான். எந்த இந்தியத்தன்மையும் இல்லாமல், நவீன கிராபிக்ஸ் நாவல்களில் காணப்படும் கோதிக் பாணியில் உயரமான கருப்புக் கட்டடங்களும் அங்கு நிறைந்திருக்கின்றன. அனுமன் வாலில் நெருப்புப் பற்றவைத்தவுடன், அந்தக் கட்டடங்கள் அழிவதைப் பார்ப்பதும் கூட ஒரு குரூர மகிழ்ச்சியை உண்டாக்கும் அளவுக்கு அந்தக் கட்டடங்கள் எரிச்சல் ஊட்டுகின்றன.

இதில் இராவணனுக்கு தான் ஒரு சிவபக்தன் என்று எப்போதாவதுதான் நினைவுக்கு வரும் போல. அந்தக் காட்சிகளில் நெற்றியில் திருநீறு தெரிகிறது. அவனது செல்லப்பிராணியும் வாகனமும், தலைகீழாய்த் தொங்கும் ஒரு இராட்சத வௌவால். யானைத் தொடையை நிகர்த்த அளவுள்ள இறைச்சித் துண்டங்களை அதற்கு ஊட்டி மகிழ்வது இராவணனின் பொழுதுபோக்கு. அரக்கர் படை என்பது எந்தக் கம்பீர பூத கணங்களும் இல்லாமல், வினோத ஜந்துக்களாய், ஆங்கிலப் படங்களில் வரும் ஏலியன்கள் போலக் காட்சியளிக்கின்றன. கிஷ்கிந்தாக் காண்டத்தை அழகாகக் காட்டியிருக்கிறார்கள். அதாவது அந்த நிலப்பரப்பை. மற்றபடி ஆப்



ரிக்காவுக்கே உரிய கொரில்லாக் குரங்குகள் இந்திய நிலப்பரப்பிலிருந்து இலங்கைக்குக் கற்களால் பாலம் கட்டிக் கடந்து வருகின்றனர்.

ஆக மொத்தத்தில் திரைப்படங்களின் தொழில்நுட்ப சாத்தியங்கள் வளர வளரத், தரமும் அழகும் குறைந்து வருகிறது என்பது மட்டும் கண்கூடாகத் தெரிகிறது. அதற்குத் திரையில் இராமாயணம் ஒரு உதாரணம்.



jeeva@thaiveedu.com




# இணைவு – பிளவு ஒப்பன்ஹைமர்

– ரதன்

ஓகஸ்ட் 06, 1945, ஓகஸ்ட் 09,1945 உலகமே மறக்கமுடியாத நாட்கள். சூரியன் உதயமாகி உச்சியை நோக்கி மெதுவாக நகர நேரம் 8.15. ஹிரோஷிமா நகரமே அதிர்ந்தது. அமெரிக்கா அணுகுண்டை ஹிரோஷிமா நகரின் மீது போட்டது. மூன்று நாட்களின் பின்னர் யுரகாமி பள்ளத்தாக்கின் வடமேற்கில் அமைந்துள்ள நாகசாகி நகரத்தின் மீது காலை 11.02-க்கு இரண்டாவது அணுகுண்டை வீசியது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் இறுதிக் கட்டத்திலேயே




இக்குண்டுகள் வீசப்பட்டன. ஜேர்மனியும், இத்தாலியும் யுத்தத்தில் தோல்வியடைந்த பின்னர் மூன்றாவது நாடாக இத்தாலி, ஜேர்மனியுடன் இணைந்து போரிட்ட யப்பானைப் போரை நிறுத்த அல்லது சரணடையச் செய்யவே இக்குண்டுகளை வீசியதாக அமெரிக்கா தெரிவித்திருந்தது. இன்றும் இவ் அணுகுண்டுகள் வீசப்படாமலேயே யப்பான் சரணடைந்திருக்கும் எனப் பல அரஷ்யல் அறிஞர்கள் கருதுகின்றார்கள். இதனை அமெரிக்கா நன்கறிந்திருந்தது. அப்படியாயின் ஏன் இந்தக் குண்டுகள் வீசப்பட்டன?

அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் மரணமான பின்னர், துணை ஜனாதிபதி ஹரி எஸ் ரூமன் அதிபராகச் ஏப்பிரல் 1945-ல் பதவியேற்கின்றார். இவர் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர். இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற காலத்தில் முழுமையாக ரூஸ்வெல்ட் அமெரிக்க அதிபராக இருந்துள்ளார். எனினும் போர் முடிவிற்கு வருவதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் இறந்துவிடுகின்றார். ரூஸ்வெல்ட்டின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட மிக முக்கியமான திட்டம் மன்காட்டன் திட்டம் (Manhattan Project). இதில் பிரிட்டனும் கனடாவும் அங்கம் வகித்தன. அணுகுண்டு தயாரிப்பதே இத்திட்டத்தின் ஒரே நோக்கமாகும். (கியூபெக் ஒப்பந்தம்).

1939-ல் அமெரிக்க விஞ்ஞானிகள் சிலர், (ஐரோப்பாவிலிருந்து தப்பிவந்து அமெரிக்காவில் தஞ்சம் புகுந்த விஞ்ஞானிகள்) ஜேர்மனி அணு ஆயுதத் தயாரிப்பில் இறங்கலாம் எனக்கருதினர். இவர்கள் அப்போதைய அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட்க்குக் கடிதம் ஒன்றை அனுப்பினார்கள். முதலில் யுரேனிய ஆலோசனை அமைப்பாகவே அமைக்கப்பட்டது. பின்னர் 1941 டிசம்பர் 6-இல் மன்ஹாட்டன் திட்டமாக மாற்றப்பட்டது. ஆரம்பத்தில் கொலாம்பியாப் பல்கலைக்கழகமே அதிகளவு ஆராய்ச்சி வேலைகளில் ஈடுபட்டது. கொலம்பியாப் பல்கலைக்கழகம், நியுயோர்க் நகரின் மையமான மன்ஹாட்டனில் அமைந்துள்ளது. இதனால் தான் அணு ஆயுதத் தயாரிப்புத் திட்டத்துக்கு மன்ஹாட்டன் திட்டமெனப் பெயரிடப்பட்டது. அமெரிக்கத் தொழில்நுட்பப் பிரிவு, பின்னர் விஞ்ஞானப் பிரிவு ஆகியவற்றின் கீழ் இத்திட்டம் செயற்பட்டது. பின்னர் போர்த் திணைக்களத்துக்கு மாற்றப்பட்டது. அப்போது இத்திட்டத்துக்குத் தலைவராகப் பிரிகேடியர் ஜெனரல் லெஸ்லி ஆர் குரோவ்ஸ் நியமிக்கப்பட்டார்.

ஜெனரல் குரோவ்ஸ், ஜெ.ரொபெர்ட் ஓப்பின்ஹைமரை அணுகினார். யூலியஸ் ரொபெர்ட் ஓப்பின்ஹைமர் அமெரிக்காவில் பிறந்து வளர்ந்த விஞ்ஞானி. இவர் Fita இயற்பியலில் விஞ்ஞானி (Quantum physics). இவரது தந்தையார் ஜெர்மனியிலிருந்து அமெரிக்காவிற்குப் புலம்பெயர்ந்த யூதராவார். பின்னர் துணி உற்பத்தி நிறுவனத்தின் அதிபரானார்.

ஹைமர் செல்வந்தச் சூழலிலேயே வளர்ந்தார். தனியார்ப் பாடசாலையில் கல்வி கற்றார். ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் கற்றார். அங்கு சரித்திரம், தத்துவவியல், கணிதம் போன்றவற்றிலும் தேர்ச்சி பெற்றார். உயர் கல்விகற்காகக் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்துக்குச் சென்றார். அதன் பின்னர் ஜேர்மனியில் உள்ள ஆய்வுப் பல்கலைக்கழகமான University of Gottingen-இல் கற்றார். இப்பல்கலைக்கழகம் இயற்பியல் ஆய்விற்கு அப்போது உலகப் பிரசித்தி



பெற்றது. அங்கு இவர் தத்துவவியல் கலாநிதிப்பட்டம் பெற்றார். Fita இயற்பியலில் இவர் அப்போது மிக முக்கிய விஞ்ஞானியாகக் கருதப்பட்டார். ஆனால் இவர் ஒரு கோட்பாட்டு விஞ்ஞானி. அதாவது இவர் கருதுகோள்களை முன்வைத்தார். இவை பரீட்சித்துப் பார்க்கப்படவில்லை. ஹைமர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்பட்ட போது ஒரு நிபந்தனையுடனேயே அனுமதி வழங்கப்பட்டது. ஆய்வுகூடப் பாடத்தில் சித்தியடைய வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. ஆய்வுகூடங்கள் இவரது விருப்புக்குரியதாகவிருக்கவில்லை. பல்கலைக்கழகத்தில் இவர் தனது விரிவுரையாளருக்கு அப்பிளில் நஞ்சு வைத்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார். அந்த அப்பிளை எவருமே சாப்பிடவில்லை. செல்வந்தப் பெற்றோரால் இவர் காப்பாற்றப்பட்டார். ஹைமர் தனக்கு நண்பர்களை விட இயற்பியலே முக்கியம் என்று கூறியுள்ளார். ஓப்பின் ஹைமர் என்ற விஞ்ஞானியின் உளவியல் எவ்வாறு இருந்தது என்பதற்கு இவை உதாரணங்களாகும்.

ஹைமர் அன்றைய கால கட்டத்தில் புத்திஜீவிகள் மத்தியில் கம்யூனிசம் பிரபல்யமாகவிருந்தது. அதற்குப் பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஹைமருக்கும் கம்யூனிசத்தின் மீது பிடிப்பிருந்தது. ஆனால் கம்யூனிசத்தைப் பின்பற்றியவரல்ல. ஐரோப்பிய புத்திஜீவிகளுடனும், விஞ்ஞானிகளுடனுமான தொடர்பிருந்தது. ஐரோப்பிய அரஷ்யல் கருத்தியலுடனான பரிச்சயமுமிருந்தது. அத்துடன் பகவத் கீதையுடன் நெருக்கமாகவிருந்தார். சமஸ்கிருதமும் தெரிந்திருந்தது.


இவரது புத்திஜீவித்தனம், இயற்பியல் அறிவு, ஐரோப்பியப் பிரபல்ய விஞ்ஞானிகளுடனான உறவு போன்றவை குரோவ்ஸ்க்கு, ஹைமர், மன்ஹாட்டன் திட்டத்துக்குத் தலைமை விஞ்ஞானியாகத் தேர்வு செய்யப் போதுமானதாகவிருந்தது. குரோவ்ஸ் இவரது தம்பி, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர். ஹைமர் கம்யூனிஸ்ட் கட்சி அனுதாபி எனத் தெரிந்திருந்தும் இவரைத் தேர்வு செய்தார். 1938-ம் ஆண்டிலிருந்து ஓப்பின் ஹைமரின் நடவடிக்கைகள் முற்றாக உளவு பார்க்கப்பட்டன. எனவே அமெரிக்க அமைப்பிற்கு ஓப்பின் ஹைமரின் திறமையும் தெரியும், அவரைக் கட்டுப்படுத்தவும் தெரியும்.

குரோவ்ஸின் மேற்பார்வையில் ஹைமர் அணுகுண்டுத் தயாரிப்புக்கான பரிசோதனைகளில் ஈடுபட்டார். அணுகுண்டுக்கான மிக முக்கிய மூலப்பொருளான யுரேனியம் 235-ஐப் பயன்படுத்தினார். இன்று மத்திய ஆபிரிக்க நாடான நைகரில் ஏற்பட்ட ஆட்சிக் கவிழ்ப்பும், ரஷ்ய சார்பு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதன் பின்னால் மேற்கு நாடுகள் கூச்சலிடுவதற்கு நைகரில் யுரேனியம் அதிகளவு உள்ளமையே காரணமாகும். நியூ மெக்சிக்கோவின் சன்ர பே நகருக்கு வடக்காக 35 மைல் தூரத்தில் உள்ள Los Alamos ஆய்வகத்திலேயே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு தான் அணுகுண்டு பரீட்சித்தும் பார்க்கப்பட்டது. 1945-ல் பரீட்சித்துப் பார்த்ததால் நியூ மெக்சிக்கோ மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு, இப்பொழுது தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி பைடன் நட்டஈடு வழங்க விருப்பம் தெரிவித்துள்ளார். உண்மையில் யப்பான் மாத்திரமல்ல, அமெரிக்காவின் சொந்த மக்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

1945 ஜுலை மாதம் 16-ஆந் திகதி நியூ மெக்சிக்கோவில் உள்ள Alamogordo air force base-இல் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. சுமார் 20 நாட்களின் பின்னர் யப்பானியர்கள் மீது

உயிரோட்டம் நடத்தப்பட்டது. இன்று வரை அமெரிக்க ஊட கங்கள் நியூ மெக்சிக்கோ மக்களுக்கு அப்போதைய அமெ ரிக்க அரசினால் பல சந்ததிகளுக்கு ஏற்பட்ட பாதிப்பைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. நியூ மெக்சிக்கோ மக்க ளுக்கு ஏற்பட்ட விளைவுகள் மறைக்கப்பட்டுள்ளன.

ஹைமரின் இளைய சகோதரன் பிரான்க்-கும் ஒரு விஞ்ஞானி.




துகள் இயற்பியல் விஞ்ஞானி particle physicist. ஹைமர் மன் ஹாட்டன் திட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பொழுதே, இவரது சகோதரன் பிரான்க் ஒரு இடதுசாரி எனவும், ஹைம ரும் இடதுசாரிக் கொள்கைகளுக்கு ஆதரவானவர் என்பதும் தெரிந்திருந்தது.

பிரான்க், House Un-American Activities Committee (HUAC) அமெரிக்கக் காங்கிரஸ் குழுவினரால் விசாரிக்கப்பட்டார். இவர் தானும் தனது மனைவியும் அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களாக மூன்றரை வருடங்கள் இருந்ததாக ஒப்புக்கொண்டார். இவரது கடவுச்சீட்டுப் பறிக்கப்பட்டது. 1949-லிருந்து 1957 வரை இவர் தனது சொத்துக்களை விற்றே வாழ்க்கைச் செலவுகளை ஈடுகட்டினார். 1957-ல் சிவப்பு அச் சம் சற்றுக் குறைந்த பின்னரே பாடசாலையொன்றில் இயற்பி யல் ஆசிரியராக வேலை பார்க்கத் தொடங்கினார்.

பிரான்க்-ஐப் போன்று ஹைமரும் பாதிக்கப்பட்டார். இவருக் கும் security clearance கிடைக்கவில்லை. அவர் இறந்த பின் னரே அவருக்கு அநீதி கிடைத்துள்ளது என அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.

கிறிஸ்ரோபர் நோலன் மிகப் பிரசித்தி பெற்ற புலிட்சர் விருது பெற்ற நாவலான American Prometheus: The Triumph and Tragedy of J. Robert Oppenheimer -ஐ படமாக எடுத்துள்ளார். 560 பக்கங்கள் கொண்ட நாவலை மூன்று மணிநேரப் பட மாக எடுத்தார். நூலை Kai Bird, Martin J. Sherwin இணைந்து எழுதியிருந்தனர்.

நோலன் தனது மற்றைய படங்களைப் போல் இப்படத்தின் திரைக்கதையையும் நொன்-லீனியர் முறையில் அமைத்திருந் தார். படம் கறுப்பு-வெள்ளை, நிறம் என மாறி மாறிப் பட மாக்கப்பட்டுள்ளது. ஹைமரின் முன்னோக்கு நிறத்தில் பட மாக்கியுள்ளார். பழமைவாத, பிடிவாதமான அரஷ்யல் கருத் தியலாளர்களின் மிக மோசமான கருத்தியலைக் கறுப்பு- வெள்ளையில் படமாக்கியுள்ளார். அணுக்களை பிளத்தல், அணுக் கூட்டினைவு. கூட்டினைப்பினால் தோற்றம் பெறும் குண்டு. ‘fission’ and ‘fusion’ பிளவு. இணைவு முறையின் ஊடாக காட்சிப்படுத்தலையும் வெளிப்படுத்தியுள்ளார்.

நோலன் ஹைமரின் வாழ்க்கையை மூன்று பிரிவுகளாகக் காட்டுகின்றார். இவை மூன்றும் முக்கியமானவை. முதலாவது அவரது இளமை மற்றும் வாலிபப் பருவம் (1930-1940), இரண்டாவது அணுகுண்டுத் தயாரிப்புக் காலம் (1943-1945), மூன்றாவது அணுகுண்டுத் தயாரிப்பின் பின்னரான காலம் (1954). இவரது பாதுகாப்புப் பத்திரம் நிராகரிக்கப்பட்ட காலம் மற்றும் விசாரணைக் காலம்.

மூன்று காலப்பிரிவிலும் ஓப்பன்ஹைமரின் வாழ்வின் முக்கிய சம்பவங்களை நோலன் வெளிப்படுத்தியுள்ளார்.

லுலிஸ் ஸ்ரவுஸ், ஓப்பின்ஹைமரை வெறுத்தார். அல்பர்ட் ஐயன்ஸ்ரீனுக்கும் லுயிஸ் ஸ்ரவுசுக்குமான உறவு, ஓப்பின் ஹைமரால் தான் உடைந்ததாக ஸ்ரவுஸ் கருதினார். ஸ்ரவு- சும், ஹைமரும் யூதச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். தனது சமூக உறுப்பினர்களிடையில் இருந்த தனது செல்வாக்கு, ஹைமரால் பாதிக்கப்பட்டதாகக் கருதினார். ஸ்ரவுசுக்கும், ஓப்பின் ஹைமருக்குமிடையில் கோட்பாட்டு அரஷ்யல் கருத் தியலில் வேறுபாடுகள் இருந்தன. ஸ்ரவுஸ் ஒரு வலதுசாரித் தீவிரவாதி.

பின்னாட்களில் ஹைமருக்குப் பாதுகாப்பு அங்கீகாரம் நிராக ரிக்கப்படுவதுக்கு ஸ்ரவுசும் ஒரு காரணமாகியுள்ளார். அணு ஆயுத உற்பத்தியை மட்டுமல்ல சுப்பர் ஹைரஜன் குண்டு கள் தயாரிக்க வேண்டும் என்பதில் ஸ்ரவுஸ் தீவிரமாகவிருந் தார். ஏற்கனவே பிறின்ட்டன் பல்கலைக்கழகத்தில் ஓப்பின் ஹைமருக்கு, ஸ்ரவுசால் வழங்கப்பட்ட பதவியை, ஓப்பின் ஹைமர் நிராகரித்திருந்தார். இவை ஸ்ரவுசுக்கு ஓப்பின் ஹைமரின் மேல் வெறுப்பை ஏற்படுத்தின. மன்ஹாட்டன் திட் டத்துக்கு, ஓப்பின் ஹைமர் தேர்வானதை ஸ்ரவுஸ் விரும்ப வில்லை. ஸ்ரவுஸ் அமெரிக்கப் பதில் வர்த்தக அமைச்சராக

1958-1959 காலப்பகுதியில் கடமையாற்றினார். இதற்கு முன் பாக இவர் 1953-1958 காலப்பகுதியில் அமெரிக்க அணு ஆயுத அமைப்பின் தலைவராகவிருந்தார். இவர் ஒரு பிரபல வர்த்தகர். இரண்டாம் உலகப்போரின் போது அமெரிக்கக் கடற்படையில் முக்கிய அதிகாரியாகக் கடமையாற்றினார். குடியரசுக் கட்சி உறுப்பினர். ஸ்ரவுசுக்கும் ஹைமருக்குமி டைப்பட்ட காட்சிகள் கறுப்பு வெள்ளையில் காட்டப்பட்டுள் ளன. இக்காட்சிகள் ஸ்ரவுசின் பார்வையிலேயே வெளிப்படுத் தப்பட்டுள்ளன.

போலாந்தை ஜேர்மனி கைப்பற்றியதைத் தொடர்ந்து அமெ ரிக்காவில் தஞ்சமடைந்திருந்த விஞ்ஞானிகள் பலர் ஜேர்மனி அணுகுண்டைத் தயாரிக்கும் எனக் கருதினர். இவர்கள் ஐன்ஸ்ரைனை வற்புறுத்தி அமெரிக்க அரசாங்கத்துக்குக் கடி தம் எழுதவைத்தனர். அணுகுண்டுத் தயாரிப்புப் பரிசோ தனை போன்றவற்றில் பங்குபற்றிய பெரும்பாலான விஞ்ஞா னிகளில் அதிகமானோர் யூதர்கள். படத்தில் யூத இனத்தைப் பற்றிய எந்தவொரு நிழலோ, வெளிச்சமோ இன்றி நைலன் படமாக்கியுள்ளார் என்ற குற்றச்சாட்டு யூத இன சமூகத்தால் முன்வைக்கப்படுகின்றது.

அதே சமயம் மக்ஹாத்திசியம் யூத புத்திஜீவிகளைத் தவ றான கண்ணோட்டத்துடனேயே பார்த்தது. 1952-ம் ஆண்டு 124 பேரை இடதுசாரிகள் என விசாரித்தது. இதில் 79 பேர் யூதர்கள். அணுகுண்டுத் தயாரிப்பின் பின்னரான காலத்தில் நடைபெற்ற விசாரணைகளில் யூதர்கள் அதிகம் பாதிக்கப்பட் டுள்ளனர். படத்தில் இவர்கள் மீதான அச்சம் பதிவு செய்யப் படவில்லை.

படத்தில் யூத இன விஞ்ஞானிகளாக நடித்தவர்களான Tom Conti (Scottish) - Einstein, Murphy (Irish) - Oppenheimer. Naomi Alderman. யூதர்களாக வேறு இனத்தவர்கள் நடித்த மைக்கு எதிர்ப்புக் குரல் எழுப்பியுள்ளார். திரைப்படங்களில் பிரதிநிதித்துவ அடையாளம் முக்கியமானது எனக் கருதுகின் றேன். தற்பாலியலாளர்கள் பாத்திரத்தில் அவர்களே நடிப் பது, அவர்களைப் படம் பிரதிநிதித்துவப்படுத்தும். குறிப்பாக ஓப்பன் ஹைமர் படத்தில் பல பாத்திரங்கள் யூதர்கள். ஆனால் நோலன் ஒரு விடயத்தில் கவனமாக இருந்துள்ளார். அதாவது அணுகுண்டைச் செய்தது அல்லது கண்டுபிடித்தது யூதர்களாக இருக்கலாம். ஆனால் குண்டை வீசியது அமெ ரிக்க அமைப்பு. அதனையே நோலன் வெளிப்படுத்த முயன் றார். ஒரு சுவையான முரண், இரண்டாம் உலகப்போரில் அதிகம் பாதிக்கப்பட்டது யூதர்கள். ஆனால் அவர்களின் விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு, பல்லாயிரக்கணக்கான யப் பானியர்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக அமைந்துள் ளது.

படத்தில் காதல் உண்டு. ஆனால் ஒரு குறிப்பிட்ட காட்சி இந்தியர்கள் மத்தியில் ஒரு எதிர்ப்பலையை உருவாக்கியது அல்லது உருவாக்கப்பட்டது. ஹைமர் தனது அப்போதைய காதலியுடன் உறவு கொள்ளும் போது பகவத் கீதையும் காட் சியில் வருகின்றது. பின்னர் பகவத் கீதையில் கிருஸ்ணர் கூறும் வசனம் ஒன்று ஹைமரால் கூறப்படுகின்றது 'Now, I am become Death, the destroyer of worlds.' (These words are a a paraphrase of Bhagavad Gita 11:32 where Krishna, an avatar of Vishnu - whom many Hindus think of as the supreme being - says that he is kala, or time.)

படத்தில் ஓப்பன் ஹைமராக Cillian Murphy-உம், லுயிஸ் ஸ்ரவுசாக றொபர்ட் டவுனி யூனியரும் மிகச் சிறப்பாக நடித் துள்ளார்கள். இப் படத்தில் முக்கிய பாத்திரமாகவே எடிட்டர் ஜெனிபர் லேம் உள்ளார். (Jennifer Lame) இப் படத்தின் சிறப்பம்சமே எடிட்டிங். மூன்று மணி நேரம் கொண்ட இப் படத்தில் அதிகளவு உரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. படத்தில் காலத்தின் அரஷ்யல் தெரியாவிட்டால், படத்தை விளங்கிக் கொள்வது கடினம். இரண்டாவது சிகப்பு அச்சம் எனப்படும் மக்ஹாத்திசியத்தை இன்னமும் ஆழமாக வெளிப் படுத்தியிருக்கலாம். படம் வெவ்வேறு காலங்களுக்கு மாறி மாறி பயணிக்கின்றது.

படத்தின் முக்கிய நோக்கம் அணுகுண்டுத் தயாரித்தலை ஓப்பின் ஹைமரின் மொழியில் வெளிப்படுத்துவதாகும். இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற காலத்தையும் படத் தின் பெரும்பகுதி பிரதிபலித்தாலும், ஹிட்டலரைப் பற்றிய காட்சிகளோ, போர்க் காட்சிகளோ இடம்பெறவில்லை.

நோலன் தனது செவ்வி ஒன்றில், தான் இங்கிலாந்தில் பாட சாலையில் படிக்கும் காலங்களிலேயே அணுகுண்டின் மீதான அச்சம் தனக்குள் இருந்தது எனக் குறிப்பிட்டுள்ளார். அதனால்தான் இப் படத்தை எடுத்ததாகவும் குறிப்பிட்டுள் ளார். படம் வெளிவந்த காலத்தில் மீண்டும் ரஷ்யா அணு குண்டுத் தாக்குதலில் ஈடுபடும் என ஊடகங்கள் அச்சுறுத் திக் கொண்டிருக்கின்றன. மீண்டும் ரஷ்யா மீதான ஓர் அச் சத்தை அமெரிக்க மக்கள் மீது திணித்துள்ளார்கள்.

'My goal when making the film - I don't make films to send a message, I made it because it's a fascinating story. But part of that storytelling is getting back to basics about the bomb, stripping away policy statements, philosophy, the geopolitical situation and just looking at raw power that's about to be unleashed and what that means for the people involved and means for all of us. Bulletin of the Atomic Scientists-க்கு J Mecklin -ஆல் எடுக்கப்பட்ட செவ்வியில் நோலன் மேற்கண்டவாறு கூறியுள் ளார். இது நோலனின் நோக்கத்தைத் தெளிவு படுத்துகின் றது. அவரது முன்னைய படங்களிலும் இதனைக் காணலாம்.

1954-ம் ஆண்டு நடைபெற்ற Atomic Energy Commission (AEC) விசாரணையின் பின்னர், ஹைமருக்குப் பாதுகாப்பு அங்கீகாரம் நிராகரிக்கப்படுகின்றது. ஹைமரின் ஏற்றமும், இறக்கமும் அமெரிக்காவிலேயே அமெரிக்கத் திட்டத்தின் கீழ் இயல்பாகவே நடைபெற்றது. இயல்பு என்று கூறுவதன் கார ணம் அமெரிக்க அமைப்பு இயல்பாகவே செயற்படும். இது இவருக்கு மட்டுமல்ல பலருக்கும் இதே வினை. அமெரிக்க அணுகுண்டு விஞ்ஞானி, அதுவும் கம்யூனிஸ்ட் அபிமானி எவ்வாறு அமெரிக்காவிற்கு வெளியே செல்லமுடியும்? அது அமெரிக்காவிற்குப் பாதகமாகவே முடியும் எனத் திட்டம் கரு தியது.

ஹைமர் அமெரிக்க அதிபர் ரூமனைச் சந்திக்கும் காட்சியில் ரூமன் அழுத்தமாகக் கூறுகின்றார், 'குண்டை யார் உருவாக் கியது எனக் கேட்கமாட்டார்கள், யார் போட்டது எனத்தான் கேட்பார்கள்.' 'நானே அணுகுண்டைப் போடச் சொன்னேன்'

என்கின்றார். ஹைமரை அழுகின்ற பிள்ளை எனவும் விழிக்கின்றார். ஓப்பின் ஹைமரின் இறுதிக் காலங்களின் ஆரம்பம் அங்கேயே ஆரம்பமாகிவிட்டது.

இரண்டாம் உலகப்போரில் அமெரிக்காவும், சோவியத் யூனியனும் ஒரே அணியில் செயற்பட்டாலும், அமெரிக்காவிற்குச் சோவியத் யூனியன் மீதும், சோவியத் சார்பு அமெரிக்க புத்திஜீவிகள், படைப்பாளிகள், விஞ்ஞானிகள் மீதும் அச்சமிருந்தது. First Red Scare (1917-1920) முடிவுற்ற பின்னரும் அந்த அச்சம் தொடர்ந்தது. அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலையும், ஏகாதிபத்திய விரிவாக்கமும் பல புத்திஜீவிகளை இடதுசாரிகளாக மாற்றியது.

ஒரு காலத்தில் ரஷ்யா, அமெரிக்காவைத் தனது நண்பனாகவே கருதியது. அலஸ்கா கனடாவிற்கு அருகில், கனடிய எல்லையில் இருந்த போதும் அதனை வாங்கும்படி அமெரிக்காவையே கேட்டது. கிறீமியன் போரில் தோற்ற பின்னரே ரஷ்யா, அலஸ்காவை 7 மில்லியன் டொலர்களுக்கு 1859-ல் விற்றது.

அப்போது ரஷ்யாவின் பிரதான எதிரி பிரிட்டன். கனடா பிரிட்டனின் கீழ் இருந்தது. அமெரிக்காவைத் தனது நண்பனாகக் கருதியே விற்றது ரஷ்யா.

அணுகுண்டுத் தயாரிப்பின் நோக்கம் ஜேர்மனியல்ல, சோவியத் யூனியனேயாகும்.

யப்பானில் அணுகுண்டு வீசப்பட்டுச் சரியாக இரு வாரங்களின் பின்னர் செப்ரெம்பர் 15, 1945-இல் வெளியிடப்பட்ட அமெரிக்கச் சுற்றறிக்கை பின்வருமாறு தெரிவிக்கின்றது. 'சோவியத் யூனியனை உலக வரைபடத்திலிருந்து நீக்கு' (Wipe the Soviet Union off the map. - நன்றி: குளோபல் றிசேச்) விரிவான அறிக்கையில் சோவியத் யூனியனின் 66 நகரங்களுக்கு 204 அணுகுண்டுகள் வீசப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1945-க்கும் 1950-க்கும் இடைப்பட்ட காலத்தில் சோவியத் யூனியன் மீதான தாக்குதல்களுக்குப் பல திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இத்திட்டங்களுக்குப் பல்வேறு பெயர்கள் சூட்டப்பட்டன. அவை Bushwhacker, Broiler, Sizzle, Shakedown, Offtackle, Deopshot, Trojan, Pincher, Frolic போன்றன. ஜே.டபிள்யு. ஸ்மித் எழுதிய The World's Wasted Wealth' நூல் பல தரவுகளைக் கொண்டுள்ளது. Dr.Michio Kaku, Daniel Axelrod இணைந்து எழுதிய To win nuclear War... நூலில் Dropshot திட்டத்தில் 300 அணுகுண்டுகள் வீசத் திட்டமிடப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. வேறு ஒரு அறிக்கையில் கிழக்கு ஜேர்மனி, சீனா போன்ற நாடுகளும் அமெரிக்காவின் பட்டியலில் இருந்ததாக நூலில் கூறப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப்போர் யப்பான் மீதான அணுகுண்டு வீசப்பட்ட பின்னர் முடிவுக்கு வந்ததா? இல்லை. யப்பான் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நிலைக்குத் தள்ளப்பட்டது. அணுகுண்டு வீசப்படாவிட்டாலும் ஒரு சில மாதங்களில் யப்பான் போரை நிறுத்தியிருக்கும். அல்லது சரணடைந்திருக்கும். இதனை அமெரிக்காவும் நன்கறிந்திருந்தது. அப்படியிருந்தும் குண்டுகள் ஏன் வீசப்பட்டன?

சோவியத் யூனியனுக்கான எச்சரிக்கையும், பரீட்சித்துப் பார்த்தலுமே பிரதான காரணங்கள்.

பல அமெரிக்க ஊடகங்கள் இப் படம் ஸ்ராலினைப் பற்றிய விமர்சனங்களை அல்லது அவரின் சர்வாதிகாரத்தைப் பற்றிக் கூறவில்லை என விமர்சித்துள்ளன. அப்போதும் இப்போதும் அமெரிக்க ஊடகங்கள் ரஷ்யாவைத் தங்களது எதிரியாகவே அமெரிக்க மக்கள் முன் காட்சிப்படுத்த விரும்புகின்றார்கள்.

நோலனும் இப்படத்தில் அமெரிக்காவின் நோக்கம் யப்பான் அல்ல சோவியத் யூனியன் என்பதனை அழுத்தமாகக் கூறவில்லை. மனிதர்களின் தவறான தேர்வுகள் மிக மோசமான சரித்திரத்தை உருவாக்குகின்றன எனக்கூறி நோலன் தப்பிச் செல்கின்றார்.

ஓப்பின் ஹைமரின் சுயசரிதையிலேயோ அல்லது அவரது உரைகளிலோ அவர் அணுகுண்டின் விளைவுகளைப் பற்றிப் பேசியுள்ளார். ஆனால் தனது தலைமையில் உருவாக்கப்பட்ட அணுகுண்டு பல்லாயிரக்கணக்கான யப்பானியர்களைக் கொன்றமைக்கு மன்னிப்புக் கேட்டதில்லை. நோலனும் ஹைமரைப் போலவே கடந்து செல்கின்றார். அணு ஆயுதப் பயம் ஒன்றை வெளிப்படுத்த முயல்கின்றார். ஆனால் வீசிய குண்டுகள் ஏற்படுத்திய விளைவுகளைப் பற்றி அவர் அக்கறை கொள்ளவில்லை. பரீட்சித்துப் பார்த்த நியூ மெக்சிக்கோ மாநில மக்களின் அகப்புறப் பாதிப்புக்களைப் பற்றியும் கவலை கொள்ளவில்லை. ஆனால் அம்மாநிலத்திலும் படமாக்கப்பட்டுள்ளது.

Los Alamos இங்கு தான் அணு குண்டு தயாரிக்கப்பட்டது. 1942-இல் இங்கு வசித்த 32 குடும்பங்கள் 48 மணி நேரத்துக்குள் வெளியேற்றப்பட்டனர். பல குடும்பங்கள் துப்பாக்கி முனையில் வெளியேற்றப்பட்டனர். வளர்ப்பு மிருகங்கள் அவிழ்த்து விடப்பட்டன, பல சுட்டுக் கொல்லப்பட்டன. பெரும்பாலான குடும்பங்கள் ஹிஸ்பானியக் குடும்பங்களாகும். இப்பிரதேசத்தில் அப்போது சுமார் 8,000 பேர் வாழ்ந்தனர். இவர்களில் பெரும்பாலோனோர் பூர்விக - முதற் குடிகள், ஹிஸ்பானியர். இப்பிரதேசத்திலேயே நோலன் படப்பிடிப்பையும் நடத்தியுள்ளார்.

நோலன் ஒரு விஞ்ஞானியல்ல. ஆனாலும் ஒரு மிகச் சிறந்த ஒளிப்பதிவாளரினதும், இசை இயக்குனரினதும் உதவியுடன் படத்தை எடுத்துள்ளார். ஆனாலும் அணு குண்டின் மீதான பயத்தை உருவாக்கியுள்ளார். அதன் பின்னரான மிக மோசமான ஏகாதிபத்திய அரசியலை பேச மறுத்துவிடுகின்றார்.

ஐன்ஸ்ரீன் கூறியது போல் அரசியல்வாதிகளின் பாராட்டுகள் உங்களுக்கானதல்ல, அவர்களுக்கானது.

Albert Einstein tells his fellow physicist that he must remember when receiving future accolades from the political Establishment that such gestures are never 'for you' but always 'for them.'





rathan@thaiveedu.com

# பொன்னையா விவேகானந்தனின்

# 'பெயர்வுத் தமிழ்ச்சமூகம் - இருப்பும் இடர்களும்'

# நூல் வெளியீடு






ஒக்ரோபர் 8, 2023

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணி

தமிழ் இசைக் கலாமன்றம், ஸ்காபரோ

# நெஞ்சில் கிளர்ந்த நினைவு

- செல்வம் அருளானந்தம்

*'பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி பேணி வளர்த்திடும் ஈசன்'*

அந்தப் பெண்ணோடு பேசிக்கொண்டிருந்தவேளை, மகாகவி பாரதியின் கவிதைவரிகள்தான் என் நினைவில் ஓடியது.

என் மகள்தான் அப்பெண்மணியை எங்கள் வீட்டுக்கு அழைத்திருந்தாள். அவர் வருகையினால் மற்றுமொரு ஒளி விளக்கை ஏற்றியதுபோல் மிளிர்ந்தது எங்கள் வரவேற்பறை.

ஒரு மத நிறுவனத்தின் துறவறச் சபையைச் சேர்ந்தவர் அப்



பெண். மக்களுக்குச் சேவையாற்றுவதை முதன்மையாகக் கொண்ட அச்சபை, மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தலைச் சிறப்பாகச் செய்துகொண்டிருந்தது.

இச்சேவை தொடர்பாகவே என் மகள் அவரோடு உரையாடிக் கொண்டிருந்தாள். மதங்கள் தொடர்பில் என் மகளுக்கு எவ்வித நல்லெண்ணங்களும் இல்லை என்பதால் உரையாடலின்போது எங்கேனும் முட்டிமோதி விடுவாளோ என்ற கவலை எனக்கு. மக்களுக்கான சேவைகள் எனப் பலவற்றைச் செய்தாலும் அந்தப் பெண் ஒரு மத நிறுவனத்தின் உறுப்பினர். கடவுளை முழுமையாக நம்பிய பின்பே துறவுக்குச் சென்றவர். அவர் தன் உரையாடலில், தாம் மக்களுக்கு ஆற்றும் சேவைகள் பற்றியே பெரிதும் கூறிக்கொண்டிருந்தார். நான் உரையாடலை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தேன்.

இந்தச் சந்திப்பு நடந்த நாள், முள்ளிவாய்க்கால் யுத்தம் முடிவடைந்து இரண்டொரு வருடங்களுக்குள் இருக்கலாம்.

தான் வாழும் பகுதியில் போருக்குப் பின்னான மக்களின் வாழ்வு, முன்பைவிட மிக மோசமாக இருக்கின்றது என்றும் குறிப்பாகக் குழந்தைகளின் கல்வி கடுமையாகப் பாதிக்கப் பட்டிருக்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

'கல்வியைக் கற்பிக்க உதவலாம் என நாம் முயன்றபோது, கல்வியை விட முக்கியமான உணவு, உறைவிடம் போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் மக்கள் திண்டாடுகின்றார்கள். அதை நிறைவேற்றிய பிறகுதானே கல்வியைப் பற்றிச் சிந்திக்கலாம்' என்றார்.

குழந்தைகளுக்குக் கல்வியை வழங்குவதற்காகக் காடுகளுக்கிடையே காணப்பட்ட சிறு கிராமங்கள்தோறும் தான் அலைந்து திரிந்த கதைகளைக் கூறிக்கொண்டிருந்தார்.

இடையே நான் குறுக்கிட்டேன்.

'நீங்கள், உங்கள் மதத்தையும் கடவுளையும் பரப்புவதற்காகத்தானே கல்வியை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றீர்கள்? நீங்கள் மதப் பரப்புரைகள் செய்வதில்லையா?' என்று கேட்டேன்.

எனது கேள்வி, அவர் முகத்தில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை, மாறாக ஒரு சிறிய புன்முறுவலுடன்,

'இப்போது யாருக்கு மதம் தேவை? வேதத்தைக் கற்றுக் கொடுப்பதை விட, அதற்கு அடிநாதமான, ஏழை, எளியோர் அகதிகள், அந்தரித்தோர் மீது அன்பைச் செலுத்துவதே பெரும் கடவுட்தொண்டு, அதையே நான் செய்கின்றேன்' என்றார்.

'அன்பும் சிவமும் வேறில்லை' என்ற திருமூலர் கருத்தை நீங்

கள் நினைவூட்டுகின்றீர்கள் என்றேன். அவர் தொடர்ந்து மகளுடன் உரையாடிக்கொண்டிருந்தார்.

என் மதிப்புக்குரிய எழுத்தாளர் சுந்தரராமசாமி கூறிய ஒரு சம்பவம் எனக்கு ஞாபகம் வந்தது.

'நான் பிறக்கும் சமயத்தில் தங்கள் குடும்பம், மருத்துவ வசதிகள் இல்லாத ஒரு கிராமத்தில் இருந்தது. நான் பிறக்கும்பொழுது, ஏதோ சிக்கலாகிவிட்டது. என்னையும் அம்மாவையும் காப்பாற்ற உறவினர்கள் துடித்தார்கள். ஒரு கட்டத்தில் இருவரும் இறந்துவிடுவோம் என்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. உடனே அங்கிருந்த ஓர் உறவினர், அருகே மலைக்கிராமம் ஒன்றில் தொண்டுப்பணியில் ஈடுபட்டிருந்த டென்மார்க் நாட்டைச் சேர்ந்த கன்னியாஸ்திரி ஒருவருக்குத் தகவல் அனுப்பியிருக்கின்றார். அவருக்கு மருத்துவிச்சிப் பணியும் தெரியும்.

அந்த நட்டநடு இரவில், ஓர் அரிக்கேன் விளக்கின் உதவியோடு, சைக்கிளில் நீண்டதூரம் ஓடிவந்து தன்னையும் தாயையும் காப்பாற்றினார் அந்தத் துறவுப்பெண். அந்தத் துறவி, தான் செய்த உதவிக்குப் பரிகாரமாகத் தன் மதத்தைப் பற்றியோ, கடவுளைப் பற்றியோ எதுவும் கூறவில்லை. மற்றுமொரு தடவை எங்களைச் சந்திக்க முயற்சிக்கவுமில்லை' எனக் கூறித் தன் வெண்தாடியைத் தடவிக்கொண்டிருந்தார்.

மகளும் அவரும் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். பேச்சுகளின் நடுவே அந்தப் பெண்ணின் கண்களில் ஒளி பெருகியதை நான் கண்டேன்.

என்னால் குறுக்கிடுவதைத் தடுக்க முடியாமல் இருந்தது.

'மதத்தைப் பின்னுக்கிருத்தி மக்களுக்கு உதவி செய்வதை முன்னிலைப்படுத்துவதாகக் கூறுகின்றீர்களே, உங்கள் சபையின் தலைமையால் உங்களுக்குச் சிக்கல்கள் வராதா?'

இப்போது அவர் கண்கள் தாழ்ந்தன. 'சிக்கல்கள் வராது என்று சொல்வதற்கில்லை. அப்படி வருகின்றவேளைகளில், அவற்றை எதிர்கொண்டு, வென்று, மக்கள் பணியைத் தொடர்வதுதானே ஆண்டவருக்குச் செய்யும் தொண்டு' என்றார்.

இச்சிறு பெண் துறவியால் இப்படியே நீண்டகாலத்துக்கு இருக்க முடியுமா? என் மனம் அல்லாடியது.

வேதாகமத்தில் இவர் போன்ற பெண்களைப் பற்றி நான் படித்திருக்கின்றேன்.

அதில்.. அக்கிரமமும் பாவங்களும் உச்சத்தை எட்டியபடியால் கடவுள் சேதொம் என்ற நகரை அழித்த கதையில், அந்த நகரை அழிக்க முதல் லோத் என்பவர் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து பாவங்கள் செய்யாமல் வாழ்ந்தபடியால், அவரிடத்தே தேவதூதர்களை அனுப்பி, 'கடவுள் உங்கள் ஊரை எரிக்கப் போகிறார், நல்லவராகிய நீங்கள், உங்கள் குடும்பத்தைக் கூட்டிக்கொண்டு ஊரை விட்டுச் செல்லுங்கள். ஊரை விட்டு ஓடும்போது திரும்பி உங்கள் ஊரைப் பார்க்காதீர்கள். பார்த்தால் உடனே உப்புச் சிலையாவீர்கள்' என்று சொல்லப்படுகின்றது.

லோத்தும் அவர் மனைவி சராவும் ஊரைவிட்டு ஒடுகிறார்கள். ஆனால் லோத்தின் மனைவி 'ஐயோ என் வீடு' என அழுதாள். 'சிலையானால் பராவாயில்லை, எனக்குப் பயமும் இல்லை, நான் பிறந்து வாழ்ந்த ஊரையும் வீட்டையும் கட்டாயம் திரும்பிப் பார்ப்பேன்' என்று கூறிய சரா திரும்பிப் பார்த்தாள். அவள் உப்புச் சிலையானாள். அவள் ஒரு பெண் அல்லவா.

இன்னொரு சம்பவம்,

வேள்விக்குக் கொண்டுபோகும் ஆட்டுக்கிடாயைக் கூடக் கொஞ்சம் மரியாதையாகக் கொண்டு போவார்கள். ஆனால் சிலுவையில் அறைந்து கொல்லப்போகும் யேசுவை அடித்து உதைத்துக் குற்றுயிராகச் சிலுவையோடு இழுத்துச் செல்கின்றார்கள் யூதர்கள்.

மக்கள் வேடிக்கை பார்க்கின்றார்கள். உடம்போடு உயிரைக் கொடுப்போம் என்ற சீடர்கள் ஒடி ஒளிந்துவிட்டார்கள். அவரால் பயன் பெற்றவர்கள் மறைந்து விட்டார்கள். பெரும்பாலும் பெண்கள்தான் அழுதவண்ணம் அவர் பின்னால் சென்றார்கள். வெரணிக்கா என்றவொரு பெண்தான் ரோம் போர் வீரர்களைத் தாண்டி, யூதக் கொடுமைக்காரர்களை விலக்கி, யேசுவின் அருகே சென்று இரத்தம் வழியும் அவள் முகத்தைத் துடைத்து ஆறுதல்படுத்துகின்றாள்.

பெண்கள்... பெண்கள்... என என் நினைவுகள் ஓடிக்கொண்டிருந்தன.

என் மகள் மகிழ்ச்சியோடு மேலும் மேலும் பேசிக்கொண்டிருந்தாள். முடிவில் என் மகளைக் கட்டிபிடித்து முத்தமிட்டு, எனக்கும் தன் அன்பைச் சொல்லி விடைபெற்றார் அந்த இளம் பெண்துறவி.

இது நடைபெற்று நீண்டகாலமாகிவிட்டது. அந்தச் சந்திப்பையும் நான் மறந்துவிட்டேன்.

இப்போது ஏதோ என்னவோ எல்லாம் பேசுகின்றார்கள்? எரிக்கின்றார்கள், என அறிந்தேன். இதெல்லாம் நடக்கக் கூடியதுதான். நடக்கிறது.

அந்தப் பெண்துறவி... எங்கிருக்கிறாளோ... எப்படியிருக்கிறாளோ... தெரியாது.

ஒன்றைத்தான் உனக்குச் சொல்லலாம் பெண்ணே... அதுவும் பாரதி சொன்னதுதான்.

*'துன்ப நினைவுகளும்*
*சோர்வும் பயமும் எல்லாம்*
*அன்பில் அழியுமடி கிளியே*
*அன்பிற்கு அழிவில்லை'*



selvam.a@thaiveedu.com

# மறைந்த மலையகச் சிந்தனையாளர் தோழர் சாந்திகுமார்

— நெல்லை ஜெயசிங்


200 வருடங்களுக்கு முன்னர் இந்தியத் தமிழர் என்ற பெயரில் தமிழ் நாட்டில் இருந்து இலங்கை சென்று மலையக மக்கள் என்ற இன அடையாளத்துடன் வாழ்ந்து வரும் சமூகத்தில் பல ஆளுமைகள் தோற்றம் பெற்று அறிவார்ந்த தளத்தில் மணம் பரப்பி வந்தோர் வரிசையில் தோழர் சாந்திகுமார் மிகவும் குறிப்பிடத்தக்கவர். இலக்கிய கர்த்தா, வரலாற்று ஆய்வாளர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், கதாசிரியர், அரசியல் செயற்பாட்டாளர், சட்டத்தரணி, மார்க்சியவாதி என பன்முக ஆற்றல் கொண்ட தோழர் லக்ஷ்மண் சாந்திகுமார் 1949-ம் ஆண்டு ஜனவரி 26-ம் திகதி இலங்கை மொனராகலையில் பிறந்தார்.

ஆரம்ப கல்வியை மலை நாட்டில் முடித்த பின்னர் உயர்தர பாடசாலைக் கல்விக்காக பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை தேர்ந்தெடுக்கலானார். அது அவரது வாழ்க்கையில் மார்க்சிய பாதைக்கு வழி காட்டியாகவும் அமைந்தது. யாழ்ப்பாணச் சூழ்நிலை, சமத்துவமற்ற சமூக கட்டமைப்பு, இடதுசாரி எண்ணம் கொண்ட ஆசிரியர்களின் அரவணைப்பு அனைத்தும் இணைந்துவர மிக இளம் வயதான 17-வது வயதிலேயே உலக முதலாளித்துவத்திற்கு சவாலாக இருக்கும் மார்க்சிய கோட்பாடுகளை அறிந்து கொள்வதில் அதிக ஆர்வம் காட்டலானார். 1946-ம் ஆண்டு யாழில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை நிறுவ காரணமானவராக இருந்த ஆசிரியர் திரு. மு. கார்த்திகேசன் அவர்களின் சமூக நீதி நிலைப்பாடு தனக்கு வழிகாட்டியாக இருந்ததாக தோழர் சாந்திகுமார் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அங்கு வாழ்ந்த கே. டேனியல், சுபைர் இளங்கீரன், டொமினிக் ஜீவா போன்ற இடதுசாரி எழுத்தாளர் தோழர்களின் ஆக்கங்களையும் தேடித் தேடி படித்ததுடன் அப்போது சாதிய கொடுமைகளுக்கு எதிரான போராட்டங்களையும் அருகே இருந்து அவதானித்து தனது இடதுசாரி எண்ணங்களை வளர்த்துக் கொள்ளவும் அவர் தயங்கவில்லை. யாழில் படிக்கும் காலத்திலேயே சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களில் கலந்து கொண்டு முத்திரை பதித்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்தரணியாக கல்வியை தொடர்ந்த காலத்தில் அரசியல் சொற்பொழிவுகளை கூர்ந்து கவனித்து வரலானார். புத்தக வாசிப்பு தன்னை அடுத்த தளத்திற்கு அழைத்துச் செல்லும் என ஆழமாக நம்பிய தோழர் சாந்திகுமார், 'சாந்தி குமாரின் இல்லம்' என மற்றவர்கள் கூறுமளவிற்கு பெரும்பாலான நேரங்களை பல்கலைக்கழக நூலகத்தில் செலவிட்டார். 1971-ம் ஆண்டு கொழும்பு நகரில் இடதுசாரி அமைப்புகள் நடத்திய புத்தக கண்காட்சியில் பெரும் பங்கு வகித்தார். இவர் நேரடியாக மக்கள் விடுதலை முன்னணி (JVP) அமைப்புடன் தொடர்பு கொண்டிராத போதும் இடதுசாரி இயக்க தொடர்பு காரணமாக 1971-ம் ஆண்டு நாடெங்கும் நடந்த உள்நாட்டு கிளர்ச்சியின் போது இவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறை வாழ்க்கை அவரை தத்துவார்த்த வழியில் மேலும் பலப்படுத்தியதை காண முடிந்தது. இலக்கியம் தொடர்பான அவரது சிந்தனைகள், கலை நுணுக்கங்கள் மிக ஆழமானவை. எழுத்தின் மீது அவர் கொண்டிருந்த ஆர்வம் காரணமாக சிறை வாழ்க்கையை நினைவு கூறும் வகையில் 'உதய காலத்து ஜனனங்கள்' என்ற சிறுகதை ஒன்றை எழுதியமை குறிப்பிடத்தக்கதாகும்.

மார்க்சிய கொள்கை கோட்பாடுகளை ஆழமாக உள்வாங்கிய தோழர் சாந்திகுமார் அவர்கள் நடைமுறை வாழ்க்கையில் செயற்பாட்டில் அதனை கடைப்பிடிக்கவும் தவறவில்லை. மிக எளிமையான வாழ்க்கையை வாழ்ந்த அவரின் எழுத்துக்களில் மார்க்சிய சிந்தனை, தொழிலாளர் வர்க்க உணர்வு ஆணித்தரமாக வெளிப்பட்டிருப்பதைக் காணலாம். அவரது சமூகப் பார்வை மிகவும் கூர்மையானது. 'இடதுசாரி இயக்கங்களும் இலங்கையும்' என்ற அவரது முக்கியத்துவம் வாய்ந்த கட்டுரையை 1979-ல் யாழ் பல்கலைக்கழக மானுடவியல் துறை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இவரது மார்க்சிய ஈடுபாட்டை குறிப்பிடும் வகையில் இவரது 'தேசியங்களும் தேசிய இனங்களும் குறித்த மார்க்சிய கண்ணோட்டம்' எனும் கட்டுரை 1980-ல் 'தீர்த்தக்கரை' இதழில் வெளியாகியது.

மார்க்சியவாதியாக தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதில் எந்தவித தயக்கமும் காட்டாத தோழர் சாந்திகுமார் அவர்களின் மார்க்சியம் சார்ந்த கலை இலக்கியம் தொடர்பான எழுத்துகள் ஆழ்ந்து கவனிக்கத் தக்கதாகும். எனவேதான் பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையா



ளர் திரு. சரவணகுமார் அவர்கள் '20-ம் நூற்றாண்டு சமூக அமைப்பில் மேற் கிளம்பிய மார்க்சிய கோட்பாட்டியல் சார்ந்த ஆளுமைகளுள் திரு. சாந்திகுமார் முக்கியமானவர்' என அவரது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். அவரது முற்போக்கு இலக்கிய கருத்துகளில் சமூக உணர்வு ஆழ மாக வெளிப்படவும் தவறியதில்லை. சமூகப் பிரச்சினை-களை மார்க்சிய தத்துவார்த்த கண்ணோட்டத்துடன் அணுகி தனது படைப்பிலக்கியங்களை வெளிக்கொண்டு வருவதில் அவரது முயற்சி மிகப் பெரியதாகும். அவரது கதை, கட்டு ரைகள் முற்போக்கு இலக்கிய படைப்புகளுக்கு முன் உதார ணங்களாகும். முற்போக்கு இலக்கியங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதில் பெரும் முனைப்பு காட்டியுள் ளார். எனவேதான் பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திரு. ஜெயசீலன் அவர்கள் 'பிற்போக்கு அர சியல் செயற்பாடுகளை வன்மையாக கண்டித்து வர்க்க, அர சியல், சமூக செயற்பாட்டுத் தளங்களில் ஆழமாக செயற்பட திரு. சாந்திகுமார் அவர்கள் முன்வந்தார்' என குறிப்பிடுவது டன், இதழாசிரியர், விமர்சகர், மொழிபெயர்ப்பாளர், சிறுகதை ஆசிரியர், ஆய்வாளர் போன்ற தளங்களிலும் அவரது பங்க ளிப்பு மிகவும் உயர்வானது என்கிறார். அவரது அனைத்து எழுத்துக்களும் செயற்பாடுகளும் மார்க்சிய கண்ணோட்டத்து டனேயே இருந்துள்ளன, மதிப்பிடப்பட்டுள்ளன.

கலை இலக்கியம் மட்டுமல்லாமல் தேசம், தேசியம், சமூக முரண்கள் தொடர்பான மார்க்சிய தத்துவார்த்த விவாதங் களை பரந்துபட்ட மற்றொரு தளத்திற்கு எடுத்துச் செல்வ தில் சாந்திகுமார் அவர்களின் முயற்சியால் தொடங்கப்பட்ட தீர்த்தக்கரை இலக்கிய இதழுக்கு பெரும் பங்கு உண்டு. மூன்றாம் தர சஞ்சிகைகள் காளான்களாக வெளிவரும் நாட் டில் 'தீர்த்தக்கரை' இதழின் உதயம் ஒரு அக்னிப் பிரவேசம் என்கிறார் சாந்திகுமார். இடதுசாரி கருத்து நிலையை உள் வாங்கி வெளிவந்த சஞ்சிகையாக பெயர் பெற்றது தீர்த்தக் கரை. தோழர் சாந்திகுமார் அவர்களை முதன்மை ஆசிரிய ராக கொண்டு 1980-ல் காலாண்டு சஞ்சிகையாக தொடங்கப் பட்ட இதழில் அரசியல், பொருளாதாரம், சமூக இயல், தொழிலாளர்கள் போராட்டம், தீண்டாமை எதிர்ப்பு, பெண் விடுதலை, மனித உரிமைகள் என ஏராளமான விடயங்கள் எழுதப்பட்டன, விவாதிக்கப்பட்டன. மலையகத்தின் இளைய தலைமுறை சார்ந்த அறிவுஜீவிகளின் ஒன்றுபட்ட கூட்டு முயற்சியே 'தீர்த்தக்கரை' காலாண்டு இதழ். மலையக மக்க

ளின் வாழ்க்கை, கலாசாரம், எதிர்நோக்கும் சவால்கள் அனைத்திலும் ஏடு கவனம் செலுத்தியது. திறமைமிக்க இளைய தலைமுறைகளின் படைப்புகள் அதில் இடம்பெற்றன. இலக்கிய விமர்சனங்களும் எழுத்தாளர் பிரச்சினைகளும் இடம்பெற்றன. ஓர் ஆய்வாளராக மலையகம் தொடர்பாக சாந்திகுமார் எழுதிய பல கட்டுரைகளும் இதில் இடம்பெற்றன. சமூகத்தின், வர்க்க அணியின் போராட்ட உணர்வுகளை உள்வாங்கி பயணித்த சாந்திகுமார் அவர்கள் என்ன எழுத வேண்டும், யாருக்காக எழுத வேண்டும் என்பதில் மிகவும் தெளிவாக இருந்துள்ளார். தீர்த்தக்கரையில் வெளிவந்த எழுத்துகள் அதற்கு சான்றாக இருக்கின்றன.

இலங்கையில் முற்போக்கு இலக்கியம் குறித்த சாந்திகுமாரின் ஆய்வுபூர்வமான பார்வை மிகவும் கூர்மையானது. அதன் அழகியல் குறித்தும் மிக ஆழமாக உரையாடக் கூடியவர். குமரன் இதழில் வெளிவந்த பல்வேறு சிறுகதைகளை விமர்சிக்கும் போது கதைகள் வெறும் இயந்திரத்தனமாக இல்லாமல் வாழ்வியலின் ஆரோக்கியமான விடயங்களை உள்ளடக்கி நகர்வது நல்லது என சுட்டிக் காட்டும் சாந்திகுமார், கதைகள் எவ்வாறு அமைந்தால் நலம் என்பதையும் சுட்டிக்காட்ட தயங்கவில்லை. இச்சந்தர்ப்பத்தில் சாந்திகுமாரின் இரண்டு சிறு கதைகள் நினைவு கூறத் தக்கதாகும். 'உதய காலத்து ஜனனங்கள்', 'நண்பனே என்றும் உன் நினைவாக' ஆகிய இரு சிறு கதைகள் மனித உணர்வுகளை ஆழமாக வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

மலையகத்தில் பிறந்து லண்டனில் வசிக்கும் கல்வியாளர் எழுத்தாளர் திரு. மு. நித்தியானந்தன் அவர்களின் 'கூலித் தமிழ்' நூல் பற்றிய சாந்திகுமாரின் விமர்சனமும் மிகவும் ஆழமானதாகும். நூற்றாண்டுக்கு முன்னைய கோப்பி யுகத்தினையும் தேயிலை தோட்ட வாழ்க்கையினையும் எவ்வாறு சித்தரிக்கின்றன என்பதனையும், துரைத்தனத்தின் அடக்குமுறையையும் தோட்டத் தொழிலாளர்களின் எதிர்ப்புணர்வையும் அவை எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதனையும் விரிவாக ஆராயும் நூலாக வெளிவந்துள்ள இந்நூலில் இடம்பெற்றுள்ள இதுவரை வெளிவராத வரலாற்று ஆவணங்கள் மற்றும் தகவல்களுக்கு உரிய அங்கீகாரத்தை அளிக்கும் சாந்திகுமார் அவர்கள் விடுபட்ட இன்னும் பல வரலாற்று தகவல்களும் கூலித் தமிழ் நூலில் இடம்பெறுவது மிகவும் அவசியம் என்ற விமர்சனத்தையும் முன்வைக்கலானார். மேலும் 'கோப்பிக் கிருஷிக் கும்மி'யை மலையக தோட்டத் தொழிலாள சமூகத்தின் மத்தியில் 'எழுந்த முதல் இலக்கியமாக' அடையாளப்படுத்துவது வரலாற்று யதார்த்தப் பின்னணியிலும், தார்மீகரீதியாகவும் ஏற்புடையதல்ல என்பது அவரது வாதமாகவும் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு இவை மிகவும் ஆரோக்கியமான உரையாடலாக பார்க்கப்படுகிறது. இவ்வாறு இவரது எழுத்துகள் விமர்சனங்கள் வெவ்வேறு கோணங்களில் சிந்தனையை தூண்டுவதாக அமைவது குறிப்பிடத்தக்கதாகும்.

தோழர் சாந்திகுமார் அவர்கள் எழுதிய கதை கட்டுரைகளைத் தாண்டி அவரது மொழி பெயர்ப்புகளும் தனித்துவம் மிக்கவையாக இருக்கின்றன. சோஷலிச நாடுகளின் இலக்கியங்கள், ஆபிரிக்க நாடுகளின் இலக்கியங்கள் சிலவற்றை படித்தறிந்து தமிழ்படுத்தியுள்ளார். 'என்னைப் பேச விடுங்கள்', 'சாத்தானின் புதல்வன்', 'சிங்கத்தின் பாதம்' போன்றவை அவரது மொழிபெயர்ப்புகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

மலையகம் 200 என்ற நிகழ்வு இன்று மலையகமெங்கும் நினைவு கூரப்பட்டு வருகிறது. அந்நிகழ்வில் முக்கிய அம்சமாக இருப்பது மலையக மக்களின் தேசிய இன அடையாளம் என்பதாகும். மலையகத்தில் இருப்பவர்கள் மலையகத் தமிழர்களா, இலங்கைத் தமிழர்களா, இந்தியத் தமிழர்களா என்ற வாத பிரதிவாதங்கள் இன்று அதிக அளவில் பேசப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக சாந்தி குமார் அவர்கள் தனது கருத்தை நாற்பது வருடங்களுக்கு முன்பே பேசியும் எழுதியும் வந்துள்ளார். சட்டம் மற்றும் ஆவண ரீதியாக உறுதியான இருப்பும் அடையாளமும் மலையக மக்களிடையே இருப்பது இன்று மிகவும் அவசியமான ஒன்று என கருதப்படுகிறது.

மலையகத்தை அதிகம் நேசித்தவர் தோழர் சாந்திகுமார் என கூறலாம். 'எங்கிருந்தோ வந்து தயாராக இருந்த பொருளாதார வாய்ப்புக்களை அபகரித்துக் கொண்ட மக்கள் அல்ல மலையக மக்கள். இலங்கையின் முதல் தொழிலாளர் வர்க்கம் என இலங்கைக்கு அடையாளம் தந்தவர்கள். இலங்கை வரலாற்றில் போராட்டங்களின் சங்கநாதம் மலையகத்தில் ஒலித்ததைப் போல வேறு எங்கும் ஒலிக்கவில்லை' என முழங்கிய சாந்திகுமார் மற்ற சமூகங்கள் அனுபவித்து வரும் அனைத்து உரிமைகளையும் பெற்று இவர்களும் சமத்துவமாக வாழ வேண்டும் என்கிறார். அவர்கள் ஒரு தேசிய இனமாகவும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை அனைத்து தளங்களிலும் வலியுறுத்தி கூறியுள்ளார். இரண்டு நூற்றாண்டுகள் கடந்து நீண்ட பாரம்பரியம் உடைய மலையக மக்கள் இனத்துவ அடையாளம் குறித்து நிச்சயமற்று இருப்பது கவலை தரும் விடயமாகும்.

மலையகம், மலையகத் தமிழர், மலையகத் தேசியம் குறித்த சாந்திகுமாரின் நிலைப்பாடு யதார்த்தமானவை. இலங்கைக்கு புதியதொரு பொருளாதாரத்தை அறிமுகப்படுத்திய மலையக மக்கள் இம்மண்ணின் மக்களே என்கிறார். கூலிகள், பரதேசிகள், பஞ்சம் பிழைக்க வந்தவர்கள் அல்ல அவர்கள். இந்த நாட்டின் பொருளாதார கட்டமைப்பை மாற்றி அமைக்க வந்தவர்கள் அவர்கள். அனைத்து உரிமையும் உடைய அவர்களை இந்தியத் தமிழர் என்று கூறி அந்நியப்படுத்துவதை சாந்திகுமார் வன்மையாக கண்டிக்கிறார். மலையகம் என்பது ஒரு சமூகத்தின் இருத்தலை குறிப்பதாகும். மலையகத் தமிழர் தனித்துவமான தேசிய சிறுபான்மை இனம் எனக் கூறிய சாந்திகுமார் அவர்கள் இதனை வலியுறுத்தும் வகையில் 'தேசியங்களும் தேசிய இனங்களும் குறித்த மார்க்சிய கண்ணோட்டம்' என்ற தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

மலையக மக்கள் தங்களின் பலதரப்பட்ட பொருளாதார சமூக பண்பாட்டு செயற்பாடுகளின் மூலம் தாங்கள் தனித்துவமான இனம் என்ற உணர்வை ஆழமாக வேரூன்றி வந்துள்ளனர் என்கிறார். இலங்கையின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்

துவரும் அவர்களை ஒரு புவியியல் எல்லைக்குள் அடைத்து பார்க்க வேண்டாம் என கூறும் சாந்திகுமார், அவர்களின் வேர்கள் எங்கிருந்து தொடங்கியது என்பதை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும் என்கிறார். தேசிய இனப் பிரச்சினையை பொறுத்த வரையில் லெனின் சார்ந்த கோட்பாட்டை முன்வைத்த சாந்திகுமார், மலையக மக்களின் தேசிய இன அடையாளத்தின் அவசியத்தை பொதுவெளிக்கு எடுத்துச் சென்று அதன் அவசியத்தை உணரச் செய்வதில் பெருமுயற்சி மேற்கொண்டார் எனலாம். 'தீர்த்தக்கரை' இதழில் இது தொடர்பாக கட்டுரைகள் எழுதுவதன் வாயிலாக இதன் அவசியத்தையும் உணர்த்தலானார்.

மலையக நிலப் பரப்பில் தேசியம், தேசிய இனம், தேசிய சிறுபான்மை ஆகியவற்றை இலங்கை அங்கீகரிக்க வேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளது. சிறுபான்மை இனங்களின் தேசியத்தையும் அதன் அவசியத்தையும் வலியுறுத்தும் சாந்திகுமார் அவர்கள், ஒரு சமூக வர்க்கமாக இருக்கும் மலையக தொழிலாளர் வர்க்கம் தனித்துவமான இனம் என்ற உணர்வை பலப்படுத்தி வந்துள்ளதாக குறிப்பிடுகிறார். மலையகத் தமிழர்களுக்கு இந்தியத் தமிழர் என்ற தேசிய இன அடையாளம் சூட்டுவது அபத்தமானது என கருதும் சாந்திகுமார் அவர்கள் இலங்கை தமிழர்களுடன் இணைத்து அவர்களும் இலங்கைத் தமிழர்களே என இன அடையாளப்படுத்துவதையும் வன்மையாக மறுக்கும் சாந்திகுமார் அவர்கள் மலையகத் தமிழர் என்ற இன அடையாளத்தை மறந்து இலங்கை தமிழர் என்ற இன அடையாளத்துக்குள் நுழைவது மிகப் பெரும் ஆபத்தாகிவிடும் என்கிறார்.

1981-ம் ஆண்டிற்கும் 2011-ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட 30 வருட காலப்பகுதியில் மலையகத்தில் 13,600 பேர் மட்டுமே பிறந்துள்ளனர் என புள்ளி விபரம் ஒன்று கூறுவதற்கு காரணம், மலையக மக்கள் தமக்குப் பிறக்கும் குழந்தைகளை இலங்கைத் தமிழர் எனப் பதிவிட்டதேயாகும் என்பதை, மலையகம் தொடர்பான அவரது கட்டுரை ஒன்றில் சாந்திகுமார் குறிப்பிட்டுள்ளார். இந்நிலை தொடருமாயின் 2050-ம் ஆண்டளவில் உலகின் இனத்துவ அடையாளத்தை இழக்கும் பட்டியலில் இலங்கையின் மலையகச் சமூகமும் இடம் பெறும் என ஐநாவின் UNHCR தனது அறிக்கையில் கூறியிருப்பதாக சாந்திகுமார் கூறுகிறார். எனவே வெறுமனே உணர்வு பூர்வமாகவும் சுயநல நோக்குடனும் இலங்கைத் தமிழர் என அடையாளப்படுத்த முயல்வது ஏற்கத்தக்கதல்ல. இது எதிர் காலத்தில் இரு சாராருக்கும் இடையே தேவையற்ற சிக்கல்களை உருவாக்கிவிடும் என்கிறார். அதாவது, இலங்கைத் தமிழராக வாழ்வதோ அதனடிப்படையில் அங்கீகாரம் பெறுவதோ இயல்பான ஒன்றாக இராது என்பது அவரின் வாதமாகும். அதேநேரம் இலங்கைத் தமிழர்களை தனி ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்வதோடு அவர்களின் நியாயமான போராட்டங்களுக்கும் கோரிக்கைகளுக்கும் மலையக மக்கள் ஆதரவுக் கரம் நீட்ட வேண்டும் என்பதில் தோழர் சாந்திகுமார் உறுதியாக இருந்தமையையும் காணமுடிகிறது.

தனது இலட்சியங்கள் கனவுகள் வர்க்க போராட்ட உணர்வுகள் மார்க்சிய சிந்தனைகள் இடதுசாரி கொள்கைகள் என பலவற்றையும் நேரடியாக மக்கள் முன் கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் 'மலையக மக்கள் இயக்கம்' என்றதொரு அரசியல் சமூக அமைப்பொன்றை தோழர் சாந்திகுமார் ஆரம்பித்தபோது அது மலையக அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமையும் என எதிர்பார்க்கப்பட்டது. மலையகத் தமிழர் ஒரு தேசிய சிறுபான்மை இனம் என்ற கருத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு மலையக மக்கள் இயக்கம் ஒரு பாலமாக அமையும் என எதிர்பார்க்கப்பட்டது. பெருந்தோட்டச் செய்கை வாயிலாக இலங்கையில் புதியதொரு பொருளாதாரக் கட்டமைப்பை தோற்றுவித்த சமூகமே மலையக தேசிய இனம் என்ற கருத்தை மலையக மக்கள் இயக்கம் ஆழமாக பதிவிட்டு வந்தது. மலையக மக்கள் தனி தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட அனைத்து தகுதியும் உரிமையும் உண்டு என்ற அடிப்படையில் இவ்வியக்கத்தை இட்டுச் செல்ல முயன்ற போது அறிவார்ந்தவர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றது. இளையோர் மத்தியில் வர்க்க அரசியல் உணர்வை வளர்க்க வேண்டும் என்று எண்ணியது. எனினும் இனக் கலவரம் உட்பட பல்வேறு காரணிகளால் குறுகிய காலத்தில் மலையக மக்கள் இயக்கம் தனது செயல்பாட்டை நிறுத்திக் கொண்டது பலரையும் வருத்தத்தில் ஆழ்த்தியது. எனினும் தோழர் சாந்திகுமார் தனிப்பட்ட முறையில் எந்தவித தளர்வும் இன்றி சமூக வர்க்க உணர்வுடன் எழுதியும் உரையாடியும் வருவதை தனது இறுதி பயணம் வரை நிறுத்தவில்லை.

சாந்திகுமார் கூர்மையான சமூக பார்வையுடன் எழுதிய ஏராளமான அரசியல் சமூக கட்டுரைகள், விமர்சனக் கட்டுரைகள், இலக்கிய கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், சிறுகதைகள் என ஏராளமான அவரது படைப்புகள், மார்கா நிறுவனத்துக்காக அவர் செய்த ஆய்வுகள் என பலவும் இன்றும் இலங்கையில் அறிவார்ந்தவர்கள் மத்தியில் பேசு பொருளாக இருந்து வருகிறது. மலையக மக்கள் இயக்கம் தொடங்கப்பட்ட காலப்பகுதியில் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் துறை உதவி விரிவுரையாளராக இருந்த இக் கட்டுரையாளர் ஜெயசிங் அவர்கள் 'இலங்கை வாழ் இந்தியர்களின் குடி அகல்வு' என்ற நூலுக்கு தோழர் சாந்திகுமார் எழுதிய முன்னுரை இன்றும் கூர்ந்து கவனிக்கப்படுகிறது. மலையக மக்கள் இயக்கத்தால் வெளியிடப்பட்ட அந்நூலின் முன்னுரையில் தலை நிமிர்ந்து நிற்கும் உரிமையும் தகமையும் மலையக இனத்திற்கு உண்டு என்பதை மிக அழுத்தமாக பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மார்க்சிய லெனினிச தத்துவங்களை உள்வாங்கி வர்க்க உணர்வுடன் பயணித்த சிந்தனையாளர் 2020-ஆம் ஆண்டு ஒக்ரோபர் 6-ம் நாள் தனது இறுதி சுவாசத்தை நிறுத்திக் கொண்டமை மலையக மக்களுக்கு ஏற்பட்ட பெரும் இழப்பாகும்.

தோழர் சாந்திகுமார் அவர்களின் நினைவாக நந்தலாலா பதிப்பகம் 'காலமும் மனிதர்களும்' என்றொரு நூலை கடந்த 2022-ம் வருடம் எல். சாந்திகுமார் பெயரில் வெளியிட்டு அவரை கௌரவித்துள்ளமை
குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



jeyasingh@thaiveedu.com



# பேராதனைப் பல்கலைக்கழகமும் அருணாசலம் பத்மநாபாவும்

– என். சரவணன்

## இலங்கையில் பல்கலைக்கழக உருவாக்கத்தின் பின்னணி:

இலங்கையில் பல்கலைக்கழகம் அமைப்பது குறித்து 1884-ம் ஆண்டளவில் அரசியலமைப்புச் சபையில் பேசப்பட்ட போதும் 20-ம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை அந்த உரையாடல் அடுத்த கட்டத்துக்கு நகரவில்லை என்பது உண்மை.

1906-ம் ஆண்டில், சேர். பொன்னம்பலம் அருணாசலம் தலைமையில் உருவாக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழக சங்கம், இலங்கையில் உயர்கல்வி நிறுவனமான இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியை (Ceylon University Collage) நிறுவுவதற்கான முதன்மை அடித்தளமாக விளங்கியது. 1921-ம்



கொலிஜ் ஹவுஸ் / College House

ஆண்டு ஜனவரி 1-ம் திகதி கொழும்பு தர்ஸ்டன் வீதியில் உள்ள (இன்றைய குமாரதுங்க முனிதாச மாவத்தையில்) 'ரெஜினா வளவ்வ' எனப்படும் கட்டடத்தில் இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இது பின்னர் கொலிஜ் ஹவுஸ் (College House) எனப் பெயரிடப்பட்டது. இந்த கொலிஜ் ஹவுஸ் லண்டன் பல்கலைக்கழகத்தின் உயர்கல்விக்கான அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக இருந்தது. மேலும் லண்டன் பல்கலைக்கழகத்தின் வெளிப்புற கலை, சட்டம் மற்றும் அறிவியல் பட்டப் படிப்புகளைப் படிக்கும் வாய்ப்பு மாணவர்களுக்கு வாய்த்தது. இந்த கல்வி நிறுவனத்தின் முதல் முதல்வர் டாக்டர் ராபர்ட் மார்ஸ் (Professor Robert Mars) ஆவார்.

சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாச்சலம், சேர். ஜோன் கொத்தலாவல, டி.ஆர். விஜேவர்தன, டி.எஸ். சேனநாயக்க போன்றோர் பொருள் ரீதியிலும் பாரிய ஒத்துழைப்பை வழங்கினார்கள். டி.ஆர். விஜய விஜேவர்தன தனக்குச் சொந்தமான ஒரு வீட்டிற்கு சங்கவாசம் எனப் பெயரிட்டு அதனை இங்கு கல்வி கற்கும் துறவிகளுக்கு அர்ப்பணித்தார்.

1938-ல், சேர். ஐவர் ஜென்னிங்ஸ் அதன் அதிபரானார். நிர்வாகத்தில் அதிபருக்கு உதவுவதற்கென கொலிஜ் கவுன்சில் என்ற ஒரு சபை அமைக்கப்பட்டது.

புதிய பல்கலைக்கழகத்திற்கான யாப்பை பிரித்தானிய பல்கலைக்கழக மானியக் குழு மற்றும் இலங்கைப் பல்கலைக்கழக ஆணைக்குழு என்பவற்றின் தலைவராக இருந்த சேர். வோல்டர் புக்கானன் ரிடெல் (Sir Walter Buchannan Riddell) உருவாக்கினார். இந்த அரசியலமைப்பு ஹொங்கொங் பல்கலைக்கழக யாப்பை முன்மாதிரியாகக் கொண்டு உருவாக்கப்பட்டதாகவும், பிரிட்டனில் உள்ள பிரிஸ்டல் மற்றும் பர்மிங்காம் பல்கலைக்கழகங்களின் நிர்வாக மாதிரியை ஒத்ததாகவும் கூறப்படுகிறது. 1930-ல் அரசாங்க சபையில் மீண்டும் இதற்கான சட்டமூலம் கொண்டுவரப்பட்டபோதும் அப்போது இரண்டாம் உலகப் போர் மற்றும் மலேரியா தொற்று நோயால் அதன் நிறைவேற்றம் தாமதமானது. 1942-ம் ஆண்டு இலங்கையின் யாப்பு விவகாரம், கல்வி நிலை என்பவற்றை சீர் செய்வதற்காக இங்கிலாந்திலிருந்து ஐவர் ஜென்னிங்க்ஸ் அனுப்பப்பட்டார். பின்னர் அது 1942-ம் ஆண்டின் பல்கலைக்கழக ஆணை இல: 20 ஆக அரசாங்க சபையால் நிறைவேற்றப்பட்டது.

இலங்கைப் பல்கலைக்கழகம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதற்கான இடத்தைக் கண்டறிந்து அதைத் தொடங்க 1928-ல் மாநில கவுன்சிலால் ஒரு குழு (பல்கலைக்கழக தளக்குழு) நியமிக்கப்பட்டது. நிறுவப்படும் பல்கலைக்கழகம் சுயாதீனம் கொண்டதாகவும் குடியிருப்பு வசதிகளையும் கொண்டு இருக்க வேண்டும் என்றும் அரசாங்க சபை ஏற்றுக்கொண்டது. இந்தப் பல்கலைக்கழகத்தை கொழும்பில் நிறுவுவதா அல்லது கொழும்பிற்கு வெளியில் அமைப்பதா என்ற விவாதம் ஆரம்பமாகிய போதிலும் இறுதியில் அப்பல்கலைக்கழகத்தை கொழும்புக்கு வெளியில் ஓர் இடத்தில் நிறுவுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி கண்டியில் 'பேராதனை' மற்றும் 'அருப்பள' ஆகிய இரண்டு இடங்களும் முன்மொழியப்பட்டு இறுதியில் பேராதனையில் அமைப்பது என்கிற முடிவு எட்டப்பட்டது.

டாக்டர். ஆண்ட்ரிஸ் நெல் மற்றும் டாக்டர். டி.சி. போல் பல்கலைக்கழகத்திற்கு பேராதனையில் காணி சுவீகரிப்புக்கான

வேலைத் திட்டத்தை தயாரித்து சமர்ப்பித்தார். ஆரம்பத்தில் 700 ஏக்கர் கையகப்படுத்தப்பட்டு பின்னர் 1700 ஏக்கர் நிலப் பரப்பு என விஸ்தரிக்கப்பட்டு பின்னர் 2400 ஏக்கராக அது அதிகரிக்கப்பட்டது.

ஒரு பெரும் தேயிலைத் தோட்டம் பல்கலைக்கழகமாக மாறிக்கொண்டிருந்தது. ஆனால் உரிய நேரத்தில் அது முடிக்க முடியாமல் போனமைக்கு இரு முக்கிய காரணங்கள் அமைந்தன. முதலாவது அப்பகுதி பெரு வெள்ளத்தில் மூழ்கியது. இரண்டாவது காரணம் இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்தது.

1942 ஜூலை 1-ம் திகதி இலங்கை மருத்துவக் கல்லூரியும் சிலோன் யுனிவர்சிட்டி கல்லூரி (University College) ஆகியவை இணைக்கப்பட்டு சிலோன் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

அருணாசலம் மண்டபம் 1950, ஜயதிலக மண்டபம், மாஸ் மண்டபம், ஜேம்ஸ் பீரிஸ் மண்டபம் மற்றும் ஹில்டா ஒபேசேகர 1952, சங்கமித்தா மண்டபம் 1953 மற்றும் இராமநாதன் மண்டபம் 1954 ஜூன் மாதம் திறக்கப்பட்டன. சேர். ஐவர் ஜெனிங்ஸ் அதன் முதல் துணைவேந்தராக இருந்தார்.

இந்த இலங்கைப் பல்கலைக்கழகம் 1942-1950 வரை கொழும்பில் இயங்கியது. 1950-ல், இலங்கை பல்கலைக்கழகமானது (University of Ceylon); பல்கலைக்கழக கட்டடங்கள், விரிவுரை மண்டபங்கள், நூலகம், விடுதிகள், உடற்பயிற்சி கூடங்கள், விளையாட்டு மைதானங்கள் இன்னும் பிற வசதிகளை நிறுவிய பின்னர் தான் 1952-ல் இருந்து பேராதனையில் அதிகாரபூர்வமாக இயங்கத் தொடங்கியது.

1952-ம் ஆண்டு கொழும்பில் இருந்து பேராதனைக்கு கொண்டுவரப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகம் 1952-ம் ஆண்டு ஒக்ரோபர் 6-ம் திகதி உத்தியோகபூர்வமாக திறக்கப்படவிருந்த போதிலும், இங்கிலாந்து அரசர் ஆறாம் ஜோர்ஜ் காலமானதால், 1954-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20-ம் திகதி இராணி எலிசபெத் மற்றும் எடின்பர்க் டியூக் ஆகியோரால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

அன்றைய தினம் பல்கலைக்கழகத்தின் திறப்பு விழாவில் பேரவையில் உரையாற்றிய எடின்பர்க் டியூக், ‘பல்கலைக்கழகமொன்றை தொடங்குவது எளிதானது அல்ல. அதைத் தொடங்கிவிட்டால் அதனை எப்போதும் திறந்து வைத்திருத்தல் வேண்டும். உதாரணத்திற்கு இரண்டாவது உலகப் போரின் போது லண்டனில் வான்வழித் தாக்குதல்கள், குண்டுகள் வீழ்ந்தாலும் கடைகள் திறந்தே வைக்கப்பட்டன. அதைப் போலவே வழக்கத்தைவிட திறந்திருக்க வேண்டும் என்றார்.

1972-ம் ஆண்டு இலக்கம் 1-ம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் பின்னர் இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களும் இலங்கைப் பல்கலைக்கழகம் எனப் பெயரிடப்பட்டு அதன் பிரகாரம் இலங்கைப் பல்கலைக்கழகமானது பேராதனை வளாகமாகப் பேணப்பட்டது. 1978-ம் ஆண்டு 16-ம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின்படி, இலங்கையில் அப்போது இருந்த பல்கலைக்கழகங்கள் மீண்டும் தனிப் பெயர்களைக் கொண்ட பல்கலைக்கழகங்களாக நிறுவப்பட்டன. அதன்படி 1979-ம் ஆண்டு முதல் பேராதனைப் பல்கலைக்கழகம் எனப் பெயரிடப்பட்டு தற்போது வரை அப்பெயரே நீடிக்கப்பட்டு வருகிறது.

- 1942-1952 - University of Ceylon
- 1952-1972 - University of Ceylon, Peradeniya.
- 1972-1978 - Peradeniya Campus, University of Sri Lanka
- 1978... - University of Peradeniya

பேராதனை பல்கலைக்கழக கட்டடங்கள், விரிவுரை அரங்குகள், தங்கும் விடுதிகள், வகுப்பறைகள், நூலகங்கள், தோட்டங்கள், நீர், குளங்கள், ஏரிகள் போன்றவற்றின் ஒட்டுமொத்த வடிவமைப்பைப் பற்றி பல்கலைக்கழகத்தின் முதலாவது வேந்தரான கலாநிதி ஐவர் ஜென்னிங்ஸ் கூறும் போது ‘உலகில் எந்தப் பல்கலைக்கழகத்திலும் இப்படி ஒரு அமைப்பைக் கொண்டதாக இல்லை’ (No University in the world have a such a setting) என்று குறிப்பிட்டார்.

இப்பல்கலைக்கழகத்தின் கட்டடத்திற்கு பணம் வழங்கியவர்கள் புத்தகங்களை வழங்கியவர்களின் பட்டியல் என்பனவற்றை ஏப்ரல் 20, 1954-ல் வெளியிடப்பட்ட நினைவு நூலிலும், 1992-ல் ‘பல்கலைக்கழக திறப்பு விழா’வுக்காக வெளியிடப்பட்ட நூலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தை தொடங்க முன்னோடியாக இருந்தவர்கள் உச்ச நீதிமன்ற நீதிபதி எம்.டி. அக்பர், சேர். பொன்னம்பலம் அருணாசலம், சேர். மார்கஸ் பெர்னாண்டோ, சேர். பரோன் ஜயதிலக்க, கலாநிதி ரொபர்ட் மார்ஸ், சேர் ஜேம்ஸ் பீரிஸ், சேர். பொன்னம்பலம் இராமநாதன், டி.எஸ். சேனநாயக்க, டி.ஆர். விஜயவர்தன ஆகியோர் பிரதானமானவர்கள்.

இவர்கள் தங்களின் தனிப்பட்ட செல்வத்தை நன்கொடையாக அளித்தமை, இந்த பல்கலைக்கழகத்தை இன, மத, வகுப்பு பேதமின்றி ஒற்றுமையுடன் உருவாக்கியமையானது அன்றைய இன நல்லிணக்கத்தையும் பிரதிபலிக்கிறது. அதுவரை பட்டப் படிப்புக்காக வெளிநாடுகளையே நம்பியிருந்த காலம் இதன் மூலம் முடிவுக்கு வந்தது.

## பத்மநாபாவும் வில்லியம் டிக்பியும்:

பேராதனைப் பல்கலைக்கழகத்தை உருவாக்குவதற்காக பிரித்தானிய முடியிடம் கோரிக்கை விடுத்தவர்களில் பொன்னம்பலம் அருணாச்சலம், பொன்னம்பலம் இராமநாதன், டி.ஆர். விஜேவர்தன, மார்கஸ் பெர்னாண்டோ, ஜேம்ஸ் பீரிஸ், டி.பி. ஜயதிலக்க போன்ற அறிஞர்கள் முக்கியமானவர்கள்.

இந்த நூலகத்துக்கான முதல் ஆரம்ப நூல்களை வழங்கியவர் சேர். பொன். அருணாச்சலம். சேர். பொன். அருணாச்சலம் 1924-ல் மறைந்தார். அவருக்கு முன்னரே 1921-ம் ஆண்டு அவரது மூத்த புதல்வன் பத்மநாபா இங்கிலாந்தில் மறைந்தார். பத்மநாபாவின் நூலகத்தில் சேகரிக்கப்பட்டிருந்த நூல்களின் தொகுப்பே இலங்கைப் பல்கலைக்கழகத்துக்கான முதல் நன்கொடையாக வழங்கப்பட்டது.[1] நன்கொடையாக வழங்கப்பட்ட மொத்த புத்தகங்களின் எண்ணிக்கை 1421. இந்த நூலகம் இலங்கையின் மிகச் சிறந்த நூலகமாக பிற்காலத்தில் அமைவதற்கு அடித்தளமாகவும் இந்த அதிர்ஷ்டகரமான நன்கொடை நூல்கள் அமைந்தன. பத்மநாபாவின் Encyclopedia Britannica நூல்களில் இருந்து முதலாவது பதிவு செய்யப்பட்ட நூலாக ஏப்ரல் 8, 1921 தேதியிட்டு

பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

அந்த எண் ஒன்றிலிருந்து ஆயிரத்து நானூற்றி இருபத் தொன்று வரையில் 'பத்மநாபா' தொகுப்பு என்கிற பதிவின் கீழ் இவை இன்றும் காணக்கிடைக்கின்றன. இன்று எட்டு லட் சத்துக்கும் மேற்பட்ட நூல்களைக் கொண்டு அது இயங்கி வருகிறது.

பத்மநாபாவுக்குப் பின்னர் இலங்கையின் முக்கிய அரசியல் தலைவர்கள், புலமையாளர்கள்கூட தமது இறுதிக் காலத்தில்



தமது சேகரிப்பை இந்த நூலகத்துக்கு வழங்கி வந்திருக்கி றார்கள். அவர்களின் பெயரிலேயே அந்த தொகுப்புகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அருணாச்சலம் பத்மநாபாவின் இறப்பு ஆண்டை அறிய முடிகிற போதும் அவரின் பிறப்பாண்டை அறிய முடிய வில்லை. குறிப்பாக இறக்கும் போது அவரின் வயது என்ன என்பதை அறிய முடியவில்லை. இங்கிலாந்தில் அவர் கல்வி கற்றுக்கொண்டிருந்த மாணவர் என்கிற பிம்பத்தைத் தான் சில பதிவுகள் தந்தன. ஆனால் அவர் அவ்வளவு சிறியவ ராக இருந்திருக்க முடியாது என்கிற விபரங்களை அவரால் எழுதப்பட்ட மிகவும் ஆழமான அறிக்கைகள், நூல்கள் வெளிச்சம் காட்டுகின்றன. இக்கட்டுரைக்காக தேடிக்கொண்டி ருந்தபோது ஒரு முக்கிய ஆவணம் கிடைத்தது.

1908-ம் ஆண்டு வெளியான Ceylon National Review சஞ்சி கையில், (no.6) அவர் அரசாங்க சபையின் சீர்திருத்தம்' (Reform of the Ceylon legislative council) என்கிற ஒரு விரி வான கட்டுரையை எழுதியிருக்கிறார். வில்லியம் டிக்பி 1877-ம் ஆண்டு இலங்கைக்கான அரசியல் சீர்திருத்தம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து எழுதிய கட்டுரையையும் (An Oriental Colony Ripe for Self-Government) அக் கட்டுரை பற்றிய விரிவான அறிமுகத்தையும் பத்மநாபா செய்திருக்கி றார். ஆனால் வில்லியம் டிக்பி (William Digby) 1904-ம் ஆண்டு மறைந்துவிட்டார்.[2]

அக்கட்டுரையானது 31 பக்கங்களுக்கு நீள்கிறது. அது ஒரு சிறு நூலாக அதே ஆண்டு வெளியாகியிருக்கிறது.[3] அது துண்டுப் பிரசுரமாகவும் அக்காலத்தில் வெளியிடப்பட்டிருக்கி றது என்பதை பத்மநாபாவின் கட்டுரையில் இருந்து அறிந் துகொள்ள முடிகிறது. பத்மநாபா இக்கட்டுரையை வில்லியம் டிக்பி மறைந்த அதே 1904-ம் ஆண்டு ஒரு துண்டுப்பிரசுர மாக வெளியிட்டிருக்கிறார்.[4] டிக்பியின் பரிந்துரையில் கொழும்பில் தமிழர் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்துகிறார். ஐரோப்பியர், பறங்கியர், தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள்/ மலே சமூகத்தினர் ஆகியோருக்காக ஐந்து பிரதிநிதிகளை அரசாங்க சபைக்கு பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்கி றார் அவர்.இதற்கு நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னர் 1919-ல் இலங்கை தேசிய காங்கிரஸ் (Ceylon National Congress) அமைக்கப்பட்ட வேளை சேர். பொன். அருணாச்சலம் இதே (தமிழர் பிரதிநிதித்துவ) கோரிக்கையை முன்வைத்து உடன் பாடு செய்து கொண்டதும். பின்னர் அவர் ஏமாற்றப்பட்டதும், இலங்கை தேசியகாங்கிரசிலிருந்து அவர் வெளியேறியதும் வரலாறு என்பதை அறிவீர்கள். டிக்பி இந்தக் கோரிக்கையை 1877-லேயே வைத்துவிட்டார் என்பதையும் 1908-லேயே பத்ம- நாபா அதனை ஆதரித்து பணியாற்றியிருக்கிறார் என்பதை யும் சுருக்கமாக இங்கே பதிவு செய்ய வேண்டியிருக்கிறது.

அதுமட்டுமன்றி இங்கிலாந்தில் பத்மநாபா வசித்திருந்த காலத்தில் அங்கே அரச செயலாளராக இருந்த மில்னர் பிர- புவை (Lord Milner) சந்தித்து இலங்கையின் அரசியல் சீர்திருத்த நிலை குறித்து உரையாடும்படி இலங்கையில் இருந்து தந்தை அருணாச்சலத்தால் வலியுறுத்தப்பட்டிருக்கி றார்.[5&6]

இக்கட்டுரையில் உள்ள விரிவான விபரங்களைக் கொண்ட அரசியல் சீர்திருத்த பரிந்துரைகளைப் பார்க்கும் போது பத்- மநாபா இலங்கை அரசியலில் தீவிர ஈடுபாடும், ஆழமான அரசியல் சிந்தனையையும் கொண்ட ஒருவர் என்பதை உறுதி செய்துகொள்ள முடிகிறது.

துரதிஷ்டவசமாக பத்மநாபாவின் அரசியல் பாத்திரம் என்ன? மேலதிகமான அவரின் அரசியல் பங்கு என்பவற்றை அறிந் துகொள்ள இயலாமல் போயிருக்கிறது.

கேட் முதலியார் குமாரசுவாமியின் குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் அரசாங்க சபையில் அங்கம் வகித்தார்கள். அவரின் மருமகன் எதிர்மன்னசிங்க முதலியார், மகன் சேர். குமாரசு- வாமி, பேரன்கள் பொன். இராமநாதன், பொன் குமாரசுவாமி, பொன். அருணாச்சலம் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர் கள் வழியில் பத்மநாபாவும் சமூக, அரசியல் ஈடுபாடு கொண்டவராக ஆகியிருக்கிறார் என்று உணரலாம்.

குமாரசுவாமி பரம்பரையில் முற்போக்கான வரலாற்றுப் பாத் திரத்தை ஆற்றியவராக கருதப்படுபவர் சேர். பொன். அரு ணாச்சலம். அவர் மீது சாதிய, வர்க்க, இனத்துவ சார்பு குற் றச்சாட்டுகளை வைக்க முடிவதில்லை.

அவருக்கு எட்டு பிள்ளைகள். மூன்று மகன்களும், ஐந்து மகள்களும். இவர்களில் மூத்தவர் தான் பத்மநாபா. அரு ணாச்சலம் மறைவதற்கு முன்னரே தனது இளம் வயதில் இங்கிலாந்தில் மரணமானார் பத்மநாபா.

பத்மநாபாவின் இறப்பு இன்று வரை மர்மமாகவே இருக்கி

றது. அது மட்டுமல்ல பத்மநாபா பற்றிய விபரங்களும் மிகக் குறைவாகவே உள்ளன. அவரைப் பற்றித் தேடுவதில் பல ரும் களைத்துவிட்டார்கள் என்பதை அறிய முடிகிறது. அவர் பற்றியும் அவருக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றியும் திட் டமிட்டுத் தான் தகவல்கள் மறைக்கப்பட்டு வருகின்றனவா என்கிற சந்தேகமும்கூட எழுகிறது.

ஒரு சிங்கள புலமையாளர் என்னோடு அவரைப் பற்றிய விப ரங்களைப் பகிர்ந்தபோதுதான், அப்படிப்பட்ட ஆளுமை பற்றி மேலதிகமாக அறிந்துகொள்ள தூண்டிற்று. பத்மநாபா இங்கிலாந்தில் அங்குள்ள பெண்ணொருவருடன் பொழு தைக் கழித்து வந்ததாகவும் இதனால் கவலையடைந்த பத் மநாபாவின் தந்தை பொன்னம்பலம் அருணாசலம் தனது மகனை மீட்டு இலங்கைக்கு அழைத்து வருவதற்காக இங்கி லாந்து சென்றதாகவும், ஆனால் துரதிஷ்டவசமாக, அவர் தனது மகனின் உயிரற்ற உடலைத்தான் அங்கே பார்க்க முடிந்தது என்றும், தந்தையின் வருகை கிட்டிய வேளை அதற்குள் தன்னை மாய்த்துக்கொண்டார் என்றும் கதை யுண்டு. அப்புலமையாளர் என்னிடம் இந்தத் தகவலைப் பகிர்ந்தபோது இத்தகவலின் நம்பகத்தன்மை பற்றி ஆராய பல மாதங்களாக முயன்றும் அம்முயற்சி வெற்றிபெற வில்லை. ஆனாலும் அவரைப் பற்றி கிடைத்த சில முக்கிய விபரங்களை பதிவு செய்ய வேண்டும் என்று தோன்றிற்று. தமிழில் பத்மநாபா பற்றி எங்கும் பதிவு செய்யப்பட்டதாக அறிந்ததில்லை.

## பேராதனை பல்கலைக்கழக நூலகம்:

இலங்கையில் 1886 கொண்டுவரப்பட்ட அச்சு, பதிப்பு பற் றிய சட்டம் 1952-ம் ஆண்டு திருத்தப்பட்டது. அதன் பிரகாரம் இலங்கையில் வெளியிடப்படும் பதிப்புகளின் நான்கு பிரதி கள் தேசிய சுவடிகூடத் திணைக்களத்திடம் ஒப்படைக்க வேண்டும். அந்த நான்கு பிரதிகளில் ஒன்று தேசிய நூல கத்திலும், இன்னொன்று தேசிய நூதன சாலையிலும், மற்றது பேராதனை நூலகத்திலும், அடுத்தது ருகுணு பல்கலைக்க ழகத்திடமும் ஒப்படைக்கப்பட்டு பாதுகாக்கப்படுகிறது. துர திஷ்டவசமாக இன்று பலர் அந்த சட்டத்தை மதிப்பதில்லை. எனவே இலங்கையில் பதிப்பிக்கப்படும் நூல்கள், சஞ்சிகை கள் என்பன முழுமையாக தேசிய ரீதியில் பாதுகாக்கப்படு வதற்கான வாய்ப்பை இழக்கின்றனர். இதனை பேராதனை பல்கலைக்கழக நூலகத்திற்கு என்னுடைய நூல்களை நேரடி யாக வழங்கி விட்டு நூலகர்களுடன் கலந்துரையாடியபோது அவர்கள் வெளியிட்ட விசனம். இலங்கையின் பல்கலைக்கழ கத்தின் வரலாற்றை விட இந்த நூலகத்தின் வரலாறு பழமை யானது என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

இன்று அந்த நூலகத்தின் பிரதான நூலகராக இருப்பவர் ஒரு தமிழர். கலாநிதி மகேஸ்வரன் அவர்கள் ஒரு சிறந்த நூலகர் ஆவார். அந்த நூலகத்தில் மிக அரிதான, வேறெங் கும் இல்லாத இலங்கையின் முக்கிய பண்டைய ஓலைச் சுவடிகள் உள்ளன. மகாவம்சத்தின் முழுமையான பழைய மூல ஓலைச் சுவடியும் இங்கே தான் பாதுகாக்கப்பட்டு வரு கின்றன. கடந்த யூன் மாதம் உலக மரபுரிமையாக அங்கு இருக்கும் மகாவம்சப் பிரதிகள் அறிவிக்கப்பட்ட பின்னர் அந்த மகாவம்ச ஓலைச் சுவடிகள் இரும்புப் பெட்டிகளுக் குள் வைக்கப்பட்டு அதற்கென்று ஒரு தனி அறையில் பாது காப்பு படையின் பந்தோபஸ்துடன் பேணப்பட்டு வருவதை அங்கு சென்றிருந்த போது அறிந்து கொள்ள முடிந்தது.

துரதிஷ்டவசமாக இந்த நூலகத்தில் சுமார் மூன்று வீதம் கூட தமிழ் நூல்கள், ஆவணங்கள் இருக்க வாய்ப்பு இல்லை என் பதை அங்கே சென்று பார்த்தபோது உணர முடிந்தது. இந்த நிலைமை அங்கு மட்டுமல்ல இலங்கையின் தேசிய ஆவண நிறுவனங்களாக கருதப்படுகிற பிரதான நிறுவனங்களான



தேசிய சுவடிக்கூடம், கொழும்பு நூதனசாலை நூலகம், தேசிய நூலகம் உட்பட இன்ன பிற நிறுவனங்களையும் குறிப்பிடலாம்.

[1] V.Muttu Cumaraswamy, Founders of Modern Ceylon (Sri Lanka), Eminent Tamils. Uma Siva Pathipakam, Jaffna, 1973

[2] வில்லியம் டிக்பி ஒரு பிரபல பத்திரிகையாளர் என்பது மட் டுமல்ல அவர் ஒரு தீவிர சமூக சீர்திருத்தவாதி. அவர் இந் தியாவிலும் இலங்கையிலும் காலனித்துவ அணுகுமுறையை கடுமையாக விமர்சித்து இயங்கியவர். இந்தியத் தொழிலா ளர்களுக்காக அப்போதே அதிகம் குரல் கொடுத்தவர். இலங்கையில் Ceylon Observer பத்திரிகையில் இணை ஆசி ரியராக இயங்கிய அவர் அன்றைய மெட்ராஸின் ‘The Madras Times’ பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் இயங்கிய வர். சேர். பொன். அருணாச்சலம் அவரின் நெருங்கிய நண் பர். இந்த நட்பே அருணாச்சலத்தின் புதல்வர் பத்மனாபாவுட னான நெருக்கத்தையும் ஏற்படுத்தியிருந்திருக்க வேண்டும். மதுவொழிப்பு இயக்கத்தில் அவர் பணியாற்றிய காலத்தில் இராமநாதன், அருணாச்சலம் ஆகியோருடன் இணைந்து நெல் வரிக்கு எதிராக இயக்கத்தை தீவிரமாக முன்னெடுத்த வர் வில்லியம் டிக்பி.

[3] A. Padmanabha, Reform of the Ceylon Legislative Council’, in Ceylon National Review Vol: 11, No. 6 1908

[4] James T.Rutnam, Sir Ponnambalam Arunachalam, 1853 - 1924, (2nd Edition) Colombo, 1988.

[5] M.Vythilingam, Ramanathan of Ceylon, The Life of Sir Ponnanbalam Ramanathan, Vol II, 1977.

[6] H.A.J.Hulugale, The life and Times of D.R.Wijewardene, Lake House, Colombo, 1960



sarawanan.n@thaiveedu.com



# மந்திரத்தறி : உள்ளடுக்குகள் கொண்ட நாடகப்பனுவல்

- அ. ராமசாமி

## வடிவங்களும் வாசிப்பும்:

இலக்கியப் பனுவல்கள் அதனதன் உட்கட்டமைப்பின் வழியாக இலக்கிய வாசகர்களைத் தேடுகின்றன. ஒவ்வொரு இலக்கிய வடிவத்தின் உட்கட்டமைப்பைப் புரிந்து கொண்ட




வர்களே கவிதை, புனை கதை, நாடகம் என்பதான இலக்கிய வடிவங்களின் வாசகர்களாக இருக்க முடியும். அப்படி யல்லாதவர்கள் பொது நிலையாக வாசகர்கள் எனத் தங்களை அழைத்துக்கொள்வதில் சிக்கல் எதுவுமில்லை. ஆனால், நாடகத்தின் வாசகர் எனச் சொல்லிக்கொள்ள விரும்பினால், அவ் வடிவத்தின் அக, புறக் கட்டமைப்புகள் குறித்த அறிதல் இருக்க வேண்டும்.நாடகப் பனுவலுக்குள் உருவாக்கப் படும் முரண்நிலைப் பாத்திரங்களின் நகர்வுகள் வழியாகவே நாடகப் பனுவலின் வாசிப்பு நிகழும், நிகழ வேண்டும் என்பதைத் தனது கவிதையியலில் விவரிக்கிறார் அரிஸ்டாடில். அதில் விளக்கப்பெற்றுள்ள உட்கட்டமைப்பில் இருக்கும் தொடக்கம், முரண்நிலை வெளிப்பாடு, சிக்கல் மலர்ச்சி, உச்சநிலைக் கூர்மை, பின் விளைவுகள் வழியான முடிவு என்பதான நல்திறக் கட்டமைப்புப் பனுவல்களுக்கு உலக நாடக இலக்கியத்தில் நீண்ட வரலாறு உண்டு.

கவிதையில் சொல்லும் உட்கட்டமைப்பு வடிவத்தைச் சம்ஸ்க்கிருத நாடகவியல் நூலான நாட்டிய சாஸ்திரமும் சொல்கிறது. அர்த்தப்ரக்ரிதீஸ், (ஆரம்பம்) பிஜம், (விதை அல்லது கரு) பிந்து, (உந்து சக்தியின் சிந்தனை அல்லது வளர் நிலை) பாடகம், (கிளை அல்லது கதை) ப்ரகரி, (நிகழ்வுகள் விரிப்பு) கார்யம் (கனி அல்லது முடிவு) என்பன பரதர் தரும் கலைச் சொற்கள். உட்கட்டமைப்பை விபரிக்கும் இவ்விரு நாடகவியல் நூல்களும் அதன் புறக்கட்டமைப்பை உரையாடல், காட்சி, அங்கம் என்ற பகுதிகளாகச் சொல்கின்றன. நாடகாசிரியர் எழுதும் உரையாடல்களின் தொகுதி காட்சியாக மாறுவதும், காட்சிகளின் தொகுதி அங்கமாக மாறுவதும், அங்கங்களின் தொகுதி நாடக வடிவமாக உருக்கொள்வதும்தான் பரத முனியும் அரிஸ்டாடிலும் சொல்லும் நாடக இலக்கியத்தின் புறவடிவம். கிரேக்கச் செவ்வியல் நாடகங்கள் தொடங்கி நவீனத்துவத்தின் நுழைவை முன்வைத்த நடப்பியல் நாடகங்களின் உட்கட்டமைப்புகள் நல்திறக் கட்டமைப் போடு விளங்கியவை. சம்ஸ்கிருதச் செவ்வியல் நாடகங்களையும் அதில் சேர்த்துக் கொள்ளலாம். ஐரோப்பிய நடப்பியல்வாத வெளிப்பாட்டாளர்களான இப்சன், செகாவ், மோலியர் போன்றவர்களும் பாத்திரம் சார்ந்த முரண்நிலைக் கட்டமைப்பைப் பின்பற்றி ஈரங்க, மூவங்க நாடகங்களைத் தந்தவர்களே.

இரு நிலையிலும் - உட்கட்டமைப்பிலும் புறக்கட்டமைப்பிலும் பெரும் உடைப்பை உண்டாக்கிய நாடகங்கள் நவீனத்துவத்துக்குப் பின்னான நாடகங்கள். நடப்பியல் அல்லாத அழகியல் வெளிப்பாடுகளைப் பேசிய இருத்தலியல், அபத்

தவியல், குரூரவியல், குறியீட்டியல், காவியபாணி அரங்கு போன்றவற்றின் வழியாகப் பனுவல்களை உருவாக்கிய நாடகாசிரியர்களின் நாடகப் பனுவல்களில் நல்திறக் கட்டமைப்பு முழுமையாக நிராகரிக்கப்பட்டன. பாத்திரம் சார்ந்த எதிர்வுகளை முன்வைத்த முரண்நிலைக்குப் பதிலாக ஒற்றைப் பாத்திரத்திற்குள்ளான அகவயமான முரண்நிலையைச் சில நாடகாசிரியர்கள் வடிவங்களாக்கினர். சிலரது பனுவல்களில் உருவாக்கிய குறியீட்டு வகைப் பாத்திரங்களுக்கான எதிர்நிலைப் பாத்திரங்களும் கருத்தியல் போக்கும் சமூக வெளியில் இருப்பதாக முன்வைத்தனர். இவ்வகை வேறுபாடுகளோடுதான் அயனெஸ்கோ, சாமுவேல் பெக்கட், சார்த்தர், பெட்ரோல்ட் பிரெக்ட், ழான் ஜெனெ, அந்தனின் ஆர்த்தோ போன்றவர்களின் நாடகப் பனுவல்களை வாசிக்க முடியும். அவற்றை மேடையற்ற நினைக்கும் நெறியாளர்களுக்கு இவ்வகை அரங்கியல் அழகியல்களில் முழுமையான ஈடுபாடு இருக்க வேண்டும்.

## கலவை நிலைக்கட்டமைப்பு:

மந்திரத்தறி எனத் துஷி ஞானப்பிரகாசம் மொழிபெயர்த்துள்ள - THE ENCHANTED LOOM by Suvendrini Lena - நாடகப் பனுவலை வாசிக்கும் நாடகத்தின் வாசகர் ஒருவருக்கு ஆச்சரியமூட்டும் வகையில் இரு நிலைகளும் - நல்திறக் கட்டமைப்பின் கூறுகளும், அதிலிருந்து வெளியேறிய புதுவகை நாடகப் பனுவலாக்கமும் ஒருசேர வெளிப்படும் பனுவலாகத் தோன்றக்கூடும். மூவங்க நாடகம் என்ற புறக் கட்டமைப்போடு நாடகத்தில் இடம்பெறும் பாத்திரங்களாகக் கண்ணன், கவிதா, செவ்வி என்கிற செவ்வானம், தங்கன் என்கிற தங்கராஜா, மென்டோசா, வாக்டி, உதவியாளர் என நேரடியாகத் தோன்றும் பாத்திரங்களோடு, காவலன் என்ற நினைவிலியில் தோன்றும் பாத்திரமும் இடம் பெற்றுள்ளன. பாத்திரங்களின் அடையாளம் சார்ந்து நாடகத்தின் நிகழ்வு வெளிகளாக இரண்டிடங்களை அடையாளப்படுத்தியுள்ளார் நாடகாசிரியர். கண்ணன் தொடங்கி அவரது சகோதரி கவிதா, தாய் செவ்வி, தந்தை தங்கன் வரையிலான குடும்ப உறுப்பினர்கள் சந்தித்து உரையாடும் வீடு என்னும் குடும்ப வெளி முதன்மையான நிகழ்வு வெளி. இன்னொரு நிகழ்வு வெளி தங்கனுக்கு இருக்கும் காக்காய் வலிப்பு நோயைக் குணப்படுத்தும் பொருட்டுச் செல்லும் மருத்துவமனை. இவ்விரு வெளியிலும் தோன்றாப் பாத்திரமாக - நினைவுக்குள் அலையும் பாத்திரமாக இருந்து இணைப்பை உண்டாக்கும் பாத்திரம் காவலன்.

நல்திறக் கட்டமைப்பில் மொத்த நாடகத்திற்கும் தொடரும் முரண் வளர்ச்சி என்பது உட்கட்டமைப்பாக அமையும். அதற்குப் பதிலாக ஒவ்வொரு அங்கத்திலும் உருவாக்கப்படும் முரண் என்பது ஒவ்வொரு அங்கத்தையும் தனியொரு நிகழ்வாக ஆக்கியிருக்கிறது. இதன் மூலம் மந்திரத்தறி நடப்பியலுக்குப் பிந்திய நவீனத்துவ வடிவத்தைத் தனதாக மாற்றிக்கொண்டிருக்கிறது. முதல் அங்கத்தில் கண்ணனுக்கும் தங்கனுக்குமான உரையாடல்கள் வழியாக உருவாகும் முரண்நிலை மையமாக இருக்கிறது. இரண்டாவது அங்கத்தில் செவ்விக்கும் தங்கனுக்குமான உரையாடல்களில் விளக்கம் பெறும் முரண் நிலை மையமாக மாறுகிறது. இவ்விரு மையங்களின் உரையாடல்களுமே குடும்ப உறவு சார்ந்த மகன் -தந்தை - மனைவி என்பதான உறவுகளோடும், அதனைத் தாண்டிய மருத்துவ நோக்கத்தை நோக்கி நகரும்


சுவேந்திரினி லீனா
Suvendrini Lena

விவாதங்களோடும் இருக்கின்றன. அந்த விவாதங்களை உருவாக்கும் ஒரு பாத்திரமாக, பனுவலில் நேரடியாகத் தோன்றாத - நினைவில் இருக்கும் காவலன் பாத்திரமாக இருக்கிறது.

மூன்றாவது அங்கத்தின் விவாதம் தங்கனுக்கு இருக்கும் காக்காவலிப்பு என்பதை நோயாகவும், உளவியல் பிறழ்வாகவும் விவாதிக்கும் மருத்துவ அறிவை விளக்கப்படுத்தும் நிகழ்வுகளால் பின்னப்பட்ட காட்சித் தொகுப்புகள். இந்தப் பிறழ்வு நிலையை - நினைவிலி மனநிலையை, நனவாகக் கொண்டுவரும்போது தங்கராஜாவாக இருந்தபோது தொடங்கித் தங்கனாக நினைத்துக்கொண்ட பின்னும் துரத்தும் குற்றவுணர்வே வலிப்பாக இருக்கிறது என்பதை முன்வைக்கிறது. இதில் மருத்துவர்களின் ஆய்வும் சோதனைகளும் குறித்த உரையாடல்களும் காட்சிப் பின்னணிகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. தங்களுக்குப் பிறந்த காவலன், கண்ணன் என்ற இரட்டைப் பிள்ளைகளில் ஒருவனை - காவலனைப் புலிப் போராளியாக நாட்டில் விட்டு விட்டுப் புலம்பெயர்ந்து

அகதியாக வாழ்வதின் மீதான இருப்பியல் கேள்வியாகக் குற்றவுணர்வு மாற்றம் பெற்றுள்ளது. இன்னொரு நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் இருப்பு உண்டாக்கும் அச்சவுணர்வும் மீளாத் துயரங்களின் துரத்தலும் என நாடகம் ஆழமான உளவியல் மருத்துவப் படிமங்களுக்குள் செல்கிறது. நாடகப் பனுவலின் கட்டமைப்பும் ஒவ்வொரு அங்கத்திலும் விவாதப் படும் முரண்களும் மூன்று அங்கங்களையும் இணைக்கும் கண்ணியாக இழையோடும் காவலன் என்னும் புலிப் போராளியைக் குறித்த அலைவு மனமும் மந்திரத்தறியை ஓர்மையுள்ள நாடகப் பனுவலாக ஆக்கியிருக்கிறது.

ஒன்றுக்கு மேற்பட்ட அடுக்குகளைக் கொண்ட நாடகப் பனுவல்களை எழுதும் நாடகாசிரியர்கள், பனுவலில் இருக்கும் உள்ளார்ந்த சிந்தனைத்தள வேறுபாட்டை மேடையேற்றத்தில் கொண்டு வருவதற்கான குறிப்புகளைக் கவனமாக எழுதுவதுண்டு. உரையாடலில் இருமொழி வெளிப்பாட்டைக் கொண்டது மந்திரத்தறி. மற்றவர்கள் எல்லாம் தமிழ் பேசும் பாத்திரங்களாக இருக்க, மருத்துவர்களான மென்டோசாவும் வாக்டியும் ஆங்கிலம் பேசும் பாத்திரங்கள். அவர்கள் இடம்பெறும் நிகழ்வெளியில் ஒன்று மருத்துவ மனையாகவும் ஆய்வுகூடமாகவும் இருக்கிறது. இரு மொழி உரையாடல்களின் போது அரங்க அமைப்பு எப்படி அமைக்கப்பட வேண்டும் என்பதைக் கவனமாகத் தந்துள்ளார் சுவேந்திரினி லீனா. நாடகப் பனுவல்களை எழுதித் தரும் ஆசிரியராக மட்டுமல்லாமல், ஆற்றுகைப் பனுவலை உருவாக்கும் இயக்குநரின் பணியையும் உள்வாங்கி வெளிப்பட்டுள்ளார். பனுவலின் குறிப்புகளைப் பின்பற்றி அரங்க அமைப்பைச் செய்துகொண்டு, பாத்திரங்களின் உரையாடல்களுக்கேற்ப நடிகர்களைத் தயார்படுத்தினாலே இயக்குநரின் ஒத்திகைப் பணிகள் நிறைவடைந்துவிடும். அகதி வாழ்க்கையைத் தெரிவு செய்தவர்களைத் துரத்திக் கொண்டிருக்கும் நாடற்றவர்கள் என்ற தன்னிலையின் மொழி புனைகதைகளில் வெளிப்படுவதைவிட நாடக உரையாடல்களில் ஆழமாக வெளிப்பட்டாக வேண்டும். ஏனென்றால், இது நேரடியாகப் பார்வையாளர்களோடு பேசும் மொழி. அதனைக் கவனத்துடன் உணர்ந்து, துரத்தலுக்கான மொழி தேர்வு செய்யப்பட்டுள்ளது. புலப்பெயர்வு என்பதோடு, இளம் போராளியாக ஒரு மகனை விட்டு விட்டு வந்த குற்றமனம் கொள்ளும் தவிப்பைச் சுமந்து கொண்டிருக்கும் குடும்ப உறுப்பினர்களின் மனநிலையைத் தொடக்கம் முதலே நிழலாகப் பரவச் செய்துள்ளது பாத்திரங்களின் உருவாக்கம். இதுதான் மையப் பாத்திரம் என்று எதனையும் அடையாளப்படுத்திவிட முடியாது. ஏற்று நடிக்கும் நடிகர்களுக்குச் சவாலாக இருக்கும் வகையில் ஒவ்வொரு பாத்திரமும் அதனதன் அளவில் முழுமையான பாத்திரங்களாக வார்க்கப்பட்டுள்ளார்கள். அகதி வாழ்க்கையும் நாடற்றவர் என்ற தன்னிலையோடு கூடிய மனிதக் கூட்டமும் இருக்கும் வரை அவர்களின் நாடகமாக இந்த மந்திரத்தறியின் மேடையேற்றத்தை நிகழ்த்திக் கொண்டே இருக்கலாம்.

இப்படியான அடுக்குகள் கொண்ட நாடகப் பனுவல் ஒன்றைக் கடந்த 40 ஆண்டு காலத் தமிழ் நாடகப் பனுவல் வரலாறு வாசிக்கத் தரவில்லை என்றே சொல்ல முடியும். தமிழில் எழுதப்பெற்ற நவீன நாடகப் பனுவல்களில் பெரும்பாலானவற்றை வாசித்திருக்கிறேன். இருத்தலியல் கேள்விகளோடும் உளவியல் விசாரணைகளோடு எழுதப்பெற்ற இந்திரா பார்த்தசாரதி, ந. முத்துசாமி போன்றோரின் பனுவல்கள் ஏதாவது ஒரு மையத்தை விசாரணைக்குட்படுத்தும் தன்மையிலேயே வெளிப்பட்டுள்ளன. 1970-களில் நவீன நாடகப் பனுவல்களை எழுதத் தொடங்கிய இவ்விருவரது பனுவல்களோடு ஞான. ராஜசேகரன், ஜெயந்தன், எஸ்.எம்.ஏ. போன்றவர்களின் பனுவல்களிலும் அதிகமும் விசாரணைக்குள்ளானது தமிழ்நாட்டின் சமகாலத் திராவிட அரசியலின் அபத்தங்களே. உரையாடல்களில் மொழி சார்ந்த அபத்தவியல் கூறுகளைப் பயன்படுத்திச் சமகாலத் தமிழ் அரசியலை இவர்கள் விவாதப்படுத்தினார்கள். ந. முத்துசாமி 'நாற்காலிக்காரர்', 'சுவரொட்டிகள்', 'காலம் காலமாக' போன்ற பனுவல்களில் அரசியல் தளத்தில் நடக்கும் அபத்தங்களை விவாதித்துள்ளார். அவரது நற்றுணையப்பனில் அபத்த நிலையைத் தாண்டியொரு குறியீட்டுத் தளத்தில் அரசியல் பிம்பத்தின் கடவுள் நோக்கிய நகர்வை வாசிக்க முடியும். இந்திரா பார்த்தசாரதியின் போர்வை போர்த்திய உடல்கள், மழை, பசி, கால இயந்திரங்கள் போன்றன வேறு வேறு தொனியில் மேற்கத்திய கலையியல் பார்வையோடு எழுதப்பெற்ற நாடகப் பனுவல்கள். 1990-களுக்குப் பிறகு ஒட்டுமொத்த தமிழ் நவீன நாடகப் பனுவல்களும் இந்தியப் புராணங்களின் / இதிகாசங்களின் மறுவிளக்கப் பனுவல்கள் என்ற திசைக்குள் நகர்ந்தது.

ஒரு நாடகப் பனுவலின் முழுமை என்பது மேடையேற்றத்தில் விரியும் கற்பனைகளோடு சேர்ந்தது. அதே நேரம், ஒரு பனுவலுக்குள் இருக்கும் உரையாடல்கள் வாசிக்கும் போதே அதன் உள்ளர்த்தங்களுக்குள் ஈர்த்துக்கொள்ளும். அப்படி ஈர்த்துக்கொள்ளும் சொற்களே நாடக இயக்குநர்கள் உருவாக்க நினைக்கும் மேலதிக அர்த்தங்களுக்குக் காரணங்களாகின்றன. சில நாடகங்களை இயக்கியவன் என்ற வகையில் மந்திரத்தறி நாடகத்தை வாசித்துக் கொண்டிருக்கும் போது பின்வரும் வரிகளைக் குறித்து வைத்தேன். நான் மேடையேற்றினால், இந்த வரிகளே நான் தர நினைக்கும் அர்த்தங்களுக்கான காரணிகளாக இருக்கும்.

நான் வீடற்றவன் தங்கன். உங்களைப் போலத்தான். எனது இனத்திற்கு எனவும் ஒரு நாடில்லை. - வாக்டி /121

நாங்கள் இங்கு வந்த காலம் முதல் பயந்தே இருந்திருக்கிறேன். அறிந்து கொள்வதற்குப் பயம். அவன் எப்படி இறந்தான் என்று கேட்பதற்குப் பயம். ஏன் இறந்தான்? ஏன் அவன் இறந்தான் நான் ஏன் இறக்கவில்லை. எனது வாழ்நாள் முழுவதுமே நான் பயந்தே இருந்திருக்கிறேன். இந்த நேரத்தில் அவன் என்னவாக இருக்கான் தெரியுமா? அவன் வாழ்நாள் முழுவதும் ஒரு புலியாக இருந்தான். - கண்ணன்/ 129

இல்லை. காலத்தையும் செயல்களையும் உருவாக்க முடியாது. கருத்தை மட்டுந்தான் உருவாக்க முடியும் - செவ்வி/145

உங்களுக்கு மருந்து தேவைப்பட்டுது. நடுக்கம் நிக்கமாட்

டன் எண்டிட்டுது. அதனால நான் நடனமாடத் தொடங்கினன். நடனம் காமத்தைத் தூண்டும். அதுதானே தொன்மையான புனிதமான மரபு இல்லையா? ஒருத்தர் ஒருமுறை சிதைஞ்சு போனபிறகு அடுத்த முறையைப் பற்றி யாருக்கு என்ன கவலை? - செவ்வி/ 175

என்னிலை ஒண்டுமே எஞ்சியில்ல. உண்மையால என்ன பயன்? யார் சுதந்திரமாக இருக்கினம்? நீங்களா? அந்த ஆர்மிக்காரங்களா? பிக்குமாரா? புலிகளா? யாருக்குச் சுதந் திரமிருக்கு? நாட்டில் இருக்கிறவைக்கா? நாட்டை விட்டு வெளியேறவைக்கா? செத்தவை மட்டும்தான் உண்மையில் சுதந்திரம் பெற்றாக்கள். என்னைப் பொருத்தவரைக்கும் காதல் முடிஞ்சுபோச்சு - செவ்வி/ 177

அன்பு பாவத்திலயிருந்து விடுதலை தருமே! - காவலன்/ 197

அன்பென்டா என்ன? தப்பிப் பிழைக்கிறதுக்கும் அன்புக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை - காவலன்/ 199

மென் டோசா, எங்கள் கண்களுக்குத் தெரியும் ஆறுகளுக்கு மட்டுந்தான் நாங்கள் வரைபடம் கீறுகிறோம். நாடில்லாத ஒரு மனிதன், தன் வீடாக ஒரு காயத்தை மட்டுமே கொண் டுள்ள மனிதன், அவன் எப்படி சாதாரணமானவனாக இருக்க முடியும்?- வாக்டி/ 206-07

இப்ப, நீங்கள் கேப்பீங்கள். உயிருக்கு என்ன நடக்கிறது எண்டு. யமன் அதை வைச்சு என்ன செய்யிறவன் எண்டு. அவன் அதை உருவியெடுத்துக் காற்று மண்டலத்துக் குள்ளை விடுறான். அது காலங்காலமாய் இருந்த எல்லா ஆன்மாக்களோடையும் கலக்குது. ஒரு மழைத்துளி கடலில் கரையிறது போல.

ஆன்மாக்களின்ற அந்தக் கடலில எதுவுமே மறக்கப்படுவ தில்லை. ஆன்மாவிற்கு தன்ரை எல்லா வாழ்க்கைகளின்ற கதைகளும் தெரியும். அதின்ரை காதல்கள். அதின்ரை இழப்புகள், அதின்ரை தீரச்செயல்களை. இவ்வளவு அறிவு இருக்கிற இடத்தில சோகம் இருக்க முடியாது - செவ்வி/ 215

இன்றைய உலகம் போர்களினால் உருவாக்கப்படும் அழிவு-களைச் சுமந்து திரியும் உலகமாக இருக்கிறது. ஐரோப்பி யர்கள் சந்தித்த இரண்டு உலகப் போர்களும் அவர்களுக் குத் தந்த இடப்பெயர்வுகளைப் பலவிதமாக எழுதிக்காட்டி யுள்ளனர். அப் பெயர்வுகளைக் காட்டிலும் பன்மடங்குப் பேரழிவுகளையும் புலப்பெயர்வுகளையும் உருவாக்கியுள்ளன உலகப் போர்கள் எனப் பெயரிடப்படாத போர்கள். நாட்டின் இறையாண்மையைத் தக்கவைத்துக்கொள்ளவும், இறையாண் மையின் பெயரால் அழித்தொழிக்கப்படும் தேசிய இனங்கள் தங்களின் அடையாளத்தைக் கைவிடக் கூடாது என்ற நிலை பாட்டோடு தொடங்கிய உள்நாட்டுப் போர்கள் எல்லா நிலை யிலும் ஒரு நாட்டின் புவிப் பரப்புக்குள் நிகழ்ந்திருக்கலாம். ஆனால் பாவிக்கப்படும் ஆயுதங்களும், ஆயுதங்களைப் பாவிப்பதற்காக உருவாக்கப்படும் கருத்துரைக் கருவிகளும் அந்நாட்டுக்கு மட்டுமே உரியனவாக இருந்ததில்லை. இலங் கைத் தீவுக்குள் நடந்த தனி ஈழத்திற்கான போரில் மறைமுக மாகப் பங்கேற்ற நாடுகளின் பட்டியல் நீளமானது என்பதை உலகம் வெளிப்படையாகச் சொல்வதில்லை.

இரண்டு உலகப் போர்களுக்குப் பின்னால் நடந்த போர்க ளும், மனிதர்களைக் கூட்டம் கூட்டமாக சொந்த நிலத்தை விட்டு இடம் பெயர்த்துக் கொண்டே இருக்கின்றன. இடம்பெ யர்வுகளின் தொடர்ச்சியில் புலப்பெயர்வு, நாடற்றவர்கள் என்ற கூட்டத்தை உலகம் முழுக்க உருவாக்கியிருக்கிறது. புதிதாக உருவாகியிருக்கும் உலகமயப் பொருளாதார உற் பத்திக்கும் சேவைக்கும் இவ்வகை மனிதர்கள் ஒருவகைத் தேவையாகவும் இருக்கிறார்கள் என்பது நடைமுறை யதார்த் தம். குறைகூலித் தொழிலாளர்களாகப் பணியாற்றும் சேவகர் களாக நாடற்றவர்களை அனுமதிக்கின்றது புதுவகை முதலீட் டியம். அவ்வகை அனுமதிக்கு மனித உரிமை, மனிதாபிமா னம் எனப் பெயரிட்டுக் கொண்டாலும் முதலீட்டியத்தின் தேவையும் உள்ளடங்கியிருப்பதை மறுத்து விடமுடியாது. இதனையெல்லாம் மந்திரத்தறி வெளிப்படையாகப் பேச வில்லை என்றாலும் ஒரு மேடையேற்றத்தில் இப்பனுவலை இயக்கும் இயக்குநர் உருவாக்கும் காட்சிப் படிமங்கள் வழி யாக முன்வைக்க முடியும்.

### பின் குறிப்பு:

போலந்து நாட்டு வார்சாப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி யபோது எனது மாணாக்கர்களிடம் இருமொழிப் பனுவல் களை அதிகம் பார்த்திருக்கிறேன். போல்ஸ்கி மொழியில் எழுதப்பெற்ற கவிதைகள், கதைகள், நாடகங்கள் போன்றன இடதுகைப் பக்கம் அச்சிடப்பெற்றிருக்கும். அதன் மொழி பெயர்ப்பு - ஆங்கிலம்/ பிரெஞ்சு/ ஜெர்மனி போன்ற ஐரோப் பிய மொழிகளில் ஒன்றில் வலதுகைப் பக்கம் அச்சிடப் பெற் றிருக்கும். இதன் மறுதலையாக போல்ஸ்கி மொழிக்குக் கொண்டு வரப்படும் பனுவல்களில் இடவல மாற்றம் இருக் கும். இவ்வகையான இரு மொழிப் பதிப்பு நூல்கள் அதிக மும் தொகுப்பு நூல்களாக இருந்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட கவிகளின் கவிதைகள், சிறுகதை ஆசிரியர்களின் கதைகள், நாடகாசிரியர்களின் நாடகங்கள் போன்றன அவை. அத்த கைய இரு மொழிப் பதிப்புகள் வழியாகவே உலக இலக்கி யத்தோடு உடனடிப் பரிமாற்றம் நடக்கிறது. இந்த நூலும் அப்படியொரு பதிப்பாக இருக்கிறது. சுவேந்திரினி லேனா வின் ஆங்கில மூலம் இடது பக்கமும் துஷி ஞானப்பிரகா சத்தின் தமிழ்ப் பெயர்ப்பு வலது பக்கமும் அச்சிடப்பெற்றுள் ளது. தமிழ் இலக்கியத்தை உலக இலக்கிய வரைபடத்தின் பகுதியாக மாற்றும் போக்கில் இத்தகைய பதிப்புகளே பெரும் பங்காற்றக்கூடியன. மொழிபெயர்த்து மேடையேற்றம் கண்டுள்ள துஷி ஞானப்பிரகாசத்திற்குப் பாராட்டு.




ramasamy.a@thaiveedu.com




*உரக்கப்பாடுகிறேன்*
*உன் செவியில் விழுகிறதா?*

- திருமாவளவன்

ஈழப்போர் சூறையாடிய மக்களின் வாழ்க்கையையும், அலைந்துழலல்களையும், மரணங்களையும் பாடிய ஈழக் கவி



ஞர்களில் முக்கியமான ஒருவர் கவிஞர் திருமாவளவன். ஈழப் போரைப் பாடிய கவிஞர்களில் அவரும், செழியனும் கவனத்துக்குரியவர்களாக இருந்தபோதும் பெரும்பாலும் அவர்கள் ஈழ இலக்கிய வெளியில் கிட்டத்தட்ட ஒரு மறக்கப்பட்ட நிலைக்குச் சென்றுவிட்டனர். ஆனால் அவர்களது கவிதைக ளின் புனைவுத்தன்மை, செறிவு, கவித்துவ மொழிப்பாவனை எனப் பார்த்தால் ஈழ இலக்கியத்திலும், தமிழ்க் கவிதை வெளியிலும் அவர்களது இடம் என்பது இலகுவில் புறக்க ணித்து விடக்கூடியதல்ல. ஈழத்தில் அதிகம் பேசப்படும் கவி ஞர்களுக்கும் காலப்போக்கில் அதுவே நடந்துவிடக்கூடிய சாத்தியங்களையே ஈழ இலக்கிய வெளி அதிகம் வெளிப்ப டுத்தி வருகிறது.

இந்த போர் முன்னோடிக் கவிஞர்களில் சேரன் தான் அதிகம் உரையாடலுக்கு இன்றளவிலும் உள்ளாக்கப்படுபவராக இருக்கிறார். அவருக்கு அடுத்த தலைமுறையில் கருணாக ரன் இருக்கிறார். ஜெயபாலன், சு.வில்வரத்தினம், எம்.ஏ.நுஃமான் போன்றவர்கள் சேரனுக்கு அடுத்து பேசப்படுபவர்களாக, கவ னிக்கப்படுபவர்களாக இருந்தனர். இந்த மூவரிலும் இப் போது சு. வில்வரத்தினம் மெல்ல மெல்ல நம் நினைவுகளிலி ருந்து மறக்கப்பட்டுவிட்டார் என்றுதான் நினைக்கிறேன். ஈழ இலக்கிய உலகு ஒரு படைப்பாளி உயிருடன் இருக்கும் போதே அவரை மறந்துவிடக்கூடிய விசித்திரமான மறதிச் சூழலால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது எவ்வளவு துயரமா னது!

இந்த சூழலில் அவர்களது பங்களிப்பும் மறக்கப்படும் நிலைதான் கண்ணுக்கெட்டிய வரை தெரிகிறது. ஈழத்தின் புதிய தலைமுறையிடம் முன்னோடிகள் பற்றிய உரையா டல்கள் நிகழ்வதே இல்லை. ஈழப்போர் தோல்வியடைந்தத னால் இது ஏற்பட்டதா என்றால் அப்படி அல்ல. ஈழப் போர் நாவல்கள் போர் தோல்வியடைந்தும் முடிவுற்றும் கூட இன் றும் கவனத்துக்குரியதாக களத்தில், உரையாடலில் உயிர்ப் புடன் ஊடாடிக்கொண்டே இருக்கிறது. அப்படி என்றால் இது எதன் குறிகாட்டி? தமிழ் இலக்கியச் சூழலில் கவிதைக்கான இடம் குறைந்து வருகிறது என எடுத்துக்கொள்ளலாமா?

ஆயினும் ஈழப் போராட்டத்தின் முதன்மையான இலக்கிய வடிவமாக அதன் தீவிர உணர்ச்சிகளின் கொந்தளிப்பை கொப்பளித்த இலக்கிய வடிவமாக கவிதைகளே இருந்தன. போர் வாழ்வியலின் பல்வேறு நிலைகளை இயல்பான



உணர்ச்சி நிலைகளில் கவிதைகள் பேசின. ஈழக் கவிஞர்களை மீள அசைபோடும்போது நாவல்கள் ஊடறுக்காத வெளிகளுக்குள்ளும் கவிதைகள் சஞ்சரித்திருக்கின்றன என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஈழத்தின் போர்க்காலக் கவிதைகள் ஒரே வாழ்வியலை வெவ்வேறு கோணங்களில் முன்வைத்தவை. அநேகமாக தனிமனித உணர்வு நிலையில் நின்று பேசியவை. அதனூடாக மானுட உணர்ச்சிகளின் பல்வேறு கொந்தளிப்புகளை, வாழ்வின் துயரச் சித்திரங்களை முன்வைத்தவை. ஈழக் கவிஞர்களின் வாழ்வும், முகங்கொடுத்த துயரங்களும், அவர்களை எழுதத் தூண்டிய புறச்சூழலும், அகத்தே நிகழ்ந்த உணர்வுச் சிலிர்ப்புகளும் ஒரே நிலத்தில், ஒரே அரசியலிலிருந்து உருவானவை என்பதால்தான் அவர்களின் கவியுலகு பொதுமைப் பாட்டையும், ஒத்த கூறுகளையும் அதிகம் கொண்டிருந்தன. இதனால் தான் ஈழத்துக் கவிதைகள் என்று சொல்வதை விடவும் ஈழத்துக் கவிதை இயக்கம் என்று சொல்லத் தோன்றுகிறது.

போர்க்கால மானுட அவலத்தை மிக ஆழமாக, புனைவுச் செறிவோடு பல ஈழக் கவிதைகள் முன்வைத்தன. ஈழக் கவிதைகளின் இந்த அடர்த்திக்கு 1980-களில் எம்.ஏ. நுஃமான் மொழிபெயர்ப்பில் வெளிவந்த பலஸ்தீனக் கவிதைகள் தொகுப்பு மிகப் பெரும் பங்காற்றியது. சுருக்கமாகச் சொல்வதானால் ஈழக்கவிஞர்கள் அந்தத் தொகுப்பை மட்டுமே தன் முக்கிய உசாத்துணையாக வரித்துக்கொண்டனர். அதன் தாக்கத்திலிருந்து அவர்களால் விடுபட முடியாதிருந்தது. அது அவர்களின் மாறாத வாழ்வையும், மனநிலையையுமே முதலில் வெளிக்காட்டுகிறது.

ஒடுக்கப்படும் மக்களின் வாழ்வு, அகதியாதல், புலப்பெயர்வு போன்ற யுத்தத்தால் நிகழும் மானுட பொது அவலத்துக்குள் ஈழக் கவிஞர்களும் வாழ நேர்ந்தவர்கள். திருமாவளவன் தன் கவிதை ஒன்றில் எழுதினார் -

*‘காட்டில் கடல்வெளியில்*
*கரிசல்காட்டு அகதிமுகாம்களில்*
*முகமிழந்த கடவுச்சீட்டில்*
*சரக்குக் கப்பலின் அணியக் கிடங்கில்*
*பனியில் பனிநின்ற புலத்தில்*
*பன்மொழிக் கலப்பில்*
*துருவக் கொடுங்குளிரில்..’*

வாழ்வையும் நம்பிக்கையையும் தொலைத்த ஒரு மக்கள் திரளின் கூட்டுத் துயரத்தை பேசும் இந்த வரிகள் போர் முடிந்துவிட்டது என்பதற்காக அதன் கனத்தை இழந்துவிடுமா?

பனிவயல் உழவு கவிதையிலும் மண்ணிழப்பின் துயரத்தை, அகதி வாழ்வின் வலியை பேசுகிறார் -

*துருவக் கொடுங்குளிரில்*
*அலைகின்ற சூரியன் நீ*
*ஆயுதம் துரத்த நெடுந்துயர் கடந்த பரதேசி நான்*
*உனை யார் துரத்த இங்கு வந்து அகதியானாய்?*

போராட்ட வழிமுறைகள் மீது அவருக்கு ஒரு விமர்சனத்துடனான ஈடுபாடு இருந்தது. விடுதலை இயக்கங்களின் எல்லா செயற்பாடுகளையும் சுயவிசாரணையற்று அங்கீகரிக்கும் ஒருவர் அல்ல அவர். நச்சுக்கொடி கவிதையில் இந்தக் குரலைக் கேட்கலாம்.

*வெடிவால் முளைக்கு முன்னர்*
*அழைத்து மூளை நீக்கி*
*கபாலத்தை கோதாக்கி சலவையிட்டுத் துடைத்து*
*வெடி மருந்தை நிரப்பி ஏவிவிடும் கலையும்*
*மாவீரம் செய்கின்ற வல்லமையும்*
*வாய்த்திருக்கு அவர்க்கு*

இந்த எதிர்க்குரல் போராட்டத்தின் மீது அவருக்கிருந்த அவநம்பிக்கையை, அல்லது மறுப்பைக் காட்டுவதல்ல. சுயபரிசீலனையைக் கோரும் வரிகள் இவை. போராட்ட வழிமுறைகளில், வடிவங்களில் புதிய மாற்றங்களை எதிர்பார்த்த ஒரு கவிதை மனதின் கேவல்கள் அவை. சத்திரியம் கவிதைக்குள்ளும் இந்தக் குரலையே கேட்கிறோம். ஆனால் இந்த நுண்ணிய பார்வைகளை புரிந்துகொள்ளும் களமாக ஈழப் போராட்டக்களம் இருக்கவில்லை என்பதை நாம் அறிவோம்.

அவரது பனிவயல் உழவு புலப்பெயர்வின் வலியைப் பேசும் கவிதைகளை அதிகம் கொண்டவை. பரதேசியின் பாடல் கவிதையும் இந்த வலியை வாசகருக்கு கடத்துகிறது. இலங்கைத் தேசத்தின் மீதும் அதன் தமிழ் வேர் மீதும் அவருக்குள்ளிருந்த ஆழமான ஈடுபாடும் உணர்வும் பரதேசியின் பாடல் கவிதையில் அழுத்தம் பெறுகிறது. தமிழர் மீதான புறக்கணிப்பு அவர் போன்ற நாட்டை முழுமையாக நேசித்த, இன ஐக்கியம் குறித்து யோசித்தவர்களைக் கூட சீற்றங் கொள்ள வைத்தது. தீவளாவிய தமிழ்ச் சிந்தனையையும் இந்தக் கவிதைக்குள் அவர் முன்வைத்தார். தமிழர்களுக்குள், தமிழ் நிலத்துக்குள் பூடகமாய் வரையப்பட்டிருக்கும் எல்லைகளை அவரது கவிதை மனம் கடந்திருந்தது.

*பச்சை வயல்கள்*
*பாடுமீன் வாவிகள்*
*தேயிலை போர்த்திய தேசக் கொங்கைகள்*
*கொழுந்து கொய்தே வலிந்த கரங்கள்*

இன, மத, பிரதேச எல்லைகளால் தமிழைக் கூறுபடுத்தும் அபத்த அரசியல் மீது அவருக்குச் சலிப்பும், வெறுப்பும் இருந்தது.

*தப்பித்துக் கொண்டனர் புத்தி தெளிந்தவர்*
*அகப்பட்டது அப்பாவிகளும் நானும்*

போன்ற வரிகள் இத்தகைய அரசியல் சூழல் மீதான அவரது எள்ளல்கள்தான்.

அவரது முதுவேனில் பதிகம் தொகுப்பும் ஈழப்போரையும் வாழ்வையும் அதன் துயர அனுபவங்களையும் ஊடறுக்கும் ஒரு தொகுப்புதான்.

போரால் சிதைக்கப்பட்ட வாழ்வு மீது அவருக்கிருந்த சலிப்பின் அதேயளவு, தன் மக்கள் கொண்டிருந்த மாபெரும் இலட்சியத்தின் மீதும் அவருக்குள் நம்பிக்கை துளிர்த்திருந்ததை அவரது இரண்டாவது தொகுப்பின் சில கவிதைகள் பிரதிபலித்தன. அவர் எழுதினார் -


*காலத்தின் கரங்களில் இருந்தும் துவண்டுவிடவில்லை*
*என்றோ ஒருநாள் என் பறவைகளால்*
*நிறையும் வானம்.*

அந்த நம்பிக்கையின் ஒரு துளியாக ஒவ்வொருவரும் எப்படி மாறினர் என எழுதுகிறார் தபசு கவிதையில்.

*பசி மறந்தேன் தூக்கம் மறுத்தேன்*
*திசையின்றி அலைதல் விரும்பிற்று மனம்*
*சூனியத்தில் விழிகளின் தேடல்*
*கனவுகள் மட்டும் பெருகிக் கொண்டே வந்தன*
*எனக்கான சிலுவையை நானே புனைந்தேன்*
*வற்றத் தொடங்கிற்று காலம்*
*இனிக் காத்திருப்புச் சாத்தியமில்லை*
*எனக்கு வெளிச்சம் வேண்டுமாயின்*
*என்னை நான் எரித்துத்தானேயாக வேண்டும்*

முதுவேனில் பதிகம் கவிதைகள் அளவில் சற்று சிறியது. ஆனால் அதன் புனைவுச் செறிவும், வாசகத் தாக்கமும் பெரிது. தனிமனித அகநெருக்கீடுகளுக்கூடாக சமூகத்தின் கூட்டுத் துயரத்தையும், பிரக்ஞையுமே வெளிப்படுத்தும் கவிதைகளையே அதிகம் இந்தத் தொகுப்பில் எழுதினார்.

திருமாவளவனின் கவிதைகள் ஈழப்போர்க்கால வாழ்க்கையையும், அதன் பின்னரான புலம்பெயர் வாழ்க்கைப் பாடுகளையும் மிக ஆழமாகப் பேசுபவை என்ற வகையில் ஈழப்போர் இலக்கியத்துக்கான அவரது பங்களிப்பு என்றும் நித்தியமானது.



jiffry.hassan@thaiveedu.com




இருநூறு ஆண்டுகளை அடையும் இலங்கை மலையக வாழ்வியலில் மலையகக் கவிதைப் பாரம்பரியத்துக்கும் அதேயளவு வயதிருக்க வேண்டும். 19-ம் நூற்றாண்டின் முதல் கால் நூற்றாண்டு காலப் பகுதியிலேயே இலங்கை நோக்கி (அப்போதைய சிலோன்) பயணித்த தனது மகளை வழியனுப்பும் ஒரு தாயின் புலம்பல் ஒன்று மலையக நாட்டார் பாடல் வரிசையில் இவ்வாறு பதிவாகிறது.


*சீமைக்கு போறமுன்னு*
*சிணுங்காத எம்மவளே*
*கடல்தாண்டி போறமுனு*
*கலங்காதடி ராசாத்தி*
*சிங்களவன் ஊர்போயி*
*சீக்கிரமா வாருமடி*

இந்த நாட்டார் பாடல் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு இந்த மக்கள் வருவதில் இருந்தே ஆரம்பிக்கிறது என்பது ஆதாரமாகிறது.

இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் கூட எது கவிதை? அதன் யாப்பு இலக்கணம் என்ன? புதுக்கவிதைகள் என எழுதப்படுபவை கவிதைகள் தானா? என்றெல்லாம் வாத, விவாதங்கள் நடைபெற்று வருகின்ற சூழலில், 19-ம் நூற்றாண்டிலேயே தன் மண்ணைவிட்டு வாழ்வைத் தேடி புலப்பெயர்வை ஆரம்பித்துவைத்த மக்கள் கூட்டம் பாடிவைத்த சந்தம் மிகு இப்பாடலை கவிதை என்று கொள்வதில் பின்னிற்கவேண்டியதில்லை. அதே நேரம் ஒரு பெண்ணின் குரலாக இந்த பாடல் ஒலிப்பதானது மலையகக் கவிதை வரலாற்றின் ஊற்றுக் கண்களாக பெண்களே இருந்துள்ளனர் என்பதாகவும் கொள்ளலாம்.

அவ்வாறு புறப்பட்டு வந்த இம்மக்கள் வருகின்ற வழியில் கடலிலும் காடுகளிலும் நோய்வாய்ப்பட்டு உயிரிழந்தனர் என்பது வரலாற்று உண்மை. மரணத்திலேயே தம் வாழ்வைத் தொடங்கிய இந்த மக்கள் கூட்டம் அதனை இவ்வாறு பதிவு செய்கின்றது.

*பொழைக்கத்தான் நாம வந்து - இன்னும்*
*பூமி போய் சேரலையே*
*கடன்கட்ட வந்து - நாம*
*கண்டி போய் சேரலையே*
*பாதி வழியில ஏ ராசாவே*
*பரலோகம் போயிட்டீங்க -இனி*
*நா போயி என்ன செய்ய - ஏ ...ராசாவே*
*என்னையும் அழைச்சுப்போங்க...*




எனும் ஒப்பாரிப் பாடல் இந்த மக்களின் இலங்கை வருகையின் இன்னுமொரு பரிமாணத்தினை பதிவு செய்கிறது. இதுவும் ஒரு பெண்குரல் என்பது இங்கே கவனிக்கத்தக்கது.

இன்னுமொரு பாடல் இவ்வாறு அமைகிறது:

*மாத்தள போறமுன்னு*
*மகிழ்ச்சியா நாம வந்தோம்*
*கண்டிக்கு போறமுன்னு*
*கடலை தாண்டி நாம வந்தோம்*
*கண்டியும் போகலையே*
*காலும் நடக்கலையே*
*என்ன பெத்த அப்பா*
*உசிரோட உன்ன விட்டு*
*ஓடி நா போவேனோ...?*

வரும் வழியில் நடுவழியில் மாண்டுபோன தன் தந்தையைப் பார்த்து பாடப்படும் இத்தகைய பாடல்கள் மலையக மக்களின் வருகையையும் அவர்களின் வாய்மொழி இலக்கியத்தின் வருகையையும் பதிவு செய்கின்றமையை காணலாம். அவ்வாறு ஒலித்த அத்தகைய அழுகுரல்களில், ஆரம்ப குரல்கள் பெண் குரல்களாக இருப்பதனை அந்தப் பாடல்களின் தன்மையில் இருந்து புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. இவ்வாறு மலையகக் கவிதை இலக்கியத்தின் தோற்றுவாயாக அமைந்த நாட்டார் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், கூத்துப் பாடல்கள் இன்றும்கூட மலையகத்தில் வழக்கில் உள்ளது. அதே நேரம் மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறியில் பெண்களின் பங்களிப்பைத் தனித்துவமாகப் பார்க்கும் தேவையும் எழுகின்றது எனலாம்.

1920-களில் இந்திய சுதந்திர போராட்ட ஆர்வலரான கோ. நடேசய்யர் ஒரு பத்திரிகையாளராக இலங்கை வந்து பின்னர் மலையக மக்களோடு தொழிற்சங்கம், இலக்கியம், அரசியல் என இரண்டறக் கலந்தவர். பொது வாழ்வில் அவருடன் இணைந்தே பயணித்த அவரது துணைவியார் மலையக மக்களின் நிலை கண்டு பல சமூக விழிப்புணர்வு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார். இத்தம்பதியருள் திரு நடேசய்யர் தொழிற்சங்க பணிகளிலும், திருமதி மீனாட்சியம்மை நடேசய்யர் மக்கள் பாடல்களைப் பாடி, அவற்றைத் துண்டுப் பிரசுரங்களாய் வெளியிடுவதிலும் அதிகம் ஈடுபட்டுள்ளதாகவே ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பெரும்பாலும் உடல் உழைப்புத் தொழிலாளர்களாகவும் பாமரர்களாகவும் இருந்த இந்த மக்களிடையே சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த கவிதை இலக்கியத்தைக் கருவியாகக் கையாண்டுள்ளார் மீனாட்சியம்மை.

மீனாட்சியம்மையின் பாடல்கள் 'இந்தியர்களது, இலங்கை வாழ்க்கை நிலைமை' (1940 கணேஷ் பிரஸ் - ஹட்டன்), என்ற தலைப்பில் தொகுதியாக வந்துள்ளது. இவரது எழுத்து நடை ஏற்கனவே இந்த மக்களிடத்தில் பழக்கப்பட்டிருந்த நாட்டார் பாடல்களுடன் ஒத்துப்போனமை அவற்றின் பிரபலத்திற்கு காரணமாகியது. அந்த வகையில் திருமதி மீனாட்சியம்மை எழுதிய வரிகள் பின்வருமாறு அமைகின்றன.

*சிங்கள மந்திரிகள் செய்திடும் சூழ்ச்சி*
*சேதியில்லாமல் வேறில்லை காட்சி*
*பொங்கவே தொழிலாளர் ஒற்றுமைக் மாட்சி*
*பொலிவு கொண்டாடுவர் அடைகுவர் தாட்சி*

*சிங்கள மந்திரிகள் கூற்று - மிக*
*சீருகெட்டதென்று சாற்று*
*சங்கடமே நேருமென தோற்று - சிந்திய*
*சமூகம் நெருப்பாய் வரும் காற்று*

*நன்றி கெட்டுப் பேசும் மந்திரிமாரே - உங்கள்*
*நியாயமென்ன சொல்வீரே*
*இன்றியமையாதவொரு பேரே*
*செய்ய இடமுன் டாக்கின்றீரே*

இலங்கை அரசியல் வரலாற்றில் பேரினவாதத்திற்கு எதிரான பார்வையை அரசியல் தளத்தில் முதன் முதலில் முன்னெடுத்தவர்கள் நடேசய்யர் மீனாட்சியம்மை தம்பதிகளாவர் என்கிறார் திறனாய்வாளர் லெனின் மதிவானம். ('ஊற்றுக்களும் ஓட்டங்களும்' - பாக்யா பதிப்பக வெளியீடு 2012) திறனாய்வு நூல் - பக்:38)

மலையக ஆய்வு எழுத்தாளர் சாரல் நாடன், இலக்கிய செயற்பாட்டாளர் அந்தனிஜீவா முதலானோர் திருமதி மீனாட்சியம்மை குறித்து பல கட்டுரைகளை எழுதியுள்ளனர். பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு தனது பெண் ஆளுமைகள் பற்றிய கட்டுரைகளில் மீனாட்சியம்மை நடேசய்யரைப் பற்றி எழுதியுள்ளார். புலம் பெயர்ந்து வாழும் மலையகப் பேராசிரியர் மு. நித்தியானந்தன் 'மீனாட்சிம்மாளும் மேடைப்பாடல்களும்' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.

பேராசிரியர் செ. யோகராசா திருமதி மீனாட்சியம்மையை 'ஈழத்து முதல் பெண் கவிஞர்' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றினை எழுதியுள்ளதாக திறனாய்வாளர் லெனின் மதிவானம் தனது 'ஊற்றுக்களும் ஓட்டங்களும்' திறனாய்வு நூலில் (பக்:31) குறிப்பிட்டுள்ளார். பேராசியரியர் செ. யோகராசாவின் கூற்றுப்படி ஈழத்தின் முதல் பெண் கவிஞராகவே ஒரு மலையகப் பெண் கவிஞரை அடையாளம் காட்டியிருப்பதானது, மலையகக் கவிதை இலக்கியத்தின் ஒரு சிறப்பம்சமாகவும் கொள்ளலாம்.

இவரது மரபுவழிவந்த பெரியக்காள், கிருஷ்ணம்மாள் போன்ற பெண் பாவலர்களின் 'தோட்டப்புரப் பாடல்கள்' குறித்து மலையகக் கவிதை இலக்கிய செல்நெறி கட்டுரைத் தொடரில் இதற்கு முன்னதாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

2002-ம் ஆண்டு 'மலையகம் வெளியீட்டகம்' சார்பில் அந்தனி ஜீவா தொகுத்து வெளியிட்ட 'குறிஞ்சிக் குயில்கள்' மலையகப் பெண் கவிஞர்களின் பட்டியலை வெளிக்கொணரவும் பதிவு செய்யவும் வழிவகுக்கின்ற மிக முக்கிய தொகுப்பாகும்.

21 மலையகப் பெண் கவிஞர்களின் கவிதைகள் 'குறிஞ்சிக் குயில்கள்' தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. புவனேஸ்வரி பன்னீர்செல்வம் (பசறை), றஸீனா புஹார் (லுணுகலை), த. சிவமலர் (கம்பளை), சி. சுபத்ராதேவி, புனிதகலா (வட்டவளை), பஸ்மிலா அன்சார் (உக்குவளை), சாரதாம்பாள் (தலவாக்கலை), சந்திரலேகா (கொட்டகலை), விஜிதா நவமணி (அக்கரப்பத்தனை), விஜயபாரதி (கொட்டகலை), பாலரஞ்சனி (ஹட்டன்), சாந்தி மோகன் (பண்டாரவளை) பூரணி (கண்டி), மீனாம்பிகை (மாவனல்லை), ஜனனி (மாத்தளை), பாலரஞ்சனி ஷர்மா(கண்டி), யோகேஸ்வரி கிருஸ்ணன் (கண்டி) இஸ்மாலிஹா (புசல்லாவ), அமராவதி (கெங்கல்லை), அக்னஸ் சவரிமத்து, (வட்டகொடை) மணிமேகலா தேவி, ஆகியோரின் கவிதைகளுடன் பின்ட்டையில் 'மலையகத்தின் முதல் பெண்மணி' திருமதி மீனாட்சியம்மாளின் என தலைப்பிட்டு

அவரது கவிதை ஒன்றையும் பின்னட்டையில் சேர்த்து இந்தத் தொகுப்பைத் தந்துள்ளார் அந்தனி ஜீவா.

மலையக இலக்கியத்தில் அந்தனி ஜீவாவின் தொகுப்பு நூல்கள் அளவில் சிறியன என்றாலும், அவை வரலாற்று ஆவணமாகத் திகழ்கின்றன என்பது இங்கே குறித்துரைக்கப்படவேண்டியது.

2007-ம் ஆண்டு 'ஊடறு' வெளியீடாக கவிஞர் வே. தினகரன் தொகுத்தளித்துள்ள 'இசை பிழியப்பட்ட வீணை' எனும் மலையக கவிஞைகளின் கவிதைகள் அடங்கிய தொகுப்பும் முக்கியத்துவம் நிறைந்தது. இத்தொகுப்பில் 47 பெண் படைப்பாளிகளின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இ. பாலரஞ்சனி, சந்திரலேகா கிங்ஸ்லி, மஞ்சுளா, மரியா என்டனீட்டா, எஸ்தர் லோகநாதன், இஸ்மாலிகா, புனிதகலா,இரா.-தேவிகா, பொ. கீதாகௌரி, எஸ். கலைச்செல்வி. க. கவிதா, மீனாள் செல்வன், மலைமதி, காஞ்சனா, மணிமேகலா செல்லதுரை, பிரேமராணி, ஜி. ஷர்மிளா, அன்னாஜ் க்ளோரி. புனிதகுமாரி, எஸ். சர்மிளா, மேரி தெபராள், ஜெ. ரெஜினா,விஜயபாரதி, பூங்கொடி, பரமேஸ்வரி, பூங்கொடி ராமையா, சாரதாம்பாள், சாந்தி மோகன், மோகனா, சூர்ப்பனகை,வித்தியாதர்ஷினி, சுபந்தினி, பெ. சசிகலா, வே. சசிகலா, சரஸ்வதி, தினமணி தங்கையா, விழி, உஷாந்தனி, விஜிதா, ஸ்ரீபிரியா, யோகேஸ்வரி கிருஸ்ணன், இரா. வணிதா, கெத்தரீன், நளாயினி, ஆர்த்தி. ஜேசுராணி ஆகியோரின் கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்தத் தொகுப்பில் கிழக்கிலங்கையின் பிரபல பெண் கவிஞர் 'அனார்' எழுதிய மலையகக் கவிதை ஒன்றும் புனைபெயரில் சேர்க்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டியது. தான் மலையகப் பின்புலத்தைக் கொண்டிராத போதும் தூரத்தே இருந்து மலையக மக்களின் வாழ்க்கை தொடர்பில் தான் கொண்ட அவதானிப்புகளை ஒரு கதையாகப் பதிவு செய்ததாகவும் அதுவே இந்தத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கிறது என்றும் கவிஞர் அனார் ஓர் இலக்கிய கலந்துரையாடலில் கட்டுரையாளிடம் தெரிவித்து இருந்தார்.

1990-களில் வெளிவந்த (கொட்டகலை) யோகா துரைப்பாண்டியின் 'இதயத்து ஈரங்கள்' மற்றும் பாலரஞ்சனி ஷர்மாவின் 'மனசின் பிடிக்குள்' (2001) எனும் கவிதைத் தொகுதிகளுக்குப் பின்னர் 2007-ம் ஆண்டு வெளிவந்த 'மோட்ச முழக்கம்' மிக நீண்ட இடைவெளிக்குப் பின் வந்த மலையகப் பெண் கவிஞர் ஒருவரின் தனிக் கவிதைத் தொகுப்பாகும். லுனுகலை ஸ்ரீ-இன் இந்த கவிதைத் தொகுப்புக்கான முன்னுரையை பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி எழுதியுள்ளார். அவ்வப்போது பத்திரிகைகளில் வந்த கவிதைகளை ஒன்று திரட்டி தொகுப்பாக வெளியிட்டதன் பின்னர், மரபுக் கவிதையை முறையாகப் பயின்ற லுணுகலை ஸ்ரீ சமகாலத்தில் மலையகத்தில் மரபுக் கவிதை எழுதிவரும் பெண் கவிஞராக திகழ்கிறார். இதுவரை அத்தகைய மரபுக் கவிதைகளை தொகுப்பாக வெளியிடாத போதும் கவியரங்க மேடைகளிலும் இலக்கிய மேடைகளிலும் தனக்கான ஓர் இடத்தை தக்க வைத்துக்கொண்டுள்ளார். இதற்கு முன்வந்த மலையகப் பெண் கவிஞர்களின் தொகுப்புகள் இரண்டிலும் இவரது கவிதைகள் இடம்பெறாமையையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

'இசை பிழியப்பட்ட வீணை' தொகுப்பில் இடம்பெற்ற எஸ்தர் லோகநாதன் அண்மைய காலத்தில் 'கால்பட்டு உடைந்தது வானம்', 'பெருவெடிப்பு மலைகள்' ஆகிய இரண்டு தனித் தொகுதிகளைத் தந்திருப்பதும் அவதானத்துக்குரியது. தியத்தலாவை ரிஸ்னா தொடர்ச்சியாக கவிதைகளை எழுதியும் தொகுப்புகளை வெளியிட்டுக் கொண்டும் இருக்கும் பெண் கவிஞராவார். களுத்துறை மாவட்டத்தில் இருந்து ஒரு மெய்யியல் துறை பட்டதாரி மாணவி ஒரு கவிதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார்.

கொழும்புப் பலக்லைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்தில் பேராசிரியராக பணியாற்றும் ராஜலக்ஸ்மி சேனாதிராஜா (லக்ஸ்மி) 'மழைக்குழம்புகளின் வர்ணங்கள்' எனும் தலைப்பில் அண்மையில் ஒரு கவிதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு மலையகக் கவிதை இலக்கிய செல்நெறியில் மலையகப் பெண் கவிஞர்களின் பங்களிப்பினை அவதானிக்கும்போது மலையகக் கவிதை இலக்கியத்தின் முன்னோடிகளாக பெண்களே இருந்துள்ளனர். ஆனாலும் பின்வந்த நாட்களில் அவர்களது படைப்புகளில் தொடர்ச்சித் தன்மை காணப்படாமை, தனித் தொகுப்புகளாக அவர்களது படைப்புகள் வெளிவராமை பெரும் குறையாகும்.

1960-களில் வெளிவந்த கவிஞர் ஈழகுமார் தொகுத்தளித்த 'குறிஞ்சிப்பூ' தொகுதியில் கிறிஸ்டினா ஜோர்சினா ரொசெட்டி எனும் பெண் கவிஞரின் ஆங்கிலக் கவிதை ஒன்று, கு. ராமச்சந்திரன் தமிழாக்கத்துடன் ஆங்கில மூலத்துடன் பிரசுரமாகியுள்ளது. அது தவிர குறிப்பிடத்தக்க மலையகப் பெண் கவிஞரின் படைப்பும் அந்தத் தொகுப்பில் சேர்க்கப்படவில்லை. ஆனால் 2002, 2007-ம் ஆண்டுகளில் மலையகப் பெண் கவிஞர்களின் தொகுப்பாக இரண்டு தொகுப்புகள் வெளிவந்து இருப்பது பெரும் பாய்ச்சல் என்றே கொள்ள வேண்டும். எனினும் 40 ஆண்டுகள் கடந்து வந்த அந்தப் பாய்ச்சலின் தொடர்ச்சியை கடந்த 15 ஆண்டுகளில் அவதானிக்க முடியாது இருப்பதும் பெரும் குறையாகும். மலையகக் கவிதை இலக்கியத்தின் முன்னோடிகளாக பெண்களே இருந்துள்ள நிலையில், மலையகம் 200 ஆண்டுகளை அடைந்துள்ள இந்த கால கட்டத்தில், மலையகப் பெண் கவிஞர்களின் புதிய தொகுப்பு ஒன்றின் அவசியம் உணரப்படுகின்றது.

மேலே குறித்துரைக்கப்பட்ட பெண் கவிஞர்களைத் தாண்டியும் இன்னும் பல பெண் கவிதை ஆளுமைகள் மலையகத்திலே உருவாகியிருக்கக் கூடும். அத்தகைய ஆளுமைகளை வெளிக்காட்டவும் வரலாற்றின் ஏட்டில் பதிவு செய்யவும் இத்தகைய தொகுப்புகள் ஆதாரமாக அமையக்கூடும்.



(தொடரும்)

thilagar@thaiveedu.com



# எழுத்தாக்கப் பணிகளின்போது கவனம் செலுத்த வேண்டியவை

**- அஹமட் பிஸ்தாமி**

எழுத்தாக்கப் பணிகள் காரணமாகவே மனிதர்கள் இன்னும் சிந்திக்கின்றார்கள். கருத்தூன்றிச் சிந்தனைகளை - கருத்துகளைக் கவனிக்கின்றார்கள். விமர்சிக்கின்றார்கள் புதிய கருத்துகளை முன்வைக்கின்றார்கள் புதிய புதிய சிந்தனைத்தளம் நோக்கி முன்னேறுகிறார்கள். படைப்பாக்க இலக்கியங்களைப் பரிசாகத் தருகின்றானர்கள். எழுத்து, சிந்தனை வளர்ச்சியின் மைல்கள் (milestone) என்றும் குறிப்பிடலாம். எழுத்தால் தான் இலக்கியங்களும் இதிகாசங்களும் இன்றுவரை உயிர்வாழ்கின்றன. நவீன மனிதரின் அறிவுக்கண்ணை-ஆய்வுக்கண்ணை அகலத்திறந்துவிடுவது எழுத்துத்தான்.

எழுத்தாக்கப் பணிகள் எழுத்தாளனையும் எழுதும் விடயதானம், எழுதும் போக்கு style அதன் மொழிநடை வாசகர்கள், விமர்சகர்கள் எனப் பலரையும் மையப்படுத்தி அமையும். வாசகரை நோக்கி எதனை எப்போது எங்கு எப்படி எழுதுகிறார் என்று மிக நன்கு அறிந்து தெரிந்து வைக்கும் எழுத்தாளரை காலம் நினைவில் வைத்துப் பாதுகாக்கும். காலங்காலமாகக் கொண்டாடி மகிழும்.

முன்னெப்போதும் இல்லாதளவு எழுத்து தீவிரமாக மாற்றமடைந்து முன்னேறி வாருகிகிறது. நவீன சொற்களும் சொல்லாடல்களும் உடனுக்குடன் மொழியுடன் வந்து இணைந்துவிடுகின்றன. மொழிக்கலப்பு போலவே மொழிச்சிதைப்பும் இடம்பெறுகின்றன. அதிலும் குறிப்பாக மொழிபெயர்ப்பு எனும் தனிப்பெருந்துறை இராட்சத வேகத்தில் உலகம் முழுதுமாக வளர்ந்து வியாபித்து வருகின்றது. சாதாரண மரபு சார்ந்த அச்சூடக எழுத்து வழமை மிகத்துரிதமாகத் தலைகீழ் மாற்றம் கண்டு இணைய வழியாக மெய்நிகர் எழுத்தாக மாறியுள்ளது. எழுத்துகள் வாசகரைச் சென்றடையும் காலமும் எதிர்வினையும் உடனுக்குடன் இடம்பெற்றுவிடுகின்றன. எழுத்தாளர் தன் எழுத்துகள் குறித்து உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் உணர்கின்ற அளவுக்கு உடன் பின்னூட்டங்கள், விமர்சனங்கள், மாற்றுக்கருத்துகள் பகிரப் பரிமாற்ற வசதிகள் உள்ளன. சமூக ஊடகங்கள், இணையப் பாவனை இதனைத் துரிதமாக்கியுள்ளது.

இத்தகைய பின்புலங்கள் குறித்த இற்றைப்படுத்தல்கள் அனைத்தையும் விளங்கி உள்வாங்கி இசைவாக்கமடைந்த நிலையில் எழுத்துலகில் பயணிக்கும் எழுத்தாளர் மட்டுமே தன் முன்னால் உள்ள இராட்சதச் சவால்களுக்கு முகம் கொடுத்து எதிர்நீச்சல் போட்டு முன்னேற முடியும். இல்லாத பட்சத்தில் சமகால வாசிப்புலகும் வாசக உலகும் எழுத்தாளரை, அவரது படைப்பை நிராகரித்துத் தூக்கி வீசும். அல்லது கிடப்பில் போட்டுவிட்டுத் தரமான மாற்றுப் படைப்பாக்கம் ஒன்றின் தேவை கருதி முன்னோக்கிப் பயணிக்கும்.

இன்று சமூக ஊடகங்கள் பலரையும் எழுதத் தூண்டியுள்ளமையைக் கண்டுகொள்ள முடியும். கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் எனும் அடிப்படையில் எழுத்தாற்றலை வளர்க்கச் சில நுட்பங்களையும் எழுத்தாளர்கள் அறிந்திருக்க வேண்டும். சில புத்தகங்களையும் ஆக்கங்களையும் எடுத்தால் கண்களும் சிந்தனையும் அவற்றை விட்டு அசையாதபடி எம்மை இறுகப் பிணைத்து ஈர்த்துவிடும். அப்படி அற்புதமாக எழுதும் ஆற்றல் பெற்றவர்கள் வாசகர்களின் உள்ளங்களில் நீங்காத இடத்தைப் பிடிப்பர். மங்காத புகழ் அவர்களைப் பின்தொடரும். அத்தகைய எழுத்தாளர்கள் மிகச்சிறப்பான எழுத்தை எழுதும் போக்கை வரமாக அருளாகப் பெற்றுள்ளனர். அத்தகைய ஆகர்ஷணமும் இதமான தன்மையும் தனித்துவமும் வாய்ந்த எழுத்துகளை எல்லோரும் விரும்பிப் படிக்கும் நிலை காணப்படுகிறது.

எழுத்து என்பது பலமான ஊடகம். அந்த எழுத்துக்கு வலிமையும், வலுவும் உள்ளது போலவே கவர்ச்சியும், ஈர்ப்பும், கருத்தும் இருக்க வேண்டும். எழுத்துகளில் இறைவன் சத்தியமிடுகின்றான் எனில் அதற்குப் பெறுமதியும் குறிக்கோளும் இருக்கவேண்டும். இன்று ஒவ்வொரு துறையும் தனக்கான தனித்துவங்களைச் சிறப்புகளை விதிமுறைகளைக் கொண்டுள்ளது. அந்த ஒழுங்குகளை எழுத்தாளர்கள் பின்பற்றுகையில் எழுத்தைக் கவர்ச்சியானதாகக் கருத்தாழம் மிக்கதாக மாற்றலாம்.

எழுத்தாக்கப் பணிகளில் இன்று நிகழும் கேவலமான ஓர் அம்சம் தான் அடுத்தவர்களின் பிரதிகளை அப்படியே திருடிச் சொந்த ஆக்கம் போல உரிமை கொண்டாடுவது. இதற்குப் புலமைச் சொத்துரிமை மீறல் violation on intellectual property எனும் வகையில் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். அது போலவே ஆய்வியல் துறையிலும் research இது சர்வ சாதாரணமாக நிகழ்ந்து விடுகிறது. இந்நிலையில் உங்கள் எழுத்துகளுக்கான தனித்துவங்களை - சிறப்புகளைக் கட்ட

மைக்க வேண்டியது நீங்களே. உங்கள் எழுத்துகளின் வாக்கையும் போக்கையும் எழு நடையையும் நீங்கள் உருவாக்கிக்கொண்டால் உங்களுக்கான வாசகர்களால் அதனை இலகுவில் கிரகிக்கவும் உள்வாங்கவும் சுவைக்கவும் ஜீரணிக்கவும் முடியுமாக இருக்கும். அது உங்களுடைய தனித்துவப் பாணி என்பதை உறுதி செய்யவும் முடியும்.

இன்று எழுத்தியல் போலவே மொழியியலும் உருண்டு திரண்டு மொளு மொளுவெனக் கொழுத்து வளர்ந்துள்ளது. அதற்கே உரிய பிரத்தியேகக் கட்டமைப்புகள், பிரயோகங்கள் உள்ளன. மொழியியல் சார்ந்த தொழில்நுட்பங்களும் உத்திகளும் உங்கள் எழுத்துகளுக்கு உயிர் கொடுக்கும். உயர் பெறுமானம் கொடுக்கும். உரம் சேர்க்கும். உங்கள் எழுத்துகள் effective உள்ளதாக மாற வேண்டுமானால் உங்கள் வாசிப்பனுபவம் பரந்துபட்டதாக அமைய வேண்டும். வாசிப்புப் பஞ்சம் vocabulary poverty சகிதம் எழுத முற்பட்டால் சுற்றி வளைத்து அலைந்து திரிந்துதான் கருத்தை முன்வைக்க வேண்டி வரும். ஆனால் வளமான, நயமான சொல் வளம் இருப்பின் பட்டென்று முன்வைக்க முடியும்.

இலக்கிய இதிகாசக் காலங்களில் சொல்லாடற் கலைக்கு (Rheotric) அதீத முக்கியத்துவம் கொடுத்ததைக் காணலாம். மிகவுமே பொருத்தமான உசிதமான சொல்லைத் தெரிந்தெடுத்து உச்ச விளைவைத் தரும்வகையில் மொழியைக் கட்டமைத்துக் கருத்துகளை முன்வைக்கும் போது எழு நடையும் (stylistics) கருத்தாழம் கொண்டதாக மாறும். ஆனால் இன்று வியாபாரமாக மாறியுள்ள பதிப்புத் துறை காரணமாக அச்சேறும் அநேக நூல்கள் இன்னொருவரின் பிரதியாக மட்டுமன்றி, கருத்து, எழுத்து சார்ந்த பிழைகளும் நிரம்பி வழிவதாக உள்ளன. இந்த உழைப்பின் ஆகும் - ஆகாத சட்டவியல் தீர்ப்புகள் எமது பேசு பொருளுக்கு அப்பாற்பட்டது.

மொழியாற்றலும் பேச்சாற்றலும் போலவே எழுத்தாற்றலும் நவயுகத்தில் வேண்டப்படும் திறனாகும். ஊடகங்களுக்கு முன்னால் பேசுவதற்கு அஞ்சும் சிலரை நோக்கினால் இலக்கண இலக்கியம் தெரியாமல் பேச்சாற்றல் இல்லாமல் தயங்குவதை - திணறுவதைக் காணலாம். எழுத்துத் துறையிலும் இது நோக்கப்படுகின்றது. எழுத்துத் துறையிலும் இத்தகைய, கட்டாயம் தவிர்க்க வேண்டிய, ஆனால் தவிர்க்க முடியாத வழுக்கள் நிகழ்கின்றன. நிரம்பி வழிகின்றன. அவசர அவசரமாகத் தட்டச்சு செய்வதால் சரவை செய்யாமல் மொழிச் செம்மைக்கு உட்படுத்தாமல் சுடச்சுடப் பதிவிடுவதால்- அச்சு வாகனமேற்றுவதால் இத்தகைய தவறுகள் இடம்பெற்று ஆக்கத்தை அலுப்பானதாக மாற்றிவிடும்.

மொழியின் வடிவமைப்பும் கட்டமைப்பும் கருத்தாழம் மிக்க வகையிலாக வாசகர்களுக்குக் கையளிப்பதும் இங்கு முக்கியம் பெறுகின்றன. எழுத்துக்கும் ஓர் அழகியல் பரிமாணம் உள்ளது. இதிகாசத்தை எழுதுவதாகட்டும், விஞ்ஞானப் புனைவுகளை எழுதுவதாகட்டும் அதற்குள் மொழியியல் சார்ந்து இலக்கியத்தன்மை வருவதில் தவறில்லை. வாசிப்பு ஓர் அனுபவம் எனும் வகையில் அது சிறந்த வாழ்வியல் தளங்களுக்கு எம்மை அழைத்துச் செல்லும். இலக்கிய மொழி என்பதைத் தனித்து நின்று கட்டமைக்கப்பட்ட அழகியற் கோபுரமாகக் கருத வேண்டியதில்லை. எனவே எழுத்தாளர்கள் தத்தமது எழுத்தாக்கங்களின் போது மொழியியல் நுட்பங்களை - நுணுக்கங்களைக் கவனமாகக் கையாள்வது, சிறப்பார்ந்த எழுநடை ஒன்றை உருவாக்கி வளர்த்துச் செல்வது போன்ற எழுத்தை அழகானதாக மாற்றும்.

கையாளப்படும் சொற்களின் உயிர்ப்பும் தெறிப்பும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். நொதுமலான, கருகலான, செறிவற்ற, செறிமானமற்ற, தொய்வடைந்த, இத்துப்போன சொற்களைத் தவிர்க்க வேண்டும். தரமான, அழுத்தமான சொற்கள் கைவசம் இருக்க வலிந்து திணித்துப் பாவனைக்கு உதவாத தாழ்நிலைச் சொற்களைக் கைவிட வேண்டும். அது பிரதிகளை underlexicalistion எனப்படும் தாழ்நிலை எழுத்தாக்கத்துக்கு வழியமைக்கும்.

அதே போன்று ஒரே சொல்லைச், சொற்றொடரைக், கூறியது கூறியதாக மீள மீள கையாள்வதையும் இயன்றளவு தவிர்க்க வேண்டும். இத்தகைய எளிய நுட்பங்கள் மூல எமது பிரதிகள் கனங்காத்திரமாகவும் செம்மை மிக்கதாகவும் சீர்மை கொண்டதாகவும் வாசகர்களைச் சுண்டியிழுத்து ஈர்த்து வைக்கும் காந்தவிசை கொண்டதாகவும் அமையும். ஆனால் கவிதை மொழி வேறு, புனைக்கதை மொழி வேறு, கட்டுரை மொழி வேறு என்பதைச் சகல எழுத்தாளர்களும் மனங்கொள்ள வேண்டும். ஒவ்வொன்றுக்கும் உரிய மொழியைக் கையாள்கையில் (straight forward language) எமது படைப்புகள் செழுமை பெறும். அதே போன்று தான் எமது எழுத்தின் குறிக்கோளுக்கு அமைவாக எடுத்துக்கூற முனையும் கருத்தை அழகும் பேராழமும் ஈர்ப்பும் கொண்டதாக அமைக்க flowery language பயன்படுத்தப்படுவதுண்டு. இதனூடாகச் சொல்லாடற் கலையாற்றல் மிக்க எழுத்தாளர்கள் சொல்லலங்காரங்கள் ஓசையழகு, எதுகை, மோனை, அணியிலக்கணங்கள் போன்றவற்றைக் கையாண்டு எழுத்தை அழகாக்கும் நிலையும் இன்று பரவலாகக் கையாளப்படுகின்றன.

வாசிப்புத் துறையில் மாபெரும் புரட்சி வெடித்துள்ள நிலையில் mobile reading revolution எழுத்து வாசகர்களுக்கு உகந்ததாக அமைய வேண்டும். அதே நேரம் வாசிப்பு இன்று bibiliotherapy ஆக நூற்சிகிச்சையாக மாறியுள்ளது. எழுத்தாக்கம் என்பது தனித்து ஒற்றைப்பெறுமானம் கொண்ட அம்சமல்ல. அது ஆக்கத்தெறிப்பும் வினைப்பாடும் கொண்டது. சிந்தனையைச் செயற்படுதலை உணர்வுகளை ஒரே நேரத்தில் இயக்குவிக்கும் ஆற்றல் கொண்டது. இதுவே இன்று expressive writing ஆக்கத்தெறிப்பு எழுத்தாக மாறியுள்ளது. இஸ்லாமிய உலகில் அரபு எழுத்துகளை மாத்திரம் கையாண்டு சிறிய வசனங்களை வாசகங்களை அழகுற எழுதும் calligraphy எனும் எழுத்தழகுக்கலை அல்லது எழுத்தணிக்கலை முக்கிய இடம்பெறுவதும் இங்கு நினைவூட்டத்தக்கது.

எழுதுகோலில் சத்தியமிட்ட இறைவன் அடுத்து எழுத்தில் சத்தியமிட்டதன் பின்னால் உள்ள சிதம்பர இரகசியம் இன்னுமின்னும் எதிர்காலத்தில் கண்டு-
பிடிக்கப்படலாம்.



bisthamy.ahamed@thaiveedu.com




## அறிமுகம்:

நெடுந்தீவு மக்களின் வாழ்வியலின் முக்கிய அம்சங்கள் சில வற்றை வாய்மொழி வழக்காறுகளின் வழி இக்கட்டுரை முன் னிறுத்த விழைகின்றது. இதன்வழி நெடுந்தீவு மக்களின் புலமை, மரபு, பாரம்பரியம் முதலானவற்றின் தொடர்ச்சி, நீட்சி, திரிபு ஆகியன அறிய வருகின்றன. அத்துடன் நெடுந் தீவு மக்களின் வாழ்வியல் அம்சங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக் கொன்று கொண்டிருக்கும் பரஸ்பர உறவு, தொடர்பு முதலா-னவை வெளிப்பட்டு நிற்கின்றன. இப்பின்புலத்திலிருந்தே எதிர்காலத்தில் பண்பாட்டு மேம்பாடு, மீட்டுருவாக்கம் - மீள் கண்டுபிடிப்பு முதலானவற்றை மேற்கொள்வதற்கான தேவை யும் வாய்ப்புகளும் காணப்படுகின்றன. அதாவது இதனை வேறு விதமாக சொல்வதாக இருந்தால், இங்கு எடுத்துரைக் கப்படுகின்ற விடயங்கள் மீது அதீத கவனம் செலுத்தப் பட்டே நெடுந்தீவு மக்களின் நிலைபேறான எதிர்கால வாழ்வி யலுக்கான கட்டமைப்புகளும் தொழில் வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

## நெடுந்தீவும் மக்களும்:

நெடுந்தீவு, இலங்கை யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கும் இந் திய இராமேஸ்வரப் பகுதிக்கும் நடுநாயகமாக அமையப் பெற்றுள்ளது. இத்தீவில் மக்கள் வரலாற்றுக் காலம் முதல் வாழ்ந்து வருவதற்கும் இங்கு கிரேக்க, உரோம, பாரசீக வணிக உறவுகள் பொலனறுவைக் காலம் வரை தொடர்ந்து வந்ததற்கும் சான்றுகள் காணப்படுகின்றன. நெடுந்தீவு வாழ்வியல் என்பது இலங்கையில் யாழ்ப்பாணக் குடாநாடு, வன்னி உள்ளிட்ட பல பகுதிகளில் மனிதக் குடியேற்றம் நிகழ்ந்த காலம் தொட்டு இங்கும் மக்கள் தொடர்ச்சியாக வாழ்ந்து வந்மைக்கு தொல்லியல், இலக்கியச் சான்றுகள் காணப்படுகின்றன.

## வாழ்வியல்:

வாழ்வியல் என்றால் என்ன என்பதற்கு உலக சுகாதார தாப னம் தரும் விளக்கம், ‘அன்றாட வாழ்க்கையின் தேவைகளை யும் சவால்களையும் திறம்படச் சமாளிக்க உதவும் தகவ மைப்பு மற்றும் நேர்மறையான நடத்தைக்கான திறன்கள்’ என் பதாகும். இதன்படி பார்க்கின்றபோது வாழ்வியலினுள் இடம் பெறுகின்ற மிக நுட்பமான கூறுகள் அல்லது சிறிய சிறிய அலகுகள் ஒவ்வொன்றும் வாழ்வியல் அம்சங்களாக காணப் படுகின்றன. அதாவது தலைமுறை கடந்து - பரம்பரை பரம் பரையாக வாழ்ந்துவருகின்ற நெடுந்தீவு மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றும் செயற்பாடுகளில் வரும் சவால் களை எதிரேற்று தமக்குக் கிடைக்கக் கூடிய வளங்களை தமது வல்மைக்குத் தக்க வகையில் பயன்படுத்தி மேற் கொண்டுவந்த அன்றாட வாழ்க்கையம்சங்கள் யாவற்றின தும் திரண்ட விளைவுகள் அவர்களது வாழ்வியலாகின்றது.

## வாய்மொழி வழக்காறுகள்:

‘நாட்டார் வழக்காற்று வகைமைக்குள் வாய்மொழி வழக்கா றுகள் ஒரு பகுதியாகும். வாய்மொழி இலக்கியம், வாய் மொழி மரபு, சொல் சார்ந்த நாட்டார் வழக்காறு, நாட்டார் இலக்கியம், வாய்மொழி நிகழ்த்துதல்கள் என்ற பலவகை வாய்மொழி வழக்காறுகள் குறிப்பிடப்படுகின்றன. வாய் மொழி வழக்காறுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தன்மை வாய்ந்த பண்புகள் உண்டு. நடையியல் கூறுகளும், வெளிப் பாட்டுக் கூறுகளும், சமூகவியல் கூறுகளும் பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடும். இந்த வாய்மொழி வடிவங்களை வேறு பிரித்தறியப் பல அளவு கோல்களைப் பயன்படுத்துவர். நடையியல் அல்லது வடிவக்கூறுகள் ஒரு வகை. நீளம், வெளிப்பாட்டு வடிவம் (உரைநடை, கவிதை, இரண்டும் கலந்தது) யாப்பு (Prosody) அமைப்பு, மொழியியல் வெளிப் பாட்டுக் கூறு (அன்றாட வழக்கு அல்லது குறியீட்டு வழக்கு அல்லாது இருண்மை வழக்கு) போன்ற பண்புகளில் வழக்கா றுகள் வேறுபடும். அதாவது வழக்காறுகளை அவற்றின் அடிக்கருத்துகள், சுவைப்புலப்படுத்தம், தலைவர்கள் போன்ற பண்புகளின் அடிப்படையில் வேறுபடுத்துவர். இந்த அடிப் படையில் வாய்மொழி வழக்காறுகள் பயன்படுத்தப்படும் சூழ லுக்கேற்ப வேறுபடும். பழையன கழியும் புதியன புகும். உள்ளது சிறக்கும். காலத்துக்கேற்ப பொருண்மை மாறும். வகை மாற்றமடையும். மனித மனங்கள் என்ற களஞ்சியங்க ளின் சேமிப்பில் அழியாது நிலைத்திருக்கும்.’

வாய்மொழி வழக்காறுகள் தொடர்பில் இங்கு தரப்பட்டிருக் கும் மேற்கோள் பகுதி நாட்டார் வழக்காற்றியல் அறிஞர் தே.லூர்து அவர்களினுடையது. இந்தப் புரிதலுடன் நெடுந்-தீவு வாழ்வியலில் காணப்படும் வாய்மொழி வழக்காறுகளின் பால் நமது கவனம் ஈர்க்கப்படுகின்றது. கட்டுரையாளரின் எடுத்துரைப்பு வலுக்கருதி பொதுவான வகைப்படுத்தல் முறைகளினூடாக இங்கு விளக்கமளிக்கப்படுகின்றது.

## நெடுந்தீவின் தனித்துவங்கள்:

வாய்மொழி வழக்காறுகளை விதந்து பேசுவதற்கு முன் நாம் முன்னறிவு பெறவேண்டிய சில விடயங்கள் உள்ளன. அவை இப்பகுதியில் எடுத்துரைக்கப்படுகின்றன. நெடுந்தீவு வாய் மொழி வழக்காறுகளைப் புரிந்து கொள்வதற்கும் அவற்றுக் கும் வாழ்வியலுக்குமான அத்தியந்த உறவைப் பார்வையி டுவதற்கும் இது அவசியமாகின்றது.

இது தமிழர் மட்டுமே வாழும் ஒரு பிரதேசம். இங்கு வாழும் பல்சமய - சமூகக் குழுக்களிடையே நிலவிவரும் நல்லுறவு பிரமிக்கத்தக்கதாக இருக்கின்றது. இங்கு பல்சமய கலாசர நடைமுறைகள் சிறப்பாக காணப்படும் அதேவேளை அவற் றுக்கிடையே நல்லகொள்ளல் கொடுத்தல் நடைமுறைகளும் சமயப் பொறையும் நிலவி வருகின்றது. இத்தீவில் இன்றும் மாறாத கிராமிய வாழ்வு நிலைபெற்றுள்ளது. ஒப்பீட்டளவில் ‘அதிக வறுமை நிலை’ காணப்படுகின்ற போதும், இங்கு ‘பிச்சைக்காரர்’ என்று எவரும் ஒருபோதும் இருந்ததில்லை. நெடுந்தீவு மக்களின் பூர்வீக சொத்தான நிலம் பெரும்பாலும் பிரிக்கப்படாத நிலையிலேயே இன்றும் இருந்து வருகின்றது. பணத்தை அளவுகோலாகக் கொள்ளாத பண்டமாற்று முறை மற்றும் தொழில் - உழைப்பு நடைமுறைகள் இன்றும் உயிர்ப்புடன் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாக உள்ளது. இங்கு ஒரு தற்சார்பு (உள்ளூர் உற்பத்தி, நுகர்வு) பொருளாதார முறைமை வலுவுடன் இருந்திருக்கின்றது. இத்தீவில் வாழும் சமூகம் நல்ல ஆரோக்கியமான சூழலில் வளர வேண்டும் என்பதற்காக மூதாதையர்களால் உருவாக் கப்பட்ட கட்டமைப்புக்கள் குறிப்பிடத்தக்க அளவு பாதுகாக் கப்பட்டு வருகின்றதை அவதானிக்க முடிகிறது. நெடுந்தீவு வாழ்வியலின் அடையாளமாகக் கருதக்கூடிய மரபுரிமைச் சின்னங்களும் நடைமுறைகளும் நன்கு பேணப்பட்டு வருக ின்றமை குறிப்பிடத்தக்கது. மிகப் பழைய சமுதாயச் சட்டங் களினதும் தண்டனை முறைகளினதும் எஞ்சிய வடிவங்கள் இன்றும் காணப்படுகின்றன. இவற்றுடன் நீண்ட கடற் பயண மும் இலங்கையின் ஏனைய பகுதிகளில் காணப்படாத காட்டுக் குதிரைகளும் இங்கு பெருமளவு சுற்றுலாவிகளை அழைத்து வருகின்றன.

## நெடுந்தீவின் வாய்மொழி வழக்காறுகள்:

வாய்மொழி வழக்காறுகள் என்று பார்க்கின்றபோது தாலாட்டு முதல் ஒப்பாரி (இழவு) ஈறான பாடல்கள் ஒருவகை. தெய் வக் கதை, பேய்க் கதை, அரசர் பற்றிய கதை, கர்ண பரம் பரைக் கதை, பொழுதுபோக்குக் கதை முதலான கதைகள் மற்றொருவகை. வழிபாட்டு முறைமைகளிலும் வாழ்வியல் அம்சங்களிலும் இடம்பெற்றிருக்கக் கூடிய சடங்குகள் மற் றும் நம்பிக்கைகள் இன்னொரு வகை. மொழி வழக்காறுக ளில் வாழ்வின் பிழிசாறாகிட வகை தொகையற்றுக் கிடக்கும் பழமொழிகள், விடுகதைகள், மரபுச் சொற்கள், மரபுத் தொடர்கள், உவமானங்கள், நாப்புரட்டுகள், வழக்குச் சொற் கள், சொல் வழக்காறுகள், பட்டப் பெயர்கள் என்றவாறாக வரும் ஒவ்வொன்றும் இவ்வாறானவையே. இவை தனித்தனிக் கட்டுரைகளாக்கப்படுமளவிற்கு கட்டற்ற விடயதானத்தைக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் பாடல், கதை, பழமொழி முதலான ஒவ்வொரு வகைக்கும் தலைப்பிட்டு அவற்றுள் அடங்கும் விடயங்களுக்கு உபதலைப்பிட்டு எடுத்துக்காட் டுகள் தந்து விளக்கமளிப்பதற்கு இக்கட்டுரை இடந்தராது என்பதால், இயற்கை சூழலுடன் இரண்டறக் கலந்த நெடுந்தீவு மக்களின் வாழ்வியலுக்கு பதச்சோறாக அமையும் ஒரு சில- வற்றை எடுத்துக்காட்ட விழைகின்றேன்.

## வாய்மொழிப்பாடல்கள்:

நெடுந்தீவில் வழங்கி வரும் தாலாட்டு, வாழ்த்து, வைதல், தொழில், ஒப்பாரி முதலான அத்தனை பாடல்களிலும் நெடுந்தீவுக்கே உரித்தான சில அம்சங்களைக் காண முடி கின்றது. அந்த வகையில்:

***‘பண்டப் பெருமைநிறை பசுத்தீவு தான்சிறக்க***
***கொண்ட கலை ஓம்ப வந்த குஞ்சரமே / கோமளமே கண்வளராய்’***

***‘துய்ய கலை வளர்த்து தொல்லுலகம் வாழ என்று***
***செய்ய நெடுந்தீவுதித்த செல்வமே கண்வளராய்’***

முதலான தாலாட்டுப் பாடல்கள் 1950 - 60-களிலிருந்து வழங்கப்பட்டு வருவதைக் காண முடிகிறது. பிற இடங்களில் காணாத ‘வாழ்த்து’ (வாத்து) பாடும் நடைமுறை நெடுந்தீவில் காணப்படுகிறது. இது பூப்பு நீராட்டு விழா, திருமண விழா ஆகியவற்றில் இன்றும் காணப்படுகின்றது. நீண்ட நெடுநேர ஊர்வலத்தில் பாடப்படும் இவ்’வாழ்த்து’ நடைமுறை நிகழ்வு களுக்கேற்ப,

***‘மஞ்சளால் ஆலாத்தி - மாவிளக்கால் ஆலாத்தி’***

என்றவாறு சந்தர்ப்பத்திற்கு தக்க விதத்தில் இட்டுக் கட்டிப் பாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இது ஒரு சில இடத் தில் வைதலாகவும் மாறியிருப்பதாக சொல்லப்படுகின்றது. நெடுந்தீவில் வசைக் கவி பாடும் மரபும் நீண்டகாலமாக இருந்து வருகின்றது. இது தனி நபரை அல்லது ஒரு பிரமு- கரை அல்லது சமூகத்தை குறித்து நிற்பதால் விபரிப்பது பொருத்தமில்லை.

## வாய்மொழிக் கதைகள்:

இந்த வகையில் உயரப்புலம் ஐயனார் ஆலய தோற்றம், ஐயனார் - பரிகலங்களின் செயற்பாடுகள், வெடியரசன் கதை, பூதங்களின் கதை, வெடியரசன் கோட்டை முனி பற் றிய கதை, பஞ்சமிப் பேய், ஓமலாக்காட்டுப் பேய் கதைகள், கர்ண பரம்பரைக் கதையாக நெடுந்தீவின் தோற்றம் மற்றும் பொழுதுபோக்கு கதைகளாக ‘யார் தந்தது கொந்தமணி’, ‘பேய் தோட்டம் இறைக்க அழைத்துப் போனகதை’, ‘செட்டி- யைக் கொன்றான் வெள்ளி’ முதலான பல கதைகள் காணப் படுகின்றன. இவற்றுள் சில பேராசிரியர் கி. விசாகரூபன் அவர்களது நூலிலும் உயரப்புலம் ஆலய கும்பாபிஷேக மலரிலும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சடங்குகளும் நம்பிக்கைகளும்:

நெடுந்தீவில் தெய்வச் சடங்குகளின் வரிசையில் விதந்து பேசக்கூடிய சில விடயங்கள் காணப்படுகின்றன. இதில் சித்

திரைப் பௌர்ணமியன்று கிராமிய வழிபாட்டுத் தலங்களில் வைக்கப்படும் 'பூரண கும்பம்' எனப்படும் ஒரு வித மடை பரவல் நிகழ்வு தனிச் சிறப்பு வாய்ந்தது. இதில் பல உள் ளூர் உற்பத்திப் பொருட்கள் வழிபடுநர்களால் இடப்பட்டு வழிபாட்டின் இறுதியில் அவை ஏலமிடப்பட்டு ஆலயத்திற்கு வருமானமாக்கப்படுகிறது. இதில் நேர்த்தி-நிவர்த்தி, உள்ளூர் உற்பத்தி, பக்தி, நம்பிக்கை, சமர்ப்பணம், ஈகை முதலான பல விடயங்களை ஒருசேரக் காணமுடிகின்றது. இது போலவே கிராமிய வழிபாட்டுத் தலங்களில் வழிபாட்டின் போது வைக் கப்படும் பொங்கல், படையல் முதலானவற்றிலும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களும் பிரத்தியேகமான சில அம்சங்களும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக காவற் தெய்வமாகக் கருதப்படும் 'மொட்டையர்' ஆலயத்தில் சிறுதானிய அறுவடை யின் பின் செய்யப்படுகின்ற பொங்கலின் போது சாமை மாவினால் செய்யப்படும் மொட்டயர் உருவமும் அதன் கையில் ஒரு கோலும் (போந்தியக் கோல்) இருந்ததாக குறிப்பிடப்படுகிறது. இவ்வாறே ஆடிப் படைப்பு, பனாட்டுப் படையல், ஒடியல் - பாத்திப் படையல் என்று ஒவ்வொரு வாழ்வியல் அம்சத்திலும் நன்றியும் சமர்ப்பணமும் மேலோங்-கியிருந்ததை காணமுடிகின்றன.

வாழ்வியல் சடங்குகள் வகை தொகையற்றுக் காணப்படுகின் றன. பூப்பு நீராட்டு - பொதுக் கிணற்றில் அல்லது தாய் மாமன் வீட்டுக் கிணற்றிலேயே நிகழ்த்தப்படும் வழக்கம் இருந்துள்ளது. பூப்படைந்த பெண், மணமகன் முதலானவர் களை அழைத்துவரும் போது மிதிவெள்ளை அல்லது நில பாவாடை எனப்படும் 'வெள்ளாடை விரிக்கும் நடைமுறை இன் றுவரை காணப்படுகின்றது. இது ஆலயங்களில் சுவாமி ஊர்வலத்திலும் மரண - இறுதிச் சடங்கிலும் நடைமுறையி லுள்ளதும் குறிப்பிடத்தக்கது. நிறைகுடம் வைக்கின்றபோது மாவிலைக்குப் பதிலாக வேப்பிலை வைக்கும் நடைமுறை ருது மற்றும் சிரார்த்த நிகழ்வுகளில் காணப்படுகிறது. இச்சந் தர்ப்பங்களில் சந்தனத்திற்கும் பதிலாக மஞ்சளே வைக்கப்ப டுவதும் குறிப்பிடத்தக்கது.

ஆடிப்பிறப்பு - விவசாய திட்டமிடுதலுக்கான மிக முக்கிய நாளாக இருந்துள்ளது. நெடுந்தீவில் ஆடிக்கூழ் மற்றும் ஆடிப்படைப்பில் கடல் உணவு சேர்க்கப்படும் நடைமுறை இன்றளவும் காணப்படுகின்றது. ஆடிப்படையல் வீட்டினுள் ளும் வளவினுள்ளுமாக இரு இடங்களில் இடம்பெற்றதாக சொல்லப்படுகின்றது. ஆடிப்படைப்பிலும் இறந்தோருக்கான படையல்களிலும் 'மச்ச மாமிசம்' சேர்க்கப்படுவதால் இதில் கற்பூர ஆரத்தி இடம் பெறுவதில்லை. அதற்குப் பதிலாக மண்ணெண்ணை விளக்கே வைக்கப்படுகின்றது. மேலும் இறப்பு நிகழ்ந்த வீட்டில் இடம்பெறும் 'சடங்கு'/எட்டு', 'காச்சிப் படைப்பு' எனும் படையல்களிலும் 'மையம்' (சவம் / சடலம்) கிடந்த இடத்தில் மூன்று படையல்கள் வைக்கப்படும், சமய-லறையில் (குசினிக்குள்) மற்றொரு படையலும் வைக்கப் பட்டும். இவற்றுள் மையம் கிடந்த இடத்தில் படைத்தவை குடிமக்களுக்கும் சமயலறைப் படையல் உறவினர்களுக்கும் வழங்கப்பட்டதாக சொல்லப்படுகின்றது. நெடுந்தீவில் பிற இடங்களில் விடுபட்டுப்போன சில அபரக் கிரியை நடை-முறைகள் இன்றும் வழக்கிலிருந்து வருகின்றன. இந்த வகை யில் 31-ம் நாள் அந்தியேட்டிக் கிரியையில் தவில் நாதஸ் வரம் வாசித்தல், சிறுதேர் செய்து கல்லுப்படையல் உள்ளிட்ட சிலவற்றை அதில் வைத்து கடன் செய்தவர் உள்ளிட்ட நெருங்கிய உறவினர்கள் எடுத்துச்சென்று சமுத்திரத்தில் விட்டு வருவதும். இன்று வரை நடைமுறையில் இருந்து வருகின்றது. மேலும் இறப்புச் சடங்கு நடந்த வீட்டில் ஒரு வருட காலம் இழவு எனப்படும் ஐந்து - பழஞ்சலிப்பு நிகழ்வு களை நடத்துவது வழக்கமாக இருந்து வருகின்றது. இதில் ஊரை விட்டு வெளியேறிய உறவினர்கள்கூட கலந்து கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்கு நிகழ்வுகளில் கட்டிக் கொஞ்சுதல், கைநீட்டுதல் முதலானவையும் இடம் பெற்று வருகின்றது.

## பழமொழிகள்:

பழமொழிகள் எவ்வாறு உருப்பெற்றன. அவற்றின் பண்புகள் என்ன? முதலானவை பற்றி ஆராய்வதற்கு இது இடமில்லை. இங்கு வாய்மொழி வழக்காறுகள் சார்ந்த ஒவ்வோரம்சமும் எவ்வாறு அந்த மக்களின் வாழ்க்கைச் சூழ்நிலை, மொழிப் புலமை, பாரம்பரிய அறிவாற்றல், சமுதாயக் கட்டமைப்பு இயற்கைச் சூழல் முதலான எண்ணற்ற அம்சங்களுடனி ணைந்து இவற்றின் பிழிசாறாக - அந்த மக்களின் அனுப வத்திலிருந்து வெளிப்பட்டவை என்பதை எடுத்துக்காட்டு முக மாக இங்கு சிலவற்றை காண்போம்.

*'வலியக் கிழியும் பனங்கிழங்கிற்கு*
*வல்லிட்டுக் குத்தியும் ஆப்புமா தேவை'*

*'பனையால விழுந்தவனை மாடேறி உளக்கியதாம்'*

*'நோச்ச மாட்டிலதான் கொன்னிச்சான் மொய்க்கும்'*

*'உடையார் வீட்டு மோருக்கு ஏப்பக் கணக்கில்லை'*

*'மோருக்குப் போறமாம் முட்டி பிறகால ஏன்?'*

*'வடலிய வெட்டியாள் மனைவிய கட்டியாள்'*

*'பனையில படவாள் பார்க்கினம்'*

*'எப்போதும் வேப்பங்கன்று பத்தைக்கயா இருக்கும்'*

நெடுந்தீவு மக்கள் மனக் களஞ்சியங்களில் கிடக்கும் இவ்வா றான நூற்றுக்கணக்கான பழமொழிகள் நெடுந்தீவுக்கே உரித் தான வாழ்வனுபவத்தை சுமந்து நிற்கின்றன. எடுத்துக் காட் டாக உழவர் வாழ்வில் 'ஏர்' மிக முக்கியமான ஒன்று அதன் கொழு இணைக்கப்பட்ட பகுதி 'படவாள்' எனப்படும். இவற்றை விட மேழி, ஏர்க்கால், நுகம், நந்தை, பூட்டாங்கயிறு, இழுப்பாணி முதலான பல இணைந்தே ஏர் பயன்படும். பட வாளும், மேழியும் 'ட' வடிவுடையவை ஆயினும் அவற்றுக்கு கோண வேறுபாடுகள் உண்டு. உகந்த வளைவுடைய படவா ளுடைய ஏரினாலேயே சரியான முறையில் உழ முடியும். இதனைப் பனை மரத்தில் தேட முடியாது. இந்நிலையில் மேற்படி பழமொழி மணப்பெண் அல்லது மணமகன் தேடு வது தொடர்பில் பேசப்படுகின்றது. இது பதச்சோறாக அந்த மக்களின் அறிவு, அனுபவம், சமூகப் பொறுப்பு முதலான வற்றுக்கான சமர்ப்பணமாக தரப்படுகின்றது.

## உவமை, மரபுத்தொடர்கள்:

நெடுந்தீவு மக்களிடத்தே இன்றும் பயன்பாட்டிலுள்ள ஒரு சில

*'அறுத்த ஆண்பனை போல'*

*'நனைஞ்ச பனைபோல'*

*'உமலுக்க இருந்தெடுத்த ஒடியற் பிளாச்சுப் போல'*

*'ஒரேஒரு வடலி அதுவும் முடவடலி'*

*'சுறாப்பிறக உறு'*

*'நனைஞ்சதுகள்'*

## பட்டப் பெயர்கள்:

நெடுந்தீவில் தனி நபர்களுக்கு வழங்கி வரும் பட்டப் பெயர்களைப் பார்க்கின்றபோது அவர்களது வாழ்வு அனுபவமாகவே அவை வெளிப்படுவதைக் காண முடிகின்றது. இந்த வகையில் அவற்றில் உவமை, உருவகம், பொதுத்தன்மை என்பன செல்வாக்குச் செலுத்துவதைக் காண முடிகிறது.

'பனைக்குருவி, பனைபிடுங்கி, வீரக்குருவி, ஆவேசம், அவியாயம், காடேரி, நுழையன், நோளன், கொழுவாணி, யாழி, காடை, சவலை, மட்டி...' இவ்வாறு நீளும் பட்டியலில் ஏதோ ஒன்று அச்சொட்டாகப் பொருந்தியிருப்பதைக் காணலாம்.

## நாப்புரட்டுகள்:

மொழிப் பிரயோகத்தை இயல்பாக்குதல் - மேம்படுத்துதல் என்ற அடிப்படையில் பாரம்பரிய முறையில் வழங்கப்பட்டு வரும் நாப்புரட்டுக்கள் நெடுந்தீவிலும் காணப்படுகின்றன. திரும்பத் திரும்ப - வேக வேகமாக சொல்லி மொழிப் பயிற்சி பெறும் இவ்வம்சம் இளவயதுப் பிரிவினரின் விளையாட்டல்லா விளையாட்டாக அமைந்திருப்பதை காணமுடிகின்றது. அந்நியத் தன்மையற்றுக் காணப்படும் ஒரு சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

*'புட்டும் புதுப்புட்டு தும்பும் புதுத்தும்பு*
*புட்டைக் கொட்டிக் கொண்டு பெட்டியைத்தா'*

*'கடற்கரையில உரல் உருளுது -*
*கண்ட புலிக்குத் தொண்டைகறுக்குது'*

## வழக்குச் சொற்கள்:

நெடுந்தீவுக்கே உரித்தான பல நூற்றுக்கணக்கான வழக்குச் சொற்கள் காணப்படுகின்றன. இந்த வகையில் பேராசிரியர் ஆ.சதாசிவம் அவர்களுடைய அகராதியிலும் நூற்றுக்கு மேலான சொற்கள் இடம் பெற்றுள்ளன. இந்த வகையில், இரானாலியம், பகனாலியம், நிலப்பூச்சி, கலாப்பூச்சி, அருப்பெட்டி, அடுப்பாடு, சங்கடம், கடையால், பகிர், மையம், கொன்னிச்சான்... என்று நீண்ட பட்டியல் தரமுடியும்.

## சொல் சார்ந்த வழக்காறுகள்:

இந்த விடயம் மிகவும் நுட்பமாக ஆராயப்பட வேண்டிய பல் பரிமாணமுடையது. ஒன்றுடன் ஒன்று தொடர்புற்று நெடுந்தீவு மக்களின் வாழ்வியலுக்கு அடையாளமாக கட்டமைவு பெற்றுள்ளது. மிக ஆழமாக ஆராயப்பட வேண்டிய இவ்விடயத்திற்கு - மேலோட்டமாக சில உதாரணங்களைத் தருதலே இங்கு சாத்தியமாகின்றது.

உச்சரிப்பில் வேறுபாடு - ர், ம்/ன் வழங்குமிடத்தில் 'ங்' : ஞானங், அவங், அவங்க

சொற்களை மாற்றி உச்சரித்தல் : நிழல் - இணல், இரத்தம் - லத்தம், மிருகம் - முறுகம்.

வினா எழுத்துகள் இடம்மாறுதல் - எண்ணையா வருது?, மையமா எடுத்தாச்சு?

திரிபுச் சொற் பிரயோகம் - அறுக்குளா, அரியி

## நிறைவுரை:

இதுவரை நெடுந்தீவு மக்களின் இருப்புக்கு அடையாளமாக அமைந்த வாய்மொழி வழக்காறுகள் சிலவற்றைக் கண்டோம். இவை அவர்களின் புலமைத்துவ அடையாளமாகவும் வாழ்வனுபவமாகவும் இருந்து வருகின்றன. இவற்றைத் தொகுத்து ஆவணப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. இவற்றின் தொகுப்பென்பது 'துரைத்தனத்தின்' சின்னமாக அமையாது அந்த மக்களின் குரலாக அமைய வேண்டியது அவசியமாகின்றது. இதற்கு பிரக்ஞையுடையவர்களின் ஒத்துழைப்பும் கூட்டுறவும் அவசியமாக இருக்கின்றது. பூமிப்பந்தின் சின்னஞ்சிறு புள்ளியாய் உள்ள நெடுந்தீவில் ஒப்பீட்டளவில் பல்வேறு வறுமைகள் தாண்டவமாடும் இன்றைய சூழ்நிலையில் இவற்றை நிவர்த்தி செய்யும் முயற்சியில் பரோபகாரிகள் தம்மாலியன்ற பங்களிப்பை நல்குவதற்கு இடம் இருக்கின்றது. அன்றாட வாழ்க்கைக்கு போராடுகின்ற இம் மக்களுக்கு கிடைக்கின்ற மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக்கூட மனிதநேயமற்றுச் சுரண்டி, இத்தீவு மக்கள்வாழத் தகுதியற்றது எனப் பிரகடனப்படுத்தி ஒரு சிலரது சுயநலத் திட்டங்களை அரங்கேற்றுகின்ற சாத்தியப்பாடுகள் தென்படுகின்றன.

இந்த நிலையில் மரபார்ந்த தொழில் - சமூகப் பாதுகாப்பு, நல்லிணக்கம், சமயப் பொறை முதலான தளங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அறியாமையோடு போக்கிடமற்று இங்கு தங்கியிருக்கும் மிகச் சிலருக்காவது 'நெடுந்தீவு தம் பாரம்பரிய வாழ்விடம்' என்பதை உணர்ந்து புதிய உலகைக் காணும் வாய்ப்பை வழங்குதல் நம் அனைவரதும் தலையாய கட-மையாகும்.



sivagnanaseelan.a@thaiveedu.com




இந்திய இராணுவத்தின் பிரசன்னத்தின்போது இலங்கையில் குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் பல ஆக்க இலக்கியப் படைப்புக்கள் கவிதைகளாகவும், கதைகளாகவும், தொடர் நவீனங்களாகவும் பத்திரிகைகளில் வெளிவந்தவண்ணமிருந்தன. இந்திய இராணுவத்தினரது பார்வைக்கும், அவர்களின் செல்லப்பிள்ளைகளின் பார்வைக்கும் தப்ப வேண்டிய தேவை காரணமாக அக்காலத்தைய பிரசுரங்களில் தீவிரமான எதிர்ப்பலைகள் இடம்பெற்றிருக்கவில்லை. இருப்பினும், கதைசொல்லியின் நளினமான எழுத்து நடைகளுக்கூடாகவும் வாசகர் தகவலை மறைமுகமாகத் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. பின்னாளில் வெளிவந்த படைப்புக்கள் தீவிரமாகவும் வெளிப்படையாகவும் இந்திய இராணுவ அட்டூழியங்களைப் பேசின. இந்த ஆய்வில் நூலுருவில் வெளிவந்த ஆக்க இலக்கியங்கள் பற்றிய தகவல்களையே குறிப்பிட்டுள்ளேன். பல படைப்புக்கள் நூலுருவில் வெளிவராது, சிறு சஞ்சிகைகளுடனும், பத்திரிகைகளின் வார இதழ்களுடனும் தமது வாழ்வை சுருக்கிக்கொண்டன. அவை பற்றி விரிவாக இக்கட்டுரை ஆராயவில்லை.

## சிறுகதைத் தொகுதிகளில் இந்திய அமைதிப்படை:

இந்திய இராணுவ காலகட்டத்தில் இலக்கியவாதிகள் தாம் கண்டு அனுபவித்தும், பாதிக்கப்பட்டவர்களும் பிறரும் சொல்லக் கேட்டும் உள்வாங்கிக்கொண்ட துன்பியல் சம்பவங்களை இலக்கியத்தின் வழியாக வரலாற்றாவணமாகப் பதிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் அவ்வாறு பதிவுசெய்ய முனையும் வேளையில் எதிர்கொண்ட, உயிராபத்துக்கள் உள்ளிட்ட பிரச்சினைகள் பல.

அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்து இலக்கியவாதி, லெ. முருகபூபதி 1987-88 ஆண்டுக் காலப்பகுதியில் இந்திய இராணுவம் இலங்கையின் வட-கிழக்குப் பகுதிகளில் நிலைகொண்டிருந்தபொழுது தனக்குக் கிட்டிய தகவல் ஒன்றின் அடிப்படையில் 'ஆண்மை' என்ற சிறுகதையை எழுதி டொமினிக் ஜீவா அவர்களின் 'மல்லிகை' சஞ்சிகைக்கு அனுப்பியிருந்தார். அப்பொழுது மல்லிகை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியானது. அதனால் ஆசிரியர் டொமினிக்ஜீவா அதனை பிரசுரிக்கத் தயங்கி, நேரம் வரும்போது பிரசுரிப்பதாக முருகபூபதிக்கு கடிதம் ஒன்றினை எழுதியிருந்தார்.

தமிழக இதழ்களும் கொழும்பு இதழ்களும் அந்தக் கதையை பிரசுரிக்கத் தயங்கின. பின்னர் அவுஸ்திரேலியா மெல்பன் தமிழ் வானொலியும், குவின்ஸிலாந்து தமிழ் ஒலி வானொலியும் அக்கதையின் ஒலி வடிவத்தை ஒலிபரப்பியிருந்தன.

தனது இரண்டாவது சிறுகதைத் தொகுதியான 'சமாந்தரங்கள்' தமிழ்நாடு தமிழ்ப் புத்தகாலயத்தினால் ஜுலை 1988-ல் வெளியிடப்பட்டபோது அதில் ஆண்மை சிறுகதையையும் முருகபூபதி சேர்த்துக்கொண்டார். இக்கதைபற்றி எஸ்.பொ, செங்கை ஆழியான், ரேணுகா தனஸ்கந்தா, வாசுதேவன், ஆ.சி. கந்தராஜா ஆகிய படைப்பாளிகளும் சிலாகித்து பதிவு செய்திருந்தனர். குவின்ஸ்லாந்து வானொலியில் ஆ.சி. கந்தராஜாவே அந்தக் கதையை வாசித்தவர் என்பது நான் பின்னர் அறிந்துகொண்ட தகவல். சமாந்தரங்கள் தொகுதி வெளியானதன் பின்னர் மலேசியா இதழ் ஒன்று அதனை மறுபிரசுரம் செய்திருந்தது.

இந்திய ஆக்கிரமிப்பு படையினால் பாலியல் வல்லுறவுக்குட்பட்ட ஒரு யுவதிக்கு வாழ்வு தருமாறு அவளது மாமியார், அவுஸ்திரேலியாவிலிருக்கும் தனது மகனுக்கு எழுதும் கடிதமே அந்தக் கதை. குறிப்பிட்ட ஆண்மை சிறுகதையை படித்த சில நண்பர்கள் லெ. முருகபூபதியை ஒரு இந்திய விரோதியாகவும் பார்த்தார்கள். தமிழக இதழ் தீக்கதிர், குறிப்பிட்ட சிறுகதைக்கு கடுமையான விமர்சனத்தினை வெளியிட்டிருந்தது. அதனை தமிழ்ப் புத்தகாலய அதிபர் நண்பர் அகிலன் கண்ணன் 1990-ல் முருகபூபதி அவர்கள் சென்னைக்குச் சென்ற சமயம் தனக்கு நேரில் காண்பித்திருந்ததாக திரு. முருகபூபதி என்னிடம் தெரிவித்திருந்தார்.

சிறுகதைத் தொகுதிகளில் வெளிப்படையாக இந்திய அமைதிப்படை பற்றிப் பேசிய சிறுகதைகளை உள்ளடக்கிய முதலாவது நூலாக, 'பிரம்படி' என்ற தலைப்பில் வெளியாகிய




க. தணிகாசலம் அவர்களின் சிறுகதைத் தொகுதியைக் குறிப்பிடலாம். கொழும்பு தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சென்னை சவுத் ஏஷியன் புக்ஸ், ஜூலை 1988-ல் இந்நூலை வெளியிட்டிருந்தது. ஆக்கிரமிப்பின் காரணமாக வறுமையும் பிணியும் வருத்தமும் வாய்ப்பின்மையும் பீடித்த ஒரு மக்கட்பிரிவின் மீட்சிக்காகவும் விடுதலைக்காகவும் விமோசனத்திற்காகவும் உழைக்க வேண்டும் என்னும் வேட்கையினால் உந்தப்பட்டு அந்த வேட்கையின் சுவாலையாகச் சொரூபங்கொண்டுள்ள போராளிகளின் நியாயங்களைச் சொல்கின்றன இக்கதைகள். நூலின் தலைப்பான பிரம்படி என்பது, இந்திய இராணுவ அழிப்புக்குட்பட்ட ஈழ மண்ணில் யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள சிற்றூர் ஒன்றின் பெயராகும். இந்திய இராணுவம் விடுதலைப் போராளிகளுக்கு எதிராக நள்ளிரவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அருகில் அமைந்திருந்த வெளியில் வான் மார்க்கமாகத் தரையிறங்கினர். விடுதலைப் புலிகளின் பலத்த எதிர்த் தாக்குதலில் தப்பிப் பிழைத்த ஒருசில இந்தியப் படையினரின் பதுங்கிடமாக அமைந்துவிட்டது பிரம்படி மண். அன்று மாலை அவர்களை மீட்க வந்த இந்திய இராணுவத்தினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட மிலேச்சத்தனமான இராணுவ அடக்குமுறையில் படுகாயப்பட்டதே இவ்வூராகும். இந்நூலிலுள்ள கதைகளுக்குப் பொருத்தமான தலைப்பாக இந்நூலுக்கான பிரம்படி என்ற பெயர் அமைகின்றது. இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் அக்கால வரலாற்றுச் சூழலிலேயே தோய்ந்து நின்று எழுதப்பட்ட கதைகளில் பொருளுருவமும் மொழியுருவமும் இந்நூலாசிரியரை நல்லதொரு சிறுகதை எழுத்தாளராக நமக்கு அறிமுகம் செய்து வைத்தது. உறவுகள் தெரிகின்றன, மண்ணின் மைந்தர்கள், கூலிக்குழப்பம், ஒரு பாதை திறக்கப்படுகின்றது, மழை, சிவந்த பாதையில், கல், தெற்கு நோக்கி, வேலிகள், அகதி, நாய்களோ, பிரம்படி, நல்லநாள் ஆகிய தலைப்புகளில் அமைந்த 13 சிறுகதைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

விடுதலைப் புலிகளின் சார்பான எரிமலை, வெளிச்சம் போன்ற ஊடகங்கள் அவ்வப்போது போராளிகளினால் படைக்கப்பெற்ற படைப்பிலக்கியங்களுக்குக் களமமைத்துக் கொடுத்து வந்துள்ளன. அத்தகைய ஊடகங்களினூடாக வளர்த்தெடுக்கப்பட்ட பல போராளிகள் பின்னாளில் தரமான படைப்பிலக்கியவாதிகளாகத் தம்மை நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலங்களில் எழுதப்பட்ட அவர்களது படைப்புக்கள் பெரும்பாலும் சமகால வாழ்வியல் அவலங்களை உள்வீட்டுப் பிள்ளையாக நின்று எடுத்துரைப்பதாக அமைந்திருந்தன. அவ்வகையில் 'அம்மாளைக் கும்பிடுறானுகள்' என்ற தலைப்பில் வெளியாகிய சிறுகதைத் தொகுதியை முக்கியமானதாகக் குறிப்பிடலாம். லண்டனிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவு வெளியிட்டிருந்த இந்நூலின் இரண்டாவது பதிப்பு ஓகஸ்ட் 1997-ல் வெளிவந்தது. முதற்பதிப்பு ஓகஸ்ட் 1994-ல் தாயகத்தில் வெளியாகியிருந்தது. உண்மைச் சம்பவங்களைக் கருவாகக் கொண்ட 15 கதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றிருந்தன. (இந்நூலை எழுதியவர் கவிஞர் காசி ஆனந்தன் என்று அறியக்கிடைக்கின்றது). இந்திய அமைதிப் படையின் ஆக்கிரமிப்புக் காலகட்ட வாழ்க்கையையும், அந்த வாழ்க்கையின் அவலங்களையும் சோகங்களையும் சித்திரிக்கும் படைப்புக்களாக 14 கதைகளும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் கொடூரத்தினைச் சித்திரிப்பதாக ஒரு கதையும் அமைகின்றன.



அம்மாளைக் கும்பிடுறானுகள் என்ற நூலை அடுத்து அதன் இரண்டாம் பாகமாகக் கருதப்படக்கூடிய 'வில்லுக்குளத்துப் பறவைகள்: உண்மைக்கதைகள் தொகுதி' என்ற நூல் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவினால், ஆடி 1995-ல் வெளிவந்தது. 17 உண்மைக் கதைகளைக் கொண்ட இத்தொகுதியில் இந்திய அமைதிப் படையின் வேட்டைக்குப் பலியான அப்பாவித் தமிழ் மக்களின் கதைகள், போராட்டத்தில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள், போராளிகளை நேசித்து அவர்களைக் காப்பாற்றத் துணிவுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள் எனப் பலவாறான உண்மைக் கதைகள் பதிவுபெற்றிருக்கின்றன. அவ்வகையில் இந்திய இராணுவத்தை போர்க் காலத்தில் நேரில் எதிர்கொண்டவர்களின் உண்மைக் கதைகள் பக்கங்கள் தோறும் தமது உணர்வை பதியவைத்திருக்கின்றன.

ஈழத்து இலக்கிய உலகில் தடம் பதித்த எழுத்தாளர் யாழூர் துரை, (ஒக்ரோபர் 15, 1946 - மார்ச் 21, 2012) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆறுமுகம்-சிவகாமி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர். யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தகசாலையின் பத்திரிகை விற்பனைப் பகுதியை நீண்ட காலமாக இயக்கி வந்தவர். போர்க் காலத்தில் தமிழகத்துக்குப் புலம்பெயர்ந்து சென்று, சென்னை மந்தை வெளியில் வாழ்ந்து வந்தவர். ஆறுமுகம் தர்மலிங்கம் என்ற இயற்பெயரையும், நெருங்கிய நண்பர்களிடையே 'ஐயாத்துரை' என்ற வீட்டுப் பெயரையும் கொண்ட இவர் இலக்கிய உலகில் தனது படைப்பாக்கங்களை 'யாழூர் துரை' என்ற புனைபெயரில் எழுதி வந்தவர். ஈழத்து எழுத்தாளரும், நாடக இயக்குனருமான இவர், யாழ்ப்பாண மண்ணை மையப்படுத்திப் பல சிறுகதைகளை எழுதியுள்ளார். 'கண்ணீர்த் தேசம்' என்ற சிறுகதைத் தொகுப்பை இவர் வெளியிட்டுள்ளார். இது ஈழ மண்ணின் கதை மாத்திரமல்ல. ஒரு கண்ணீர் தேசத்தின் வாழ்வியல் பதிவு. வேலை நிமித்தம் வெளியே சென்றவர் வீடு திரும்பாத விபரீதம், நண்பனைக் கண்டுவரப் போனவர் நடுவீதியில் காலற்றுப் போன பரிதாபம், பத்திரிகை வாங்கக் கடைக்குச் சென்றவர் சடுதியில் உயிரிழந்த கொடூரம். மண வறையில் உட்கார்ந்து மங்கல நாண் பூட்டிய கையோடு ஷெல் அரக்கனின் பிடியில் சிதறிச்சென்ற சொந்தங்கள், வானூர்தியிலிருந்து வீசப்பட்ட குண்டுக்கு இரையான குடும்பங்கள், இவையே தமிழீழத்தைக் கண்ணீர் தேசமாக்கி உங்கள் முன் காட்சிக்கு வைத்திருக்கின்றார். பௌத்த சிந்தனையுடன் தார்மீகத்தைப் பேசியே அத்தனை மனித உரிமைகளையும் மீறிய ஓர் அரசின் கோர முகமும், இந்திய அரச படையினரின் ஊழித் தாண்டவமும் இதிலுள்ள ஒன்பது சிறுகதைகளின் வழியே இலக்கியப் பதிவாக்கப்பட்டுள்ளன. உள்ளத்தை ஊடுருவும் மழலையொன்றின் மேலட்டைப் பார்வையுடன் இலங்கநாதனின் (லங்கா) உட்புற ஓவியங்களும் குறிப்பிடத்தக்கவை.

பிற இஸ்லாமிய எழுத்தாளர்கள் எழுதத் தயங்கும் பல தீவிரமான விடயங்களை ஈழத்து எழுத்தாளரும், கவிஞரும் ஊடகவியலாளரும் குறுந் திரைப்பட நெறியாளரும் என பல்வேறு பரிமாணங்களில் அறிமுகமான முஸ்டீன் 'ஹராங்குட்டி: சிறுகதைகள்' என்ற தலைப்பில் கதைகளாக்கியுள்ளார். வாக-னேரி, கௌதாரி முனையிலிருந்து, செய்ஹ் இஸ்மாயீல் ஞாபகார்த்த பதிப்பகம் இந்நூலை 2012-ல் வெளியிட்டிருந்தது. இந்தத் தொகுதியில் 12 கதைகள் அடங்கியுள்ளன. போர்க் காலத்தில் முஸ்லிம் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் அவல வாழ்வின் வெட்டுமுகத்தை ஒரு வலுவான முனைப்புடன் இந்நூல் தருகின்றது. பல்வேறு இயக்கங்கள், விடுத

லைக்காக இயங்கிய காலம், இந்திய அமைதிப் படைக்காலம், சமாதான ஒப்பந்தக் காலம் ஆகிய காலகட்டங்களின் நடவடிக்கைகள் இக்கதைகளில் பதிவாகியுள்ளன. அனேகமானவை அக்கால நிகழ்வுகளின் உண்மைப் பதிவுகளே இவை என்பதை அறியமுடிகின்றது. தலைப்புக் கதையான ஹராங்குட்டி வித்தியாசமானது. மார்க்கத்தின் பெயரால் சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் மௌலவிகள் பற்றியது. முஸ்லிம் மார்க்கப் போதகர்களை விமர்சிக்கும் துணிச்சலான கதை இது.

## கவிதைத் தொகுதிகளில் இந்திய அமைதிப்படை:

சிறுகதைகளைவிட கவிதைகளிலேயே இந்திய அமைதிப் படை தொடர்பான செய்திகள் அதிகம் இடம்பெற்றிருந்தன. இருப்பினும் அவை தனித் தொகுதிகளாக எங்கும் வெளியிடப்படவில்லை. ஆயினும் அக்காலகட்டத்துக் கவிதைகள் பெரும்பாலும், இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கால அவலங்களையே பதிவு செய்திருந்தன. 'சோகங்களிலும் துயரமனது' என்ற கவிதைத் தொகுதியை உதாரணமாகக் கொள்ளலாம். கௌரியின் கவிதைகளை உள்ளடக்கிய இத்தொகுதி சென்னையிலிருந்து சமூக ஆய்வு வட்டத்தினால், சித்திரை 1988-ல் வெளியிடப்பட்டது.

ஈழப் போராட்டக் களத்திலிருந்து கனல் மணம் பரப்பிய இளங் கவிஞர்களுள் கௌரியும் ஒருவர். விடுதலைப் போராட்டத்தில் தீவிர பங்காளியாக இருந்த வேளையில் ஈழத்தின் போர்க்குரலாக இவரது கவிதைகள் வெடித்தன. தமிழ் மண்ணை ஆக்கிரமித்த சிங்கள இராணுவத்துக்கும், இந்திய இராணுவத்துக்கும் அதன் அரசுகளுக்கும் எதிரான மக்களின் உள்ளக் குமுறல்கள் இவரது கவிதைகளில் வெளிப்படுத்தப்பட்டன. இத்தொகுப்பிற்கான நீண்ட முன்னுரையினை சென்னை மாநிலப் புதுக் கல்லூரிப் பேராசிரியர் கவிஞர் இன்குலாப் அவர்களும், பின்னுரையினை தமிழ்நாடு, குடியாத்தம் அரசு கலைக் கல்லூரிப் பேராசிரியர் அ. மார்க்ஸ் அவர்களும் வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

'பெயரறியாப் பெரியோன்: காலமும் கவிதையும்' என்ற கவிதைத் தொகுதி, தி. உதயசூரியனால் எழுதப்பட்டு யாழ்ப்பாணம் பட்டப் படிப்புகள் கல்லூரி வெளியீடாக ஆடி 2002-ல் வெளிவந்தது. கவிதைத் துறையிலே தீவிர ஈடுபாடு கொண்டு நவீன கவிதைகளை எழுதிவரும் இளங்கவிஞர் தி. உதயசூரியன், போர் உலாவரும் மண்ணில் இருந்து தன்னைச் சூழ்ந்து நடக்கும் நிகழ்வுகளை கவிதைகளாகப் பதிவு செய்திருக்கிறார். முதல் இரு பாடல்களையும் செம்மணி புதைகுழிகளுடன் தொடங்கும் இவர், ஜெயசிக்குறு போர் நடவடிக்கை, கிபீர் விமானத் தாக்குதல், எரிபொருள் தட்டுப்பாடு, உணவுத் தட்டுப்பாடு என்று எதையுமே விட்டுவைக்கவில்லை. இந்திய இராணுவம் தமிழர் மண்ணை ஆக்கிரமித்திருந்த வேளையிலும், இரண்டாம் கட்ட ஈழப்போரின்போதும், இடப்பெயர்வின் பின்னர் வன்னியில் வாழ்ந்தபோதும், யாழ்ப்பாணத்துக்கான பாதை திறக்கப்பட்ட பின்னருமாக அவ்வப்போது தான் எழுதியவற்றுள் தேர்ந்த 25 கவிதைகளை இத்தொகுப்பில் சேர்த்துள்ளார்.

'மரணம் வாழ்வின் முடிவல்ல: அகிலன் கவிதைகள்' என்ற கவிதைத் தொகுதி சார்ள்ஸ் ஐங்கரன் அவர்களால் தொகுக்கப்பெற்று யாழ்ப்பாணம், வசந்தம் பப்ளிக்கேஷன்ஸ் வெளியீடாக மே 1990-ல் வெளியிடப்பட்டிருந்தது. 5.5.1970 அன்று பிறந்த அகிலன் திருச்செல்வம் 10.5.1989 அன்று இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில் கொலை செய்யப்பட்டார். அவரது மரணத்தின் முதலாம் ஆண்டு நினைவாக அவரது நண்பர்களால் தொகுக்கப்பெற்ற அகிலனின் கவிதைகளைக் கொண்டதாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. என் வித்தியாசமானவளுக்கு, எங்கள் மரணம், நீ, நாளையாவது நிரந்தரமாகட்டும், மீண்டும் நான் உயிர்ப்பேன், இனி அரும்ப முடியாத ஒரு பூமரம், மரணம் வாழ்வின் முடிவல்ல, எனது தனிமையை நீக்குவாயா, நினைவும் கனவும் இல்லாத ஒரு நிலையில், என் காதலியே ஆகிய தலைப்புகளில் இக் கவிதைகள் எழுதப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தின் குருநகர் மண்ணின் கூத்துக் கலைஞரான கலையார்வனின் பதினேழாவது நூலாக வெளிவந்த குறுங்காவியமே 'அறுவடை'. குருசுமுத்து இராயப்பு என்ற இயற்பெயரைக் கொண்ட கலையார்வன் யாழ்ப்பாணம், ஜெயந்த் சென்டர் மூலம் மார்கழி 2014-ல் இக் காவியத்தை எமக்கு வழங்கியிருக்கிறார். 10.06.1986 - 22.10.1987 காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தின் நெய்தல் மண்ணான குருநகர்ப் பிரதேசத்தில் இலங்கை மற்றும் இந்திய இராணுவத்தால் அப்பாவி மக்கள் பலியெடுக்கப்பட்ட ஐந்து சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்டதாக இக்காவியம் வடிக்கப்பட்டுள்ளது. மண்டைதீவு முனைக் கடலில் கரைவலைத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அந்தப் பிரதேச மீனவர்களில் 31 பேர் கொல்லப்பட்ட நிகழ்வு, பள்ளிக்குடா அகதிகளில் நோயாளர்களை யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டுவரும் வழியில் முகத்துவாரக் கடற்பகுதியில் படகுடன் மூழ்கடிக்கப்பட்ட ஐவர் கொலை நிகழ்வு, வீடுகளில் பாதுகாப்பின்றி அருகாமையிலுள்ள புனித பத்திரிசியார் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்தவர்களில் நால்வரைக் கொலை செய்த நிகழ்வு, அதே தினம் புனித பத்திரிசியார் கல்லூரியில் விமானக் குண்டுத் தாக்குதலுக்குள்ளானவர்களை வைத்தியசாலைக்கு வாகனத்தில் எடுத்துச் சென்ற வேளை வைத்தியசாலைக்கு முன்பாகவே 11 பேர் கொல்லப்பட்ட நிகழ்வு, அராலியிலிருந்து தீவகம் நோக்கி வள்ளங்களில் இடம்பெயர்ந்து சென்ற நாளில் கொல்லப்பட்ட 15 பேர் பற்றிய நிகழ்வு எனப் போர்க்காலக் கொடுமைகளையும் அவலங்களையும் நெடுங்கவிதையாக இந்நூலில் நெஞ்சம் உருகப் பதிவுசெய்திருக்கிறார். வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகார அமைச்சு 24.10.2015-ல் கிளிநொச்சியில் நடத்திய வடக்கு மாகாண இலக்கியப் பெருவிழாவில், 2014-ல் வடமாகாணத்தில் வெளிவந்த சிறந்த மரபுக் கவிதை நூலுக்கான பரிசை வென்ற நூல் இதுவாகும்.



selvarajah.n@thaiveedu.com




ஒரு நாடு அயல்நாட்டு ஆட்சியாளர்களால் ஏன் ஆக்கிரமிக்கப்படுகிறது? இந்தக் கேள்விக்குப் பொது அறிவு கொண்ட எவரும் சொல்லக்கூடிய எளிமையான பதில்கள் இரண்டு இருக்கின்றன. முதலாவது அயல்நாட்டு ஆக்கிரமிப்பாளர்களின் மண்ணாசை. இரண்டாவது, சொந்தநாட்டு ஆட்சியாளர் அப்போது ஆட்சிப்பண்புகள் இல்லாதவராகப் பலவீனமாக இருப்பது.

முன்பு பார்த்தபடி பல சைவ, வைணவக் கோவில்களையும் எழுபதாண்டுகளுக்குக் குறையாத ஆட்சியையும் ஈழத்தில் நிலைநிறுத்திய சோழர்கள் இந்நாட்டை வெல்ல முயன்றதற்கான வரலாற்றுக் காரணங்கள் சுவையானவை.

சோழர்கள் ஏன் இலங்கை மீது படையெடுத்தார்கள் என்ற கேள்விக்கு நாம் வெறுமனே பொது அறிவு மாத்திரம் கொண்டவர்களாக மேலுள்ள இரண்டு காரணங்களை மாத்திரம் யோசிக்கக்கூடாது. சோழரின் மண்ணாசையோ, சோழப் படையெடுப்பின் போது இலங்கையை ஆண்ட ஐந்தாம் மகிந்தனின் பலவீனமோ மாத்திரம் இலங்கை சோழர் கையில் வீழ்ந்ததற்குக் காரணங்கள் அல்ல. அதை விடப் பெரிய - முக்கியமான காரணங்கள் இருக்கின்றன. நகைமுரண் என்னவென்றால், இலங்கைப் பாடநூல்களில் கூட இந்த இரு காரணங்களுமே சோழப் படையெடுப்புக்கான முதன்மைக் காரணங்களாகச் சொல்லப்படுகின்றன.

சோழப் படையெடுப்புக்குச் சாதகமாக அமைந்த முக்கியமான இரண்டு வரலாற்றுக் காரணங்கள் இருக்கின்றன. முதலாவது காரணம் இலங்கையின் பொருளியல், அப்போது உலகளாவிய வணிகத்தில் முதன்மையான சக்திகளில் ஒன்றாக வளர்ந்துகொண்டிருந்த தென்னிந்திய வணிகக் கணங்களின் கைகளுக்குள் விழுந்துகொண்டிருந்தமை.

வணிகக் கணங்களில் கடல் கடந்து வாணிபம் செய்த பெருவணிகர்கள் முக்கிய இடம் வகித்திருந்தார்கள். இவர்கள் கொண்டு செல்லும் வணிகப்பொருட்களுக்குக் காவலாகப் படைவீரர்கள், கப்பல்களை இயக்கும் மாலுமிகள், வணிக உற்பத்திகளை விளைவித்து அவர்களிடம் கையளிக்கும் சமூகங்கள் இணைந்த பேரமைப்பாக ஒவ்வொரு வணிகக் கணமும் இருந்தது.

இப்படி 9 முதல் 13-ம் நூற்றாண்டு வரை தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் வாணிபத்தில் தவிர்க்கமுடியாத தாக்கத்தைச் செலுத்திக்கொண்டிருந்த வணிகக் கணங்களில் ஐநூற்றுவர், மணிக் கிராமத்தார், அஞ்சுவண்ணம் எனும் மூன்றும் குறிப்பிடத்தக்கவை. இவற்றில் மணிக் கிராமத்திலும் ஐநூற்றுவரிலும் தமிழ் தெலுங்கு உட்பட்ட மொழிகளைப் பேசிய சைவ-வைணவரும் சமண-பௌத்தரும் இருந்தார்கள். அஞ்சுவண்ணம் என்பது தென்னகத்தவர் அல்லாத பாரசீகர், அரேபியர் அடங்கிய, பெரும்பாலும் இஸ்லாமியராக ஊகிக்கப்படும் வணிகர்களைக் கொண்ட கணம்.

இந்த மூன்று வணிகக் கணங்களுடன் இணைந்தும் பிரிந்தும் செட்டிகள், நகரத்தார், நானாதேசிகள், வளஞ்செயர் முதலிய பல்வேறு வணிகக் கணங்கள் நீடித்துக்கொண்டிருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

வணிகக் கணங்கள் அரசர்களோடும், தொழில்சார் சமூகங்களோடும் நல்லுறவில் இருந்தன. செல்வத்தைக் கைவசம் வைத்திருந்ததால், சில இடங்களில் உள்நாட்டு அரசியலைத் தீர்மானிக்கும் சக்திகளாகவும் இவர்கள் இருந்தார்கள். பொதுவாகச் சோழரின் கடல் கடந்த ஆட்சிக்குக் காரணம், அவர்களோடு இணைந்து இயங்கிய ஐநூற்றுவர் வணிகக் கணம் தான் என்பது அண்மைக்காலமாக ஊகிக்கப்பட்டு வருகின்றது.

அந்த ஊகத்தை உறுதிப்படுத்துவது போலத் தமிழ்மொழியில் அமைந்த ஐநூற்றுவரின் கல்வெட்டுகள், சோழராட்சி நிலவிய இந்தோனேசியா, இலங்கை முதலிய நாடுகளில் கிடைத்துள்ளன. தெலுங்கு, கன்னடம், வடமொழி முதலிய பல்வேறு மொழிகளிலும் கல்வெட்டுப் பொறித்துள்ள ஐநூற்றுவர், கன்னடத்தின் மத்திய கால வணிக நகரங்களில் ஒன்றான ஐகோலே அல்லது ஐயம்பொழில் புரத்தில் வீற்றிருந்த கொற்றவையைக் குலதெய்வமாக வழிபட்டு வந்திருக்கிறார்கள். சைவம், வைணவம், பௌத்தம், சமணம் முதலிய சமயங்களுக்கு ஆதரவு தருவோராகவும், தாங்கள் குடியேறிய பகுதியில் வசிக்கும் மக்களுக்குப் பாதுகாப்பையும் வசதிகளையும் உறுதிப்படுத்துவோராகவும் ஐநூற்றுவர் இருந்தார்கள். இலங்கையில் சோழராட்சி நிலவிய முக்கிய நகரங்களான அனுராதபுரம், பொலனறுவை, பதி (பதவியா) ஆகிய இடங்களில் ஐநூற்றுவரின் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. சோழராட்சியிலும் சோழராட்சிக்குப் பின்னும் 15-ம் நூற்றாண்டு வரையான வடமேற்கு இலங்கை (மாகல், தெதிய முல்லை), மேற்கிலங்கை (கல்லுத்துறை), தென்னிலங்கை



முதலிய இடங்களில் இவர்களது குடியிருப்புகள் பரவலாக இருந்தமை அங்கெல்லாம் கிடைத்துள்ள தமிழ்க்கல்வெட்டு கள் மூலம் தெரியவருகின்றது. தென்னிலங்கையில் ஐநூற்று வரின் நகரம் அமைந்திருந்த அம்பலாந்தோட்டை, மத்திய காலத்தில் மகாநாககுலம் என்ற பெயரில் உரோகணத்தின் தலைநகராக விளங்கிய பழம்பதி என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படி அன்றைய வங்காள விரிகுடாவின் பொருளியலைத் தீர்மானித்த ஐநூற்றுவர் முதலிய வணிகக் கணங்கள், இலங் கையைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்தது, கடல் வணிகத்தில் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வ தற்காகவே என்பது இன்று பெருமளவு உறுதியாகிவிட்டது. இன்று போலவே அன்றும் இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள இலங்கைத்தீவின் அமைவிடச் சிறப்பும் அதன் மீதான ஆதிக்கமும், மேற்கே இருந்து வந்த அரேபிய வணி கர்களுக்கும் கிழக்கே இருந்து வந்த சீன மற்றும் தென்கி ழக்காசிய வணிகர்களுக்கும் மத்தியில் மூன்றாவது சக்தியாக வளர்ந்துகொண்டிருந்த சோழ அல்லது தமிழக வணிகர்க ளின் நிலைத்திருக்கைக்கு அவசியமாக இருந்தது. சீனத்திலி ருந்து இலங்கை வரை நீடித்துள்ள பௌத்தத்திலும், தென்கி ழக்காசியாவின் சைவ, வைணவ எச்சங்களிலும் தமிழ்ச்சாயல் கண்டறியப்பட்டு சுட்டிக் காட்டப்பட்டுள்ளமைக்கு இந்த வணிக வலையும், அந்த வலை மூலம் நிலைநிறுத்தப்பட்ட அரசியல் பலமும் அடிப்படையாக இருந்திருக்கின்றன. தமிழக வணிக ரின் கை பதினான்காம் நூற்றாண்டிலும் இந்துமாக்கடலின் வணிக ஆதிக்கத்தில் ஓங்கியிருந்தது என்பதை, பாரசீகம், சீனம், தமிழ் எனும் மும்மொழியில் பொறிக்கப்பட்ட காலிக் கல்வெட்டு மூலம் நாம் அறிகிறோம்.

சோழர் கைப்பற்றிய கையோடு, இலங்கை அரசின் தலைந கர் அனுராதபுரத்திலிருந்து பொலனறுவைக்கு மாற்றப்படுவ தும், இந்த வணிக - பொருளியல் காரணத்துக்கான முதன் மையான சான்றாகும். ஏனெனில், மேற்குக் கடலை விட, கிழக்குக் கடலிலேயே அப்போது அதிக வணிகப் போக்குவ ரத்து நிகழ்ந்துகொண்டிருந்தது. சோழத்திலிருந்து பாக்கு நீரி ணையூடாகப் பாண்டியரின் கண்காணிப்பைக் கடந்து மாந் தைக்கு வருகைதந்து அங்கிருந்து அனுராதபுரம் செல்வதை விட, தடையேதுமின்றி கிழக்குக் கடலில் பயணித்துத் திருக் கோணமலைக்குச் சென்று அங்கிருந்து மாவலிகங்கை, அம் பன் கங்கை வழியே பொலனறுவைக்குச் செல்வது இலகு வான, பாதுகாப்பான வழியாக இருந்தது. முழுமையாக உறு திப்படுத்தப்படாத இன்னொரு காரணம், கடல்நீரோட்ட மாறு பாட்டால் அப்போது மாந்தைத் துறைமுகம் மண்மூடிக் கப் பல் போக்குவரத்துக்குப் பொருத்தமற்றதாக மாறிக்கொண்டி ருந்தது தான். 12-ம் நூற்றாண்டுக்குப் பின்னர், மாந்தைத் துறைமுகம் இயங்கிக்கொண்டிருந்ததற்கான சான்றுகள் மிகக் குறைவு அல்லது இல்லை என்றே சொல்லலாம்.

ஆக, சோழருக்கு நட்புச் சக்தியான வணிகக் கணங்களின் விரிவாக்கத்துடன், இலங்கையையும் கைப்பற்றவேண்டிய தேவை அல்லது ஆவல் இராசராச சோழனுக்கு ஏற்பட்டிருக் கலாம்.

இனி, ஈழத்துச் சோழப் படையெடுப்புக்கான இரண்டாவது காரணம், சிங்களம் பாண்டிநாட்டோடு நெருக்கமாகிக் கொண் டிருந்தது என்பது! விசயன் தன் பட்டத்தரசியாக பாண்டிய இளவரசி ஒருத்தியையே மணந்தான் என்கின்ற மகாவம்சக் குறிப்புடன், இலங்கைக்கும் பாண்டிநாட்டுக்குமான உறவு ஆரம்பிக்கின்றது. புவியியலைச் சிந்தித்தாலும், சோழநாட்டை விடத் தூரத்தில் கிட்டியதாக இருக்கும் பாண்டிநாட்டிலி ருந்தே இலங்கைக்கு முதல் குடியேற்றங்கள் ஏற்பட்டிருக்க அதிக வாய்ப்புகள் உண்டு. தென்னகப் பெருநிலத்தின் அர சுகளோடு ஈழத்து அரசு கொண்டிருந்த உறவும் விலக்கமும் பற்றிப் பல தகவல்கள் கிடைக்கின்றபோதும், பாண்டிநாட் டோடான பந்தம் சோழ ஆதிக்கத்துக்கு முன்பே இலங்கை யில் இறுக்கமடைந்திருந்தது. குறிப்பாகத் தென்னகத்தில் திருப்புமுனையான ஆட்சியை நிகழ்த்திய சிறீமாற சீவல்லவ பாண்டியன் காலத்தில் (அண்ணளவாக 850 அளவில்) இந்த உறவு வலுவடைந்ததாகச் சொல்லலாம்.

தென்னகத்தில் பல்லவ - பாண்டிய அரசுகளின் வீழ்ச்சிக்கும் சோழ அரசின் எழுச்சிக்கும் அடிப்படையாக அமைந்த தெள் ளாற்றுப் போரில் பல்லவ - சோழ - இராட்டிரகூட அரசுக ளின் கூட்டணி முன் சீவல்லவ பாண்டியன் தோற்றான். அந் தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அதற்கு முன் நடந்த ஓர் ஈழப்படையெடுப்புக்காக சீவல்லவனைப் பழி வாங்க, அனுராதபுரத்தை ஆண்ட சேனன் (846 - 866) மதுரை மீது படையெடுத்ததாகத் தெரிகிறது. சீவல்லவனின் மகனான வரகுணன் அவனோடு முரண்பட்டு சேனனின் உத



வியை நாடியதாலேயே இப்படையெடுப்பு நிகழ்ந்ததாக மகா வம்சம் கூறுகிறது.

தெள்ளாற்றுப் போரைத் தொடர்ந்து ஏற்பட்ட விழுப்புண்க ளால் சீவல்லவன் மறைந்ததாகவும், அதன் பின்னர் சேனனின் ஈழப்படைகள் அமர்த்திய வரகுணனே பாண்டிய முடியைச் சூடியதாகவும் மகாவம்சத்திலிருந்து வரலாற்றறிஞர்கள் ஊகிக்கிறார்கள். இது நிகழ்ந்திருந்தால் நிச்சயம் பாண்டிய - சிங்கள உறவு அதன்பின்னர் மகிழ்ச்சிக்குரியதாகவே இருந் திருக்கும். மணவுறவுகள் நிகழ்ந்திருக்கவும் வாய்ப்புகள் உள் ளது. நமது இந்த ஊகம் தவறல்ல என்பதை அடுத்த நூற் றாண்டுகளுக்குள் அனுராதபுரத்தின் ஆட்சிக்கட்டில் ஏறிய ஐந்தாம் காசிபன் காலத்தில் (929 - 939) இடம்பெற்ற அந்த மாபெரும் சம்பவம் உறுதிசெய்கின்றது.

சீவல்லவனின் பேரனான இராசசிம்ம பாண்டியன் (900 - 946), ஈழத்து ஐந்தாம் காசிபனின் படையுதவி பெற்றுப் பராந்தகச் சோழனோடு வெள்ளூரில் மோதினான். இந்தப் போரில் தோற்றபோது அவன் இலங்கைக்குத் தப்பியோடினான். தன் பாண்டிய குலத்தின் பெருஞ்சொத்தான இந்திரன் கொடுத்த மாலையையும் மணிமுடியையும் ஈழ அரசின் பாதுகாப்பில் ஒப்படைத்துவிட்டு அவன் சேரநாட்டுக்குப் போகின்றான். சோழனை மீள எதிர்த்துப் பாண்டியனுக்கு அரசைக் கொடுக் கும் வல்லமை சிங்கள அரசுக்கு அப்போது இருக்கவில்லை என்பதை உணர்ந்தே அவன் சேரநாட்டுக்குச் சென்றதாக ஆய்வாளர்கள் சொல்வார்கள்.

ஐந்தாம் காசிபன் காலத்தில் இலங்கையில் வைக்கப்பட்ட பாண்டிய அரசு சின்னங்களைப் பெற்றுப் பாண்டிநாட்டில் முடிசூடுவதற்கு சோழரின் முயற்சி தொடர்கின்றது. பல ஆண்டுகளாகச் சோழன் கோரியபோதும் சிங்கள மன்னன் பாண்டிய அரச சின்னங்களைக் கொடுக்க மறுக்கின்றான். அப்போதிருந்து சோழத்தின் குரோதப்பார்வை சிங்கள அர சின் மீது பதிகின்றது.

தன் பிறவிப்பகையான பாண்டியருக்குச் சார்பாக இயங்கு வது மாத்திரமன்றி தன் கட்டளைக்கும் அடிபணிய மறுக்கும் சிங்கள அரசின் மீது சோழ அரசு பெருங்கோபம் கொண் டது. அதுவே இராசராசசோழன் மகன் இராசேந்திர சோழன் தலைமையில் இலங்கைக்கான பெரும்போர் ஒன்று 1017-ம் ஆண்டு நிகழக் காரணமாகின்றது.

அப்போது அனுராதபுரத்தை ஆண்ட ஐந்தாம் மகிந்தன் பாண்டியச் சின்னங்களை எடுத்துக்கொண்டு உரோகணத்துக் குப் பின்வாங்குகிறான். இறுதியில் மகிந்தன் அவனது தேவி யருடனும் பாண்டியச் சின்னங்களுடனும் கைப்பற்றப்பட்டு சோழநாட்டுக்குச் சிறைக்கைதியாக அழைத்துச் செல்லப்படு கிறான்.

இச்சம்பவத்தைப்

***‘பொருகடல் ஈழத்து அரசர் தம் முடியும்,***
***ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும்,***
***முன்னவர் பக்கம் தென்னவர் வைத்த சுந்தர முடியும்,***
***இந்திரன் ஆரமும்***
***தென்திரை ஈழ மண்டல முழுவதும்***
***கொண்டார் கோப்பர கேசரி வர்மன்’***

என்று பாடுகின்றது இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்தி. ஓசையெழுப்பும் கடலால் சூழப்பட்ட ஈழத்து அரசரின் முடி யையும், அவரது தேவியின் அழகான முடியும், அவர்களிடம் தென்னவரான பாண்டியர் ஒப்படைத்த முடியும், இந்திரனின் மாலையும், முழு ஈழமண்டலமும் வென்றார் இராசேந்திரர் என்பது இதன் பொருள்.

பாண்டியருக்கும் சிங்களருக்கும் இவ்வாறு ஏற்பட்ட நெருக் கம் அடுத்தடுத்த நூற்றாண்டுகளிலும் இலங்கை அரசியலில் பெருந்தாக்கம் செலுத்தியதுடன் இலங்கை அரசுக்கட்டிலில் அமர்பவர்கள் பாண்டிய வம்சத்தில் வந்தோரா அல்லது கலிங்க வம்சத்தில் வந்தோரா என்பது பெரும் விவாதப்பொ ருளானது. சோழராட்சிக்குப் பின் இருநூறாண்டுகள் கடந்த பின்னரும் பொலனறுவை அரசில் இந்த முரண் உச்சத்தில் இருந்ததுடன் ஒருவரை ஒருவர் கொன்றொழித்து மாறிமாறி இரு தரப்பினரும் அரசில் அமரும் அளவுக்குப் பாண்டிய - கலிங்க அரசியல் போட்டி நீடித்தது. இதை ஆரிய - கலிங்க முரணாகச் சிங்கள வரலாற்றாசிரியர்கள் குறிப்பதும் இதில் ஆரியர் என்பது பாண்டிய வம்சாவளியில் வந்தாரைக் குறிப் பதும் சுவாரசியமான தகவல்கள்.



thulanchanan.v@thaiveedu.com



உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com




மறிகாரர் வரவுக்காக மகிழ்ச்சியுடனும், என்னவென்று புரியாத மெல்லிய பதட்டத்துடனும் காத்திருந்தது ஆதினிக்கு நன்றாக ஞாபகம் இருந்தது. அதற்குப் பிறகு நடந்தவை யெல்லாம் மங்கலான நினைவுகளாகவே அவள் மனதில் நிழலாடிக் கொண்டிருந்தது. சுவரோரமாக மரக்கட்டைபோல் எந்தவித அசைவும் இல்லாமல் பழந் துணிகளின் மேல் படுத் திருந்த கேசவனை நீண்ட நேரமாக கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் ஆதினி. வேதனையால் ஏற்படும் மிக மெல்லிய அனுங்கல்களையும், சுவாசத்திற்காக மிதமாக ஏறி இறங்கும் நெஞ்சுப் பகுதியின் அசைவையும் தவிர்த்து அந்த உடலில் உயிர் இருப்பதற்கான எந்தவித அறிகுறியும் அவளுக்குத் தென்படவில்லை.

கோமதியின் கைகள் சமையல் வேலையில் ஈடுபட்டிருந் தாலும் அவள் மனம் அங்கே இல்லை என்பதை எங்கோ வெறித்துப் பார்த்தபடி இருந்த கண்கள் காட்டிக் கொடுத்தது. கோமதி பல நாட்களாக கேசவன் ஊர்ப் பேச்சைக் கேட்டு காட்டுக்குள் சென்றதை நினைத்து நொந்து கொண்டி ருந்தாள். ஆனால் இப்போது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய பயம் அவளை நடைப்பிணமாக உறைய வைத்திருக் கிறது. ஆரம்ப நாட்களில் அலை அலையாகத் திரண்டு வந்த மக்கள் ஆறுதல் கூறியதோடு, கேசவனின் குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு பல உதவிகளும் செய் தார்கள். நாட்கள் செல்லச் செல்ல அறிவாட்டியைத் தவிர அங்கு வருவோர் அரிதாகிப் போனார்கள். கோமதி அடிக்கடி சொல்வது போல் நாயும், நாய் போட்ட குட்டிகளுமாக அந்தக் குடும்பம் சிறு குடிசைக்குள் சிறைபட்டுக் கிடந்தது.

வெளியில் கேட்ட காலடிச் சத்தம் அறிவாட்டியின் வருகையை ஆதினிக்கு உணர்த்தியது. திடுக்கிட்டு எழுந்தவள் மருத்துவ மூலிகைச் செடிகளில் இருந்து பெறப்பட்ட சாறுகளை மீளவும் ஒரு முறை சரிபார்த்துக் கொண்டவளாக, வாசலுக்கு ஓடோடிச் சென்று அறிவாட்டியை வரவேற்றாள். அறிவாட்டி இரு கைகளிலும் கொண்டு வந்திருந்த மூலிகைகளை வாங்கி வைத்துவிட்டு சிகிச்சைகளுக்கு உதவிகளை செய்யத் தொடங்கினாள். அசைவற்றிருந்த கேசவனின் உடல் வழமைக்கு மாறாக பாரம் நிறைந்ததாக இருந்தது. அவனை இரு பக்கமும் மாறி மாறிப் புரட்டுவதற்கு இருவராலும் இயலாமல் போகவே, பதைபதைத்து ஓடி வந்த கோமதி உதவினாள். வழக்கம்போல கோமதியின் கண்ணீர்த் துளிகள் கேசவனின் கழுத்துப் பகுதியில் விழுந்து வழிந்தோடிக் கொண்டிருந்தது.

அருவருப்பில்லாமல் கேசவனின் கழிவுகளை அகற்றி ஒரு குழந்தை போல கேசவனை ஆதினி பராமரிக்கத் தொடங்கி ஆறு கிழமைகள் ஆகிவிட்டிருந்தன. வறுமை காரணமாக பல கடினமான சூழ்நிலைகளை அந்த குடும்பம் கடந்து வந்திருக் கிறது. ஆனால் வழிகாட்டியாக, வாழ்வாதாரமாகச் செயல் பட்ட கேசவன் தன் வாழ்வின் கடைசி நிமிடங்களைக் கடந்து கொண்டிருக்கிறான் என்ற கசப்பான உண்மை அந்தக் குடும் பத்தை தத்தளிக்க வைத்திருந்தது. வதனமார் திடலில் இருந் தவர்களும், வீட்டில் கேசவனை வந்து பார்த்துப் போனவர் களும் காட்டில் யானை துரத்தும் போது விழுந்ததால் தலையில் அடிபட்டு, கேசவனின் அங்கங்கள் அசையாமல் போயின என்று கூறினார்கள். அறிவாட்டி மட்டும்தான் கேச வனுக்கு வந்திருப்பது பக்கவாதம். வாயும் கோணி, அங்கங் களும் செயல் இழந்ததால்தான் நிலைதடுமாறி அவன் விழுந்து தலையில் அடிபட்டுக் கொண்டான் என்றாள்.

தலையில் ஏற்பட்ட சிறிய காயம் அறிவாட்டியின் சிகிச் சையால் முற்றாக மாறிவிட்டிருந்தது. அன்றைய மருத்து வத்தை முடித்துக் கொண்டு அறிவாட்டி தன் கைகளை கழுவிக் கொண்டிருந்தாள். கேசவன் மூச்சு விடும் போது ஏற்படும் ஒலி மாற்றம் பற்றி ஆதினி அறிவாட்டியிடம் கேட்டுக் கொண்டிருந்தாள். பதில் ஏதும் சொல்லாது அறிவாட்டி பலமாக யோசிப்பது ஆதனிக்கு பயத்தைத் தந்தது. பிள்ளைகளை வெளியில் ஆதினியுடன் விளையாடச் சொல்லி விட்டு அறிவாட்டி கோமதியிடம் கேசவனின் உடல் நிலை பற்றிச் சொல்லியது வெளியில் இருந்து ஒட்டுக் கேட்ட ஆதினிக்கு தெளிவாகப் புரிந்தது. தான் கணித்திருந்த ஆறு கிழமைக் கெடு அன்றோடு முடிவதாகவும், இனி எப்போது வேண்டுமானாலும் எதுவும் நடக்கக் கூடும் என்பதை, கோமதிக்கு புரியக்கூடிய விதத்தில் மிகவும் பக்குவமாக அறிவாட்டி சொல்லிக் கொண்டிருந்தாள். கோமதி வாய்மூடி அழுகிறாள் என்பது, குடிசைக்குள் இருந்து வந்த விசும்பல் சத்தம் மூலம் ஆதினிக்குப் புரிந்தது.

குழந்தைகளுக்கு எதுவும் புரியவில்லை என்றாலும் ஏதோ தங்கள் தந்தைக்கு நடக்கப் போகிறது என்பதை புரிந்து கொண்டவர்கள்போல், சோர்ந்து போய் ஆதினியின் மடியில் தலை சாய்த்துப் படுத்திருந்தார்கள். உயிரென மதித்த தந்தையின் இறப்பு அண்மித்து விட்டதை ஆதினி புரிந்து கொண்டாள். இதற்கு முன் பலமுறை வீடதிர ஓலமிட்டு அழுதி ருக்கிறாள். ஆனால் இப்போது அவள் கண்களில் இருந்து ஒரு துளி கண்ணீர்த் துளி கூட வெளிவரவில்லை. மடியில் கிடந்த குழந்தைகளின் தலைகளை வருடிக் கொண்டபடி, தந்தை தன்னிடம் விட்டுச் செல்லும் கடமைகளை எப்படி காப் பாற்றப் போகிறேன் என்று எண்ணமிட்டபடி இருந்தது அவள் மனது. வாழ்வின் சிக்கலான நிலைமைகளில் தெளிவான முடிவுகளை எடுக்கக் கூடியவர்களாக பெண்களை மாற்ற வேண்டும் என்றுதான், அறிவாட்டி தன்னுடைய குடிசையை



ஒரு அறிவூட்டும் கூடமாக மாற்றி இருந்தாள். இருந்தாலும் அவள் நினைத்தது போல இடையர்கல் மக்களின் மனங் களில் மாற்றங்களை ஏற்படுத்துவது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. அறிவாட்டி அடிக்கடி ஆதங்கப்பட்டதை ஆதாரப்படுத்துவதுபோல் குடிசைக்குள் இருந்து கோமதியின் அழுகை சத்தம் தொடர்ச்சியாக கேட்டுக் கொண்டிருந்தது.

மூன்று நாட்களுக்கு முன்னர் அறிவாட்டிக்கு சதுர்வேதி மங்க லத்தில் இருந்து ஒரு செய்தி வந்திருந்தது. சதுர்வேதி மங்க லத்தின் புகழ்பெற்ற கிரமவித்தன் என்கின்ற பிராமணர் இறந் ததன் நினைவாக அவருடைய மனைவி நங்கை சானி என்பவர் விஜயராஜேஸ்வரத்திற்கு ஏழு தேவரடியார்க ளையும், விஜயராஜ விண்ணகரத்துக்கு மூன்று தேவரடியார்க ளையும் தானமாக கொடுப்பதற்கு முடிவெடுத்து இருக் கிறாள். அதற்காக தேவரடியாராக ஆலயத்தில் பணி செய்ய சம்மதிப்பவர்களுக்கு மாதாந்தம் கூலி வழங்குவதற்கு இணங்கி இருக்கிறாள் என்பது தான் அந்தச் செய்தி. நல்ல வேளையாக சுயநினைவோடு கேசவன் இருக்கவில்லை. கிரம வித்தன் அவரைப் பொறுத்தவரையில் துன்பத்தில் இருந்து காப்பாற்றிய கடவுள். எனவே இந்தத் துன்பகரமான செய்தி கேசவனை முழுமையாக பாதித்திருக்கும். செய்தி அறிந் ததும் கோமதி 'கடவுள் எல்லா பக்கத்தாலும் நம்மை சோதிக் கிறார்' என்று நெஞ்சில் அடித்து அழுது கொண்டிருந்தாள்.

ஆதினிக்கு இருட்டிற்குள் ஒரு வெளிச்சம் தெரிவது போல இருந்தது. தன் தந்தைக்கு தக்க சமயத்தில் உதவிய கிரம வித்தனின் மனைவி தனக்காகத்தான் உரிய நேரத்தில் இந்த அறிவித்தலை வெளியிட்டு இருக்கிறாள் என்று நினைத்துக் கொண்டாள். கேசவனின் தோள்களில் ஒரு இராணி போல உட்கார்ந்தபடி சுற்றிப் பார்த்த ஊரையும், அன்புக்கு ஏங்கும் குழந்தைகளையும், வெளியுலகம் தெரியாத அப்பாவியான கோமதியையும் விட்டு, வாழ்நாள் முழுவதும் தேவடியாராக ஆலயக் கடமைகளுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டுமென்று நினைத்தபோதே மனமுடைந்து ஆதினிக்கு வாய்விட்டு அழ வேண்டும்போல் இருந்தது.

அறிவாட்டிப் பாட்டியிடம் இருந்து கற்றுக்கொண்ட வாழ்வியல் அனுபவங்களும், கலை வடிவங்களும், கேசவன் கற்றுக் கொடுத்திருந்த போராடும் திறனும் அந்தச் சின்ன வயதில் ஆதினிக்கு வாழ்வின் பெரிய முடிவொன்றை எடுப்பதற்கு துணை நின்றது.

கோமதியால் முடிவெடுக்க முடியாமல் அழுகையோடு கடந்து போன நான்காவது நாள் மாலை நேரம், திடீரென அறிவாட்டி சைகை மூலம் ஆதினியை அழைத்தாள். கேச வனுக்குரிய உணவினை அரைத்துக் கொண்டிருந்த ஆதினி ஓடி வந்தாள். கேசவனின் வலக் கரத்தை பற்றிப் பிடித்தபடி 'என்ன பாட்டி?' என்பதை கண்களால் கேட்டாள். ஆனால் கேசவனின் கரத்தில் ஏற்பட்டிருந்த குளிர்மை அவள் மனதில் பதட்டத்தை உருவாக்கியது.

அவசர அவசரமாக கேசவனின் உடல் எல்லாம் தொட்டுப் பார்த்தாள் ஆதினி. கையில் இருந்த குளிர்மை மெல்ல மெல்ல நெஞ்சுப் பகுதியை நோக்கி நகர்ந்தது. சற்று நேரத் திற்கு முன் அறிவாட்டி கொடுத்திருந்த மருந்துச் சாறு கேசவனின் இடது பக்க வாயால் மெல்லக் கசிந்தது. சிறிது நேரத்தின் பின் எந்தவித அவஸ்தையும் படாமல் அசைவற்றி ருந்த முழுமையாகக் குளிர்வடைந்து விட்டிருந்த கேசவனின் தேகத்தின் முகத்தில் திறந்திருந்த கண்களை அறிவாட்டி மூடிவிட்டாள்.

தொடரும்...



jeevarajah@thaiveedu.com




மிகையான நுகர்வால் ஏற்படும் பாதிப்பானது, காலநிலை மாற்றம், புவி வெப்பமாதல், இயற்கை அழிவுகள், உணவு உற்பத்தியில் ஏற்படும் மோசமான பாதிப்புகள், இதனால் உந்தப்படும் வளச் சுரண்டலை நோக்கிய யுத்தங்கள் எனப் பல வடிவங்களை எடுத்துள்ளது.

யுத்தம் மற்றும் உள்நாட்டுக் குழப்பநிலை, இதனால் ஏற்படும் பொருளாதார வீழ்ச்சி, மோசமான காலநிலை, ஓரங்கட்டப்படுதல் (Discrimination), சர்வதேசரீதியில் விவசாய உள்ளீடுகளின் விலை உயர்வு போன்றன மிக மோசமான உலகளாவிய பசிப்பிணியை ஏற்படுத்தியுள்ளன. 2023-ம் ஆண்டில் 345 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உணவு தொடர்பான மோசமான பாதுகாப்பின்மைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். 2020-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை இரட்டிப்படைந்துள்ளது. இவற்றில் பெரும் எண்ணிக்கையானோர் அடுத்த வேளை உணவு கிடைக்குமா என்பது பற்றி நிச்சயமின்றி உள்ளனர். பட்டினி மற்றும் குறை போசணையின் பாதிப்புகள் தென்னரைக் கோள நாடுகளில் அதிகம். இதே காலப்பகுதியில், இலங்கையில், ஏறத்தாழ 20% மக்கள் பட்டினி நிலையை எதிர்கொள்கின்றனர். இன்னும் அதிகமானோர் ஏதோ ஒரு வகையிலான உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளனர். ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 30 வீதத்துக்கும் அதிகமானோர் குறை போசணையால் பாதிக்கப்பட்டுள்ளனர். 20 வீதமானோர், மோசமான குறை போசணையால் நிறையிழப்பைச் சந்தித்துள்ளனர்.

இந்தப் பசிப்பிணி, மற்றும் வேளாண்மையில் ஏற்படும் தோல்விகள் வளர்ச்சியடைந்த நாட்டு மக்களையும் மோசமாகப் பாதிக்கத் தொடங்கிவிட்டன.

ஐந்தாம் தொழில்நுட்பப் புரட்சியைத் தாண்டி உலகின் சிறு எண்ணிக்கையானோர் நடைபோடும்போது, பெருந்தொகையானோர் குறை போசணையையும் பட்டினியையும் எதிர்கொள்வது ஓர் உலகளாவிய தோல்வி.

இதற்கு மிகமுக்கிய காரணிகளில் ஒன்று உணவு உற்பத்தியும் உணவு வழங்கும் சங்கிலியும், உள்ளூர் மக்களதும் வேளாண்மையில் ஈடுபடுவோரதும் உணவுப் பண்டங்களை விநியோகிக்கும் தொழிலாளர்களதும் கைகளிலிருந்து பறிக்கப்பட்டு, இலாபமீட்டும் நோக்கை மையமாகக் கொண்டு இயங்கும் பெருநிறுவனங்களின் (Agribusiness corporates) கட்டுப்பாட்டிற்குள் வந்ததாகும்.

பல மானுடச் சமூகங்களைப் போலவே தமிழர்களது வாழ்வியலிலும் ஒன்றுசேர்ந்து உணவருந்துவதும், பசிப்பிணியைப் போக்குவதும் பெரும் பண்புகளாக விளங்கி வந்துள்ளன.

சோழ அரசன் கிள்ளிவளவன், காவிரிக்கரை வழியே பயணம் செய்து கொண்டிருந்தபோது பண்ணன் என்பவரது வீட்டிலிருந்து தானம் பெற்ற பலர் கையில் உணவும் பொருளும் ஏந்தித் தங்கள் வீடுகளுக்குப் பசி தீர்க்கச் செல்வதைக் காண்கிறான், பண்ணனைப் பார்க்க ஆவல் மேலிட, ‘பண்ணன் வீடு எங்கே?’ என்று வினவி, ‘இந்தப் பசிப்பிணி தீர்க்கும் மருத்துவனாகிய பண்ணன், மன்னனாகிய தனது ஆயுளையும் சேர்த்து வாழ்வாங்கு வாழ வேண்டும்’ என்று கூறுகிறான்.

*‘யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய...*
*பசிப்பிணி மருத்துவன் இல்லம்*
*அணித்தோ? சேய்த்தோ? கூறுமின் எமக்கே!’*

- புறநானூறு - 173

இப்படிப் பல உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக இருந்து உணவருந்துதல், எப்போதுமே உயர்வாக மதிக்கப்பட்ட ஒரு பண்பு. நம்முடைய வாழ்வியலில் உணவுக்காகத் தானியம், காய்கறி, மச்சம், மாமிசம், பழவகை வாங்குகின்றபோதே குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரது தனித்துவமான தேவைகளைப் பற்றிய கரிசனை ஆரம்பிக்கிறது. வயோதிப மாமனாரும் மாமியாரும், கருவுற்றிருக்கும் தங்கையும், அண்மையில் குழந்தையைப் பெற்றெடுத்த அண்ணியும், பூப்பெய்தி இருக்கும் மச்சாளும், கடினமாக உழைக்கும் கணவனும், மைத்துனரும், சகோதரனும், பாடசாலைக்குச் சென்று கற்கும் பிள்ளைகளும் என ஒவ்வொருவருக்கும் தேவையான போசணையுள்ள உணவை அவரவர் சுவைக்குத் தகுந்தபடி குடும்பத்துப் பெண்கள் மிகுந்த கரிசனையோடும் பாசத்தோடும் சமைத்தல் மிக அற்புதமானதும் ஆழமானதுமான ஒரு சடங்காகும். ஏன் இதை ஒரு சடங்கு என்று சொல்கிறோம்? ஏனெனில் வெறும் வார்த்தைகள் காண்பிக்க முடியாத ஆழ்ந்த அக்க

றையையும் பாசத்தையும் பிரமாணிக்கத்தையும் இந்தச் சமையல் எனும் சடங்கு அந்த உணவைப் பகிர்ந்து உண்ணும் அனைவருக்கும் உணர்த்துகிறது. தாத்தாவுக்குப் பேரப்பிள்ளையும், பெறாமகனுக்குச் சித்தப்பாவும் உணவூட்டுகிற போது ஏற்படுகிற ஆழ்ந்த நம்பிக்கை மற்றும் பரீட்சயம், அவர்கள் வாழ்வின் இயலாநிலைக்குச் செல்லுகிறபோது இயல்பூக்கமாகவே ஓடிச்சென்று உதவுகின்ற மனநிலையைக் குடும்பங்களுக்குத் தருகிறது. உணவுப்பற்றாக்குறை ஏற்படுகிறபோது நம் குடும்பத்தில் உள்ள பெரியவர்கள் தமது உணவைக் குறைத்துக்கொண்டு குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும், கர்ப்பிணிகளுக்கும் போசாக்குள்ள உணவுகளை வழங்குவதைக் காண்கிறோம். இந்த உணவு வேளையிலே கதை சொல்லுதல், நகைச்சுவை பேசுதல், பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடுதல், குடும்ப உறுப்பினர்களது பேசா மொழியை அல்லது அங்க மொழியைக் கவனித்து அவர்களது மனதறிதல், பிறருக்கு உதவுவது பற்றி முடிவெடுத்தல், பிள்ளைகளுக்கு நல்லொழுக்கத்தைப் போதித்தல் போன்ற அனைத்துமே நிகழ்ந்து வந்தன. இது விலைமதிப்பற்ற, சக்திவாய்ந்த சிகிச்சையாகவும் அமைகிறது. இது குடும்பத்தவர் அனைவரையும் இணைக்கின்ற அற்புதமான ஓர் பாசச்சடங்கு.

அதே நேரம் எமக்கு முன்னாலே இருக்கின்ற உணவுத் தட்டிலேயிருக்கும் ஒவ்வொரு உணவுக் கூறும் எங்கிருந்து வந்தது எனக் குடும்பத்தவர் அறிந்திருந்தனர். அந்த உணவை விளைவித்த விவசாயி எத்தகைய கரிசனையுடன் அதை விளைவித்திருக்கிறார், உடல் நலத்துக்குப் பாதகமான எதுவும் அதில் கலந்திருக்குமா என்பன போன்ற விடயங்கள் எமக்குத் தெரிந்திருந்தன. உணவை விளைவிக்கும் விவசாயி, தன்னுடைய விளைச்சலை உணவாக்கி உண்பவர்கள் ஆரோக்கியமாக இருக்கவேண்டும் என்பதில் கரிசனைமிக்கவராக இருந்தார்.

உலகமயமாதலோடு வேகமாகப் பரவிய நுகர்வுக் கலாசாரம், மக்களுடைய வாழ்வியலில் ஏற்படுத்திய தாக்கத்தால் இவை அனைத்துமே மாறிப் போயின. நாம் மன நிறைவையும் மன மகிழ்ச்சியையும் தொலைத்து எமக்கு நுகர்வுக் கலாசாரம் கற்பிக்கின்ற பேராசைமிக்க ஆடம்பர வாழ்வு ஒன்றை அங்கலாய்க்கத் தொடங்கினோம். விழுமியங்களைப் பின்தள்ளுவதன் மூலமும் மட்டற்ற செல்வத்தைப் பெருக்குவதன் மூலமும் நிறைவு பெறலாம் என எண்ணத் தொடங்கினோம். சமூகத்தில் இந்த நாசச் சக்கரத்தை ஆரம்பித்த பெருநிறுவனங்களும் பணமுதலைகளும் நாம் அங்கலாய்க்கும் ஆடம்பர வாழ்விற்குரிய பெறுமதியை எப்போதும் எட்டா உயரத்திலேயே வைத்திருக்க, நாமும் ஓய்வின்றி அதன் பின் அலையத் தொடங்கினோம். இந்த நேரத்தில்தான் நம்முடைய தட்டில் உள்ள உணவு எமக்குப் பாதுகாப்பற்றதாகக், கட்டுப்படியாகாததாக மாறியது. எமது உணவையும், அதன் பெறுமதியையும், அதனைச் சமைக்கும் முறையையும், ஏன் உண்ணும் முறையையும் கூட வேளாண் வர்த்தகப் பெருநிறுவனங்கள் (Agribusiness corporates) தீர்மானிக்கத் தொடங்கின.

இந்தப் பிரச்சினை இப்போது விஸ்வரூபம் எடுத்து உலகளாவிய ரீதியிலே அபிவிருத்தியடைந்த நாடுகளைச் சேர்ந்த மக்கள் உட்பட அனைவரையும் உணவுக்காகப் போராட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளும் பட்டினிக்குள்ளும் தள்ளியுள்ளது.

இதற்குப் பதிலாக உலக உணவுப் பாதுகாப்புக்கான ஐக்கிய நாடுகள் சபையின் சம்மேளனம், 'FOOD SECURITY- உணவுப் பாதுகாப்பு' என்ற எண்ணக்கருவை முன்வைத்தது டன் அதனை எய்த உலகநாடுகளை உழைக்கும்படி கேட்டுக் கொண்டது. இந்த எண்ணக்கரு, சுருக்கமாகச் சொல்வதென்றால் மக்களது தேவைக்கேற்ற உணவை மக்களுக்குக் கிடைக்கச் செய்தல் என்பதை அடிப்படையாகக் கொண்டது. இந்த எண்ணக்கருவின் பின்னடைவு என்னவென்றால் உணவு உற்பத்தி, உண்ணும் உணவு வகை, உணவின் பெறுமதி, போன்றவற்றைத் தீர்மானிக்கும் சக்தியாக மக்கள் அங்கீகரிக்கப்படவில்லை. வேளாண்தொழில் செய்வோரும் உணவை மக்களிடம் கொண்டு சேர்ப்போரும் இந்த எண்ணக் கருவுக்குள் உள்ளடக்கப்படவில்லை.

உலகளாவிய வேளாண் செயற்பாட்டாளர்களும், மக்கள் விழிப்புணர்வாளர்களும் இந்தக் கொள்கையை நிராகரித்து 'FOOD SOVEREIGNTY - உணவின் மீதான தன்னாதிக்கம்' என்ற எண்ணக்கருவை 1990-களில் முன்வைத்து இயங்கத் தொடங்கினர்.

1996-ல் இந்த உணவின் மீதான தன்னாதிக்கம் என்ற எண்ணக்கரு La Via Campasina என்ற வேளாண் செயற்பாட்டாளர்களுக்குரிய சர்வதேச அமைப்பால் முன்வைக்கப்பட்டது. உணவு மீதான தன்னாதிக்கம் என்பது மக்கள் குழுமங்களின், சூழலியல் ரீதியாக வினைத்திறனுள்ள, பேண்தகுமுறையில் உற்பத்தி செய்யப்படுகின்ற, ஆரோக்கியமானதும், கலாசார ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதுமான உணவு மீதான உரிமையும், அத்துடன் அவர்களுடைய வேளாண் முறையையும், உணவு முறையையும் தீர்மானித்துக் கொள்ளக்கூடிய உரிமையையும் குறிக்கிறது. சர்வதேசரீதியாக 1950-களில் இருந்து வேளாண் வர்த்தகப் பெருநிறுவனங்கள் படிப்படியாக மக்களது உணவு மீதான உரிமையைத் தமது ஏகபோக வர்த்தக உரிமையாக மாற்றி, மக்களை வெறுமனே உணவுப் பெறுநர்களாகத் தாழ்த்தி இலாபமீட்டி வந்ததை முறியடித்து, மீண்டும் மக்களது கையிலேயே உணவுமீதான உரிமையை வழங்குவதன் மூலமே பட்டினிக்கும், உணவுப் பற்றாக்குறைக்கும் மந்த போசணைக்கும் தீர்வு காணலாம் என இந்த எண்ணக்கரு கூறுகிறது.

வேளாண் வர்த்தகப் பெருநிறுவனங்கள் எவ்விதம் தோற்றம் பெற்றன என்பதையும் எவ்விதம் உணவு மீதான உரிமையைப் பெற்றுக்கொண்டன என்பதையும் பார்ப்போம்.

1957-ம் ஆண்டு அமெரிக்காவில் John H. Davis-உம், Ray A.Goldberg-உம் 'வேளாண் வர்த்தகம் எனும் எண்ணக்கரு' என்ற வெளியீடு ஒன்றைச் செய்து, அப்போது தளம்பலுற்றிருந்த வேளாண்துறையைப் பாதுகாக்க அரசின் பங்களிப்பை விட தனியார்த்துறையின் பங்களிப்பு அத்தியாவசியமானது எனவும், விவசாயத்துறையில் நிலவிய குறைபாடுகளுக்கும் வீழ்ச்சிக்கும் அரச தலையீடு காரணம் எனவும் அந்த வெளியீட்டில் தெரிவித்தனர். அத்துடன் பொருளாதாரத்தையும்,

அரசியலையும், பயன்படுத்தி எவ்விதம் வேளாண்மையைத் தனியார்மயப்படுத்தலாம் என்ற உத்தியையும் அவர்கள் தெரிவித்தனர். வேளாண் வர்த்தகத்திற்காக அமைக்கப்படும் பெருநிறுவனங்களே வேளாண் புரட்சி ஒன்றுக்குத் திறவுகோலாக அமையும் என்று அந்த வெளியீடு கூறியது.

விவசாயத்தின் பெரு இலாப இலக்கை அடையத் தோட்ட நிலங்களில் நடைபெறும் விவசாய நடவடிக்கைகளை விட அந்த நிலங்களுக்கு வெளியே நிகழும் வர்த்தக நடவடிக்கைகளே முக்கியத்துவம் பெறும் என்று அவர்கள் கூறியதுடன், இந்த நடவடிக்கைகளில் விவசாயத்துறை சாராத பொருளியல் நிறுவனங்களும் (Finance companies) சில்லறை விற்பனைக் கட்டமைப்புகளும் (retailing industry) எப்படி நுழைந்து கொள்ளலாம் என்றும் புத்தி கூறின.

இந்தத் தனியார்மயமாக்கல் ஆனது வேளாண்மையை இயந்திரமயப்படுத்தல் மூலம் வேளாண் பண்ணைகளில் மனிதவலுவின் தேவையைக் குறைத்துப் பண்ணையாளர் செலவிடும் பெருந்தொகையான கூலியை மீதப்படுத்தி ஆரம்பமானது. சுயாதீனமான வேளாண்துறையும் வேளாண் வர்த்தகப் பெருநிறுவனங்களும் ஒன்றோடு ஒன்று மிக நெருக்கமாகச் செயல்பட விடப்பட்டன.

1970-களில் அமெரிக்க அரசாங்கமும் இந்தப் பாதையையே தேர்ந்து கொண்டது. ‘Get big or get lost’ என்ற கொள்கையை வேளாண்துறையில் மறைமுகமாக அரசு அமுல்படுத்தியது. பெரியளவில் வேளாண் முயற்சிகளை மேற்கொள்ள இது சிறு பண்ணையாளர்களை நிர்பந்தித்ததுடன் அவர்களுக்குப் பெருமளவில் பொருளாதாரச் சுமையை ஏற்படுத்தியது.

பெரும் செலவு செய்து பண்ணைகளைத் தொழிநுட்பமயப்படுத்த வேண்டிய தேவை பணியாளர்களுக்கு ஏற்பட, இதற்குரிய தொழில்நுட்ப மற்றும் நிதி வழங்கல் நடவடிக்கைகளில் வேளாண் வர்த்தகப் பெருநிறுவனங்கள் இறங்கின. இந்த நிதியை மீளச்செலுத்த விவசாயிகள் சிரமப்பட, இந்த நிறுவனங்கள் பண்ணைகளை ஒன்றிணைக்க நிர்பந்தித்ததுடன் அதிக இலாபம் பெற விவசாய இரசாயன உள்ளீடுகளையும் நவீன விதைகளையும் இயந்திரங்களையும் பாவிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தின.

1980-களில் பண்ணையாளர்கள் மோசமான நட்டத்தைச் சந்தித்து, 50% ஆனோர் வேளாண் தொழிலை விட்டு வெளியேற, வேளாண் வர்த்தகப் பெருநிறுவனங்கள் வேளாண் தொழிலில் இலாபமீட்டும் ஒவ்வொரு கட்டத்திலும் தீர்மான மெடுக்கவல்ல அளவுக்கு இந்தத் தொழிலைக் கைப்பற்றிக் கொண்டன.

2022-ம் ஆண்டு தரவுப்படி 40% ஆன விவசாயப் பண்டங்கள் 10 பெருநிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. ஆறு பெரிய நிறுவனங்களான Monsanto, Bayer, DuPont, DOW, Syngenta, BASF ஆகியவை 75% ஆன பீடைநாசினிகளின் சந்தையைக் கட்டுப்படுத்துகின்றன. 72% கோழி இறைச்சி உற்பத்தி, 43% முட்டை உற்பத்தி, 55% பன்றி இறைச்சி உற்பத்தி ஆகியவை பெருநிறுவனங்களின் பண்ணைகளிலேயே நிகழ்கின்றன. Cargill நிறுவனம் உலகளாவிய இறைச்சியின் சில்லறைச் சந்தையைப் பெருமளவில் கைப்பற்றியுள்ளது. ADM, Bunge, Cargill, Dreyfus ஆகிய ஆறு நிறுவனங்களும் 75%-க்கு மேற்பட்ட உலகளாவிய தானிய வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துகின்றன. பிறப்புரிமையியல் ரீதியாக மாற்றம் செய்யப்பட்ட விதைகளும் உயிரிகளும் முற்றாகப் பெருநிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ளதுடன் அவற்றிற்குப் பாதுகாப்புரிமங்களும் இந்த நிறுவனங்களால் பெறப்பட்டுள்ளது. பெரும்பாலான மேம்படுத்தப்பட்ட கலப்பின விதைகளும், மேம்படுத்தப்பட்ட மற்றும் கலப்பின தாய்த் தாவரங்களும் பெருநிறுவனங்களின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

இந்தப் பெருநிறுவனங்களில் பல ஒன்றிணைந்து கூட்டு நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம் வேளாண் வர்த்தகத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் 45 சதவீதத்துக்கு மேற்பட்ட கட்டுப்படுத்தும் வல்லமையை 2018-ம் ஆண்டிற்கு பின் பெற்றுள்ளன. இந்த ஒருங்கிணைக்கப்பட்ட வேளாண் வர்த்தகப் பெருநிறுவனங்களின் உரிமையாளர்களாகப் பொருளாதார (finance) மற்றும் முதலீட்டு (investment) நிறுவனங்களே உள்ளன.

பல நாடுகளில் விவசாயிகள் பாரம்பரியப் பயிரினங்களைக் கைவிட்டு இலாப நோக்கத்திற்காகவும் சந்தைப்படுத்தலை இலகுவாக்கவும் பெருநிறுவனங்கள் வழங்குகின்ற பயிரினங்களையே பயிரிட்டு வருகின்றனர். பல பாரம்பரியப் பயிரினங்கள் மிகவும் அருகிவிட்டன அல்லது இல்லாது போய் விட்டன. அத்துடன் பெரிய நிறுவனங்கள் விவசாயிகளோடு முதலீட்டு ஒப்பந்தங்களை மேற்கொண்டு அவர்களைத் தமது நிபந்தனைகளின் கீழ் இயங்கும் ஒப்பந்த விவசாயிகளாக மாற்றுகின்றன. Drone தொழில்நுட்பம் மூலம் பெறப்படும் விவசாய நிலங்கள் மற்றும் நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, இந்தப் பெருநிறுவனங்களால் தமது இலாப நோக்கத்தை முன்னுரிமைப்படுத்தி உருவாக்கப்பட்ட படிமுறைத் தீர்வுகள் விவசாயிகளிடம் சொல்லப்பட்டு அதே நிறுவனங்களின் விவசாய உள்ளீட்டுப் பொருட்களை வாங்குமாறு விவசாயிகள் தூண்டப்படுகின்றனர். விளைபொருட்களையும் இந்த நிறுவனங்களே கொள்வனவு செய்து தாமே சில்லறைச் சந்தையில் விற்பனை செய்கின்றன. இவர்கள் தீர்மானிக்கும் விலையைக் கொடுத்து மக்கள் விளைபொருட்களை வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் பிரித்தானியரின் ஆட்சியின்போது இலங்கையின் வேளாண்மையானது வர்த்தகப் பயிர்ச்செய்கையாக மாற்றப்பட்டு பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை, கோப்பி, இரப்பர், தென்னை போன்றவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இதனால் வேளாண்மையில் நிலவி வந்த தன்னிறைவு அற்றுபோக விளைபொருட்களை உணவுக்காக இறக்குமதி செய்யவேண்டிய தேவை ஏற்பட்டது. நாடு பல தடவை பஞ்சத்திற்கு முகம் கொடுக்க, இலங்கை வேளாண் முயற்சியாளர்கள் மத்தியில் உணவின் மீதான தன்னாதிக்கம் பற்றி 1950-க்கு முன்னரே விழிப்புணர்வு ஏற்பட்டது. இருந்தபோதிலும் ஆளுமைமிக்க தலைமைத்துவமின்மை, உள்நாட்டு பிரச்சினைகளும் யுத்தங்களும், ஊழல், பொருளாதார நெருக்கடிகள், இராணுவ மற்றும் மதஸ்தாபனங்கள், விளைநிலங்களை ஆக்கிரமித்தல், துறைசார் புத்திஜீவிகள் மற்றும் திறனாளர்கள் பற்றாக்குறை போன்ற

வற்றால் வேளாண் வர்த்தக நிறுவனங்கள் இலங்கையிலும் முன்னுரிமை பெற்றன.

தற்போதைய பொருளாதார நெருக்கடியையும் அரசாங்கத்தின் தேவையையும் பயன்படுத்தி இங்குள்ள பெரிய நிறுவனங்கள் பெரிய முதலீட்டுடன் அரசுடன் இணைந்தும் தனியாகவும் விவசாய டிரோன் (Drones) மூலமாக நுண்தரவுகளைச் சேகரித்தல், ஒவ்வொரு விவசாயிக்கும் தனித்துவமான விவசாய அறிவூட்டலை மேற்கொள்ளுதல், விவசாய நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை தருதல் போன்றவற்றை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன. விவசாய நிலங்களை ட்ரோன் மூலம் ஸ்கேன் (Scan) செய்யத் தொடங்கியுள்ளனர். Smart agriculture முறையின் மூலம் மேம்பட்ட பொருளாதாரநலனைத் தரவல்ல விவசாய நடவடிக்கை விவசாயிகள் மத்தியில் ஊக்குவிக்கப்படும் எனச் சொல்லப்படுகிறது. அத்துடன் ஒரு பில்லியன் ரூபா முதலீட்டில் பசுமை இல்லத்தினுள் அதிநவீன யுக்திகளைப் பயன்படுத்தி Cropwig என்ற வர்த்தக நிறுவனம் சர்வதேசப் பங்களிப்புடன் விவசாய நடவடிக்கை ஒன்றையும் மேற்கொள்கிறது.

பொருளாதார நெருக்கடி நிலையில் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள வேளாண் முயற்சியாளர்கள் பலர் ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையிலான விவசாயிகளாக மாறியுள்ளனர் அத்துடன் பெருநிறுவனங்களின் இந்த மேம்பட்ட முயற்சிகள் விவசாயிகள் மத்தியில் வரவேற்பைப் பெறும் என்பதிலும் ஐயமில்லை. ஆனாலும் மற்ற நாடுகளில் இந்தப் பெருநிறுவனங்கள் மெதுவாக நுழைந்து வேளாண் பொருளாதரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் நாட்டின் அதிகாரத்தைத் தீர்மானிக்கும் சக்திகளாக மாற்றம் பெற்றதைப் போல இலங்கையில் நிகழும் முன் வேளாண் பொருளாதரத்தையும் விவசாயிகளையும் மக்களையும் பாதுகாக்கும் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும். நவீன விவசாய விஞ்ஞான ரீதியான உள்ளீடுகள் பெருநிறுவனங்கள் மூலம் கொண்டுவரப்பட்டாலும், உணவின் மீதான தன்னாதிக்கத்தைப் பாதுகாக்கும் சட்டங்களும் கொள்கைகளுமே இவற்றின் மூலம் நாட்டின் பிரஜைகள் சுரண்டப்படமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்தும்.

பெரு நிறுவனங்கள் பெற்றுக் கொண்டுள்ள பாதுகாப்பு உரிமங்கள் மூலம் இந்தியா உட்பட்ட நாடுகளில் விவசாயிகள் மீது அச்சுறுத்தல் விடுக்கப்படுவதுடன் வழக்குகளும் தொடரப்படுகின்றன. இந்த நிறுவனங்களின் விவசாய ட்ரோன்கள் விவசாயிகளுடைய விவசாய நடவடிக்கைகளை உளவுபார்க்கப் பயன்படுத்தப்படுகின்றன.

பெருநிறுவனங்களின் விவசாய ஊக்குவிப்புகள் மக்களுக்கானதாக அல்லாமல், இலாபநோக்கம் கருதியே இருந்து வந்துள்ளன. இது பட்டினியையும் குறைபோசணையும் இன்னும் மோசமாக்கியுள்ளது.

உணவின் மீதான தன்னாதிக்கம் என்ற எண்ணக்கரு இத்தகைய சிக்கல் நிறைந்த நிலைமையைக் கையாள பின்வரும் ஆலோசனைகளைத் தருகிறது.

- உணவு விற்பனைப் பண்டமல்ல. அது மக்களின் உரிமை. மக்களுக்காகவே உணவு என்ற நோக்கம் கொள்கைகளின் மயமாகிறது.
- விவசாயிகள் பாரம்பரியமாக விவசாய நடவடிக்கைகள் மூலம் பெற்றுக்கொண்ட அறிவிலிருந்து ஆராய்ச்சிகளைப் பயன்படுத்தி விவசாயம் தொடர்பான அறிவை விருத்தி செய்தல். அத்துடன் உள்நாட்டு உணவுத் தொகுதியைத் தரந்தாழ்த்த முற்படும் அல்லது மாசுபடுத்தும் தொழில்நுட்பங்களை நிராகரித்தல். கல்விநிறுவனங்களில் பெருநிறுவனங்களால் ஆதிக்கத்துக்கு உட்படுத்தப்பட்ட விவசாயப் பாடம் புகட்டலை மீள் பரிசீலனை செய்தல்.
- சூழற்தொகுதியை ஆபத்துக்குள்ளாகாமல் இயற்கையுடன் இணைந்து பேண்தகு விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளல். சூழற்தொகுதியின் பங்களிப்பை முழுமையாகப் பயன்படுத்துவதுடன் சூழற்தொகுதியின் மீள்தகமையையும் (Resilience) முன்னேற்ற முற்படல்.
- மக்களுக்கு உணவு வழங்கும் தொடர் சங்கிலியில் உள்ள அனைவரையும் மதிப்பதுடன் அவர்களுடைய கருத்துக்களுக்குச் செவிமடுத்தல்.
- மக்களுக்கு உணவு வழங்கும் தொகுதியை உள்ளூர் மயப்படுத்துதல். உணவு வழங்குனரையும் நுகர்வோரையும் நெருங்கி உறவாடச் செய்தல். பொருத்தமற்ற உணவு உற்பத்தி மற்றும் உணவு வீணாக்கலை நிராகரித்தல். இரகசியத்தன்மையைப் பேணுகின்ற, பொறுப்புக் கூறாத பெருநிறுவனங்களில் தங்கியிருப்பதை எதிர்த்தல்.
- உணவு மீதான உள்ளூர்க் கட்டுப்பாட்டை வலியுறுத்தல். விவசாய நிலப்பரப்புகளையும் விவசாய அறிவையும் விதை பொருட்களையும் பகிர்தலை ஊக்குவித்தல். இயற்கை வளங்களைத் தனியார்மயப்படுத்தலை எதிர்த்தல்.
- உணவு புனிதமானது என்ற எண்ணக்கருவை வளர்த்தல். உணவு வாழ்வுக்கான கொடை. அதை விரயமாக்கக் கூடாது. அது வெறுமனே இலாபம் ஈட்டும் தொழிலல்ல என்ற எண்ணக்கருவை நடைமுறைப்படுத்தல்.

எமது பாரம்பரிய விவசாய அறிவு, கடந்த காலங்களில் தன்னிறைவான விவசாயத்திற்கு வழிகோலிய ஒன்று. அதை நிராகரிக்காது, விஞ்ஞான பூர்வமாக மேம்படுத்திப் பயன்படுத்துதல் இன்றியமையாதது. அத்துடன் எமது பாரம்பரிய விதைகளையும் தாவரங்களையும் மிருகங்களையும் உயிரங்கிகளையும் பேணிப் பாதுகாத்தல் முக்கியமானது. சூழல் தொகுதிகளைச் சிதைவடையச் செய்யாத பேண்தகு விவசாய நடவடிக்கைகளை மட்டுமே மேற்கொள்ள வேண்டும். நாம் இப்போதும் விழித்துக் கொள்ளாவிட்டால் உணவின் மீதான தன்னாதிக்கம் எம்மிடமிருந்து பறித்துக் கொள்ளப்படும். உணவின் மீதான தன்னாதிக்கத்தின் வரையறைகளுக்குள்ளேயே பெரு-நிறுவனங்கள் செயல்பட அனுமதிக்கப்படுவதுடன் இவற்றில் அனுகூலம் அடைபவர்களாக நாட்டின் பிரஜைகளே இருக்க வேண்டும்.



anton.marianayagam@thaiveedu.com



# ஹவாயைச் சாம்பராக்குகிறது காட்டுத்தீ

– சதீஸ் செல்வராஜ்

‘உலகின் எல்லா இடங்களிலும் ஹவாயின் சிறந்த தாவரங்களை பார்க்க விரும்புகிறேன்’ என்ற இயற்கை ஆர்வலர் சார்ல்ஸ் டார்வினின் கருத்து அங்குள்ள காடுகளின் மகத்துவத்தை பறைசாற்றுகிறது. சார்ல்ஸ் டார்வின் ஹவாய்க்கு ஒரு போதும் சென்றதில்லை. ஆனால், அத்தீவின் இயற்கையின் பன்முகத்தன்மைகளை ஆவணப்படுத்திய இயற்கை ஆர்வலர்களின் வியத்தகு தரவுகளை கண்டு சார்ல்ஸ் டார்வின் ஹவாய் காடுகளின் வனப்பில் வசப்பட்டுவிட்டார். இத்தகைய ரம்மியமான ஹவாய் தீவின் வனாந்தரத்தின் ஒரு பகுதியே தற்போது காட்டுத்தீயில் பஸ்பமாகிக்கொண்டிருக்கிறது. இந்தப் பேரழிவு மனித இனத்தையும் காவு வாங்கிக் கொண்டிருக்கிறது.

ஹவாய் தீவுக்கூட்டம் ஐக்கிய அமெரிக்காவின் ஒரு மாநிலமாகும். இது ஐக்கிய அமெரிக்காவின் பிரதான நிலப்பகுதியிலிருந்து 3700 கிலோமீட்டர் தூரத்தில் வட பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள இரண்டாவது மிகப்பெரிய தீவு மாவி ஆகும். இப்பகுதியில் தான் கட்டுக்கடங்காத பெரும் காட்டுத் தீ பற்றியெரியத் தொடங்கியது. இதனை ‘பேரழிவு’ என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்ததில் இருந்து இந்த இராட்சத தீயின் ஆபத்தையும் வீரியத்தையும் விளங்கிக் கொள்ள முடிகிறது.

2000 வருடங்களுக்கு முன்பு பாலினேசியன் (Polynesian) மக்கட் கூட்டம் சிறிய படகுகள் மூலம் ஹவாய் தீவிற்கு வந்தனர். பின்னர் அவர்கள் அனைவரும் சேர்ந்து ஹவாய் ராஜ்ஜியத்தை இறையாண்மை கொண்ட நாடாக உருவாக்கினார்கள். அங்கு அவர்களுடைய கலாசாரம், மொழி என்று உருவாகி வளர்ந்தது. ஹவாய் இராஜ்ஜியம் பல வருடங்கள் யாருடைய படையெடுப்பும் இன்றி தனித்த அமைதியான தீவாக இருந்தது. இத்தீவின் பூர்வீக காடுகள் பூமியின் உயிரியல் பொக்கிஷங்களில் ஒன்றாகும். 10,000-ற்கும் மேற்பட்ட தனித்துவமான உயிரினங்களின் வாழ்விடமாகவும் இதுவிருக்கிறது. இக்காடுகள் ஹவாய் தீவுக்கு புத்தம் புதிய தண்ணீரை வழங்குகிறது. இங்குள்ள உலகத்தரம் வாய்ந்த கடற்கரைகளை அழிவுகரமான நீரோட்டம் மற்றும் வண்டல் ஆகியவற்றிலிருந்தும் பாதுகாக்கின்றன. தவிர, இந்த வனாந்தரங்கள் பூர்வக்கூடிகளின் கலாசார ஊற்றாகவும் அமைந்திருக்கிறது. ஹவாய் கலாசார மரபுகள் பூர்வீக காடுகளுடன் நீண்ட, நெருக்கமான உறவை கொண்டுள்ளது.

பழங்காலத்தில் இக்காடுகள் பூர்வ குடிகளின் பாடல்களினாலும் நடனங்களினாலும் கொண்டாடப்பட்டன. மேலும் அவர்களின் கலாசாரத்தின் ஆன்மீக மற்றும் பொருள் தேவைகளுக்கு இந்தக் காடுகள் பல பரிசு பொருட்களை வாரிவழங்கின. காட்டில் இருந்து பொங்கிவரும் நீர் தாழ் நிலங்களில் தாரோ வயல்வெளிகளுக்கும் கடற்கரையோரத்தில் உள்ள மீன்குளங்களுக்கும் உயிர் ஆதாரமாக விளங்குகின்றன. பழங்குடி மக்கள் வீடுகளை நிர்மாணிப்பதற்கும் படகுகள், ஆயுதங்கள் மற்றும் கருவிகளை உருவாக்குவதற்கும் இக்காடுகளில் இருந்த மரங்களையே பயன்படுத்தினர். இங்குள்ள மூலிகைத் தாவரங்கள் நோய்களை குணப்படுத்தப் பயன்படுத்தப்பட்டன. மருத்துவமும் வளர்ந்து வந்தது. இங்குள்ள பறவைகளின் இறகுகளைக் கொண்டு அற்புதமான வண்ணத் தொப்பிகள், தலைக் கவசங்கள் மற்றும் லீ (Lie) என்பன வடிவமைக்கப்பட்டுள்ளன. பழங்குடிகளின் பண்டைய வாழ்வு வனாந்திரங்களின் மீது ஆழ்ந்த மரியாதையைக் கொண்டிருந்தது. ஹவாய் மக்கள் தங்களை இயற்கையின் ஒரு பகுதியாகப் பார்த்தார்கள். அதிலிருந்து தங்களை பிரித்துக்கொள்ளவில்லை.

பண்டைய ஹவாய் வாழ்க்கை நில மேலாண்மை ahupua’a அமைப்பை அடிப்படையாகக் கொண்டது. ahupua’a என்பது ஒரு பெரிய பாரம்பரிய சமூகப் பொருளாதார, புவியியல் மற்றும் காலநிலை நிலத்தின் உட்பிரிவுக்கான ஒரு ஹவாய்ச் சொல்லாகும். இது வழக்கமாக மலைகளிலிருந்து கடல் வரை நீண்டுள்ளதும் பொதுவாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முழுமையான நீர்நிலைகளையும் கடல் வளங்களையும் உள்ளடக்கியது. நீர் கடவுள்களிடமிருந்து பெற்றுக்கொண்ட பரிசாக பழங்குடிகள் கருதி பயன்படுத்தினர் மற்றும் அதனை பாதுகாப்பதிலும் தீவிரமாகவிருந்தனர். அதுமட்டுமல்லாது இயற்கையின் எல்லா இடங்களிலும் அவர்கள் கடவுளை கண்டனர். இந்த உலகத்தை பகிர்ந்துகொள்ளும் தாவரங்களையும் விலங்குகளையும் தங்களது நேரடி உறவினர்களாக எண்ணினர். மரணத்தின் பின்னர் ஒருவரது ஆவி மற்ற உயிரினங்களின் வழியாக செல்லக்கூடும் என்றும் கருதினர். அத்தகைய உலகில் காற்றுடனும் மழையுடனும் பேசலாம் என்றும் நம்பினர்.

ஆரம்பகால ஹவாய் மக்கள் மரத்தின் வேறுபட்ட இயற்பியல் பண்புகள் பற்றிய விரிவான அறிவைக் கொண்டிருந்தனர். ‘ஓஹி’யா லெஹவா, லாமா மற்றும் நையோ போன்ற மரங்கள் பெரும்பாலும் வீட்டின் அடிப்படை கட்டமைப்பிற்

குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. அதே சமயம் கௌயிலா,உஹி-யுஹி, ஓலோபுவா மற்றும் கோவா போன்ற மரங்கள் ஈட்டிகள், மைதானங்களை வடிவமைக்கப் பயன்படுத்தப்பட்டன. வறண்ட காடுகளின் ஒரு மரமான விலிவிலி அதன் மிதப்புக்காக அறியப்பட்டது. மீன்பிடி மிதவைகள் தயாரிப்பதற்கு அது பயன்படுத்தப்பட்டது, ஹவாய் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் வெட்டு மரம் ஒரு முக்கிய பங்கு வகித்தது. தங்குமிடம், விவசாயம், மீன்பிடித்தல், உணவு தயாரித்தல், சேமிப்பு, போக்குவரத்து, ஆயுதம் மற்றும் மதம் அனைத்தும் பூர்வீக காடுகளில் கிடைக்கும் பல்வேறு மரங்களிலிருந்து செய்யப்பட்ட முக்கிய கட்டமைப்புகளை அல்லது கருவிகளை உள்ளடக்கியது. லகா அவர்களது வன தெய்வம். ஒரு உண்மையான ஹவாய் கலாசாரத்தின் உயிர் வாழ்வு இயல்பாகவே காடு மற்றும் அதன் மரபுகள் உருவாகிய இயற்கை சூழலைப் பாதுகாப்பதில் பிணைக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், ஹவாயில் கால்நடைகள், பன்றிகள், ஆடுகள், எலிகள், களைகள், காட்டுத் தீ, ஆக்கிரமிப்பு பூச்சிகள் மற்றும் பிற அச்சுறுத்தல்களால் ஏற்படும் சேதம் காரணமாக ஹவாய் தீவின் பூர்வீக காடுகள் உலகில் மிகவும் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

பாலினேசியன் மக்கள் உணவுக்காக விலங்குகளையும், ரொட்டிப்பழம், கரும்பு, சாமை மற்றும் இனிப்பு உருளைக்கிழங்கு போன்ற முக்கிய உணவுகளையும் கொண்டு வந்தனர். ஆனால், அவர்கள் கவனக் குறைவாக எலிகள், கெக்கோக்கள் மற்றும் களைகளையும் கொண்டு வந்தனர். ஹவாய் மக்கள் மேட்டு நிலக் காடுகளைப் பாதுகாப்பதில் அக்கறை எடுத்துக்கொண்டனர், அதை அவர்கள் தெய்வங்களின் சாம்ராஜ்யமான வாவோ அகுவா என்று கருதினர். ஆனால் அவர்கள் பயிர்களை நடவு செய்வதற்காக விளைநிலக் காடுகளின் பெரும்பகுதியை அழித்தனர். பெரிய, ஈரமான பள்ளத்தாக்குகளில் மீன் குளங்கள் மற்றும் டாரோ திட்டுகளை உருவாக்கினர். மேலும் உணவு மற்றும் சடங்கு இறகுகளுக்காக பறவைகளை வேட்டையாடினர்.

17-18-ம் நூற்றாண்டில் கடல்வழி பயணங்கள் உலகெங்கும் போட்டி போட்டுக் கொண்டு இருந்த நேரத்தில், 1778-ம் ஆண்டு ஜனவரி 8-ல் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த கேப்டன் ஜேம்ஸ் குக் (James Cook) ஹவாய் தீவில் உள்ள ஓஹு (Ohau) கடற்கரையில் தரை இறங்கினான். வந்தவர்கள் ஹவாய் தீவு மக்களிடையே இரும்பை வியாபாரம் செய்தனர். கேப்டன் ஜேம்ஸ் குக் ஹவாய் தீவுகளுக்கு வந்த நேரத்தில், அசல் தாழ்நிலக் காடுகளின் பெரும்பகுதி கிட்டத்தட்ட 1,000 ஆண்டுகள் தீவிர விவசாயம் மற்றும் அறிமுகப்படுத்தப்பட்ட விலங்குகள், குறிப்பாக எலிகளின் தாக்கங்களால் பெரிதும் மாற்றப்பட்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளான்.

வெள்ளையர்கள் வரும்போது பல நோய்களையும் ஹவாய் தீவில் இறக்குமதி செய்தனர். குறிப்பாக அம்மை நோய்கள். அந்த நோய்களில் இருந்து தங்களை பாதுகாக்க அவர்களுக்கு எந்த வழியும் இல்லாமல், 1770-ம் ஆண்டு 3 லட்சமாக இருந்த ஹவாய் மக்கள் தொகை 1850-ல் 60,000 ஆகியது. 1920-ல் 24,000 மக்களே உயிரோடு இருந்தார்கள்.

பிரித்தானிய கடல் பயணி கேப்டன் வேன்கோவெர் யூனியன் ஜேக் (The Union Jack) கொடியை 1791-ம் ஆண்டு, ஹவாய் அரசன் முதலாம் கமிகமெகாவிடம் (Kamehameha-I) கொடுத்தான். அவனும் அதை பெற்றுக்கொண்டான். பின்னர் இராணுவ தளவாடங்களை கொடுத்து சிறு சிறு குழுக்களாக சிதறி கிடந்த ஹவாய் தீவை ஒரே ராஜ்ஜியமாக (Kingdom of Hawaii) உருவாக்கினார்கள். கால்நடைகளை இறக்குமதி செய்து ஹவாய் தீவில் வியாபாரம் செய்தார்கள்.

அப்போது ஹவாய் தீவிற்கு ஐரோப்பாவில் இருந்து குடியேற்றம் மிகப் பெரிய அளவில் நடைபெற ஆரம்பித்தது. அவர்



கள் அங்கு கரும்பு தோட்டங்கள் உருவாக்கினார்கள். அந்த காலத்தில் சர்க்கரை என்பது வெள்ளை தங்கம் (White Gold) என்று அழைக்கப்பட்டது. பின்னர் கிறிஸ்தவ மிஷனரிகள் வந்தார்கள். பண்ணைகளில் வேலை செய்ய ஆட்கள் தேவைப்பட்டார்கள். சம்பளம் குறைவாக ஜப்பான், சீனா, பிலிப்பைன்ஸ் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தார்கள்.

ஒரு நாள் களவுபோன இங்கிலாந்து கப்பலை மீட்டு தர வேண்டும் என்று கூறி ஹவாய் தீவு மக்களின் தலைவரை கேப்டன் ஜேம்ஸ் குக் பணயக் கைதியாக பிடித்து வைத்திருந்தான். அப்போது ஹவாய் மக்களுடன் நடந்த கலகத்தில் கேப்டன் ஜேம்ஸ் குக் கொல்லப்பட்டான். அங்கிருந்து தப்பிய இங்கிலாந்து இராணுவத்தினர், கடலில் நங்கூரமிட்டு வைத்து இருந்த கப்பலில் இருந்து பீரங்களால் தீவில்

உள்ள அப்பாவி மக்கள் மீது மிகப்பெரிய தாக்குதலை நடத்தி மிகக் கொடூர படுகொலையை செய்தனர்.

1700-களில் ஹவாய் தீவிற்கு வந்த அமெரிக்கர்களில் மதபோதகம் செய்ய வந்த சிலர் அங்கேயே தங்கிவிட்டார்கள். அவர்களின் அடுத்த தலைமுறை மதபோதகம் செய்ய விரும்பவில்லை. அவர்கள் வியாபாரம் செய்ய ஆரம்பித்தார்கள். கட்டடங்கள், தோட்டங்கள், பண்ணைகளை உருவாக்கினார்கள். முக்கியமாக சர்க்கரையை உற்பத்தி செய்தார்கள். அவர்கள் வியாபாரம் மட்டும் செய்யவில்லை. அங்கு இராணியாக இருந்த லில்லி உஓகளானி (LiLi Uokalani) என்பவரது முடியாட்சியை தூக்கி எறிந்துவிட்டு, ஆட்சி அதிகாரத்தை அவர்கள் கைப்பற்ற முடிவு செய்தார்கள். அவர்கள் ஹவாய் தீவில் பிறந்தவர்கள். சட்டப்படி அவர்கள் ஹவாய் தீவின் குடிமக்கள். ஆயினும் அவர்கள் அவர்களுடைய முன்னோர்களின் நாடான அமெரிக்காவையே நம்பி இருந்தார்கள்.

ஹவாய் ராஜ்ஜியத்தில் ஹவாயின் அமெரிக்க அமைச்சராக ஜோன் ஸ்டீவன்ஸ் இருந்தான். இவன் அதிகாரத்தை கைப்பற்ற அமெரிக்கா பின்கதவு வழியாக உள்ளே நுழைய மறைமுகமாக உதவி செய்தான். 1890-களில் அமெரிக்கா உலகெங்கும் தனக்கு என்று ஒரு அதிகாரத்தை உருவாக்கிக் கொண்டு இருந்த காலம் அது. அப்போது ஹவாய் தீவிற்கு தூதராக இருந்தவர் US Boston. அவன் அமெரிக்க போர் கப்பலை ஆயுதங்களால் நிரப்பி ஹவாய் தீவிற்கு அனுப்பினான். இது அமெரிக்காவின் குள்ளநரி அரசியல் சூழ்ச்சி. ஆம், கடல் வளங்களை கொண்ட மற்றும் சர்க்கரை உற்பத்தி செய்து கொண்டிருந்த ஹவாய் தீவில் அமெரிக்காவை எதிர்த்து போர் செய்யும் அளவிற்கு பலமும் இருக்கவில்லை இராணுவமும் இல்லை. அதை Coup d'État என்று அழைக்கப்படும் இராணுவ துணையுடன் நடத்தபடும் அரசியல் கவிழ்ப்பு (Coup) என்று அழைப்பார்கள். ஹவாய் தீவில் பிறந்த அமெரிக்கர்கள், அமெரிக்க இராணுவ துணையோடு கலகம் செய்து ஆட்சியை கவிழ்த்தார்கள். அமெரிக்காவின் Old Glory Flag என்னும் கொடியை பறக்கவிட்டார்கள். இதை தொடர்ந்து 38,000 ஹவாய் தீவின் பூர்வகுடி மக்கள், நாங்கள் அமெரிக்காவிடம் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்று கையெழுத்திட்டுக் கொடுத்தார்கள். அப்போது ஒட்டு மொத்த பூர்வகுடிகளின் மக்கள் தொகையே 40,000 தான்.

1843-ம் ஆண்டு ஹவாய் தீவு ஐரோப்பாவிற்கு வெளியே ஒரு தனித்த தேசமாக இருந்தது (An Independent Recognized state). பின்னர் ஸான் ஃபோர்டு டோல் (Sanford Dole) என்பவரை ஹவாயின் புதிய ஜனாதிபதியாக கொண்டு ஒரு பொம்மை அரசை 1894-ம் ஆண்டு ஜுலை 4-ம் திகதி நிறுவினார்கள். டோல் உணவு நிறுவனம் (Dole food company) என்னும் இவர்களுடைய நிறுவனம் தான் ஹவாய் மக்களின் நிலங்களை கையகப்படுத்தும் வேலைகளை மிகப்பெரிய அளவில் செய்தது. 1895-ல் நில அபகரிப்பு சட்டத்தை இயற்றியது. இதன் மூலம், அனைத்து பொது மக்களின் நிலங்களையும் அமெரிக்கா தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. பின்னர் 1898 ஆண்டுவாக்கில் 18 லட்சம் ஏக்கர் நிலங்களை அமெரிக்காவின் ஆளுகையின் கீழ் ஹவாய் கொடுத்தது. அவை கரும்பு சாகுபடி செய்யப்பட்ட நிலங்கள் ஆகும். 1959 அமெரிக்க காங்கிரஸ் ஹவாய் சேர்க்கை சட்டம் (Hawaii Admission Act) ஒன்றை உருவாக்கியது. ஹவாய் 30,176.185 ஏக்கர் நிலங்களை அமெரிக்காவிற்கு ஏக்கர் ஒன்றுக்கு 1 டொலர் என்று 65 வருடங்களுக்கு குத்தகைக்கு கொடுத்தது. Brewer & Co, Théo H. Davies & Co, Amfac, Castle & Cookie, Alexandre & Baldwin இந்த ஐந்து நிறுவனங்கள் தான் ஹவாய் தீவில் உள்ள நிலங்களை கையகப்படுத்தி மக்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்தது. 1959-ம் ஆண்டு ஹவாய் தீவை அமெக்காவின் 50-ஆவது மாகாணமாக அறிவித்த பின்பு, சில தனியார் கரும்பு பண்ணைகள் படிப்படியாக மூடப்பட்டது. இப்போது இந்த நிறுவனங்கள் திவால் ஆகிவிட்டது; மற்றவர்களின் கைகளுக்கு மாறிவிட்டது.

Alexander & Baldwin என்னும் நிறுவனம் மட்டும் இப்போது பழைய கோட்பாடுகளின் படியே இயங்கிக்கொண்டு வருகிறது. இது தற்போது 91,000 (370 சதுர கிலோமீட்டர்) ஏக்கர் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளது.

ஹவாய் அமெரிக்காவின் 50-வது மாகாணம் ஆன பிறகு, ஹவாய் மக்கள் புனிதமானது என்று கருதப்பட்ட மலைகள் காடுகளை அழித்து கரும்பு தோட்டங்களை விரிவு படுத்தினார்கள். அனைத்திற்கும் மேலாக ஹவாய் மொழியை புறந்தள்ளிவிட்டு அனைத்திலும் ஆங்கிலத்தை புகுத்தினார்கள். பள்ளிகள், அரச அலுவலகங்கள், சட்டங்களை செயல்படுத்துவது அனைத்திலும் ஆங்கிலம் வந்தது. பூர்வகுடி மக்கள், எங்களுடைய அடையாளத்தை படுகொலை செய்யாதே என்று போராடினார்கள்.

1993-ம் ஆண்டு ஹவாய் முழுவதும் அமெரிக்காவின் வசம் ஆனது. அதாவது 3,600 மைல் தொலைவில் பசிபிக் பெருங்கடலில் இன்னொரு அமெரிக்காவை பூர்வகுடி மக்களின் நிலங்களை திருடி ஒரு அமெரிக்காவை உருவாக்கியது. அதே ஆண்டு அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த பில் கிளிண்டன் 1893-ம் ஆண்டு ஹவாய் தீவில் அமெரிக்க படைகள் நடத்திய கலகத்துக்கு (Coup) பகிரங்கமாக மன்னிப்பு கேட்டார். ஹவாய் 1898-க்கு முன்பு வரை பூர்வகுடிகளின் கட்டுப்பாட்டில் ஒரு தனி சுதந்திர நாடாகவே இருந்தது.

இருந்தபோதிலும் ஹவாய் மக்கள் 'எங்கள் நாட்டை எங்களிடம் திருப்பி கொடுங்கள்' என்று போராடி கொண்டு தான் இருக்கிறார்கள். மொழியை அழிந்து விடாமல் பாதுகாத்துக் கொண்டு இருக்கிறார்கள். இப்போது பள்ளிகளில் ஹவாய் மொழியை மீண்டும் அறிமுகம் செய்துள்ளார்கள். அவர்களுடைய வழிபாட்டு முறைகளையும் காலசாரங்களையும் பாதுகாத்து கொண்டு இருக்கிறார்கள். தங்களுடைய நிலங்களை அமெரிக்க ஏகாதிபத்தியம் பின் கதவு வழியே வந்து ஆக்கிரமிப்பு செய்து கொண்டாலும், இன்றும் மார்க் சக்கர்பெர்க் போன்ற நவ-கார்பரேட்களிடம் இருந்து தங்கள் நிலங்களை மீட்க பூர்வகுடி மக்கள் போராடிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

மனித வருகை தொடங்கியதிலிருந்து, ஹவாய் அதன் பூர்வீக காடுகளில் பாதியை இழந்துவிட்டது. விவசாயம், மேய்ச்சல், மரம் வெட்டுதல் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றின் வரலாற்றுத் தாக்கங்கள் இந்த இழப்பின் பெரும்பகுதிக்கு காரணமாக இருக்கின்றன. தவிர, ஆக்கிரமிப்பு தாவரங்கள் மற்றும் விலங்குகளால் செய்யப்பட்ட அழிவும் பெரும் அச்சுறுத்த

லாக அமைந்துள்ளது. பூர்வீகமற்ற இனங்கள் பூர்வீக உயிரி னங்களின் வாழ்விடத்தை வேட்டையாடி அழித்து, உணவு மற்றும் வாழ்விடத்திற்காக அவற்றுடன் போட்டியிட்டு, அந் நிய நோய்களையும் பரப்புகின்றன. வனாந்தரங்கள் மாற்றம டைந்து வருகின்றன. அதனால் மண் கலவை மாறுவேதோடு, தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதுடன் காட்டுத் தீ அபாயத்தி லும் இக்காரணி தாக்கம் செலுத்துகிறது.

ஹவாய் தீவுக்கூட்டம் ஒரு காலத்தில் குறைந்தது 140 வகை யான பூர்வீகப் பறவைகளைக் கொண்டிருந்தது. அவற்றில் எழுபது இனங்கள் இப்போது அழிந்துவிட்டன. மேலும் 30 இனங்கள் அழிந்து வருகின்றன. ஹவாயின் மீதமுள்ள வனப் பறவைகளுக்கு, ஏவியன் மலேரியாவும் பிற நோய்களைப் பரப்பும் அந்நிய கொசுக்களும் முதன்மையான அச்சுறுத்த லாகும்.

Passiflora tarminiana தென் அமெரிக்காவிலிருந்து ஹவாயில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு பூர்வீகமற்ற கொடி. இது 70,000 ஏக்கருக்கும் அதிகமான பூர்வீக காடுகளை அழித்துள்ளது. இதனால் ஹவாய் மாநிலத்தின் விலைமதிப்பற்ற கோஆ (Koa) காடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. அவை ஹவாயின் மிகவும் புகழ்பெற்ற வைரம் பாய்ந்த மரங்களை கொண்டுள்ளதுடன், பல அரிய பறவைகள் மற்றும் தாவரங்க ளையும் கொண்டுள்ளன.

ஹவாயில் அழிந்து வரும் மர நத்தைகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல்களில் ஒன்று மாமிச உண்ணி ரோஸி ஓநாய் நத்தை ஆகும். புளோரிடா மற்றும் மத்திய அமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்ட ஓநாய் நத்தை 1955-ல் ஹவாயில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஒரு விவசாய பூச்சியான ராட் சத ஆபிரிக்க நத்தையைக் கட்டுப்படுத்துவதற்கான தவறான முயற்சியாக இருந்தது. ஓநாய் நத்தைகள் அளவு பொருட்ப டுத்தாமல் அனைத்து நத்தைகளையும் உண்ணும் மற்றும் பூர்வீக ஹவாய் நத்தைகளின் எண்ணிக்கையை அழித்துள் ளன. ஓநாய் நத்தைகள் அவற்றின் சொந்த இனங்களை கூட விழுங்குகின்றன. அவை 'நரமாமிச நத்தை' என்ற பொது வான பெயரால் குறிப்பிடப்படுகின்றன.

ஐரோப்பிய மற்றும் அமெரிக்க தொடர்புகளுடன், ஹவாய் சுற்றுச்சூழலில் மாற்றங்கள் துரிதப்படுத்தப்பட்டு மலைகளி லும் கை வைக்கப்பட்டுள்ளன. சந்தனம் அதன் நறுமணத்திற் காக சீனாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. மலை காடுகளில் இருந்து மில்லியன் கணக்கில் அறுக்கப்பட்ட சந்தன மரங் கள், ஹவாய் தீவுகளின் முதல் பணப் பயிராக மாறியது. மேற்கத்தையர்களால் கொண்டுவரப்பட்ட பன்றிகள், ஆடு கள், செம்மறி ஆடுகள் போன்ற கால்நடைகள் தீவு முழுவதி லும் உள்ள காடுகளின் அழிவில் தாக்கம் செலுத்தின. வர்த் தகக் கப்பல்கள் பூர்வீகமற்ற பாடல் பறவைகளையும் கொசுக்களையும் கொண்டு வந்தன, பறவை மலேரியா போன்ற நோய்கள் ஹவாய் பறவைகளில் தொற்றின. அவை சூடான, ஈரமான தாழ்வான பகுதிகளிலிருந்து விரைவில் அழிந்து வருகின்றன. 19-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், தீவுகளின் கால்நடைகள் மற்றும் ஆடுகளின் எண்ணிக்கை இலட்சக்கணக்கில் இருந்தது.

ஹவாய் தீவுகளில் கரும்பு ஒரு பொருளாதார சக்தியாக கால்நடைகளை முந்தியது. அரசாங்கத்தில் தோட்டக்காரர்க ளின் செல்வாக்கு அதிகரித்தது. அதனால், பெரிதும் காடு கள் அழிக்கப்பட்டுள்ளன. தண்ணீரும் வியாபாரத்துக்குள் சிக்குண்டது. இதனால் தண்ணீர் பற்றாக்குறையும் ஏற்பட்டுள் ளது. அத்துடன், காபன் உமிழ்ப்பு நாடுகளின் வரிசையில் அமெரிக்கா முதலிடத்தில் இருக்கிறது.

இவ்வாறான பின்னணியிலேயே கடந்த 100 ஆண்டுகளில் மிகப் பெரிய காட்டுத் தீ விபத்து ஹவாயின் மாய் தீவில் ஏற்பட்டுள்ளது. உலக அளவில் காலநிலையில் ஏற்பட்ட மாற்றம், அதீத வெப்பம், அதிக காற்று, குறைந்த ஈரப்பதம் மற்றும் உலர்ந்த தாவரங்கள் போன்றவை காட்டுத் தீயின் பரவலுக்கு காரணம் என சூழலியல் வல்லுநர்கள் தெரிவித் துள்ளதில் இருந்து இதில் மனிதரின் செல்வாக்கும் பிரதான மாகவுள்ளது தெளிவாகிறது.


கடந்த 1918-ம் ஆண்டு ஒக்ரோபரில், அமெரிக்காவில் வறட்சி யால் பாதிக்கப்பட்ட வடக்கு மின்னேசோட்டா பகுதியில் தீவி ரமான காட்டுத் தீ ஏற்பட்டது. இதில் நூற்றுக்கணக்கானவர் கள் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந் தன. 104 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது மாவி தீவில் ஏற்பட்ட காட்டுத் தீ, அந்நாட்டில் ஏற்பட்ட மிக மோசமான காட்டுத் தீ சம்பவமாகும்.

25 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்கள் தீயில் கருகி யுள்ளன. குறித்த காட்டுத்தீயில் சிக்கி இதுவரை 106 பேர் உயிரிழந்துள்ளதோடு மேலும் 1300-க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன் கிழமை அமெரிக்காவில் உள்ள மாவி தீவில் காட்டுத் தீ வேகமாக பரவியது. இதில் நூற்றாண்டுகள் பழை மைவாய்ந்த லஹேனா நகரம் உள்ளிட்ட பகுதிகள் கடுமை யாகப் பாதிக்கப்பட்டன.

காட்டுத் தீ காரணமாக லஹேனாவில் 13,000 கட்டடங்கள் சேதமடைந்தன. மேற்கு மாவி பகுதியில் 2,200 கட்டடங்கள் சேதமடைந்தன. அவற்றில் 86 சதவீதம் குடியிருப்புக் கட்ட டங்கள். காட்டுத் தீயால் ஏற்பட்டுள்ள சேதங்களின் மொத்த மதிப்பு கிட்டத்தட்ட 6 பில்லியன் டொலர் (சுமார் ரூ.150,000 கோடி) என மதிப்பிடப்பட்டுள்ளது என்று ஹவாய் மாகாண ஆளுநர் ஜோஷ் கிரீன் மற்றும் மாவி காவல் துறை தலைவர் ஜான் பெலெட்டியா தெரிவித்துள்ளார்.

ஹவாய் காட்டுத் தீ உலகின் இயக்கத்தில் மாற்றத்தையும் பின்னடைவையும் ஏற்படுத்தியுள்ளது. ஹவாயை அழித்து உலக மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. வரவு செல வுத் திட்டத்தில் இராணுவத்திற்கு பெரும் தொகையை ஒதுக் கிவிட்டு ஹவாய் காடுகளுக்கு வெறும் 1 சதவீதத்தை ஒதுக் கும் அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கைகள் முதல் மாற வேண்டும்.



sathees.selvarajah@thaiveedu.com



# ஸ்டாலின் மீதான அவதூறுகள் – 4

## வரலாற்றின் மூலைமுடுக்குகள் பாய்ச்சும் ஒளி

– தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

### தொடக்கக் குறிப்புகள்:

வரலாற்றின் நிகழ்வுகள் குறித்து எமக்குச் சொல்லப்பட்டுள்ள கதைகளும் வரையப்பட்டுள்ள சித்திரங்களும் சரியானவைதானா என்ற வினாவை நாம் மீண்டும் மீண்டும் எழுப்ப வேண்டியுள்ளது. ஸ்டாலின் விடயத்திலும் அதைத்தான் செய்ய வேண்டியுள்ளது. ஸ்டாலின் பற்றிய செய்திகளின் மூலங்களாக இருப்பவை மூன்று. முதலாவது மேற்குலக ஆய்வாளர்கள், ஊடகங்கள் ஆகியவற்றின் வழி அமைந்த செய்திகள், அறிக்கைகள், நூல்கள் என்பன. இவை ஆங்கில மொழியில் எழுதப்பட்டு கெடுபிடிப்போர் காலத்தில் சோவியத் யூனியனுக்கு எதிரான பிரச்சாரத்தின் கருவியாகப் பயன்படுத்தப்பட்டவை. இச்செய்திகளில் பெரும்பாலானவை இட்டுக்கட்டப்பட்ட பொய்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது மூலம் ஸ்டாலினின் மறைவையடுத்து அதிகாரத்துக்கு வந்த க்ருஷ்ச்சொவ்வும் அவரது சகாக்களும் பரப்பிய ஸ்டாலின் குறித்த பொய்கள். இப்பொய்கள் பின்னர் கொர்பச்சொவ் காலத்தில் புத்துயிர் பெற்றன. மூன்றாவது, ட்ரொட்ஸ்கியும் அவர்தம் ஆதரவாளர்களும் பரப்பிய, இன்னும் பரப்புகின்ற பொய்களும் அவதூறுகளும் மூலங்களாகப் பலரால் பயன்படுத்தப்படுகின்றன.

இங்கு மூன்று விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். முதலாவது, ஸ்டாலின் குறித்து அவரது சமகாலத்து மூன்றாமுலகத் தலைவர்கள் என்ன நினைத்தார்கள். ஸ்டா-லின் குறித்த அவர்களின் மதிப்பீடு எவ்வகைப்பட்டதாக இருந்தது? இது குறித்து இலகுவில் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் செய்திகள் இல்லை. ஆனால் வரலாற்றின் மூலை முடுக்குகளில் தேடினால் ஸ்டாலின் குறித்த பல்வேறு மதிப்பீடுகள் கிடைக்கின்றன. இவை கெடுபிடிப்போர் உச்சத்தில் இருந்த காலத்தில் எழுதப்பட்டவை அல்லது பேசப்பட்டவை. இவை ஸ்டாலின் குறித்த ஒரு சித்திரத்தை வழங்குகின்றன.

இரண்டாவதாக, ஸ்டாலின் தவறுகளுக்கு அப்பாற்பட்டவரல்ல, அவரது தலைமையில் தவறுகள் நிகழ்ந்துள்ளன. ஆனால் அத்தவறுகள் அனைத்திற்கும் தனியே ஸ்டாலின் மட்டுமே பொறுப்பேற்க வேண்டுமா? தலைமைப்பதவியில் இருந்த மற்றவர்கள் குற்றமற்றவர்களா? குறிப்பாக ஸ்டாலின் மீது குற்றச்சாட்டுகளை அடுக்கிய க்ருஷ்ச்சொவ் ஸ்டாலினுடன் தலைமைக்குழுவில் இருந்தார். முடிவுகள் நீண்ட விவாதங்களின் பின்னர் எடுக்கப்பட்டன என்பது ஆவணக் காப்பகங்களின் வழி ஆதாரபூர்வமாக நிறுவப்பட்டுள்ளன. எனவே அவர் வாழ்ந்த காலம் எவ்வாறு இருந்தது. குறிப்பாக ரஷ்யப் புரட்சியைத் தொடர்ந்து சோவியத் யூனியனைக் கட்டமைப்பதில் ஸ்டாலினின் வரலாற்றுப் பாத்திரம் என்ன? இரண்டாம் உலகப் போரின் கதாநாயகனாக, ‘இரும்பு மனிதனாக’ ஸ்டாலின் அனைவராலும் போற்றப்பட்டார், இதன் ஆழ அகலங்கள் என்ன? சோவியத் யூனியனை மிகக்குறுகிய காலத்தில் முன்னேறிய தொழிற்துறை நாடாக எவ்வாறு ஸ்டாலினால் மாற்ற முடிந்தது? இக்கேள்விகளுக்கான பதிலை வரலாற்றின் இடுக்குகளிலேயே தேடவேண்டியுள்ளது. ஏனெனில் இரண்டாம் உலகப்போர் பற்றிய கதையாடலே முழுமையாக மாற்றியமைக்கப்பட்டு விட்டது.

மூன்றாவது, இரண்டாம் உலகப் போரில் சோவியத் யூனியனின் பாத்திரம் என்ன? என்ற வினாவை எழுப்பி ஆராய்ந்தால் இரண்டாம் உலகப்போரின் தீர்மானகரமான சக்தி சோவியத் யூனியனே என்பதும் ஹிட்லரின் நாசிச வெறியாட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது ஸ்டாலினும் சோவியத் மக்களுமே என்ற உண்மையை உணர்த்திவிடுகிறது. இதன் பின்னணியிலும் ஸ்டாலின் குறித்த அவதூறுகளை விளங்கிக் கொள்ளலாம். இக்கட்டுரை ஸ்டாலின் குறித்த ஒரு சித்திரத்தைப் பெறுவதற்கு வரலாற்றின் மூலைமுடுக்குகளைத் தேடிப் பயணிக்கிறது. அதன்வழி ஸ்டாலினையும் அவர் மீதான அவதூறுகளையும் விளங்கிக்கொள்ள, முன்னர் குறிப்பிட்ட மூன்று விடயங்களையும் ஆழமாக நோக்க முனைகிறது.

### ஸ்டாலின் பற்றி மூன்றாமுலகம்:

ஸ்டாலின் குறித்து மூன்றாமுலக மக்களும் தலைவர்களும் என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றிய விரிவான தரவுகள் மிகக் குறைவு. அக்காலப்பகுதியில் ஸ்டாலின் குறித்து எழுதப்பட்ட குறிப்புகளின் வழியே இதைப் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அமெரிக்க வரலாற்றாசிரியரான ஹவார்ட் புரூஸ் பிரான்கிளின் ஸ்டாலின் குறித்த தனது மதிப்பீட்டை 1972-ல் பின்வருமாறு முன்வைக்கிறார்:

‘ஜோசப் ஸ்டாலினை ஒரு கொடுங்கோலனாகவும், கசாப்புக் கடைக்காரனாகவும் நினைத்துக் கொண்டிருந்தேன். லட்சக்கணக்கானோரைச் சிறையில் அடைத்துக் கொன்று, ரஷ்யப் புரட்சிக்குத் துரோகம் இழைத்து, உலகம் முழுவதும் விடுதலைப் போராட்டங்களை விற்று, சோவியத் மக்களால் வெறுக்

கப்படும், அஞ்சும் ஒரு தனிமையான பைத்தியக்காரனாக அவரை நான் நினைத்திருந்தேன். எமக்கு வழங்கப்பட்ட சித்திரம் அவ்வாறானதாகவே இருந்தது. ஆனால் இன்று சுமார் ஒரு பில்லியன் மக்களுக்கு ஸ்டாலின் ஒரு ஆதர்சமாகத் திகழ்கிறார். நமது முதலாளித்துவ உலகில் நாம் திட்டமிட்டு நம்பவைக்கப்பட்டதற்கு மாறாக சீனா, வியட்நாம், கொரியா மற்றும் அல்பேனியாவின் மக்கள் ஸ்டாலினை நவீன வரலாற்றின் சிறந்த ஹீரோக்களில் ஒருவராகக் கருதுகின்றனர், தனிப்பட்ட முறையில் தங்கள் விடுதலையை வென்றெடுக்க உதவினார் என்று நன்றி தெரிவிக்கின்றனர். ஸ்டாலினை நன்கு அறிந்த சோவியத் யூனியனின் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் இந்தக் கருத்தைப் பகிர்ந்து கொள்கிறார்கள். ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களாகச் சோவியத் ஆட்சியாளர்கள் ஸ்டாலினைப் பற்றிய முதலாளித்துவ உலகின் பார்வையை சோவியத் மக்களை ஏற்றுக்கொள்ளச் செய்ய அல்லது குறைந்தபட்சம் அவரை மறக்கச் செய்யத் திட்டமிட்டு முயன்றனர். அவர்கள் அவரை வரலாற்றுப் புத்தகங்களிலிருந்து வெளியேற்றினர், அவரது நினைவுச்சின்னங்களை உடைத்தனர், மேலும் அவரது உடலைக் கல்லறையிலிருந்து அகற்றினர்.

ஆயினும்கூட, அனைத்துக் கணக்குகளின்படி, பெரும்பான்மையான சோவியத் மக்கள் இன்னும் ஸ்டாலினின் நினைவை மதிக்கிறார்கள். ஸ்டாலின் ஒரு சிறந்த இராணுவத் தலைவர் மற்றும் இரண்டாம் உலகப் போரின் முக்கிய பாசிச எதிர்ப்பு மூலோபாயவாதி என்ற உண்மையை யாராலும் மறுக்கவியலாதுள்ளது. சோவியத் மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அவர் முக்கியமான பங்களிப்பைச் செய்துள்ளார் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. ஒரு சமீபத்திய சோவியத் திரைப்படம் ஸ்டாலினை, அவர் இறப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு அமைதியான, பகுத்தறிவு நிறைந்த, புத்திசாலித்தனமான தலைவராகக் காட்டுகிறது. ஆனால் சோவியத் யூனியனின் ஆட்சியாளர்கள் இன்னும் ஸ்டாலினைப் படிக்கவிடாமல் மக்களைத் தடுக்க முயற்சிக்கின்றனர். அவர்கள் பொறுப்பேற்றதும், அவர்களின் முதல் செயல்களில் ஒன்று அவரது எழுத்துகளுக்குத் தடை விதித்தது. 1934 வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கிய ஏற்கனவே வெளிவந்திருந்த பதின்மூன்று தொகுதிகளில் அமைந்த அவரது சேகரிக்கப்பட்ட படைப்புகளின் வெளியீட்டை அவர்கள் நிறுத்தினர். இது அவரது வாழ்க்கையின் கடைசி இருபதாண்டுகளில் ஸ்டாலினின் எழுத்துகளைப் பெறுவதை உலகம் முழுவதும் கடினமாக்கியது.

மேற்குலகில் குறிப்பாக அமெரிக்காவில், 1920-களின் முற்பகுதியில் இருந்து மார்க்சிசம்-லெனினிசத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறிக்கொண்டு அடிப்படையில் இரண்டு எதிரெதிர் வகைமைகள் உருவாகின. ஒன்று ஸ்டாலினுடையது மற்றொன்று ட்ரொட்ஸ்கியினுடையது. ட்ரொட்ஸ்கியின் படைப்புகள் பல மலிவான பதிப்புகளில் எளிதில் கிடைக்கின்றன. அவற்றுக்கு அரச ஆதரவும் கூட உண்டு. ஆனால் ஸ்டாலினின் எழுத்துக்கள் எதுவும் வெளியாவதில்லை. ஸ்டாலினின் எழுத்துக்களை அடக்குவதன் மூலம் அவர் படிக்கத் தகுந்த எதையும் எழுதவில்லை என்ற கருத்துப் பரப்பப்படுகிறது. ஆயினும்கூட, ஸ்டாலின் நம் நூற்றாண்டின் மிக முக்கியமான மூன்று வரலாற்று நபர்களில் ஒருவர், அவருடைய சிந்தனை மற்றும் செயல்கள் நம் அன்றாட வாழ்க்கையை இன்னும் பாதிக்கின்றன, இன்று நூற்றுக்கணக்கான மில்லியன் கணக்கானவர்களால் எந்தக் காலத்திலும் முன்னணி அரசியல் கோட்பாட்டாளர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். அவருடைய பெயர் மிகவும் உணர்ச்சிவசமான உலகம் முழுவதும் உள்ள சாதாரண குடிமக்களின் வீடுகளில் உச்சரிக்கப்படும் பெயர். கடந்த அரை நூற்றாண்டில் மார்க்சிய-லெனினிசக் கோட்பாட்டின் வளர்ச்சியை நன்கு அறிந்த எவருக்கும் ஸ்டாலின் வெறுமனே செயல் திறனை மாத்திரம் கொண்டவர் அல்ல என்பது தெரியும். மாவோ அவரை ‘நம் காலத்தின் மிகப்பெரிய மேதை’ என்று பெயரிடுகிறார், தன்னை ஸ்டாலினின் சீடர் என்று அழைக்கிறார், மேலும் ஸ்டாலினின் தத்துவார்த்தப் படைப்புகள் இன்னும் உலக கம்யூனிசப் புரட்சிகர மூலோபாயத்தின் மையமாக இருப்பதாக வாதிடுகிறார்.


ஸ்டாலின் குறித்த ‘புறநிலை’ அல்லது ‘நடுநிலை’ மதிப்பீடு என்று எதுவும் இருக்க முடியாது என்பதை முதலில் நாம் அங்கீகரிக்க வேண்டும். ஏனெனில் வரலாறு அவ்வாறு இயங்குவதில்லை. இதற்கு சில உதாரணங்களைப் பார்க்கலாம். சில வர்க்கங்களின் பார்வையில், ஜார்ஜ் வாஷிங்டன் ஒரு திமிர்பிடித்த அயோக்கியன், அவரது நாடு, மன்னர் மற்றும் கடவுளுக்குத் துரோகமிழைத்தவர், ஒரு கண்டத்திற்குப் படுகொலைகளையும் குழப்பத்தையும் கொண்டு வந்த ஒரு துரோகி. ஆபிரகாம் லிங்கன் மில்லியன் கணக்கானவர்களின் இறப்புக்கும், பைபிளால் அங்கீகரிக்கப்பட்ட உறவின் அடிப்படையில் நாகரீகமான, பண்பட்ட, இணக்கமான சமுதாயத்தின் அழிவுக்கும் காரணமாக இருந்தவர். ஆனால் அதே வேளை ஹாரி ட்ரூமன், நெல்சன் ராக்பெல்லர், ஜான் எஃப். கென்னடி மற்றும் ரிச்சர்ட் நிக்சன் ஆகியோர் பகுத்தறிவு மற்றும் தேசபக்தியுள்ள மனிதர்கள். சுதந்திர உலகின் மதிப்பு மிக்க கதாநாயகர்கள்.

எந்தவொரு வரலாற்று நபரும் ஒரு வர்க்கத்தின் நலன்களிலிருந்தே மதிப்பீடு செய்யப்படுகிறார். இதற்கு ஸ்டாலினும் விலக்கல்ல. அதிகார வர்க்கத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் சிம்மசொப்பனமாக இருந்த ஸ்டாலினை அதிகார வர்க்கம் கொடுங்கோலனாகவும் மோசமாகவுமே வரலாற்றில் சித்திரிக்கும். அது இயல்பானதே. ஸ்டாலின் உழைக்கும் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தினார். தனது வேலையைச் சிறப்பாகச் செய்ததால், இந்தப் பொருளாதார அமைப்பிலிருந்து இலாபம் ஈட்டும் அனைவருக்கும் அவர் மோசமானவராகவே தெரிவார். மேலும் அந்த அமைப்பால் பாதிக்கப்பட்டவர்களால் அவர் பாராட்டப்படுவார். ஸ்டாலின் குறித்த கேள்வி அவரது குறிக்கோள்களைப் பகிர்ந்துகொள்பவர்களுக்கும் அதை எதிர்ப்பவர்களுக்கும் முற்றிலும் வேறுபட்டது. மூன்றாமுலக நாடுகளில் உள்ள புரட்சியாளர்கள் ஸ்டாலினைப் பற்றிய அறிவியல் மதிப்பீட்டைக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் அவர் முப்பது முக்கியமான ஆண்டுகளாக உலகப் புரட்சியின் முக்கிய தலைவராக இருந்தார் என்ற உண்மை அவர்களுக்கு மிகவும் பட்டவர்த்தனமாகத் தெரியும்.’

ஸ்டாலினின் பங்களிப்பு குறித்து 1939-ல் மாவ சேதுங் எழுதிய வரிகளையும் இங்கு நினைவூட்ட வேண்டும். ஸ்டாலினின் 60-வது பிறந்தநாளை ஒட்டி மாவோ ‘ஸ்டாலின்: சீன மக்களின் நண்பர்’ என்று தலைப்பிட்டு பின்வருமாறு எழுதினார்:

‘தோழர் ஸ்டாலினுக்கு அறுபது வயதாகிறது. அவரது பிறந்

தநாளை அறிந்த உலகெங்கிலும் உள்ள அனைத்து புரட்சி யாளர்களின் இதயங்களிலிருந்தும் அன்பான வாழ்த்துகள் பெருக்கெடுக்கும் என்று நாம் உறுதியாக நம்பலாம். ஸ்டா-லினை வாழ்த்துவது சம்பிரதாயம் அல்ல. ஸ்டாலினை வாழ்த்துவதென்பது, அவரையும் அவரது நோக்கத்தையும் ஆதரிப்பது, சோசலிசத்தின் வெற்றியை ஆதரிப்பது, மேலும் அவர் சுட்டிக்காட்டும் மனிதகுலத்தின் முன்னோக்கி செல்லும்



வழியை ஆதரித்து. இது நமது அன்பான நண்பருக்கு ஆதர வளிப்பதாகும். இன்று பெரும்பான்மையான மனிதர்கள் துன் பத்தில் உள்ளனர், மேலும் ஸ்டாலின் சுட்டிக்காட்டிய பாதை மற்றும் அவரது உதவியால் மட்டுமே மனிதகுலம் துன்பத்தி லிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியும். நமது வர லாற்றில் மிகவும் கசப்பான துன்பத்தின் ஒரு காலகட்டத்தில் வாழும், சீன மக்களாகிய நமக்கு மற்றவர்களின் உதவி மிக அவசரமாகத் தேவைப்படுகிறது. ஆனால் நம் நண்பர்கள் யார்?

நண்பர்கள் என்று அழைக்கப்படுபவர்கள், சீன மக்களின் சுய பாணியிலான நண்பர்கள், நம்முடன் உண்மையான அனுதா பமுள்ள மற்றும் எங்களைச் சகோதரர்களாகக் கருதும் நண் பர்கள். அவர்கள் யார்? அவர்கள் சோவியத் மக்கள் மற்றும் ஸ்டாலின். வேறு எந்த நாடும் சீனாவில் அதன் சலுகைகளை கைவிடவில்லை. சோவியத் யூனியன் மட்டுமே அவ்வாறு செய்துள்ளது. நமது முதல் மாபெரும் புரட்சியின் போது அனைத்து ஏகாதிபத்தியங்களும் எங்களை எதிர்த்தன. சோவி யத் யூனியன் மட்டுமே எங்களுக்கு உதவியது. ஜப்பானுக்கு எதிரான எதிர்ப்புப் போர் வெடித்ததிலிருந்து எந்த ஏகாதிபத் திய நாட்டின் அரசாங்கமும் எங்களுக்கு உண்மையான உத வியை வழங்கவில்லை. சோவியத் யூனியன் மட்டுமே சீனா விற்கு உதவியது. சோசலிசத்தின் நிலம், அதன் தலைவர்கள் மற்றும் மக்கள், மற்றும் சோசலிசச் சிந்தனையாளர்கள், அரசி யல்வாதிகள் மற்றும் தொழிலாளர்களால் மட்டுமே சீன தேசம் மற்றும் சீன மக்களின் விடுதலைக்கான உண்மையான உத வியை வழங்க முடியும், அவர்களின் உதவியின்றி நமது நோக்கம் இறுதி வெற்றியைப் பெற முடியாது. சீன மக்களின் விடுதலைக்கான உண்மையான நண்பர் ஸ்டாலின். நமக்கி டையே கருத்து வேறுபாடுகளை விதைக்கும் முயற்சி வெற்றி பெறாது, பொய்களும் அவதூறுகளும் எமது தோழமையைச் சிதைக்காது. சீன மக்கள் முழு மனதுடன் ஸ்டாலினுடனான அன்பையும் மரியாதையையும் சோவியத் யூனியனுக்கான நமது உண்மையான நட்பையும் விரும்புகிறார்கள். வழங்குகி றார்கள்.'

ஸ்டாலினின் வரலாற்றுப் பாத்திரத்தை இதன் வழிப்பட்டே நோக்க வேண்டியுள்ளது. 1920-களில் இருந்து அவரது மர ணம் (1953) வரை மூன்றாமுலக நாடுகளின் நேசச் சக்தி யாக, ஆதரவுக்கரமாக ஸ்டாலின் திகழ்ந்தார். கொலனியா திக்கத்திலிருந்து பல மூன்றாமுலக நாடுகள் விடுதலை அடைவதில் அவரின் பங்களிப்புத் தீர்க்கமானது. ஸ்டாலின் இருபதாம் நூற்றாண்டு வரலாற்றின் மூன்று தசாப்தங்களின் வரலாற்று வரைவியலின் அடிநாதமாக இருக்கிறார். இருப தாம் நூற்றாண்டின் போக்கைப் பற்றிய முக்கியமான கேள் விகளுக்கு விடை தேடினால், ஒரு கட்டத்தில் ஸ்டாலின் என்ற பாத்திரத்தைத் தவிர்க்கவியலாதது என்ற உண்மை புரி யும்.

ஏழைகளும் உழைக்கும் மக்களும் புரட்சி செய்து அரசியல் அதிகாரத்தைப் பெறுவது சாத்தியமா? ஒரு வளர்ச்சியடை யாத, பின்தங்கிய தேசம், கல்வியறிவற்ற, ஏழ்மையான, நோய்வாய்ப்பட்ட, பட்டினியால் வாடும், தங்கள் உற்பத்தி சக்திகளை வளர்ப்பதற்குத் தேவையான அனைத்துத் திறன்க ளையும் கருவிகளையும் கொண்டிராத மக்கள் பொருளாதார மற்றும் பண்பாட்டு நல்வாழ்வை அடைய முடியுமா? எதிர்ப்பு ரட்சி சக்திகளால் சுற்றி வளைக்கப்பட்டு, தொழில்துறையில் மிகவும் முன்னேறிய போர்க்குணமிக்க நாடுகள் எதிர்க்கும் போது மக்களுக்கான அரசைக் கட்டியமைக்க முடியுமா? புரட்சிகர வளர்ச்சியின் வெற்றிக்கு என்ன விலை கொடுக்க வேண்டும்? பலதரப்பட்ட மனங்கள், மதங்கள், பண்பாடுகள், மொழிகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி நிலைகள் உள்ள பல மக்கள் வாழும் பரந்த நிலத்தில் தேசிய ஒற்றுமையை அடைய முடியுமா? தீவிர தேசியவாதம் மற்றும் தொடர்ச்சி யான போர் அச்சுறுத்தல் ஆகியவற்றின் மீது அரசாங்கங்கள் சார்ந்திருக்கும் பல்வேறு நாடுகளின் சுரண்டப்படும் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களிடையே சர்வதேச ஒற்றுமையை அடைய முடியுமா? பின்னர், பிற்காலத்தில், எந்த ஒரு நவீன தொழில்

மயமான சமுதாயத்தின் மக்களுக்கும் அதிக சுதந்திரம் இருக்க முடியுமா, அல்லது அரசு அவர்களுக்கு எதிரியாக இருக்க வேண்டுமா? ஆளும் உயரடுக்கின் சில வடிவங்கள் இல்லாமல் எந்த சமூகமும் வளர முடியுமா?

இந்தக் கேள்விகள் அனைத்தும் நவீனமானவை. இவை முதலாளித்துவத்தின் சகாப்தத்தில் எழுந்தவை. அது அதன் மிக உயர்ந்த வடிவமான நவீன ஏகாதிபத்தியத்தை அடைந்து, உலகப் புரட்சியின் சகாப்தமாகிய இருபதாம் நூற்றாண்டின் முக்கியமான அம்சங்கள். இந்தக் கேள்விகள் ஒவ்வொன்றும் ஸ்டாலினிடம் தவிர்க்க முடியாமல் நம்மை அழைத்துச் செல்கின்றன. ஸ்டாலின் ஆட்சியதிகாரத்தில் இருந்த காலகட்டத்தில் சோவியத் புரட்சியின் மற்றும் உண்மையில் உலகப் புரட்சியின் அனைத்துச் சாதனைகள் மற்றும் அனைத்துத் தோல்விகள், அனைத்துப் பலங்கள் மற்றும் அனைத்துப் பலவீனங்களும் ஸ்டாலின் என்ற நபரில் மையங்கொள்கின்றன. இது நடந்த, நடக்காத அனைத்திற்கும் அவர் தனிப்பட்ட முறையில் பொறுப்பு என்றோ அல்லது அவர் செய்ததை வேறு யாரும் செய்திருக்க முடியாது என்றோ சொல்கின்ற முடிவுக்கு வருவதற்காக அல்ல. மாறாகக் குறித்த மூன்று தசாப்தகால உலக அரசியலில் இன்னும் குறிப்பாக மூன்றாமுலக நாடுகளின் அரசியல் எதிர்காலத்தில் தவிர்க்கவியலாமல் சோவியத் யூனியனின் நிழல் படிந்திருந்தது. இங்கு ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அனைத்து வரலாற்று நாயகர்களைப் போலவும், அவர் காலத்தால் உருவாக்கப்பட்ட மற்றும் அந்தக் கால முரண்பாடுகளைக் கொண்டவராகவே நாம் அவரைப் பார்க்க வேண்டும். அதனடிப்படையில் மதிப்பிட வேண்டும். இதற்கு மூன்றாமுலக மக்கள் ஸ்டாலின் குறித்து என்ன நினைத்தார்கள் என்பது முக்கியமானது.

ஸ்டாலின் மறைந்த செய்தி கிடைத்தவுடன் இந்தியப் பாராளுமன்ற அமர்வுகளை இடைநிறுத்தி இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு உரையாற்றினார். அவ்வுரையெங்கும் அவர் ஸ்டாலினை ‘மார்ஷல் ஸ்டாலின்’ என்றே அழைத்தார். இரண்டாம் உலகப்போரில் மகத்தான பங்களிப்பை நினைவுகூர்ந்தே அவ்வாறு நேரு அழைத்தார். தனது உரையில்:

‘மார்ஷல் ஸ்டாலினைப் பற்றி நாம் நினைக்கும் போது, கடந்த 35 ஆண்டு கால வரலாற்றின் சித்திரம் திரைப்படமாக நம் கண்முன்னே விரிகிறது. இங்குள்ள நாம் அனைவரும் இந்தக் காலத்துப் பிள்ளைகள், இதனால் பல வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளோம். நாம் இந்த நாட்டில் எங்களுடைய சொந்தப் போராட்டங்களில் மட்டும் கலந்து கொள்ளாமல், இன்னொரு விதத்தில் இந்த உலகில் நடந்த மாபெரும் போராட்டங்களில் கலந்து கொண்டு, அவற்றால் பாதிக்கப்பட்டு வளர்ந்திருக்கிறோம். எனவே, இந்த 35 ஆண்டுகளை திரும்பிப் பார்த்தால், பல புள்ளிவிவரங்கள் தனித்து நிற்கின்றன. ஆனால் இந்த ஆண்டுகளின் வரலாற்றை மார்ஷல் ஸ்டாலினை விட எந்த ஒரு நபரும் வடிவமைத்துப் பாதித்ததில்லை. அவர் படிப்படியாகக் கிட்டத்தட்ட ஒரு பழம்பெரும் நபராகவும், சில சமயங்களில் மர்மமான மனிதராகவும், சில சமயங்களில் ஒரு சிலருடன் அல்ல, ஆனால் ஏராளமான நபர்களுடன் நெருங்கிய பிணைப்பைக் கொண்டவராகவும் இருந்தார்.

அவர் அமைதியிலும் போரிலும் தன்னை சிறந்தவராக நிரூபித்தார். அவர் ஒரு சிலருக்கு மட்டுமே இருக்கும் அடங்காத விருப்பத்தையும் அளவுக்கதிகமான தைரியத்தையும் காட்டினார். ஒருவேளை அவரைப் பற்றி வரலாறு எழுதப்படும் போது, பல விஷயங்கள் பேசப்படும், அடுத்தடுத்த தலைமுறைகளில் என்ன மாறுபட்ட கருத்துகள் பதிவு செய்யப்படலாம் என்று தெரியவில்லை. ஆனால் அவர் ஒரு மாபெரும் மனிதர். இரண்டாம் உலகப் போரில் அவர் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றாலும், இறுதியில் அவர் தனது பெரிய நாட்டைப் பொருளாதார வலுக்கொண்ட மக்கள் அரசாகக் கட்டியெழுப்பிய விதத்தில் நிச்சயம் நினைவுகூரப்படக்கூடிய ஒரு மனிதர் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள்.

அவர் செய்த அல்லது சொன்ன பல விஷயங்களை மக்கள் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது ஏற்காமல் இருக்கலாம். ஆனால் அவர் அந்த மகத்தான நாட்டை கட்டியெழுப்பினார், அது ஒரு மகத்தான சாதனை. மார்ஷல் ஸ்டாலினுடன் தொடர்புடையவர்கள் அல்லது மார்ஷல் ஸ்டாலின் செய்த வேலைகள் மற்றும் பின்னர் அவருடன் உடன்படாதவர்களை நான் அறிவேன். அவர்கள் அவருடன் உடன்படவில்லை என்றாலும், அவர்கள் தங்களுக்கும் அவருக்கும் இடையே எழுந்த தனிப்பட்ட பிணைப்பின் காரணமாகத் தனிப்பட்ட உணர்வுபூர்வமான உறவை உணர்ந்ததாக அவர்கள் என்னிடம் சொன்னார்கள். எனவே இதோ இந்த மனிதர் தனது வாழ்நாளில் பரந்த எண்ணிக்கையிலான மனிதர்களிடையே இந்தப் பாசத்தையும் போற்றுதலையும் உருவாக்கியவர், வரலாற்றின் இந்த இக்கட்டான காலகட்டத்தைக் கடந்து வந்த ஒரு மனிதர். அவர் சிலரின் கருத்தில் தவறு செய்தார் அல்லது அவர் வெற்றி பெற்றார் - அது முக்கியமற்றது - ஆனால் அவரது மாபெரும் அந்தஸ்தையும் அவரது வலிமையான சாதனைகளையும் அனைவரும் கண்டிப்பாக ஒப்புக்கொள்ள வேண்டும். எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் அவருக்கு நாம் அஞ்சலி செலுத்துவது சரியானது, ஏனென்றால் அந்தச் சந்தர்ப்பம் ஒரு மாபெரும் நபரின் மறைவு மட்டுமல்ல, ஒரு வகையில் வரலாற்றில் ஒரு சகாப்தத்தின் முடிவு.

எதிர்காலம் என்னவாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், சந்தேகத்திற்கு இடமின்றி, மார்ஷல் ஸ்டாலின் மறைந்தாலும், அவர்களின் மனதிலும் இதயத்திலும் அவர் கொண்டிருந்த பெரும் பிடியின் காரணமாக, அவரது செல்வாக்கும் நினைவாற்றலும் தொடர்ந்து மக்களின் மனதைப் பயிற்சி செய்து அவர்களை ஊக்குவிக்கும். உலக அரங்கில் அவருக்குப் பெரும் எதிரிகளாக இருந்த சிலர் உட்பட பல நபர்களால் அவர் விவரிக்கப்பட்டுள்ளார், மேலும் அந்த விளக்கங்கள் மாறுபடும் மற்றும் சில சமயங்களில் முரண்படுகின்றன. அவர்களில் சிலர் அவரை ஒரு வெளிப்படையான மற்றும் மென்மையான நபர் என்று விவரிக்கிறார்கள். மற்றவர்கள் அவரை கடினமான மற்றும் இரக்கமற்றவர் என்று விவரிக்கிறார்கள். ஒருவேளை இந்த அம்சங்கள் அனைத்தும் அவருக்குள் இருந்திருக்கலாம். எப்படியிருந்தாலும், ஒரு பெரிய உருவம் மறைந்துவிட்டது.

அவர் தர்க்கரீதியாகச் சோவியத் அரசின் தலைவராக இல்லை, ஆனால் மார்ஷல் ஸ்டாலின் ஒரு தேசத்தின் தலைவரை விட உயர்வானவராக இருந்தார். அவர் பதவியை வகித்தாலும் இல்லாவிட்டாலும், அவர் சிறந்தவராக இருந்தார், அனைவராலும் மதிக்கப்பட்டார். மேலும் அவரது செல்வாக்குப் பொதுவாக அமைதிக்கு ஆதரவாகப் பயன்படுத்தப்பட்டது என்று நான் நம்புகிறேன். போர் வந்ததும் தன்னை ஒரு சிறந்த போர்வீரனாக நிரூபித்தார். ஆனால் நமக்குக் கிடைத்த அனைத்துத் தகவல்களிலிருந்தும் நாம் ஒரு முடிவுக்கு வரமுடியும். அவர் தனது செல்வாக்கு முழுவதையும் அமைதியை நிலைநாட்டவே செலவழித்தார். பிரச்சினைகள் மற்றும் மோதல்களில் கூட சமாதானத்திற்கு ஆதரவாக இருந்தார். அவர் காலமானதால் அமைதிக்கு ஆதரவாக இருந்த அந்தச் செல்வாக்கு இனிக் கிடைக்காது என்று நான் உறுதியாக நம்புகிறேன். அவரது மரணம் இந்த பிரச்சினைக்குரிய உலகத்தைப் பற்றி சிந்திக்கவும், இந்த உலகில் அமைதியைப் பாதுகாக்கவும், மேலும் பேரழிவுகள் மற்றும் பேரழிவுகளைத் தடுக்க முன்பை விட அதிகமாக முயற்சி செய்யவும் வேண்டும் என்ற செய்தியைச் சொல்கிறது. அமைதியைப் பாதுகாத்துத் தக்கவைத்து, அதற்காக இடையறாது போராடிய அந்த உருவம் மறைந்து விட்டது.'

ஜவகர்லால் நேருவின் வார்த்தைகள், ஸ்டாலின் இந்தியாவால் எவ்வாறு பார்க்கப்பட்டார் என்பதற்கான ஒரு வரைபடத்தைத் தருகிறது. அமைதியின் பாதுகாவலராக ஸ்டாலினை நேரு நோக்கினார். குறிப்பாக இரண்டாம் உலகப் போரைத் தொடந்து வல்லாதிக்க நோக்கோடு மேற்குலக நாடுகள் கொலனியாதிக்கத்தைத் தொடர்வதற்கும் புதிய கொலனிகளை உருவாக்குவதற்கும் சோவியத் யூனியன் தடையாக இருந்தது. இது பல மூன்றாமுலக நாடுகளில் கொலனியாதிக்கத்திலிருந்தான விடுதலையைத் துரிதப்படுத்தியது. ஸ்டாலின் குறித்த நேருவின் இச்சித்திரம் முக்கியமானது.

1953 ஸ்டாலின் மறைந்ததையடுத்து அதிகாரத்துக்கு வந்த க்ருஷ்ச்சொவ் ஸ்டாலின் மீதான அவதூறுகளைப் பரப்பத் தொடங்கினார். இது மிகப்பெரிய குழப்பத்திற்கு வழிவகுத்தது. இந்தப் பின்புலத்தில் 1956-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ம் திகதி மாவோ, 'வரலாற்றில் ஸ்டாலினின் இடம்' என்ற தலைப்பில் ஒரு குறிப்பு எழுதினார். அக்குறிப்பு மிகவும் முக்கியமானது. ஸ்டாலின் குறித்த அவதூறுகளுக்கு எதிராக எழுதப்பட்ட முதலாவது குறிப்பாக இதைக் கொள்ளமுடியும். 1956 பெப்ரவரி மாதம் 24-ம் திகதி க்ருஷ்ச்சொவ் 20-வது காங்கிரஸில் ஸ்டாலின் மீதான குற்றச்சாட்டுகளை அடுக்கினார். இந்தப் பின்புலத்திலேயே இக்குறிப்பை நோக்க வேண்டும்.

'லெனினின் மரணத்திற்குப் பிறகு கட்சி மற்றும் அரசின் தலைமைத் தலைவராக ஸ்டாலின் ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்தப்பட்டு மார்க்சிசம்-லெனினிசத்தை வளர்த்தார். லெனினிசத்தின் பாரம்பரியத்தை அதன் எதிரிகளான ட்ரொட்ஸ்கியர்கள், ஜினோவிவிட்டிகள் மற்றும் பிற முதலாளித்துவ முகவர்களுக்கு எதிராகப் பாதுகாக்கும் போராட்டத்தில், ஸ்டாலின் மக்களின் விருப்பத்தையும் விருப்பங்களையும் வெளிப்படுத்தினார். தன்னை ஒரு சிறந்த மார்க்சிய-லெனினிசப் போராளியாக நிரூபித்தார். ஸ்டாலின் சோவியத் மக்களின் ஆதரவைப் பெற்று வரலாற்றில் முக்கியப் பங்காற்றியதற்குக் காரணம், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மற்ற தலைவர்களுடன் சேர்ந்து சோவியத் யூனியனில் சோசலிசத்தின் வெற்றியைக் கொண்டுவந்து நிலைமைகளை உருவாக்கியதுதான். ஹிட்லருக்கு எதிரான போரில் சோவியத் யூனியனின் வெற்றிக்காகச் சோவியத் மக்களின் இந்த வெற்றிகள் உலகின் தொழிலாள வர்க்கம் மற்றும் அனைத்து முற்போக்கான மனிதகுலத்தின் நலன்களுக்கு இணங்கின. எனவே ஸ்டாலினின் பெயர் உலகம் முழுவதும் பெரிதும் போற்றப்படுவது இயற்கையானது. ஆனால் லெனினிசக் கொள்கையைச் சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்தகைய உயர்ந்த மரியாதையைப் பெற்ற ஸ்டாலின், தனது சொந்தப் பங்களிப்பைப் பற்றிய தவறான புரிதலின் விளைவாக அவரது சில நடவடிக்கைகள் அடிப்படை மார்க்சிய-லெனினிசக் கருத்துகளுக்கு எதிரானவையாக இருந்தன.

வரலாற்றில் தலைவர்கள் பெரும்பங்கு வகிப்பதாக மார்க்சிய லெனினிஸ்டுகள் கருதுகின்றனர். மக்களின் நலன்களையும் விருப்பங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தவும், அவர்களின் வரலாற்றுப் போராட்டங்களில் முன்னணியில் நிற்கவும், அவர்களின் தலைவர்களாகப் பணியாற்றவும் கூடிய முன்னோடிகள் மக்களுக்கும் அவர்களது கட்சிகளுக்கும் தேவை. ஆனால் கட்சி அல்லது நாட்டின் எந்தத் தலைவரும் கட்சி மற்றும் வெகுஜனங்களுக்கு மத்தியில் தம்மை உயர்த்திக் கொள்ளும்போது, மக்கள் மத்தியில் இல்லாமல், அவர் மக்களிடமிருந்து தன்னை அந்நியப்படுத்தும்போது, அவர் அனைத்துத் துறையிலும், ஊடுருவும் நுண்ணறிவைக் கொண்டிருப்பதை நிறுத்துகிறார். இவ்வாறான ஒரு நிலையின் விளைவால், ஸ்டாலினைப் போன்ற மிகச்சிறந்த ஆளுமை கூட, சில முக்கியமான விஷயங்களில் உண்மைக்குப் புறம்பான, தவறான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்க முடியவில்லை. விவசாயத்தின் மேலும் வளர்ச்சி மற்றும் விவசாயிகளின் பொருளாதார நலன் ஆகியவற்றில் அவர் சரியான கவனம் செலுத்தத் தவறினார். அவர் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சில தவறான ஆலோசனைகளை வழங்கினார், குறிப்பாக, யூகோஸ்லாவியாவின் பிரச்சினையில் தவறான முடிவை எடுத்தார். இந்தப் பிரச்சினைகளில், ஸ்டாலின் அகநிலைவாதம் மற்றும் ஒருதலைப்பட்சமான தன்மைக்கு முழுப் பலியாகிப், புறநிலை யதார்த்தத்திலிருந்தும் வெகுஜனங்களிலிருந்தும் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டார்.

ஸ்டாலினின் படைப்புகள், முன்பு போலவே, இன்னும் தீவிரமாக ஆய்வு செய்யப்பட வேண்டும், அவற்றில் மதிப்புள்ள அனைத்தையும், ஒரு முக்கியமான வரலாற்று மரபு என்று நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும், குறிப்பாக அவர் லெனினிசத்தைப் பாதுகாத்து அனுபவங்களைச் சரியாகச் சுருக்கமாகக் கூறிய பல படைப்புகள் மிகவும் முக்கியமானவை. அவையே சோவியத் யூனியனைக் கட்டியெழுப்பின. எல்லாவற்றிலும் ஸ்டாலின் தவறு செய்ததாகச் சிலர் கருதுகின்றனர். இது ஒரு கடுமையான தவறான கருத்து. ஸ்டாலின் ஒரு சிறந்த மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட், அதே நேரத்தில் அவர் பிழைகள் என்று உணராமல் பல தவறுகளைச் செய்தார். நாம் ஸ்டாலினை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும், அவர் எங்கு சரி, எங்கு தவறு செய்தார் என்பதைச் சரியான மற்றும் முழுமையான பகுப்பாய்வு செய்து அதிலிருந்து பயனுள்ள படிப்பினைகளைப் பெற வேண்டும்.

அவர் செய்த சரியும் தவறும் - இரண்டும் - சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் நிகழ்வுகள் மற்றும் காலத்தின் முத்திரையைத் தாங்கியது. ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டால், சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கம் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பழமையானது மற்றும் அக்டோபர் புரட்சியின் வெற்றிக்கு முப்பத்தொன்பது ஆண்டுகள் மட்டுமே ஆகிறது. புரட்சிகரப் பணியின் பல துறைகளில் அனுபவம் இன்னும் போதுமானதாக இல்லை. பெரிய சாதனைகள் செய்தாலும் இன்னும் குறைகளும் தவறுகளும் இருக்கின்றன. இந்தப் பின்புலத்திலேயே ஸ்டாலின் நோக்கப்பட வேண்டும்.'

மாவோ இந்தக் குறிப்பில் சொல்கின்ற மூன்று விடயங்கள் கவனத்திற்குரியன. முதலாவது, ஸ்டாலின் ஒரு மிகச்சிறந்த மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட், அவர் அதை கோட்பாட்டு ரீதியிலும் நடைமுறையிலும் முன்னெடுத்தார். ஒருபுறம் லெனினிய மரபில் மார்க்சியத்தைக் கட்டியெழுப்பித் தத்துவார்த்த செழுமையுள்ளதாக மாற்றினார். அவ்வகையில் ஒரு கோட்பாட்டாளராவார். மறுபுறம் சோவியத் யூனியனில் அதை நடைமுறைப்படுத்தியதனூடு தத்துவார்த்தத்துக்கான ஒரு நடைமுறையைச் செயல்படுத்தினார், அதனூடு தத்துவத்திலிருந்து நடைமுறையையும், நடைமுறையிலிருந்து தத்துவத்தையும் வளர்த்தெடுத்தார். இது மார்க்சிய வரலாற்றின் மிகவும் முக்கியமானதும் தனிச் சிறப்பானதுமான பணியாகும். இரண்டாவது ஸ்டாலின் தவறுகள் இழைத்திருக்கிறார், அவை கோட்பாட்டு ரீதியானதாகவும் நடைமுறை ரீதியானதுமான தவறுகள். அவை விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட வேண்டும். மூன்றாவது, ஸ்டாலினை அவர் வாழ்ந்த வரலாற்றுப் பின்புலத்தில் வைத்தே மதிப்பிடவோ விமர்சிக்கவோ முடியும். ஏனெனில் சர்வதேச கம்யூனிச இயக்கம் ஸ்டாலினோடு தொடங்கவுமில்லை. முடியுவுமில்லை.

1950-களின் பின்பகுதியில் சோவியத் யூனியனுக்கும் மக்கள் சீனத்துக்கும் இடையில் தத்துவார்த்த முரண்பாடுகள் தோற்றம் பெற்றன. இவற்றின் மையமாகவும் ஸ்டாலினே இருந்தார். இரு தரப்புக்கும் இடையிலான கருத்து மோதல்கள் 'மாபெரும் விவாதம்' என்று அழைக்கப்பட்டன. அதில் 'ஸ்டாலின் பற்றிய பிரச்சினை மீது' என்ற தலைப்பில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எழுதிய கடிதம் மிகவும் முக்கியமானது. இக்கடிதம் சுட்டிய சில முக்கியமான விடயங்களை மட்டும் இங்கே சுருக்கமாகப் பார்க்கலாம்:

'தனி நபர் வழிபாட்டை எதிர்ப்பது' என்ற சாட்டில் தோழர் க்ருஷ்ச்சொவ் ஸ்டாலினை முழுவதுமாக மறுத்தபோது க்ருஷ்ச்சொவ் மிகவும் தவறாகவும் உள்நோக்கம் கொண்டவராகவும் இருந்தார் என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் கருதி வந்திருக்கிறது. ஸ்டாலினை எவ்வாறு மதிப்பிடுவது, ஸ்டாலினைப் பற்றி என்ன அணுகுமுறையை மேற்கொள்வது என்பது ஸ்டாலினை மட்டுமே மதிப்பிடும் ஒன்றல்ல, மிக முக்கியமாக, லெனினின் மறைவின் பின், சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தினதும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தினதும் வரலாற்று அனுபவங்களை எவ்வாறு தொகுப்பது என்ற பிரச்சினையாகும் என்ற நிலைப்பாட்டைச் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளது. ஸ்டாலினுடைய நிறைகளையும் குறைகளையும் பற்றி முழுமையான விஞ்ஞானரீதியான ஆய்வை வரலாற்றுப் பொருள்முதல்வாத அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வந்ததோடு, ஸ்டாலினை முழுவதுமாக மறுதலிக்கக்கூடிய அகவயமான பண்பாடற்ற கருத்துமுதல்வாத வரலாற்று ஆய்வுமுறையையும் தான்தோன்றித்தனமான வரலாற்றுப் புரட்டலையும் தொடர்ந்து எதிர்த்து வந்துள்ளது. ஸ்டாலின் சித்தாந்த, சமூக, வரலாற்று வேர்களைக் கொண்ட தவறுகளைச் செய்தார் என்பதை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி இடைவிடாது கூறி வந்துள்ளது. ஸ்டாலின் உண்மையாகவே புரிந்த தவறுகளை விமர்சிப்பது அவசியம். அடிப்படையில்லாமல் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை அல்ல. மேலும் ஒரு சரியான நிலைப்பாட்டில் இருந்து சரியான முறைகளில் அது செய்யப்பட வேண்டும். ஆனால் நாங்கள் ஸ்டாலின் பற்றிய முறையற்ற விமர்சனத்தையும் தவறான நிலைப்பாட்டில் இருந்து தவறான முறைகளில் செய்யப்படும் விமர்சனத்தையும் இடைவிடாது எதிர்த்து வந்துள்ளோம்.

ஸ்டாலினுடைய தகுதிகளும் தவறுகளும் வரலாற்று ரீதியான புறநிலை யதார்த்த வகைப்பட்டவை. இரண்டையும் ஒப்பிடும் போது அவருடைய நிறைகள் அவருடைய குறைகளை விட மிகுதியானவை என்பதைக் காணமுடிகிறது. அவர் பிரதானமாகச் சரியானவராக இருந்தார். அவருடைய தவறுகள் இரண்டாம் பட்சமானவையாகவே இருந்தன. ஸ்டாலினுடைய சிந்தனைகளையும் பணிகளையும் ஒட்டுமொத்தமாகத் தொகுத்துப் பார்க்கும்போது ஒவ்வொரு நேர்மையான கம்யூனிஸ்ட்டும் சந்தேகத்திற்கு இடமின்றி வரலாற்றுக்கு மதிப்புக் கொடுத்து ஸ்டாலினிடம் இருந்த பிரதானமானவற்றை முதலில் கவனிப்பர். எனவே ஸ்டாலினுடைய தவறுகள் சரியான வகையில் மதிப்பிடப்பட்டு விமர்சிக்கப்பட்டு களையப்படும் போது ஸ்டாலினுடைய வாழ்க்கையில் பிரதானமாக இருந்தவற்றைப் பாதுகாப்பதும், அவர் பாதுகாத்து வளர்த்த மார்க்சிய லெனினியத்தைப் பாதுகாப்பதும் அவசியமாகும். இரண்டாம் பட்சமானவையாக மட்டுமே இருந்த ஸ்டாலினுடைய தவறுகள் வரலாற்றுப் படிப்பினையாக எடுத்துக்கொள்ளப்படுமாயின் அது பயனள்ளதாக இருக்கும்.

ஸ்டாலினைப் பாதுகாப்பதாகச் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மீது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் குற்றஞ் சாட்டுகிறார்கள். ஆம், நாங்கள் ஸ்டாலினைப் பாதுகாக்கவே செய்கிறோம். க்ருஷ்ச்சொவ் வரலாற்றை திரித்து ஸ்டாலினை முழுவதுமாக மறுதலிக்கும் போது இயல்பாகவே நாங்கள் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் நலன்களையொட்டி ஸ்டாலினைப் பாதுகாக்க வேண்டிய தவிர்க்க முடியாத வரலாற்றுக் கடமையை ஏற்றுள்ளோம். லெனின் அருங்காட்சியகத்திலிருந்து ஸ்டாலினுடைய உடலை அப்புறப்படுத்த க்ருஷ்ச்சொவ் தனது உயர்ந்த பதவியைப் பயன்படுத்திக்கொள்ள முடிந்தது. ஆனால் அவர் எவ்வளவுதான் முயன்றாலும் உலகெங்குமுள்ள மக்கள் மனதிலிருந்தும் சோவியத் மக்களின் மனதிலிருந்தும் ஸ்டாலின் மீதான மாபெரும் பற்றுதலை நீக்குவதில் ஒருபோதும் வெற்றிபெற முடியாது. மார்க்சிய லெனினியத்தை ஒரு வழியிலோ அல்லது இன்னொரு வழியிலோ திரித்துப் புரட்டுவதற்கு க்ருஷ்ச்சொவ் தன்னுடைய உயர்ந்த பதவியைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். ஆனால் அவர் என்னதான் முயன்றாலும் உலகெங்குமுள்ள மார்க்சிய லெனினியவாதிகளால் பாதுகாக்கப்பட்ட, ஸ்டாலினால் பாதுகாக்கப்பட்ட மார்க்சிய லெனினியத்தைத் தூக்கியெறிவதில் ஒரு

போதும் வெற்றியடைய முடியாது.

இந்தக் கடிதம் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழுவின் பகிரங்கக் கடிதத்தின் மீதான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது விமர்சனமாக அமைந்தது. இக்கடிதம் மாவோ முன்னர் சுட்டிக்காட்டிய மூன்று விடயங்களை மீளவும் வலியுறுத்தியதோடு ஸ்டாலின் மீதான விமர்சனங்கள் எவ்வாறு நோக்கப்பட வேண்டும் என்பதற்கான அடிப்படையை வழங்கியது. இவ்விரு குறிப்புகளின் அடிநாதம் வரலாற்றில் ஸ்டாலினின் பங்கையும் அதன்வழிப்பட்டு அவரையும் விமர்சனத்திற்கு உள்ளாக்குவதாகும்.

## வரலாற்றின் நாயகனா? வரலாற்று நாயகனா?

ஸ்டாலின் என்ன செய்தார்?, ரஷ்யப் புரட்சியில் அவரது பாத்திரம் என்ன?, புரட்சி நிகழ்ந்தபோது ரஷ்யாவின் நிலை என்ன?, 1953-ல் அவர் மரணிக்கும் போது அந்நாட்டின் நிலை என்ன? போன்ற மிக அடிப்படையான கேள்விகளை நோக்குவது முக்கியம். முதலாம் உலகப்போர் தொடங்கிய போது, ரஷ்யப் பேரரசு, கல்வியறிவு, உற்பத்தித்திறன், தொழில்நுட்பம் மற்றும் உடல்நலன், பொதுச்சுகாதரம் ஆகியவற்றின் மிகக் குறைந்த அளவிலான பல்வேறு மொழிகளைப் பேசும் பல்வேறு மக்கள் வசிக்கும் பரந்த வளர்ச்சியடையாத நிலங்களைக் கொண்டிருந்தது. நிலப்பிரபுத்துவ சமூக உறவுகள் இன்னும் அந்த நிலங்களில் பலவற்றில் நிலவின. ஜாரிச இரகசியப் பொலிஸ், உத்தியோகபூர்வமாக ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவப் பயங்கரவாதிகளின் குழுக்கள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு பரந்த அதிகாரத்துவம் பட்டினி கிடக்கும் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் தொடர்ந்தும் வேலைவாங்குவதற்குப் பயன்பட்டது.

முதலாம் உலகப்போர் இந்தப் பிரச்சினைகளை நெருக்கடி நிலைக்குக் கொண்டு வந்தது. இலட்சக்கணக்கானோர் கந்தல் துணிகளை அணிந்து, வெறும் வயிற்றுடன், அடிக்கடி எதிரில் இருப்பவர்கள் எப்போது விழுவார்கள் என்று காத்திருந்து இறந்தனர். 1917-ல் போல்ஷிவிக்குகள் அதிகாரத்தைக் கைப்பற்றியபோது, ரஷ்யாவின் பெரிய நகரங்கள் உட்பட முழுப் பரந்த ரஷ்யப் பேரரசும் குழப்பத்தில் இருந்தது.

புரட்சியின் பின்னர் புதிய அரசாங்கம் ஆட்சி செய்யத் தொடங்குவதற்கு முன் மிகப்பாரிய நெருக்கடியை எதிர்கொண்டது. பழைய ஆட்சியின் நிலப்பிரபுகள், முதலாளிகள் மற்றும் இராணுவத் தளபதிகள் ஆகியோர் பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான் ஆகியவற்றின் இராணுவப் படைகளுடன் சேர்ந்து புரட்சியைத் தோற்கடிக்க முயன்றார்கள். அவர்கள் திரட்டக்கூடிய அனைத்துப் படைகளையும் உடனடியாக ஒன்றிணைத்தனர். போலந்து, அமெரிக்கா மற்றும் பிற முதலாளித்துவ நாடுகளில் இருந்து கூடுதல் இராணுவக் குழுக்கள் இவர்களுடன் இணைந்தன. சைபீரியாவிலிருந்து ஐரோப்பிய ரஷ்யா வரை, வெண்கடல் முதல் உக்ரைன் வரை மூன்று ஆண்டுகள் ஒரு மோசமான உள்நாட்டுப் போர் மூண்டது. இப்போரே புரட்சியின் பின்னர் சோவியத் புரட்சியாளர்கள் எதிர்நோக்கிய முதலாவதும் முக்கியமானதுமான சவாலாகும்.

1920-ல் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தபோது, விவசாய உற்பத்தியானது போருக்கு முந்தைய வறுமையால் பாதிக்கப்பட்ட கிராமப்புறங்களின் பாதிக்கும் குறைவாக இருந்தது. தொழில்துறையின் நிலைமை இன்னும் மோசமாக இருந்தது. பல சுரங்கங்கள் மற்றும் தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டன. போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டது. மூலப்பொருட்கள் மற்றும் ஏனைய உற்பத்திப் பொருட்களின் இருப்புகள் தீர்ந்துவிட்டன. பெரியளவிலான தொழில்துறையின் உற்பத்தியானது போருக்கு முன்பு இருந்ததினை விட ஏழில் ஒரு பங்காகக் குறைந்தது. மேலும் வெளிநாட்டு இராணுவத் தலையீட்டிற்கு எதிரான போராட்டம் இன்னும் இரண்டு வருடங்கள் தொடர வேண்டியிருந்தது. ஜப்பானிய மற்றும் அமெரிக்கத் துருப்புகள் சைபீரியாவின் ஒரு பகுதியை இன்னும் வைத்திருந்தன. முக்கிய துறைமுக நகரமான விளாடிவோஸ்டாக் அவர்கள்வசம் இருந்தது. இது 1922 வரை மீண்டும் கைப்பற்றப்படவில்லை.

1922-ல் லெனினுக்கு முதல் பக்கவாதம் ஏற்பட்டது. இந்தக் கட்டத்தில் இருந்து, மத்திய குழுவின் பொதுச் செயலாளராக இருந்த ஸ்டாலின், கட்சியின் முதன்மைத் தலைவராகச் செயற்படத் தொடங்கினார். ஸ்டாலினின் கொள்கைகள் லெனின் இறந்த ஆண்டான 1924-ம் ஆண்டிலேயே செயற்படுத்தப்பட்டன, மேலும் 1927 வாக்கில் பல்வேறு எதிர்ப் பிரிவுகள் தோற்கடிக்கப்பட்டன. ஸ்டாலினை நாம் மதிப்பிடுவதாயின், 1953-ல் அவர் இறக்கும் போதான சோவியத் யூனியனை 1920-களின் ஆரம்ப மற்றும் நடுப்பகுதியில் இருந்த சோவியத் யூனியனின் நிலைமைகளுடன் ஒப்பிட வேண்டும்.

1920-களின் முற்பகுதியில் சோவியத் யூனியன் பற்றாக்குறையின் நிலமாக இருந்தது. பசி எல்லா இடங்களிலும் இருந்தது. வெகுஜன பஞ்சம் கிராமப்புறங்களில் பெரும்பகுதி முழுவதும் பரவியது. தொழிற்துறை உற்பத்தி மிகவும் குறைவாக இருந்தது, மேலும் தொழிற்துறையின் தொழில்நுட்ப நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது, விவசாயத்தை இயந்திரமயமாக்கும் சாத்தியக்கூறுகள் குறைவாகவே இருந்தது. ஆயுதப் படைகளில் கடுமையான கிளர்ச்சிகள் வெடித்தன. குறிப்பாக 1921-ல் க்ரோன்ஸ்டாட் காரிஸனில் வெடித்த கிளர்ச்சி கவனிப்புக்குரியது. 1924 அளவில் பெரியளவிலான விவசாயிகள் கிளர்ச்சிகள் வெடித்தன, குறிப்பாக ஜார்ஜியாவில் பெரிய நகரங்களுக்கு வெளியே மின்சாரம் இல்லை. விவசாயம் என்பது கிராமப்புற முதலாளிகளால் (குலாக்கள்) கைப்பற்றப்பட்ட விவசாயிகள் மற்றும் நடுத்தர அளவிலான பண்ணைகளை அடிப்படையாகக் கொண்டது. நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சுகாதாரப் பாதுகாப்பு கிட்டத்தட்ட இல்லாதிருந்தது. நவீன தொழில்கள், விவசாயம், சுகாதாரம் மற்றும் கல்வி வளர்ச்சிக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன்கள் ஒரு சிலரின் கைகளில் குவிந்தன. அவர்கள் பெரும்பாலும் சோசலிசத்தை எதிர்த்தார்கள். அதே நேரத்தில் பெரும்பான்மையான மக்கள் கல்வியறிவற்றவர்களாகவும், கல்வியைப் பற்றிச் சிந்திக்க முடியாதவர்களாகவும் இருந்தார்கள். சோவியத் யூனியன் தன்னைச் சுற்றியுள்ள சக்திவாய்ந்த முதலாளித்துவ நாடுகளால் கட்டுப்படுத்தப்பட்டு உலகில் தனிமைப்படுத்தப்பட்டது, பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டு இந்தச் சிவப்பு அச்சுறுத்தலைத் துடைப்பதற்கான உறுதிமொழிகளில் ஒருவரையொருவர் மிஞ்சும் அளவுக்கு முதலாளித்துவ நாடுகள் முண்டியடித்தன. அனைவரும் அதிகாரப்பூர்வமாகச் சோவியத் யூனியனை அங்கீகரிக்க மறுத்தனர். பிரித்தானியா தலைமையில்

ஐரோப்பா முழுவதும் எதிர்ப்புரட்சி உச்சத்தில் இருந்தது. அமெரிக்காவில் தொழிலாளர் சங்கங்களை அடித்து நொறுக்க ரஷ்யப் புரட்சி 'சிவப்பு அச்சுறுத்தல்' எனப்பட்டு ஒரு சாக்காகப் பயன்படுத்தப்பட்டது. முதலாளித்துவ உல கின் பல பகுதிகளில், குறிப்பாக ஜப்பான் மற்றும் இத்தாலி யில் 1924-ல் முசோலினி சர்வாதிகார அதிகாரத்தை எடுத்துக் கொண்டார் - பாசிசம் ஆட்சியதிகாரமானது. உலகின் பெரும் பாலான பகுதிகள் ஐரோப்பிய சக்திகளின் கொலனிகளையும் நவ-கொலனிகளையும் கொண்டிருந்தன.

1953-ல் ஸ்டாலின் இறந்தபோது, சோவியத் யூனியன் உல கின் இரண்டாவது பெரிய தொழிற்துறை, அறிவியல் மற்றும் இராணுவ சக்தியாக இருந்தது. மேலும் இந்த எல்லாப் பகு திகளிலும் அமெரிக்காவை முந்துவதற்கான தெளிவான அறி குறிகளைக் காட்டியது. சோவியத் யூனியன் பேரழிவுகரமான இழப்புகளைச் சந்தித்த போதிலும் ஜெர்மனி, ருமேனியா, ஹங்கேரி மற்றும் பல்கேரியாவின் பாசிசச் சக்திகளைத் தோற்கடித்தது. சோவியத்தின் மக்கள் ஒன்றுபட்டனர். பட்டினி மற்றும் கல்வியறிவின்மை சோவியத் முழுவதிலிருந்து அகற் றப்பட்டது. விவசாயம் முழுவதுமாக ஒருங்கிணைக்கப்பட்டு வினைத்திறனான உற்பத்தி நடைமுறையில் இருந்தது. நோய்த்தடுப்பும் சுகாதாரப் பாதுகாப்பும் உலகில் மிகச் சிறந்ததாக இருந்தது. மேலும் விதிவிலக்காக உயர்தர மருத் துவச் சிகிச்சை அனைத்துக் குடிமக்களுக்கும் இலவசமாகக் கிடைத்தது. அனைத்து நிலைகளிலும் கல்வி இலவசமாக இருந்தது. வேறெந்த நாட்டையும் விட அதிகமான புத்தகங் கள் சோவியத் யூனியனில் வெளியிடப்பட்டன. வேலையில்லா மல் யாரும் திண்டாடவில்லை.

1922-45 காலப்பகுதியில், உலகின் பிற பகுதிகளில் முக்கிய பாசிசச் சக்திகள் தோற்கடிக்கப்பட்டது மட்டுமல்லாமல், எல்லா இடங்களிலும் புரட்சியின் சக்திகள் அதிகரித்தன. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, வெளிநாட்டு ஏகாதிபத்தியம், உள் நாட்டு நிலப்பிரபுத்துவம் மற்றும் முதலாளித்துவத்தைத் தோற்கடித்து உலக மக்கள்தொகையில் நான்கில் ஒரு பங் கைச் சோசலிசப் பாதைக்கு இட்டுச் சென்றது. கொரியாவின் பாதி சோசலிசமாக இருந்தது. வியட்நாமில், ஏற்கனவே ஜப் பானிய ஏகாதிபத்தியத்தைத் தோற்கடித்த வலுவான சோசலி சச் சக்தி, பிரெஞ்சு சாம்ராஜ்யத்தின் தோற்கடிக்கப்பட்ட இரா ணுவத்திற்கான இறுதி முடிவை எழுதியது. கிழக்கு ஐரோப் பாவின் முடியாட்சிகள் மற்றும் பாசிச இராணுவ சர்வாதிகா ரங்கள் கம்யூனிஸ்டுகள் மற்றும் சோவியத் இராணுவத்தின் தலைமையிலான சக்திகளின் கூட்டினால் அழிக்கப்பட்டன. அனேகமாக எல்லா இடங்களிலும் இப்போது உலகப் புரட் சியை ஆதரித்த அரசாங்கங்கள் உள்ளன. குறைந்தபட்சம் அவை தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் அரசாங்கங் கள் என்று உரிமை கோருகின்றன. பிரான்ஸ் மற்றும் இத் தாலி ஆகிய இரு நாடுகளிலும் மிகப்பெரிய அரசியல் கட்சி யாகக் கம்யூனிஸ்ட் கட்சி வளர்ச்சியடைந்திருந்தது. ஐரோப்பி யக் கொலனிகள் மற்றும் புதிய கொலனிகள் மத்தியில் தேசிய விடுதலை இயக்கங்கள் முன்னோக்கி எழுச்சி பெற் றன. 1946 மற்றும் 1949-க்கு இடையில் மட்டும், பர்மா, இந் தோனேஷியா, இந்தியா, பாகிஸ்தான், லாவோஸ், லிபியா, இலங்கை, ஜோர்டான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய உலக மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பகுதியை உள்ளடக்கிய நாடுகளால் குறைந்தபட்சம் பெயரளவிலான தேசிய சுதந்தி ரம் அடையப்பட்டது. ஆப்பிரிக்கக் கண்டம் முழுவதும் விடு தலைப் போராட்டங்களால் அதிர்ந்தது.

1920-களின் தொடக்கத்தில் அல்லது நடுப்பகுதியில் இருந்த தைவிட 1953-ல் கம்யூனிச உலகப் புரட்சிக்கான நிலைமை ஒப்பிடமுடியாத அளவிற்கு முன்னேறியிருந்தது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். நிச்சயமாக, ஸ்டா-லின் குறித்த மதிப்பீட்டைச் செய்யும் போது இது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இந்த விடயங்களைப் புறக்கணித்து விட்டு ஸ்டாலினை மதிப்பீடு செய்ய முடியாது.

## நிறைவுக் குறிப்புகள்:

ஸ்டாலின் பற்றிய மதிப்பீடுகள் அவசியமானவை, தவிர்க்கவி யலாதவை. இருபதாம் நூற்றாண்டின் தவிர்க்கவியலாத ஆளுமை பற்றிய விரிவான பார்வை அவசியம் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கவியலாது. ஆனால் அம்மதிப்பீடுக ளின் நோக்கம் என்ன?, அவை வரலாற்றை வரலாறாக நோக் குகின்றனவா அல்லது கட்டமைக்கப்பட்ட பொய்கள், அவதூ றுகளின் வழி நோக்குகின்றனவா? என்பதே பிரதான வினாவா கும். ஸ்டாலினின் ஒவ்வொரு சிந்தனையும் அவரே ஒப்புக் கொள்வது போல, அவரது வரலாற்று இருப்பிலிருந்து அவ ருக்கு வந்தது, இது அவருக்குக் கிடைக்கும் யோசனைக ளுக்கும் வரம்புகளை நிர்ணயிக்கிறது. அவர் பாரிஸ் கம்யூ னின் அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ள வரலாற்றைப் படித்தார். ஆனால் சீனக் கலாசாரப் புரட்சியின் படிப்பினைக ளிலிருந்து பயனடைந்தமைக்கான ஒரு முழுமையான சித்தி ரத்தைப் பார்க்க முடியவில்லை. மேலும் அவர் எடுத்த முடி வுகள், நாம் பார்க்கப்போவது போல, இருபுறமும் நிலை யான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளைக் கொண்டிருந் தன. ஸ்டாலினை மதிப்பிடுவதற்கு, சோவியத் ஒன்றியம் மற் றும் உலகின் பிற பகுதிகளின் நிலையை அவர் தலை மைக்கு வந்ததும், அவர் இறந்ததும் ஆகிய இரண்டு காலப் பகுதிகளின் அடிப்படையில் ஒப்பிடுவதே சிறந்த வழி: அத் தகைய ஒப்பீடு இல்லாமல், மனித முன்னேற்றத்திலிருந்து அவர் என்ன பங்களித்தார் அல்லது பங்களித்திருக்கலாம் என்பதை அளவிட முடியாது. அவர் ஆட்சிக்கு வந்ததை விட, அவர் இறந்தபோது சோவியத் மக்களின் நிலை மிகவும் சிறப்பாக இருந்திருந்தால், அவர் அவர்களின் வாழ்க்கையை மோசமாக்கியிருக்க முடியாது. அவர் இல்லாமல் அவர்கள் இன்னும் முன்னேறியிருப்பார்கள் என்று சொல்வது மோசடியா னது என்பதை சோவியத்தின் வரலாறு தெளிவுபடுத்துகிறது. உலகப் புரட்சிக்கும் இதே நிலைதான். அவரது தலைமை யின் பல தசாப்தங்களில் அது பின்வாங்கியதா அல்லது அது முன்னேறியதா? இக்கேள்விகள் புரட்சிகரத் தலைவராக ஸ்டாலினின் மகத்துவமான பங்களிப்பை அடுத்த தளத்திற்கு நகர்த்துகின்றன. அதேவேளை அவர்மீதான அவதூறுகளுக் கான காரணங்களையும் இலகுவில் விளங்கவைக்கின்றன.

மிகச்சிறந்த திறன் கொண்ட ஒரு கோட்பாட்டாளராக மட்டு மின்றி, கம்யூனிஸ்ட் இயக்கத்தின் திறமையான நடைமுறை அமைப்பாளராகவும் இருந்த ஸ்டாலினை மார்க்ஸ், ஏங்-கெல்ஸ் மற்றும் லெனின் ஆகியோருடன் நினைவுகூர வேண் டும். உலகின் முதல் சோசலிச அரசை லெனின் நிறுவினார் என்றால், அதை அமைதி மற்றும் சோசலிசத்தின் கோட்டை யாக ஒருங்கிணைத்தவர் ஸ்டாலின். உழைக்கும் வர்க்கத்தை

யும் மக்களையும் வெறுப்பவர்கள், அமைதியை வெறுப்பவர்கள், சர்வதேசச் சகோதரத்துவத்தின் கருத்தாக்கத்தை வெறுத்து அஞ்சுபவர்கள், அமைதியின் நாயகனாகச் சர்வதேசச் சகோதரத்துவத்தின், தொழிலாளி வர்க்கத்தின் நாயகனான ஸ்டாலினை எப்போதும் வெறுத்து அஞ்சுகிறார்கள். அதன் வழிப்பட்ட அவர்மீதான அவதூறுகளும் கட்டுக்கதைகளும்.

ஸ்டாலின் குறித்து மூன்றாமுலகத்தினர் அனைவரும் சொல்பவற்றைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறவியலும். ஸ்டாலின் ஒரு பெரிய மனிதர் இருபதாம் நூற்றாண்டில் அவரது அந்தஸ்த்தை அடைந்தது இன்னும் மிகச் சிலரே. அவர் எளிமையாகவும், அமைதியாகவும், தைரியமாகவும் இருந்தார். அவர் மிக அரிதாகவே தனது சமநிலையை இழந்தார் அவர் பிரச்சினைகளை மெதுவாகச் சிந்தித்துத், தெளிவாகவும் உறுதியாகவும் தனது முடிவுகளை எடுத்தார். ஆடம்பரத்திற்கு ஒருபோதும் அடிபணியவில்லை. மிக எளிய குடும்பத்தில் இருந்து வந்திருந்தாலும் பெரியோர் எனப்பட்டோர் முன் அமைதியாகப் பதட்டமின்றி இருந்தார். அவர் சாதாரண மனிதர்களை அறிந்திருந்தார், அவர்களுடைய பிரச்சினைகளை உணர்ந்தார். அவர்களுக்காக உழைத்தார்.

ஸ்டாலின் மரபுவழி கற்றவர் அல்ல. ஆனால் அதைவிட அதிகம் தெரிந்திருந்தார். ஆழ்ந்து சிந்தித்து, புரிந்து படிக்கும் திறன் அவருக்குண்டு. அறிவு எங்கிருந்து வந்தாலும் அதைக் கேட்பவர். அவர் மீதான தாக்குதல்கள் தனது நம்பிக்கைகளிலிருந்து விரட்ட அவர் என்றும் அனுமதிக்கவில்லை. ரஷ்யாவில் இகழப்பட்ட சிறுபான்மையினரில் ஒருவராக அவர் இருந்தார். அவர் ரஷ்யாவில் நிலவிய இனரீதியான தப்பெண்ணத்தை வென்று அவர்களின் தனித்துவத்தை அழிக்காமல் அதன் 140 குழுக்களையும் இணைத்து ஒரு தேசத்தை உருவாக்கிப் பேணிக்காத்தார்.

அதிகாரத்தில் இருந்தபோது மூன்று பெரிய முடிவுகள் ஸ்டாலினை எதிர்கொண்டன. அவர் அவற்றை அற்புதமாகச் சந்தித்தார்: முதலில், விவசாயிகளின் பிரச்சினை, பின்னர் மேற்கு ஐரோப்பியத் தாக்குதல். இறுதியாக இரண்டாம் உலகப் போர். புரட்சியைச் சிதைக்கும் விவசாயப் பிரச்சினையை இலாவகமாகக் கையாண்டார். பட்டினியை ஒழித்து கூட்டுப் பண்ணைகளின்வழி விவசாயத்தை வினைத்திறனுடையதாக்கினார். இதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் போதே அந்நியத் தலையீடு வந்தது, அனைத்து நாடுகளின் தொடர்ச்சியான தாக்குதல், அச்சுறுத்தல் அனைத்தையும் எதிர்கொண்டார். 1930-களின் உலகப்பொருளாதார மந்தத்தால் இதன் கடுமை குறைவாக இருந்தது. அதேவேளை மேற்கு ஐரோப்பாவும் அமெரிக்காவும் சோவியத் யூனியனைப் பாசிசத்திற்குக் காட்டிக்கொடுக்கத் தயாராக இருந்தன. ஆனால் முரண்நகையாக இரண்டாம் உலகப்போரில் அவர்கள் சோவியத் யூனியனிடமே உதவி கேட்க வேண்டியிருந்தது. ஸ்டாலினைவிட வேறு யாருமாக இருந்திருந்தால் ஜேர்மனியைப் பழிவாங்க வேண்டும் என்று கோருவர், ஆனால் அவர் தனது தாய்நாட்டிற்கு நீதி கேட்கும் அறிவையும் தீர்க்கதரிசனத்தையும் பெற்றிருந்தார். இதை ரூஸ்வெல்ட் வழங்கினார் ஆனால் சர்ச்சில் பின்வாங்கினார். பிரிட்டிஷ் பேரரசு முதலில் ஆப்பிரிக்கா மற்றும் தெற்கு ஐரோப்பாவில் தன்னைக் காப்பாற்ற முனைந்து கொண்டிருந்தது, அதே நேரத்தில் ஹிட்லர் சோவியத்துகளை அடித்து நொறுக்கிக்கொண்டிருந்தார்.

இரண்டாம் முனை தடுமாறியது, ஆனால் ஸ்டாலின் தடுமாறாமல் முன்னேறினார். ஹிட்லர் மற்றும் முசோலினியின் சர்வாதிகாரத்தைத் தகர்க்க அவர் சோசலிசத்தின் முழுமையான அழிவைப் பணயம் வைத்தார். ஸ்டாலின் கிராட்டிற்குப் பிறகு, மேற்கத்திய உலகம் அழுவதா அல்லது பாராட்டுவதா என்று தெரியவில்லை. சோவியத் யூனியனின் வெற்றியின் விலை பயங்கரமானது. இன்றுவரை அவ்வெற்றியின் காயம், இழப்பு, தியாகம் பற்றி வெளியுலகத்திற்குத் தெரியாது. அவரது அமைதியான, கண்டிப்பான தலைமைக்கு, ரஷ்யாவின் அனைத்து மக்களும் மனமார்ந்த நன்றிகளையும் அன்பையும் வெளிப்படுத்தினார்கள். இதன்வழிப்பட்டே ஸ்டாலின் சோவியத் மக்களால் வானுயற உயர்ந்தவராகக் கருதப்பட்டார்.

ஸ்டாலின் மறைந்த போது மாவோ எழுதிய அஞ்சலிக் குறிப்பின் சில வரிகளுடன் இதை நிறைவுசெய்வது பொருத்தம்:

‘நமது சகாப்தத்திற்குத் தோழர் ஸ்டாலின் தனது தத்துவார்த்தச் செயற்பாடுகள் மற்றும் நடைமுறை மூலம் ஆற்றிய பங்களிப்பு அளவிட முடியாதது. தோழர் ஸ்டாலின் நமது புதிய யுகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். அவரது செயற்பாடுகள் சோவியத் மக்களையும் அனைத்து நாடுகளின் உழைக்கும் மக்களையும் முழு உலகச் சூழலையும் மாற்றிவிட்டன. அதாவது, நீதி மற்றும் மக்கள் ஜனநாயகம் மற்றும் சோசலிசத்தின் தேவை என்பவற்றை உலகம் உணர்ந்திருக்கிறது. உலகின் ஒரு மகத்தான பிராந்தியத்தில், 800 மில்லியனுக்கும் அதிகமான மக்களை - பூமியின் மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பகுதியில் சோசலிசம் மகத்தான வெற்றியை அடைந்துள்ளது. மேலும், இந்த வெற்றியின் தாக்கம் தினமும் உலகின் மூலை முடுக்கெல்லாம் பரவி வருகிறது.

லெனினின் மரணத்திற்குப் பிறகு, தோழர் ஸ்டாலின் சோவியத் மக்களை ஒரு அற்புதமான சோசலிசச் சமுதாயமாக உலகின் முதல் சோசலிச அரசாகக் கட்டியெழுப்பினார், அவர் லெனினுடன் சேர்ந்து அக்டோபர் புரட்சியில் தலைமைப்பங்கு வகித்தார். சோவியத் யூனியனில் சோசலிசக் கட்டுமானத்தின் வெற்றி சோவியத் யூனியனின் மக்களுக்கு மட்டுமல்ல, முழு உலக மக்களுக்கும் பொதுவான வெற்றியாகும். முதலாவதாக, இந்த வெற்றி மார்க்சிய லெனினிசத்தால் எவ்வாறு உலகெங்கிலும் உள்ள உழைக்கும் மக்களுக்கு உறுதியான கல்வியறிவு வழங்கவும், ஒரு நல்ல வாழ்க்கையை நோக்கி முன்னேறவும் முடியும் என்பதை நேரடியாக நிரூபித்தது. இரண்டாவதாக, இந்த வெற்றி இரண்டாம் உலகப்போரின் போது மனிதகுலத்தைப் பாதுகாத்தது. பாசிச மிருகத்தை முறியடிக்கும் வலிமை பெற்றிருந்தது. பாசிச எதிர்ப்புப் போரில் கிடைத்த வெற்றியும், வெற்றிகரமான மக்கள் நல அரசை பல்வேறு இனக்குழுக்களைக் கொண்ட சோவியத் ஒன்றியமாகக் கூட்டிணைத்துக் கட்டிய வெற்றிகளின் பெருமையும் நமது மாபெரும் தோழர் ஸ்டாலினுக்குத்தான் உரித்தாக வேண்டும்.’



meenilankco@thaiveedu.com

# குறைவாக அறியப்பட்ட மட்டக்களப்பின் குன்றுகளும் தாழ்நில ஊவாவும்




1907-ஆம் ஆண்டின் முற்பகுதியில், மட்டக்களப்பு மாவட்டத்தின் பாணமைப் பற்றுப் பகுதியில் குறைவாக அறியப்பட்டிருந்த குன்றுகளை நில அளவை செய்யும் பொறுப்பில் நானும் இருந்ததால் அவைகளை போய்ப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்கும் வாய்த்தது. கூடவே கிழக்கு மாகாணம் மற்றும் ஊவா மாகாணம் ஆகியவற்றின் எல்லைப் பகுதியில் இருக்கும் இரு குன்றுகளான கோவிந்த ஹெல (வெஸ்ட்மினிஸ்டர் அப்பே) மற்றும் டெயிகல் ஹெல என்பனவற்றைப் பார்வையிடவும் நேர்ந்தது.

எனக்கு அங்கு பரந்து காணப்பட்ட தாவர வர்க்கங்களை நுணுக்கமாக நோக்கவும் தொல்லியல் எச்சங்களைப் பார்வையிடவும் சந்தர்ப்பம் வாய்த்தது. அவை பற்றி ஆழமாக ஆய்வு செய்ய எனக்கு போதிய அவகாசம் வாய்க்கவில்லை. எனினும் றோயல் ஆசியாறிக் சொசைற்றியின் சஞ்சிகை வாசகர்களுக்கு எனது அவதானிப்புகள் சுவாரஸ்யமாக இருக்கும் என்பதால் அவை பற்றி இங்கு எழுத முற்படுகிறேன். அது ஆய்வாளர்களுக்கு உறுதுணையாக இருப்பது மட்டுமன்றி தெளிவை நோக்கி அவர்களை இழுத்து செல்லும் என்றும் நம்புகிறேன்.

நான் சியம்பலாண்டுவ என்று அழைக்கப்படும் கொஸ்லாண்ட என்ற இடத்திலிருந்து மார்ச் 2-ம் திகதி புறப்பட்டு எங்களது வேலை ஆரம்பமாகும் இடமான பொது வேலைத் திணைக்கள பங்களாவுக்கு 5-ம் திகதி வந்து சேர்ந்தேன்.

சியம்பலாண்டுவ, ஹெட ஒயாவின் கிழக்கு கரையில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமமாகும். திருத்தமில்லாமல் கட்டப்பட்ட சில குடிசைகள் அங்கு காணப்படுகின்றன. அதன் தெற்குப் பக்கத்தில் கற்பாறையிலான டெயிகல்-ஹெல என்னும் குன்று ஒன்று உள்ளது. இது முக்கோண முக்கியத்துவமுடையது.

நான் சியம்பலாண்டுவவில் இருந்து வடக்கை நோக்கி கனன் கெட்டிய கிராமத்துக்கு சென்று அங்கிருந்து வடமேற்கில் ‘வெஸ்மினிஸ்டர் அப்பே’யின் அடிவாரத்தில் உள்ள பாழடைந்த இடமான போயெல்லவுக்கு சென்றேன். அங்கே மிக ஐதாக சனங்கள் வாழ்கிறார்கள். அவர்கள் சேனைச் செய்கையை வாழ்வாதாரமாக கொண்டவர்கள். அக்கிராமத்தின் அருகில் உள்ள வேட ரட்டையில் சிலர் தோட்டப் பயிர்கள் செய்து வருகிறார்கள்.

அங்கே வேடர் என்று யாரும் சுற்று வட்டாரத்தில் இல்லையாதலால் அங்குள்ளவர்களை சுத்தமான சிங்களவர்கள் என்று தான் கூறத் தோன்றுகிறது. வேடர்கள் என்று சொல்லப்படுபவர்கள் ஒரு காலத்தில் அங்கே பள்ளத்தாக்கில் இருந்தனராம். அவர்கள் பாதை ஒன்றை ஆக்கியிருந்தனர். அந்நியர்கள் யாரும் இப்பாதை வழியே செல்ல நேர்ந்தால் வெற்றிலைப் பகழி ஒன்றையோ, மான் அல்லது பன்றி இறைச்சியையோ அவர்களுக்கு கொடுத்தல் வேண்டுமாம். அப்படி செய்தால் மாத்திரமே அவரை அவ்வழியால் செல்ல அனுமதிப்பார்களாம். இங்கிருக்கும் எழுபத்தைந்து வயதான கோரல இங்கே ஒரு காலத்தில் தெரணிய கல வேடர்கள் வசித்தனர் என்று கூறுகிறார். அவர்களைப் பற்றி அவர் தரும் விபரம் நொக்ஸ் அல்லது போர்த்துக்கீச எழுத்தாளர்கள் தருவதை ஒத்திருக்கிறது. ஆயினும் அவர் விபரிப்பில் மிகை இல்லாமல் இல்லை. உதாரணத்துக்கு அவர் வேடர்களின் நகரம் பாறைகள் நிறைந்த மலைகளின் நடுவில் இருந்ததென்றும், அதை எளிதில் அடைய முடியாதபடி அதன் வாசலில் ஒரு நீர்வீழ்ச்சி இருந்ததென்றும் கூறுகிறார். இவைகள் நமைுறைக்கும் புவியியல் அமைவுக்கும் பொருத்தமற்றவைகளாகும்.

இதைப் போலவேதான் அவர் கூறும் உண்மையான வேடர்கள் சிரிக்கமாட்டார்கள் என்பதும். இவ்விபரங்கள் பல வருடங்களுக்கு முன்பு றோயல் ஏசியாடிக் சொசைற்றியில் சமர்பிக்கப்பட்ட ஸ்டிபனின் கட்டுரையை ஒத்திருக்கிறது. இது பற்றி பலர் சந்தேகம் தெரிவித்திருக்கின்றனர்.

வேடர்களின் இருப்பு பற்றி எந்த தடயமும் இங்கே காணப்படவில்லை. கோவிந்த-ஹெல என்ற பெயரிலும்கூட முதற் பகுதி தமிழாகவும் கடை பகுதி சிங்களமாகவும் காணப்படுகிறது.

### கோவிந்த ஹெல:

கோவிந்த ஹெல அல்லது ஐரோப்பியர்களால் ‘வெஸ்மினிஸ்டர் அப்பே’ என்று நவீன பெயர் சூட்டி அழைக்கப்படும் பாறைப்பாங்கான குன்று கணிசமாக உயரமுடையது. இதன்

வடக்கு பக்கத்தில் வட்டினா-ஹெல குன்றும், தெற்குப் பக்கத்தில் டெயிகல்-ஹெல குன்றும் உள்ளன. இந்த மூன்று குன்றுகளின் உச்சிகளும் கிட்டத்தட்ட ஐந்து மைல் வித்தியாசத்தில் ஒரே நேர் கோட்டில் அமைந்துள்ளன. இவற்றில் வட்டினா-ஹெலவின் உச்சிதான் உயரமானது. வெஸ்மினிஸ்டர் அப்பேயின் உயரம் கடல் மட்டத்தில் இருந்து 1830 அடிகளாகும். கடலுக்கும் குன்றுக்கும் இடையே இருபது மைல் தூரம் உள்ளது. மகாவம்சத்தில் விபரிக்கப்பட்டபடி இவற்றை விட வேறு முக்கியமான மலைகள் இப்பகுதியில் இல்லை.

வெஸ்ட்மினிஸ்டர் அப்பேயின் சரிவில் பல மடிப்புகள் காணப்படுகின்றன. அவற்றில் தாவரங்களின் அடர்த்தியான வளர்ச்சி உள்ளது. அங்கே தேன் கூடுகள் அபரிமிதமாக உள்ளன. நான் அதிர்ஷ்டவசமாக தேனீக்களின் தாக்குதலுக்கு உள்ளாகவில்லை. மழை காலத்தில் நீர் ஓடிய ஓடைகளை காண முடிந்தது. இவ்வாறான வறட்சியால்த்தான் ஆரம்ப காலத்தில் கோட்டையாக இருந்த இவ்விடம் கைவிடப்பட்டிருக்க வேண்டும்.

மட்டமான இதன் உச்சி நாலு ஏக்கர் பரப்பளவு கொண்டது. அங்கும் இங்குமாக பற்றைகள் காணப்படுகின்றன. இங்கே பாறையில் வெட்டப்பட்ட சிறிய குளமொன்றும் உள்ளது. அதில் பாசி படர்ந்த நீர் நிறைந்துள்ளது. இன்னொரு வெட்டப்பட்ட குளமொன்றும் காணப்படுகிறது. அதற்கு ஒரு காலத்தில் கூரை மேய்ந்திருக்க வேண்டும் என்பதற்கு சான்றாக உடைந்த சிறிய கற்தூண்களும் ஓடுகளும் சிதறிக் காணப்படுகின்றன.

இக்குளங்கள் சிறியவைகளாக இருந்தாலும் வேலைத் திறனுடன் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் வடமேற்குப் பக்கத்தில் உள்ள குளம் சற்று பெரியது. இதன் பள்ளப் பக்கமாக நீர் வழிந்தோடாதவாறு கல் அரண் அமைக்கப்பட்டுள்ளது. இது அரை வட்டமாக காணப்படுகிறது. கல் அரண் அமைக்கப்பட்டுள்ள கற்களில் அதிகமானவை நீளம்: 30 அங்குலமும், உயரம்: 20 அங்குலமும், அகலம்: 10 அங்குலமும் கொண்டவை. எல்லாக் கற்களும் ஒரே அளவு கொண்டவை அல்ல.

எனக்கு நேரமில்லாததால் அங்கு சிதறிக் கிடக்கும் கற்துண்டங்களைக் கொண்டு அங்கு இருந்திருக்க கூடிய கட்டுமானங்களை அனுமானிக்க முடியவில்லை. அங்குள்ள கற்துண்டங்களில் செதுக்கப்பட்டிருக்கும் எழுத்துக்களையும் சிலைகளையும் அடையாளம் காணவும் என்னால் முடியாதுள்ளது.

இந்த சுவாரஸ்யமான மலையில் பறவைகளின் சமிபாட்டு தொகுதியூடாக வெளியேறும் விதைகளாலும் சேற்றில் தோய்ந்த அவற்றின் கால்களில் ஒட்டி வரும் விதைகளாலும் பரவிய தாவரங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இவற்றை விட இயற்கை ஏதுக்களால் பரவும் தாவரங்களும் நிறைய உள்ளன. இந்த மலையில் தரம் குறைந்த அன்னாசி வகை ஒன்றும் காணப்படுகிறது.

இந்த மலையடிவாரத்தில் பல குகைகள் காணப்படுகின்றன. அவைகளில் ஒரு காலத்தில் பௌத்த பிக்குகள் வாழ்ந்தனராம். அவர்கள் கடுமையாக நீர் சிக்கனத்தை கடைப்பிடித்தால் மோசமான தோல் நோய்களுக்கு ஆட்பட்டு துன்புற்றனர் என்று அறியக்கிடக்கிறது. அதிலிருந்து நிவாரணம் பெறுவதற்காக கனர என்ற மரத்தின் விதையில் இருந்து பெறப்படும் எண்ணெயை பயன்படுத்தினராம்.

வெஸ்மினிஸ்டர் அபேயில், 1000 அடி உயரத்திற்கு மேல் காணப்படும் தாவரங்களின் பட்டியலை இக்கட்டுரையில் இணைத்துள்ளேன். ஹக்கல தோட்டத்தை சேர்ந்த ஜே.ஆர். நோக் அவர்களுக்கு தனது பெறுமதியான நேரத்தை இப்பட்டியல் தயாரிக்க வழங்கியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (சற்று நீளமாக இருக்கும் இப்பட்டியல் வாசகருக்கு சலிப்பூட்டும் தன்மையதாக இருப்பதால் அது இங்கு தவிர்க்கப்படுகிறது. மொ-ர்)

வெஸ்மினிஸ்டர் அபேயில் மிகக் குறைவான பறவையினங்களே காணப்படுவது ஆச்சரியமாக உள்ளது. அவைகளின் விபரங்கள் வருமாறு: பருந்து (Accipiter virgatus), Fly catcher(Hypothemis Ceylon en sis), Sun -Bird (Dicaeum Erythrorhynchus), இரு வகை புல் (Hypsipetes Ganeesa and Molpastes Haemorrhous), டிரங்கோ(Dissemurus Paradiseus), இரு வகைப் பார்பெற்கள்(Megaloama Zeylancia and Xantholoa Rubricapilla), ஸ்வெல்லோ(Hirundo Hyperythra)

இந்தப் பறவைகளின் தொகை உச்சியிலிருந்து அடித்தளத்திற்கு இறங்கி வர கூடிக்கொண்டு வருகிறது. இவைகளிற் பல வருடத்தின் குறிப்பிட்ட பருவங்களில் அதிகமாக காணப்படுகின்றன.

## டெயிகல்-ஹெல:

வெஸ்மினிஸ்டர் அப்பேயில் இருந்து டெயிகல் மலைக்கு நகர்ந்தால் வருவது ஒரே மாதிரியான வறண்டநில தாவரங்களாகும். நீரோடைகளை கடக்கும் போதுகூட அபூர்வமாகத்தான் விதி விலக்கான தாவரங்களை கணமுடியும். மழையால் நிரம்பும் குளங்கள் பல இருந்த போதிலும் அவைகளில் நீர் இல்லை. சேறு மண்டி காணப்படுகிறது. தற்போதைய மக்கள் மிகக் குறைந்த தொகையினராகவும் எதிலும் பிடிப்பற்றவராகவும் வாழ்வதால் முன்னைய வேளாண் நாகரிகத்தை மீளக் கொண்டுவரத் திராணியற்றவர்களாக உள்ளனர்.

இதன் பாறைப்பாங்கான உச்சியில் செங்கற் குவியல்கள் காணப்படுகின்றன. அவை எவற்றை கட்ட பயன்படுத்தப்பட்டன என்பதை அறிய முடியவில்லை. உச்சியில் கருங்கற் பாறைகள் பலகை வடிவில் கவிந்து குகைகள் போன்ற அமைப்பை உருவாக்கி உள்ளன. இதன் எதிரிலும் கீழேயும் எண்ணெய் வித்துக்கள் கொண்ட குணா மரங்கள் காணப்படுகின்றன. இவைகளின் பட்டைகள் பல அங்குல கனத்தில் இருக்கின்றன. ஈர வலயத்தில் உள்ள மூங்கில் வகை ஒன்றும் இங்குள்ள பள்ளத்தாக்கில் காணப்படுகிறது.

இந்த மலையின் உச்சி தொடர்ச்சியாக வறண்ட காற்றுக்கும் வறட்சிக்கும் ஆட்படுவதால் இங்குள்ள தாவரங்கள் இயற்கையாக குட்டையாக உள்ளன. இங்கு விழுந்து கிடக்கும் கல் இடுக்குகளில் கரடிகள் வாழ்கின்றன. இங்கே வேடர்கள் வாழ்ந்தனர் என்று சொல்லக் கேட்டுள்ளேன். ஆனால் அவர்களின் வாழ்முறைக்கு சம்பந்தமில்லாத கற்கட்டுமானங்களை தவிர அவர்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் எதையும்

இங்கே காண முடியவில்லை.

## நில் கல:

நான் போய்ப் பார்த்த அடுத்த முக்கிய மலை நில் கலவாகும். சமவெளியிலிருந்து பாறைகள் செங்குத்தாக நீட்டிக் கொண்டிருக்கும் இம்மலை லகுகலைக்கு தெற்கிலும் பொத்துவிலுக்கும் அறுகம்பைக்கும் மேற்கிலும் உள்ளது. இதன் அடித்தளத்தில் பல பெரிய கற்சிலாகைகள் காணப்படுகின்றன. சில கற்சிலாகைகள் மலையில் நிறுத்தப்பட்டது போல் காணப்படுகின்றன. இந்த சிலாகைகளில் துளைகள் உள்ளன. அவை அச் சிலாகைகளை இழுத்து சென்று கூரையாக போடுவதற்கு வசதியாக வெட்டப்பட்டவை என்பதை அறிய முடிகிறது. இதற்குப் பக்கத்தில் மழை நீரை பிடித்து வைக்கக் கூடிய வகையில் சிறு குளமொன்று கட்டப்பட்டுள்ளது. அதன் பக்கத்தில் உள்ள பாறை குரங்குகள் உல்லாசமாக ஏறி விளையாட ஏதுவாக உள்ளது.

நில்கலவின் உச்சியில் பெருமளவு கற்சிதைவுகள் அங்குமிங்கும் சிதறிக் கிடக்கின்றன. அவற்றில் பற்றைகள் அடர்ந்து முளைத்துள்ளன. இங்கு படர்ந்திருக்கும் தாவரங்கள் மற்றும் வெற்றிடங்களுக்கு இடையே கல்லால் அலங்காரங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இங்கிருந்து வடக்கே 120 மைல் தூரத்தில் உள்ள மகா சேனன் கட்டிய கந்தளாய் குளத்தை பார்த்துக்கொண்டிருக்கும் பண்டார மலையின் உச்சியில் உள்ள அழிபாடுகளை இது ஒத்துள்ளது. நில்கலவில் காணப்படும் தாவரங்கள் இங்கே ஒரு காலத்தில் மக்கள் குறிப்பிட்ட அளவில் வாழ்ந்தார்கள் என்பதை காட்டுகின்றன.

ஊவா மாகாணத்திலிருந்து கிழக்கு மாகாணத்துக்கு செல்லும் பாதை நெடுக இருக்கும் சிதிலமடைந்த குளங்கள் காடு மண்டி காணப்படுகின்றன. ஐந்து மைல் தூரம் சென்ற போது எங்கும் உயரம் குறைந்த குன்றுகள் நிறைந்து உள்ளன.

## நமலூவா ஹெல:

பல்வேறு அளவில் உடைந்த கற்துண்டங்களும் உடைந்த செங்கற்களும் நமலூவாஹெல உச்சியில் சிதறிக்கிடக்கின்றன. அவைகளை கொண்டு அங்கே ஒரு தகோபா இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம். அதன் அருகில் இயற்கை காரணங்களால் தேய்ந்துபோன கல்வெட்டொன்றும் காணப்படுகிறது.

நமலூவா அடித்தளத்திலிருந்து வடக்கே சற்று தொலைவில் ஒரு செங்கல் தகோபாவின் அழிவுகளை கண்டேன். அதன் அருகில் மலர் வைக்கும் கல்லால் செதுக்கப்பட்ட கிண்ணம் ஒன்றையும் பார்த்தேன். இந்த தகோபா 80 அடி உயரம் கொண்டது. இதை மூடி பற்றைகள் வளர்ந்துள்ளன. இங்கு மனிதர்கள் அறிமுகம் செய்த குணா, நா மரங்கள் காணப்படுகின்றன.

இந்த குன்றுக்கு மேற்கு, தெற்கு பக்கத்தில் ஹெடஓயா பாய்கிறது. இது பண்டைக் காலத்தில் லகுகல பக்கத்தில் உள்ள விவசாய நிலத்திற்கு திருப்பி விடப்பட்டது என்பதற்கு சாட்சியாக அழிவடைந்த நிலையில் அணை ஒன்று உள்ளது.

## ஹிப்பிற்றலான கல:

அடுத்ததாக நான் போய்ப் பார்த்த மலை ஹிப்பிற்றான மலையாகும். இது மாகாண எல்லைக் கோட்டிலிருந்து ஒரு மைல் தூரத்தில் உள்ளது. இதனை பாணமையிலிருந்து-அருகம்பையில் இருந்து தெற்கே இருபது மைல் தூரத்தில் கடற்கரை ஒரத்தில் உள்ள ஒரு கிராமம். இங்கிருந்து ஒற்றையடிப் பாதை ஒன்று ஊவாவை நோக்கி செல்கிறது.

உறுதியான பாறைகள் நிறைந்த ஹிப்பிற்றான மலை கடல் மட்டத்தில் இருந்து சுமார் 800 அடி உயரம் கொண்டது. நான் போய்ப் பார்த்த எல்லா சிகரங்களிலும் மனித இருப்புக்கான தடயங்களை கண்டேன். அடித்தளத்தில் விகாரையோ தகோபாவோ அழிந்து கிடப்பதற்கான சுவடுகள் தெரிந்தன. மேலும் அங்குள்ள சில தாவரங்களின் பட்டையில் இருந்து கிடைக்கும் சாறு காயங்களையும் கட்டுகளையும் ஆச்சரியமான வகையில் குணப்படுத்தும் தன்மை வாய்ந்தது என்று சொல்லப்படுகிறது.


## குடும்பியா கல:

உகந்தைக்கு தெற்கு பக்கத்திலிருந்து சற்று தொலைவில் நவீன பௌத்த கோயில் ஒன்று உண்டு. அங்கிருந்து குடும்-பியா கலவை நோக்கி ஏறினேன். அவ்வுச்சி கிழக்கை நோக்கியும் தெற்கை நோக்கியும் கடலைப் பார்த்து இருக்கும் பாறைகளாலானது. இங்கே பழைய சிதிலமடைந்த தகோபா காணப்படுகிறது. மேலும் வறட்சி மிகுதியாக உள்ளதால் தாவரங்கள் குட்டையாக உள்ளன. இங்கே ஒரு காலத்தில் கணிசமான மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு சாட்சியாக கல்லில் பொளிந்து உருவாக்கிய குளமொன்றும் மனிதர்கள் வாழத்தக்க குகைகளும் காணப்படுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் எல்லையில் குமுக்கன் ஆறு பாய்கிறது. பகரகல (மேசை போன்ற பெரிய பாறை) விலும் கிரிபொகுண கலவிலும் நீரை பிடித்து வைத்துக் கொள்ளத் தக்கதாக இயற்கையாகவும் செயற்கையாகவும் அமைந்த குளக் கட்டுமானங்களை கண்டேன். சமவெளிக்கு கீழே அங்கொன்றும் இங்கொன்றுமாக நீண்ட காலத்துக்கு முன்பு கைவிடப்பட்ட குளங்கள் உள்ளன. மேலும் அங்கே குமுக்கன் ஆற்றின் வட தென் கரையில் பருவ காலங்களில் நீர்ப்பாசனம் நடைபெறுகிறது. இங்கே ஒரு காலத்தில் அபரிமிதமான மக்கள் பெருக்கம் இருந்ததற்கு நிறைய சான்றுகள் உள்ளன. தொல்லியல் மற்றும் உயிரியல் மாணவர்களுக்கு ஆர்வமூட்டும் பல விடயங்கள் மலை உச்சியிலும் ஆற்றின் படுகைகளிலும் காணப்படுகின்றன.

இலங்கை றோயல் ஆசியாற்றிக் சங்கத்திற்கு பூரணமில்லாத சுருக்க விபரத்தை சமர்ப்பித்ததற்கு நான் மிகுந்த மனவருத்தம் அடைகிறேன். அவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் பட்சத்தில் விளக்கமான விபரத்தை தரமுடியும் என்று நம்புகிறேன். ஆயினும் இது மற்றவர்களின் தேடலை தூண்டும் எனவும் எண்ணுகிறேன்.



thiruvenysangamam@thaiveedu.com






# பேராசியர் க. கைலாசபதியின் தமிழ் வீரநிலைக் கவிதை நூலை முன்வைத்து ஓர் உசாவல்

கந்தையா சண்முகலிங்கம்

'இந்த ஆய்வின் நோக்கம் இருவகைப்பட்டது. முதலாவது, பொதுவாக ஒப்பியல் முறையைப் பழந்தமிழ்ச் செய்யுளாய்விற் பொருத்திக் காண்பது. இரண்டாவது தமிழ்ச் செய்யுளை ஹோமரின் செய்யுளோடு குறிப்பாக ஒப்பிட்டு இவை இரண்டும் வீரநிலைக் காலம் எனப் பெறும் காலத்தின் நிலைகளை வெளிக்காட்டுவன எனக் காண்பிப்பது' (கு.வெ.பா 2006).

பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் 'தமிழ் வீரநிலைக் கவிதை நூலின் முன்னுரையின் தொடக்கத்தில் அமைந்துள்ள கூற்றை மேலே தந்துள்ளோம். இக்கூற்றில் கைலாசபதி அவர்களின் நோக்கம் வீரநிலைக் காலம் (HEROIC AGE) எனப்படும் கோட்பாட்டைப் பிரயோகித்து பழந்தமிழ்ச் செய்யுட்களான சங்கக் கவிதைகளைப் பற்றி ஆராய்வதே என்பதைத் தெரிந்து கொள்கிறோம். இவ்வாய்வை அவர் ஒப்பீட்டு முறையியல் (COMPARATIVE METHODOLOGY) என்னும் நவீன முறையியல் கொண்டு ஆராயப் புகுந்தார் என்பதையும் இக்கூற்று வெளிப்படுத்துகிறது. வீரநிலைக் காலம் என்னும் நவீன இலக்கியக் கோட்பாட்டையும், அதை ஆராய்வதற்கு கைலாசபதி உபயோகித்த ஒப்பியில் முறையியலையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கோட்பாட்டு ஆய்வுகள்:

ஆய்வுத் தரவுகளைத் திரட்டுதல், அத் தரவுகளைத் தொகுத்தும், பகுத்தும் வகைப்படுத்தியும் நிரற்படுத்தல் என்பனவற்றோடு ஆய்வுச் செயற்பாடு நிறைவு பெற்று விடுவதில்லை. திரட்டப்பட்ட தரவுகளை விளக்கி உரைப்பதே (INTERPRETATION) ஆய்வாளரின் முதன்மையான பணியாகும். இம் முதன்மைப் பணியைச் செய்வதற்கு கோட்பாடுகள் (THEORIES) அவசியமானவை. கோட்பாடுகளின் ஒளியில் தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதும் விளக்கியுரைப்பதுமே ஆய்வு ஆகும். வெறுமனே தரவுகளை விபரித்துக் கூறுதல் (DESCRIPTION) எனப்படும். விபரிப்பு முறையிலான ஆய்வுகளால் அதிக பயன் விளைவதில்லை. விபரிப்பு ஆய்வுகளின் தரத்தைக் கீழிறக்கி விடுகிறது. கோட்பாட்டு நிலை நின்று செய்யப்படும் பகுப்பாய்வுகளே உயராய்வு என்ற தகுதிக்கு உரியனவாகின்றன. தமிழ் வீரநிலைக் கவிதை (TAMIL HEROIC POETRY) என்னும் நூல் கோட்பாட்டு நிலை நின்று ஆய்வு செய்து வீரநிலைக் காலம் (HEROIC AGE) என்னும் கோட்பாட்டைத் தமிழுக்கு மிகச் சிறப்பாக அறிமுகம் செய்துள்ளது.

## வீரநிலைக் காலம்:

வீரநிலைக் காலம் என்றும் வீரயுகம் என்றும் தமிழில் அழைக்கப்படும் 'HEROIC AGE' என்னும் நவமான கோட்பாட்டை உலகுக்கு அறிமுகம் செய்தவர் எச்.எம். சாட்விக் என்னும் பேராசிரியர் ஆவர். இந்நவீன கோட்பாடு பற்றி கைலாசபதி அவர்கள் கூறியிருப்பதை அடுத்து நோக்குவோம்.

1911-ம் ஆண்டில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திற் பேராசிரியராக இருந்த எச்.எம். சாட்விக் என்பார் HEROIC AGE என்ற நூலை வெளியிட்டார். பழம் ஜெர்மானியரது காவியப் பாடல்களை ஆராய்ந்த அவர் அவற்றைக் கிரேக்க ஆதி கவியாம் ஹோமருடைய காவியங்களுடன் ஒப்புநோக்கி இருமொழியிலெழுந்த வீரகாவியங்களும் வாய்மொழி இலக்கியமாகத் தோன்றியவை என்று பல சான்று காட்டி நிறுவினார். அவரது அம் முயற்சி பல மொழிகளிலும் உள்ள காவியங்களையும் பாடல்களையும் ஒப்புநோக்கி ஆராய்ச்சி செய்வதற்கு வழி காட்டியது. சாட்விக் காட்டிய வழியைப் பின்பற்றி அவரது மேற்பார்வையில் ஆராய்ச்சி நிகழ்த்திய என்.கே. சித்தாந்தா என்பார் வடமொழி இதிகாசங்களாம் இராமாயணம், பாரதம் ஆகியன வீர காவியங்களென்று கூறியதோடமையாது, அவற்றைப் பிற வீர காவியங்களுடனும் ஒப்புநோக்கியும் ஆராய்ந்தார். (க. கைலாசபதி 2018:66). மேற்குறித்த கூற்று ஆய்வுலகிற்குச் 'சாட்விக் காட்டிய வழி' பற்றிக் குறிப்பிடுகிறது. சாட்-விக் மேற்பார்வையில் ஆராய்ச்சி மேற்கொண்ட என்.கே. சித்-தாந்தா என்ற அறிஞர் பற்றியும் குறிப்பிடுகிறது. தமிழரல்லாதவரான என்.கே. சித்தாந்தா புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை முதலியன பற்றி ஆங்கிலம் மூலம் அறிந்தவற்றைக் கொண்டு தமிழ் இலக்கியம் பற்றிய முக்கியமான கருத்தொன்றையும் 'THE HEROIC AGE OF INDIA' (1929) என்னும் தமது ஆய்வு நூலில் தெரிவித்திருந்தார். 'தமிழ்ப் புறத்திணைப் பாடல்கள்' பிறமொழிகளிலுள்ள வீரப் பாடல்களுடன் ஒப்புநோக்கி ஆராயப்படும் தகைமையுடையன' என்பதே சித்தாந்தா கூறிய கருத்தாகும்.

## சாட்விக் காட்டிய வழியில்:

'வீரநிலைக் காலம்' என்னும் கோட்பாடு உலக அளவில் பெரும் செல்வாக்குடைய கோட்பாடாக மாறியது. சாட்விக் காட்டிய வழியில் பயணித்த பிற ஆய்வாளர்கள் இக் கோட்பாட்டைச் செழுமைப்படுத்தினர். கைலாசபதி இதுபற்றிக் கூறுவதை அடுத்து நோக்குவோம். 'சாட்விக் காட்டிய பாதை

யில் சிலாவிக் வீரப் பாடல்களும் ஐஸ்லாந்து ஐதீகக் கதைக ளும் வீர காவியங்களாக நிரூபிக்கப்பட்டன. அண்மைக் காலத்தில் ஆபிரிக்கக் குலத்தவர் பலரிடையே வழங்கும் கதைப் பாடல்கள் வீரப் பாடல்கள் என்ற வகையிலும், வாய் மொழிப் பாடல்கள் என்ற அடிப்படையிலும் அதிகமாக ஆராயப்பட்டு வருகின்றன. இத்தகையதொரு பின்னணியி-லேயே சான்றோர் செய்யுட்களை வீர யுகத்திற்குரியனவாகக் கொண்டு அவற்றைக் கிரேக்க ஆதிகாவியங்களுடன் ஒப்பு நோக்க முனைந்தேன்' (க.கை 2018:66-67)

கிரேக்க காவியங்கள், ஜெர்மானிய வீரப் பாடல்கள், வட மொழி இதிகாசங்கள் சிலாவிக் வீரப் பாடல்கள் சுமேரியப் பாடல்கள், ஐஸ்லாந்து ஐதீகக் கதைகள், ஆபிரிக்க குலத்த வர்களின் கதைப் பாடல்கள் ஆகிய பல்வகை இலக்கியங் கள் ஒப்பியல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதையும், வீர நிலைக் காலம் என்னும் கோட்பாடு, 1911-க்கும், கைலாசபதி யின் ஆய்வு நடைபெற்ற 1960-களின் முற்பகுதிக்கும் இடைப் பட்ட காலத்தில் வளர்ச்சியுற்ற வரலாற்றையும் மேற்படி கூற் றில் கைலாசபதி பதிவு செய்துள்ளதைக் காணலாம். இக்கூற் றில் 'வாய் மொழிப் பாடல்கள்' என்னும் எண்ணக் கருவை யும் கைலாசபதி அறிமுகம் செய்துள்ளார் என்பது நாம் கவ னிக்க வேண்டிய முக்கியமான செய்தியாகும். வாய் மொழிப் பாடல்கள் ORAL POETRY என்ற எண்ணக்கரு, அவர் மூல மாக கவிதை வளர்ச்சி பற்றியதும், காவியங்களின் வளர்ச்சி பற்றியதுமான கோட்பாடாகவும் அறிமுகமாகிறது. இதுபற்றி இக்கட்டுரையின் பிறிதொரு பகுதியில் விளக்கிக் கூறுவோம்.

## போப் காட்டிய திசைவழி:

சாட்விக் காட்டிய வழியுடன் ஒற்றுமையுடைய வழியொன்றை சாட்விக்கின் 1911-ம் ஆண்டு நூல் வெளிவருவதற்குக் கால் நூற்றாண்டுக்கு முன்பதாக ஜி.யு. போப் சுட்டிக்காட்டும் குறிப்பொன்றைக் கூறினார்.

'பைந்தமிழ்ப் பாடல்களின் உணர்வு நிலையும் அவை தோன் றிய காலத்துச் சமூக நிலையும் அவற்றுக்குச் சமமான கிரேக் கப் பாடல்களுடன் பெரிதும் ஒற்றுமையுடையனவாகக் காணப்படுகின்றன' (க.கை 2018:67).

தென்னிந்திய மொழிகள் பற்றி எழுதிய கட்டுரையொன்றில் 1885-ல் ஜி.யு. போப் மேற்குறிப்பிட்ட கருத்தைக் கூறினார். இலக்கியப் படைப்புக்கும், அப்படைப்பு எழுந்த காலச் சமூ கத்திற்கும் இடையிலான பிணைப்பை ஆராய்வதில் பேரார் வம் கொண்டிருந்தவரான கைலாசபதிக்கு, 'பழந்தமிழ்ப் பாடல்களின் உணர்வு நிலையும் அவை தோன்றிய காலத்து சமூக நிலையும்' கிரேக்கப் பாடல்களுடன் ஒற்றுமையுடையன எனக் கூறிய கருத்து உளத்தூண்டலை வழங்கியதாக அமைந்தது எனலாம்.

## ஏனைய ஆய்வாளர்கள்:

கிரேக்கப் பாடல்களுக்கும் சங்கப் பாடல்களுக்கும் இடையி லான ஒற்றுமைகள் பற்றிக் கருத்துரைத்தோர் பலரை கைலா சபதி தமது நூலில் குறிப்பிடுகிறார். 1923-ல் தென்னிந்தியா பற்றிய வரலாற்று நூலை எழுதிய எஸ். கிருஷ்ணசாமி ஐயங் கார் 'சங்கச் சான்றோர் செய்யுட்கள் ஹோமரது இலியாது காவியந் தோன்றுவதற்கு ஆதாரமாகவிருந்த வீரக் கதை களை ஒத்தனவாயுள்ளன எனக் குறிப்பிட்டார். என்.கே. சித்-தாந்தா 1929-ல் கூறிய கருத்தை முன்னரே குறிப்பிட்டிருந் தோம். இவருக்கு அடுத்து எஸ். வையாபுரிப்பிள்ளை அவர் கள் 1952-ல் திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்தில் நிகழ்த் திய 'காவிய காலம்' என்ற சொற்பொழிவுத் தொடரில் குறிப் பிட்ட கருத்தை கைலாசபதி எடுத்துக் காட்டுகிறார். பின்னர் நூலாக வெளிவந்த எஸ். வையாபுரிப்பிள்ளையின் இச் சொற்பொழிவில் 'ஐரோப்பிய காவியங்களை நன்காராய்ந்து எழுதியவர்களான சாட்விக், டபிள்யு.பி. கேர், அபெர்கு-ரொம்பி முதலிய ஆசிரியர்கள்' தமிழுலகிற்கு அறிமுகப்-படுத்தப்பட்டனர். வையாபுரிப்பிள்ளை சாட்விக்கின் HEROIC AGE (வீரயுகம்) என்ற நூலைக் குறிப்பிட்டு 'வீரயுகத்திற்கு உரியனவாக சாட்விக் பேராசிரியரால் தமது 'ஹிறோயிக் ஏஜ்' என்ற நூலிற் கூறப்பட்டுள்ள சில இயல்புகள் அனைத்தும் சங்க இலக்கியங்கள் சித்திரிக்கும் சமுதாயத்தில் உளவாதல் காணலாம் என்றும் குறிப்பிட்டிருப்பதையும் கைலாசபதி எடுத்துக்காட்டுகிறார். 1958-ல் எட்டுத்தொகை பற்றிய ஆய்வு ரையை இலண்டன் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பித்த ஜே.ஆர். மார் கிரேக்கப் பாடல்களைப் போலப் பழந்தமிழ்ச் செய்யுட்களும் வாய்மொழி இலக்கியமாகவே இருந்திருக்க லாம் என்ற கருத்தைக் குறிப்பிட்டார்.

'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' பற்றி ஆராய்ந்த தனி-நாயகம் அடிகளாரும், பழந்தமிழ் இலக்கியத்தில் காதல் என்ற பொருள் பற்றித் 'தமிழ்க் காதல்' என்ற நூலை எழுதிய வ.சு.ப. மாணிக்கனாரும், தத்தம் நூல்களில் சங்கப் பாடல்க ளிற்கும் கிரேக்கப் பாடல்களிற்கும் இடையில் காணப்படும் ஒப்புமைக் கருத்துக்களை சுட்டிக் காட்டினர். தமக்கு முன்னர் தமிழ் ஆய்வுச் சூழலில் சங்கப் பாடல்களுக்கும் கிரேக்கப் பாடல்களுக்கும் இடையேயான ஒற்றுமைகள் பற்றி நிகழ்ந்த உரையாடலை கைலாசபதி பதிவு செய்கிறார். இவ்வாறு பதிவு செய்த பின் அவர் கூறும் முக்கிய செய்தி உற்று நோக்கத்தக்கது.

'போப்பையரிலிருந்து கலாநிதி மார் வரை மேற்கண்டவாறு சில அறிஞர் கிரேக்க இலக்கியங்களுக்கும் தமிழ் நூல்களுக் குமுள்ள ஒப்புமைகளைக் குறிப்பிட்டாரெனினும் அப்பொருள் பற்றித் தனியாக எவரும் ஆராய்ந்தாரல்லர். அது மட்டு மன்று, கிரேக்க ஆதி காவியங்கள் பற்றிய ஆராய்ச்சியும் கடந்த முப்பது நாற்பது ஆண்டுக் காலத்தில் புதுப்புது வழி களிற் சென்றுள்ளது. அவ்வாராய்ச்சியின் பண்பையும் பய னையும் கவனிப்பது முக்கியமானதாகும்.' (க.கை 2018 : 68).

## தமிழ் வீரயுகத்தின் தொல்பழமை:

இலக்கியம், வரலாறு என்ற இரு துறை ஆய்வாளர்களாலும் கண்டறியப்பட்ட வீர நிலைக் காலங்கள் மூன்று உள்ளன. இவற்றைக் காலவரிசைப்படி பின்வருமாறு நிரற்படுத்தலாம்.

- மெசப்பத்தேமியாவின் சுமேரிய வீரநிலைக் காலம் - பொ.ஆ.மு.(கி.மு.) 3000
- கிரேக்க வீரநிலைக் காலம் - பொ.ஆ.மு. 2000
- வட இந்தியாவின் இதிகாசங்கள் குறிக்கும் வீரநிலைக் காலம் - (உறுதியாக நிச்சயிக்கப்படவில்லை)

இவற்றுள் மூன்றாவதான வடமொழி இதிகாசங்களின் வீரநி

லைக் காலம் உறுதியாக நிச்சயிக்கப்படாத நிலையில், இதனைத் தவிர்த்து நோக்கினால் 'காலவரிசையில் அடுத்தபடியாக அமைவது பழந் தமிழரது வீரயுகமாகும்' என்ற கருத்தைக் கைலாசபதி கூறியுள்ளார். 'உலகின் பிறபகுதிகளிற் காணப்படும் வீர யுகங்களும் அவற்றைச் சேர்ந்த பாடல்களும் கிறிஸ்துவிற்குப் பின் பல நூற்றாண்டுகள் கழித்தே தோன்றின' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக தமிழ் வீரநிலைக் காலத்தின் தொல் பழமையை கைலாசபதி புராதன சுமேரியர், கிரேக்கர் முதலியோரின் வீர யுகங்களுடன் ஒருசேர வைத்து நோக்கும் பெருமையுடையது எனலாம்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மில்மன்பரியின் கோட்பாடு:

வீரநிலைக் காலக் கவிதைகள் பற்றி ஆராய்ந்த மில்மன்பரி என்ற அறிஞர் உலகை அதிர்ச்சியில் ஆழ்த்திய கருத்தொன்றை 1927-ம் ஆண்டில் கூறினார். இது பற்றிக் கைலாசபதி கூறியிருப்பதை அடுத்து நோக்குவோம்.

'வீர யுகத்திற்குரிய பழைய பாடல்கள் அனைத்தும் வாய்மொழியிலக்கியமாகவே அமைவன என்பதை முதன் முதலில் ஐயத்திற்கிடமின்றி நிறுவியவர் மில்மன்பரி என்ற அமெரிக்கர். செம்மை சான்ற உயர் தனிக் கவிதைகளாம் கிரேக்க ஆதி காவியங்கள் எழுத்தறிவில்லாத வாய்மொழிக் கவிஞராற் குல மரபுத் தொழிலாகப் பாடல் பெற்றன என்று ஆணித்தரமாக அவர் எடுத்துக் கூறியபோது அறிஞருலகம் திடுக்கிட்டது. ஆயினும் காலப்போக்கில் மில்மன்பரியின் முடிவு சரியானதே என்பது உறுதிப்பட்டு வந்துள்ளது. மில்மன்பரி யூகோசிலாவியாவில் காடு மேடெல்லாம் திரிந்து, வாய்மொழி இலக்கியங்களைக் கேட்டு ஒலிப்பதிவு செய்தவர், எழுதிக் கொண்டவர். அவற்றை ஆழமாக ஆராய்ந்ததன் விளைவாகவே அவற்றிற்கும் கிரேக்க ஆதி காவியங்களுக்கும் பற்பல ஒற்றுமைகள் இருப்பதைக் கண்டார். நாட்டுப்புறத்து நாடோடிப் பாடகர்களின் கலையின் துணைகொண்டு பண்டைய புலவரது கலையை அவர் விளக்கினார். அந்த வகையில் ஒப்பிலக்கிய ஆய்வில் சாட்விக், பரி ஆகிய இருவரும் தனிச் சிறப்பானவர்கள். அவர்கள் கையாண்ட ஆராய்ச்சி முறை பண்டைத் தமிழர் செய்யுட்களை நன்கு ஆராய்வதற்கும் விளங்கிக் கொள்வதற்கும் பேருதவியாயுள்ளது' (க.கை 2018:68-69).

மில்மன்பரியின் வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாட்டைப் பிரயோகித்துச் சங்கப் பாடல்களை ஆராய்ந்து 'TAMIL HEROIC POETRY' (தமிழ் வீரநிலைக் கவிதை) நூலை 1968-ம் ஆண்டில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக வெளியீடாக கைலாசபதி வெளியிட்டபோது அந்நூலுக்கு உலக அரங்கில் வரவேற்புக் கிடைத்தது. ஆனால் இதற்கு மாறாகச் சங்கப் பாடல்கள் புலவர்களால் எழுதப்பட்ட ஆக்கங்களே என்ற கருத்தே அக்காலத்தில் தமிழறிஞர்கள் மத்தியில் வேரூன்றியிருந்தபடியால், அவரது நூலுக்கு தமிழுலகில் எதிர்ப்பும் கிளம்பியது.

## பாட்டு மரபும் எழுத்து மரபும்:

பேராசிரியர் கைலாசபதி அவர்களின் 'தமிழ் வீரநிலைக் கவிதை' நூல் வெளிவந்து 50 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. சங்கப் பாடல்கள் வாய்மொழிப் பாடல்களாக உருவாக்கம் பெற்றன என்ற அவரது கருத்தைத் தமிழறிஞர்கள் ஏற்றுக்கொள்வதில் தயக்கம் காட்டினர். ஆயினும் கைலாசபதி அவர்களின் நூல், பயனுள்ள விவாதம் ஒன்றை ஆராய்ச்சியாளர்களிடையே தொடக்கி வைத்தது. 'சங்கப் பாடல்கள் வாய் மொழிப் பாடல்களாக உருவானவையா? அல்லது அம் மரபின் தொடர்ச்சியான எழுத்து மரபின் ஆக்கங்களா? என்பதே இவ் விவாதமாகும். சங்க இலக்கியம் பாட்டு மரபும் எழுத்து பரபும் (2010) என்னும் ஆய்வு நூலை எழுதிய பேராசிரியர் கே. பழனிவேலு இவ்வினா பற்றி நிறைவான விடை-யைத் தந்துள்ளார். அவர் சங்கப் பாடல்களை பாட்டு மரபினதும் எழுத்து மரபினதும் இணைப்பாகவே காண்கிறார் என பேராசிரியர் நா. சுப்பிரமணியம் கருத்துரைத்துள்ளார். அவர் இது பற்றிக் கூறியிருப்பது:

'பேராசிரியர் பழனிவேலு சங்கப் பாடல் பரப்பை இரு மரபுகளின் இணைப்பாகவே காண்கிறார். அப்பரப்பில் எழுத்து மரபு சார்ந்த பாடல்கள் வாய்மொழி மரபு சார்ந்த பாடல்கள் ஆகிய இரண்டுமே உள்ளன என்பதே அவரது முடிபாகும்'.

பேராசிரியர் நா. சுப்பிரமணியம், பழனிவேலு அவர்களின் நூலில் இருந்து காட்டியுள்ள மேற்கோள் வருமாறு:

'சங்க இலக்கியத்தை உற்று நோக்கின் அவை வாய்மொழி இலக்கிய மரபையும் எழுத்திலக்கிய மரபையும் பெற்றிருப்பதை அறியலாம். இதனால் சங்க இலக்கியம் முழுவதும் வாய்மொழித்தன்மை என்றோ எழுதப் பெற்றவை என்றோ முடிந்த முடிபாகக் கூற முடியவில்லை. எனினும் சங்க இலக்கியங்களில் வாய்மொழி மரபாக வழங்கியவையும் பதிவு செய்யப் பெற்றிருக்கலாம். இந்தப் பதிவு முயற்சியினாலேயே சங்க இலக்கியங்கள் எழுத்திலக்கியத் தன்மையுடன் நாட்டுப்புற இலக்கியத் தன்மையும் பெற்றுள்ளன'.

சங்க இலக்கியம் பாட்டு மரபும் எழுத்து மரபும் நூலின் பக் 143-144-ல் இருந்து மேற்குறித்த கூற்றை எழுத்துக்காட்டும் பேராசிரியர் நா. சுப்பிரமணியம் தமது கருத்தை இவ்வாறு பதிவு செய்துள்ளார்.

'பேராசிரியர் பழனிவேலு அவர்களுடைய மேற்படி நூலின் தெளிபொருள் என்ற வகையிலான என்னுடைய புரிதலொன்றையும் இங்கே பதிவு செய்ய விழைகிறேன். சங்க இலக்கியம் என இன்று நமக்குக் கிடைக்கும் பாடல் தொகுதிகள் புலவர்களால் எழுத்து நிலையில் பதிவு செய்யப்பட்டவையே யாகும். இவற்றுள் எழுத்து மரபு உருவாவதற்கு முற்பட்ட காலத்திலிருந்து வழங்கிவந்த வாய்மொழிப் பாடல்களும் பதிவு பெற்றிருக்கலாம். ஆயினும் அவை இயற்பாடல் எனப்படும் எழுத்திலக்கிய மரபுசார் பாடல் முறைமையிலேயே பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். அதனாலேயே சங்கப் பாடல்களுக்குள் வாய்மொழிப் பண்பு கொண்ட பாடல்களைத் தனியாக அடையாளப்படுத்த முடியாத நிலை உள்ளது' இக்கட்டுரையில் கூறப்பட்ட கருத்துக்களைப் பின்வருமாறு தொகுத்துக் கொள்ளலாம்.

- கைலாசபதியின் 'தமிழ் வீரநிலைக் கவிதை' என்னும் நூல் 'வீரநிலைக் காலம் என்னும் கோட்பாட்டைப் பிரயோகித்து

பண்டைத் தமிழ்ச் செய்யுட்களை ஒப்பீட்டு முறையில் ஆராயும் நூலாகும். இந்நூலில் ஹோமரின் கவிதைகளை அவர் சங்கப் பாடல்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தார்.

- பழம் ஜெர்மானியரது காவியப் பாடல்களை ஆராய்ந்த எச்.எம். சாட்விக் என்னும் பேராசிரியர் அப் பாடல்களை கிரேக்க ஆதி கவியாம் ஹோமருடைய காவியங்களுடன் ஒப்பிட்டு இரு மொழியிலெழுந்த வீர காவியங்களும் வாய் மொழி இலக்கியமாகத் தோன்றியவை என்று சான்றாதாரங் களுடன் நிறுவினார். இவரே வீரநிலைக் காலம் (வீர யுகம்) என்னும் கோட்பாட்டையும் வரைவிலக்கணம் செய்து உலகுக்கு அறிமுகம் செய்தவராவர்.
- சாட்விக் காட்டிய வழியில் சிலாவிக் வீரப் பாடல்கள், ஐஸ் லாந்து ஐதிகக் கதைகள், சுமேரியப் பாடல்கள் என்பன ஒப்பீட்டாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. வடமொழியின் ஆதி காவியங்களை கிரேக்க வீரப் பாடல் காவியங்களுடன் ஒப் பிட்டு என்.கே. சித்தாந்தா என்பவர் 1929-ல் நூல் எழுதி வெளியிட்டார். கைலாசபதி 1960-களில் தமது ஆய்வை மேற்கொள்வதற்கு முன்னர் உள்ள காலப் பகுதியில் ஆபி ரிக்க குலத்தவர்களிடையே வழங்கும் கதைப் பாடல்களும் வீரநிலைக் காலத்திற்குரியனவே எனச் சுட்டும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இப் பின்னணியிலேயே சங்கப் பாடல்களை வீர யுகத்திற்குரியனவெனக் கொண்டு கைலா சபதி ஆய்வு செய்யப் புகுந்தார்.
- உலக அளவில் நடைபெற்ற வீர யுகம் பற்றிய ஆய்வுக ளின் பால் இளைஞர் கைலாசபதியின் கவனம் திரும்புவ தற்கு சங்கச் செய்யுட்களுக்கும் கிரேக்க காவியப் பாடங்க ளுக்கும் இடையிலான தொடர்புகள் பற்றி தமிழ் ஆய்வுல கில் அவ்வப்போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்களும் கார ணமாக இருந்தன. 1885-ல் கருத்துரைத்த ஜி.யு. போப், 1958-ல் காவிய காலம் என்ற நூலில் வீரயுகம் பற்றிக் குறிப்பிட்ட எஸ். வையாபுரிப்பிள்ளை, 1958-ல் எட்டுத் தொகை பற்றிய ஆய்வுரையை வெளியிட்ட யே.ஆர். மார் ஆகிய அறிஞர்களின் கருத்துகள் தமிழ் ஆய்வுகளில் மட் டுமன்றி மாணவர்கள் மத்தியிலும் சங்க இலக்கியத்தையும் கிரேக்க காவியங்களையும் ஒப்பிட்டு நோக்கும் ஆர்வத் தைத் தூண்டியிருந்தன. அப் பின்னணியிலேயே கைலாச பதி தம் ஆய்வினை நிகழ்த்தினார்.
- கைலாசபதியின் ஆய்வு, தமிழ் வீரநிலைக் காலத்தின் தொல் பழமையை நிறுவியது. உலகின் பிற பகுதிகளில் காணப்படும் வீர யுகங்களும் அவற்றைச் சேர்ந்த பாடல்க ளும் கிறித்துவுக்குப் பல நூற்றாண்டுகள் கழித்தே தோன் றின என்பதும், சங்கப் பாடல்களின் வீர யுகம் சுமேரிய, கிரேக்க வீரயுகங்களுடன் ஒப்பிடக்கூடிய பழமையுடையது என்பதும் அவரது ஆய்வினால் வெளிச்சத்திற்கு வந்தது.
- சாட்விக், மில்மன்பரி ஆகியோர் வழியில் ஆய்வை நிகழ்த் திய கைலாசபதி சங்கப் பாடல்கள் வாய்மொழி உருவாக் கமே என்ற கருதுகோளை முன்வைத்துத் தமது ஆய்வு முடிவுகளை வெளியிட்டார். அவரின் முடிவுகளை ஏற்பதில் ஆரம்பத்தில் தமிழறிஞர்களிடையே தயக்கம் காணப்பட் டது. இன்று அரை நூற்றாண்டு கடந்த பின்னர் கைலாசப தியின் கருத்துக்கள் ஏற்புடைமை பெற்றுவருகின்றன. அவ ருடைய கோட்பாட்டின் மையமான கருத்துக்களும் (Core ideas) அனுமானங்களும் ஏற்கப்பட்டுள்ளதோடு, பல திருத்தங்களும் முன்மொழியப்பட்டன.
- கைலாசபதியின் நூல் வெளிவந்த காலத்திற்குப் பிந்தைய ஆய்வுகள் ஆரோக்கியமான வளர்ச்சிப் போக்கை எடுத் துக்காட்டுவன. 'சங்கப் பாடல்கள் வாய்மொழிப் பாடல்க ளாக உருவானவையா? அல்லது அம் மரபின் தொடர்ச்சி யான எழுத்து மரபின் ஆக்கங்களா?' என்ற விவாதத்தின் விளைபொருளே பேரா.கே. பழனிவேலு போன்றோரின் ஆய்வுகள் என்ற பேராசிரியர் நா. சுப்பிரமணியம் அவர்க ளின் கருத்துக்களும் இது தொடர்பில் கவனத்துக்குரி யவை.

## அடிக் குறிப்புகள்:


பேரா. கைலாசபதி அவர்களின் 'Tamil Heroic Poetry' (1968) நூல் பன்மொழிப் புலமையும், சங்க இலக்கியத்தில் ஆழ்ந்த புலமையும் மிக்கவரான கு.வெ. பாலசுப்பிரமணியம் அவர் களால் 2006-ம் ஆண்டில் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. ஆங்கில மூலத்தில் உள்ள கருத்துக்களை உள்வாங்கி இவ் வறிஞர் சிறப்பாக மொழிபெயர்த்திருந்த போதும் தமிழ்நடை இறுக்கமானதாக அமைந்துவிட்டது. இலகு நடையில் சுய மாக எழுதும் சுதந்திரம் அப் பேரறிஞருக்குக் கிடைக்க வில்லை. 'தமிழ் வீரநிலைக் கவிதை' மொழிபெயர்ப்புப் பற்றி குறை கூறுவோரின் கவனத்துக்காக இக் குறிப்பை எழுதும் தேவை எழுந்தது. ஆங்கில மூலத்தையும், தமிழ் மொழிபெ யர்ப்பையும் அருகருகே வைத்துப் படித்தல் நல்லது. கைலா சபதி, கு.வெ. பாலசுப்பிரமணியம் என்னும் இரு பேரறிஞர்க ளின் தகைமையை அப்போது கண்டு உணரலாம்.

கைலாசபதி அவர்கள் தமது ஆய்வு நூலின் கருத்துகளைத் தமக்கே உரிய எளிமை, தெளிவு, திட்பம் என்பன மிகுந்த நடையில் விளக்கிக் கூறும் கட்டுரைகள் சிலவற்றை தமிழில் எழுதினார். அவர் எழுதிய 'தமிழ் வீரயுகப் பாடல்கள்' என்ற தலைப்பில் அமைந்த கட்டுரை 'ஒப்பியல் இலக்கியம்' என் னும் நூலின் 3-வது இயலாக அமைந்துள்ளது.

## உசாத்துணை:


- க.கை 2018: ஒப்பியல் இலக்கியம்
  காலச்சுவடு பதிப்பகம், நாகர் கோவில்
- கு.வெ.பா. 2006: தமிழ் வீரநிலைக் கவிதை
  மொழிபெயர்ப்பாளர்: பாலசுப்பிரமணியம் கு.வெ (ஆங்கில மூலம் க. கைலாசபதி) குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை
- BOWRA, C.M HEROIC POETRY, LONDON 1952
- LORD A.B. THE SINGER OF TALES LONDON, 1960

(மேற்கூறிய இரு நூல்கள் கைலாசபதி அவர்களால் விதந்துரைக்கப்பட்டவை கட்டுரையாசிரியரின் பார்வைக்குக் கிடைக்கவில்லை)

shanmugalingam@thaiveedu.com

# மொழியியலாளரின் "இரட்டை வழக்கு" பற்றிய கருத்தும், தொலைநோக்கில் தமிழ் மொழியில் அதன் தாக்கமும்

- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

**தொ**குப்புரை - ஒரே மொழியில் 'எழுத்துவழக்கு', 'பேச்சுவழக்கு' ஒரே பேச்சாளரால் அல்லது ஒரே சமுதாயத்தினரால் பயன்படுத்தப்படும் போது 'இரட்டைவழக்கு' உருவாகுகிறது. ஒரு மொழியின் இரட்டைவழக்குத் தன்மை, அம்மொழி, பல கிளைமொழிகளாகப் பிரியத்தக்க நிலையை உருவாக்கும் என்பது மொழியியலாளர் கருத்து. இது தொடர்பாகப், பேச்சு, எழுத்து ஆகிய இரு மொழிகளினதும் முக்கியத்துவம் தமிழ் அறிஞர்களால் நன்கு ஆராயப்பட்டது. இரு வழக்குகளின் முக்கியத்துவமும் உணரப்பட்டு, பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையேயான இடைவெளியைக் குறைக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம், தமிழர் வரலாற்றின் பெருமை பற்றிய விளிப்புணர்ச்சி, கல்வியறிவு அனைத்து மக்களுக்கும் கிடைக்கும்படியான முயற்சி, தமிழ்நாடு முழுமையையும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதலுக்குரிய போக்குவரத்து வசதி, பொதுமக்கள் தொடர்பு சாதனங்கள் விருத்தி முதலியவை பற்றிய திட்டமிடல் இன்று செயற்திட்டங்களாகி வெற்றிநடை போடுகின்றன. இன்று, தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் அளப்பரியது. எதிர்காலத்தில் தமிழ்மொழி மேலும் பிரிந்து செல்வதற்கான சாத்தியக்கூறுகள் மிகமிகச் சொற்பம் என்பது இவ்வாய்வின் முடிவாகும்.

**ஆய்வுத் தலைப்பு:** மொழியியலாளரின் 'இரட்டை வழக்கு' பற்றிய கருத்தும், தொலைநோக்கில் தமிழ்மொழியில் அதன் தாக்கமும்.

**குறிப்புச் சொற்கள்:** பேச்சுவழக்கு, எழுத்துவழக்கு, இரட்டைவழக்கு, கிளைமொழி, வட்டாரவழக்கு, உலகவழக்கு, செய்யுள்வழக்கு, கடன் வாங்கல், பிறமொழித் தாக்கம், மொழித் தூய்மை

## அறிமுகம்:

நோக்கமும் தேவையும் - உலகில், வாழும் மிகப் பழமையான மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று. பன்னெடுங்காலமாக இந்தியாவிலும் இலங்கையிலும் பேசப்பட்டுவந்த தமிழ்மொழி, இன்று உலகின் பல்வேறு பாகங்களிலும் பேசப்படும் மொழியாகவுள்ளது. தமிழ் பேசும் ஒவ்வொரு நாட்டிலும் பேசப்படும் வழக்குகள் ஒவ்வொன்றும் தனித்தனி மொழியாக மாறும் நிலை உருவாகுமா? தமிழ்நாட்டில் பேச்சுவழக்காக அறியப்படும் ஒவ்வொரு வழக்கும் காலக்கிரமத்தில் தனித்தனி மொழியாக மாறும் நிலை உருவாகுமா? தொன்மை மிக்க தமிழ்மொழியைப் பிளவுபடுத்திச் சிதைக்கும் நிலை தவிர்க்கப்பட வேண்டியது என்பது இவ்வாய்வின் நோக்கமும் தேவையுமாகும்.

**ஆய்வுச் சிக்கல்:** இன்று தமிழ்மொழி, தமிழ் நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும், உலகின் பல்வேறு நாடுகளிலும் பேசப்படுகிறது. பல்வேறுபட்ட சூழலில் பேசப்படும் தமிழ்மொழி ஓரிடத்தில் பேசுவது போல இன்னோரிடத்தில் பேசப்படுவதில்லை. இந்நிலையில் தமிழ்மொழி பல கிளைமொழிகளாக வளர்ந்து விடாது காப்பது இலகுவான காரியமல்ல.

**ஆய்வியல் நெறி:** வரலாற்று ஆய்வு, சமூக வரலாற்றாய்வு, பகுப்பாய்வு:

**கருதுகோள்:** மொழியியலாளர், பேச்சுமொழியை முன்னிலைப்படுத்தித் தமிழில், 'பேச்சுவழக்கையும்', 'எழுத்துவழக்கையும்' தனித்தனி மொழிகளாகக் கொண்டு அவற்றிற்குத் தனித்தனியான இலக்கணம் வகுக்கவேண்டும் என்னும் கருத்தை முன்வைக்கிறார்கள். இந்நிலை, தமிழிலுள்ள பேச்சுமொழி, வட்டாரக் கிளைமொழிகள் காலக்கிரமத்தில் தனிமொழிகளாக மாறும் நிலைக்கு வழிவகுக்கிறது. இது, தமிழ்மொழியைப் பிளவுபடுத்திச் சிதைத்துச் சீர்குலைக்க வழிவகுக்கும். இன்றுள்ள சூழலில் இந்நிலை ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் மிகக் குறைவு என்பதே இந்த ஆய்வின் கருதுகோளாகும்.

## சான்றுகள்:

**முதன்மைச் சான்றுகள்:** தொல்காப்பியம், பிற்கால இலக்கண நூல்கள், மொழியியல் நூல்கள்.

**துணைச் சான்றுகள்:** மொழியியலாளர், மொழி ஆய்வாளர்களின் பேச்சுவழக்கு, எழுத்துவழக்கு, கிளைமொழி, வட்டாரமொழி முதலியவை பற்றிய ஆய்வுகள்.

**அமைப்பு:**

- மொழிவழக்கு - அறிமுகம்
- வரலாற்றில் இரட்டை வழக்கு
- பேச்சுவழக்கு, எழுத்துவழக்குகளுக்கு இடையேயுள்ள வேறுபாடுகள்
- இரட்டை வழக்கு - இன்று
- கிளைமொழி தனிமொழியாதலின் சாதகம், பாதகம்
- ஆய்வு முடிவுரை

## மொழி வழக்கு - அறிமுகம்:

ஒலியை அடிப்படையாகக் கொண்டே பேச்சுவழக்கும் பேச்சு வழக்கைத் தொடர்ந்து எழுத்துவழக்கும் உருவாயின.

ஒலி இல்லாவிட்டால் பேச்சில்லை. ஆனால், எழுத்து இல்லா விட்டால் மொழி இல்லை என்ற நிலை இல்லை. உலகில் பல மொழிகள் இன்னமும் எழுத்து இல்லாதவையாகவே இருக்கின்றன. தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்திலுள்ள தோடா, கோத்தா, கசபா முதலிய மொழிகள் பேச்சு மொழிக ளாகவே இருக்கின்றன. தெலுங்கு எழுத்துகள் ஆறாம் நூற் றாண்டிலும் கன்னட எழுத்துகள் எட்டாம் நூற்றாண்டிலும் வெளிப்பட்டதாகவும் ஆனால் இலக்கியப் படைப்பு பத்தாம் நூற்றாண்டின் மேல் தான் முன்னேறத் தொடங்கியதாகவும் அறியப்படுகிறது.

இலத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகள் இன்று எழுத்து மொழிகளாகவே வாழ்கின்றன.

அயல் மொழி எழுத்துக்களைக் கடனாகப் பெற்ற மொழிக ளும் உண்டு. கொங்கணி மொழியையும் துளு, கொடகு போன்ற திராவிட மொழிகளையும் எழுதக் கன்னட மொழி எழுக்களைப் பயன்படுத்துவர்.

**பேச்சு வழக்கு:** ஒரு மொழியின் பயன்பாட்டு நிலையில், சமூகத்தில், மக்கள், பொதுவாகப் பேசப் பயன்படுத்தும் மொழியைப் ‘பேச்சுவழக்கு’ என்றும், இலக்கியப் படைப்பு கள், மேடைப் பேச்சுகள் போன்றவற்றிற்குப் பயன்படுத்தும் மொழியை ‘எழுத்துமொழி’ என்றும் வழங்குவர். இவற்றையே மொழியியலாளர் ‘இரட்டை வழக்கு’ என்பர். இரு வழக்குக ளிடையேயும் வேறுபாடு உண்டு. பேச்சுத் தமிழ், மொழியின் ஒரு வழக்காகாது, பேசுபவர் பேச்சில் ஏற்படும் மாற்றங்களே. பேச்சுமொழியில் உணர்ச்சிக் கூறுகள் அதிகம். பேச்சுமொழி எழுத்துமொழியை விட எளிமையாகக் கருத்தைப் புலப்படுத் துகிறது. வேறுபடப் பேசுவதாலும் தவறாக ஒலிப்பதாலும் குறையாலும் நாவின் வழுவாலும் பேச்சில் திரிபு ஏற்படுகி றது. பேச்சுத் தமிழில் சோம்பேறித்தனம், விரைவு, சிதைவு, பிழை மலிந்திருக்கும் என்கிறார், தமிழண்ணல்.

ஓர் இடத்தில் வசிப்பவர், ஓர் இனத்தவர், ஒரு கூட்டத்தவர், ஒரு சமயத்தவர் அல்லது ஒரு தொழில் சார்ந்தவர் தம்முள் கருத்தைத் தடையின்றிப் பரிமாறிக் கொள்வதற்குப் பயன்ப டுத்துவது பேச்சுவழக்காகும். பேச்சுமொழி நாட்டுக்கு நாடு, மாவட்டத்திற்கு மாவட்டம், ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு வேறுபடுகிறது. அத்துடன், அவரவர் வாழ்வாதாரம், வாழும் சூழல், கல்வியறிவு, வயது, பால், புதுக்குடியேற்றம், தனித்து வாழ்தல், போக்குவரத்துச் சாதனப் பெருக்கம், பொருளாதார நிலை, சமூக அமைப்பு முதலியவற்றைப் பொறுத்தும் பேசும் மொழி வேறுபடுகிறது. ஒருமொழி பேசும் மக்களி டையே எத்தனை குழுக்கள் உள்ளனவோ அத்தனை வேறு பட்ட பேச்சுமொழிகள் உள்ளன என்பர்.

பெரும்பாலும் எண்ணிக்கையில் அதிகமான பேச்சுவழக்கு மொழிகளை அம் மொழி வாழும் நிலப்பரப்பைக் கொண்டு தீர்மானிக்கலாம். தொல்காப்பியப் பாயிரத்தில் பனம்பாரனார், ‘வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்’ என்று தமிழ்நாட்டு எல்லைகளை வரையறுத்தார். ஆனால், காலப்போக்கில் பல்வேறு காரணங்களால் தமிழ்நாடு, தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு என்று பல மொழிகள் பேசும் பல நாடுகளாகப் பிரிந்தன.

இன்று, உலகின் பல்வேறு பாகங்களில் தமிழர் வாழ்கிறார் கள். ஈழத்தமிழர் பேசும் தமிழ் இந்தியத்தமிழரைப் போலவோ, மலேசியத் தமிழரைப் போலவோ இருக்காது. அதே போலவே, ஈழத்தில், யாழ்ப்பாணத்தவர் பேசும் தமிழ், மட்டக் களப்புத் தமிழரைப் போலவோ, மன்னார், திருகோணமலைத் தமிழரைப் போலவோ இருக்காது.

வெவ்வேறு பேச்சுவழக்குகளையுடைய குழுக்களிடையே உற வும் பழக்கமும் குறையுமானால் அவர்கள் பேச்சுவழக்கில் வேறுபாடு அதிகமாகும். அளவுக்கு அதிகமாக வேறுபட்டால் பொதுவான கருத்துக்களை உணர்த்தும் தகுதியை மொழி இழந்துவிடுகிறது. அதே போல் ஒரே தன்மையதாக இருந் தால் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் தன்மையை மொழி இழந்து விடுகிறது. இவ்விரு வகைத் தன்மைகளும் மொழிக்கு இன்றியமையாதது. இவ்விரு வகைச் செல்வாக்கால் ஏற்பட் டவையே கிளைமொழி, குறுமொழி, சிறப்புமொழி, பொது மொழி என்பன.

பேச்சுவழக்கு பேச்சுக்கு மட்டுமே உரியது. பேச்சுவழக்கு கதைகளில் உரையாடலுக்கு மட்டுமே பயன்படுத்தவேண்டும். பேச்சுவழக்கும் வட்டாரவழக்கும் ஒன்றல்ல. வட்டாரவழக்கு முழுச் சொற்கள், ஒரு பகுதியில் வழங்குவது, வேறு பகுதி யில் இலகுவில் விளங்காது. ஒரே சொல் ஓரிடத்தில் ஒரு பொருளையும் பிறிதோரிடத்தில் பிறிதொரு பொருளையும் தரும். வட்டார வழக்கு ஏற்புடையது. இலக்கியத்தில் இடம் பெறும் தகுதியுடையது.

## எழுத்து வழக்கு:

ஒலி வடிவத்தைக் கண்ணால் கண்டு, படித்து உணருமாறு, வரிவடிவமாக எழுதப்படுவது எழுத்துவழக்கு. இவ்வாறு எழு துவதும், படிப்பதும் மொழியின் இரண்டாம் நிலை. பேச்சு மொழிக்கு நாம் தந்த வடிவமே எழுத்துமொழியாகும். மொழி நீண்ட காலம் வாழ்வதற்கு எழுத்துமொழி இன்றியமையாதது.

உலகில், எழுத்து இல்லாத மொழிகள் இருந்தாலும்

மொழிக்கு எழுத்து சிறப்பாகும். ஒரு மொழியின் வளத்தை அறிவதற்கும் வரலாற்றை நிறுவுவதற்கும் எழுத்தால் ஆக்கப் பட்ட சாசனங்களும், இலக்கியங்களும் சான்றாகும். எழுத்து மொழியில் இலக்கிய மொழி, உரைநடை மொழி, பத்திரிகை மொழி, கடிதமொழி எனப் பலவகை உள. இலக்கிய வழக் கைப் படைப்பிலக்கியம், கட்டுரை, ஆய்வுரை முதலியவற் றில் அறியலாம். இதுவே எழுத்துத் தமிழுடனும், கட்டளை மொழியுடனும் (Standard language) நெருங்கிய தொடர்புடை யது. எழுத்துவழக்கு, உலகின் பல்வேறு பாகங்களில் வாழும் தமிழராலும் புரிந்து கொள்ளக்கூடியது. எழுத்துவ ழக்கு சிந்தித்து எழுதப்படுவதால், பிழைகளைத் திருத்திக் கொள்ள வாய்ப்பு இருப்பதால் திருத்தமான மொழிநடையில் அமைகிறது. ஆனால் பேச்சுமொழியில் அந்த வாய்ப்பு இல்லை, அது திருத்தமான இலக்கிய நடையில் அமைவ தில்லை. பேச்சுமொழி மக்களின் மனநிலைக்கு ஏற்ப அமை வதால் விரைந்து மாற்றமடைந்து வருகிறது, பிறமொழிக் கலப்பு அதிகமாக ஏற்படுகிறது. எழுத்துமொழியில் மொழித் தூய்மை பெருமளவுக்குப் பாதுகாக்கப்படுகிறது.

கட்டுரை, கவிதை, நாடகம், கதை முதலியவற்றை எழுதும் போது, கதை மாந்தர்களின் பேச்சுக்களை, அவரவர் கல்வித் தரம், வட்டார வழக்கு முதலியவற்றில் எழுதி, கதை சொல் லும் கதாசிரியன் தன் கூற்றாக வரும் பகுதிகளை 'எழுத்துத் தமிழில்' எழுதுவதே உகந்தது.

தமிழில், நாளிதழ், வாரவிதழ், மாதவிதழ், தொலைக்காட்சி, திரைப்படம் என்பவை மக்கள் ஊடகங்களாகும். இன்று, இவற்றில் பேசப்படுவதையே, காட்டப்படுவதையே பார்வை யாளரும் வாசகர்களும் பின்பற்றுகிறார்கள். கட்டுப்பாடற்ற இந்த ஊடகங்களை நிர்வகிப்பவர்கள் மொழியைப் பாது காக்க உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் இவையே மொழி யைச் சிதைப்பதற்குக் காலாக அமைந்துவிடும்.

தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் அச் சதெலுங்கு, பழங்கன்னடம், எழுத்தச்சன் மலையாளம் என மொழி இருவகைப்படுகின்றன. ஆனால், தமிழில் பழமை புதுமை என அத்துணை வேறுபாடில்லை.

## வரலாற்றில் இரட்டை வழக்கு:

பேச்சுவழக்கு, எழுத்துவழக்கு ஆகிய இரு வழக்குகளையும் தொல்காப்பியர் முதலான இலக்கணகாரர் பிரித்து வேறு வேறாக அறிந்திருந்தனர், பயன்படுத்தினர், இரண்டும் ஒன் றைவிட்டு ஒன்று அதிகம் விலகாதபடி பார்த்துக் கொண்ட னர். தமிழ்மொழியின் பேச்சுக்கூறுகள், இலக்கணக் கோட்பா டுகளாக இலக்கணங்களில் வகுக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியர், மொழி வழங்கும் வகைகள் இரண்டு என்ப தைத் தொல்காப்பியம் முழுமையும் கூறியிருக்கிறார். எடுத் துக்காட்டாக,

***'கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்***
***வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்***
***விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்***
***வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்***
***நன்மதி நாட்டத் தென்மனார் புலவர்'***

- தொல்காப்பியம், குற்றியலுகரப் புணரியல்: 78-483

இங்கு, தொல்காப்பியர், 'வழக்கு' என்றது பேச்சு வழக்கை-யேயாகும்.

எழுத்துக்கும் சொல்லுக்கும் தனித்தனியான அதிகாரங்களை வகுத்த தொல்காப்பியர், மொழி வளர்ச்சியில் ஏற்படக்கூடிய மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு அதிகாரத்தி லும் கூறப்பட்ட விதிகளாலும் உத்திகளாலும் முடிவு பெறா தவற்றை 'இருவகை வழக்கும்' நோக்கி அமைத்துக் கொள் ளும் வகையில் 'புறனடைகள்' அமைத்திருப்பது எழுத்து, பேச்சு ஆகிய இருவழக்குகளுக்கும் அவர் கொடுத்திருக்கும் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

தொல்காப்பியர், 'இருவகை வழக்கையும்' ஏற்றுக் கொண்டு 'உலக வழக்கிற்கு' முதன்மையையும் சிறப்பையும் தந்தார். தொல்காப்பியப் பாயிரத்தில் பனம்பாரனார்,

***'தமிழ்கூறு நல்லுலகத்து,***
***வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்'***

என்று உலகியல் வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இரு வழக்குகளின் அடிப்படையிலும் தொல்காப்பியம் எழுதப்பட்ட தைக் குறிப்பிடுகிறார். உலக வழக்கு என்பது உயர்ந்தோர் வழக்கு.

தொல்காப்பியர், தமிழில் செய்யுள் இயற்றுவதற்குரிய சொற் களாக,

***'இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று***
***அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே'***

- தொல். சொல்: 397

என்று நால்வகைச் சொற்களைக் குறிப்பிடுகிறார். இன்று, இத் திசைவழக்குகளில் சில, மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலியன தனிமொழிகளாக மாறிவிட்டன. 'திசைச் சொல்' என்று தொல்காப்பியர் குறிப்பிடுவது கிளைமொழியே என்று தற்கால மொழியியலாளர் கூறுவர். திசைச்சொல் பற் றித் தொல்காப்பியர் கூறுயிருப்பது,

***'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்***
***தம்குறிப் பினவே திசைச்சொல் கிளவி'***

- தொல்.சொல், 400

அதாவது 'செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிரண்டு நாடுக-ளிலும், தாம் குறித்த பொருளை விளக்கும் சொற்கள் திசைச் சொல் எனப்படும்' என்பது பொருள். அதாவது, திசைச்சொல் எந்த நாட்டில் வழங்குகிறதோ அந் நாட்டினருக்கு மட்டுமே பொருள் தரும். இப்பன்னிரண்டு நிலங்களும் முதலில் திசை வழக்குகளாகவே இருந்திருக்கின்றன. அதாவது தமிழின் வட் டார வழக்குகளாகவே விளங்கியிருக்கின்றன. தொல்காப்பியர் இவற்றைக் 'கொடுந்தமிழ்நாடு' என்று குறிக்கவில்லை.

முதல் உரையாசிரியராகிய இளம்பூரணர், 'திசைச் சொல் என்பது 'செந்தமிழ்நாட்டை அடையும் புடையும் கிடந்த பன் னிரு நிலத்தார் தங்குறிப்பினையே இலக்கணமாகவுடைய திசைச்சொற் கிளவிகள் என்றவாறு' என்றார். இங்கு, 'திசை நாட்டார் வழங்கும் சொல்' என்றே குறிப்பிடுகிறார். 'அடை

யும் புடையும் கிடந்த' என்றது 'சுற்றிக் கிடந்த நாடுகளே யாம்.'

'அவை தங்குறிப்பினவே என்றது, அவை ஒரு வாய்ப்படவே யல்ல, தத்தம் மரபினும் பின் வேறு வேறு வாய்பாட்ட என் றற்கும், அவர் எவ்வாறு குறித்து வழங்கினாரோ அஃதே அவற்றிற்கு இலக்கணம் என்றற்கும் என்பது' என்றார்.

இடைக்கால உரையாசிரியர்கள் இவற்றைக் கொடுந்தமிழ் நாடு! என்று குறிக்கலாயினர். அதற்குக் காரணம் அங்கே வழங்கிய தமிழ் மேலும் மேலும் திரிபுற்றமையாக இருக்க லாம்.

இளம்பூரணர் முதலாகச் சங்கரநமச்சிவாயர் ஈறாக வாழ்ந்த உரையாசிரியர்கள், 'மதுரையைச் சூழ்ந்த பாண்டி நாட்டின் வடபகுதியில் வழங்கிய தமிழைச் செந்தமிழாகக் கொண்டு அதிலிருந்து வேறுபட்ட ஏனைய பன்னிரு தமிழ்ப் பகுதிக ளில் வழங்கும் தமிழைக் கொடுந்தமிழ் அல்லது கிளை மொழி' எனக் கொண்டனர். மலை, ஆறு, காடு முதலிய இயற்கை எல்லைகளால் பிரிக்கப்பட்டுள்ள நிலப்பரப்பில் வழங்கும் மொழிகளில் இத்தகைய வேறுபாடு உள்ளன.

| அப்பன்னிரு நிலங்களும் அவற்றின் இன்றைய பெயர்களும்: | |
|---|---|
| கிளைமொழி அல்லது திசைச்சொல் வழங்கிய இடம் | தற்காலப் பெயர் |
| தென்பாண்டி நாடு | திருநெல்வேலிப் பகுதி |
| குட்டநாடு | கேரளாவில் கோட்டயம், கொல்லம் மாவட்டங்கள் |
| குடநாடு | வடமலபார் |
| கற்காநாடு | கோயம்புத்தூர் சார்ந்த மலைப் பகுதிகள் |
| வேணாடு | திருவாங்கூரின் தென்பகுதி |
| பூழிநாடு | கோழிக்கோடு |
| பன்றிநாடு | பழனி மலை சூழ்ந்த பகுதி |
| அருவாநாடு | வட ஆர்க்காடு தென் ஆர்க்காடு |
| அருவா வடதலை நாடு | தமிழகத்தின் வடக்குப் பகுதி |
| சீதநாடு | நீலகிரி |
| மலாடு* | திருக்கோவலூர் சூழ்ந்த பகுதி |
| புனல்நாடு | சோழநாடு |

அட்டவணையில் உள்ள பகுதிகளில் கேரளப் பகுதிகள் இளம்பூரணர் காலத்திலேயே தனிமொழியாகப் பிரிந்து செல் லும் அறிகுறியைக் காட்டுகின்றன. இளம்பூரணரால் குறிக்கப் பட்ட சில பகுதிகள் இன்னமும் பிரிந்து போகாமல் இருப்பது நம்பிக்கையை ஊட்டுவதாக உள்ளது.

***'தெரிந்த மொழியால் செவ்விதிற் கிளந்து***
***தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்***
***புலனென மொழிப் புலனுணர்ந்தோரே'***

- செய்யுளியல்: 233

இளம்பூரணர், 'பலருக்கும் தெரிந்த வழக்குச் சொல்லினானே தொடுக்கப்பட்டு, ஆராய வேண்டாமற் பொருள் தோன்றுவது புலன்' என்றார். இதனைப் பேராசிரியர், 'பாடி மாற்றங்கள்' என்றார். இதற்கு எடுத்துக்காட்டாக 'விளக்கத்தார் கூத்து' முதலிய நாடகச் செய்யுட்களைக் கூறுவார். நாடகச் செய்யு ளில் கூற்றுக்குரியாருக்கு ஏற்றவாறு சொல் அமையவேண்டிச் சேரிமொழி விரவி வருதல் வேண்டும் என்கிறார்.

தொல்காப்பியர், அக் காலநிலையை மனதில் கொண்டு 'வட சொல்' என்று கூறிய இடத்தில் இன்று 'பிறமொழிச் சொற்கள்' அனைத்தையும் குறிப்பிடவேண்டும். நவீன தொழில்நுட்பம் காரணமாகப் புதிய சொற்கள் தேவைப்படின் புதிய சொற்க ளைத் தமிழில் உருவாக்கலாம், 'மின் அஞ்சல்' என்பது போல. அல்லது பிறமொழிச் சொற்களைத், தமிழ் மரபிற்கேற் பத், தமிழ் ஒலிக்கு உட்படுத்தித், தமிழ் சொல்லாக்கி வழங் கலாம்.

***'எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்***
***செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே'***

- நன்னூல் சொல். 388

பண்டைய இலக்கணங்களும் இலக்கியங்களும் வழங்கிய அப் பொருளை அச் சொல்லால் அந்நெறியால் கூறுவது மரபு இலக்கணமாகும். அம் மரபு மாறிச் சொற்கள் வழங்கு மாயின் சொற்கள் பொருள் இழந்து வேறு பொருள் தரும் என்றார் பிற்காலத்தில் வாழ்ந்த நன்னூலார். இதனையே தொல்காப்பியர்,

'மரபு நிலை திரியின் பிறிது பிறிது ஆகும்' - தொல். பொருள். மரபியல் நூ. 93. என்றார்.

இங்கு, 'வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே நிகழ்ச்சி அவர் கட்டாகலான' - தொல். பொருள். மரபியல் நூ. 94., என்று தெளிவுபடுத்துகிறார்.

தொல்காப்பியரே, ஒரு பொருள் குறித்த பல சொற்கள் பற்றி யும், பல பொருள் குறித்த ஒரு சொல் பற்றியும் கூறியிருக்கி றார். மொழி வளரும் இயல்புடையது. வளர்ந்து கொண்டே இருக்கும், ஆனால், மொழிக் கோட்பாடுகளை அனுசரித்து மொழி வளரவேண்டும்.

எழுத்துக்கும் சொல்லுக்கும் தனித்தனியான அதிகாரங்களை வகுத்த தொல்காப்பியர், மொழி வளர்ச்சியில் ஏற்படக்கூடிய மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு அதிகாரத்தி லும் கூறப்பட்ட விதிகளாலும் உத்திகளாலும் முடியாது நிற் பவற்றை 'இருவகை வழக்கும்' நோக்கி அமைத்துக் கொள்

ளும் வகையில் 'புறனடைகள்' அமைத்திருப்பது எழுத்து, பேச்சு ஆகிய இருவழக்குகளுக்கும் அவர் கொடுத்திருக்கும் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

தமிழ்மொழி இன்றுவரை ஓரளவு கட்டுக்கோப்பாக இருப்பதற்குத் தொல்காப்பியர் வகுத்த மொழிவழக்கே முதற் காரணமாகும். காலத்திற்குக் காலம் மொழியைக் கட்டிக் காப்பதில் போராட்டங்கள் நடந்தாலும் இயன்றவரை மொழிக் கட்டமைப்பு காத்து வரப்பட்டிருக்கிறது என்றே கூறவேண்டும். இலக்கணமும் மொழியியலும் மொழிகளை ஆராயும் துறைகள் என்ற முறையில் ஒத்தவை, முரணானவை அல்ல, ஒன்றிலிருந்து மற்றையது கிளைத்தது.

## பேச்சு வழக்கு, எழுத்து வழக்குகளுக்கு இடையேயுள்ள வேறுபாடுகள்:

எழுத்துவழக்கும் பேச்சுவழக்கும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை. ஆனால், அவற்றிடையே ஒற்றுமைக் கூறுகளை விட வேற்றுமைக் கூறுகளே அதிகம் காணப்படுகின்றன. எழுத்துமொழி, செய்யும் செயலின் தன்மை, பேச்சு மொழி செய்யும் செயலின் தன்மையிலிருந்து வேறுபடுகிறது. எழுத்துவழக்கின் அமைப்பும் பேச்சுவழக்கின் அமைப்பிலிருந்து வேறுபடுகிறது.

இவ்விரு வழக்குகளுக்கிடையே காணப்படும் வேறுபாடுகள் காரணமாக இவ்விரு வழக்குகளையும் ஒரு மொழியின் இரு வழக்குகளாகக் கொள்ளலாமா அல்லது வெவ்வேறு மொழிகளாகக் கொள்ளலாமா என்னும் கருத்து அறிஞர்களிடையே நிலவுகிறது. அவர்கள், இந்தப் பிரச்சினையை வெளிநாட்டார் பார்வையிலிருந்து பார்க்கிறார்கள். தமிழை முறையாகக் கற்று, தமிழ்நாட்டிற்கு வரும் வெளிநாட்டார் ஒருவரால் பேச்சுத்தமிழைப் புரிந்துகொள்ள முடியாதுள்ளது. வீரமாமுனிவர் போன்ற வெளிநாட்டவர் மட்டுமல்ல இன்றும் தமிழ்நாடு வரும் வெளிநாட்டு அறிஞர்களும் அவ்வாறே கருதுகிறார்கள்.

மொழி வழக்குகளைப் புரிந்து கொள்வதில் அயல்நாட்டவருக்குள்ள இந்தப் பிரச்சினையைக் கொண்டு எமது மொழியை நாம் பிளவுபடுத்துவது எந்த வகையில் நியாயம். இதே நிலை தமிழருக்கு அயல்நாட்டில் ஏற்படுகிறதா? அவரவர் மொழியை அந்நியர் கையாளும் பொழுது இடர் நேரத்தான் செய்யும். எமது தேவையைப் பொறுத்து அவற்றை நாம் கற்றுக்கொள்ள வேண்டுமே ஒழிய மற்றவர் மொழிவழக்குகளை மாற்றி அமைக்கமுடியுமா?

## இரட்டை வழக்கு - இன்று:

தொழில்நுட்பம், போக்குவரத்து முதலிய நவீன வசதிகளால் உலகம் இன்று நெருங்கியுள்ளது. உலகின் ஒரு மூலையில் நடக்கும் நிகழ்வு உடனுக்குடன் உலகப் பரப்பெங்கும் அறியப்படுகிறது.

அறிவியல் வளர்ச்சி, பல்லினப் பல்கலாசார மக்கள் ஒன்று கூடி வாழும் தன்மை முதலியவற்றால் மொழியில் புதுப்புதுப் பொருட்களும் சொற்களும் அறிமுகமாகின்றன. எழுத்து மொழி, கால ஓட்டத்தில் பல்வேறு மாற்றங்களைப் பெற்றிருக்கிறது. எழுத்துவழக்கில் பேச்சுவழக்கின் தாக்கம் அதிகரித்துள்ளது. இவ்விரு வழக்குகளின் இன்றைய நிலையை ஒலியனியல், உருபனியல், தொடரியல், சொற்களஞ்சியவியல் ஆகிய நிலைகளில் ஆராயலாம்.

### ஒலியனியல்:

- தொழில்நுட்பத் தேவை காரணமாகத், தமிழ்மொழிச் சொற்களிலிருந்து புதிய சொற்கள் உருவாக்கப்படுகின்றன. எடு - மின்னஞ்சல், வானொலி.
- வழக்கிலிருக்கும் சொற்களுக்குப் புதிய பொருள் வளர்ச்சியடைகிறது.
- பிறமொழிச் சொற்களை மாற்றமின்றிப் பயன்படுத்துதல் - இது, தமிழில் புதிய ஒலியன்களை அறிமுகம் செய்கிறது.

### உருபனியல்:

புதிய மாற்றங்கள் அறியப்படுகின்றன. உருபனியல் வரலாற்றில் பழைய எழுத்துவழக்கில் அறியப்படாத 'நீங்கள்' என்னும் சொல், தற்போது மரியாதை ஒருமைக்கும் பன்மைக்கும் பயன்படுத்தப்படுகிறது. இது பேச்சுவழக்கிலிருந்து தான் வந்திருக்கவேண்டும் என்பது அறிஞர் கருத்து.

### தொடரியல்:

பல சொற்கள், தொடரியலில் பேச்சுவழக்கிலிருந்து இன்று எழுத்துவழக்கிற்கும் பயன்படுத்தப்படுகிறது. இலக்கணத்தோடு சேர்ந்த இம் மாற்றம் மிகவும் வரவேற்கத்தக்கது. தமிழில், 'தான்' என்னும் சொல் தொடர் அமைப்பில் வற்புறுத்தல், தற்சுட்டு ஆகியவற்றை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது. வற்புறுத்தல் பொருளில் கையாளும் பொழுது, எழுவாய்க்கும் வற்புறுத்தல் சொல்லுக்கும் இடையில் 'தான்' அமைந்து உறுதி செய்கிறது.

எடு - நான் தான் செய்தேன்.

இது ஒருமை, பன்மை இரண்டிற்கும் இன்று பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பேச்சுவழக்கு தற்போது எழுத்துவழக்கிலும் கையாளப்படுகிறது.

### சொற்களஞ்சிய இயல்:

ஆதியில் பேச்சுவழக்கில் மட்டுமே பயன்படுத்தப்பட்ட பல சொற்கள் இன்று எழுத்துவழக்கிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. பல்லின மக்கள் கூடி வாழும் சூழலில், சென்ற நூற்றாண்டில் தமிழில், பிறமொழிச் சொற்கள் அதிகம் பேச்சு வழக்கில் கலக்கத் தொடங்கின. இன்று தொடர்ந்து வரும்

விளிப்புணர்ச்சி காரணமாகக் கற்றறிந்தார் மத்தியில் இவை தவர்க்கப்படுகின்றன.

## கிளைமொழி தனிமொழியாதலின் சாதகம், பாதகம்:

சங்ககாலத்து எழுத்துத்தமிழ் இன்று வரலாற்றில் பல மாற்றங்களைப் பெற்று நவீன எழுத்துவழக்காக மாறியிருக்கிறது. இத்தகைய மாற்றம் வரவேற்கத்தக்கது.

இன்று, அரச செயற்பாடுகளுக்காக மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்ட பகுதிகளை ஆராயும் போது, பாண்டிய நாட்டுத் தமிழிலும் சோழ நாட்டுத் தமிழிலும் சிறப்புக் கூறுகளை ஆராயும்போது வேறுபாடு அறியப்படுகிறது. அதே நேரத்தில் பன்மொழி பேசும் மக்கள் கலப்புமிக்க சென்னை போன்ற பகுதிகளில் வேறுபாடு மேலும் அதிகரித்திருக்கிறது.

தமிழ்மொழி பேசுபவர்களில் ஏறக்குறைய 80 விழுக்காடு மக்கள் சராசரிக் கல்வி அறிவு அற்றவர்களாக இருந்தநிலை மாறிவருகிறது. கல்வியில் சராசரி நிலையை அடையாத பெண்கள், கீழ்த்தட்டு மக்கள், தொழிலாளிகள், ஏழை எளியவர்கள் முதலியவர்களுக்குத் தமிழ் பற்றியோ தமிழ் இலக்கியம் பற்றியோ தெரியாது. இவர்கள் எப்பொழுது சராசரி மொழியறிவைப் பெறுகிறார்களோ அன்று தமிழ்நாட்டின் பேச்சுமொழி, எழுத்துமொழி, வட்டாரமொழி என்றெல்லாம் நாம் பேசவேண்டிய தேவை அற்றுப்போய்விடும்.

கல்வி, மக்களிடையேயுள்ள, பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்குமான இடைவெளியை நிறைவு செய்யும். இது எதிர்காலத்தில் நடக்கும் என்று எதிர்பார்க்கலாம். தமிழிலிருந்து மலையாளம், கன்னடம், தெலுங்கு பிரிந்தது போன்று மேலும் சில கிளை மொழிகள் தோன்றலாம் என்ற ஐயம் தேவையில்லை.

இன்று உலகில் அறிவியல் வளர்ச்சியால் செய்தித்தாள், திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி முதலிய மக்கட் தொடர்பு சாதனங்கள் பெருகியுள்ளன. உலகம் கையடக்கத் தொலைபேசியில் அடங்கியுள்ளது. இவற்றின் தாக்கத்தால் எழுத்துமொழியின் ஆற்றல் பரவிவருகிறது. தேவைகள் அதிகமாக மனிதன் தன்னை உலகுடன் அதிகமாக இணைத்துக் கொண்டு ஓர் இனமாக, ஓர் நாடாக, ஓர் உலக மனிதனாக வாழ்வதால் பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் வேற்றுமைகள் குறைகின்றன. இதனால் கிளை மொழிகள் தோன்றுவதற்கான வாய்ப்புகளும் குறைவு எனலாம்.

இந்நிலையில், பேச்சுமொழியும் எழுத்துமொழியும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையவையாக, ஒன்றை ஒன்று அணைத்தவாறு இணைந்தே நடைபயில்பவையாகப் பார்க்கப்படுகிறது. இந்த இலக்கை நோக்கிப் பயணிக்கும் நாம் மேலே தரப்பட்டிருக்கும் செயற்திட்டங்கள், அவற்றை நடைமுறைப்படுத்தல், அவற்றிற்கான முயற்சிகள், அவற்றின் இன்றைய நிலை, எதிர்காலப் பயன் முதலியவற்றைப் பற்றிச் சிறிது பார்க்கலாம்.

- மொழித் திட்டமிடல்
- கல்வியில் முன்னேற்றமும் அறிவியல் மேம்பாடும்
- போக்குவரத்து வசதிகள்
- மக்கட் தொடர்பு சாதனங்கள்
- கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

## மொழித் திட்டமிடல்:

பேச்சுமொழி, எழுத்துமொழி இவற்றிடையேயுள்ள இடைவெளி காரணமாகக் கிளைமொழி, தனிமொழியாகப் பிரிந்து செல்வதைத் தடுக்கும் முகமாகத் தனிப்பட்ட தாபனங்களின் அல்லது அரசின் முயற்சியாக மொழித் திட்டமிடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது, படுகிறது. இதன் மூலம், எழுத்து வடிவமும் பேச்சு வடிவமும் உள்ள ஒரு மொழிக் கோட்பாட்டை நெறிப்படுத்துதல், மாற்றுதல் மற்றும் பாதுகாத்தல் முதலிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது மொழித் தூய்மையைக் காப்பாற்றும் முயற்சியாகும். இம் முயற்சி பிரான்ஸ், ஸ்பெயின், சுவீடன் முதலிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்டது.

பன்மொழிச் சூழலில், குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளில் காணப்படும் மொழிச் சிக்கலால் இத் துறையில் பலருக்கும் நாட்டம் ஏற்பட்டது. நோர்வேயில், ஐநர் ஹாகன் (Einar Haugen) என்பவர் திட்டமாதிரி வழங்கினார். 1956-ல் நான்கு படிநிலைகளையுடைய திட்டம் ஒன்றைப் பகுத்து 1983-ல் இதனைச் செப்பமாக்கி வழங்கினார். பின்னர் இது விரிவாக்கப்பட்டது. தமிழில் மொழித் திட்டமிடுதலில் முக்கியமானது எழுத்துச் சீரமைப்புப் பற்றிய கருத்து. இம் முயற்சியில் வா.செ. குழந்தைசாமி அவர்களின் எழுத்துச் சீரமைப்புப் பற்றிய ஆய்வு முக்கிய இடம் பெறுகிறது. 1993-ல் சென்னையில் நடந்த தமிழ் அன்பர் மாநாட்டில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றித் தீர்மானிக்கப்பட்டது.

ஐகார உயிர்மெய்கள் அனைத்தும் முன்னிரட்டைக் கொம்பு (னை, கை, மை என) வடிவு பெறும் ஒற்றை நிலைக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆகார உயிர்மெய் வடிவங்கள், கால் (கா, மா, தா என) பெற்றன.

பகுத்தறிவு இயக்கத்தில் பெரியாரின் இம் மொழித் திட்டமிடல் விளைவு 1978-ல் அரசாணை மூலம் தமிழக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைக்கு வந்து இன்றுவரை பயன்பாட்டில் உள்ளது.

மொழித் திட்டமிடுதலில் இன்றைய நிலையில் தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ள முக்கியமான சில கொள்கைக

ளையும் கோட்பாடுகளையும் அவற்றின் விளக்கங்களையும் எளிய நடையில் எழுதப்பட்ட 'மொழித் திட்டமிடல் (Language Planning) என்னும் நூல் 'தமிழின் புதுமையாக்கம், எழுத்துரு வாக்கம், நிலைபேறாக்கம்' முதலியவற்றை அறிவியல் கண் ணோட்டத்தில் விளக்குகிறது.

### கல்வியில் முன்னேற்றமும் அறிவியல் மேம்பாடும்:

கல்வி அனைத்துச் சமூகத்தினருக்கும் கிடைக்கவேண்டும் என்னும் இலக்கை நோக்கிய கல்வித் திட்டங்களும் பல்க லைக்கழக அனுமதிச் செயற்பாடுகளும் பல மட்டங்களிலும் முன்னெடுக்கப்படுகின்றன. இன்று, கீழ்மட்ட மக்களுக்கும் கல்வி கற்கும் வாய்ப்பு, வசதிகள், பதவி, அதிகாரம் முதலி யன அதிகரித்து வருகின்றன. கணனி, வசதி வாய்ப்பற்ற குழந்தைகளுக்கும் எட்டும் பொருளாக ஆக்கப்பட்டுள்ளது. கல்வி முன்னேற்றம் வளர வளர இரட்டைமொழி வழக்குக ளிடையே உள்ள இடைவெளி குறுகலாகும் வாய்ப்பு அதி கம்.

### போக்குவரத்துச் சாதனங்கள்:

தமிழ்நாடு முழுமையையும் இணைக்கும் நெடுஞ்சாலைக ளும், போக்குவரத்து வசதிகளும் அதிகரித்த காரணத்தால் மக்களிடையேயான உறவு நெருக்கமாகி மொழியால் ஒன்று படும் நிலையை உருவாக்கியிருக்கிறது. பரந்துபட்ட தமிழ் நாட்டில் பல வேறுபட்ட வட்டார வழக்குகள் காணப்பட்டா லும் அத்தனை வழக்குகளையும் புரிந்து கொள்ளும் அள வுக்கு மக்கள் நெருக்கமும் மொழியறிவும் விரிந்திருக்கிறது.

### மக்கட் தொடர்பு சாதனங்கள்:

தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக அறிவியல் கீழ்மட்டச் சமூ கத்துக்கும் எட்டும் தூரத்தில் அமைந்திருக்கிறது. தொலை பேசியிலேயே பல்வேறு தரவுகளையும் மக்கள் பெற்றுக் கொள்கிறார்கள். மக்கட் தொடர்பு சாதனங்கள் மூலம் மொழி மக்களை இணைக்கும் பாலமாகக் கொண்டு செல்லப்படுகி றது. கோவிட் பேரிடர்க் காலத்தில் தொடங்கிய 'இணையவ ழிக் கருத்தரங்குகள்' மொழி, பண்பாடு முதலியவை தொடர் பாக அதிகம் பேசத் தொடங்கிவிட்டன. ஈழத் தமிழர் இந்தி யாவின் வட்டார வழக்குகளை நன்கு புரிந்து கொள்ளும் அளவுக்குப் பேச்சுவழக்கு புரிந்து கொள்ளக்கூடியதாகவும் சிக்கல் அற்றதாகவும் உணரப்படுகிறது.

### கூடி வாழ்ந்தால் கோடி நன்மை:

இதனை உலகு உணரத் தொடங்கிவிட்டது. மொழிவாரியாக இணைந்து செயலாற்றுவது பயனுள்ளதாக அறியப்படுகிறது. உலக அரங்கில் பிரிந்த நாடுகளின் இடர்ப்பாடுகள் ஏனைய நாடுகளுக்குப் பாடமாக அமைகிறது.

### முடிவுரை:

ஒரு மொழி, உயிர்ப்போடு வாழ்வதற்குப் பேச்சுமொழியும், காலம் கடந்து வாழ்வதற்கு எழுத்துமொழியும் தேவை. இவ் விரு வடிவங்களையும் முறையாகப் புரிந்துகொண்டால், ஒரு மொழி பல கிளைமொழிகளாகப் பிரிந்து செல்வதைத் தடுக் கலாம்.

***'எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்.
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்.
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளியுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்.'***

- என்கிறார் பாரதிதாசன்

'தமிழ்மொழி ஒன்றே அன்று போல இன்றும் நிலவும் மொழி யாகும். தமிழை இன்றும் என்றும் ஒரே தமிழாகக் கட்டிக் காக்க, 'இரு வழக்குப் பற்றிய நல்லறிவு வளர்க்கப்படவேண் டும். இவை தனித்தனியே காக்கப்படவேண்டும். எதை எவ்வி டத்தில் எந்த அளவுக்குப் பயன்படுத்துவது என்னும் அறிவே கற்பிக்கப்படவேண்டும்' - என்கிறார், தமிழண்ணல்.

'செந்தமிழ் எனுஞ் சொல் உணர்வு நிலையில் இலக்கண வரம்பை வற்புறுத்துகிறது. செயல் நிலையில் செம்மொழி ஆக்கத்தை வற்புறுத்துகிறது. மதிப்பீட்டு நிலையில், இலக்க ணத்தை வற்புறுத்தாவிடில் கிளைமொழிகள் தோன்றிப் புது மொழிகளாக மாறும் என எச்சரிக்கிறது என்று மொழியியல் அறிஞர் செ.வை. சண்முகம் விளக்குகிறார்.

'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் உயிர்த் துடிப் புடன் இயங்கக் காரணம் பேச்சுவழக்கை உள்ளடக்கிய வட் டார வழக்குகள் தான். இந்த வட்டார வழக்குகள் காலப் போக்கில் எழுத்துவழக்கிலும் இடம்பெற்று அழியாவரம் பெற்று வாழ்கின்றன' என்கிறார் திரு. இராம. சுந்தரம்.

ஒருமொழி வழங்கும் நாட்டில் எத்தனை மாவட்டங்கள், வட் டங்கள், சமூகம், சாதி, தொழில் முதலிய வேறுபாடுகள், அவற்றிடையேயான வேறுபட்ட பேச்சுமொழிகள், இத்தனை-யையும் தாண்டித் 'தமிழ்' என்னும் ஒரு மந்திரசக்தி மக்களை இணைத்து நிற்கிறது. தமிழிலிருந்து மேலும் மொழிகள் கிளைத்து எழுவதற்கான சாத்தியக்கூறு மிகக் குறைவே என் பது இந்த ஆய்வின் முடிவாகும்.

**உசாத்துணை:**


- தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள்
- வீரசோழியம்
- நன்னூல்
- மொழியியல், தொகுதி - 2 சூன் - ஆகஸ்டு, பதிப்பாசிரியர்கள் - ச. அகத்தியலிங்கம், சுப. திண்ணப்பன், கி. அரங்கன். காலாண்டு இதழ் (1977)
- பேசுவது போல் எழுதலாமா - தமிழண்ணல், தமிழ்மொழிப் பயில கப் பல்துறைக்கழகம், ஏப்ரல் 2005.
- தென்குமரி மாவட்ட வழக்குகள் - பொன்னீலன்
- மரபுநெறி திரிதல் - மூத்த மொழி தமிழ், அறநெறி இணையம் (https://araneriislam.blogspot.com/2016/10/blog-post-83.html?m=0)




selvanayaki.s@thaiveedu.com



# சங்க கால நெய்தல் நில மக்களின் இறை வழிபாடு

– பொ. திராவிடமணி

இயற்கையில் ஏற்பட்ட மாற்றங்களும் அதனால் உண்டான பேரச்சமுமே வழிபாட்டு முறைகள் தோன்ற வழிவகுத்தன. 'நீர் நிலைகள், குளங்கள், ஆறு போன்ற இடங்களில் அவர்கள் குனிந்தபோது அவர்களின் சொந்த நிழல் தெரியவே அதைக் கண்டு மருண்டனர். அதற்கான காரணங்களை அறிவதிலி-ருந்து அவர்களால் விடுபட இயலவில்லை. வெள்ளம், சூறாவளி, இடி, மின்னல் ஆகிய இயற்கை நிகழ்ச்சிகள் தொடங்கிக் கனவில் கண்ட நிகழ்ச்சிகள், எதிரொலி, சொந்த நிழல் நீரில் தெரிவது வரை அனைத்துச் செயல்களுக்கும் எவை காரணம் என விடை காணவியலாத இறுதிக் கட்டத்தில் அவர்கள் எதிர்கொண்ட ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் பின் ஒரு ஆவி உள்ளது. அதுவே அச்செயல்களை இயக்குகிறது என்ற முடிவுக்கு வந்துவிட்டனர்'. (பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், நான்காம் பதிப்பு 2009) இத்தகைய ஆவி எனும் பொருண்மையே பிற்பாடு தெய்வமாக உருப்பெற்றது.

தொல்காப்பியர் ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய தெய்வத்தைப் பற்றிச் சுட்டும்பொழுது நெய்தல் நிலத்திற்கு உரிய தெய்வமாக வருணனைக் குறிப்பிடுகின்றார்.

**'வருணன் மேய பெருமணல் உலகமும்'**

(தொல். பொருள். -956)

என்பது தொல்காப்பியம். வருணன் எனும் கடவுள் மழை தெய்வமாக, மழையைத் தருவிக்கும் தெய்வமாகவும் கருதப்-படுகிறது. மழை நெய்தல் நிலத்திற்கு உகந்ததல்ல. மீன்பிடி தொழிலுக்கும், உப்பு விளைச்சலுக்கும் பகை மழை. அது மருதநிலத்திற்கே இன்றியமையாத ஒன்று எனில் வருணன் எவ்வாறு நெய்தல் நில தெய்வமானான்? என்றால் அச்சமே காரணம் எனலாம். மரக்கலத்தில் கடலுக்குள் மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும் பரதவர்க்குப் பெரும் மழை, புயல், சூறாவளி, இடி, மின்னல் போன்றவை பேரச்சத்தைத் தந்திருக்க வேண்டும். மட்டுமல்லாது உப்பு விளைவிக்கும் பரதவர்களுக்கும் பெரும் சேதத்தைத் தந்திருக்க வேண்டும். அதன் காரணமாகவே நெய்தல் நில மக்களின் தெய்வமாக மழைக் கடவுள் எனும் வருணன் தெய்வ-மாக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் சங்க இலக்கியங்களில் வருணனைப் பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை. இது குறித்துத் தமிழறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி குறிப்பிடுகையில் 'பொ.ஆ.மு.(கி.மு.) மூன்றாம் நூற்றாண்டு முதல் பொ.ஆ.பி. (கி.பி.) நான்கு ஐந்தாம் நூற்றாண்டு வரை பௌத்த மதம் தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்தபடியால் பௌத்தமத தெய்வமாகிய மணிமேகலை வழிபாடும் தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெற்றது. பெறவே, பழைய கடல் தெய்வமாகிய வருணன் வணக்கம் பையப்பைய மறைந்துவிட்டது.' (மயிலை சீனி. வேங்கடசாமி ஆய்வுக்களஞ்-சியம் -2 பண்டைத் தமிழக வரலாறு கொங்கு நாடு, பாண்டியர் – பல்லவர் – இலங்கை வரலாறு பதிப்பு வீ.அரசு ப-483) என்கிறார். ஆனால் வருணன், மணிமேகலை போன்ற தெய்வங்களை வழிபட்டதற்கான எச்சமாக சங்க இலக்கியத்தில் எந்தக் குறிப்பும் தென்படவில்லை. அப்படி வழிபாடு நிகழ்த்தியிருந்தால் அதற்கான எச்சம் நிச்சயம் தென்பட்டிருக்கும் என்பது துணிபு.

மேற்கண்ட தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை கூறிய நச்சினார்க்கினியர், 'நெய்தல் நிலத்தில் நுளையர்க்கு வலை வளந்தப்பின் அம் மகளிர் கிளையுடன் குழீஇச் சுறவுக்கோடு நட்டுப் பரவுக் கடன் கொடுத்தலின், ஆண்டு வருணன் வெளிப்படுமென்றார்' என்று கூறி, அதற்கு எடுத்துக் காட்டாகப் பட்டினப்பாலையின்

**'சினைச்சுறவின் கோடுநட்டு**
**மனைச்சேர்த்திய வல்லணங்கினான்'**

(பட்டினப்பாலை 85-86)

என்ற அடிகளையுங் குறிப்பிட்டிருக்கிறார். (முத்துக் கண்ணப்பன், சங்க இலக்கியத்தில் நெய்தல் திணை ப-213)

'கருகொண்ட சுறாமீனின் கொம்பை நட்டு அதனையே தான் இருக்குமிடமாகச் சேர்த்த வலிய கடற்தெய்வத்தின் பொருட்டு' எனப் பொருளுரைப்பார் மறைமலை அடிகள் (பட்டினப் பாலை ஆராய்ச்சி ப-87).

தொல்காப்பியர் சுட்டிய நெய்தல் நில தெய்வமாகிய வருணனைக் கருத்தில் கொண்டு உரையாசிரியர்களும், திறனாய்வாளர் சிலரும் நெய்தல் நில வழிபாட்டிற்குரிய தெய்வத்திற்கெல்லாம் வருணன் என்று பொருளுரைப்பது ஏற்புடையதல்ல. சங்க காலத்திற்குச் சமகாலத்திலோ அல்லது சற்று பின்னரோ தோன்றியதாகக் கருதப்படும் சிலப்பதிகாரத்தில் சிவன், முருகவேள், பலதேவன், திருமால், பிரம்மன் போன்ற தெய்வங்களுக்கான கோயில்கள் புகார் நகரில் இருந்ததாகக் குறிப்பிடப்பட் டுள்ளதும் இங்குச் சுட்டத்தக்கது.

**‘பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்**
**அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்**
**வால்வளை மேனி வலியோன் கோயிலும்**
**நீல மேனி நெடியோன் கோயிலும்**
**மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்**
**மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ**
**நான்மறை மரபின் தீமுறை யொருபால்**
**நால்வகைத் தேவரும் மூவறு கணங்களும்**
**பால்வகைத் தெரிந்த பகுதித் தோற்றத்து**
**வேறுவேறு கடவுளர் சாறுசிறந் தொருபால்’**

(சிலம்பு 5:169-178)

மேற்கண்ட தெய்வங்கள் மட்டுமல்லாது கொற்றவை வழிபாடும் நீரரமகளிர் வழிபாடும், சிறுதெய்வ வழிபாடுகளும் இயற்கை சார்ந்து இருந்துள்ளதை அறியமுடிகிறது. எனவே, நெய்தல் நில தெய்வங்களையெல்லாம் வருணன் எனல் பொருந்தாது.

அகநானூறு 240 வது பாடலில் மாலை நேரத்தில் குளிர்ச்சி பொருந்திய துறையில் உள்ள தெய்வத்தைத் தன் தாய் தோழியருடன் தொழுது வழிபட்டதாகத் தலைவி குறிப்பிடு-கின்றாள்.

**‘...அந்தில்**
**அணங்குடைப் பனித்துறை கைதொழுது ஏத்தி,**
**யாயும் ஆயமோடு அயரும்’**

(அகநானூறு 240:7-9)

நெய்தல் நில மக்கள் நீரில் தெய்வம் உறைந்திருக்கும் என நம்பினர். அதுமட்டுமல்லாது மரத்திலும் தெய்வம் உறைந்தி-ருப்பதாக நம்பினர். பனை மரத்தில் தெய்வம் உறைந்திப்ப-தையும், பன்னெடுங்காலமாக அந்நம்பிக்கை இருந்ததையும் நற்றிணை பாடல் தெரிவிக்கிறது.

**‘தொன்று உறை கடவுள் சேர்ந்த பராரை**
**மன்றப் பெண்ணை’**

(நற்றிணை 303:3-4)

அதைப் போல புன்னை மரத்திலும் தெய்வம் உறைந்திருப்பதாக நம்பிக்கை இருந்தது என்பதை அகநானூறு சுட்டுகிறது.

**‘கடவுள் மரத்த முள்மிடை குடம்பை’**

(அகநானூறு 270 :12)

தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடு நிற்பதாக அமைந்த அகநானூறு 110-வது பாடலில் தலைவனைத் தலைவி உள்ளத்-தால் ஏற்றுக்கொண்டு காதலிக்கும் நிலை எவ்வாறு நிகழ்ந்தது என்று சொல்லும் நிலையில் தோழி புகார் தெய்வத்தைச் சுட்டிச் சொல்கிறாள். ஆனால் அஃது என்ன தெய்வம் என்று சுட்ட-வில்லை.

**‘அன்னை அறியினும் அறிக; அலர்வாய்**
**அம் மென் சேரி கேட்பினும் கேட்க;**
**பிறிது ஒன்று இன்மை அறியக் கூறி,**
**கொடுஞ் சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கி,**
**கடுஞ் சூள் தருகுவன்’**

(அகநானூறு 110: 1-5)

‘அலர் கூறும் வாயினையுடைய அழகிய மென்மைத்தன்மை வாய்ந்த சேரிப்பெண்டிர் கேட்பினும் கேட்க; இதனைத் தவிரப் பிறிதொன்றும் இல்லை என்பதை நீ அறிந்து தெளியும் வண்ணம், வளைந்த கழிகள் பொருந்திய புகாரிலுள்ள தெய்வத்தை நோக்கி அதன்முன் உனக்குக் கடிய சூளும் (சத்தியம்) யான் செய்து தருவேன் எனத் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கிறாள்.

தெய்வத்திற்கு வலம்புரிச் சங்கையும், முத்துக்களையும் தூவி வழிபடும் வழக்கம் நெய்தல் நில மக்களிடம் இருந்துள்ளது. இதனை

**‘புகழ்மலி சிறப்பின் கொற்கை முன் துறை**
**அவிர் கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து**
**தழை அணிப் பொழிந்த கோடேந்து அல்குல்**
**பழையர் மகளிர் பனித்துறைப் பரவ’**

(அகநானூறு) 201:1-4)

என்கிறது அகநானூறு. தழையாடை உடுத்திய பொலிவுபெற்ற பக்கம் உயர்ந்த அல்குலினையுடைய நெய்தல் நிலப் பரதவப் பெண்கள் புகழுடைய கொற்கையில் குளித்த முத்துக்களுடன் வலம்புரிச் சங்கினையும் சொரிந்து, குளிர்ந்த துறையின்கண் தெய்வத்தை வாழ்த்தி வணங்கினர் என்பதை அறியமுடிகிறது. கடலில் பிறக்கும் சங்குகளில் மிக உயர்ந்ததாகக் கருதப்படுவது வெண்மையான வலம்புரிச் சங்கு என்பது குறிப்பிடத்தக்கது.

அக்காலத்தில் கடல் தெய்வம் மானிடரைப் போலக் கடற்-கரையில் உலவும் எனும் நம்பிக்கை இருந்துள்ளது.

**‘... ஞாழல்**
**வண்டுபடத் ததைந்த கண்ணி, நெய்தல்**
**தண் அரும் பைந்தார் துயல்வர, அந்தி,**
**கடல்கெழு செல்வி கரைநின்றாங்கு,**
**நீயே கானல் ஒழிய’**

(அகநானூறு 370 :9-12)

வண்டு மொய்க்கும் கொன்றை மாலையுடன் நெய்தல் மாலை கிடந்தசைய, அந்திப் பொழுதில் கடல் தெய்வம் கரையின்கண் நின்றாற்போல நீ இக்கடற்கரைச் சோலையிடத்தில் தனிமை-யில் நிற்கின்றாய் ‘எனத் தலைவியிடம் தோழி சொல்வதால். இந் நம்பிக்கை அக்காலத்தில் இருந்ததை அறியமுடிகிறது.

அச்சத்தை விளைவிக்கும் தெய்வமாக அணங்கு விளங்கியது என்பதை நற்றிணை தெரிவிக்கிறது.

**‘உரு கெழு தெய்வமும் கரந்து உறையின்றே’**

(நற்றிணை 398 :1)

முன்பு தலைவனைப் பிரிந்திருந்ததால் ஏற்பட்ட வருத்தத்தால் மெலிந்திருந்த தலைவியின் மேனி கண்டு ‘இனி உன்னைப் பிரியேன்’ என்று தெய்வத்தின் முன் சூளுரைத்த தலைவன் மீண்டும் தலைவியைக் காண வராதிருந்தான். சூள் பொய்த-தால் அத்தெய்வத்தால் தலைவனுக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்துவிடுமோ என்று அஞ்சிய தலைவி அக்கடவுளுக்கு உயர் பலியிட்டு வழிபடத் தோழியை அழைக்கிறாள்,

**‘அணங்கல் ஓம்புமதி, வாழிய நீ! என,**
**கணம் கெழு கடவுட்கு உயர் பலி தூஉய்,**
**பரவினம் வருகம் சென்மோ தோழி!’**

(நற்றிணை 358 :5-7)

‘தெய்வத்தை முன்னிலைப் படுத்தி இனி ஒருபொழுதேனும் உன்னைவிட்டுப் பிரியேனென்று சூளுற்றனராயினும் அங்ஙனம் கூறிய சூள் பொய்த்தலானே அது காரணமாக: எவ்வளவேனும் அவரைப் பாதுகாப்பாயாக! நீ வாழிய என்று; கணங்களையுடைய அக்கடவுளுக்கு உயர்ந்த பலியிட்டு நீர்வளாவிச் சாந்தி செய்து பரவுக்கடன் செய்துவர எப்போது செல்வோம் தோழி’ எனத் தலைவி தோழியிடம் கேட்பதாக இப்பாடல் அமைந்துள்ளது. தெய்வத்தின் முன்சொல்லும் சொல்லைக் காப்பாற்ற வேண்டும். அவ்வாறு காப்பாற்றவில்லை எனில் துன்பம் வந்து சேரும் எனும் நம்பிக்கை அக்காலத்தில் இருந்துள்ளதை அறியமுடிகிறது. அந்த நம்பிக்கை இன்றும் தொடர்வதைக் காணமுடியும்.

நெய்தல் நில மக்களிடம் ஞாயிற்றை வணங்கும் முறையும் இருந்திருக்கிறது

‘இயற்கையின் கூறுகளான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், மலை, ஞாயிறு, திங்கள் போன்ற இயற்கை சக்திகளை வழிபடும் முறையினை இயற்கை வழிபாடாகக் கருதுவர் பழந்தமிழர் இயற்கைக் கூறுகளை வழிபட்டமையினை மலை, கடல், ஞாயிறு திங்கள் ஆகியவற்றை வழிபட்டமை தெரிவிக்கும்’ (க.காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் ப-21) உலகிற்கு விடியலைத் தரும் ஞாயிறை வழிபட்டுள்ளதை நற்றிணை

**‘...ஓங்கு திரை**
**முந்நீர் மீமிசைப் பலர் தொழத் தோன்றி,**
**ஏமுற விளங்கிய சுடரினும்,**

(நற்றிணை 283 :5-7)

என்று தெரிவித்துள்ளது.

**‘மையற விளங்கிய மணிநிற விசும்பின்**
**கைதொழு மரபின் எழுமீன் போல’**

(நற்றிணை 231 : 1-2)

இப்பாடலில் இடம் பெற்றுள்ள எழுமீன் என்பது ஞாயிற்றைக் குறிப்பதாகவே தோன்றுகிறது. ஆனால் ‘கைதொழப்படுந் தகுதியடைய முனிவரின் தோற்றமாகிய எழுமீன்களைப் போல’ ‘உத்தரத் துருவத்தைச் சூழ்ந்துவரும் எழுமீன்கள்’ (பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர்,(உ.ஆ) நற்றிணை) எனப் பொருளுரைக் கப்படுகிறது.

இயற்கை வழிபாட்டில் நம்பிக்கை மிக்கிருந்த அக்காலத்தில் நெய்தல் நிலமக்கள் கடலையும் தெய்வமாக வணங்கினர்.

**‘பெருங்கடற் தெய்வம் நீர் நோக்கித் தெளிந்து’**

(கலித்தொகை 131:1)

என்றும்,

**‘...தெண்டிரைப்**
**பெருங்கடற் பரப்பில் அமர்ந்துறை யணங்கோ**
**இருங்கழி மருங்கின் நிலைபெற் றனையோ’**

(நற்றிணை 155:5-7)

என்றும் வரும் சங்க இலக்கியப் பாடல் வரிகள். கடலையும், கடல் சார்ந்த கழிகளையும் விரும்பி உறையும் தெய்வத்தை வணங்கினர் என்பதைத் தெரிவிக்கின்றன.

சிலப்பதிகாரத்தில் மாதவி, கோவலன் அருகில் இருக்க, வேறு ஒருவன் மீது காதல் குறிப்புத் தோன்றியது போல் பாடியமைக்காக தனது பொய்ச்சூளை பொருத்தருள வேண்டும் எனக் கடல் தெய்வத்தை வேண்டித் தனது பாடலை முடித்தாள் என்பதும் இங்குச் சுட்டத்தக்கது.

**‘துயர் எஞ்சு கிளவியால் பூக்கமழ்**
**கானலில் பொய்ச்சூள் பொறுக்கென்று**
**மாக்கடல் தெய்வம் நின் மலரடி**
**வணங்குதும்’**

(சிலப்பு. கானல்வரி)

அச்சம் தரும் இருபெருந் தெய்வங்களைப் பற்றி அகநானூறு குறிப்பிடுகையில்

**‘வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து**
**உருவுடன் இயைந்த தோற்றம் போல’**

(அகம் 360:6-7)

என்கிறது. இதற்கு உரையாசிரியர்கள் சிவனும், திருமாலும் எனப் பொருள்கொள்கின்றனர். அஃதாவது சிவனையும் திருமாலையும் போல அந்திவானத்துடன் கடல் அழகுடன் விளங்கியது என்று குறிப்பிடுகின்றனர். சங்க காலத்தில் சிவன், திருமால் என்ற பெருந்தெய்வங்களின் இருப்பு குறித்த செய்திகள் மிக மிக குறைவு. என்பதும் இங்குக் குறிப்பிடத்-தக்கது.

மேற்கண்ட தரவுகளின் மூலம் நெய்தல் நிலத் தெய்வமாக வருணனைத் தொல்காப்பியம் சுட்டுகிறதே தவிர, சங்க இலக்கி-யங்களில் சுட்டப்படவில்லை. தெய்வம் என வரும் இடங்களி-லெல்லாம் உரையாசிரியர்கள், திறனாய்வாளர்கள் வருணன் என வலிந்து சுட்டுவது ஏற்புடையதல்ல. நெய்தல் நில மக்கள் கடலுறை தெய்வத்தையும், கழிகளிலும், பனை, புன்னை மரங்களிலும் உறைந்திருந்த தெய்வங்களையும் வணங்கினர். ஞாயிறையும் கடலையும் தெய்வமாக வணங்கினர். கடவுள் முன் சூளுரைத்து பிற்பாடு பொய்த்துப் போனால் அத்தெய்வம் தண்டிக்கும் என நம்பினர். தெய்வத்திற்கு நேர்ந்துகொள்ளுதல், நேர்த்திக்கடன் செய்தல் என்பனபோன்ற பல அறிய செய்திகளை அறிந்துகொள்ள முடிகிறது.



thiravidamani.p@thaiveedu.com

# உலக மானுடத்தின் உயிர்மொழி

- இனியவன் இசாருதீன்

மனிதர் தம் எண்ணங்களை வெளிப்படுத்தக் கண்டறிந்ததில் மிக முக்கியமானது மொழி. மொழி எனப்படுவது எல்லா உயிர்களுக்கும் சொந்தமானது: எழுத்தோ மனிதகுலத்துக்கு மட்டுமே சொந்தமானது. அது தலைமுறைகளுக்கான ஞானத்தைக் கடத்தி ஏகும் கருவியாகவே காணப்படுகின்றது. தொன்மையினாலேயே ஒரு மொழிக்கு நன்மை விளைந்து விடும் என்றும் கருதல் கூடாது. மொழி என்பது இயற்கை யானது. அது பிறப்பு, இறப்பு, வளர்ச்சி, இடம்பெயர்தல், கால மாற்றம் எனப் பன்முகம் கொண்டது. எந்த மொழி காலமாற் றத்தால் தனக்குள் புதுமை பெறுகிறதோ அல்லது தனக்குள் மாற்றத்தை ஏற்றுக்கொள்கிறதோ அது வாழும் மொழியாகத் தன்னை வடிவமைத்துக்கொள்கிறது.

'ஆராமிக் என்ற தொன்மையான ஹீப்று மொழியை 200 ஆண் டுகளுக்கு முன்பு பேச ஆளில்லை. அது வெறும் எழுத்து வழக்கில் மட்டும்தான் இருந்தது. இன்று இஸ்ரேலில் இலட்சக் கணக்கான யூதர்கள் எல்லோரும் அந்த மொழியையே 'ஹீப்று' மொழி என்று பேசுகிறார்கள். மிகக் குறைந்த மக்கள் பேசும் இந்த ஈடிஸ் மொழியில் ஐசக்பாஸவிஸ் சிங்கர் என்னும் எழுத்தாளர் நோபல் பரிசு பெற்றார். மால்ட்டாவில் 5 இலட்சம் மக்கள் மால்த்தீஸ்மொழி பேசுகிறார்கள். மாலைதீவில் 4 இலட்சம் பேர் திவேஹிமொழி பேசுகிறார்கள். ஐஸ்லாண்டில் 4 இலட்சம் பேர் ஐஸ்லாண்டிக்மொழி பேசுகி றார்கள்' என்று குறிப்பிடும் மூத்த படைப்பாளி அ. முத்து லிங்கம் தனக்கென ஒரு மொழி இல்லாத, கொடி இல்லாத, தேசம் இல்லாத, தேசிய கீதமில்லாத மொழி அழியும். காலத்தால் காணாமல் போகும்' என்கிறார். ஒரு மொழியின் அழிவு என்பது வெறும் ஓர் ஊடகத்தின் அழிவல்ல. அது ஓரி னத்தின், பண்பாட்டின், பாரம்பரியத்தின், வரலாற்றின், தொல் மரபின், தொன்மத் தொகைகளின் அழிவு. பேரிலக்கியங் களின் பேரழிவு என்று அவர் கருத்துரைத்திருப்பது எத்தனை நிதர்சனமானது.

பிற மொழிகள் வலிந்து நமக்கு எந்தத் தாக்குதலையும் ஏற்ப டுத்தவில்லை. ஆனால் நம்மவரின் ஆங்கில மோகம் அடுத்த மொழி பேசுபவர் மீதான அலட்சியம், பிற இனக்கலப்பு, பிறமொழிக் கலாசார வாழ்க்கை என்பன நமது தாய்மொ ழியைச் சிதைத்துக்கொண்டிருக்கின்றது. சற்றுச் சிந்தித்தால் மொழிதான் நமக்கு அரண் என்றே சொல்லலாம். சமூ கத்தைக், பண்பாட்டை, இனத்தை, இலக்கியத்தைக் காக்க மொழியும் ஓர் அரணாக அமையும். எதிர்காலத்தில் நமது தாய்மொழி தமிழை அரணாக்கும் முயற்சியில் முனைந்து முன்னின்று செய்யப்போவது யார்? அதற்கான செயற்திட் டங்கள் என்ன என்பதையும் நாமே சிந்திக்க வேண்டும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட மொழி தமிழ்மொழி. அது வெவ்வேறு இனத்தவர்களை உலகில் இன்று இணைத்து வைத்திருக்கின்றது. குறிப்பாக ஈழத்திலும் தமிழகத்திலும் மலேசியாவிலும் வாழும் மக்களை தமிழ்மொழி இதயமொழி யாகவே இணைத்து வைத்திருக்கின்றது. இஸ்லாமியர், கிறிஸ் தவர், மலாயர், சிங்களவர், சைவர், சீனர் என அது பல்லின மக்களுக்கும் பரஸ்பரத்தையும் பரவசத்தையும் உண்டாக்கு கின்றது. தாய்மொழி தமிழ் ஒரு பொதுமொழியாய் பிரவாகிக் கின்றது. இன்று உலகில் 75 மில்லியன் மக்களுக்குத் தாய் மொழியாகவும் விளங்கிக்கொண்டிருக்கின்றது. நமது தமிழ் வாய்மொழியாகவும், சேய்மொழியாகவும், பழமொழியாகவும், பேச்சுமொழியாகவும், ஏச்சுமொழியாகவும் திகழ்கின்றது. மொழியைக் கூர்மையாகக் கையாளத் தெரியாதவர்களால் ஒருபோதும் கவிதை எழுதவே முடியாது. மொழி வளமுள்ள வர்களே ஜீவன் ததும்பும் சொற்கலை வல்லுனர்களாகத் திகழ்கிறார்கள். கவிஞர்கள் தங்கள் மொழியைத் தேர்ந்தெ டுத்துக் கொள்கிறார்கள். அவர்களது உரைநடை சொல்வளம் மிக்கது. அவர்களது மொழிவளம் வசீகரம் கொண்டது. அவர் களது பொருள்வளம் பிரமிக்கத்தக்கது.

எழுத்து, சொல், கருத்து, அறிவு, பண்பாடு, படைப்பிலக்கியம் போன்றவைகளைக் காலந்தோறும் புதுப்பித்துக்கொள்ளாத எந்த மொழியும் ஆதிவாசி மொழிப்பட்டியலில் அடங்கி விடலாம் என்பதால், தாய்மொழியை நாம் பொன்னைப் போல புடம்போட்டுக் காக்க வேண்டும். ஒரு படைப்பாளரிடம் இருக்கும் தாய்மொழிப் பற்று தன் இனத்தின், தேசத்தின், பண்பாட்டின், வேட்கையாக இருக்க வேண்டும்.

இலங்கையில் இரண்டு மொழிகள் உண்டு. ஒன்று சிங்களம், இன்னொன்று தமிழ். இந்த இரண்டும் தாய்மொழிகள் என்றே அறியப்பட்டாலும் முதலாவது மொழி மட்டுமே ஆட்சிமொழி யாகவும் அரசமொழியாகவும் இருக்கின்றது, அவ்வப்போது சிங்களம் இனவாதிகளின் ஆதிக்கமொழியாகவும் பாவிக்கப்ப டுகின்றது. முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கு மாகாணம் தமிழ்பேசும் மக்கள் செறிந்த பிரதேச மாகவே அமைந்துள்ளது.

கனடாவில், அமெரிக்காவில், ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்ற ஈழத் தமிழர் பலர் தாய்மொழி தமிழ் பேசுவதைத் தவிர்த்துக் கொள்கிறார்கள். தாங்கள் தமிழர் என்கிற அடை யாளத்தைக் காட்ட பலர் பொது இடங்களில் மறைக்கி றார்கள். அவர்களோடு நெருங்கிப் பேச எத்தனிக்கும்போ தெல்லாம் அவர்களது தமிழர் அடையாளத்தைக் காட்ட மறுக்கிறார்கள். இலங்கையில் பிறந்து கனடாவில் தஞ்சம டைந்த சிலர் கூட தங்களுக்குத் தமிழ் தெரியாது என்று ஆங் கிலத்தில் சொல்வதைக் கேட்கும்போது அந்த விந்தையான அனுபவம் மனித நேயத்தை மறுதலிப்பதாகவே உணர முடிகிறது. இந்த நிலையை இன்றைய இளைய தலைமுறையி னரிடம்தான் அதிகம் கண்டுகொள்ள முடிகிறது. தமிழகத்தில் தமிழுக்காக, தமிழருக்காக எவ்வளவோ சாதித்திருக்கி றார்கள் ஆனால் தமிழர் ஈழத்தில் தமிழுக்காக, தமிழருக்காக இதுவரை என்ன சாதித்தோம்? என்ற கேள்வி எழுகின்றது. அரசியற் குழுக்களாகப் பிரிந்து பிரிந்து இனத்தைப் பிரித்து வைத்திருக்கின்ற இன்றைய அவலநிலை கூட வருத்தமளிக் கிறது. இந்நிலை தொடர்ந்தால் தமிழர்களே தங்கள் தாய்மொ ழியைத் தொலைத்துவிட்டுத் தேடும் ஒரு அபாய நிலை எதிர் காலத்தில் ஏற்படலாம். தமிழ் நமது வீடுகளிலிருந்தே தொடங்க வேண்டும். அலுவலகத்தில் தமிழ் இல்லை. ஆல யத்தில் தமிழ் இல்லை. தமிழிலே பெயர் இல்லை. அவற்றை யெல்லாம் கொண்டு வரவேண்டுமானால் நமது வீடுகளிலிருந்தே கொண்டு வரவேண்டும். தாய்மொழியைப் போற்றி வீழ்ந்த நாடுமில்லை. தாழ்த்தி வாழ்ந்த வீடுமில்லை.

தமிழுணர்வு என்று நாம் இப்பொழுது அடிக்கடி பேசுகிறோம். தமிழுணர்வு என்றால் என்ன? அதில் பொதிந்துள்ள ஆக்கக் கூறுகள் என்ன? தமிழ் உணர்வை நாம் நமக்குள்ளிருந்தே திரட்டிக்கொள்ள வேண்டும். தமிழ் உணர்வு என்பதற்கு நாம் கொள்ளும் பொருள்கள் பல்வேறுபட்டவை. அவை நமக்குள் இயங்குகின்றன. தமிழ் என்றால் வீரம்: தமிழ் என்றால் காதல்: தமிழ் என்றால் அன்பு, அறிவு, ஆண்மை, பெண்மை, தாய்மை. தமிழ் என்றால் அழகு. கலை, இயற்கை. தமிழ் என்றால் நாடு, நிலம். தமிழ் என்றால் தவம், விடுதலை என் றெல்லாம் தமிழுக்குப் பல்பொருள் கண்டனர் பண்டையத் தமிழர். தமிழ் அழிய முடியாது.

தமிழுணர்வு என்பதை வெறும் இலக்கிய உணர்வாக, மரபின் மேன்மை சொல்லும் உணர்வாக மட்டுமே, சுருக்கிவிடக் கூடாது. சங்ககாலம் முதல் சமகாலம் வரை உள்ள ஆன்றோர், சான்றோர், சித்தர்கள், கடையெழு வள்ளல்கள் போன்றோரின் நெறியை நாம் பின்பற்ற வேண்டும். ஒப்புரவை முன்னிறுத்தி வள்ளுவரின் அறத்தையும் அநீதிக்கெதிரான இளங்கோவின் புரட்சியையும் நாம் இன்றைய தலைமுறைகளிடம் கொண்டு சேர்க்க வேண்டும். வறுமைக்கெதிரான வள்ளலார் குரலையும் சத்தியவேந்தர் சாத்தனார் குரலையும் பரப்ப வேண்டும்.

நவநாகரீகம் என்ற பெயரில் அழிந்துபோன தொன்மையான தமிழர் நாகரீகத்தை மீட்டெடுக்க வேண்டும். தமிழ் இலக்கி யத்துள்ளிருந்து இந்த உணர்வை நாம் வளர்த்தெடுக்க இயலுமா என்று சிந்திக்க வேண்டும். சித்தர் பாடல்களையும் தமிழ் இலக்கியப் பரப்பிற்குள் மையப்படுத்திப் பேணிக் காக்க வேண்டும். நமது தமிழறிஞர்கள், தமிழுணர்வாளர்கள், ஆய்வாளர்கள், மொழிப் பற்றாளர்கள், பேராசிரியர்கள், வர லாற்றாசிரியர்கள், பல்கலைக்கழகங்கள் என்ன செய்தனர் என்ற கேள்வி எழுகின்ற இவ்வேளை மொழியையே அரணாகப் பயன்படுத்தி, அதன் மூலம் இனத்தை, மரபை, பண்பாட்டை, இலக்கியச் செல்வங்களைக் காக்க நமது செயல்திட்டங்கள் எவை என்று சிந்திக்க வேண்டும்.

எத்தனை மொழி தெரிந்திருந்தாலும் அத்தனையும் நமது அறிவையும் ஆளுமையையும் உயர்த்தி விடும். ஆனால் தன்னுடைய சொந்தத் தாய்மொழிக்குத் தலைவணக்கம் செலுத்தாத எந்த இனமும், தேசமும், சமுதாயமும் வாழாது, வளராது, வரலாறும் படைக்காது. தாய்மொழி பேசுவதைத் தரக் குறைவாகவும், கொச்சையாகவும், கேவலமாகவும் நினைக்கின்ற ஒரு தலைமுறை ஒருபொழுதும் வாழ்ந்ததாக வரலாறு இல்லை. உடலாலும் உள்ளத்தாலும் தன் சமூ கத்தைச் சார்ந்து நிற்காத எந்த எழுத்தும் படைப்பும் எக்கா லத்திலும் நிலைத்ததில்லை. அதனால் எந்தப் படைப்பா ளனுக்கும் தன் சமூகத்தைப் பற்றிய ஆர்வமும் அறிவும் இருக்க வேண்டும். அதன் ரசனை என்ன? தேவை என்ன? என்றும் தெரிந்திருக்க வேண்டும். ஒரு மொழியின் அழிவு என்பது வெறும் ஓர் ஊடகத்தின் அழிவல்ல. அது ஓர் இனத்தின், அவர்களது பண்பாட்டின், பாரம்பரியத்தின், கலா சாரத்தின், வரலாற்றின், தொல்மரபின் பேரிலக்கியங்களின் அழிவாகும். மரபை, பண்பாட்டை, இலக்கியத்தைப் பேசும் மனிதரைக் காக்க மொழி என்பது அவருக்கு ஓர் அரணாக அமையும்.

எங்கள் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் வேறெந்த பிற மொழியில் பரிமாற்றம் செய்தோம்? எந்தப் பிற மொழியில் நமது மொழியை, கலையை, கலாசாரத்தை பல்லினத்துக்குப் பகிர்ந்தளித்தோம்? அல்லது புரிய வைத்தோம்? என்ற கேள்விகள் எழுகின்றபோது நமக்குள் நாம் எத்தனைபேர் சரியான சான்றுகளை வைத்திருக்கின்றோம்?

தொன்மையினாலேயே ஒரு மொழிக்கு நன்மை விளைந்து விடும் என்ற கூற்று மூடநம்பிக்கை என்று வரலாறு முகஞ்சு ழிக்கிறது. தமிழின் தொன்மை உணர வேண்டுமெனில் உலக மொழிகளின் காலவரிசையோடு தமிழை உற்றுப் பார்க்க வேண்டும். இன்று உலக மொழியென்று பேசப்படும் ஆங்கி லத்தின் முதல் எழுத்துரு பொ.ஆ.பி(கி.பி) 7-ஆம் நூற்றாண் டில்தான் அறியப் பெற்றது. இன்று தொழில்நுட்ப மொழியாக உயர்ந்து நிற்கும் ஜெர்மனிய மொழியின் எழுத்து வடிவம் பொ.ஆ.பி 8-ஆம் நூற்றாண்டில்தான் எட்டப்பட்டது. பண்பாட்டு மொழியென்று கருதப்படும் பிரெஞ்சு மொழியின் முதல் எழுத்து வடிவம் பொ.ஆ.பி 9-ஆம் நூற்றாண்டை ஒட்டி யதாகும். இன்று அறிவியல் மொழியாக வளர்ந்து நிற்கும் ரஷ்ய மொழியின் முதல் எழுத்துச் சான்று பொ.ஆ.பி 10-ஆம் நூற்றாண்டில்தான் பார்க்கப்பட்டது. இலத்தீன் பேச்சு மொழி யிலிருந்து பிறந்து இன்று இசைமொழியென்று இசைபட வாழும் இத்தாலிய எழுத்து வடிவில் அறியப்பெற்றது பொ.ஆ.பி 10-ஆம் நூற்றாண்டில்தான். ஆனால் தமிழ்மொ ழியின் ஆதி இலக்கணம் என்று அறியப்பெற்ற தொல்காப் பியம் பொ.ஆ.மு 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பது அறி

வுலகத்தால் மெய்ப்பிக்கப்பட்ட நம்பிக்கை.

இன்று வெற்றிபெற்ற மொழிகளிலெல்லாம் எழுத்துக் கூட்டிக் கொண்டிருந்த இடைப்பட்ட நூற்றாண்டுகளில் அகம், புறம், அறம், இகம், பரம் என்ற எல்லாக் கருத்தியல்களுக்கும் கலைவடிவம் தந்து நிலைவடிவம் கொண்டிருந்தது தமிழ். உரையில் தொன்மையே தமிழ்மொழியின் பெருமை என்று கற்போர் கருதலாம். பழைய பெருமிதம் என்னும் சூழ்மேகம் தமிழின் நிகழ்காலத்தை மறைக்கிறது. 'எல்லாப் பொருளும் இதன்பால் உள' என்ற மூடநம்பிக்கையால் பேரண்டத்தில் நாளும் வளரும் பேரறிவை உள் நுழையவிடாமல் கதவுகளையும் சுவர்களாக்கிக் கொண்டோம். ஆதி நூற்றாண்டுகளில் பல இனங்களைப் பலநூற்றாண்டுகள் முந்தி நின்ற நாம், நிகழ்நூற்றாண்டில் சில நூற்றாண்டுகள் பின்தங்கி நிற்கிறோம். எவரோ கண்டறிந்த ஒரு பொருளுக்குச் சொல் தேடுகிறாரேயன்றி, தாமே கண்டறிந்த ஒரு பொருளுக்குப் பெயர் சூட்டி உலக நீரோட்டத்தில் செலுத்துமிடத்தில் தமிழர் இல்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் தோன்றிய காலத்திலிருந்து அதிகமான நாடுகளில் தமிழ்பேசும் தமிழர்கள் உறைவதும் இந்த நூற்றாண்டில்தான். 57 நாடுகளில் இன்று தமிழ் பேசப்படுகிறதெனில் அதற்கு இலங்கைத் தமிழர்களைத்தாம் பாராட்ட வேண்டும். ஆனால் அதற்கு முரணாகவே எதார்த்தம் இருக்கின்றது. தமிழ்க் கலாசாரத்தை மேலை நாடுகளில் விதைத்துவிட்டிருக்கிறார்கள். காலம் கடந்தும் காலமாகாத உலகத்தின் சில மொழிகளுள் ஒன்றாக அன்றுமுதல் இன்றுவரை தமிழ் நின்று துலங்குகிறது. அதைக் காலத்தின் விளிம்புவரை அழைத்துச் செல்வது தமிழர்களின் கையிலிருக்கின்றது. அரசின் கையிலிருக்கின்றது. அதிகாரத்தின் கையிலிருக்கின்றது. இனிப் போர் காக்கும் நடவடிக்கையாக மொழி காக்கும் வழிமுறைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். தமிழ்மொழியைத் தமிழர்கள் பேண வேண்டுமென்றால் தமிழருக்குத் தமிழ்மொழியைத் தகுதியாக்க வேண்டும். உலகப் போட்டிக்கான கருவியாக்க வேண்டும். 'தமிழுக்குள் உலகம்: உலகுக்குள் தமிழ்' என்று இரண்டு பேரியக்கங்கள் நடைபெற வேண்டும். தமிழில் உயர் கல்வி, நவீன கல்வி என, தமிழில் பல்கலைக்கழகக் கல்வி என நம் தாய்நாட்டில் தமிழ்க் கல்விமுறையை விரிவுபடுத்த வேண்டும். மொழி, நிலம், இனம் என்ற பெருமிதங்களைத் தமிழர்களின் மரபணுக்களுக்குள் ஊட்டிவிட வேண்டும்.

பழக்கத்தில் இல்லாத மொழிகளெல்லாம் புகழின் உச்சத்திலிருந்து அழிந்துபோன வரலாறுகள் இருக்கின்றன. உலக நாடுகளிலெல்லாம் தமிழ் வாழ்கின்றது. அது உங்களின் வீடுகளில் வளர்கிறதா ? என்பதை உள்ளம் தொட்டுச் சொல்லுங்கள். மருத்துவராக, பொறியியலாளராக, முதலாளிகளாக, தொழிலதிபர்களாக, கணினி வல்லுனர்களாக, அரசாங்க உத்தியோகத்தர்களாகத் துறைதோறும் சாதியுங்கள். இல்லங்களிலும் உள்ளங்களிலும் நிலைக்க தாய்மொழி தமிழ் வளரச் சொல்லிக் கொடுங்கள். தமிழ், இல்லங்களிலும் உள்ளங்களிலும் இல்லையென்றால் அது மெல்ல மெல்லச் சாகும்.



isarudeen@thaiveedu.com











# பெயர்வுச் சமூக இருப்பில் இலக்கிய வாசிப்பின் முதன்மை

**- பொன்னையா விவேகானந்தன்**

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நிலைத்து வாழ்ந்த நிலத்திலிருந்து வெவ்வேறு காரணங்களால் பெயர்ந்த தமிழர், முற்றிலும் மாறுபட்ட புலங்களிற் குடியேறி, அப்புலங்களில் நிலைத்து வாழத் தலைப்பட்டு விட்டனர். பல்வேறு பண்பாடுகளையும் மொழிகளையும் கொண்ட இனங்களுக்கிடையே தமிழியற் சிறப்புகளைத் தாங்கிய நிலைத்த இருப்பைப் பேணிச் செல்வதில் பெயர்வுத் தமிழ்ச் சமூகம் பல்வகை இடர்களைச் சந்தித்து வருவதைப் பலரும் அறிவோம்.

இவ்விடர்கள் பற்றிய கட்டுரைகள் பல முன்னர் விரிவாக எழுதப்பட்டுள்ளன. 'பெயர்வுச் சமூக இருப்பில் இலக்கிய வாசிப்பின் முதன்மை' என்ற இக்கட்டுரையானது, அடையாளம் சார்ந்த நிலைத்த இருப்பின் வலிமைக்குத் தமிழ் இலக்கிய வாசிப்பு எந்தளவுக்கு உறுதுணையாக இருக்கவல்லது என்பது பற்றிப் பேச முற்படுகின்றது. முதலில், ஓர் இனத்தை அடையாளச் சிறப்புகளோடு, சீர்மிகு இனமாக காலந்தோறும் வாழவைத்துச் செல்வதில் அவ்வினத்திடையே தோன்றிய இலக்கியங்கள் எத்தகைய பங்களிப்புகளை வழங்கிவருகின்றன என்பதைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம்.

இலக்கியங்கள் மக்களின் வாழ்வை வடிவமைப்பதிலும் பேணிச்செல்வதிலும் உலகளாவிய வகையில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இன்றும் ஏற்படுத்தி வருகின்றன. இன்றைய ஐரோப்பியச் சமூகத்தை வடிவமைத்தோரில் இலக்கியப் படைப்பாளிகளுக்கு முதன்மையான பங்களிப்பு உண்டு. சோக்கிரட்டீஸ், பிளேட்டோ முதல், சேக்ஸ்பியர், வொட்ஸ்-வர்த், கார்ல்ஸ் மார்க், டால்ஸ் ராய் போன்ற படைப்பாளிகளின் எழுத்துகள் ஐரோப்பாவைச் செதுக்கியிருக்கின்றன. குறிப்பாக Rousseau. Jean-Jacques Rousseau என்ற பிரஞ்சு எழுத்தாளரே உலக மாற்றத்துக்கு ஏதுவாக அமைந்த பிரஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட படைப்பாளர். இவர்களே 'பேனா முனை மிகக் கூரிய ஆயுதம்' என்ற கூற்றுத் தோன்றுவதற்குக் காரணமானவர்கள். சேக்ஸ்பியர் முதல் ஜேன் ஓஸ்டன், ஜோன் லெனான் போன்ற படைப்பாளர்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் உலகமெங்கும் பரவிக் கிடக்கின்றன. இந்தியாவில் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பாரிய அறப்போராட்டத்தின் தளம் எழுத்துகளே என்பதை மறுப்பதற்கில்லை.

இன்றுவரை உலக மாற்றங்களுக்கு வித்திட்டோர் எனப் பேசப்படுகின்ற படைப்பாளர்கள் பலரும் அடிப்படையில் சமூக சிந்தனையாளர்களாகவே இருந்திருக்கின்றனர். அறிவும் அன்பும் கொண்ட மாந்தநேயம் மிக்க சமூக ஆக்கமே இப்படைப்பாளிகளின் முதன்மைக் குறிக்கோள்.

மேற்குலக இலக்கியங்களைப் போன்றே தமிழ் இலக்கியங்களும் இனவிருப்பில் காலந்தோறும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தி வந்துள்ளன. குறிப்பாகக் கிறித்துவுக்கு முன்னர் தோன்றியதாகக் கருதப்படும் சங்க இலக்கியங்கள் பண்பட்ட மாந்த வாழ்வைப் படியெடுத்துரைத்த படைப்புகளாகவே காணப்படுகின்றன.

பேரா. அ. தட்சணாமூர்த்தி சங்க இலக்கியங்களின் பண்புகள் குறித்துக் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'சங்க இலக்கியங்கள் தனிப்பாடல்களின் தொகுப்புகளாக அமைந்தவை. அரசர் முதல் பல குடியினரும் புலவர்களாக இருந்துள்ளனர். இவர்களுள் பெண்பாற் புலவர்கள் முப்பதின்மருக்கு மேற்பட்டோராவர். இக்காலச் செய்யுட்கள் யாவும் அகம், புறம் என்ற இரு பகுப்புள் அடங்குவனவாகவும் கடுமையான விதிகட்கு உட்பட்டனவாகவும் அமைவன. சங்கப் புலவர்களின் நடையும் கற்பனையும் உத்திகளும் புலவர்க்குப் புலவர் வேறுபடாமல், ஒரு தன்மையான போக்குடையவை. சங்கநடை என்று பொதுவாகக் கூற இடமுண்டே தவிர, கபிலர் நடை, ஔவையார் நடை என்று பிரித்துக்காண இடமில்லை. சங்கப் புலவர்கள் இயற்கையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டோர் ஆவர். ஆனால், அவர்கள் இயற்கையைத் தனித்துப் பாடவில்லை. உணர்ச்சிகளை ஆழமாக வெளியிட உதவும் பின்புலமாகவும் குறியீடாகவுமே இயற்கையைப் பயன்படுத்தியுள்ளனர். அன்றைய மக்கள் வாழ்க்கையின் உண்மையான வெளிப்பாடாகச் செய்யுட்கள் அமைவதால், அவை காலக்கண்ணாடியாக விளங்குகின்றன. காலஞ் செல்லச்செல்ல வடசொற் கலப்பு தமிழில் மிகுந்தது. ஆனால் சங்க இலக்கியத்தில் இரண்டு விழுக்காட்டிற்கு மேல் வடசொற் கலப்பு இல்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'செல்வத்துப் பயனே ஈதல்', 'ஈயென இரத்தல் இழிந்தன்று' என்பன போலும் எண்ணற்ற வாழ்வியல் உண்மைகட்கு இருப்பி

டமாக அவை விளங்குகின்றன.'

இத்துணைச் சிறப்புமிக்க சங்க இலக்கியங்கள் கற்பனைகளையும் புனைவுகளையும் தேவையான அளவுக்கு மட்டுமே கையாண்டு உள்ளதை உள்ளவாறே இயம்பியுள்ளன என்பதே பல ஆய்வாளர்களின் முடிவு. வடஇந்திய இலக்கியங்கள் பெரிதும் நடைமுறை வாழ்வுக்குப் பொருந்தி வராத அளவிறந்த கற்பனைகளையும் நம்பமுடியாத புனைவுகளையுமே கொண்டுள்ளன. தமிழிலக்கியங்களில் பெரும்பாலானவை நடைமுறை வாழ்வை ஒட்டிய, அளவான கற்பனைகளைக் கொண்டு படைக்கப்பட்டிருந்தன. 'பொய்யும் புனைவும் பெருமளவில் கொண்டிராத தமிழ் இலக்கியங்கள் வரலாற்றுச் சான்றுகளாகக் கொள்ளத்தக்கவை' என்ற ஆய்வாளர் கருத்தும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பின்நாட்களில் தோன்றிய அற இலக்கியங்களுக்கும் காப்பியங்களுக்கும் பக்தி இலக்கியங்களுக்கும் தொன்மைமிக்க சங்க இலக்கியங்களே வழிகாட்டி நின்றன.

வடமொழி இறைநெறிகளோடு இணைந்து பெரும் பண்பாட்டுப் படையெடுப்பை மேற்கொண்டபோது, அதைத் தடுத்துநிறுத்தி, வடமொழியைக் கருவறைக்குள் மட்டும் மட்டுப்படுத்தியவை தமிழில் தோன்றிய பக்தி இலக்கியங்களே.

'தமிழ் ஒரு பண்பாடு' என டேவிட் சுல்மான் என்ற பேராசிரியர் குறிப்பிட்டதை நான் பலவிடங்களில் சுட்டிக்காட்டியுள்ளேன். இக்கூற்றின் தோற்றத்துக்குக் காரணம் தமிழ் இலக்கியங்களே.

ஓர் இனத்தை வழிநடத்திச் செல்வதில் தன்னாட்சி அரசு, இறைநெறி, மொழி என்பன முதன்மை பெறுகின்றன. கடந்த இருபது நூற்றாண்டுகளுள் தமிழர் தன்னாட்சி அரசாகத் திகழ்ந்த காலம் ஏறக்குறைய எட்டு நூற்றாண்டுகள் மட்டுமே. தமிழர் எப்போதுமே இறைநெறியை வாழ்வியலின் வழிகாட்டியாகக் கொண்டு வாழ்ந்தவரல்லர். பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு மதங்களையும் ஏற்று வாழ்பவர்கள். காலந்தோறும் தமிழர்களைப் பண்பாட்டுச் செறிவுமிக்க இனமாகப் பேணிவந்த சிறப்பு மொழிக்கே உரியது. மொழியும் மொழிசார்ந்த இலக்கியங்களின் வலிமையுமே தன்னாட்சியற்ற சூழலில், வடமொழி இறைநெறிகளின் ஆளுகைக்குள்ளும் தமிழரை இனச்செறிவு குன்றாத இனமாகப் பேணி வந்துள்ளன.

கடந்த ஆறு நூற்றாண்டுகளாகத் தமிழர் வலிமையான தன்னாட்சியைக் கொண்டிருக்கவில்லை. மாறாக, வடஇந்திய, ஐரோப்பியப் பல்வகைப் (வணிகம், வழிபாடு, பண்பாடு, அரசியல்) படையெடுப்புகளுக்குள் சிக்கிப் பேரிடர்களை எதிர்கொண்டபோதும் மொழி, பண்பாடு என்பவற்றை முதன்மைப்படுத்திய அடையாளங்களைத் தமிழர் இழந்துவிடவில்லை. இதற்குக் காரணமானவை தமிழ் இலக்கியங்களே.

வாழ்வியல், வரலாற்று மரபுகள், கலைகள், விழுமியங்கள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், பண்பாடு, பண்பாடு சார்ந்த கூறுகள், ஒழுக்கங்கள், விழாக்கள் போன்ற ஓரினத்தின் வாழ்வியல் கூறுகள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டு, தலைமுறைதோறும் இனத்தோருக்குப் புகட்டி வருவன இலக்கியங்களே என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

தமிழ் இலக்கியங்கள் அறம், அன்பு, பண்பு சான்ற மானுட வாழ்வுக்கு எவ்வாறு உதவுகின்றன? என்பதைச் சற்றுச் சுருக்கமாகச் சான்றுகளின் வழியே காண்போம்.

## மானுட குலத்தோருடன் பரந்து உறவாடல்:

தமிழரின் தன்னியல்புச் சிறப்புகளுள் உலக இனத்தாரோடு, பரந்து இணைந்து உறவாடி வாழும் மனப்பாங்கே உயர்ந்தது எனலாம். அன்றே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனக் கணியன் பூங்குன்றன் கூற்றும் 'வந்தாரை வாழவைக்கும் தமிழகம்' எனக் கடந்த நூற்றாண்டில் தோன்றிய சொற்றொடரும் உலகத்தாரோடு ஒட்டி உறவாடும் உயர்ந்த பண்பைக் குறிப்பிடுகின்றன.

*'யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்*
*சாத்துணையுங் கல்லாத வாறு' என்கின்றார்.*

'கற்றோருக்கு எல்லா நாடும் அவர் நாடே. எல்லா ஊரும் அவர் ஊரே' என்பது இதன் பொருள்.

தமிழர்களின் பண்பட்ட வாழ்வானது, நாடு, இனம், மொழி, மதம் என்ற எல்லைகளைக் கடந்து மானுடத்தோடு பேரன்புப் பிணைப்பை ஏற்படுத்தும் விரிந்து பரந்த உளப்பாங்கைத் தோற்றுவித்திருந்தது. இந்தப் பண்பாட்டின் உச்ச வெளிப்பாடே திருக்குறள் என்ற இலக்கியம். தமிழில் எழுதப்பட்ட திருக்குறள், மானுடம் தமக்குள் வகுத்துக்கொண்ட மேற்குறித்த எந்தவொரு எல்லைக்குள்ளும் அடங்கி நில்லாது, மானுடப் பொதுமையைப் பேசிய உலகளாவிய முதல் நூல். தமிழரின் உலக மனப்பான்மையின் தொன்மைக்கு இந்த நூலே பெருஞ்சான்று.

தமிழர் எக்காலத்தும் பிறவினத்தவரோடு பகையுற்று வாழ்ந்தவரல்லர். தமிழர் நிலத்துள் நிலைகொண்டு வாழ்கின்ற இனங்கள் இன்னும் எத்தனையோ உண்டு.

## அன்பெனும் பேருறவு:

மாந்தவினத்தின் பெருஞ்சிறப்பு கூட்டுணர்வும் அதன் தளத்தில் கட்டமைக்கப்பட்ட பெருவாழ்வுமே. இந்தக் கூட்டியக்கத்தின் அடிப்படை அன்பு என்னும் அருள் சார்ந்த பேருணர்வுதான். உடலின் தசைகளின் இரத்தம் ஊற்றெடுப்பதைப் போல, மாந்த உணர்வுகளில் இருந்து அன்பு ஊற்றெடுக்க வேண்டும். அந்த அன்பு ஊற்றே நற்பண்புகள் என்ற பயிர்களை வளர்க்கும் நீரூற்றாகின்றது.

மாந்த வாழ்வு நலமாகவும் வளமாகவும் மகிழ்வாகவும் இயங்க அன்பே அடிப்படையாக அமைகின்றது. இயற்கை மாந்தருக்கு வழங்கியிருக்கும் பெருங்கொடை அன்பெனும் பண்பு. மாந்தரைப் பிற உயிர்களோடு, உலகத்தோடு ஒட்ட வைப்பது அன்பு.

அன்பு வளர்கின்ற தன்மையுடையது. அன்பென்ற உணர்வுக்கு எல்லை கிடையாது. கட்டுப்பாடுகள் கடந்தது. தம்முடன் பழகுவோருடைய இயல்புகளை, விருப்பங்களை அறிந்து அவர்தம் பாங்குக்கு ஒத்துப் பழகும் பண்புநிலையில் அன்பும் உறவும் வளர்கின்றது.

தமிழர் தொன்றுதொட்டே அன்பெனும் அறத்தை ஆழமாகவே போற்றி வந்துள்ளனர். பிற மாந்தரிடம் மட்டுமல்ல, செடி, கொடி உள்ளிட்ட அனைத்து உயிர்களிடத்தும் அன்பு காட்டிய தமிழர் வாழ்வை பண்டைய இலக்கியங்கள் அழகுறக் கூறுகின்றன.

## சமூக நலம் நாடும் பண்பு:

தமிழர் பண்பாட்டில் 'மக்கள் நலக் கோட்பாடு' முதன்மையான கூறெனக் குறிப்பிடுகின்றார் தனிநாயகம் அடிகள். இதனை ஆங்கிலத்தில் Humanism எனக் குறிப்பிடுவர். Terence என்ற இலத்தீன் புலவர் 'நான் மனிதன், மனிதனுக்கு இயல்பான எதனையும் நான் வெறுப்பதில்லை' எனக் கூறிய கூற்றே மாந்த நலப் பண்பின் உயர்ந்த கோட்பாடு என ஐரோப்பியர் கருதுவர்.

சமுதாயமாகக் கூடி இயங்கும் மாந்தக் குழுமத்தில் மாந்த நலனுக்கு முதன்மை வழங்கும் இக்கோட்பாடு தமிழரிடத்தே நீண்டகாலமாக நிலைபெற்றிருக்கும் பண்பாட்டு விழுமியங்களுள் ஒன்று.

பிசிராந்தையர் என்றொரு புலவர். 'இத்தனை வயதாகியும் உங்களில் ஏன் நரை, திரை தெரியவில்லை.. இளமையாகவே இருக்கின்றீர்கள்?' என ஒருவர் அவரைப் பார்த்துக் கேட்கின்றார். அதற்கு அவர்,

'எனது வாழ்க்கை மேம்பட்ட வாழ்க்கை. எனது மனைவியும் மக்களும் குணத்திலும் அறிவிலும் மிக்கவர்கள். என் பின்னால் பிறந்தவர்களும் பணியாளர்களும் என் கருத்தோடு ஒத்துச் செல்லும் பண்பு மிக்கவர்கள். எங்கள் அரசன் அறத்துக்கு மாறாக எதுவும் செய்யமாட்டான். கண்ணை இமைகாப்பது போல் மக்களைக் காப்பான். எனது ஊர் சான்றோர் நிறைந்த ஊர். அவர்கள் அறிவுச் செறிவும் புலனடக்கமும் கொண்டவர்கள். ஆதலால் நரை, திரை இன்றி என்னால் இளமையாக இயங்க முடிகின்றது' எனக் கூறுகின்றார்.

புலவர் வாழும் சமுதாயம், பண்பட்ட மாந்தநேயம் மிக்க உயர் பண்புடையது. ஒருவரோடு ஒருவர் இயைந்தும் இணங்கியும் வாழும் தன்மையது. ஆதலால் அங்கு துயரில்லை, இடரில்லை, இன்புறுதலன்றி துன்புறுதல் இல்லை.

*'யாண்டு பலவாக நரையில வாகுதல்*
*யாங்கா கியரென வினவுதிராயின்*
*மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்*
*யான்கண் டனையர் என் இளையரும் வேந்தனும்*
*அல்லவை செய்யான், காக்கும் அதன் தலை*
*ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச்*
*சான்றோர் பலர் யான் வாழும் ஊரே'*

- புறநானூறு, பாடல்191. பாடியவர்: பிசிராந்தையார்.

## மத ஒருமைப்பாடு:

இன்றளவில் உலகம் மத வேற்றுமைகளால் துண்டாடப்பட்டு வருவதைப் பலரும் அறிவர். உலகெங்கும் மத மோதல்கள் பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வருகின்றன. மதத்தின் பெயரால் முன்னெடுக்கப்பட்ட சிலுவை யுத்தம் என்ற போர் உலகப் புகழ்பெற்றது. முகமது நபி மதத்தின் பெயராலேயே உலகெங்கும் போர் தொடுத்தார். இச்சூழலில் தமிழினம் மத மோதல்களுக்குள் ஆட்படாது, மானுடநேயம் மிக்க இனமாகச் சிறந்திருந்தமை வியப்புக்குரியதே.

தமிழர்கள் இறைவழிபாட்டை ஒரு நெறியாகக் கொண்டனரேயன்றி, இனத்தின் அடையாளமாகவோ வெறியூட்டும் உணர்வாகவோ அதை அணுகவில்லை. மனதளவில் ஒவ்வொருவரும் விரும்பிய இறைநெறியை ஏற்று இயங்குவதற்குத் தமிழினத்தில் இசைவு இருந்தது.

ஐவகை நிலத்தில் வாழ்ந்த தமிழர்கள் ஐந்து வேறுபட்ட கடவுளரையே வணங்கினர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வாக்கு, மத எல்லைகளைக் கடந்த மாந்தநேயம் மிக்கது என்பதை முன்னரே குறிப்பிட்டிருந்தோம்.

தமிழரிடையே காணப்பட்ட அத்தனை இறைநெறிகளையும் பின்பற்றும் அனைவரும் திருக்குறளை வாசிக்க வேண்டும் என்பதற்காக, வள்ளுவர் கடவுள் வாழ்த்தை மதப் பொதுமை மிக்கதாக எழுதினார்.

எல்லாவற்றுக்கும் மேலாக 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' எனக் குறிப்பிட்டு உலகளாவிய மதப்பொதுமையை உரத்து வெளிப்படுத்தினார் திருமூலர்.

தமிழரிடையே அரசியலோடு மதம் இணைந்ததன் விளைவே உள்நாட்டுக்குள் நடைபெற்ற மத மோதல்களாகும். அவற்றையும் அரசுகள் முன்னெடுத்தனவேயன்றிப் பொதுமக்கள் முன்னெடுக்கவில்லை.

வடஇந்தியாவில் நடைபெற்றுக்கொண்டிருந்த மத மோதல்களுக்கு அஞ்சிய கிறித்துவப் பாதிரியார்கள், தமிழ்நாட்டையே பாதுகாப்பான இடமாகக் கருதி, அங்கு சென்று சமயப்பணி செய்தனர். கணிசமான தமிழ்மக்களும் மத மோதல்கள் இன்றிக், கிறித்துவ மதங்களைத் தழுவினர்.

வடஇந்தியாவில் அடிக்கடி தோன்றும் இஸ்லாமிய இந்துச் சண்டைகள் தமிழ்நாட்டில் எவ்வித இன மோதல்களையும் வேறுபாடுகளையும் ஏற்படுத்தியதில்லை.

இவை யாவற்றுக்கும் காரணம் தமிழ் இலக்கியங்கள் மக்களுக்கு ஊட்டிவந்த மத ஒருமைப்பாட்டுக் கொள்கையே.

தொடரும்...



vivekanandan.p@thaiveedu.com

# மறுபிறவி எடுத்த மகாகவி

## - கிருங்கை சேதுபதி

### ஓவியம்: ஜீவா



பாரதியின் புதுச்சேரி வாழ்க்கை, புடம்போட்ட வாழ்க்கை.

வழக்கமாய், மண்ணில் பிறப்பெடுக்கும் மனித ஆன்மா, மாதாவின் வயிற்றில், பத்து மாதங்கள் தங்கிப் பக்குவப்படும். பாரதியோ, புதுவை மண்ணில் பத்து ஆண்டுகள் அடைக்கலம் ஆகியிருக்கிறார்.

உடல் இங்கு இருந்தாலும் உளம் பல இடங்களில் அலைந்து அல்லல் உறுகிறது. கடந்த கால வாழ்வின் பதிவுகள் வந்து வந்து தொந்தரவு செய்ய, அவற்றை, கதைகளில், கவிதைகளில் எழுதி விடுகிறார். ஆனாலும், கவலைகள் எஞ்சி நிற்கின்றன. அச்சம் பேயாய் தலை விரித்தாடுகிறது. மிச்சமிருந்த நம்பிக்கையை, வறுமை மென்று தின்றுகொண்டிருக்கச் சித்தம் கலங்கிய பாரதி, பராசக்தியிடம் விண்ணப்பம் செய்கிறார். சித்தக்கடல் என்ற தலைப்பில் அது நாட்குறிப்பாக நமக்குக் கிடைக்கிறது. 1915-ம் ஆண்டு ஜுலைத் திங்கள் முதல் நாளில் எழுதிய அக்குறிப்பில்,

‘இந்த மனமாகிய கடலை வென்றுவிடுவேன். பல நாளாக இதை வெல்ல முயன்று வருகிறேன். இந்த மனத்தை வெல்ல நான் படும்பாடு தேவர்களுக்குத்தான் தெரியும். இதிலே ப்ராண பயம், வியாதி பயம், தெய்வ பக்திக் குறைவு, கர்வம், மமதை, சோர்வு முதலிய சம்ஸ்காரங்கள் மிகுதிப்பட்டிருக்கின்றன. இவற்றை ஒழித்துவிட வேண்டும்’ என்று உறுதி கொள்கிறார். இங்கே மனம் கடலாகிப் பரந்து கிடக்கிறது. கவலை அலைகளாய் எழுந்து ஆர்ப்பரிக்கிறது. அதனை அடக்க,

‘பரமேஸ்வரி, மகாசக்தி - உன்னிடத்தில் அமரத்தன்மை கேட்கிறேன். என்னை மனக் கவலையிலிருந்து விடுவிக்க வேண்டும். உன்னை எப்போதும் சிந்தனை செய்து கொண்டும், உனது மஹா அற்புதமான உலகத்தை எப்போதும் கண்டு தீரா மகிழ்ச்சியடைந்து கொண்டும், தர்மங்களை இடைவிடாமல் நடத்திக்கொண்டும் வருந்திறமை எனக்கு அருள் செய்ய வேண்டும்’ என்று பராசக்தியிடம் வேண்டுகிறார் அதற்கு அவரே ஒரு வழியையும் தேடுகிறார் முன்னோர் மொழிந்த வண்ணம் மனத்தைக் குரங்காக்கி, எழுத்துக் கூட்டில் நிறுத்தி அடைக்கப் பார்க்கிறார் அதற்கான விளக்கத்தை அவர் மேலும் விரிக்கிறார்.

‘மனமாகிய குரங்கு செய்வதையெல்லாம் எழுதிக்கொண்டு போனால் காலக்கிரமத்தில் அதை வசப்படுத்தி விடலாம் என்பது என்னுடைய கருத்து. ஒன்றை அடக்கு முன்பாக அதன் இயல்புகளையெல்லாம் நாம் அறிந்து கொள்ள வேண்டும். நம்மால் நன்றாக அறியப்படாததை நாம் வசப்படுத்த முடியாது. சித்தத்தை வசப்படுத்துமுன் சித்தத்தை அறிய வேண்டும். அதன் சலனங்களை ஓயாமல் கவனித்து எழுதிக் கொண்டு வந்தால் அதன் தன்மை முழுவதையும் அறிய ஏதுவுண்டாகுமென்பது என்னுடைய தீர்மானம்’ என்று முடிவெடுக்கிறார். அதற்காக,

‘பராசக்தீ! ஒவ்வொரு கணமும் எனது சித்தம் சலிக்கும் முறைகளை அப்போதப்போது பொய்மையில்லாமலும் வஞ்சகமில்லாமலும் எழுதுவதற்கு எனக்குத் தைரியம் கொடுக்க வேண்டும். நாம் எழுதுவதைப் பிறர் பார்க்க நேரிடும் என்று கருதி நமது துர்ப்பலங்களை எழுத லஜ்ஜை உண்டாகிறது. பராசக்தீ! என் மனத்தில் அந்த லஜ்ஜையை நீக்கிவிட வேண்டும். என்று வேண்டுகிறார் பின்னர் தன்னையே புறத்தில் நிறுத்தி, அகவுணர்வைப் பின்வருமாறு வெளிப்படுத்துகிறார்:

‘பாரதியினுடைய மனநடைகளை எழுதப் போகிறேன். நான் வேறு, அவன் வேறு. நான் தூய அறிவு. அவன் ஆணவத்தில் கட்டுண்ட சிறு ஜந்து. அவனை எனக்கு வசப்படுத்தி நேராக்கப் போகிறேன். அவனுடைய குறைகளை எழுத அவன் லஜ்ஜைப்படுகிறான். அந்த லஜ்ஜையை நான் பொருட்டாகாதபடி அருள் செய்ய வேண்டும்’ என்று பராசக்தியைப் பணிந்து பின்வருமாறு தனக்குத்தானே துணிந்து உரைக்கிறார்:

‘எழுது. பராசக்தியின் புகழ்ச்சிகளை எழுது. அடா! பாரதீ, அதைக்காட்டிலும் உயர்ந்த தொழில் இவ்வுலகத்தில்

வேறொன்று இல்லை. பராசக்தி வாழ்க. அவள் இந்த அகில உலகத்துக்கு ஆதாரம். அகிலம் நமக்கு மூன்று வகையாகத் தெரிகிறது. ஜடம், உயிர், அறிவு என இவை தம்முட் கலந் தன. அறிவுலகத்திலே பல படிகள் இருப்பதாக யோகிகள் நிச்சயித்திருக்கிறார்கள். இவற்றுள் ஜடத்துக்கு உயிரும், உயிருக்கு அறிவும் காரணமாமென்று யோகிகள் சொல்லுகி றார்கள். இவை அனைத்திற்கும் மூலப் பொருளாய், இவை யனைத்தையும் தனது உறுப்புக்களாகக் கொண்டு, இவைய னைத்தும் தானாய், இவையனைத்தின் உயிர்நிலையாக ஒரு பொருள் உண்டு. அதனை மஹாசக்தி என்கிறோம். அதை இடைவிடாமல் தியானம் செய்வதால் உனது குறைகள் எல் லாம் நீங்கும். பெரிய பொருளை இடைவிடாது பாவனை செய்யும் அறிவுதான் பெருமையடைகிறது. சித்தம் ஒரு கண் ணாடி. ஓயாமல் பராசக்தீயை தியானம் செய்யுமானால் அவ ளுடைய சாயை இதிலே படும். அதிலே சுகமுண்டு' என்று தெளிகிறார். அதனை மையப்படுத்திப் பக்திப் பாடல்களும் புனைகிறார்.

அலைபாயும் மனதடக்கி நிலைநிறுத்தப் பக்தி மார்க்கமே உற்ற துணை. அதற்காக அனைத்து சமயக் கடவுளரையும் அன்பொழுகப் பாடிப் பரவுகிறார் பாரதி. அத்துடன் மனத் தையே முன்னிலைப்படுத்தி, அறவுரை பகர்கிறார்.

*பேயாய் உழலும் சிறு மனமே*
*பேணாய் என்சொல் இன்றுமுதல்*
*நீயாய் ஒன்றும் நாடாதே*
*நினது தலைவன் யானேகாண்*
*தாயாம் சக்தி தாளினிலும்*
*தருமம் எனயான் குறிப்பதிலும்*
*ஓயா தேநின் று(உ)ழைத்திடுவாய்*
*உரைத்தேன் அடங்கி உய்யுதியால்.*
(மனத்திற்குக் கட்டளை)

என்று மனத்திற்குக் கட்டளையிடுகிறார் கேளா நெஞ்சைத் திரும்பவும் நெறிப்படுத்த, முதலில் இருந்தே தொடங்குகி றார்.

*இன்னும்ஒரு முறைசொல்வேன், பேதை, நெஞ்சே,*
*எதற்கும்இனி உலைவதிலே பயன்ஒன் றில்லை*
*முன்னர்நமது இச்சையினால் பிறந்தோம் இல்லை*
*முதல்இறுதி இடைநமது வசத்தில் இல்லை*
*மன்னுமொரு தெய்வத்தின் சக்தி யாலே*
*வையகத்தில் பொருளெல்லாம் சலித்தல் கண்டாய்*
*பின்னைஒரு கவலையும்இங்கு இல்லை நாளும்*
*பிரியாதே விடுதலையைப் பிடித்துக் கொள்வாய்.*
(நெஞ்சொடு சொல்வது-1)

என்கிறார். கவலையும், சலிப்பும், புதியதன்மீது பற்றும், பட் டென எதையும் விடுவதில் துடிப்புமாய் அலைக்கழியும் மனத் தின் அனைத்து இயல்புகளையும் பட்டியலிட்டு, மனத்தைப் பெண்ணாக உருவகப்படுத்தி அவர் பாடிய பாடல், 'மனப் பெண்'.

'பழமையாம் பொருளினை விரும்பி வீழும் மனமானது, மது வினை நாடும் வண்டு போன்றது' என்று உவமை கூறும் பாரதி, 'அழுகுதல், சாதல், அஞ்சுதல் முதலிய இழிபொ ருள்களைக் கண்டதும் விரைந்துபோய் அதில் இசையும் மனத்தைப் பிணத்தினை விரும்பும் காக்கைக்கு' உவமை யாக்குகிறார்.

*மனமெனும் பெண்ணே! வாழிநீ கேளாய்!*
*ஒன்றையே பற்றி ஊச லாடுவாய்*
*அடுத்ததை நோக்கி அடுத்தடுத்து உலவுவாய்*
*நன்றையே கொள்எனில் சோர்ந்துகை நழுவுவாய்*
*விட்டுவிடு என்றதை விடாதுபோய் விழுவாய்*

*தொட்டதை மீள மீளவும் தொடுவாய்*
*புதியது காணில் புலன்அழிந் திடுவாய்*
*புதியது விரும்புவாய் புதியதை அஞ்சுவாய்*
*அடிக்கடி மதுவினை அணுகிடும் வண்டுபோல்*
*பழமையாம் பொருளில் பரிந்துபோய் வீழ்வாய்*

*பழமையே அன்றிப் பார்மிசை ஏதும்*
*புதுமை காணோம்எனப் பொருமுவாய் சீச்சீ!*
*பிணத்தினை விரும்பும் காக்கையே போல*
*அழுகுதல், சாதல், அஞ்சுதல் முதலிய*
*இழிபொருள் காணில் விரைந்துஅதில் இசைவாய்.*

*அங்ஙனே.*
*என்னிடத்து என்றும் மாறுதல் இல்லா*
*அன்புகொண் டிருப்பாய் ஆவிகாத் திடுவாய்*
*கண்ணினோர் கண்ணாய் காதின் காதாய்ப்*
*புலன்புலப் படுத்தும் புலனாய் என்னை*

*உலக உருளையில் ஒட்டுற வகுப்பாய்*
*இன்பெலாம் தருவாய் இன்பத்து மயங்குவாய்*
*இன்பமே நாடி எண்ணிலாப் பிழை செய்வாய்*
*இன்பம் காத்துத் துன்பமே அழிப்பாய்*
*இன்பம்என்று எண்ணித் துன்பத்து வீழ்வாய்*

*தன்னை அறியாய் சகத்தெலாம் தொலைப்பாய்*
*தன்பின் நிற்கும் தனிப்பரம் பொருளைக்*
*காணவே வருந்துவாய் காண்எனில் காணாய்*
*சகத்தின் விதிகளைத் தனித்தனி அறிவாய்*
*பொதுநிலை அறியாய், பொருளையும் காணாய்*

*மனமெனும் பெண்ணே! வாழிநீ கேளாய்!*
*நின்னோடு வாழும் நெறியும்நன்கு அறிந்திடேன்*
*இத்தனை நாள்போல் இனியும்நின் இன்பமே*
*விரும்புவன் நின்னை மேம்படுத் திடவே*
*முயற்சிகள் புரிவேன் முத்தியும் தேடுவேன்*

*உன்விழிப் படாமல் என்விழிப் பட்ட*
*சிவமெனும் பொருளைத் தினமும் போற்றி*
*உன்றனக்கு இன்பம் ஓங்கிடச் செய்வேன்.*
(மனப்பெண்)

என்று மனம் புரியும் செயல்களையும் சேட்டைகளையும் நிரல் படத் தொடுக்கிறார் விட்டுவிடாது, தொட்டுத் தழுவி நல்லன



உரைக்கிறார்.

அதற்காக, சிவத்தை, காளியை, கண்ணனை, இன்னும் என்னென்ன தெய்வங்களின் பெயர்களைச் சொல்லி உலக மக்கள் உள்ளன்போடு நினைந்து தொழுகிறார்களோ, அவற்றையெல்லாம் முறைப்படத் தொழுது பணிகிறார். அனைத்தின் உச்சமாக, விநாயகர் நான்மணிமாலை பாரதியிடமிருந்து பிறக்கிறது.

***நாட்டினைத் துயர்இன்றி நன்கமைத் திடுவதும்***
***உளமெனும் நாட்டை ஒருபிழை இன்றி***
***ஆள்வதும் பேரொளி ஞாயிறே அனைய***
***சுடர்தரு மதியொடு துயர்இன்றி வாழ்தலும்***
***நோக்கமாக் கொண்டு நின்பதம் நோக்கினேன்***

(வி.நா.மா.-28)

பாரதியின் பிறவி நோக்கமே அதுதானே் அதற்காக, உலகெலாம் காக்கும் ஒருவனை, விநாயகதேவனாக,

*ஓம்எனும் பொருளை உளத்திலே நிறுத்தி,*
*சக்தியைக் காக்கும் தந்திரம் பயின்று,*
*யார்க்கும் எளியனாய், யார்க்கும் வலியனாய்,*
*யார்க்கும் அன்பனாய், யார்க்கும் மினியனாய்*
*வாழ்ந்திட விரும்பினேன் மனமே! நீ இதை*
*ஆழ்ந்து கருதிஆய்ந்து ஆய்ந்து, பலமுறை*
*சூழ்ந்து, தெளிந்துபின் சூழ்ந்தார்க் கெல்லாம்,*
*கூறிக் கூறிக் குறைவறத் தேர்ந்து,*
*தேறித் தேறிநான் சித்திபெற்றிடவே,*
*நின்னால் இயன்ற துணைபுரி வாயேல்,*
*பொன்னால் உனக்கொரு கோயில் புனைவேன்*
*மனமே, எனைநீ வாழ்வித் திடுவாய்.*
*வீணே உழலுதல் வேண்டா,*

(வி.நா.மா.-12)

என்று கூறி, மனத்தைக் கெஞ்சுகிறார் மேலும்,

*மேன்மைப் படுவாய் மனமேகேள்*
*விண்ணின் இடிமுன் விழுந்தாலும்*
*பான்மை தவறி நடுங்காதே,*
*பயத்தால் ஏதும் பயனில்லை,*
*யான்முன் உரைத்தேன் கோடிமுறை,*
*இன்னுங் கோடிமுறை சொல்வேன்,*
*ஆன்மா வான கணபதியின்*
*அருளுண்டு அச்சம் இல்லையே.*

(வி.நா.மா-23)

என்று அறிவுரை பகர்கிறார் அதற்குப் பிறகும் துயரில் போய்விழும் நெஞ்சை விளித்து,

*மேவி மேவித் துயரில் வீழ்வாய்,*
*எத்தனை கூறியும் விடுதலைக்கு இசையாய்,*
*பாவி நெஞ்சே, பார்மிசை நின்னை*
*இன்புறச் செய்வேன் எதற்கும்இனி அஞ்சேல்*
*ஐயன் பிள்ளை (யார்) அருளால் உனக்குநான்*
*அபயம்இங்கு அளித்தேன்.....நெஞ்(சே)*
*நினக்கு நான் உரைத்தன நிலைநிறுத் தி(டவே)*
*தீயிடைக் குதிப்பேன், கடலுள் வீழ்வேன்,*
*வெவ்விடம் உண்பேன், மேதினி அழிப்பேன்,*
*ஏதும் செய்துஉனை இடர்இன்றிக் காப்பேன்*
*மூட நெஞ்சே, முப்பது கோடி*
*முறைஉனக்கு உரைத்தேன் இன்னும் மொழிவேன்*
*தலையில்இடி விழுந்தால் சஞ்சலப் படாதே்*
*ஏது நிகழினும் 'நமக்கேன்' என்றிரு்*
*பராசக்தி உளத்தின் படிஉலகம் நிகழும்*
*நமக்கேன் பொறுப்பு? 'நான் என்றோர் தனிப்பொருள்*
*இல்லை நான்எனும் எண்ணமே வெறும்பொய்'*
*என்றான் புத்தன் இறைஞ்சுவோம் அவன்பதம்.*
*இனிஎப் பொழுதும் உரைத்திடேன். இதை நீ*
*மறவாது இருப்பாய், மடமை நெஞ்சே!*
*கவலைப் படுதலே கருநர கம்மா!*
*கவலையற்று இருத்தலே முக்தி*
*சிவனொரு மகன்இதை நினக்குஅருள் செய்கவே.*

(வி.நா.மா-38)

என்று பாடிப் பார்க்கிறார் அது அவ்வளவு எளிதில்லை என்பது தெரிகிறது. ஆனால், விட மனம் இல்லை; விட்ட இடத்தில் இருந்து தொட்டுப் பிடித்து இழுத்துத் திரும்பத் திரும்பக் கட்டிப் போடுகிறார் கடிந்து கூறுகிறார் கெஞ்சுகிறார் கொஞ்சுகிறார் ஆனால், முற்றுமுழுக்க ஒருநிலைப்பட்டு மனம் இருக்க மறுக்கிறது; இறுக்கக் கட்டுதற்கென்றே பல பாட்டுகள் கட்டுகிறார் கட்டுரைகள் எழுதுகிறார் படிக்கிறார் பாடுகிறார் துடிக்கிறார் துவள்கிறார். பயனின்றிப் போகிறது.

விக்கிரமாதித்தன் வேதாளத்தை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு நடப்பதைப் போல, மனத்தை இழுத்துக்கட்ட, படிப்படியாக, மனம் படிவதற்குச் 'சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம்' பாடலை மந்திரம்போல் ஜபிக்கிறார்.

இப்படி, தொட்ட இடந்தோறும் மனத்தைத் துணைக்கொண்டு, கருதியது இயற்ற முனைகிற பாரதியை, சித்த மார்க்கம் கவர்ந்திழுக்கிறது. புதுவை நகரத்தில் வந்து வதிந்த பாரதியை, யாழ்ப்பாணத்துச் சாமியும், கோவிந்தசா-மியும், ஈர்த்து வசப்படுத்தி, உபதேசித்து ஓர்மைப்படுத்துகிறார்கள். அவர்களுள் குள்ளச்சாமியாம் மாங்கொட்டைச்சாமிதான் பாரதியின் உள்ளம் கவர்ந்த குருக்கள் சாமியாக விளங்குகிறார்.

பாரதியின் வாழ்வில், பழவினை முழுவதையும் முற்றாக அகற்றும் நேரம் வாய்த்தது, சித்தர் குள்ளச்சாமியைத் தரிசனம் செய்தபோதுதான். பாரதிக்காகவே, அவர் முதுகில் மூட்டை கட்டிச் சுமந்தபடி வந்திருப்பார் போலும்.

*மற்றொருநாள் பழங்கந்தை அழுக்கு மூட்டை*
*வளமுறவே கட்டியவன் முதுகின் மீது*
*கற்றவர்கள் பணிந்தேத்தும் கமல பாதக்*
*கருணைமுனி சுமந்துகொண்டுஎன் எதிரே வந்தான்*

என்கிற பாரதி, குள்ளச்சாமியிடம் நகைத்தபடி கேட்கிறார்: 'தம்பிரானே இந்தத் தகைமை என்னே? முற்றும் இது பித்தருடைச் செய்கை யன்றோ? மூட்டை சுமந்திடுவதென்னே? மொழிவாய்.' அப்போது,

*புன்னகைபூத்து ஆரியனும் புகலு கின்றான்:*
*'புறத்தேநான் சுமக்கின்றேன் அகத்தின் உள்ளே,*
*இன்னதொரு பழங்குப்பை சுமக்கி றாய்நீ'*
*என்றுரைத்து விரைந்தவனும் ஏகி விட்டான்.*
*மன்னவன்சொற் பொருளினையான் கண்டுகொண்டேன்*
*மனத்ினுள்ளே பழம்பொய்கள் வளர்ப்பதாலே*
*இன்னல்உற்ற மாந்தரெலாம் மடிவார் வீணே*
*இருதயத்தில் விடுதலையை இசைத்தல் வேண்டும்.*

என்று அவர் சொன்ன குறிப்பில் உண்மை தெளிகிறார் பாரதி. இந்தப் பாடலுக்கு உரை விளக்கம் போலத் தன் கட்டுரை ஒன்றில்,

'ஏ சாமி, உனக்கென்ன பயித்தியமா? கந்தைகளைக் கட்டி ஏன் முதுகிலே சுமக்கிறாய்?' என்று கேட்டேன்.

'நீ நெஞ்சுக்குள்ளே சுமக்கிறாய், நான் முதுகின் மேலே சுமக்

கிறேன்' என்று சொல்லி ஓடிப்போய் விட்டார். உடனே நான் பொருள் தெரிந்து கொண்டேன். அஞ்ஞானப் பழங்குப்பைக ளையும், பழங்கவலைகளையும், பழந்துன்பங்களையும், பழஞ்சிறுமைகளையும் மனதில் வீணாய்ச் சுமந்து திரியும் சாமான்ய மனிதனுடைய அறிவீனத்தை விளக்கும் பொருட்டு மேற்படி சாமியார் இந்த திருஷ்டாந்தத்தைச் சொன்னாரென்று தெரிந்துகொண்டேன்' என்றும் எழுதிக் காட்டுகிறார்.

'காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே' என்ற ஓலை வாசகத்தை உணர்ந்து ஓதிய மாத்திரத்தில் பட்டென்று துறந்த பட்டினத்தாரைப்போல், தன் மனத்தில் சுமந்த அனைத்துக் குப்பைகளையும் அறவே கொட்டிவிட்டு, குருநா தர் சொற்படி முறைப்படி நிற்கிறார் அப்போது குருநாதர் மொழிந்த உபதேசம் பாரதிக்கு மட்டுமன்றி, யாவருக்கும் ஆகிறது.

*சென்றதினி மீளாது மூடரே நீர்*
*எப்போதும் சென்று அதையே சிந்தை செய்து*
*கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து*
*குமையாதீர் சென்றதனைக் குறித்தல் வேண்டர்*
*இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நெஞ்சில்*
*எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு*
*தின்றுவிளை யாடிஇன்புற் றிருந்து வாழ்வீர்*

இதுதான் உபதேசம். ஆனால், ஒருப்படா மனது உருப்பட விடாமல், 'அஃது இன்றிச் சென்றதையே மீட்டும் மீட்டும் மேன்மேலும் நினைந்துஅழுதல்' செய்கிறது. அதனை வேண் டாம் என்று தடுக்கிற குருநாதரின் உபதேசம் மேலும் தொடர் கிறது:

*அந்தோ!*
*மேதையில்லா மானுடரே, மேலும் மேலும்*
*மேன்மேலும் புதியகாற்று எம்முள் வந்து*
*மேன்மேலும் புதியஉயிர் விளைத்தல் கண்டீர்,*
*ஆன்மாஒன் றேகருமத் தொடர்பை எண்ணி*
*அறிவுமயக் கங்கொண்டு கெடுகின் றீரே!*
*மான்மானும் விழியுடையாள் சக்தி தேவி*
*வசப்பட்டுத் தனைமறந்து வாழ்தல் வேண்டும்.*

உபதேசம் என்பது ஓயாமல் சொல்லிக்கொண்டிருப்பதல்ல, ஒரு கணத்தில், கேட்ட மாத்திரத்தில் பற்றிக்கொண்டு பயன் துய்ப்பது. அது குள்ளச்சாமியின் அருளால் பாரதிக்கு வயப் பட்டது. உபதேசம் தொடர்கிறது:

*சென்றவினைப் பயன்கள்எனைத் தீண்ட மாட்டா*
*'ஸ்ரீதரன்யான் சிவகுமா ரன்யா னன்றோ?*
*நன்றிந்தக் கணம்புதிதாய்ப் பிறந்து விட்டேன்,*
*நான்புதியன், நான்கடவுள், நலிவி லாதோன்'*
*என்றிந்த உலகின்மிசை வானோர் போலே*
*இயன்றிடுவார் சித்தரென்பார் பரம தர்மக்*
*குன்றின்மிசை யொருபாய்ச்ச லாகப் பாய்ந்து,*
*குறிப்பற்றார் கேடற்றார் குலைதல் அற்றார்.*

*குறிஅனந்தம் உடையோராய்க் கோடி செய்தும்*
*குவலயத்தில் வினைக்குஅடிமைப் படாதார் ஆகி*
*வெறியுடையோன் உமையாளை இடத்தில் ஏற்றோன்*
*வேதகுரு பரமசிவன் வித்தைபெற்றுச்*
*செறிவுடைய பழவினையாம் இருளைச் செற்றுத்*
*தீயினைப்போல் மண்மீது திரிவார் மேலோர்,*
*அறிவுடைய சீடா, நீ குறிப்பை நீக்கி*
*அநந்தமாம் தொழில் செய்தால் அமரன் ஆவாய்.'*

இவையனைத்தும் குள்ளச்சாமி, பாரதிக்கு உபதேசித்த நன் மொழிகள். இவற்றைப் பல்வேறு குறிப்புகளாலும் எடுத்துக் காட்டுகளாலும் எடுத்துரைத்து விளக்கிக் காட்டியிருக்கிறார் சித்தர். அனைத்தையும் விரித்துரைத்து, பாரதி பாடினார் அல்லர். ஆனால் முடிந்த முடிபாகப் பின்வருமாறு அந்த உபதேசக் குறிப்பினை, நமக்கு உரைக்கிறார்.

*கேளப்பா, மேற்சொன்ன உண்மை யெல்லாம்*
*கேடற்ற மதியுடையான் குள்ளச் சாமி*
*நாளும்பல் காட்டாலும் குறிப்பி னாலும்*
*நலமுடைய மொழியாலும் விளக்கித் தந்தான்*
*தோளைப்பார்த் துக்களித்தல் போலே அன்னான்*
*துணையடிகள் பார்த்துமனம் களிப்பேன் யானே.'*

இவற்றின் மூல சூத்திரத்தைத்தான், 'மனத்திற்கு' என்ற தனித் தலைப்பில் பாடலாக்கி, பாரதி இசைக்கிறார். பழம்பிறவித் துயர் விடுத்துப் புதுப்பிறவியாக மறுபிறவி எடுத்த மகாகவி பாரதி, மரணமிலாப் பெருவாழ்வை நிலைநிறுத்தும் மார்க் கத்தை உரைக்கிறார்.

*சென்றதினி மீளாது, மூடரே நீர்*
*எப்போதும் சென்றதையே சிந்தைசெய்து*
*கொன்றுஅழிக்கும் கவலைஎனும் குழியில்வீழ்ந்து*
*குமையாதீர்! சென்றதனைக் குறித்தல் வேண்டாம்*
*இன்றுபுதி தாய்ப்பிறந்தோம் என்று நீவிர்*
*எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு*
*தின்றுவிளை யாடிஇன்புற் றிருந்து வாழ்வீர்:*
*தீமையெலாம் அழிந்துபோம் திரும்பி வாரா.*

இந்தப் பாடலின் ஈற்றடி, குள்ளச்சாமி உபதேசத்தால் பாரதி பெற்ற பயனின் விளைச்சல் எனலாம். இதன்வழி பாரதியார் பெற்ற குள்ளச்சாமியின் விசுவரூப தரிசனம்தான் அவர்தம் 'சும்மா' கதையில் நுட்பமாக
வெளிப்படுகிறது.



sethupathi@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***

# கம்பனின் கருவூலம் திறந்து... 18

## - மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

சென்ற இதழில் பாலகாண்டத்தின் 20-வது படலமாகிய கோலங்காண் படலத்தில் இராமன் சீதை இருவரினதும் திரு மணத்துக்கு முன்பாக நிகழும் திருமண நிச்சயார்த்தம் எனப் படும் நிகழ்ச்சிக்காகச் சீதையை அலங்காரம் செய்து அர சவை மண்டபத்துக்கு அழைத்து வரப்படுகின்ற அழகான காட்சிகளையும் இனிமையான செய்திகளையும் கூறும் கம்ப ரின் செய்யுள்கள் சிலவற்றைச் சுவைத்து மகிழ்ந்தோம். இந்த இதழில் பாலகாண்டத்தின் 21-வது படலமாகிய கடிமணப் பட லத்திலுள்ள கவிநயங்களை அனுபவித்துக் களிப்பெய்து வோம்.

கடி என்னும் உரிச்சொல் காவல், கூர்மை, மணம், விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல், வரைவு, மன்றல், கரிப்பு என வெவ்வேறு பொருள்களை உணர்த்தும் ஒரு சொல்லாகும் என நன்னூல் என்னும் இலக்கண நூல் கூறுகிறது. இங்கே கடிமணம் என்பது புதுமையான திரும ணம் என்னும் பொருளை உணர்த்துவதாக அமைந்துள்ளது. மறுநாள் திருமணம் நடைபெறவிருக்கிறது. இவ்வேளையில் சீதை, இராமன் இருவரதும் மனவோட்டத்தைக் கம்பர் 14 செய்யுள்களில் சிறப்பாக எடுத்து வைக்கின்றார். விரக வேத னையுற்றிருந்த சீதை தன் மனத்துள் எண்ணிப் புலம்புவதை 9 செய்யுள்களில் கம்பர் அழகாக எடுத்துக் கூறுவார்.

*'உரவே துமிலா உயிரீர் துமெனாக்*
*கரவே புரிவா ருளரோ கதிரோன்*
*வரவே எனையா ளுடையான் வருமே*
*இரவே கொடியாய் விடியா யெனுமால்'*

- கம்ப. பால. 1246

'இரவே! நீ கொடிய தன்மையுடையாய். வலிமை சிறிதும் இல்லாதவர்களது உயிரைப் பறித்துவிடுவோம் என வஞ் சனை செய்பவர்களும் உலகத்திலே இருக்கின்றார்களா? இல்லை. நீ மட்டுமே அப்படி இருக்கின்றாய். நாளை கதிர வன் உதித்த மாத்திரத்தில் என்னை ஆளும் இராமன் என்ன ருகே வந்து விடுவான். ஆகையால் இரவே நீ விரைவில் விடி வாயாக! என்று சீதை புலம்புகிறாள். விரக வேதனை உற்றி ருப்பவர்களுக்கு ஒரு இராப்பொழுது பல யுகம்போல் நீடித் துச் செல்வதைப் போலிருக்கும் என்பதைக் கம்பர் வெளிப்ப டுத்துகிறார். 'எனது துணைவன் இல்லாத காலத்தில் இவ் வாறு அறமின்றி வருத்துகின்ற உன்னை அவன் வந்தால் தண்டித்து விடுவான். அதற்குள் நீ மறைந்து போய்விடு' என இரவுப் பொழுதை அவள் மிரட்டுவதாகவும் இச்செய்யுளில் பொருள் கொள்ளலாம். தன்னைப் போன்ற வலிமையற்ற அபலைப் பெண்களுடன் போரிட்டு அவர்கள் உயிரை வருத் துவது அறமற்றது என்பதையும் அவள் வாயிலாகக் கம்பன் உணர்த்துவதையும் அறியலாம். இச்செய்யுள் நெட்டெழுத்து களை மிகுதியாகப் பெற்று நெடுஞ்சீர் வண்ணமென்னும் சந் தம் அமைந்து வருவதாகத் தொடுக்கப்பட்டிருப்பது சிறப்பாக நோக்கத்தக்கது.

*'பண்ணோ ஒழியாது, பகலோ புகுதாது,*
*எண்ணோ தவிராது இரவோ விடியாது*
*உண்ணோ வொழியாது உயிரோ அகலாது*
*கண்ணோ துயிலாது இதுவோ கடனே.'*

- கம்ப. பால. 1253

இசையோ அடங்குவதாக இல்லை. பகற்பொழுதோ விரை வில் வருவதாக இல்லை. எண்ணங்களோ நீங்குவதாக இல்லை. இராப்பொழுதோ விடிவதாக இல்லை. உள்ளத்திலுள்ள நோவோ ஒழிந்து போவதாக இல்லை. கண்களோ துயில் கொள்வதாக இல்லை. இவ்வாறு வருந்துவதுதான் என் கட னாக இருக்கின்றதா என எண்ணிச் சீதை அடையும் விரக வேதனையைக் கம்பர் வெளிப்படுத்தும் பாங்கு மிகச் சிறப் பாக உள்ளது. ஓகார இடைச்சொல்லை ஐயப் பொருளில் வைத்து இரங்கல் என்னும் உரிப்பொருளை உணர்த்துவது கம்பரின் கவித்திறனாகும்.

கடலினை நோக்கி 'என்னைப் போலவே நீயும் ஒரு அப லைப் பெண்ணா?' எனச் சீதை இரங்குவது போலக் கம்பர் படைத்துள்ள மேலும் ஒரு அழகான செய்யுளைப் பார்க்க லாம்.

*'இடையே வளைசோர எழுந்து விழுந்து*
*அடலேய் மதனன் சரமஞ் சினையோ*
*உடலோய் வுறநா ளுமுறங் கலையால்*
*கடலே உரைநீ யுமொர்கன் னிகொலாம்.'*

- கம்ப. பால. 1254

'கடலே! உனது வளையல்களும் சோர்ந்து விழ எழுந்து நிற் கப் பார்க்கிறாய். அவ்வாறு எழுந்திருக்க வலிமையில்லாமல் கீழே விழுந்து உடல் தளர்ச்சியடைகிறாய். நாள்தோறும் என் னைப் போலவே தூக்கம் கொள்கிறாயில்லை. ஆதலால்

நீயும் என்னைப்போல ஒரு கன்னிப் பெண்ணோ? கொல்லும் வலிமை கொண்ட மன்மதனது பாணத்துக்கு நீயும் அச்சம் கொண்டாயோ?' என்று விரக வேதனையின் ஆற்றாமையால் கடலைப் பார்த்துச் சீதை கேட்பதாகக் கம்பர் கற்பனை செய் வது நயமாக உள்ளது. இரங்கல் என்பது நெய்தல் நிலத்துக் குரிய உரிப்பொருளாவதால் அந்த நிலத்துக்குரிய கடலைப் பார்த்து இரங்குவதாகக் கூறுவது கவிஞர்களது மரபாகும். சீதையின் கைவளையல்கள் சோர்ந்து கழன்று விழுவதுபோல வெண்சங்குகள் சிந்துவதைக் கடலின் வளையல்கள் சோர்வ தாகவும், அவள் விரக வேதனையால் உடல் தளர்ந்து எழுவ தும் எழுவதற்கு வலிமையில்லாமல் விழுவதும் போல அலை கள் மேலெழுந்து தளர்ந்து கீழே விழுவதாகவும், அவள் அல் லும் பகலும் தூக்கமின்றி இருப்பதுபோல் அல்லும் பகலும் கடல் உறங்காது அலைத்து ஒலித்துக் கொண்டிருப்பதாக வும், சீதையின் நிலையுடன் கடலைச் சிலேடையாக ஒப்பு வமை கூறப்பட்டுள்ளது. இவ்வாறு சிலேடை உவமையணி நயம் பொருந்த இச்செய்யுளைக் கம்பர் அமைத்துள்ளது அவரின் கற்பனைத் திறனைக் காட்டுகிறது.

இவ்வாறே மறுபக்கத்தில் இராமனது மனவோட்டத்தையும் ஆறு செய்யுட்களால் கம்பரின் கற்பனை காட்சிப்படுத்துகி றது. அவற்றுள் ஒன்றை இங்கே எடுத்து வருகிறேன்.

***'திருவே யயையாள் முகமே தெரியின்***
***கருவே கனியே விளைகா மவிதைக்கு***
***எருவே மதியே யிதுவென் செய்தவா***
***ஒருவே னொடுநீ யுறவா கலையோ'***

- கம்ப. பால. 1257

'இலக்குமியைப் போன்றவளான சீதையினது முகத்தைப் ஒத் தவனே! ஆராய்ந்து பார்க்குமிடத்து காய்களையும் பழங்க ளையும் விளைவிக்கின்ற காமவிதை செழித்து வளர்வதற்கு எருவைப்போல இருப்பவனே! முழுமதியே! இப்போது என்ன காரியம் செய்கிறாய்? விரும்பிய பெண்ணைக் கூடாமல் தனித்துள்ளவனாகிய என்னுடன் நீ நட்புக்கொள்ள மாட் டாயா?' என்று இராமன் நிலாவைப் பார்த்துக் கேட்பதாகக் கம்பரின் வருணனை உள்ளது.

'துணையின்றித் தனிமைப்பட்டவருக்குத் துணையாக நின்று துயர் தீர்த்தல் உலகிலுள்ள நல்லோர்களது இயல்பு. அவ் வாறிருக்க தனிமையில் வாடும் எனக்குத் துணையாக நின்று துயர் தீர்க்காவிடினும் சமயம் பார்த்து என்னிடம் பகைமை பூண்டு என்னை வருத்துகின்றாய். அது அடாத செயல்' என இராமன் நிலவுடன் முறையிடுவதாகக் கம்பர் கற்பனை செய் கிறார். நிலவு சீதையின் முகத்துக்கு ஒப்பாகி இராமனது எதி ரிலே நின்று அவளை அவனுக்கு நினைவூட்டி அவனை வருத்துவதாகக் கம்பர் கற்பனை செய்துள்ளதையும் இங்கே நோக்கலாம். பயிரைச் செழிப்பாக வளரச் செய்வதற்கு எரு காரணமாக இருப்பதுபோல விளையும் தன்மையுடைய காம விதைக்கு எருவாக நிலவு உள்ளது என உவமை கூறியுள்ள தும் நயம் மிக்கதாகும். மேலே எடுத்துக்காட்டப்பெற்ற செய் யுள்கள் எல்லாவற்றிலும் கூறப்படுவதுபோலக் கேளாதனவற் றைக் கேட்பன போலவும், பேசாதனவற்றைப் பேசுவன போலவும் அஃறிணைப் பொருள்களுடன் ஒருவர் உரையா டுவதை மரபு வழுவமைதியாக இலக்கணத்தில் கொள்ளப்ப டுகிறது. ஒரு சொற்றொடரோ அதன் பொருளோ சரியான இலக்கண வரம்புக்குள் அமையவில்லை என்றாலும் அவ் வாறு அமைதல் குற்றமில்லை என அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவது வழுவமைதியாகும்.

சனகனின் கட்டளைப்படி நாளை சீதை, இராமன் இருவருக் கும் திருமணம் என்று முரசறையப்படுகிறது. மிதிலை நக ரத்து மக்கள் நகரத்தை அலங்கரிக்கத் தொடங்குகிறார்கள். அதனை 18 செய்யுட்களில் கம்பர் வருணனை செய்கிறார். அவற்றுள் இரண்டை இங்கே தருகிறேன்.

***'தோரண நடுவாரும் தூணுறை பொதிவாரும்***
***பூரண குடமெங்கும் புனைதுகில் புனைவாரும்***
***காரணி நெடுமாடங் கதிர்மணி யணிவாரும்***
***ஆரண மறைவாணர்க் கின்னமு திடுவாரும்.'***

- கம்ப. பால. 1265

அந்த மிதிலை நகரத்திலே அப்போது தோரணங்களை நடு பவர்களும், கம்பங்களுக்கெல்லாம் சித்திரித்த பட்டுச் சிலை களாகிய உறைகளையிட்டு மூடி அலங்காரம் செய்பவர்க ளும், பூரண கும்பங்கள் வைத்து அவற்றின் மேலே ஆடை அணிவிப்பவர்களும், மேகங்கள் வந்து சூழப்பெற்ற உயர்ந்த மாட மாளிகைகளை ஒளியுடைய இரத்தினங்கள் இழைக்கப் பெற்ற கவசங்களையிட்டு அலங்கரிப்பவர்களும் வேதங்க ளைக் கற்ற அந்தணர்களுக்கு இனிமையான அமுதம் போன்ற உணவுவகைகளை அளிப்பவர்களுமாக அந்த மிதிலை நகரம் காணப்படுகிறது. இவ்வாறு பலவகையாக அலங்கரிக்கப்படுகின்ற அந்நகரத்தை நோக்கி வருகின்றவர் களைக் கம்பர் இவ்வாறு வருணிக்கின்றார்.

***'தேர்மிசை வருவாரும் சிவிகையில் வருவாரும்***
***ஊர்தியில் வருவாரும் ஒளிமணி நிரையோடைக்***
***கார்மிசை வருவாரும் கரிணியில் வருவாரும்***
***பார்மிசை வருவாரும் பண்டியில் வருவாரும்.'***

- கம்ப. பால. 1278

தேர்களின்மேல் வருபவர்களும், பல்லக்குகளில் வருபவர்க ளும், வேறு வாகனங்களின்மேல் வருபவர்களும், ஒளி வீசு கின்ற இரத்தினங்கள் வரிசையாகப் பதிக்கப்பெற்ற நெற்றிப் பட்டத்தை அணிந்த கரிய மேகங்களைப் போன்ற ஆண் யானைகளின் மீதும், பெண் யானைகளின் மீதும் வருபவர்க ளும், நடையாக வருபவர்களும், வேறு வண்டிகளின் மீது வருபவர்களும் என மக்கள் அந்நகரத்தை வந்தடைவதாகக் கம்பர் வருணிக்கின்றார். இவ்வாறாகப் பல மங்கலமான நிகழ்வுகளுடன் மகிழ்ச்சிதரும் நாளாக அந்த மணநாள் சிறக் கின்றது. முரசங்கள் ஒலிக்க அனைவரும் திருமண மண்ட பத்தை வந்தடைகிறார்கள்.

திருமண மண்டபத்தின் சிறப்பினைக் கம்பர் பலவாறு வரு ணிக்கின்றார்.

*'புயலுள மின்னுள பொருவின் மீனுள*
*இயன்மணி யினமுள சுடரி ரண்டுள*
*மயன்முதற் திருத்திய மணிசெய் மண்டபம்*
*அயன்முதற் திருத்திய அண்ட மொத்ததே.'*

- கம்ப. பால. 1288

மயனெனும் அரசத் தச்சனால் முதலில் திருத்தமாக அமைக் கப்பட்டுள்ள இரத்தினங்கள் பதித்துச் செய்யப்பெற்ற அம் மண்டபத்திலே பயன் கருதாது கொடை வழங்கும் தன்மை யுள்ள ஆடவர்கள் அங்கே மேகங்களாக உள்ளார்கள். ஒளி பொருந்திய மெல்லிய இடையையுடைய மகளிர் பலர் மின் னல்களாக வந்து கூடியுள்ளார்கள். பெரும் மன்னர்கள் ஒப் பற்ற நட்சத்திரங்களாக வந்து கூடியுள்ளார்கள். அவர்களது இனமாக அவர்களோடு வந்திருப்பவர்களும் தாரகைகளாக வந்துள்ளார்கள். தயரதனும், சனகனும் இரு சுடர்களான சூரிய சந்திரராக வந்து கூடியுள்ளார்கள். ஆதலால் அந்த மண மண்டபம் மேகங்களையும், மின்னல்களையும், விண்மீன் களையும், தாரகைகளையும் சூரிய சந்திரர்களையும் தன்ன கத்தே கொண்டதாகப் பிரமனால் ஆதியில் அழகாகப் படைக்கப்பெற்ற அண்ட கோளத்தை ஒத்ததாக இருந்தது என்பது கம்பரின் உச்சமான வருணனையாகும்.

இராமன், சீதை இருவரும் திருமணக் கோலம் கொண்டு திரு மண மண்டபத்தை வந்து சேர்வதனைப் பல செய்யுள்களில் கம்பர் அழகாக வருணித்துக் கூறுகிறார். மண்ணுலகத்தோரு டன் விண்ணுலகத்தவர்களும் வந்திருந்து வாழ்த்துகள் ஒலிக்க, வசிட்ட மாமுனிவன் திருமணச் சடங்குகளுக்கான ஆயத்தங்களைச் செய்கிறான். சீதையும் இராமனும் திருமண மேடையில் ஏறியிருக்கச் சனகன் இராமனுக்குச் சீதையைத் தரைவார்த்துக் கொடுக்கிறான்.

*'கோமகன் முன்சன கன்குளிர் நன்னீர்*
*பூமக ளும்பொரு ளும்மென நீயென்*
*மாமகள் தன்னொடு மன்னுதி யென்னாத்*
*தாமரை யன்ன தடக்கையி னீந்தான்'*

- கம்ப. பால. 1330

தயரதனின் திருக்குமாரனாகிய இராமனுக்கு எதிரே நின்று சனகன் பரம்பொருளாகிய திருமாலும், தாமரை மலரில் வாழும் திருமகளும் போல எனது அழகிய மகளான சீதையு டனே நிலைபெற்று வாழ்க என்று கூறிக் குளிர்ந்த நன்னீரைத் தாரை வார்த்துத் தாமரை மலரையொத்த இராமனது வலது கையிலே சீதையின் கையை வைத்துக் கொடுக்கிறான். 'பூம களும் பொருளும்' என்பது இரட்டுற மொழிதல் என்னும் கவிதை உத்தியால் திருமகளும் அவளுக்குரிய பொருளான திருமாலும் என்னும் பொருள்படுவதாகவும், ஒன்றையொன்று பிரியாதிருக்கின்ற பூமாதேவியும் அதிலுள்ள செல்வமும் என் னும் பொருள்படுவதாகவும் இருபொருள் படுவதாக உரை யாசிரியர்கள் கூறுவர்.

சனகன் சீதையைத் தாரை வார்த்துக் கொடுத்தபோது எல் லோரும் பூமாரி பொழிந்து வாழ்த்தொலிகளை எழுப்ப அந்த ணர்கள் மந்திரம் ஓதித் திருமணச் சடங்குகளை நடத்திவைப் பது பற்றிப் பல செய்யுள்களில் கம்பர் எடுத்துரைக்கின்றார். அதிலே சீதை இராமனுடன் தீவலம் வந்து அம்மி மிதித்து அருந்ததி காணுகின்ற செய்தியைக் கூறும் செய்யுள் இது.

*'வலங்கொடு தீயை வணங்கினர் வந்து*
*பொலம்புரி நூலவர் செய்பொருள் முற்றி*
*இலங்கொளி அம்மி மிதித்தெதிர் நின்ற*
*கலங்கலில் கற்பின் அருந்ததி கண்டாள்'*

- கம்ப. பால. 1335

அழகிய முப்புரி நூலாலமைந்த காப்பு நாணைப் பூண்ட இராமனும் சீதையும் வேள்வித் தீயைச் சுற்றி வந்து வணங்கி னர். செய்யவேண்டிய ஏனைய சடங்குகளையும் செய்து முடித்தபின் சீதை ஒளிவிளங்குகின்ற அம்மிக் கல்லைக் காலால் மிதித்து எதிரிலே நின்ற கலங்குதல் இல்லாத கற்பு நிலையையுடைய அருந்ததி நட்சத்திரத்தைப் பார்க்கிறாள். திருமணச் சடங்குகள் நடைபெறுகின்றபோது மணமகன் மண மகளது பாதத்தைப்பிடித்து அம்மிமேல் வைப்பது கல்லின் தன்மையை எடுத்துக் காட்டிக் கற்பு நிலையை வலியுறுத்துவ தற்கென்பர். அவ்வாறே மணமகன் மணமகளுக்கு அருந்ததி யைக் காட்டுதலும் கற்பின் நிலைமையை எடுத்தக்காட்டுவ தற்காகவே எனப்படுகிறது. திருமணச் சடங்குகள் நிறைவு பெற, இராமனும் சீதையும் பெரியோர்கள் யாவரையும் வணங்கித் தம்மாளிகைக்குச் செல்கின்றார்கள். திருமணம் நிறைவுபெறும்போது பல மங்கல ஒலிகள் முழங்குகின்றன.

*'ஆர்த்தன பேரிகள் ஆர்த்தன சங்கம்*
*ஆர்த்தன நான்மறை ஆர்த்தனர் வானோர்*
*ஆர்த்தன பல்கலை ஆர்த்தன பல்லாண்டு*
*ஆர்த்தன வண்டினம் ஆர்த்தன வேலை'*

- கம்ப. பால. 1337

மங்கலப் பேரிகை வாத்தியங்கள் ஒலித்தன. சங்கொலிகள் முழங்கின. நான்கு வேதங்கள் ஒலித்தன. தேவர்கள் ஆனந் தத்தால் ஆரவாரித்தனர். பல நூல்கள் படிக்கப்பட்ட ஒலிகள் எழுந்தன. மகளிர் பல்லாண்டு பாடுகின்ற ஓசை ஒலித்தது. பூ மாலைகளில் மொய்க்கின்ற வண்டுகளின் ரீங்கார ஒலிகள் ஒலித்தன. கடல்களும் ஆரவாரித்தன. உலகம் முழுவதும் நன்மை பயக்கக்கூடிய நிகழ்ச்சி நடைபெறும் பொழுது இவ் வாறான ஒலிகள் எழுப்பப்படுவது நன்நிமித்தத்தைக் குறிப்ப தாகும் என்பதைக் கம்பர் கூற விழைகின்றார். 'ஆர்த்தன' என்னும் சொல் செய்யுளில் திரும்பத் திரும்பப் பலதடவை கள் வருவது சொற்பொருட் பின்வரு நிலையணி என்னும் செய்யுள் நயமாகும்.

இராமன், சீதை இருவரதும் திருமணத்தைத் தொடர்ந்து இரா மனின் தம்பிமார் மூவருக்கும் திருமண ஏற்பாடுகள் செய்து அவர்களது திருமணமும் நடைபெறுவதாக இரண்டு செய்யுட் களில் கம்பர் கூறுகின்றார். கடிமணப்படலம் நிறைவெய்து-கிறது.

(வளரும்...)



shanmugarajah@thaiveedu.com



# கவிதை அறிந்த தமிழறிஞர் எஸ். வையாபுரிப் பிள்ளை

- சு. வேணுகோபால்

ஓவியம்: ஜீவா

**1930**-வாக்கில் 'ஆராய்ச்சி உரைத் தொகுதி' நூலுடன் தமிழ் திறனாய்வுத்துறையில் வையாபுரிப்பிள்ளை வந்தார் என்றாலும் கவிதை குறித்த தேர்ந்த கண்ணோட்டம் உடைய-வராகவும் இருந்தமைக்கு சான்றுகள் இருக்கின்றன. சொற் களை உயிரோட்டமாக கையாளத் தெரிந்தவனே கவிஞனின் தகுதியைப் பெறுவான் என்று தன் எண்ணத்தை கம்பனைக் காட்டி முன்வைத்திருக்கிறார்.

## சொல்லூற்றை நாடுதல்:

'இடத்திற்கேற்ப, செய்யுளின் கதிக்கேற்ப, சொற்கள் யாதொரு தட்டுத்தடையுமின்றி விரைந்து வந்து உதவும் நிலையே சொல்வளம்... எடுத்துக்கொண்ட சுவைகளுக்குத் தக்கபடியாகவும் சொற்கள் அமைதல் வேண்டும். இலக்கிய வழக்கிலும் உலக வழக்கிலும் உள்ள எல்லாச் சொற்களுக் கும் உயிர் உண்டு. வாழ்க்கை உண்டு. வாழ்க்கைச் சரித்திர மும் உண்டு. பண்டை இலக்கியங்களிலே நிரம்பிய பயிற்சி யும், தன் காலத்து வழங்கும் மொழி பற்றிய மிக ஆழ்ந்த அனுபவமும் தனது ஆன்மாவோடு ஒன்றிக் கலந்துவிட்ட நிரம்பிய தமிழுணர்ச்சியும் இருக்கும் கவிஞனுக்குத்தான் சொற்களின் உயிர்த்துவம் நன்கு புலப்படும். இவ்வகையான சிறந்த ஒரு கவிஞன் மனக்கண் முன்னே தோன்றி, தம்மைத் தாமே ஏவல் கேட்டு நிற்கும். இங்ஙனம் தோன்றும் ஒரு சொல்லுக்கு அதன் பரியாயச் சொல் வேறு எதுவும் சமமா கமாட்டாது. ஆதலால் அச் சொல்லுக்குப் பதிலாக வேறு சொல் அடைக்க முடியாது. கம்பன் இப்படிப்பட்ட சொல்வ ளம் படைத்தவன்...' (வீ. அரசு, வையாபுரிப்பிள்ளை, கட் டுரை, ப. மருதநாயகம் நா. செல்வராசு (பதிப்பாசிரியர்கள்) இருபதாம் நூற்றாண்டு தமிழ்த் திறனாய்வாளர்கள், ப.181).

இந்தக் கவிச் சிந்தனையை வையாபுரிப்பிள்ளை ஆனந்த வர்த்தனாரின் 'த்வந்யா லோகா'வில் இருந்து உள்வாங்கியி ருப்பதை வீ. அரசு காட்டுகிறார். இந்நூலைத் 'தொனி விளக்கு' எனும் பெயரில் மொழி பெயர்ந்த பி.எஸ். சுப்ரம-ணிய சாஸ்திரியார், அந்நூலில் காணப்படும் பரிகாரச் செய் யுள் (முன்னர் கூறியதை சிறிது புதிய செய்திகளோடு கூறு தல்) ஒன்றைப் பின்வருமாறு மொழியாக்கம் செய்துள்ளார்.

*'விருப்பில் பொருளை நினைப்பிக்குஞ் சொற்களை*
*வழங்கின் அழகின்மை பெறுமாவதுபோல்*
*... .... ... ..*
*விருப்புனப் பொருளை நினைப்பிக்குஞ் சொற்களை*
*வழங்கினழகு பெறுமே திண்ணம்*
*சொற்களே தொனியினையுறுவந்த போதிலும்*
*சொல்லுவ ராங்கெங்கும் அழகு உண்டென*
*... .... ... ..*
*பேரழகுற்ற அணிகலன் ஒன்றான்*
*காரிகை விளங்குதல் போன்று நற்கவயின்*
*வாக்கும் விளங்குறுஞ் சொற்றேர்ந்து தொனியால்*
*... .... ... .. '*

சமசுகிருத திறனாய்வு மரபைப் பேராசிரியர் தம் வயப்படுத் திக் கொண்டிருப்பதை கம்பனின் கவிச்சித்திரம் பற்றிப் பேசும் இடங்களில் காணலாம். கம்பனின் சொல்லாற்றலை அளவு கோலாகக் கொண்டு பிற கவிஞர்களை மதிப்பிட்டி ருக்கிறார்.

'கவிதையின் உயிர்நிலை செய்யுளோசை என்று சொன்னால் அது தவறாகமாட்டாது. இவ்வகைச் செய்யுள் - ஓசைகள் மேற்கொள்ளும் மிகப் பல. ஒரு சில நம் ஆன்மாவைத் தூண்டிச் சிலிர்த்துச் செல்லுமாறு செய்கின்றன. வேறு சில நம் மனத்தைத் தாக்கி இடித்துத் தகர்ந்து விடுகின்றன. சில மிருதுவாய் நடனமிடுகின்றன. சில மெல்லென விரைவாய்ச் செல்லுகின்றன. சில குதித்துத் துள்ளி வருகின்றன. சில சவாதானமாக அகன்ற நெறியில் கௌரவமாகச் செல்லுகின் றன. இங்கே குதித்தன போல எத்தனையோ வகைகளில் ஓசை விகற்பங்கள் நிகழுகின்றன. கவிமணி தேசிக விநாய கம் பிள்ளை அவர்களின் பாரதி குறித்தப் பாடல்... சொல் லுக்குச் சொல் அழகு ஏறுமே அடா' என்று எடுத்துக் கூறுகி றார்.

*'துள்ளும் மறியைப் போலத் துள்ளுமே, அடா*
*கல்லும் கனிந்து கனியாகுமே, அடா - பசுங்*
*கன்றும் பால் உண்டிடாது கேட்டுமே, அடா*
*அலைமேலே அலை வந்து மோதுமே அடா - அலை*
*அழகான முத்தை அள்ளிக் கொட்டுமே, அடா*
*மலைமேலே மலைவளர்ந்தோங்குமே, அடா - அதை*
*வளங்கள் அடர்ந்த படர்ந்து சூழுமோ, அடா'*

வையாபுரிப்பிள்ளை கவிதை குறித்து விளக்கும் இடங்களில் திறனாய்வு அடிப்படையான அமைப்பும் தொழிலும் கவிதையில் செயற்படுவதை தெளிவுபடுத்துவதை உணரலாம். கவிஞன் சொற்களுக்குத் தரவேண்டிய முக்கியத்துவத்தை பேராசிரியர் அழுத்திக் கூறுவதற்கு அவர் சொல்லாராய்ச்சியின் ஆழங்கால் பதித்துச் செயற்பட்டதை வீ. அரசு சுட்டிக் காட்டுகிறார்.

## புதிய போக்கை அவதானித்தல்:

'ரொமண்டிசம்' என்னும் புனைவியல் தன்மை, பிரெஞ்சுப் புரட்சியைத் தொடர்ந்து ஐரோப்பிய உலகில் பெரும்பங்கு செலுத்தியது. இது பின்னர் ஒரு திறனாய்வுப் போக்காக வடிவம் பெற்றது. தமிழ்ச் சூழலிலும் கம்பன் பற்றிய எதிர்ப்பு உருப்பெற்ற சூழலில், அதற்கு மாற்றாகக் கம்பனின் கற்பனை உலகம் பெரிதும் விதந்து பேசப்பட்டது. அதில் பேராசிரியர் பங்கு விரிவானது. இச் சூழலில்தான் 'கவிதை பற்றிய வரையறை'யை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

'கவிதை - உலக உண்மைகளைக் காட்டிலும் பாவனா சக்தியின் இயல்புகளையே பெரும்பாலும் மேற்கொள்ள வேண்டும். அது பூமியில் காலை ஏற்றி நடவாதபடி, மேலாகப் பறந்து செல்லுதல் வேண்டும். பொருளை வியாக்கியானம் செய்யாதபடி தெய்வ ஆவேசத்தால் குறிசொல்வது போல் அமைந்திருத்தல் வேண்டும். பொருள்களை விளக்குவதைக் காட்டிலும், அவற்றின் மீது ஒளி பரவவிட்டு, அவை தாமாகவே விளக்கமுறச் செய்தல் வேண்டும். புற உலகத்தில் வெளிப்படையாக உள்ள பொருள்களோடு அமையாதபடி, ஆன்ம உலகில் அது சஞ்சரித்தல் வேண்டும். நிலையற்ற பொருள்களோடு நின்றுவிடாதபடி நிலையாயுள்ள பொருள்களைப் பற்றியும் அது நிகழ்தல் வேண்டும். இங்ஙனம் கூறிய அளவில், இதுவும் கவிதையைப் பற்றிய கவிதையல்லவா என்று தோன்றும். அறிவு நெறியினின்றும் விலகிப் பைத்திய நெறியில் நின்றதன் விளைவு என்றும் இது தோன்றலாம். கம்பன், பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பித்தர் சொன்னவும் பின்னப் பெறுபவோ? என்று கூறியது நமது நினைவிற்கு வரலாம்'

கவிதை பற்றிய வையாபுரிப்பிள்ளையின் இந்த பார்வை இரண்டு விதங்களில் முக்கியத்துவமானதாகிறது. ஒன்று பித்தேறிய நிலையில் பாரதி படைத்த ஊழிக்கூத்து, அக்கினிக் குஞ்சு போன்ற பாடல்களை அறிவின் தளத்திலும், யதார்த்த தளத்திலும் நிறுத்திப் பார்க்காமல் அக் கவிதைகள் மூலம் மானிட இதயத்தில் எழுப்பப்படும் பேருணர்வை அடையாளம் கண்டு சொல்வதற்கு ஒரு சிறப்பைத் தருகிறது. இரண்டாவதாக செய்யுள் வடிவினுள் இயங்கி வந்த கவிதை- அதாவது கதை சொல்லல் மரபையும் ஏற்றுக்கொண்டு வந்த கவிதை, அந்த கதை சொல்லல் மரபிலிருந்து விலகி கவிதையாக மட்டுமே இயங்க வேண்டும் என்ற பார்வை வெளிப்படுவதையும் காணலாம். இது வ.வே.சு. ஐயரின் கவிக் கொள்கையிலிருந்தும் விலகி வேறு தடத்தில் நின்று பயணத்தைத் தொடங்குவதாகக் கருதலாம். பாரதியின் பாஞ்சாலிசபதம், குயில் பாட்டில் கதையின் இழை இருந்தாலும் பிற கவிதைகளில் கதையின் இழை விடுபட்டு கவிதையாகவே மலர்ந்ததை இவ்விடத்தில் நினைவு கூறலாம். ந. பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், கு.பா.ரா. தொடங்கிய புதுக்கவிதைக்கு வையாபுரிப்பிள்ளையின் கவிக் கொள்கை முற்றிலும் பொருந்திப் போவதைச் சுட்டலாம்.

வ.வே.சு. ஐயர், மேலான இலக்கியத்தின் தன்மை என்பது அதனுள் வெளிப்படும் பேருணர்ச்சி என்கிறார். வையாபுரிப்பிள்ளை அது வெளிப்படுத்தும் உலகப் பொதுமையின் குணத்தில் அமைந்திருக்கிறது என்கிறார். இத்துடன் அறிவார்ந்த சொல்லையும் பயன்படுத்துகிறார்.

'இலக்கியத்தின் முக்கிய இயல்புகள் கலையழகு, குறிப்பாற்றல் (Suggestiveness) என்ற இரண்டும், இதனால் இலக்கியத்துக்கு நிலைபேறுடைமை (Permanence) மூன்றாவது சிறப்பியல்பு என்கிறார். இந்த நிலைபேறுடைமைக்கு அளவுகோலாக உரைகல்லாக இலக்கியத்தின் உலகப் பொதுமை அல்லது அகிலத்துவம் (Universality) அதாவது மக்கள் இனத்துடன் பெரும்பாலவர்க்குப் பொதுவாயுள்ள ஆவல்களுக்கு இடம் உலகப் பொதுமையாயுள்ள ஆசாபாசங்களைக் குறிப்பது ஆகிய தன்மைகளை அடக்கி இருக்க வேண்டும். அதோடு ஆசிரியரது ஆன்மாவிற்கே தனித்து உரிய ஒரு சிறப்பு இயல்பான அவரது நடை, அதாவது 'ஆசிரியரது ஆன்ம குணங்களை வெளிக்காட்டும்' ஒரு மொழிப் பாங்கு இருக்க வேண்டும்' என்கிறார்.

சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதியுள்ள உரையைப் பற்றி, 'அவரது உரையில் தமிழ் உணர்ச்சி, இசை, கூத்து பற்றி உணர்ச்சியில், அணிகளின் இயல்பு விளக்கம், சில சொற்களின் நயம் எடுத்துக்காட்டல் ஆகியவைதான் எடுத்துக் காட்டப்பட்டு இருக்கிறதே தவிர இவைகளுக்கு மேலாக உள்ள இலக்கிய நயம் கவிதை நயம் அவரால் சிறிதும் புலப்படுத்தப்படவில்லை' என்று கூறியதுடன், 'முற்காலத்தே இவ்வகை நயங்களை உரைக்காரர்கள் எடுத்துக்காட்டும் வழிகளும் இல்லை' என்றும், 'நூலில் உள்ள கொள்கைகளையும், நோக்கங்களையும், நியதிகளையும் இலக்கணங்களையும், அணிகளையும் எடுத்துக் காட்டுதலையே தமது முக்கிய கடமையாகக் கொண்டன' (சி.சு. செல்லப்பா, தமிழில் இலக்கிய விமர்சனம், பக்.16-17) என்று உரையாசிரியரின் திறனாய்வுகளை பகுத்து ஆராய்ந்து விமர்சனம் செய்கிறார்.

கம்பனிடம் சொல் வளம், செய்யுள் வளம் மனோபாவனையின் வளம் ஆகிய மூன்றும் அமைந்திருந்த தன்மையால் தான் அவர் கவிச்சக்கரவர்த்தி ஆகிறார் என்று குறிப்பிடுகிறார், வையாபுரிப்பிள்ளை. (கம்பன் காவியம் 1956) வையாபுரிப் பிள்ளையின் திறனாய்வில் உருவமும் உள்ளடக்கமும் பொருந்தி ஒரு ஆழமான அனுபவத்தைக் கொண்டுவரும் பாங்கை ஆராய்கிறார். இப்பண்பு மற்ற புலமையாளரிடம் இல்லாதது ஆகும்.

'அவனது (கம்பன்) கருத்தின் இசை, செய்யுளின் கதியாக



உருவெடுத்து, வெளிவந்து, ஒழுகுகின்றது என்றே கொள்ள வேண்டும். முக்கியமான கட்டங்களுக்குத் தக்கபடியும் அங்கு கூறவேண்டும் - கருத்துகளுக்குத் தக்கபடியும் செய்யு ளின் வகைகள் தாமாகவே மாறுவதுபோல் மாறிவிடுகின்றன.'

மனோபாவனையின் வளம் என்பதை விளக்கும்போது,

உவமை முதலிய நயங்களையும், பல்வேறு கட்டங்களின் வருணனைத் திறத்தையும் இரண்டு பாத்திரங்கள் சந்திக்கு மிடத்து நிகழும் நிகழ்ச்சியைப் பற்றிய வருணனையில் கம்ப னின் ஆற்றலையும் புலப்படுத்திவிட்டு,

'இவ் வருணனைகள் ஒருபுறமிருக்க, கம்பன் கதையை நிகழ்த்தும்போது நிகழும் மனோபாவனையும் மிகவும் வியக் கத் தக்கதாயுள்ளது. வேகமாகச் செல்ல வேண்டுமிடங்களில் வேகமாய்ச் செல்கிறது. சுருங்கச் செல்ல வேண்டுமிடங்களில் சுருங்கிச் செல்கிறது. ஆர அமர மெல்லச் செல்ல வேண்டு மிடங்களில் மெல்லச் செல்கிறது' என்று கம்பனின் நடை ஓட் டத்தைப் பாராட்டுகின்றார் பின்னர் கம்பர் தமது பாத்திரங் களை அமைத்துள்ள பெருந்திறத்தையும், கம்பனின் நாடகத் திறமையையும் எடுத்துக்காட்டி,

'இறுதிவரை யாதொரு சொல்லும் செயலுமற்று, மௌனப் பாத்திரமாக இருந்த சத்துருக்கனான அவன் கூறிய இரண்டே செய்யுட்களால் கம்பன் ஒளிர்ந்து விளங்க வைக்கிறான்' (க. பூர- ணச்சந்திரன், தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, பக்.116 - 117) என்று சான்றும் தருகிறார். இவ்வகையில் படைப்பாக்க நுட்பங்களை அறிந்த - இலக்கியத்தின் பயன் அறிந்த திற னாய்வாளராக வையாபுரிப்பிள்ளை வெளிப்பட்டிருக்கிறார்.

கவிஞனைப் போலவே கவிதா உணர்ச்சியைக் கண்டுணரும் மனலயம் கொண்டவராலேயே கவிதை சுடர்விடும் என்றும் கூறியிருக்கிறார். 'சிறந்த கவித்துவ நலம் படைத்தவன் தனது இதயத்தினின்றும் உணர்ச்சித் ததும்பத் தோன்றிய கவிதை யின் இன்பத்தைப் பிறர் அனுபவிக்க வேண்டுமென்றே கருது வான். உண்மைக் கவிதையின் பயன் இன்பவுணர்ச்சியின்றி பிறிதல்ல' என்பதை உணர்ந்து எடுத்துரைப்பான் என்கிறார். எஸ். வையாபுரிப்பிள்ளையே கவிதையின் குணமறிந்த ஒரு தமிழறிஞர்.

பாரதியின்...

***'கரும்புத் தோட்டத்திலே - அவர்***
***கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி***
***வருந்துகின்றனரே! - ஹிந்து***
***மாதர்தம் நெஞ்சு கொதித்துக் கொதித்து மெய்***
***சுருங்குகின்றனரே! - அவர்***
***துன்பத்தை நீக்க வழியில்லையோ? ஒரு***
***மருந்திதற்கில்லையோ? செக்கு***
***மாடுகள் போலுழைத்து ஏங்குகின்றார்...'***

என்ற பாடல் குறித்து 'எல்லையற்ற சோகமும் எல்லையற்ற இதயதாபமும், கோபமும் ஒருங்கு புலப்படும் இச்செய்யுள், கேட்கும் நம்மையும் பிஜித்தீவில் நிகழ்ந்த கொடுமையில் ஆழ்த்திவிடுகிறது' என்கிறார்.

பாரதியை வையாபுரிப்பிள்ளை முதன் முதல் திருவனந்தபுரத் தில் பார்த்து பரவசமடைந்திருக்கிறார். சைவப் பிரகாச சபை யில் பேசவைக்க முயன்று தோற்று அவமானப்பட்டிருக்கி றார். பாரதி பாடி கேட்க வையாபுரிப்பிள்ளைக்கு ஆசை. துணிந்து 'சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா செல்வக் களஞ் சியமே' என்ற பாடலைப் பாடும்படி கேட்டிருக்கிறார். பாரதி கண்கள் மூடிக்கொண்டதும் ஒரு நிமிஷம் கண்கள் இமைக் குள் அலைகின்றன. முகத்திலே புதியதொரு பொலிவு. அன்பு ததும்பும் சரீரத்தில் பாடத்தொடங்கி பரவசமாக்கியி ருக்கிறார்.

'ஊழிக் கூத்து' பாடலைப் பாடும்படி கேட்டிருக்கிறார், 'பாரதி யின் முகத்திலே ஒரு துடிதுடிப்பு. சரீரம் முழுவதிலும் ஒரு வேகம். 'வெடிபடும் அண்டத்திடி பல தாளம் போட' என்ற சொற்கள் கம்பீரத்தோடு வெளிவந்தன. ஒவ்வொரு சொல் லும், ஒவ்வொரு அடியும், அவரது ஆத்ம - சக்தியினின்று பொருளும் ஆற்றலும் பெற்று, எங்கள் மனக்கண்முன் கூத் தாடின. உலகம் தகர்வது, ஊழி முடிவது. ஒவ்வொன்றும் கண்முன் நிகழ்வது போலவே இருந்தது. பாட்டின் பொரு ளோடு ஒன்றுபட்டு லயித்து அவர் பாடும்போது, அவர் கண் கள் சுழன்றன. கருவிழிகள் மேலேறி மறையத் தொடங்கின. 'ஊழிக்கூத்தில் அகப்பட்டு விட்டோம்!' என்ற பீதி எங்களுக் கும் உண்டாயிற்று. சங்கீதத்தின் ஆற்றலை நான் அன்று உணர்ந்தது போல் ஒரு நாளும் உணர்ந்ததில்லை' என்று அந்த நிகழ்வை எழுதியிருக்கிறார்.

வையாபுரிப்பிள்ளை கவிதை அறிந்தவர் மட்டுமல்ல, அது எழுந்தாடும் பாவங்களையும் அறிந்தவர்.

உமர்க்கய்யாம் இயற்றிய ரூபாய்யத் பாடல்களை எட்வர்டு பிட்ஜிரால்ட் செய்துள்ள ஆங்கில மொழிபெயர்ப்பினை அடி யொற்றி தமிழ் மொழியில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மொழிபெயர்த்திருக்கிறார். அதில் 'வெய்யிற்கேற்ற நிழலுண்டு' என்ற மொழிபெயர்ப்பு பகுதி வெகு சிறப்பாக அமைந்த ஒன்று. இம்மொழிபெயர்ப்பு நூல் பற்றி வையாபு ரிப்பிள்ளை, 'மொழிபெயர்க்க எடுத்துக்கொண்ட ஒவ்வொரு செய்யுளிலும் கவிமணியின் ஆன்மா பிரவேசித்து நின்று செய் யுட் கருத்தின் வடிவினைத் தானே மேற்கொண்டு புதிய சிருஷ்டியாகத் தோன்றியுள்ளது என்பதே உண்மை. இச் செய்யுட்களில் மொழிபெயர்ப்பு என்ற உணர்ச்சியே உண்டா வதில்லை. நமது நாட்டிலே நமது தாய்மொழி விருட்சத்திலே இயற்கையாய் காய்த்து விளைந்த சுவைபடக் கனிந்த கனி கள் என்று சொல்லத்தக்கனவாகவே உள்ளன. கவிமணி அத னைத் தழுவி இயற்றியதும் ஒரு நூதன சிருஷ்டியேயாம்' என்று மொழிபெயர்ப்பில் நிகழ்ந்த கவியின் ரசவாதத்தைக் குறிப்பிடுகிறார்.

எஸ். வையாபுரிப்பிள்ளை இலக்கிய கால ஆராய்ச்சியில் தனித்த சிகரமாய் நின்றவர். பாடபேதங்களில் மிகச் சரியான சொற்களைக் கண்டு செய்யுளை செழுமையாக்கியவர். தமிழ் இலக்கியத்தை வரலாற்றின் பின்புலத்தில் வைத்து ஆராய்ந் தவர். இந்த வரலாற்றின் பற்பல புள்ளிகளை தமிழ்ப் பரப் பில் கண்டு சொன்னவர். தமிழ் பேரறிஞராகத் திகழ்ந்த எஸ். வையாபுரிப்பிள்ளையின் உள்ளத்தில் மிக அரிதான கவிமன மும் உயிர்த்துடிப்புடன் இயங்கி இருக்கிறது என்பதை அறிய முடிகிறது.



venugopal@thaiveedu.com

# தொன்மையைத் தேடி

# ஆதித் தமிழர், திணை வழிக் குடிகள் - புறத்திணையியல் – 3

28

– செல்வநாயகி ஸ்ரீதாஸ்

தொல்காப்பியம் பொருளதிகாரம், பாடல் பாடும் புலவனுக்காக வகுக்கப்பட்ட 'கவிதை மரபாகும்' தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாக்களையே முன்னிறுத்தி அந் 'நூற்பாக்களில் பயின்று வரும்' கவிதை மரபுகளிலிருந்து, அக்காலச் சமூகம், அரச உருவாக்கத்தின் அடிப்படை, வளர்ச்சி, அரச விரிவாக்கம் முதலாய தகவல்களைப் பிரித்தெடுத்து 'ஆதித் தமிழர், திணைவழிக் குடிகள், திணை வழியாகவே அரசு தென்னாட்டில் உருவாகியிருக்கிறது, விரிவாகியிருக்கிறது' என்பதை நிறுவுவது இவ் ஆய்வின் கருதுகோளாகும்.

'தொல்காப்பியம் புறத்திணையியல், தமிழகத்தில் அரசு தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கூறும் ஆவணமாகும்' என்று கூறும் அதே வேளையில் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல், தமிழ் மொழி, இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சியின் மிக உயர்ந்த ஒரு நிலையைக் காட்டுவதாக உள்ளது என்பதையும் கூறவேண்டும். தமிழ் வளர்ச்சிப் படிகளைக் கூறும் இலக்கியங்கள் எமக்குக் கிடைக்காவிட்டாலும் அப்படியான இலக்கண இலக்கியங்கள் தமிழில் இருந்திருக்கின்றன என்பதற்குத் தொல்காப்பியமே சான்றாகும்.

## ஐந்நிலங்களின் போர் முறைகள்:

உலகம், காடு, மலை, சமவெளி, கடல், பாலைவனம் எனும் ஐம்பெரும் பிரிவுகளால் ஆனது. இந்த உலகத் தன்மைக்கு ஒப்ப பண்டையத் தமிழகமும் ஐவகை நிலப் பிரிவுகளை கொண்ட பகுதியாக அமைந்திருக்கிறது. தொல்காப்பியம் பொருளதிகாரத்தின் புறத்திணையியல் தமிழ் நாட்டின் ஐவகை நிலங்களிலும் நடைபெற்ற போர்களை விரிவாகக் குறிப்பிடுகின்றது.

- வெட்சிப் போரில் காலாட்படை மட்டுமே கலந்து கொண்டிருக்கிறது. தொல்காப்பியரும் இதனை 'பூசல் மாற்று' என்றே குறிப்பிடுகிறார். வெட்சித் துறைகள் பற்றிய செய்திகளைக் கொண்டு கூட்டிப் பார்க்கும் போது, இவை, குழுக்களிடையே நடந்த பூசல்கள், அப் பூசல்களின் விளைவான குழுத் தலைமைகளின் தோற்றம், அவற்றின் வளர்ச்சியான அரச உருவாக்கம் என்பவற்றையே காட்டி நிற்கின்றன.
- கரந்தை (வெட்சித் திணையின் மறுபக்கம்) ஆநிரைகளை மீட்கும் போரைக் கூறும் திணையாகும்.
- தொல்காப்பியம், நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்தில் அரங்கேறியதாகத் தொல்காப்பியப் பாயிரத்தில் பனம்பாயிரனார் கூறுவது உண்மையாயின், பொ.ஆ.மு. 711-ம் ஆண்டளவில் பாண்டிய மன்னர் தலைமையில் நிலையானதொரு பாண்டிய அரசு இருந்திருக்கிறது. பாண்டிய மன்னர் தமிழோடு இணைத்துப் பேசப்படும் நிலைக்கு உயர்ந்திருந்தார்கள் என்று கொள்ளக் கிடக்கிறது. தெற்கே பஃறுளியாறு கடல்கொள்வதற்கு முன்னும் பின்னுமான காலத்தில் பாண்டிய மன்னர் அரசமைத்து வாழ்ந்திருக்கிறார்கள் என்ற செய்தி தொல்காப்பியப் பதிப்புரையில் கூறப்படுகிறது.
- நடுகல் நாட்டல் - கரந்தைத் திணை முடிவில் நடுகல் நாட்டல் விரிவாகக் கூறப்பட்டிருப்பது வெட்சிப் பூசலுடன் பொருந்துவதாக அமைந்திருக்கிறது. விழுப்புண்பட்டு மடிந்த வீரனுக்காக அவன் வீரத்தைப் போற்றும் வகையில் அவனது வீரத்தைக் கல்லில் ஏற்றுவது மரபாக இருந்திருக்கிறது.

'சங்க கால மக்களின் வாழ்க்கையை உயர்நிலைக்கு இட்டுச் சென்றவர்கள், அவர்களுக்கு முன் தமிழகத்தில் வாழ்ந்த பெருங்கற்படைக் காலத்தைச் சார்ந்த மக்களே என்றால் மிகையாகாது' என்று கூறுகிறார், புதுச்சேரிப் பல்கலைக்கழக வரலாற்று ஆசிரியரும் தொல்லியல் ஆய்வாளருமான பேராசிரியர் கே. இராஜன் அவர்கள். மேலும், 'இறந்தவர்களைப் புதைத்து அவர்களை வழிபடும் வழக்கம்' பின்னாளில் பெருங்கற்படைச் சின்னங்களாக உருவாவதற்கு அடிகோலியவர்களும் இம் மக்களே எனலாம்' என்கிறார். பெருங் கற்களைக் கொண்டு நீத்தார் நினைவுச் சின்னங்களை உருவாக்கிய காரணத்தால் இது பெருங்கற்படைக் காலம் என்று தொல்லியலாளர்களால் அழைக்கப்படுகிறது. இப் பெருங்கற்படைக் காலம் பொ.ஆ. முன்

1000 முதல் பொ.ஆ.பின் முதலாம் நூற்றாண்டு வரை நின்று நிலைபெற்றிருக்கிறது என்பதை நாம் இவ்விடத்தில் குறித்துக் கொள்வோம். தொல்காப்பியர் குறிப்பிடும் 'நடு கல்' பற்றிய செய்திகளை இவற்றுடன் இணைத்துப் பார்க்க வேண்டும்.

தொல்காப்பியர் காட்டும் வெட்சி, கரந்தைப் பூசல்களும் தொடர்ந்து கூறப்படும் 'நடுகல்' பற்றிய செய்திகளும் தமி ழக அரசுகளின் தொடக்க காலக் 'குழு நிலை' அமைப் பையே காட்டுகின்றன.

- கொடுமணல் அகழாய்வில் காணப்பட்ட கற்பதுக்கைகளும் அக் கற்பதுக்கைகளுக்கு உள்ளே கிடைத்த இறந்தவரின் எஞ்சிய எலும்புத் துண்டுகளும் கற்பதுக்கைகளைச் சுற்றிக் கிடைத்த ஆயிரத்திற்கு மேற்பட்ட மட்பாண்டங்களும் சூது-பவள மணிகளும் (carnelian beads) எண்ணற்ற இரும்புப் பொருட்களும் தொல்காப்பியம் காட்டும் வரலாற்றை உறுதி செய்கின்றன.
- மண் ஆசையால் பிறர் மண் கவர நினைத்த வேந்தரி டையே நடந்த போர் பற்றிய வஞ்சித் திணை வெட்சி, கரந்தைத் திணைகளிலிருந்து சிறிது வேறுபட்ட குழு நிலை யைக் காட்டுகிறது.

சமூகம் உற்பத்தியின் அடிப்படையில் கட்டமைக்கப்படுகி றது. உற்பத்திப் பலம் பொருளாதார உயர்வை முன் வைக்கிறது. தொடக்க காலத்தில், இப் பொருளாதாரத் தேவையை நோக்கியதாகவே சங்க காலப் போர்கள் அமைந்திருக்கின்றன. வெட்சி, ஆநிரை கவர்தலுக்காக நடைபெற்ற பூசல், அதாவது தனது அடிப்படைத் தேவைக்காக முல்லை நிலத்து செல்வத்தைக் கவரும் முயற்சியாகும். கரந்தை, கவர்ந்த ஆநிரைகளை மீட்டலுக் காக நடந்த போராகும்.

- வஞ்சித் திணை, வெட்சி, கரந்தை ஆகிய இரு திணைக ளுக்கு வேறானது. வஞ்சியாரது நோக்கம் வேறானது, இங்கு மண்ணாசை போருக்குக் காரணமாகிறது. வஞ்சி மண் கவர்தலையும் காஞ்சி மண் மீட்டலையும் குறிக்கும் போர்த் திணைகள். உழிஞைப் போர் நோக்கத்தில் பெரி யது. மருத நிலத்தின் செல்வ வளம் போருக்குக் காரண மாகிறது. உழிஞை கோட்டையைக் கவர்தலையும் நொச்சி கோட்டையை காத்தலையும் குறிக்கும் திணைகளாகும். ஆதியில், அடிப்படைத் தேவைகளுக்காக நடந்த சண்டை கள், காலப்போக்கில் தலைமைகளிடையே நடந்த அதி கார மேம்பாட்டுப் போராக மாறியிருப்பது தெளிவு.

## உழிஞைப் போரும் நொச்சிப் போரும்:

பாதுகாப்பிற்காக மலை, காடு, கடல் முதலிய இயற்கை அரண் அற்ற மருத நிலத்து அரசன், தனது நாட்டில் செயற்கை அரண் அமைத்து கோட்டையுள் இருந்து அரசு புரிவான். வயலும் வயல் சார்ந்த நிலமுமான மருத நிலம் ஏனைய நிலப் பகுதிகளைவிட செல்வம் மிக்கதாக அண்டை நாட்டு அரசரது பொறாமைக்கு இலக்காகிறது. மருத நிலத் துக் கோட்டையைக் கவர முயலும் பகை அரசன் ஒருவன், மதிலின் புறத்தே, மதிலைச் சூழ நின்று முற்றுக்கையிடும் போது மதிலுக்குரிய அரசன், எதிரி, தனது மதிலைத் தகர்த்து கோட்டையினுள் நுழையாதவாறு காத்து நிற்பான். அவ்வாறு காத்து நிற்கும் மன்னன் நொச்சிப் பூவைச் சூடி யிருப்பான். இதனால் மதிலைக் காத்தல் நொச்சித் திணை எனப்படும். கோட்டையைக் கவர எண்ணி முற்றுக்கையிடுப வன் உழிஞைப் பூவை அணிந்திருப்பான். இதனால், 'கோட் டையைக் கவர்தல் உழிஞைத் திணை' எனப்படும். இத் திணைகள், அவரவர் சூடி நிற்கும் பூவால் பெயர் பெறுகின் றன.

உழிஞைத் திணை, கோட்டையைக் கவர்தலையும் நொச்சித் திணை கோட்டையைக் காத்தலையும் (மீட்டலையும்) குறிக் கும் திணைகளாகும். உழிஞைத் திணையின் அனைத்துத் துறைகளுமே மதிலின் சிறப்பு, கோட்டைக்குச் சொந்தக்கார னாகிய அகத்தோனது செல்வம், வீரம் முதலாய சிறப்புக்கள், அம் மதிலைக் கொள்ளக் கருதும் புறத்தோனது பொறாமை, அரணைக் கைப்பற்ற நினைக்கும் திண்மை என்று போரும் போர்க் காரணம் பற்றியவையாகவுமே அமைந்திருக்கின்றன.

'மருதத்துப் புறம் எயில் அழித்தலும் எயில் காத்தலும்' என் னும் வேறுபாடு கருதி உழிஞை என்றும் நொச்சி என்றும் இரண்டையும் தனித்தனித் திணைகளாகக் கொள்கிறார் இளம்பூரணர். இதனையே பிற்காலத்தில் பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பா மாலை ஆகிய இலக்கண நூல்க ளும் பின்பற்றுகின்றன. உழிஞையும் நொச்சியும் மறுதலைத் திணைகளாகப் பன்னிரு படலத்தில் கொள்ளப்பட்டிருக்கின் றன.

புறத்து உழிஞையானுக்கும் அகத்து நொச்சியானுக்கும் உரி யவையாகச் சில பொதுத் துறைகள் கூறப்பட்டிருக்கின்றன. இவை அக்காலப் போர் மரபுகளை விளக்குவனவாக அமைந்திருக்கின்றன.

1. குடைநாட் கோடல், 2. வாணாட் கோடல், 3. ஏணி மயக் கம், 4. முற்றிய முதிர்வு, 5. அகத்தோன் வீழ்ந்த நொச்சி, 6. புறத்தோன் வீழ்ந்த புதுமை, 7. நீர்ச் செரு வீழ்ந்த பாசி, 8. ஊர்ச் செரு வீழ்ந்த பாசிமறம், 9. அகமிசைக்கிவர்ந்தோன் பக்கம். 10. குடுமி கொண்ட மண்ணு மங்கலம், 11. வாள் மங்கலம், 12. தொகை நிலை.

இத்துறைகள், மருத நிலத்தில், கோட்டை அமைத்து அர சாண்ட மன்னனின் தகைமையையும் அவனது கோட்டை யைக் கைப்பற்றப் பகை மன்னர் எடுத்துக்கொண்ட முயற் சியையும் முற்றுக்கையிட்டு நடந்த போரின் படிநிலைகளை யும் எடுத்துக் கூறுவனவாக அமைகின்றன.

குடை நாட்கோள், வாள் நாட் கோள் - போர் முயற்சியில் ஈடுபடும் மன்னன் நாளும் ஓரையும் தன் போர் முயற்சிக்கு ஏற்றதாக அமைந்திருக்கிறதா என்று பார்க்கும் வழக்கம் இருந்திருக்கிறது. இது, வெட்சியாரின் 'விருச்சி பார்த்தலை' ஒத்ததாக இருக்கிறது. அவ்வாறு நாளும் ஓரையும் பார்க் கையில், காலம் தனக்கு வாய்ப்பாக இல்லாதிருந்தால், வெற்றி வேண்டி, அரசுக்கு முக்கியமான பொருட்களான

‘குடை, வாள்’ முதலானவற்றை, குறித்த அந் நாளுக்கு முன் பாகவே அத்திசை நோக்கி அனுப்பி வைப்பர். இதனை குடை நாட் கோள், வாள் நாட் கோள் என்பர்.

ஏணி மயக்கம் - கோட்டை அரணுக்குக் காப்பாக அகழிகள் அமைக்கப்பட்டிருக்கும். பகைவர் அரணை அணுகுவதற்கு அரிதாக, அரணைச் சுற்றிலும் பயங்கரமான முதலைகள் வாழும் அகழிகள் அமைக்கப்பட்டிருக்கும். இன்றும் தஞ் சைப் பெரிய கோவிலைச் சுற்றி அகழி இருந்ததற்கான அடையாளம் காணலாம். அகழியைக் கடப்பதற்கு ஏணிகள் பயன்படுத்தப்பட்டன. அகழியைக் கடக்க முயலும் புறத்து வீரருக்கும் அவனைத் தடுக்க முயலும் அகத்து வீரருக்கும் ஏணிமேல் நின்ற நிலையிலேயே போர் நடக்கும். இதனை ஏணி மயக்கம் என்பர்.

முற்றிய முதிர்வு - பகைவன், கோட்டை வாயிலை உடைத்து கோட்டையினுள் நுழைந்து கோட்டையைத் தன்னகப்படுத்திக் கொள்வது முற்றிய முதிர்வாகும். உள் மதிலைக் காத்து நிற் கும் காவலர் தொடர்ந்து உள் மதிலைப் பாதுகாப்பதற்காகப் போரிடுவார்கள், ஈற்றில் பகைவன் போருக்கு ஆற்றாது அகத்தோன் வீழ்தல், புறத்தோன் வெற்றி முதலியவை நடை பெறும். வெளி மதிலைக் கைக் கொண்ட பகைவர், மதிலின் வெளியில் மட்டுமல்லாமல் இடை மதிலுக்கும் புற மதிலுக் கும் இடையேயுள்ள ஊர்களிலும் தொடர்ந்து போராடுவார் கள். இதனைத் தொல்காப்பியர் ஊர் செறு வீழ்ந்த பாசி மறம் என்பார். புறஞ்சேரி மதில், ஊர் மதில் மட்டுமல்லாமல் கோயில் முகடுகளின் மேலும் ஏறி நின்றும் போரிடுவார்கள்.

போரின் முடிவில் தோற்ற அரசனது மணிமுடி முதலிய வற்றை வென்ற அரசன் கைக் கொண்டு முடிசூடிக் கொள் வதை மதிற்குடுமி கொண்ட மண்ணு மங்கலம் என்கிறார் தொல்காப்பியர். வென்ற வேந்தன், தன் வெற்றிக்குக் காரண மான வெற்றிவாளை கொற்றவை முன் வைத்து நீராட்டுவதை வாள் மயக்கம் என்கிறார் தொல்காப்பியர். வாள் நீராட்டு முடிந்த பின் போர் வீரர்களுக்குச் சிறப்புச் செய்வது அனைத்துப் போர்களிலும் ஈற்றில் நடைபெறும் நிகழ்வாகும்.

## தும்பைப் போர்:

ஆநிரை, மண், கோட்டை என்று இவற்றில் ஒன்றினைக் கவர் தலும் அதனை மீட்டலுமாகிய வினையும் எதிர்வினையும் இல் லாத ஒரு போர் முறை ‘தும்பைப் போர்’ ஆகும்.

*‘தும்பை தானே நெய்தலது புறனே*
*மைந்துபொரு ளாக வந்த வேந்தனைச்*
*சென்றுதலை அழிக்குஞ் சிறப்பிற் றென்ப.’*

- பொருள். புறத்திணையியர் நூ.12

தன் வலிமையை உலகு உயர்த்திக் கூறும் புகழையே நோக் காகக் கொண்டு போரிடச் செல்லும் வேந்தனை, அதே புக ழையே நோக்காகக் கொண்ட பகை வேந்தனும் போரிட்டு அவன் தலைமையைச் சிதைக்கும் நிலையில் இரு பெரு வேந்தரும் ஒரு களத்துப் பொருதல் தும்பைப் போராகும். இருவரும் தும்பை வேந்தராவர். தும்மைப் போரில் வீரம் போருக்குக் காரணமாகிறது.

தொல்காப்பியர், தும்பைத் திணைக்கு உரியதாக 12 துறைக ளைக் கூறுகிறார். இப் பன்னிரு துறைகளும் தும்பைத் திணைக்கு மட்டுமன்றி வெட்சி, வஞ்சி, உழிஞை ஆகிய ஏனைய திணைகளுக்கும் ஒத்தவையாகக் காணப்படுகின்றன. போர் முறையில் காணப்படும் இந்த ஒத்த பண்பு, ‘போர்கள் வெவ்வேறு பின்னணியில் நடந்தாலும், அவை சமூதாய வளர்ச்சியின் ஒத்த காலப் பண்பைக் காட்டுபவையாகக் காணப்படுகின்றன’ என்னும் முடிவுக்கே வரக்கூடியதாக உள் ளது.

தானை நிலை, யானை நிலை, குதிரை நிலை, தார் நிலை ஆகிய துறைகள் நால்வகைப் படைகள் கொண்டு போரிடும் அனைத்துத் திணை அரசர்களுக்கும் உரியது. வெட்சித் திணைப் போர் நாற்படை கொண்டு நடத்தப்படவில்லை. இருவர் தலைவர் தகுதிப்பக்கம் அனைத்துப் போர்களிலும் நடக்கலாம். இரு படையும் பொருது உடைந்த போது படைத் தலைவன் ஒருவன் எதிரியின் படைத் தலைவனை எதிர்த்து, தன் படையைக் கடா போலப் பாதுகாத்து நிற்பது ‘எருமை நிலை’ எனப்படும். இந் நிலை அனைத்துப் போர்க ளுக்கும் பொருந்தும்.

படை அறுத்துப் பாழ் கொள்ளும் ஏமம், களிறு எறிந்து எதிர்த்தோர் பாடு, வாளோர் ஆடும் அமலை, தொகை நிலை, நல்லிசை நிலை, நூழில் ஆகிய அனைத்துத் துறை களுமே பெரும்பாலும் அனைத்துப் போர்களிலும் நடைபெ றும் நிகழ்வுகளாகும்.

## வாகைத் திணை:

*‘வாகை தானே பாலையது புறனே*
*தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்*
*பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப’*

- தொல். பொருள். புறத்திணையியல் நூ.15,

என்பது வாகைக்குரிய விளக்கம், வரைவிலக்கணம்.

‘ஒருவன், தனது அறிவு, ஆண்மை, பெருமை முதலாய அறி வியல் கூறுகளை ஏனையோரிலும் வேறுபட மிகுத்து மேம்ப டுத்தல் வாகை என்னும் ஒழுக்கம்’ என்கிறார் உரையாசிரியர், நச்சினார்க்கினியர். எனவே, ‘வாகை’ என்னும் பதம், ஏனைய திணைகளைப் போல ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியில் நடைபெறும் போர் முறையைக் குறிக்கவில்லை. இந்த ஆய் வுப் பரப்பினுள் அமையாத வாகைத் திணைபற்றி இங்கு அதிகம் பேசப்படவில்லை.

## காஞ்சித் திணை:

*‘காஞ்சி தானே பெருந்திணைப் புறனே*
*பாங்கருஞ் சிறப்பின் பன்னெறி யானும்*
*நில்லா உலகம் புல்லிய நெறித்தே’*

- தொல். பொருள். புறத்திணையியல் நூ.18

காஞ்சித் திணை உலக நிலையாமை பற்றிப் பேசும் திணை யாகும். காஞ்சித் திணைக்குக் கூறப்பட்டிருக்கும் துறைகளை ஆராயும் போது அவை போரினால் உண்டான நிலையாமை மட்டுமல்லாது உலகப் பொது நிலையாமைகளையும் கூறுவ தாகவே காணப்படுகிறது. உரையாசிரியர்கள், காஞ்சித் திணை என்பது, பல்வேறு நிலையாமைகளைக் கூறும் குறிப்பு என்பர்.

காஞ்சித் திணை 20 துறைகளைக் கொண்டது. இவற்றுள் போர் தொடர்பானவை வருமாறு:

- மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருங்காஞ்சி
- இளமை கழிந்த முதிய வீரர்கள் ஏனையோருக்குக் கூறும் முதுகாஞ்சி
- புண் கிழித்து மடியும் மறக்காஞ்சி
- ஏமச் சுற்றம் இன்றி, புண்பட்டுப் போர்க்களத்தில் கிடந் தேனைப் பேய்கள் பாதுகாக்கும் பேய்க்காஞ்சி
- இறந்த வீரன் தன்மைகளைக் கூறி இரங்கும் மன்னைக் காஞ்சி
- இன்னது பிழைப்பின் இன்னது செய்வேன் என்று சூளு ரைக்கும் வஞ்சினக் காஞ்சி
- புண்பட்ட கணவனை மனைவி பேய் தொடது காக்கும் தொடாக்காஞ்சி
- கணவனைக் கொன்ற வேலால் மனைவி தன்னை மாய்த் துக் கொள்ளும் ஆஞ்சிக் காஞ்சி
- பகை அரசனுக்கு மகளைத் தர மறுத்த மகட்பாற் காஞ்சி
- இறந்த வீரனது மனைவி அவனது தலையோடு தன் தலையை மோதி இறத்தல்.

இவை தவிர்ந்த, பூசல் மயக்கம், தாங்கரும் பையுள், மூதா னந்தம், முதுபாலை, கையறு நிலை, தபுதார நிலை, தாபத நிலை, மாலை நிலை, தலை பெயல் நிலை, காடு வாழ்த்து முதலாய பத்துத் துறைகளும் போருக்கு மட்டுமன்றிப் பொது வானவை.

காஞ்சித் திணை நேரடியாகப் போரைப் பேசாவிட்டாலும் போரினால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றிக் கூறும் பகுதி யாகும். தொல்காப்பியர் போரின் விளைவுகளை உணரத் தலைப்பட்ட ஒரு காலத்தில் வாழ்ந்திருக்கிறார் என்பது தெளிவு.

காஞ்சித் திணையும் வாகைத் திணை போலவே இந்த ஆய் வுரையின் எல்லைக்குள் அடங்காதது, எனவே தவிர்க்கப்படு கிறது.

## போரும் போருக்கான காரணங்களும்:

மனிதன் தன் அடிப்படைத் தேவைகளுக்காகக் குழுக்களாக இணைந்து வேட்டைச் சமூகமாக வாழ்ந்தான். வாழ்வாதாரமே அவன் தேடலின் முதற் படியாக இருந்தது. வேட்டைச் சமூ கம் காலப்போக்கில் மேய்ச்சல் சமூகமாகி, தொடர்ந்து வேளாண் சமூகமாக மாறியது. அதன் தொடர்ச்சியாக சொத் துரிமை, ஆதிக்கம் என்று மனிதனின் தேவைகளும் ஆசைக ளும் நீண்டு கொண்டே போயின. சிறு குழுக்களாகத் தோன் றிய சமூகம், ஒரு குழு தன்னைச் சூழ இருந்த ஏனைய குழுக்களைத் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வர முயன்ற முயற்சியின் விளைவே போர்கள். ஒரு குழு பிற குழுக்களை அடிமைப்படுத்தியும், போரில் கைப்பற்றியவர்க ளைத் தம் தேவைகளை முடித்துக் கொள்ளும் அடிமைகளா யும் ஏவலராயும் கொண்ட நிலையையே தொல்காப்பியர்,

'அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்'(அகத்திணை யியல் 25) என்றும், 'ஏவல் மரபின் ஏனோர்...'(அகத்திணையி யல் 26) என்றும் பதிவு செய்திருக்கிறார்.

செல்வம், அரச விரிவாக்கம், மண்ணாசை, வலிமையை நிலை நாட்டுதல், உயர்வு தாழ்வை நிலைநாட்டுதல் முதலியவற்றை ஆதித் தமிழர் சமூகத்தின் போர்களுக்கான அடிப்படைக் காரணங்களாகக் காணலாம்.

தொல்காப்பியர் காட்டும் சமூகங்களிடையே நடந்த போர் களை ஆராயும் பொழுது, மலையும் மலை சார்ந்த இடமு மான குறிஞ்சி நிலத்தில் ஆநிரை கவர்தலுக்காகவும் ஆநிரை மீட்டலுக்காகவும் நடந்த, பூசல்கள் என்று கூறுமளவி லான சிறு போர்கள் நடந்திருக்கின்றன. காடும் காடு சார்ந்த பகுதியுமான முல்லை நிலத்தில் நடந்தவை, மண்ணாசையா லும் முல்லை நிலத்துச் செல்வத்தின் மேல் கொண்ட ஆசை யாலும் ஏற்பட்ட போர்கள். வயலும் வயல் சார்ந்த நிலமு மான மருத நிலத்தில் நடந்த போர்கள், வேந்தனது வளத் தின் மேல் பொறாமை கொண்டு அதனைக் கவரும் முகமாக நடந்தவை. மருத நிலத்தில் முழு முதல் அரணை முற்றுக் கையிடுதலும் முற்றுக்கையிட்டவனிடமிருந்து அரணைக் காத் தலுக்குமான போர்கள் நடந்திருக்கின்றன. கடலும் கடல் சார்ந்த நிலமுமான நெய்தல் நிலத்தில் நடந்த போர்கள், 'மைந்து பொருளாக' தத்தம் வலிமை குறித்து நடந்தவையா கும். இவ்வாறு தொல்காப்பியம், அக்காலத்தில் நால்வகை நிலத்திலும் நடந்த போர்களை ஆவணப்படுத்தியிருக்கிறது. இவற்றின் உண்மைத் தன்மையை நிலைநாட்டும் முயற்சியில் செப்பேடுகள், கல்வெட்டுச் சான்றுகள், அகழாய்வுச் சான்று கள், நாணயங்கள், வெளிநாட்டார் குறிப்புகள், பிற ஆவ ணங்கள் என்னும் இவற்றை, வெளிக் கொணரும் முயற்சியில் தமிழ் அறிஞர் சமூகம் இன்று ஈடுபட்டிருக்கிறது.

ஐவகை நிலங்களிலும் நடந்த போர்கள், போர் முறைகள், போர்க் காரணங்கள் முதலியவற்றைக் கண்டோம்.

அடுத்து புறநானூற்றுப் பாடல் 201, பதிற்றுப்பத்து, பொரு நராற்றுப்படை, அசோகச் சக்கரவர்த்தியின் 'கிர்னார்' கல் வெட்டு, தகடூர் யாத்திரை முதலிய ஆவணங்கள் தமிழர் வர லாற்றில் பெறும் முக்கியம் ஆராயப்படும்.

தொடரும்...



selvanayaki.s@thaiveedu.com

**டொரோண்டோவில் நடைபெற்ற நிறைவு நாள் வெற்றிவிழாவில் படங்கள்**




அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி,அவர்கள் சான்றிதழ்களை வழங்கிய போது



Jennifer McKelvie, Deputy Mayor , மற்றும் Councillor Juanita Nathan அவர்கள் கலந்து கொண்ட போது



60 நாட்கள் நடை பயிற்சியில் ஈடுபடுத்தியவர்களில் ஒரு பகுதியினர்



ஆரம்ப நிகழ்வில் Dr சிவராமன் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றியபோது



60 நாட்கள் நடை பயிற்சியில் ஈடுபடுத்தியவர்களில் ஒரு பகுதியினர்




கடந்த ஜூன் மாதம் 25 ம் திகதி ஆரம்பித்த ekuruvi Steps 2023 - Value Addition நாளுக்கு 10,000 காலடிகள் வீதம் 60 நாட்களுக்கு தொடரும் நடை பயணம் உலகம் முழுவதும் பல நூற்றுக்கணக்கான மக்கள் நேரடியாக 60 நாட்க்கள் இணைந்தும் , பல ஆயிரக்கணக்கான மக்கள் உலகம் முழுவதும் பகுதியாக இணைந்தும் நிறைவுசெய்திருந்தாரக்ள் . இந்தொடரும் நடை பயிச்சி கடந்த வரும் 26 ம் திகதி ஓகஸ்ட் 2023 ,அன்று தனது 60 வது நாளை பூர்த்தி செய்து நிறைவு செய்தது .

கோவிட-19 காலத்தில் 2020 இல் ஆரம்பிக்கப்பட்ட eKuruvi Steps உடல் -உள ஆரோக்கியத்தை பேணவுதுடன் , தாயகத்தில் ஒரு பெரும் விழிப்புணரவு திட்டங்களையும் ஒவ்வொரு வருடமும் நிறைவேற்றி வருகின்றது .சிறுவர்கள் , முதல் இளைஞர்கள் , முதியவர்கள் வரை பலதரப்பட்ட மக்களும் இதில் பங்கு கொண்டு பலனடைந்தார்கள் . BMI யைக் குறைத்து உடல் எடையைப் பேணுவது, நீரிழிவு, இருதய நோய் என்பவற்றை வராது தடுப்பது, சக்தியை அதிகரிப்பது என்று பல பயன்களைக் கொண்ட இந்த நடைப்பயிற்சியைத் தொடர்ந்து 60 நாட்கள் என்று இலக்கு நிர்ணயித்து நிறைவேற்றுவதன் மூலம், நாளடைவில் அதுவே பழக்கமாகி உடல் ஆரோக்கியம் மேம்பட உதவும்

இதனை ஊக்கப்படுத்தும் வகையில் EKuruvi Steps அமைத்திருந்தது . இதில் இணைபவர்களுக்கு நாளுக்கு 10.000 காலடிகள் 60 நாட்க்கள் இலக்கு கண்காணிக்கப்பட்டு ஊக்கமளிக்கப்படும். இதில் இலவசமாக எவரும் உலகமெங்கும் உள்ள தமிழர்கள் இணைத்துக்கொள்ளலாம் . ஒவ்வொரு வருடமும் ஜூலை , ஓகஸ்ட் மாதங்களில் நடைபெறுகிறது .

அதே நேரம் இந்நிகழ்வு தாயகத்தில் ஒரு விழிப்புணர்வு சமூக நிகழ்வாக பயிற்சிபட்டறைகளையும் வழங்குகின்றது .
கடந்த வருடம் `தற்சார்பு நோக்கி மாணவர்களை வலுவூட்டி , நாடு முழுவதும் விவசாயிகளுக்கான பயிற்சி பட்டறைகளை நடாத்தியிருந்தார்கள் . இந்த வருடம் மதிப்பு கூட்டல் தொனிப்பொருளில் தொடர்ச்சியான செயற்பாட்டு இயங்கு திறனுள்ள விழிப்புணர்வை நடாத்திவருகின்றார்கள் . இந்நிகழ்வு கட்டம் கட்டமாக தாயகத்தில் தேவையான பகுதிகளில் கற்பித்தல்கள் , பயிற்சிகள் , தொழில்முனைவோரை வலுவூட்டல் , அவர்களுக்கான இணைப்புகளை ஏற்படுதல் , சந்தை வாய்ப்புகள் பயிற்சிகள் என தொடர்ச்சியாக நடைபெறும்.

**கடந்த ஓகஸ்ட் 6 ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடந்த நடை பவனியில் கலந்து கொண்ட ஒருபகுதி மக்கள்**









# தமிழ்வலை - 95


'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-95 வினா

### இடமிருந்து வலம்

4 இகழாவிகழ்ச்சி
6 சொல்லியதை திரும்பவும் சொல்லுதல்
8 ஒருவகை மரம்
11 கால்விலங்கு
12 ஏளனம்செய்து சிரித்தல்
13 அரைவாசி
14 வீடு
15 ஓர் எண்ணிக்கை
16 1000 யானைகளை அழித்த வீரனைப் புகழும் பிரபந்தம்
17 ஆண்கள் அணியும் சாரம்

### மேலிருந்து கீழ்

1 திருதராட்டினனின் விழிகள் எனத்தக்கவன்
2 ஒரு பாவகை
3 பத்தும் பறந்திடும் என முடியும் பழமொழியின் துவக்கம்
5 நற்பேறு
7 மணமகள் அணியும் ஆடை
9 பனிக்குளிர்
10 நோய்
13 மரக்காலணி
14 சேர்
15 கீழ்ப்படி

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 94க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வை | க் | ன | ர் | | 2 ச | ங் | க | 3 தி | |
| க் | | | | 4 மா | | | | ரு | |
| 5 க | தி | ர் | கா | ம | ம் | | 6 அ | மு | து |
| ம் | | | | ன் | | | | க | |
| | 7 ப | ட் | டி | ன | ம் | | 8 பா | ம் | 9 பு |
| 10 வா | டை | | | ர் | | | | | ல் |
| லை | | 11 க | 12 தை | | 13 த | | 14 செ | | லை |
| | 15 ஏ | | ல | | 16 வ | ல | ம் | பு | ரி |
| | து | | ம் | | ன் | | ப | | ப் |
| | | | | 17 க | டை | ய | டை | ப் | பு |

## தமிழ்வலை-94 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

சுமதி முத்துராஜா யாழ்ப்பாணம்
கிருபா சண். ரொறன்ரோ
பற்றிக் ஜோன், மொன்றியால்.
சுமதி சிவகரன், ரொறன்ரோ
த.செ. நடராசா, ரொறன்ரோ.

### பரிசுபெறும் போட்டியாளர்

## சிவகுமாரன் சரசுவதி,

**ரொறன்ரோ.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.



# வாழ்வுரிமை !

## மா. சித்திவிநாயகம்

2

ஓவியம் : செல்வன்

*காலம் காலமாய் அழுதோய்ந்து*
*உலர்ந்தது எம் கண்ணீர்!*

*கண்ணீரில் துவளும்*
*எம் முதுகேற, எம் மூக்கில்*
*நாணயங்குத்தும் நடைப்பிணங்களே!*

*இந்தக் கணம் வரை*
*உங்களை நாங்கள்*
*விட்டு வைத்திருக்கின்றோம்!*
*மகிழ்ந்திருங்கள்!*

*எம்மில் சேணம் பூட்டி*
*குளம்பு நறுக்கி, இலாடம் குத்தி*
*நுகங்களை பூட்டிய*
*அக்கிரமக் காரர்களே!*

*நாங்கள் உழுவோம்*
*நீங்கள் அறுப்பீர்கள்...*
*நாங்கள் பால் தருவோம்*
*நீங்கள் குடிப்பீர்கள்...*
*நாங்கள் கன்று ஈனுவோம்*
*விற்றுக் காசாக்குவீர்கள்...*
*முட்டையிடுவோம் அதன்*
*தரம் பிரித்து விற்பீர்கள்...*

*வைக்கோலை எமக்காக்கி விட்டு*
*எம் வாழ்வை*
*அபகரித்த அநீதியின் தூதுவரே*
*உங்களை ஒழிக்காமல்*
*எமக்கு விடுதலை*
*இல்லை!*

மூன்று நெடிய இரவுகள் கடந்து போயின. இந்தக் கவிதையை எழுதிய தலைமைப் பன்றியான ரங்கருக்குக் குளிர்காய்ச்சல் வந்திருந்தது. பண்ணை முதலாளி திரவியம், படு கிழட்டுக்கு இனி வைத்தியம் தேவையில்லை. அது வீண் செலவு என்று வைத்தியரை அழைக்கவில்லை. ரங்கருக்குக் கண் சொருகிக் கொண்டு வந்தது. அரிய பேச்சாளனான ரங்கரின் தொண்டை அடைத்துப் போயிற்று. 400 பிள்ளைகள் பிறந்தென்ன? இறுதி மூச்சிற்குப் பால் பருக்கவும் வழியற்று ரங்கரின் உயிர் அமைதியாகப் பிரிந்து போயிற்று.

ரங்கரின் பேரிழப்பால் வகையறியாது கலங்கியது விலங்குக் கூட்டம். பறவைகள் மார்பிலடித்தன.

கொடிய இந்த மனிதர்களின் இதயம் இரவைப் போல இருண்டதென்றும், இவர்கள் தான் இந்தப் பூவுலக வாழ்க்கையின் அழகையே அழிப்பவர்களென்றும் விலங்குகளுக்குப் போதித்த வாய்கள் இன்று பேச்சுமூச்சின்றிக் கிடக்கிறது. ஆர்வமும், உணர்ச்சியும் நிறைந்த எம் விலங்குகளின் கண்களைப் பிடுங்கி, எம் கழுத்தை அவலமாக அறுத்தெறிகின்ற மனிதர்களை இனங்காட்டி நின்ற அரிய தோழமை இனியில்லை. எம் கைகளிலும், கழுத்திலும் துருப்பிடித்த சங்கிலிகளைப் பிணைத்து எம் ஆன்மாக்களையும், உடலையும் வஞ்சித்துத் தங்களை மட்டுமே தக்க வைக்கின்ற சுயநலப் பேய்களான மனிதர்கள் என்றைக்குத் தங்களுள் ஞானவெளிச்சத்தைக் காண்பார்கள் என்று இடித்துரைத்த வாய்கள் அசைவற்றுக் கிடக்கிறது.

*'துள்ளித் துள்ளி ஓடுது பார் வெள்ளை முயலம்மா -*
*அதை மெள்ள ஓடிப்பிடித்திடவே*
*மிகவும் ஆசையம்மா'*

என்று அன்புருகப் பாடிய படியே வரும் மனிதச் சிறார்கள் எம் முயல் இறைச்சியை மென்றுதின்ற படியே தான் அதைப் பாடுகின்றார்கள் என்பது உங்களில் எத்தனை பேர் அறிவீர்கள் என்று கேள்விகேட்ட ஞானவான் இன்று சடலமாய் கிடந்தார்.

ரங்கரின் அன்பான இதயம் திமிங்கலத்தை விட விசாலமானது. விலங்குகளின் விண்மீனாகத் திகழ்ந்த நல்லமேய்ப்பன் அவர். அவரின் இழப்பைத் தாங்க முடியாத கறுப்பு நாயான 'அமாயா' ஆற்றாமையோடு வைக்கோற் போரின் உச்சியேறி ஊளையிட்டது.



காற்று அவள் அழுகையை நாலாபுறமும் சுமந்தது. அவள் கண்களுள் வானத்துச் சந்திரன் கேலியானது. பண்ணையடிமை நாயாகி, இங்கு அவள் சுமக்கும் வேதனை, வலி.., இவற்றை ஒழிக்கப் படாதபாடுபட்டவர் ரங்கர். இன்று அவள் காலடியில், உயிரற்று வீழ்ந்து கிடக்கிறார். அவருக்காய் அழுதபடி அஞ்சலி பாடினாள் அமாயா.

*‘பட்டிதொட்டி எங்கும் பாவாணர் ரங்கர்
கொட்டி முழக்கிக் கொஞ்சும் மொழியாலே
கட்டி அணைத்துக் கவிதை செய்தார்
முட்டி எமக்குள் மூண்ட பகைபோக்க
மெட்டமைத்துத் தன்மொழியாலே
மேன்மைக் கவி தந்தார்
கெட்டுநொந்து கீழ்மையெனக்
கிடந்த விலங்கினத்தைத்
தட்டி எழுப்பித் தணியாத தன் பேச்சால்
எத்திசையும் போற்றவைத்த
ஏந்தலுக்கு என் அஞ்சலிகள்!*

அவள் அஞ்சலி பாடி முடிப்பதற்குள்ளாகவே அவரது உடலைப் பழத்தோட்ட அடிவாரத்தில், நாட்செல்லப் பசளையாகிப் பலன் தருமென நம்பி மனிதர்கள் இழுத்துக்கொண்டு போய்ப் புதைத்தார்கள்.

இந்த மனிதர்கள் இறந்த மனிதரைத் தவறிப் போய்விட்டார் என்பார்கள். தவறிப்போன மனிதருக்குக் கொள்ளிக்குடம் உடைக்கிற சடங்கு என ஒன்றைச் செய்வார்கள்.

அதில் ஒரு கத்தி கொண்டு மூன்று துளைகளை இடுவார்கள். முதலாம் துளை சிறுவராக இருந்த வேளையும் இவர் ஞானம்பெறத் தவறிவிட்டார் என்பதற்காகவும், இரண்டாவது துளை வாலிப வயதிலும் இவர் ஞானமடையவில்லை என்பதற்காகவும், மூன்றாவது துளை முதிர்ந்தும் இவர் ஞானமடையத் தவறிவிட்டார் என்பதற்காகவும் என்று அவர்கள் சொல்வார்கள். அதனால் தான் வாழ்நாளில் மனிதர் ஞானம் பெறத் தவறிப்போய்விட்டார் என்ற பொருளில் அனைத்து மனிதர்க்கும் அந்த சடங்கு இன்றுவரை தொடர்கிறதாம். அவர்களில் எவரும் ஞானமுள்ளவராக இதுவரை யானறியேன்.

இப்படித்தான் ஞானமில்லாப் பேய்களென தாங்களே தங்களைக் கேலியாக்கும் காரியவாதிகள் அவர்கள். இப்படிப் பல கதைகளை எமக்குச் சொல்லி எமக்கு அறிவூட்டிய ரங்கர் இன்று நம்மிடையே இல்லை.

அவருக்கு எவரும் கொள்ளிக் குடமும் உடைக்கவில்லை. ஒருவேளை ரங்கர் ஞானவார் என்பதை மனிதர்கள் ஏற்றுக் கொண்டார்களோ என்னவோ?

ரங்கரின் மரணம் மார்ச் மாதத் தொடக்க நாட்களில் நடந்தேறியது. மனிதர்கள் செத்தால் பாடை கட்டி, மேளமடித்துப் பலான கல்லறை கட்டும் மனிதர்கள்.., இந்த மாதிரிப் புரட்சி, புதுமை என்று பேசியவர்க்கெல்லாம் சிலை வைத்து மனித நடமாட்டச் சந்திகளில் கல்லறை கட்டுகிற மனிதப் பேய்கள்... பன்றியான ரங்கரின் சாவை ஓர் சாவாகவே எடுத்துக் கொள்ளவில்லை. இத்தகு மோசமான மனித நடத்தைகளை விமர்சித்து அடுத்த மூன்று நாட்களில் பல இரகசிய நடவடிக்கைகள் விலங்குப் பண்ணையில் நடந்தன. பன்றித் தலைவரான ரங்கரின்பேச்சு, பண்ணையில் இருந்த அனைத்துப் புத்திசாலித்தனமான விலங்குகளுக்கும் வாழ்க்கையைப் பற்றிய முற்றிலும் புதிய கண்ணோட்டத்தைக் கொடுத்திருந்தது. மனிதர்களின் அடாவடித்தனங்கள் அனைத்தும் அறிந்தவர் அவர்.

மனிதர் உண்ணுகிற உணவை, உறங்குகிற உறையுளை எம்மிடம் இருந்துதான் முதலில் கற்றுக் கொண்டார்கள். எந்த விதை நச்சு விதை, எது நல்ல விதை என்பதை விலங்குகளும், பறவைகளும் உண்பதிலிருந்தே அறிந்தவர் மனிதர். அவற்றை விதைத்தே இவகள் விவசாயியாயினர். பலகோடி மில்லியன் ஆண்டுகளாக வாழ்ந்து கூடமைக்கும் பறவைகளைப் பார்த்தவரின் சிந்தை வீடமைக்கச் சிந்தித்தது. காகங்கள் பறக்கும்திசையில் தான் ஊர்க்கரைகள் இருக்குமென நம்பிப் பயணித்தவர்கள் மனிதர்கள். மனித முயற்சிகள் அனைத்திற்கும் வழிகாட்டிகள் நாம் தான். பறவைகள் பறப்பதனைப் பார்த்துத் தான் விமானங்களைக் கூட மனிதர் சிருஷ்டித்தனர்.

ஆம் உண்மையில் நம்மால் தான் இன்றைய மனிதர் நவீனமாக முன்னேறி இருக்கின்றார்கள். ஆனால் உலகின் மூத்த பழங்குடியினராகிய நாம் கால்நடைகளாய்த் தாழ்ந்தே போனோம்.

ரங்கர் முன்னறிவித்த மாபெரும் மனிதர்க்கெதிரான கிளர்ச்சி எப்போது நடக்கும் என்று அவர்களுக்குத் தெரியாது, அது அவர்களின் வாழுங்காலத்தில் நடக்குமா என்பதற்கும், அப்படி நடக்குமென நினைப்பதற்கும் எந்தக் காரணிகளோ, தடயங்களோ இல்லாவிட்டாலும் அவர்களது உள்மனம் மனிதரைக் கொல்வோம் என்கிற சொல்லைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டேயிருந்தது. அதற்குத் தயாராக வேண்டியது அவர்களின் கடமை என்பதை அவர்கள் தெளிவாக அறிந்தே வைத்திருந்தார்கள்.

கற்பி, போராடு, ஒன்றுசேர் என்கின்ற மகத்தான போராட்டக் கோட்பாட்டை உணர்ந்து மற்றவர்களுக்குக் கற்பித்து ஒழுங்கமைக்கும் பணியை இயற்கையாகவே பன்றிகள் எடுத்துக் கொண்டன. அதிலும் ரங்கர் இறக்கும் தறுவாயில் தன்னைப் போலவே கொள்கையுறுதி மிக்கவரான தன் தோழர் தேவனையே தனக்குப் பின் இந்தப் போராட்டத்தை எடுத்துச்செல்வார் எனச் சொல்லி வைத்திருந்தது. பன்றிகள் பொதுவாக விலங்குகளில் புத்திசாலி என்று அங்கீகரிக்கப்பட்டன. அவற்றின் இந்தப் புத்திசாலித்தனத்தை ஏற்காத ஆறறிவு மனிதர்கள் சிலர் அவர்களை ஐந்தறிவெனவும், அழுக்கெனவும் விலக்கி வைக்கிற அதிசயம் இன்னமும் உண்டு.

நாங்கள் நித்தமும் அவர்களுக்காகச் சேற்றினுள் கிடந்து மாரடிக்கின்றோம். ஆனால் மனிதர்களோ..,

*‘நாங்கள் சேற்றில் கால் வைக்காவிட்டால்
நீங்கள் சோற்றில் கை வைக்க முடியாது’*

என்று நாங்கள் பாடவேண்டியதைத் தாங்களே பாடிப் பரிசு வாங்குகிற பலே கில்லாடியாயிருக்கின்றார்கள் என்றது சேற்றைத் துடைத்தபடி எருமை.

ஆழமான உண்மையென்பது பண்ணையில் இருந்த தேவனுட்பட அனைவருமே ஒருநாள் இறைச்சிக்காகப் போகப் போவதுதான்.

இங்கு வாழும் பெரும்பாலான பன்றிகள் இறைச்சிக்கானவை. இங்கு இறைச்சிக் கடைகள்தான் மூலைக்கு மூலை இருக்கின்றன. அவற்றில் எவ்வாறு நாம் கொல்லப்படுகின்றோம்

என்கிற படங்களை அவர்கள் வைப்பதில்லை. அவர்கள் பலான பெண்களின் படங்களை மற்றும் எம் சமைத்த உண வுகளைப் படமாக்கிப் பயன்பெறுகின்றார்கள். இதைவிடவும் 'கொல்லேற்றுக் கோடுஅஞ்சு வானை மறுமையும் புல்லாளே ஆய மகள்' என்று கலித்தொகை பேசுவதாகச் சொல்லி எம் எருதை அடக்குபவனே வீரன் என்று தம் பெண்கள் சொல்வ தாகக் கதை பண்ணி எம்மை அவர்கள் அடக்குவதைப் போல இறைச்சிக் கடைகளில் பெரிய படங்களை வைத்தி-ருந்தார்கள்.

பண்ணையில் ரங்கரால் பரிந்துரைக்கப்பட்ட தேவன் கடுமை யான முகத்துடன் கூடிய தன்னினப் போராளி. ரங்கரின் மர ணத்திற்குப் பிறகு தேடலுள்ள பேச வல்லவராக இருப்பவர் அவர். அதிகம் பேசுபவர் அல்ல, ஆனால் தனது சொந்த வழியில் காணும் இடர்களைத் தவிர்த்துத் தன் சமூகத்தை வல்லமையோடு கட்டமைப்பதில் வல்லவர். அதிகப் பேச்சு நேர வீண் விரையமென்பது அவரது கண்டுபிடிப்பு.

அவர்களில் மிகவும் பிரபலமானவளாயிருப்பவள் அழகான சிறிய கொழுத்த வெள்ளைப் பன்றி சகீலா தான். அதற்கு ஸ்ரெவ்வனியான முதலாளியம்மா கழுத்தில் அழகிய மாலை யும் தலையினில் சிவப்பு ரிபனும் கட்டியிருந்தாள். மூக்கு மிக அழகாயிருந்தது. மிகவும் வட்டமான கன்னங்கள், கன் னங்களில் படர்ந்த சிவப்பு, மின்னும் கண்கள், வேகமான அதன் அசைவுகள், தலையை ஆட்டி மயிரைச் சாய்க்கின்ற அழகு. அது ஓர் தேவதையாக மின்னியது. தன்னைப் போலவே அது உள்ளதென்பாள் இத்தாலிக் கார ஸ்ரெவ் வனி!

சகீலாவை அணைத்துக்கொண்டு, 'கபி கபி மேரே தில் மெய்ன் காயல் ஆதா ஹை' என்று ஹிந்திப் பாடலை உரத் துப் பாடுவாள். என் இதயத்து உணர்வில் நீயே இருக்கிறாய் எங்களுக்காய் படைக்கப்பட்டவள் நீ என்கிற பாட்டு அது. ஸ்ரெவ்வனி பன்றி இறைச்சி சாப்பிட்டு வைனும் குடித்த பின் தான் இந்தப் பாட்டை அதிகம் பாடுவாள். அன்றைக்கு ஒட் டுசுட்டான் காட்டுப் பன்றிக்கறியும், நாட்டுச் சாராயமும் குடித்திருந்தாள். சொல்லவா வேண்டும். பாட்டுப் பலமாயி ருந்தது.

சகீலாவோடு முதலாளியம்மா கொஞ்சுவது எல்லா விலங்குக ளுக்கும் எரிச்சலைத் தந்தது. குறிப்பாகத் தேவனுக்கு;

அங்குவந்து பார்ப்போர் சகீலாவைப் பார்த்து இது என்ன மனிதர் செய்த பன்றி உண்டியலோ என்று புரியாதவர்களா கக் கேட்பார்கள். அத்துணை பேரழகு. அவள் ஒரு புத்திசா லித்தனமான பேச்சாளராக இருந்தாள், ஆனால் அவள் முத லாளித்துவ விசுவாசம் கொண்டவளாக இருந்தாள். ஒத்தோ டும் அரசியலால் நமக்குப் பலவாய்ப்புண்டு. வெறுப்பரசிய லால் நாம் எதையும் பெற்றுவிட முடியாது என்று அழகாகப் பேசுவாள். அங்குள்ள விலங்குகள் சகீலாவைக் காட்டிக் கொடுக்கிற துரோகியெனத்தான் அவளுக்குப் பின்புறமாக முணுமுணுத்தன. ஆனால் அவளிடம் அத்தனையும் பாசமா யிருப்பது போல நடித்தன. முதலாளியம்மாவிடம் போட்டுக் கொடுத்துவிடுவாளோ என்று அவையஞ்சின.

போட்டுக் கொடுத்து விடுவாள் என்பதற்காகப் பண்ணையை விட்டுத் துரத்துகிற அல்லது அவளைக் கொன்றுவிடுகிற மனி தர்களின் மலினமான எளிய குணங்கள் விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் இல்லை.

'எம் தலைவர் ரங்கரின் போதனைகளை நீ மறந்து விட்டாய் சகீலா!' என்றான் கோபமாகத் தேவன்.

'நான் ஒன்றும் மறந்து விடவில்லை. அது எமக்குச் சாத்தி யமா?' என்றாள் சகீலா.

ஒட்டுமொத்தப் பிரபஞ்சத்தையும் படைத்ததாக அவன் கும்பி டுகிற கடவுள் தனக்கே தான் இங்குள்ள அனைத்தையும் படைத்ததாகச் சொல்லித் திரிகிறவர்கள் மனிதர்கள், படைக் கப்பட்ட மிருகங்கள், பறவைகள் யாவும் தமக்கானதே என்று சதா அதற்காகத் திட்டமிட்டு உழைக்கின்ற அவர்களை நாம் எவ்வாறு அழிப்பது? எவ்வாறு அவர்கள் அதிகாரத்தை நாம் கைப்பற்றுவது? கொஞ்சமும் யோசிக்க வேண்டாமா நாம்? என்றாள் சகீலா.

சகீலாவின் கேள்வியில் திக்கு முக்காடினான் சிந்திக்கவல்ல தேவன்.

ரங்கரின் கனவை நானும் மதிக்கின்றேன்.

நம் விலங்குகள், பறவைகள் சமூகத்தை முழுமையான சிந் தனை அமைப்பாக விரிவுபடுத்த வேண்டிய அவசியத்தை நானும் உணர்கின்றேன். ஆனால் அதற்காக எடுத்தேன் கவிழ்த்தேன் என்கின்ற ரங்கரின் மனிதக்கொலைக் கோட்பாடு களை 'ரங்கரிஷம்' என்று அழைத்து அவற்றை நீ சொல்வது போல ஒரு மனிதக்கொலைப் போராட்டமாக எம்மால் எப்படி நடைமுறைப்படுத்துவது? சகீலா நிறுத்தினாள்.

மற்றைய விலங்குகளோ, துரோகிகள் எப்போதும் இப்படித் தான் நம்பிக்கையீனமாகவே பேசுவார்கள் என்றன. கூட இருப்பவர்களையும் இவ்வாறான ஒத்தோடிகளின் நம்பிக்கை யீனம் வாழவிடாமல் செய்து விடும். இவ்வாறானவர்களிடமி ருந்து நாம் எப்போதும் தூர விலகியிருக்க வேண்டுமென்றும், இவளைவிடு... நாமிருக்கின்றோமென்றும் தேவனுக்குத் தைரி யம் தந்தன மற்றைய விலங்குகளும் பறவைகளும்.

ரங்கர் இறந்து பல இரவுகள் கடந்து போயின, திரவியமும் பணியாட்களும் தூங்கிய பிறகு அவர்கள் மீண்டும் கொட் டகையில் இரகசியக் கூட்டங்களை நடத்தத் தொடங்கியிருந் தனர். சகீலாவின் ஒத்தோடி அரசியல் உட்பட பலவற்றையும் அவை அலசி ஆராய்ந்தன. கொள்கைகளை விளக்கின.

ஆரம்பத்தில் அவர்களுக்கு அந்தப் போராட்டம் மிகவும் முட்டாள்தனமாகவும், அவமானமாகவும் அக்கறையின்மையு மாக இருந்தது. பல பிரச்சினைகளைச் சந்தித்தனர். ஆனால் மிருகவதை செய்து கொன்றுவிடும் மனிதரின் துரோகம் அவர் கள் மனங்களை விட்டு என்றும் அகலாத ரணமாகி அதை மீளவும் மீளவும் பேசவைத்தன.



தொடரும்...

sithivinayagam@thaiveedu.com

# துரோகன்

**- அகரன் -**

**ஓவியம் : செல்வன்**

சடைத்து வளர்ந்திருந்த மரத்தில் கொக்கு ஒன்று அமர்ந்தி ருந்தது. மரம் பூத்திருப்பது போல இருந்தது. குளியலறை கண்ணாடி ஊடாக பார்த்தால் பின்னால் ஒரு நதி ஓடிக் கொண்டிருந்தது. அந்த நதியை தேடித்தான் கொக்கு வந்தி ருக்கிறது. அல்லது அதற்கு வேறு எதுவும் நோக்கங்கள் கூட இருக்கலாம்.

இரவிரவாக பயணம் செய்து மார்க்கோ இந்த கிராம விடு திக்கு அழைத்து வந்துள்ளாள். பாரிசிலிருந்து மூன்று மணி நேரப் பயணம். பறவைகளின் சத்தமும் காற்றின் சத்தமும் மட்டும் கேட்கும் கிராமம். அதிகாலை தன் முகத்தை காட்ட ஆரம்பித்தது. அந்த விடுதியில் அமைவிட அழகு பெருகிக் கொண்டே இருந்தது.

எனக்கு 37-வது பிறந்தநாள். அதற்காகத்தான் மார்க்கோ இங்கே அழைத்து வந்திருக்கிறாள் என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் அவள் அது பற்றி கூறவில்லை. ‘நாளை ஒரு முக்கிய நிகழ்வு. நான் தந்த ஆடைகளை அணிய வேண்டும்’ என்று மட்டும் கூறிக்கொண்டாள். காலை 10 மணிக்கு நாங்கள் தயாராக வேண்டும் என்று கூறியிருந் தாள்.

நான் அறையை விட்டு அதன் பின்பகுதிக்கு சென்றால் அழ கான அமைவிடம். நதியும் நதிக்கு பின்னால் விரிந்திருக்கும் காடு. பார்த்துக் கொண்டே இருக்க இருக்கைகள். நான் மட் டுமே அதில் அமர்ந்து கொண்டேன்.

வன்னியில் போராட்டத்தில் இருந்த போது இருந்த காடு மீண்டும் எனக்குள் நிறைய ஆரம்பித்தது. அடுத்த நிமிடம் சாவுக்கு தயாராக இருந்த என்னை வாழ்வு, பூமியின் வேறொரு மூலையில், வேறொரு வனத்தில், வேறொரு சூழ லில் துரத்தி வந்து அமர்த்தி விட்டிருக்கிறது.

மார்க்கோ இளம் எழுத்தாளராக வருவதற்கு தீவிரமாக உழைத்துக் கொண்டிருப்பவள். பிரான்சின் முக்கிய பதிப்ப கம் காலிமார். அவளது புது நாவலுக்கு முற்பணம் கொடுத் துள்ளது. அதன் கதை ஐந்து கண்டங்களில் இருந்து அகதி யாக பிரான்சிற்கு வந்த வேறு வகைப்பட்ட போராளிகள் பற் றிய கதைகள் ஒன்று சேரும் நாவல்.

இலங்கை தமிழ் போராளி ஒருவனை தேடிக் கொண்டிருந்த மார்க்கோவிற்கு என்னை அறிமுகப்படுத்தி வைத்தவள் அடிக்கடி நான் வேலை செய்யும் கடல் உணவகத்திற்கு வருகை தரும் கரோல்.

கடந்த ஐந்தாண்டுகளாக பாரிசில் இருக்கும் ஒரு கடல் உணவகத்தில் வேலை செய்கிறேன். அதன் வரவேற்பு பகு திக்கு அருகில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கண்ணாடி அறையில் மட்டிகளை உடைத்து அவற்றை அடுக்கி கொடுக்கும் வேலை. இதற்கு முன்னர் மட்டிகளை அருந்தி யது கிடையாது. மட்டிகளுக்கு பிரெஞ்சுக்காரர்களிடத்தில் இத்தனை வரவேற்பு இருப்பதும் தெரியாது. விதம் விதமான அளவுகளில் மட்டிகள் உயிரோடு அங்கே பெட்டிகளில் அடைக்கப்பட்டிருக்கும் மட்டி உடைப்பானால் அதன் சுடுக் குகளில் கூர்க் கத்தியை நுழைத்து இடது கையில் போடப் பட்டிருக்கின்ற கைக்கவசத்தை அணிந்தவாறு அது உடைந்து விடாமல் அதன் மேல் ஓட்டை எடுத்து விட வேண் டும். பின்பு அவற்றை பனித்துகள்கள் நிரப்பிய சட்டியில் வட்ட வடிவில் அடுக்கிவிட வேண்டும்.

சிகப்பு வைனில் செய்த வினாகிரியும், சிறு வெங்காய துண்டு களும் சேர்த்த சோசையும் தேசிக்காய் துண்டுகளையும் அரு கில் வைத்து கொடுப்பது எனது வேலை. இது ஒரு பெரிய கடினமான வேலை கிடையாது. ஆனால் அந்த தட்டை அழ குபடுத்தி அனுப்புவது என் பொறுப்பு.

மட்டிகள் அவற்றின் உப்பு நீரில் உயிரோடிருக்கும்போதே



அவற்றை கரண்டியால் பிய்த்து கடல் நீர், சோஸ், தேசிக் காய் சாறு சேர்த்து உண்பது வாடிக்கையாளர் பொறுப்பு.

வருகிற மக்கள் எல்லோருக்கும் ‘bonjour’ சொல்வதும் ‘ஓ று வுவா’ என்று சொல்வது கூட ஒரு வகையில் எனது வேலை தான்.

கரோல் ஒரு கிழமையில் ஒரு தரம் அல்லது இரு தரம்

அங்கு வருகை தருவாள். என்னைக் கண்டதும் அருகே நின்று சில கதைகள் பேசிச் செல்வாள். கரோலுக்கு 75 வய திற்கு மேல் இருக்கக்கூடும். ஆனால் இளம் பெண்கள் அவ ளோடு அலங்காரம் செய்வதில் தோற்று விடுவார்கள்.

அவள் தனது வாழ்நாள் காலத்தில் ஒரு தகவல் திரைப்படத் துறையில் வேலை செய்தவளாக இருந்தாள். இந்தியாவில் பிரெஞ்சு தொலைக்காட்சிகளுக்காக மத்திய பிரதேசம், கேரளா போன்ற இடங்களில் வேலை செய்திருக்கிறாள். அத னால் இந்தியர்கள், தமிழர் பற்றிய அறிவும் அவரிடம் அதிக மாகவே இருந்தது.

அவளது நண்பியின் மகள் தான் மார்க்கோ. மார்க்கோவின் தேவையை அறிந்து என்னோடு வந்து கரோல் பேசினாள். முதலில் நான் மறுத்த போதும் கிழவி என்னை விட்டதாக தெரியவில்லை. அதன் முக்கியத்துவம் பற்றி கூறினாள். உங் கள் போராட்டத்தை உலகிற்கு சொல்ல ஒரு வாய்ப்பாகக் கூட இது இருக்கும் என்று ஆசை காட்டினாள்.

பின்னொரு பொழுது ஓர் கஃபேயில் மார்கோவை சந்தித் தேன். அவளது நாவலுக்கு உதவி செய்வதைவிட அவ ளோடு பேசிக்கொண்டே இருக்கலாம். என்னோடு பேசிப் பேசி தனக்கு வேண்டியது எல்லாவற்றையும் குறித்துக் கொள்வாள். உரையாடியே முள்ளந்தண்டு மச்சைகளையும் உறிஞ்சி விடும் ரசவாதம் அவளிடம் இருந்தது.

இப்போது அவளுக்கும் எனக்கும் என்ன உறவு இருக்கிறது என்பது பற்றி கிட்டத்தட்ட இருவருக்கும் தெரியவில்லை.

இந்தியர்கள் வணங்குவது போல் கையை குவித்து உதடுக ளையும் குவித்து 'சித்துப் பிழே' எனும் போது அதற்காக எதுவும் செய்துவிட தோன்றிவிடுகிறது. அவளை நான் விரும் புகிறேன் என்று மனம் நினைத்தது. அவள் என்னோடு தான் குழைந்து குழைந்து பேசுகிறாளோ என்றால் இல்லை. அவள் எல்லோருடனும் அப்படித்தான் பேசுகிறாள்.

அவளுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். அவள் கணவனை பிரிந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆனால் நட்போடு இருக்கிறார்கள். கணவன் வேறு ஒரு பெண்ணுடன் வாழ்கிறான். குழந்தைகளை அவன் பார்க்க வருகிற போது அவனை நண்பன் ஆக்கி அனுப்புகிறாள். வெறுப்பு இல்லை. பிரிவு நட்போடு இருக்கிறது.

எனது பிறந்தநாள் பற்றி அவளுக்கு கூறியிருக்காது விட்டா லும் கூட மனதுக்குள் இவள் அது சம்பந்தமாகத்தான் இங்கே என்னை அழைத்து வந்திருக்கிறாள் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் சில வேளை தன் நாவல் சம்பந்தப் பட்ட ஏதாவது உரையாடலாக கூட இருக்கலாம். இதுவரை பிறந்தநாள் பற்றி எந்த எதிர்பார்ப்பும் இருந்ததில்லை. இன்று ஏன் இந்தப் பதட்டமென்று தெரியவில்லை.

எனக்கு வந்திருந்த 23-வது பிறந்தநாள் எப்போதும் என் மனதை கல்லாக்கிக்கொண்டே இருக்கிறது. அதன் பின் பிறந்தநாள் வந்தாலே உடல் நடுங்க ஆரம்பித்துவிடும். ஒரு வகை உயிர் பிரிதலின் அச்சம். ஆயுதங்கள், யுத்தம் மீதான அச்சமும் வெறுப்பும். இதே கையில் எத்தனை வகையான ஆயுதங்களுடன் வன்னிக் காடுகள், அதன் நிலமெங்கும் நடந்திருக்கிறேன். ஆயுதம் இல்லாத என் கையை வன்னி யில் வாழ்ந்த போது என்னுடல் பார்த்ததே இல்லை. அது என் மூன்றாம் கை.

30/03/2009 அன்று அதிகாலை மாதவன் மாஸ்டருடன் எட்டு பேர் ஒரு முக்கியமான எதிர் தாக்குதலுக்கான வரைபடத்தை அதிகாலை 4 மணிக்கு எழுந்து பூர்த்தி செய்து கொண்டிருந் தோம்.

என்னை கூர்ந்து பார்த்தவர்... 'அடே! இண்டைக்கு உன்ர பிறந்தநாள் எல்லோ?'

'மாஸ்டர் இப்ப இறக்கும் நாள் தான் முக்கியம்' என்றேன்.

'டேய் ஏன் காலையிலேயே இப்படி கதைக்கிறாய்?' என்றார்.

பின்னர் உள்ளே சென்றவர் ஒரு கிரீம் பிஸ்கட் பெட்டி ஒன்றை தந்தார். 'வாழ்த்துக்கள், வெல்வோம்' என்றார். அவர் சின்ன சின்ன பரிசுகளை பெடியளுக்கு கொடுப்பவர். செவ்வி ளநீர் போன்ற உடல். கரிக்கட்டை போன்ற மீசை. ஆலமர அடி போல உடல். எப்போதுமே உற்சாகமான மனுஷன்.

எல்லோரும் அந்த கிரீம் பிஸ்கட்டுகளை பிரித்து தேநீருடன் சாப்பிட்டோம். வரைபட வேலைகள் முடிய காலை ஒன்பது மணி. அதில் மூன்று பிரதிகள் எடுத்துக் கொண்டோம். இப் போது வரை படங்களை மூன்று முக்கிய இடங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும். நாம் மூவர் மூன்று மோட்டார் வண்டிகளில் தனித் தனியாக புறப்பட்டோம். மோட்டார் வண் டியில் நீட்டு பாட்டுக்கு ஆயுதம். எஸ்லோன் பைப்புக்குள் சுருள் வரைபடம். வரைபடத்தை வெள்ளா முள்ளிவாய்க்கால் கடந்து சென்று முக்கிய மறைவிடத்தில் உள்ள தீபன் அண் ணனிடம் கொடுக்க வேண்டும். ஏற்கனவே திட்டமிடப்பட்ட வலிந்து தாக்குதலில் ஏற்படுத்தப்பட்ட சிறிய மாற்றம். மற்றும் இறுதி கட்ட வரைபடம். இந்த போரில் மிக முக்கியமானது கூட.

அப்போது நாங்கள் 'வைலஸில்' பேச முடியாது. நேரடியான தகவல் பரிமாற்றமே பாதுகாப்பானது. தகவல் தொடர்பை எடுத்தால் அந்த இடத்தில் செல் மழை கொட்டும். அல்லது முக்கிய நபர்களின் குரலாக இருந்தால் கிபிரும் ஒத்தா சைக்கு வந்து குண்டுகளை கொட்டி விட்டு சென்று கொண்டி ருந்தது.

எனவே நாங்களே நேரடியாக தகவல்களை பரிமாற வேண்

டிய சூழலுக்கு நீண்ட காலத்தின் பின்னர் வந்திருந்தோம்.

சரியாக பத்து மணிக்கு நாங்கள் மூவரும் மூன்று திசைகளில் புறப்பட்டோம். நில அறையை விட்டு வெளியே வந்து மாஸ்டர் எங்களிடம் 'பத்திரம் - கவனம்' என்ற இரு சொற்களை மட்டும் சொன்னார். மோட்டார் வண்டியில் மிக வேகமாக செல்ல வேண்டும் எந்த நேரத்திலும் ராணுவம் செல்லடிக்கக் கூடும். அப்படி அடிக்க ஆரம்பித்தால் 15 நிமிடத்திற்கு செல் விழுந்து கொண்டே இருக்கும். அதற்குள் உயி-ரோடிருப்பதைவிட இந்த வரைபடம் யாரிடமும் சிக்க கூடாது.

வீதியில் வேகமாக சென்று கொண்டிருந்தேன். வீதி எங்கும் சனங்களின் பேயறைந்த முகங்கள். சிரிப்பது அங்கு இல்லாமலே போயிருந்தது.

அப்போது இரண்டு சின்னப் பொடியள் பனை ஓலையில் ஒருவனை இருத்தி வாயால் சத்தம் போட்டபடி குறுக்கே ஓடினார்கள். மற்றவன் பனை ஓலையில் இருந்தபடி கெக்கட்டம் விட்டு சிரித்தபடி இருந்தான். நீலக் கால்சட்டை இருவரும் அணிந்து இருந்தார்கள். வீதியின் அருகிலேயே அவர்கள் இருப்பிடம் இருக்க வேண்டும். நான் வந்த வேகத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. உடனே வீதி அருகே இருந்த மணலுக்குள் விட்டு விட்டேன். மணலுக்குள் வெட்டி வெட்டி சென்ற வண்டி ஓரிடத்தில் சறுக்கி விழுந்தது. நான் விழுந்தேன்.

பிள்ளைகளின் தாய் அவர்களை திட்டிக் கொண்டிருந்தாள். நான் மெதுவாக எழுந்தபோது என் வலது கால் பத்தடி தூரத்தில் விழுந்து விட்டிருந்தது. சாரம் கட்டி தாடி வைத்திருந்த ஓர் வயதானவர் 'தம்பி ஓகேயா?' என்றபடி என் காலை கொண்டு வந்து தந்தார். என்னை மோட்டார் சைக்கிளில் இருந்து விடுவித்து அதை தூக்கி விட்டார். மணலில் விழுந்ததால் காயம் இல்லை. சிரித்துக் கொண்டிருந்த அந்த பிள்ளைகளின் முகங்கள் இருண்டு இருந்தன. நான் என்னை சரி-பார்த்து காலை கொழுவியபடி ஆயுதத்தையும் மைப்பையும் பார்த்தேன். அவை அப்படியே இருந்தது.

'அக்கா பிள்ளைகளை பேசாதீங்க! வேண்டுமென்றா அவர்கள் குறுக்கே வந்தார்கள்? விடுங்கோ...' என்று ஒட்டி இருந்த மணலை தட்டியபடி கூறினேன். வீதிக்கு வரவும் மூத்த பையனை பேசியபடி ஓலையில் இருந்து அமர்ந்திருந்த இளையவனை அந்த இளம் தாய் தூக்கினாள். பையனுக்கு கால்கள் முழங்காலுக்கு கீழ் இருக்கவில்லை. எனக்கு சட்டென்று இரும்பு துண்டு இதயத்துக்குள் நுழைந்தது போல் இருந்தது. பையன்களை இயல்புக்கு கொண்டுவர 'தம்பி ரோட்டுக்கு வராமல் விளையாடுங்கோ...' என்று விட்டு கிளம்பினேன். மெதுவாக நடந்தபோது பிருட்டங்கள் வலி எடுத்தது.

அந்த தாய் பெரியவனை 'பிரம சத்தி இங்க வாடா... உன்னால தான் எல்லாம்' என்று ஒரு சுள்ளியை எடுத்து திரத்தினாள். அவன் மணல் வெளிக்கு பூம்... பூம் என்று சத்தமிட்டவாறு ஓடினான். தாயார் 'ஓடாத... அடிப்பன்... ஓடாத அடிப்பன்' என்றபடி மக்சியை தூக்கி பாவாடை நாடாவில் சொருகியபடி ஓடினாள். எனக்கு சிரிப்புத் தான் வந்தது.

வண்டியில் வேகம் எடுக்க ஆரம்பித்தேன். வட்டுவாகலை நெருங்கியபோது செல் அடிக்கும் சத்தம் ஆரம்பித்தது. நான் போகும் திசையில் அது விழுந்து புகை வந்தது. வேகத்தை குறைத்துக் கொண்டு நகர்ந்தேன். செல் மழை ஓய்ந்ததும் மீண்டும் வேகமெடுத்தேன். நேரத்தை பார்த்தேன் அப்போது பத்து முப்பது. நான் 11 மணிக்குள் தீபன் அண்ணாவிடம் கொடுத்துவிட்டு மீண்டும் பன்னிரண்டு மணிக்கு எங்களிடம் திரும்ப வேண்டும்.

புகை வரும் திசையை பார்த்ததும் இது நான் போகும் திசையில் நடந்திருக்கிறது. சனம் வீதியை அடைத்தபடி ஓடி வந்தபடி இருந்தது. வட்டுவாகலில் இருந்து 500 மீட்டருக்கு முன் உள்ள வீதி அருகே மரத்தின் கீழ் நின்ற பார ஊர்தியை குறி வைத்து செல் தாக்குதலை நடத்தி இருக்கிறார்கள். மரங்கள் எரிந்து புகைத்தபடி இருந்தது. சனங்கள் கத்தியபடி இருந்தார்கள்.

நான் அங்கே நிற்கவில்லை. மெதுவாகவே வண்டியை செலுத்திக்கொண்டிருந்தேன். வீதியினருகே தலையில் கை வைத்தபடி பாவாடை சட்டையுடன் ஒரு அக்கா குந்தி இருந்து என் வரவை பார்த்தபடியே இருந்தாள். நான் நெருங்க நெருங்க கையை நீட்டினாள். நீளமான குரலில் தம்பி என்ர பிள்ளைக்கு சன்னம்பட்டு ரத்தம் வருது எங்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவீங்களா...?' என்றாள். அவள் குழந்தை ஒரு வயதை தாண்டாத பாலகன். அவன் இடுப்பில் இருந்து குருதி சிந்தியபடி இருந்தது. சாரத் துண்டால் தாய் அதை கட்டி இருந்தாள்.

'ஏறுங்க அக்கா' என்றேன். அவள் பின் சீட்டில் ஒத்தைப் படை இருந்தாள். 'அக்கா நீங்க மற்ற காலை போட்டு வடிவாய் இருங்க அப்பதான் விழமாட்டீங்க' என்றேன். 'கொஞ்சம் பொறு' தம்பி என்றபடி காலைத் தூக்கி வைக்க முடியாமல் அந்தரப்பட்டாள். நான் பிள்ளையை ஒரு கையில் பெற்றுக் கொண்டு 'முதல் நீங்க ஏறுங்க' என்றேன். அவள் ஏறும் போது குழந்தையை பார்த்தேன். அழவில்லை. சிரித்தான். முயலுக்கு இருப்பது போல் நான்கு பற்கள் இருந்தன. 'வலிக்குதா?' என்றேன். தலையை ஆட்டினான் 'அது சின்ன காயம் நாங்க ஆஸ்பத்திரி போவோம்' என்றேன். அவன் என்னைப் பார்த்தான். சிரிக்க முயற்சித்தான். கன்னங்களில் குழி விழுந்திருந்தது.

குழந்தையை முதுகில் சாத்தியபடியே அவனை இடது கையால் பிடித்தபடி அந்த தாய் என் வலது தோள் மூட்டில் தன் இடது கையை பிடித்திருந்தாள். நான் அந்த நெரிசல் நிறைந்த தெருவில் முடிந்த வரை வேகமாக தற்காலிக வைத்தியசாலை நோக்கி ஓடினேன். அப்போது ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தில் ஒரு பகுதியில் வைத்திய நடவடிக்கைகள் நடந்து கொண்டிருந்தது. சனங்கள் விசர் பிடித்த கூட்டம்

போல அங்குமிங்கும் அலைந்து திரிந்தனர். ஒழுங்கு இல்லை. மோட்டார் சைக்கிள் கோன் அடித்த போதும் நகர்ந்து விடுவதாக இல்லை. 'காயப்பட்ட ஆட்களை கொண்டு போறேன் கொஞ்சம் விடுங்க... விடுங்க...' என்று கத்தியபடியே தான் ஓடிக்கொண்டிருந்தேன். நேரத்தை பார்த்தேன் அப்போது 11:30 ஆகியிருந்தது.

வீதியில் ஒரு டிராக்டர் பொருட்கள் நிறைந்த படி பழுதாகி இருந்தது. அதன் ஒரு டயர் காற்றுப் போய்விட்டது. அதன் பெட்டி சரிந்து விழும் நிலையில் இருந்தது. அதை விடுப்பு பார்த்தபடியே ஒரு கூட்டம் இருந்தது. அதற்கிடையில் ஒருவர் என்னை மறித்து ஏதோ கேட்க முனைந்து கொண்டிருந்தார். 'அவசரம் விடுங்க' என்றாலும் அவர் 'இஞ்ச டயர் எங்கு இருக்கிறது?' என்றார். எனக்கு அறைய வேண்டும் போல் இருந்தது. 'அண்ண இந்த பிள்ளை காயப்பட்டு... விடுங்கள்' என்று அந்த கூட்டத்தை விட்டு வெளியேறினேன்.

அப்போது குழந்தையின் தலை முதுகில் அழுத்த ஆரம்பித்தது. குழந்தையின் கழுத்து தொங்க ஆரம்பித்த போது 'தம்பி வேகமா போங்க' என்றபடியே தாய் முனகிக்கொண்டிருந்தாள். அவளின் கை என்னை அழுத்த ஆரம்பித்தது. என்னால் வண்டியை ஓட்ட இடஞ்சலாக இருந்தது.

என் முதுகில் சரிந்திருந்த குழந்தையின் தலை என் முதுகில் குளிர ஆரம்பித்தது. பிள்ளை காப்பாற்றும் நிலையை கடந்து விட்டது என்று தெரிந்தாலும் நான் ஒன்றும் பறையாமல் வேகத்தை கூட்டியபடி இருந்தேன். தம்பி வேகம்... தம்பி வேகம்... என்ற தாயின் குரலும் அப்போது ஓய்ந்திருந்தது. மகன் இறந்து விட்டான் என்று அவருக்கு தெரிந்திருக்குமோ என்று நினைத்தபடி ஓடினேன்.

என்னால் வண்டியை நேராகச் செலுத்த முடியவில்லை. ஏனெனில் முழங்கைக்கு மேலுள்ள தசையை பிய்த்துவிடும் பிடியில் அவள் விரல்கள் இறுக்கி இருந்தது. 'அக்கா கையை இடுப்பில் அல்லது தோளில் பிடியுங்கள்' என்று சொல்ல நினைத்தேன். ஆனால் வேண்டாம் என்று நினைத்தபடி வைத்திய முகாமை நெருங்கிக் கொண்டிருந்தேன். அந்த இடம் தெரியவும் ஒரு நிம்மதி வந்தது. 'அக்கா வந்துட்டேன்' கவனமா பிடியுங்கள்.

நான் நெருங்கவும் அங்கிருந்து மரங்களுக்கு கீழ் காயப்பட்ட சனங்களின் கூட்டம் நிறைந்து இருந்தது. வண்டியை நிறுத்தி 'அக்கா இறங்குங்க' என்றபோது அக்கா இறங்கவில்லை. எனது வலது கையின் தசைகள் பிரிந்து விடும் போல் அவளின் இடது கைவிரல்கள் இறுக்கி இருந்தன. அவற்றை விடுவித்து அக்கா இறங்குங்க என்றதும் குளிர்ந்த விரல்கள் அப்படியே பிடித்த தோற்றத்திலேயே அவள் சரிந்து விழுந்தாள்.

நானும் ஒற்றைக்கால் பலத்தால் தாங்க முடியாது வண்டியோடு விழுந்தேன். அந்த குழந்தையை தாய் கைவிடவே இல்லை அவர்கள் மீண்டும் எப்போதும் எழுந்திருக்கவே இல்லை.

அப்போது தான் அவளைப் பார்த்தேன். அவள் இடைப் பகுதியில் ஓரிடத்தில் இருந்து ரத்தம் கசிந்தபடி இருந்தது வீதியை திரும்பி பார்த்தேன் வந்த வழியெங்கும் குருதி கோடு போட்டிருந்தது.

அப்போது நேரம் 12 மணி. அங்கிருந்து உடல்களை தூக்கிச் சென்றதும் யாரோ வண்டியை தூக்கி நிறுத்தி விட்டார்கள். வண்டியின் ஓரம் இருந்த வரைபடத்தை காணவில்லை. மீண்டும் வந்த பாதையில் மிக வேகமாக திரும்பினேன்.

அன்று தொட்டு எப்போதும் பிறந்தநாள் என்றால் அந்த நினைவு வந்துவிடும். அந்தத் தாயினதும் குழந்தையினதும் முகங்கள் என்னை அழுத்திப் பிடித்தவண்ணமே இருக்கும்.

4/4/2009 தீபன் அண்ணா வீரச்சாவு அடையும் வரை அவர் கைகளுக்கு இறுதிக்கட்ட வரைபடம் சென்றடையவில்லை. ஆணந்தபுரம் சமரில் முதலும் இறுதியுமாக ஐந்து பிரிகேடியர் தர தளபதிகளும், ஏழு கேணல் தர தளபதிகளும் 600 முத்தான வீரர்களையும் இழந்து நாம் வீழ்ச்சியின் வேரில் நின்றோம். இந்த வீழ்ச்சிக்கு இறுதிக்கட்ட வரைபடத்தை கொண்டு சேர்க்காத நானும் காரணமானதை என்னால் தாங்க முடியவில்லை. குழந்தையையும் தாயையும் ஏற்றிச் சென்றும் உயிர் தப்பவில்லை. இயற்கை எனக்கு தந்த தண்டனை தோல்வியை அனுபவித்துப்பார் என்பதே.

நான் 05/05/2009 வைத்திய சாலையில் இருந்து கண் முழித்த போதுதான் 'எல்லாம் கண் மூடிவிட்டது' தெரிந்தது. அன்றிலிருந்து இயங்காத மூளையுடன் உடல் வாழ்ந்தது. எதிர் நின்றவர் ஏவிய குண்டுச் சன்னங்களுடன் வாழ முடிகிறது. எதிர் நின்றவர்களுடன் வாழ முடியவில்லை.

முகத்தை சவரம் செய்து விட்டு, தோய்ந்து, மார்க்கோ தந்த உடைகளை அணிந்தபடி வெளியேறினேன். மார்க்கோ சில நண்பர்களுடன் விடுதியில் வரவேற்பறையில் முகம் எங்கும் வெளிச்சம் பாய்ச்சியபடி இருந்தாள். எல்லோரும் என்னை பார்த்தபடி இருந்தனர். எனக்கு கூச்சமாக இருந்தது.

மார்க்கோ தான் வைத்திருந்த பூங்கொத்தை பின்பகுதியில் இருந்து எடுத்து நீட்டினாள். நான் தாண்டித்... தாண்டிச் சென்று அதை பெற்றேன். எல்லோரும் கோரசாக 'பொன் அனிவர்சர்' என்றார்கள். அருகே இருந்த மார்க்கோ எதிர்பாராத வகையில் முத்தமிட்டாள். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. உடல் எங்கும் நடுங்க ஆரம்பித்தது. உடலில் இருக்கும் 32 இரும்புத் துண்டுகளும் ஒன்று சேர்ந்து அசைய ஆரம்பித்தது. அதில் நின்றபடி சன்னலூடாக நதியைப் பார்த்தேன். மரத்தில் அப்போது பல கொக்குகள் இருந்தன. அவை 'துரோகன்' என்று கத்தியபடி பறப்பது போல் இருந்தது. ஓடிச்சென்று நதியில் வீழ்ந்தேன்.



akaran@thaiveedu.com

# பனி பொழியட்டும்

- டேவிட் சிடாரிஸ்

தமிழில் : என்.கே. மகாலிங்கம்

ஓவியம்: ஜீவா



**நோ**த் கரோலைனாவில் உறைபனிக் காலம் விரக்தி அடையத்தக்க வகையில் மிகவும் குறைவாகவே இருக்கும். ஆனால் நான் ஐந்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த போது எமக்கு ஓர் அதிர்ஷ்டம் கிட்டியது. பல ஆண்டுக ளுக்குப் பின் உறைபனி விழுந்தது. அதோடு அது குவிந்து கிடக்கவும் செய்தது. பள்ளிக்கூடத்திற்கு விடுதலை விடப்பட் டது. இரண்டு நாட்களுக்குப் பிறகு திரும்பவும் எங்களுக்கு அதிர்ஷ்டம் கிட்டியது. அப்போது எட்டு அங்குல அளவில் உறைபனி விழுந்து நிலத்தில் குவிந்தது. அது உருகுவதற் குப் பதிலாக இறுகியது. விடுதலையின் ஐந்தாம் நாளில் எங் கள் அம்மாவின் மனம் சற்றுப் பிறழ்வு அடைந்தது. நாங்கள் தொடர்ந்து வீட்டில் இருந்தோம். அதனால் நாங்கள் பள்ளிக் கூடத்தில் இருந்தபோது அவர் வாழ்ந்த அவருடைய இரக



டேவிட் சிடாரிஸ்-1956. அமெரிக்க எழுத்தாளர். நகைச்சுவையாளர், வானொலிக் கலைஞர், கட்டுரையாளர், சிறுகதை ஆசிரியர். நியூ யோர்க்கில் பிறந்து றாலி, வட கரோலைனாவில் வளர்ந்தவர். தந்தை கிரேக்க வம்சாவளியினர். தாய் அங்லோ அமெரிக்கர். இவர் ஓர் ஓரினச் சேர்க்கையாளர். இவர் அதிகமாக வானொலிக் கலைஞராகவே அறியப்பட்டவர். Barrel Fever, Me Talk Pretty One Day, Naked போன்றவை பெரிதும் பேசப்பட்டவை. பல விருதுகளும் பரிசுகளும் பெற்றவர். இவருடைய நகைச்சுவைக் கட்டுரைகள் தன் வரலாறு சார்ந்தவை. தன்னைத்தானே இழிவு செய்யும் வகையானவை. அவருடைய அபுனைவுகள் கூட புனைவு வகையைச் சார்ந்தவை என்றே பல விமர்சகர்கள் கருதுகின்றனர். இவர் தன் தங்கையும் நடிகையுமான எமி சிடாரிஸுடன் சேர்ந்து பல நாடகங்களையும் எழுதியுள்ளார். இவர் எமது எழுத்தாளர் அ. முத்துலிங்கத்திற்குப் பிடித்த எழுத்தாளர்.

சிய வாழ்க்கை இப்போது இடைஞ்சலுக்குள்ளாகி விட்டது. நாங்கள் வீட்டில் இருப்பதைத் தாங்க முடியாமல் அவர் எங்களை வீட்டை விட்டு வெளியே துரத்தி விட்டார். அதுவொரு பண்பாகச் சொல்லப்பட்ட கட்டளை அல்ல. வீட்டை விட்டு வெளியேறுங்கள் என்ற கட்டளை அது. 'என் வீட்டை விட்டு வெளியேறி நாசமாகப் போங்கள்' என்றே சொன்னார்.

இது எங்களுடைய வீடும் தான் என்று நாங்களும் அவருக்குத் திருப்பி நினைவூட்டினோம். அவர் முன் கதவைத் திறந்து வீட்டின் பின்புறம் இருந்த கார் நிறுத்தும் பக்கமாக எங்களைத் தள்ளிவிட்டு, 'வெளியே நில்லுங்கள்,' என்றார்.

நானும் என் சகோதரிகளும் வெளியேறிக் கீழ்ப்பக்கமாகச் சென்று அண்டை வீட்டுக் குழந்தைகளுடன் சறுக்கி விளையாடினோம். சில மணித்தியாலங்களின் பின் வீடு திரும்பினோம். கதவு பூட்டிக் கிடந்தது எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. 'ஓ, அம்மா, வாருங்க, வந்து கதவைத் திறவுங்க,' என்று கத்தினோம். நான் வீட்டின் மணியை அடித்தேன். அதற்கும் பதிலளிக்காதபடியால் யன்னலடிக்குச் சென்றோம். அப்போது அம்மா குசினியில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டோம். சாதாரணமாகக் குடிப்பதற்கு அவர் ஐந்து மணிவரை காத்துக் கொண்டிருப்பார். ஆனால் கடந்த சில நாட்களாக அந்தப் பழக்கத்திலிருந்து விலகி விட்டார். ஒரு கிளாஸ் வைனைத் தொடர்ந்து ஒரு கிண்ணம் கோப்பியை அருந்தினால் குடிப்பது அத்தனை பரவாயில்லை. அதனால் அவர் முன்னால் குசினி மேசையின் மேல் ஒரு வைன் கிளாசும் ஒரு கிண்ணமும் இருந்தன.

'ஹேய்,' என்று கத்தினோம். 'கதவைத் திறவுங்க. நாங்கள் தான் வந்திருக்கிறோம்.' என்றோம். யன்னல் கண்ணாடியில் தட்டினோம். அவர் எங்கள் பக்கம் திரும்பிப் பார்க்காமல் வைன் கிளாசைத் திரும்பவும் நிரப்பிக் கொண்டு சமையல் அறையை விட்டு வெளியேறினார்.

'அந்த வேசை,' என்று என்னுடைய சகோதரி லீசா சொன்னார். திரும்பத் திரும்பக் கதவைத் தட்டினோம். அம்மா அதற்குப் பதிலளிக்காதபோது நாங்கள் பின்பக்கத்தால் போய் அவருடைய படுக்கையறை யன்னலுக்குப் பனிக்கட்டிகளால் எறிந்தோம். 'எங்கள் அப்பா வீட்டுக்கு வந்தவுடன் உனக்குப் பிரச்சினை இருக்கு,' என்று சத்தம் போட்டோம். அதற்கு எதிர்வினையாக அவர் திரைச்சீலைகளைக் கீழே இழுத்து விட்டார். இருட்டிக்கொண்டு வந்தது. குளிரும் கூடிக் கொண்டு வந்தபோது நாங்கள் இறந்து போகப் போகிறோம் என்ற எண்ணம் எங்களுக்கு ஏற்பட்டது. கட்டாயம் அது நடக்கத்தான் போகிறது. சுயநலமிக்க தாய்மார் தங்களுக்கு மட்டுமே வீடு வேணும் என்ற எண்ணத்தைக் கொண்டவர்கள் என்று சொல்லுவார்கள். குழந்தைகள் கற்கால யானைகள் போல உறைபனிப் பாறைகளிடையில் விறைத்துக் கிடந்ததைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு பின்னால் கண்டுபிடிப்பார்கள்.

என்னுடைய சகோதரி கிறெச்சென் எமது தந்தையை அழைக்கலாம் என்று ஆலோசனை சொன்னார். இருந்தும் எங்கள் ஒருவருக்கும் அவருடைய தொலைபேசி இலக்கம் தெரியாது. எப்படியென்றாலும் அவராலும் எதையும் செய்யவும் முடியாது. எமது அம்மாவின் கரைச்சல் தாங்க முடியாமல் தான் அதிலிருந்து தப்புவதற்காக அவரும் வேலைக்குப் போகிறார். காலநிலையையும் அம்மாவுடைய மனநிலையையும் வைத்துப் பார்த்தால் அப்பா வீட்டுக்கு வருவதற்குப் பல மணி நேரம் செல்லலாம்.

'எங்களில் ஒருவரைக் காரொன்று அடித்து விட வேணும். அது எமது பெற்றோருக்கு ஒரு பாடமாக அமையும்,' என்றேன் நான். எனது சகோதரி கிரேச்சியனை மனதில் கற்பனை செய்தேன். அங்கே அவளுடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. நாங்கள் இன்னும் கொஞ்சம் விழிப்புடன் இருந்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு எங்கள் பெற்றோர் றெக்ஸ் மருத்துவமனையில் அங்குமிங்கும் நடந்து கொண்டிருக்கிறார்கள். அதுதான் இதற்குச் சரியான தீர்வு என்று நினைத்தேன். அவள் போய் விட்டால் நாங்கள் எம் பெற்றோருக்கு மேலும் பெறுமதி வாய்ந்தவர்களாகி விடுவோம். அத்துடன் நாங்கள் படுப்பதற்கும் எங்களுக்கு அதிகம் இடம் கிடைக்கும். 'கிறேச்சியன், நீ போய் வீதியில் படு' என்றேன்.

'அமியை அனுப்பு,' என்றாள் அவள்.

அமி தன் பங்குக்கு ரிஃபனியில் அந்தப் பொறுப்பைத் தள்ளி விட்டாள். ரிஃபனி தான் அந்தக் குடும்பத்தின் கடைசிக் குழந்தை. அதோடு அவளுக்கு மரணத்தைப் பற்றி எதுவும் தெரியாது. 'மரணம் நித்திரை கொள்வது போன்றது,' என்று நாங்கள் அவளுக்குச் சொன்னோம். 'திரைச்சீலைகள் போட்ட வசதியான கட்டில் உனக்குப் படுப்பதற்குக் கிடைக்கும்,' என்றும் சொன்னோம்.

பாவம் ரிஃபனி. கொஞ்ச அன்புக்காக அவள் எதையும் செய்வாள். நாங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று, அவளை ரிஃப் என்று அழைக்க வேண்டும். அவ்வளவு தான். அதற்காக அவள் எதையும் செய்வாள். தனக்குக் கிடைக்கும் கைச்செலவுக்கான பணம், உணவு, ஈஸ்ரர் கூடையில் இருக்கும் பொருட்கள் அத்தனையையும் அவள் தந்து விடுவாள். எங்களைத் திருப்திப் படுத்துவதற்காக அவள் காட்டும் விருப்பார்வம் அறுதியானது, அதோடு வெளிப்படையானது. அவளை வீதியின் நடுவே படுக்கச் சொன்னபோது அவள்

கேட்டது ஒன்றே ஒன்று தான் ‘எங்கே?’

இரண்டு குன்றுகளுக்கு இடையே உள்ள ஓர் சிறிய சரிவுப் பகுதியைத் தெரிவு செய்தோம். அந்த இடத்தில் தான் காரோட்டிகள் காரை நிறுத்த முடியாமல் கட்டுப்பாட்டை மீறிச் சறுக்குவார்கள். அந்த இடத்தில் ஆறு வயது வெண் ணெய் நிற மேலாடை அணிந்த அவள் படுத்தாள். நாங்கள் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்காகப் பாறை விளிம் பில் காத்திருந்தோம். முதல் வந்த கார் எங்கள் அயலவரு டையது. எங்களைப் போன்ற ஓர் அமெரிக்கர். அவர் தன்னு டைய காரின் ரயர்களைச் சறுக்க முடியாமல் சங்கிலியால் கோர்த்துக் கட்டியிருந்தார். அதனால் கார் அவளை அடைய ஒரு சில அடிகள் முன்னரே நின்று விட்டது. ‘அது ஒரு ஆளா?’ என்று அவர் கேட்டார்.

‘ஓ, அப்படித்தான்,’ என்றாள் லீசா. எங்களை வீட்டுக்கு வெளியே நிறுத்தி வைத்து விட்டார்கள் என்று அவள் அவ ருக்கு விளங்கப்படுத்தினாள். அது சரியான காரணம் தான் என்று அவர் எங்களுக்குச் சொன்னது போல இருந்தாலும் அவர்தான் எங்களைப் பற்றிச் சொல்லிக் கொடுத்தவரும். இன்னொரு கார் எங்களைக் கடந்து போனது. அப்போது தான் நாங்கள் எங்கள் அம்மாவைக் கண்டோம். அந்த வீங் கிய உருவம் விகாரமாகக் குன்றின் உச்சியில் சிரமப்பட்டு ஏறி வந்தது. காற்சட்டை அணியவில்லை. அவளுடைய கால் கள் இரண்டும் உறைபனியில் கெண்டைக்கால்வரை புதைந் திருந்தன. அவளை நாங்கள் வீட்டுக்கு அனுப்ப விரும்பி னோம். அவள் எங்களை வீட்டை விட்டுத் துரத்தி விட்டது போல. அவளை இயற்கைச் சூழலில் இருந்து துரத்தி விட விரும்பினோம். ஆனால் அப்படியான பரிதாபத்துக்குரிய கோலத்தில் இருக்கும் ஒருத்தரில் அதிக நேரம் எங்கள் கோபத்தைக் காட்டுவது மிகவும் கஷ்டமாக இருந்தது.


‘உன்னுடைய செருப்பையா போட்டிருக்கிறாய்?’ என்று கேட் டாள் லீசா. அதற்குப் பதிலளிப்பது போலத் தன் வெறும் காலைத் தூக்கிக் காட்டினார் எங்கள் அம்மா.


‘நான் செருப்புத்தான் போட்டிருந்தேன். உண்மையாக இரண்டு செக்கண்டுகளுக்கு முன் அது என் கால்களில் இருந்தன,’ என்றார்.

அப்படித்தான் விசயங்கள் நடந்தேறின. ஒரு கணம் அவள் எங்களை வீட்டை விட்டு வெளியே துரத்தி வீட்டைப் பூட்டி வைத்தார். அடுத்த கணம் நாங்கள் எல்லோரும் உறைபனி யில் அவருடைய இடது கால் செருப்பைத் தேடிக் கொண்டி ருந்தோம். ‘ஓ, அதை மறந்து விடுங்கள். அது இன்னும் சில நாட்களில் வெளியே வரும்,’ என்றார். கிரேச்சன் தன் தொப் பியை எடுத்து அம்மாவின் காலில் போட்டு விட்டாள். லீசா அதைத் தன் கழுத்துப் பட்டையால் எல்லாப் பக்கமும் சுற் றிக் கட்டி விட்டாள். பின் நாங்கள் எல்லோரும் வீட்டுக்குச் சென்றோம்



mahalingam.k@thaiveedu.com






# விழ விழ எழுந்த வீரன்

- நிமால் நாகராஜா

சமர்கண்ட்...

மத்திய ஆசியாவின் மையமாக விளங்கும் மயக்க வைக்கும் ஒரு நகரம்.

சீனாவின் பட்டுப் பாதையின் முக்கிய கேந்திரமான இந்த நகரம் மிகப்பெரும் சாம்ராஜ்ஜியம் ஒன்றின் தலைநகராக புகழ்பெற்றது.

டெல்லியில் மட்டுமல்ல, தான் வெற்றி கொண்ட அத்தனை தேசங்களிலும் குரூர வில்லனாக சித்தரிக்கப்படும் தைமூர் ஸ்தாபித்த பேரரசின் தலைநகரம் சமர்கண்ட் தான்.

தான் கைப்பற்றிய பிரதேசங்களில் இருந்த ஒப்பற்ற கைவினைஞர்களையும், கலைஞர்களையும் அடிமைகளாக சமர்கண்டுக்கு அழைத்து வந்த தைமூர், அவர்களின் திறமைகளை தக்கபடி உபயோகித்து சமர்கண்டை பேரழகு வாய்ந்த நகரமாக உருவாக்கினான்.

சமர்கண்டில் எப்போதும் கண்ணைக் கவரும் மாட மாளிகைகளும், கட்டடங்களும் தொடர்ந்து நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டே இருந்தன என, அவனது காலத்தில் அங்கு பயணம் போன சரித்திர ஆசிரியர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

தனது மக்களை மட்டுமல்ல, தான் அடிமைகளாக இழுத்து வந்த அத்தனை திறமையானவர்களையும் அன்புடன் தைமூர் நடத்தியதாக வரலாறு பதிந்து வைத்திருக்கிறது.

வெற்றி கொள்ளப்பட்டவர்களினால் வில்லனாக வெறுக்கப்படும் தைமூர், சொந்த மக்களால் மிகப் பெரிய ஹீரோவாக கொண்டாடப்பட்டவன், இன்றும் கொண்டாடப்படுபவன்.

சமர்கண்ட் நகரம் இருக்கும் தற்போதைய உஸ்பெக்கிஸ்தான் நாட்டின் தேசிய கதாநாயகன் தைமூர் தான். மொங்கோலியாவுக்கு ஜெங்கிஸ்தான் கிடைத்தது போல, தங்களுக்கு வரமாக வந்து வாய்த்தவன் தைமூர் என இன்றும் மத்திய ஆசிய மக்கள் அவனை போற்றுகிறார்கள், அது மட்டுமல்ல பிறக்கும் குழந்தைகளுக்கு அவனது பெயரை வைத்து பெருமைப்படுகிறார்கள்.

ஆசிய, ஐரோப்பிய நாடுகளை எப்போதும் பயத்தோடு வைத்திருந்த தைமூரின் பேரரசு அவனது சாவுடன் கொஞ்சம் கொஞ்சமாக நலிவுறத் தொடங்கிற்று.

அவனது சாம்ராஜ்ஜியம் சிறு சிறு தேசங்களாக பிரிந்து, அவனது வழிவந்தோரால் ஆளப்பட்டன.

தைமூரின் எள்ளுப் பேரனான உமர் ஷேக் என்பவர் சமர்கண்ட் நகரத்திற்கு சற்று தொலைவிலுள்ள பெர்கானா என்ற பிரதேசத்தை ஆண்டு வந்தார்.

இயல்பாகவே நல்ல வீரம் கொண்ட அவர், படு ஜாலியான பேர்வழியும் கூட.

ஒரு நாள் புறாக்களுக்கு உணவு கொடுத்துக் கொண்டிருந்த போது, கால் இடறி மாளிகை உச்சியிலிருந்து கீழே விழுந்து இளவயதிலேயே உமர் ஷேக் இறந்து போனார்.

அவரது மூத்த மகனான பாபருக்கு அப்போது வெறும் பதினொரு வயது தான்.

பெர்கானா தேசத்தின் அரசனாக முடிசூட்டிக் கொண்ட சிறுவன் பாபரின் கனவு பெரியது. சமர்கண்ட் நகரின் அழகு அவனை சுண்டி இழுத்தது.

தனது பதினைந்தாவது வயதில் சமர்கண்டை நோக்கி பாபர் படையெடுக்கிறான். ஏழு மாத முற்றுகையின் பின் சமர்கண்ட் பாபரிடம் சரணடைகிறது.

கனவு நனவாகிய சந்தோசத்தில் பாபர் மக்களுக்கு சிறந்த ஆட்சியை கொடுக்கத் தொடங்கி நூறு நாட்கள் தான் கடந்திருக்கும், விதி பாபரை பார்த்து சிரிக்கத் தொடங்கியது.

பெர்கானா தேசத்தில் குழப்பம் வெடித்தது. பாபரை பிடிக்

காத சில பெர்கானா பிரபுக்கள் பாபரை அரசணையிலிருந்து இறக்கிவிட்டு அவனது தம்பியை புதிய அரசனாக அறிவித் தார்கள்.

பெர்கானா நோக்கி பாபர் படையோடு கிளம்பினான். மலை கள் நிறைந்த அந்தப் பாதையில் பாபர் அரை வழி தூரம் தான் போயிருப்பான்.

சந்தர்ப்பம் பார்த்திருந்த இன்னுமொரு இளவரசன் சமர் கண்டை கைப்பற்றிக் கொள்ளவே பாபருக்கு ஒரு நாடும் இல்லாமல் போனது.

நொந்துபோன பாபர் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அலைந்து திரிந்து தனது படை பலத்தை கொஞ்சம் பெருக்க வேண்டியதாயிற்று.

தனது பதினெட்டு வயதில் மீண்டும் சமர்கண்டை கைப்பற்றி பாபர் நிம்மதி பெருமூச்சு விட, விதி அதைவிட பலமாக பரி காச பெருமூச்சு விட்டது.

மிகப் பெரிய படையோடு பெரு வீரனான சைபானிகான் என் பவன் சமர்கண்டை முற்றுகையிடவே, வேறு வழியில்லாமல் தனது சகோதரியை வேண்டா வெறுப்பாக சைபானிகானுக்கு மனைவியாக்கிவிட்டு சமர்கண்டை விட்டு பாபர் வெளியேற வேண்டியதாயிற்று.

பெர்கானாவையாவது கைப்பற்றுவோம் என்று போனால், அந் தச் சண்டையிலும் பாபர் படை தோற்றுப்போனது.

எஞ்சியிருந்த சிறுபடையோடு பாபர் மலைகளிலும், காடுகளி லும் அடுத்த சில வருடங்களுக்கு அலைந்து திரிய வேண்டி யதாயிற்று.

பிற்காலத்தில் பாபர் எழுதிய, சரித்திரத்தில் மிகவும் புகழ் பெற்ற பாபர்நாமா எனும் அவரது சுயசரிதையில் ‘வறுமை யும், அவமானமும் என்னை வாட்ட, நாடும், நம்பிக்கையும் இன்றி நான் அலைந்தேன்.’ என தனது இளவயது துன்ப அனுபவங்களை குறிப்பிடுகிறார்.

இன்றுவரை சரித்திரத்தில் சாகா வரத்துடன் பாபர் புகழ் பெற்றிருப்பதற்கு காரணம், தனது பதினெட்டு வயதிற்குள் இத்தனை துன்பங்களை சந்தித்தும் கூட, தனது கனவை நோக்கி தொடர்ந்து போராடி, உலகத்தின் வலிமை மிக்க சாம்ராஜ்ஜியம் ஒன்றினை கட்டியெழுப்பிய தீரத்திற்கும், விடாப்பிடியான நெஞ்சுரத்திற்காகவும் தான்.


பாபரின் இருபத்தொரு வயதில் சின்னதாக ஒரு வெளிச்சம் தெரிந்தது. ஆப்கானிஸ்தானிலுள்ள காபூல் தேசத்தின் மன் னன் இறந்து போகவே அங்கே அடுத்த வலிமையான வாரிசு இல்லை என்ற செய்தி வந்தது.

இந்துக்குஷ் மலையை தாண்டி பாபரின் படை காபூலை வந் தடைந்தது. இலகுவாகவே நகரத்தை கைப்பற்றியது.

நீண்ட துன்பத்திற்கு பிறகு பாபர் நிம்மதியாக காபூல் அரிய ணையில் அமர்ந்தார்.

காபூல் அழகான மலைப் பிரதேசம். அற்புதமான காலநிலை. எங்கு பார்த்தாலும் இயற்கை அழகு. விதவிதமான பூக்கள் பூத்துச் சொரிந்தன.

புதிய நாடு பாபருக்கு மிகவும் பிடித்துப் போகவே, அங்கே இருந்த பூந்தோட்டம் ஒன்றை மேலும் அழகாக பெரிதாக்கி, தன் இறப்புக்கு பின் தன்னை அங்கே புதையுங்கள் என உயிலையும் எழுதி வைத்துவிட்டார். பிற்காலத்தில் இந்தியா வில் பாபர் இறந்தாலும் அவரது உடல் அவரது விருப்பப்



படி இந்தத் தோட்டத்திற்கு கொண்டு வரப்பட்டு புதைக்கப் பட்டது.

அடுத்ததாக பாபருக்கு வட இந்தியா மீது ஆர்வம் வந்தது. அதன் செல்வச் செழிப்பு ஒரு காரணம், அடுத்த காரணம் காபூல் மீது மத்திய ஆசிய படையெடுப்புக்கள் எப்போதும்

நிகழக்கூடிய சந்தர்ப்பங்கள் நிறையவே இருந்தன.

பாபர் காலத்தில் இந்தியா என்ற பெயர் கிடையாது. அது பிற்காலத்தில் ஆங்கிலேயர்கள் வைத்த வைத்த பெயர். அந்தக் காலத்தில் இந்தியாவை இந்துஸ்தானம் என்றே அழைத்தார்கள்.

வட இந்தியா அப்போது டெல்லி சுல்தான் இப்ராஹிம் லோடியால் ஆளப்பட்டுக் கொண்டிருந்தது. உட்பூசல்களால் அது பலமிழந்து போயிருந்த காலம் அது.

பாபர் படை டெல்லியை நோக்கி நகரத் தொடங்கியது.

அது பொ.ஆ.பின் 1526-ம் ஆண்டு, ஏப்ரல் மாதம் இருபதாம் திகதி.

தற்போதைய ஹரியானா பிரதேசத்தில் பானிபாட் என்னும் இடத்தில் பாபரின் படையை இப்ராஹிம் லோடியின் படை எதிர்கொண்டது.

பாபரின் படை எண்ணிக்கையில் சிறியது. சுமார் இருபதினாயிரம் வீரர்கள். இப்ராஹிம் லோடியின் படையோ மிகப் பெரியது சுமார் ஒரு இலட்சம் வீரர்கள். அத்தோடு பயங்கரமான யானைப்படை வேறு.

தன் முன்னால் கடலென பரந்து நிற்கும் டெல்லிப் படையைக் கண்டு பாபர் சற்றும் அசரவில்லை. அதற்கு காரணம் இருந்தது.

பாபர் போர்க்களத்திற்கு கொண்டு வந்திருந்த ஆயுதம் துப்பாக்கிகளும், பீரங்கிகளும்.

பாபர் துருக்கிய, மொங்கோலிய வழி வந்தவர். துருக்கியர்கள் வெடிகுண்டு விசயத்தில் பலே கில்லாடிகள். சீனர்கள் கண்டுபிடித்த வெடி மருந்து தொழில்நுட்பத்தை விரிவாக்கியதில் துருக்கியர்களுக்கு பெரும் பங்கு உண்டு.

இப்ராஹிம் லோடியின் படை அதீத வெறியோடு பாய்ந்து வந்தது. பாபரின் பீரங்கிகள் சீறின. டெல்லி படை திகைத்துப்போனது.

பீரங்கி எனும் பிரமாண்ட அழிவு ஆயுதத்தை இந்திய வீரர்கள் பார்ப்பது அதுதான் முதல்முறை. பீரங்கியின் செவியைக் கிழிக்கும் சத்தத்தை இந்திய போர் யானைகள் கேட்பதும் அதுதான் முதல்முறை.

டெல்லியின் யானைப் படை சிதறி ஓடியது. போர் வீரர்கள் பின்வாங்கி ஓடினார்கள். களம் டெல்லிப் படைக்கு களேபரமானது.

பாபரின் குதிரைப் படை மிகுதி அழிவை விதைக்க, போர் வெறும் நான்கு மணித்தியாலங்களில் முடிந்து போனது.

இருபதினாயிரம் டெல்லி படை வீரர்கள் இறந்து போக, இப்ராஹிம் லோடியும் களத்தின் நடுவே வீரத்துடன் போராடி வீழ்ந்து கிடந்தான்.

வெற்றி பெற்ற பாபர், இப்ராஹிம் லோடியை ஒரு மன்னனுக்குரிய மரியாதையுடன் களத்தில் புதைத்துவிட்டு, டெல்லியில் கால் பதித்தார்.

அந்நிய தேசத்தில் இருந்து வந்த பாபர் இந்தியாவில் வைத்த அந்த கால் தடத்தை அடுத்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு யாராலும் அசைக்க முடியாது போயிற்று.



nimal.nagaraj@thaiveedu.com




BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474



FOR SALE/ LEASE
FOR ALL YOUR REAL ESTATE NEEDS
கனவு இல்லம்
கைகளில் வர...
உங்கள் வீடு விற்பனை முகவர்...
Outstanding Agent
for Outstanding Results.
RE/MAX
Excel Realty Ltd., Brokerage
RAJ NADARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 416.333.6115
nanohomes@gmail.com


கடன் தொல்லையா?
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை
கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?
சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்
Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்
அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com


BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center
for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000



BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS 4 REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



# வீடு வாங்க விற்க...

18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்

## ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

### வாங்கப் போகிறீர்களா?

- ☒ தரமான வீடு தவறிப்போகாது
- ☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- ☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
- ☒ பெருவருவாய் தரும் முதலீடு

### விற்கப் போகிறீர்களா?

- ☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
- ☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- ☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- ☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
















HOMELIFE
GRAND MASTER CLUB

Chairman's Club Award Winner 2015

Chairman's Club Award Winner 2017

Platinum Club Winner 2022

Chairman's Club Award Winner 2016

## Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: **416-786-0760**
info@vela4homes.com
www.vela4homes.com

**Homelife/Future Realty Inc.** Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8




அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
AATEK HEATING & COOLING
$2100 Rebate Available Now
call us 416-414-2280
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
Licensed Technician ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in customs homes Ductwork System
We Are Professional trouble shooters for all major gas appliances
416.414.2280


Buy, Sell Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani - Judy
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasingham
Realtor
416.937.8090


SABONA
416-264-8787



Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
Mahesan Subramaniam
BROKER
Free Home Evaluation with No Obligation
416-816-0141


Daniels FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions Realty Inc. Brokerage
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough


Finding Homes to
Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX
COMMUNITY
REALTY INC., Brokerage



NO MEDICAL
UP TO $500,000
50 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice




Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111





வீடு | வணிகம்
* வாங்க * விற்க * வாடகைக்கு...
Residential | Commercial
* BUY * SELL * LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property with me...
FREE!
• Home Evaluation
• Home Staging
• Professional Photography
• Social Media Marketing
• Just Listed & Feature Sheet




நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6




COMMITTED TO EXCELLENCE
CENTURY 21
Ravi Kana
Cell 416.725.7284 (RAVI)


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com




Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5





DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4. Just remember "266"


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


RAMAN HOME COMFORT INC
HEATING
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989


15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
HomeLife/Future Realty Inc.
416.568.4301
416.261.1544


AEREN Thiyagarajah
Realtor
DILEEP Thangavel
Realtor
647-888 3500
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8


$8475⁰⁰
416-888-9492


ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749


HomeLife Today Realty Ltd.,
Brokerage*
Kuna Nagalingam
Sujatha Kunasegar
416.402.4545


RL RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION -
REAL ESTATE -
FAMILY -
CORPORATE -
EMPLOYMENT -
WILLS & ESTATE -
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225



Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd.,
Brokerage
RE/MAX


UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ignite
PYRAMID GROUP


Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
RE/MAX ACE


Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120


Sri Vallipuranathar
CSC Credit Solution Centre
416.439.0224
416.450.5011



Suba Aynkharan
416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC.



2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8


Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER



Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario, M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
RE/MAX ACE
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com


BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,
Brokerage* 31 Progress Ave, Suite 210, Toronto ON, M1P 4S6


NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
CHANDRAN RASALINGAM
President & CEO
iNFORCE LIFe Financial Services Inc.
416-909-0400
416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST


Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
Cell 416 505 8532


DR. YALINI ARAVINTHAN DDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524


RE/MAX
LATHAN VARATHARAJAH
Broker Owner